த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—76

நாட்டு வருமானப் பகுத்தாய்வு

ஆசிரியர்
சார்லஸ் எல். தூல்ட்ஸ்

தமிழாக்கம்
அ. குழந்தை, பி. ஏ. (ஹானர்ஸ்),
பேராசிரியர்,
பொருளியல்துறை, அரசினர் கலைக் கல்லூரி,
உடுமலைப்பேட்டை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—October, 1977

Number of copies—2000

T.N.T.B.S.(C.P.) No. 768

© Government of Tamilnadu

NATIONAL INCOME ANALYSIS

CHARLES L. SCHULTZE

Translated into Tamil by
A. KULANDAI

Price Rs. 7-55

This Translation of 'National Income Analysis', by Charles L. Schultze is published by arrangement with M/s. PRENTICE-HALL, INC., Edglewood Cliffs, New Jersey, U.S.A. through the copyright clearance cell, Ministry of Education and Social Welfare, Government of India.

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by
GANESA PRINTING WORKS,
55, Muthumari Chetty Street,
Madras-600 001.

அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினேழாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெரு முயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வாணியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **நாட்டு வருமானப் பகுத்தாய்வு** என்னும் இந் நூல் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 768ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 803 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

செ. அரங்கநாயகம்

Foundations of Modern Economics Series

கடந்த சில ஆண்டுகளில் பொருளாதாரம் எவ்வளவோ விரைவாக வளர்ச்சியடைந்து, அதன் விரிவும் செறிவும் பெரிதும் அதிகரித்து விட்டது; அதோடு, அனுபவங்களைக் கொண்டு பொருளாதாரத்தை அணுகும் முறை தற்போது செல்வாக்குப் பெற்று வருவதால் பொருளாதாரத்தின் இயல்பும்கூட எவ்வளவோ மாற்றமடைந்துவிட்டது. இதனால் பொருளாதாரத்தினை முழுமையாக விளக்குவதற்கு எந்த நூலாலும் முடிவதில்லை. எனவேதான் 'Foundations of Modern Economics Series' உருவாக்கப்பட்டது. பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளின் அமைப்பு, பொருளடக்கம், முக்கியமான சில அறிவியல் பிரச்சினைகள், கொள்கைப் பிரச்சினைகள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில், அந்தந்தத் துறையில் சிறப்புப் பெற்ற வல்லுநர்களால் சுருக்கமாக எழுதப்பட்ட பல அரிய நூல்கள் இந்த வரிசையில் வெளியிடப்பட்டுள்ளன. இந்த நூல்கள் அனைத்தையும் மொத்தமாகப் பார்த்தால், கல்லூரி மாணவர்களின் ஓராண்டுகாலப் படிப்பிற்குப் போதுமானதென்றே சொல்லலாம். இவ்வரிசையில் வெளிவந்துள்ள 'விலைகளும் சந்தைகளும்' (Prices and Markets), 'நாட்டு வருமானப் பகுத்தாய்வு' (National Income Analysis) ஆகிய இரு நூல்களும் பொருளாதார ஆய்விற்கு அடிப்படையான விளக்கத்தைத் தருகின்றன; அதோடு, நடைமுறையிலுள்ளப் பல்வேறு பொருளாதாரத் துறைகளுக்கும் பொருத்தமான வகையிலும் அமைந்துள்ளன. 'விலை முறை' (The Price System) என்னும் நூல் நுண்ணினப் பொருளாதாரத்திற்கு அறிமுகம் தரும் நூலாகும். 'நவீனப் பொருளாதாரம் தோன்றிய விதம்' (Evolution of Modern Economics), 'பொருளாதார முன்னேற்றம்: அன்றும் இன்றும்' (Economic Development: Past and Present) ஆகிய இரு நூல்களைப் பொருளாதாரத்திற்கே அறிமுகம் தருபவையாகக் கொள்ளலாம்; எனவே, இவ்விரு நூல்களும், பொருளாதாரம் பயிலாதவர்கள்கூட படிக்கத்தக்கவை.

மூன்றும் பதிப்பாக வெளிவந்துள்ள இந் நூல்கள் முழுமையாக ஆய்வு செய்து திருத்தப்பட்டிருப்பதோடு, இன்றைய நிலைக்குப் பொருத்தமானவையாகவும் ஆக்கப்பட்டுள்ளன. தற்போது முக்கியமானதாகக் கருதப்படும் பகுதிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன; அல்லது விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இந் நூல்கள் சுருக்கமானவையாக இருக்கவேண்டுமென்பதற்காக பழைய பொருள் விளக்கங்கள் நீக்கப்பட்டுள்ளன. தொழில் நிர்வாகத் தீர்மானங்களை எடுப்பதில் பொருளாதார ஆய்வு எவ்வாறு துணைசெய்கிறது என்பதை விளக்கும் வகையில்

'நிர்வாகப் பொருளாதாரம்' (Managerial Economics, by Farrar and Meyer) என்ற புதியதொரு நூலும் இவ் வரிசையில் வெளியிடப்பட்டுள்ளது.

பரம்பரையாகப் பயன்படுத்தப்பட்டுவரும் பழம் பெரிய நூல்களுக்குப் பதிலாக, பொருளாதார ஆசிரியர்கள் தத்தம் பாணியில் பாடத்திட்டங்களை அமைத்துக்கொள்ள இந் நூல்கள் துணை செய்யும்; அதோடு, அடிப்படைத் தத்துவங்களை நன்கு புரிந்துகொண்டுவிட்டால், பாடத் தலைப்புகளை வரிசைக் கிரமமாக அமைத்துக் கொள்வதற்கும், குறிப்பிட்ட பகுதிகளை விளக்கமாக ஆராய்வதற்கும் எளிதாகிவிடும். இவ்வரிசையில் வெளிவந்துள்ள நூல்கள் அனைத்தையுமே பொருளாதார ஆசிரியர்கள் படிக்க விரும்பவில்லையென்றால், தமக்கு வேண்டிய நூல்களை மட்டும் நன்றாகப் படித்து, விரிவாகப் போதிக்கலாம். மேலும், நுண்ணினப் பொருளாதாரத்தையோ (Micro Economics), பருவினப் பொருளாதாரத்தையோ (Macro Economics) அரையாண்டுப் பருவத்திற்குள் போதிப்பதற்கும் இந் நூல்களைப் பயன்படுத்தலாம். இவ்வாறாக, இவ்வரிசையில் வெளிவந்துள்ள நூல்களை எத்தனையோ வழிகளில் ஆசிரியர்கள் பயன்படுத்தலாம்.

இவ்வரிசையின் நூல்கள் புதுமையான முறையில் பாடம் கற்பிக்கத் தோன்றியவை. இந் நூல்களுக்குக் கிடைத்துவரும் ஆதரவு இப் புதிய முறையை வலுப்படுத்த ஊக்கம் தந்துள்ளது. இந் நூல்கள் பெற்றிருக்கும் செல்வாக்கும் பொருளாதாரம் கற்பிக்கும் ஆசிரியர்களிடமிருந்து வந்துள்ள விமரிசனங்களும் சேர்ந்து மூன்றும் பதிப்பாக இவற்றை வெளியிடச் செய்துள்ளன. இவ்வரிசை நூல்கள் பாட நூல்களுக்குப் பதிலாகவும் பயன்படுத்தப்படுகின்றன; அதோடு, தொடக்கநிலைப் படிப்பிற்கு மட்டுமின்றி, இடைநிலைப் படிப்பிற்குத் துணை நூல்களாகவும் பயன்படுகின்றன.

இந் நூல்களில் எதுவுமே திட்டவட்டமான முடிவுகளைத் தருவதில்லை. மாறாக, பொருளாதாரத் துறை ஒவ்வொன்றிலுமுள்ள மையப் பிரச்சினைகளை எடுத்துக்காட்டி, அவற்றைப் பொருளாதார ஆராய்ச்சி முறைகளைக் கொண்டு விவேகமாகத் தீர்ப்பதெப்படி என்பதைத்தான் சுட்டிக்காட்டுகின்றன. அதோடு, மாணவனைச் சிறந்த குடிமகனாக ஆக்கவும், பொருளாதாரத் துறையில் மென்மேலும் ஈடுபாடு கொள்ளச் செய்யவும் இவை ஊக்கமளிக்கின்றன.

ஆட்டோ எக்ஸ்டீன்
(Otto Eckstein)
பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

		பக்கம்
1.	**தோற்றுவாய்** ...	1
	பொருளாதாரம் என்றுலென்ன ? ...	1
	பொருளாதார வளர்ச்சி ...	4
	பொருளாதாரச் சீர்குலைவு ...	7
	நேர் நிலைப் பொருளாதாரமும் தரஞ்சூழ் பொருளாதாரமும் ...	11
	பொருளாதார நடவடிக்கைகளின் சுழல் ஓட்டம் ...	14
	மொத்த உற்பத்தியும் அதன் பல்வேறு இனங்களும் ; பருவினப் பொருளாதாரமும் நுண்ணினப் பொருளாதாரமும் ...	19
	பொருளாதார ஆய்வுக் கருவிகள் ...	23
	பிறவாய்ப்புப் பெறுமானம் ...	25
	உற்பத்தி சாத்திய வளைகோடு ...	27
	அளிப்பு, தேவை, சமநிலை ...	35
	பொருளாதார அறிஞர்களிடையே அடிக்கடி கருத்து முரண்பாடு ஏற்படுவதேன் ? ...	42
	சமூக மதிப்புகளில் முரண்பாடு ...	44
	பொருளாதாரமும் இயற்பியல்களும் ...	45
	சுருக்கம் ...	48
	முன் சுருக்கம் ...	50
2.	**நாட்டு உற்பத்தியும் வருமானமும்** ...	52
	நாட்டின் மொத்த உற்பத்தியும் மொத்த வருமானமும் ...	54
	உற்பத்தியின் மதிப்பீடு ...	56

பக்கம்

நாட்டின் மொத்த உற்பத்தியின் (GNP) முக்கியப் பயன்கள் ... 65

நாட்டின் மொத்த வருமானம் ... 75

நுகர்வோர், தொழில்கள், அரசாங்கம் ஆகிய இனங்களுக்கு ஓடும் நாட்டின் மொத்த வருமான ஓட்டம் ... 78

மொத்தத் தொழில் சேமிப்பு ... 80

செலவிடும் நாட்டின் மொத்த வருமானமும் ... 81

ஒன்றோடொன்று தொடர்புள்ள வருமானக் கருத்துகள் ... 83

முழுத்திறன் உற்பத்திக்கும் நடைமுறை உற்பத்திக்கும் முரண்பாடு ... 86

சுருக்கம் ... 87

3. நாட்டின் மொத்த உற்பத்தியை நிர்ணயிப்பன ... 92

தொகு தேவையை நிர்ணயிப்பன ... 95

நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) நிர்ணயமாவது எப்படி: எளிமையானதொரு சான்று ... 104

மொத்தத் தொழில் சேமிப்பும் நாட்டின் மொத்த உற்பத்தி நிர்ணயமும் ... 114

சமநிலை உற்பத்தியில் அரசாங்கச் செலவும் வரியும் ... 118

பெருக்கி ... 122

அரசாங்கத்தின் நிதிக் கொள்கை ... 134

நாட்டிலுள்ள தன்னியக்கமுடைய நிலைப் பேருக்கிகள் ... 142

சுருக்கம் ... 145

மூன்றும் அதிகாரத்தின் பிற்சேர்க்கை ... 148

4. முதலீடு ... 151

தொழில்களுக்குத் தேவையான இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் கொள்முதல் செய்தல் ... 153

		பக்கம்
	எதிர்பார்க்கும் இலாப வாய்ப்புகளும் முதலீடும் ...	155
	வளர்ச்சி வேகத்தை அடக்கிவிடுவன ...	169
	வட்டி வீதமும் கிடைக்கக்கூடிய கடனும் ...	173
	தொழில் இருப்புகளின் மாறுதல்கள் (இருப்பு முதலீடு) ...	177
	இருப்பு முதலீடு அடிக்கடி மாறுவதேன்? ...	179
	குடியிருப்பு மனைக் கட்டடங்கள் ...	183
	இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் வீடு கட்டும் நிலை ...	188
	சுருக்கம் ...	190
5.	**பணமும், விலையும், பணவீக்கமும்** ...	**194**
	பொது விலை மட்டம் ...	194
	விலைக் குறியீட்டெண்கள் ...	195
	விலைக் குறியீட்டெண்களிலுள்ள ஒருசில குறை பாடுகள் ...	196
	விலைவாசிகள் எப்படி மாறியுள்ளன? ...	198
	பணவீக்கம் என்றாலென்ன? ...	203
	தராதர விலைகளிலும் பொது விலை மட்டத்திலும் ஏற்படும் மாறுதல்கள் ...	205
	ஊதியம்—விலை சுழலேற்றம் ...	207
	பணமும் பணவீக்கமும் ...	209
	பிற நாட்டு வாணிபமும் பணவீக்கமும் ...	212
	வரிகளும் அரசாங்க நிதிக் கொள்கையும் ...	213
	வேறு சிலவகைப் பணவீக்கம் ...	215
	வேலை நிறைவும் விலை நிலைபேறுக்கமும் ...	219
	வேலை நிறைவையும் விலை நிலைபேறுக்கத்தையும் இணக்கமடையச் செய்வதற்கான வழி முறைகள் ...	224
	சுருக்கம் ...	229

		பக்கம்
6.	அமெரிக்காவில் பொருளாதார வளர்ச்சி ...	232
	நாட்டின் முழுத்திறன் உற்பத்தியை அளவிடல் ...	234
	வளர்ச்சியின் மூலசக்திகள் ...	240
	உற்பத்தித் திறன் வளர்ச்சிக்கான காரணங்கள் ...	245
	கல்வியும் தொழிலாளர் திறனும் ...	258
	பொருளாதார வளர்ச்சிக்கான பல்வேறு காரணிகளின் பங்கினை அளவிடல் ...	262
	வளர்ச்சி வீதத்தை அதிகரிப்பதற்கான கொள்கைகள் ...	264
	முதலீட்டை அதிகரித்தல் ...	265
	வளர்ச்சியைப் பாதிக்கும் பிற காரணிகள் ...	270
	வளர்ச்சியும் தொழில் சகடமும் ...	273
	சுருக்கம் ...	275
	மேலும் படிப்பதற்கு உரிய நூல்கள் ...	280
	கலைச்சொற்கள் ...	284
	பொருட்குறிப்பகராதி ...	291

1. தோற்றுவாய்

பொதுவாகத் தொழில் செய்து வாழ்க்கை நடத்தும் மனிதனைப்பற்றிய ஆய்வுதான் பொருளாதாரம் என்று விளக்கப் படுகிறது. இவ் விளக்கத்தின்படிப் பார்த்தால் பொருளாதாரம் ஏதோ காரசாரமற்ற சாதாரணப் பாடமாகவே தோன்றலாம்; ஆனல், உண்மையில் அப்படியன்று. பொருளாதாரத்தின் அடிப் படைத் தத்துவங்களில் தோன்றியுள்ள கருத்து வேறுபாடு களினல் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு, வன்முறையில்கூட ஈடுபட்டிருக்கின்றனர்; அதேசமயம் பொருளாதாரக் கோட் பாடுகளை இறைமையியலுடைய (theology) அந்தஸ்துக்கும் உயர்த்தியிருப்போரும் உண்டு. அதோடுமட்டுமன்றி, பொருளா தாரப் பேராசைகளினல் கடுமையான போர்கள்கூட நிகழ்ந் துள்ளன. மேலைநாட்டு நாகரிகம் என்ற பெருமைக்கு முக்கிய காரணம், கடந்த 500 ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சிதான்; இவ் வளர்ச்சியின் பலனகத்தான் நமது அன்ருடத் தேவைகளை எளிதாக உற்பத்தி செய்து பெற முடிகிறது. எனினும், உலகில் பல இடங்களில் மனிதனின் அடிப்படைத் தேவைகள் அவ்வளவு எளிதாக நிறைவு பெறுவ தில்லை; 'தன் நெற்றி வியர்வை நிலத்தில் விழ' பாடுபடவேண்டிய நிலை இன்றும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. எனவே, ஒரு நாட்டில் மனிதன் எவ்வளவு கஷ்டப்பட்டு உயிர் வாழ வேண்டி யிருக்கிறது, அக் கஷ்டத்தை யெல்லாம் குறைப்பதற்கு அந் நாடு என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்பதைப் பொறுத்துதான் அந் நாட்டின் சமுதாய நிலை அமைகிறது எனலாம்.

பொருளாதாரம் என்றலென்ன?

'பொருளாதரம்' என்ற சொல் குடும்ப நிர்வாகம் பற்றிய விதி அல்லது சட்டம் என்ற பொருளைக் கொண்ட '*oikou*', '*nomos*' என்னும் கிரேக்கச் சொற்களிலிருந்து தோன்றிய தாகும். எனவே, விவேகமான குடும்பத் தலைவர் தம் குறைந்த வருமானத்தைக் கொண்டு சிக்கனமான முறையில் எவ்வாறு

சிறப்பாகக் குடும்பம் நடத்த முடியும் என்பதைத்தான் பொருளாதாரம் தொடக்கத்தில் ஆய்ந்தது. இவ் விளக்கம் பழங்கால ஏதென்ஸ் நகரத்தின் குடும்பத் தலைவியையே நமக்கு நினைவூட்டுகிறது; அவள் தன் குறைந்த வருமானத்தைக் கொண்டு தன் குடும்பத்திற்கு வேண்டிய தரமான உணவு, உறைவிடம், துணிமணிகள் ஆகியவற்றைப் பெறுவதற்கு எவ்வளவு சிக்கனமாகச் செலவு செய்திருப்பாள் என்பதை எண்ண வைக்கிறது.

இவ்வாறாக, குடும்பத்தின் வருவாயைப் பல்வேறு இனங்களுக்குச் சிறந்த முறையில் பயன்படுத்துவதெப்படி என்னும் குடும்ப நிர்வாகக் கருத்து காலப்போக்கில் நாட்டிற்கும் பயன்படலாயிற்று. இந்த முறையில் பார்க்கும்போது ஒரு நாடு தன்னிடம் இருக்கின்ற குறைந்த அளவு மூலதனம், மூலப் பொருள்கள், உழைப்பு ஆகியவற்றைக் கொண்டு சிறந்த முறையில் நாட்டு மக்களின் விருப்பங்களை நிறைவு செய்வதெப்படி, அப்படிச் செய்யும் நடவடிக்கைகளின் பலன்களை நாட்டு மக்களிடையே பகிர்ந்தளிப்பது எவ்வாறு என்பதைத்தான் பொருளாதாரம் ஆய்கிறது என்று கூறலாம். சான்றாக, மோட்டார் வண்டி உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு உருக்கையும் உழைப்பையும் ஒதுக்குவது? தகரக் குவளைகள் அல்லது குளிர் சாதனப் பெட்டிகளை உற்பத்தி செய்ய எவ்வளவு ஒதுக்குவது என்பதை எப்படி நிர்ணயம் செய்வது? உருக்காலையில் நாள் முழுவதும் உழைக்கும் தொழிலாளிக்கு ஆண்டொன்றுக்கு சராசரி 7,000 டாலர் ஊதியம் என்றும், மிகப் பெரியதொரு கார்ப்பரேஷனின் (corporation) நிர்வாகத் தலைவருக்கோ 350,000 டாலர் ஊதியம் என்றும் நிர்ணயிக்கப்படுவது எதனால் என்பதையெல்லாம் பொருளாதாரம் ஆய்கிறது. மேலும், ஒரு நாடு வரையறுக்கப்பட்டுள்ள தன் சாதனங்களைப் பல்வேறு பயன்களுக்கு ஒதுக்கிடுவதெப்படி, சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்துள்ளதா என்பதை அறிந்துகொள்ளும் வழிவகைகளென்ன என்பதையும் பொருளாதாரம் புலப்படுத்துகிறது.

இவ்வாறு, வரையறுக்கப்பட்டுள்ள சாதனங்களைக் கொண்டு மனித விருப்பங்களை நிறைவு செய்வதெப்படி என்பதையே பொருளாதாரத்தின் இலக்கணமாகக் கொள்ளலாம். ஆனால், இவ்விலக்கணம் ஓரளவிற்குத்தான் முறையானதேயன்றி, முழுமையானதென்று சொல்ல முடியாது. ஏனெனில், ஒரு நாட்டிலுள்ள சாதனங்கள், உற்பத்தித் திறன், சக்திகள் ஆகியவை மாறுமல் அப்படியே இருக்கும்போது, எந்தப் பொருள்களை உற்பத்தி செய்வது, உற்பத்தியானவற்றை எவ்வாறு பங்கிடுவது என்பதைத்தான் இவ்விலக்கணம் சுட்டிக் காட்டுகிறது. எனவே,

நிலையானதும் முழுமையாகப் பயன்படுவதுமான ஆக்க சக்திகளை சிறப்பாகப் பயன்படுத்துவதெப்படி என்பதை ஆய்வதுதான் பொருளாதாரத்தின் முக்கிய பணி என்றுகிவிடும். அதோடு, இவ்விலக்கணம் பொருளாதாரத்தில் இடம் பெரும் இரு முக்கியமான அம்சங்களை முழுமையாகப் புலப்படுத்துவதுமில்லை.

ஒருபுறம், இன்றைய நாடுகளின் உற்பத்தி சக்தி (productive capacity) நிலையானதாயின்றி, பெருமளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளது. மக்கள்தொகை மட்டுமின்றி, தொழிலாளரின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது; புதுப் புது வகையான மூலப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. விவசாயப் பண்ணைகள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் இயந்திர சாதனங்களும் (machinery) தளவாடங்களும் (equipment) ஏராளமாகப் பெருகிப் பயன்பட்டு வருகின்றன. இவ்வாறுக, உற்பத்தி சாதனங்கள் எண்ணிக்கையிலும் அளவிலும் பெருகியுள்ளதோடு, அவற்றின் தரமும் எவ்வளவோ மேம்படுத்தப்பட்டுள்ளன. சான்றுகக் கல்வி, பயிற்சியின் வழியாகத் தொழிலாளர் புதிய திறம் பெற்று, தம் ஆக்க சக்தியை உயர்த்தியுள்ளனர். இதுவரை பயன்படுத்தப்படாத புது வகையான மூலப் பொருள்கள் (பெட்ரோல், அணுசக்தி போன்றவை) கிடைத்துள்ளன. ஆலைகளில் பயன்படுத்தப்படும் இயந்திர சாதனங்களும் தளவாடங்களும் சதா மேம்படுத்தப்பட்டு வருவதால் அவற்றின் செயலாற்றலும் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இவ்வாறுக, நவீனப் பொருளாதாரத்தில் வளர்ச்சிதான் முக்கிய அம்சமாக விளங்குகிறது; எனவே, வளர்ச்சிக்கு வழி வகுக்கும் சக்திகளை விவரிப்பதும் பொருளாதாரத்தின் முக்கியப் பணியாகும். அதே சமயம், நாட்டின் உற்பத்தியும் வருமானமும் ஒரே சீராக வளராமல் அடிக்கடி தடைப்படுவதும், சில சமயங்களில் உற்பத்தி அதிகரிப்பதற்குப் பதிலாகக் குறைந்துவிடுவதும் உண்டு. இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் பொருள்கள் விற்கப்படாமல் தேக்கமடைந்துவிடுவதால் ஆலைகள் மூடப்படுகின்றன; தொழிலாளர்களும் வேலையின்றிப் பட்டினி கிடக்க நேரிடுகிறது. எனவே, உற்பத்தி சக்தி அதிகமாயிருந்தால் மட்டும் போதாது; அச் சக்தியை முழுமையாகப் பயன்படுத்தவும் வேண்டியுள்ளது. இல்லையெனில், பொருளாதார அவலநிலைதான் உண்டாகும்.

இவ்வாறுக, பொருளாதாரம் ஆயும் முக்கியமான அம்சங்களையெல்லாம் சுருக்கமாகப் பின்வருமாறு கூறலாம்:

1. உற்பத்தியும் பகிர்வும்பற்றிய பிரச்சினைகள்:

- என்னென்ன பொருள்களும் பணிகளும் எந்தெந்த அளவில் உற்பத்தியாகின்றன?
- அவை எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன?
- உற்பத்தியின் பலன்களை அனுபவிப்பது யார்?

2. பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகள்:

- ஒரு நாடு பொருள்களையும் பணிகளையும் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய சக்திகள் அனைத்தையும் எவ்வாறு அதிகரிக்க முடியும்?

3. பொருளாதார நிலைபேருக்கப் பிரச்சினைகள்:

- ஒரு நாடு தன் முழுச் சக்திக்கேற்ப செய்யும் உற்பத்தி அளவைக் காட்டிலும் பொருள்களுக்கும் பணிகளுக்கு முள்ள மொத்தத் தேவை சில சமயங்களில் குறைந்து விடுவதற்குக் (வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுவதற்கு) காரணம் என்ன? வேறு சில சமயங்களில் மொத்தத் தேவை உற்பத்தி சக்தியை மிஞ்சிவிடுவதற்கு (பணவீக்கம் ஏற்படுவதற்கு) என்ன காரணம்?

இவ்வாறுக, மேலே குறிப்பிட்டுள்ள மூன்றில் முதல் பிரச்சினைகளை மட்டும், அதாவது ஒரு நாட்டிலுள்ள உற்பத்தி சாதனங்கள் குறிப்பிட்ட அளவிலும் தரத்திலும்மட்டும் இருக்கும் போது அவற்றை எவ்வாறு பல்வேறு பயன்களுக்குப் பங்கீடு செய்வது என்பதை மட்டும்தான் பொருளாதாரம் ஆய்கிறது என்று கூற முடியாது. அப் பிரச்சினைகளோடு வேறு பல முக்கிய பிரச்சினைகளும் பொருளாதாரத்தில் இடம் பெறுகின்றன. உற்பத்திச் சாதனங்களின் திறமையை எந்தெந்த வழிகளில் உயர்த்த முடியும், சாதனங்களைப் பயன்படுத்தும் வீதம் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் காரணங்கள் யாவை என்பதும் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கின்றன. பொருளாதார ஆய்வின் கடைசி இரண்டு அம்சங்களாக நாம் குறிப்பிட்டிருப்பது பொருளாதார வளர்ச்சியும் நிலைபேருக்கமும்தான். இவ்விரு அம்சங்களைப்பற்றித்தான் இந் நூலில் முக்கியமாக ஆராய இருக்கின்றோம்.

பொருளாதார வளர்ச்சி
(Economic growth)

1969ஆம் ஆண்டின் கணக்குப்படி அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும் பணிகளும் சுமார் 932 பில்லியன்

டாலர்களாகும். இம் மொத்த உற்பத்தியில் துப்பாக்கிகள், வெண்ணெய், மின்சாரம், முடி திருத்தம், டெலிவிஷன் பெட்டிகள், இயந்திர சாதனங்கள், இன்னிசைக் கச்சேரிகள், குழந்தைகளின் விளையாட்டுச் சாமான்கள், இன்னும் இவை போன்ற எத்தனையோ வகையான பொருள்களும் பணிகளும் அடங்கும். 1969-ல் கிடைத்த 932 பில்லியன் டாலர்களை அவ்வாண்டில் வாழ்ந்த மக்கள்தொகையால் வகுத்துப் பார்த்தால் தலா வருமானம் 4,600 டாலர்களாக இருந்திருப்பது தெரியும். ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்னரோ — நீண்ட மானிட வரலாற்றில் 100 ஆண்டுகள் என்பது அவ்வளவு நீண்ட காலமாகாது என்பது உண்மை — நாட்டு உற்பத்தியில் தலா வருமானம் 650 டாலர்களாகத்தான் இருந்திருக்கிறது; அதாவது 1969-ல் இருந்த தலா வருமானத்தில் ஏழிலொரு பங்குதான் இருந்துள்ளது. உள்நாட்டுப் போர் முடிந்த 100 ஆண்டுகளில் அமெரிக்காவின் தலா வருமானம் சராசரி 10 ஆண்டுகளுக்கொரு முறை 18 சத வீதம் அதிகரித்து வந்துள்ளது.[1]

நாட்டு உற்பத்தியும் வருமானமும் இவ்வளவு வேகமாக அதிகரிப்பதோடு மட்டுமன்றி, நாம் பயன்படுத்தும் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் தரம் கூட முன்பை விடப் பன்மடங்கு உயர்ந்துள்ளது என்பது வெளிப்படை. சான்றாக, பதினான்காம் லூயி (Louis XIV) எவ்வளவு செல்வந்தராக இருந்தபோதிலும், குளிர் காயும் நவீன சாதனமேதுமின்றி தன் மாளிகை அறையில் குளிர் தாங்கமுடியாமல் நடுங்கிக்கொண்டிருந்ததாக அறிய வருகிறோம்; அதோடு மட்டுமன்றி, பாரீசிலிருந்து மார்சேய்ல்ஸ் நகரத்திற்கு 400 மைல் தூரம்தான் எனினும், ஆடம்பரக் குதிரை வண்டியில்தான் அவர் செல்லவேண்டியிருந்தது; எனவே, ஆடி அசைந்து கஷ்டப்பட்டு 10 நாள்கள் அவர் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. ஆனால், இன்றோ ஏறக்குறைய ஒவ்வொரு குடும்பத்திற்கும் குளிர் காயும் சாதனமும் காரும் உள்ளன.

மேற்கத்திய நாடுகளில் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தி அளவில் மட்டுமன்றித் தரத்திலும் உயர்ந்திருப்பதோடு, உற்பத்தியாகுமனைத்தும் சீராகவும் பகிரப்பட்டுள்ளன. எனினும், அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் தங்களின் குறைந்த வாழ்க்கைத் தரத்திற்கு வேண்டிய வருமானம் கூட இல்லாமல் பல குடும்பங்கள் இருந்து வருகின்றன. ஆனால்,

[1] 1865, 1969 ஆம் ஆண்டுகளுக்கான வருமானப் புள்ளி விவரங்கள் அனைத்தும் மாறுத டாலர் மதிப்பில் கணக்கிடப்பட்டுள்ளன; எனவே, விலை ஏற்றத்தால் பாதிக்கப்படாத நிலையில் உற்பத்தியின் மதிப்பு எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பது வெளிப்படை.

பட்டினி கிடக்கவேண்டிய நிலை அங்கெல்லாம் கிடையாது. காரணம், மேற்கத்திய நாடுகளில் நாட்டு வருமானம் அதிகரித்திருப்பதால், குறைந்த வருமானமுடையோருக்கு உதவி செய்வதற்கென்று பலவகையான சமூகப் பாதுகாப்புத் (social security) திட்டங்களும் சமூக நலத் (social welfare) திட்டங்களும் அமலிலிருந்து வருகின்றன. எனவே, ஏழை எளியோருக்கு சாப்பாட்டுப் பிரச்சினை முக்கியமான பிரச்சினையாக இருப்பதில்லை; மாறாக, பெரும்பான்மையான மக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் 'நாம் ஏழைகள்தானே' என்ற எண்ணம்தான் முக்கியப் பிரச்சினையாக உள்ளது. பொதுவாகக் கூறின், மேற்கத்திய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் குறிப்பிட்ட சிலரிடம் மட்டும் குவிந்துவிடாமல் பரவலாகப் பங்கிடப்பட்டுள்ளன.

பொருளாதார வளர்ச்சியின் பலனுகத்தான் வாழ்க்கைத் தரம் உயர்கிறது. அப்படி உயரவேண்டுமாயின், இயற்கையின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், இயற்கை வளங்களையும் உழைப்பையும் புதிய முறையில் மட்டுமன்றி, மேன்மையான விதத்தில் ஒன்று சேர்ப்பதற்கும் கூர்மையான அறிவு வேண்டியுள்ளது; பழைய உற்பத்தி முறைகள் மறைந்து புதிய முறைகள் புகவேண்டும்; புதிய புதிய பொருள்கள் தோன்றி வளர பழைய பொருள்கள் ஒழியவேண்டும்; புதிய அமைப்பு முறைகள் இடம் பெற பழைய முறைகள் மங்கிவிட வேண்டும். இவ்வாறுக, தொடர்ச்சியாக ஏற்படும் மாறுதல்கள்தான் தலா வருமானத்தை உயர்த்தக் கூடிய சாதனங்களாகும். ஆனல், மாறுதல்கள் ஏற்பட வேண்டுமாயின் அவற்றிற்கேற்ப மாற்றிக்கொள்ளக்கூடிய இணக்கம் தேவை; அவ்வாறு மாற்றிக்கொள்வது பெரும்பாலும் துன்பம் தரக்கூடியதாகும். இருந்தபோதிலும், எல்லா வகையிலும் பொருளாதார வளமையை நாம் பேணிக் காக்கும்போது, புதிய வேலை வாய்ப்புகள் தோன்றவும், வேலையிழந்தோர் மீண்டும் வேலையில் அமரவும் கூடும். ஆனல், வருடக் கணக்கில் வேலை இழந்து தவிக்கும் வயதான தொழிலாளர்களும் சரி, பழங்காலத் தொழிலை மட்டும் நம்பியிருந்து அழிந்துபோன நகரங்களும் சரி, இதனல் பயனடையப்போவதில்லை. அதேபோல் வேலையிழந்த தொழிலாளர்களுக்குப் புத்தம் புதிய வேலைக்குரிய தகுதியில்லையென்றலும் சரி, அல்லது புதிய வேலை வாய்ப்புகள் சொந்த ஊரிலிருந்து மிகத் தொலைவிலிருந்தாலும் சரி அதனல் அவர்கள் பயனடையாமல் போகக்கூடும். சொல்லப்போனல், தொழில் நுட்ப முன்னேற்றம் ஏற்படும்போது சமுதாயத்தின் சொத்துகள்

கூட நாசமாகிவிடக்கூடும். சான்றாக, மின்சக்தி கண்டுபிடிக்கப் பட்டு பயன்படுத்தப்பட்டதும் நியூ இங்கிலாந்தில் நீராவிச் சக்தி யால் இயக்கப்பட்டு வந்த நூற்றுக்கணக்கான நெசவாலைகள் மூடப்பட்டுவிட்டன. இன்று போய் அப்பகுதியைச் சுற்றிப் பார்த்தால் கைவிடப்பட்டு மக்கள் நடமாட்டம் அதிகமில்லாத நகரங்களும், வருடச் கணக்கில் மூடிக்கிடக்கும் ஆலைகளும், பாழடைந்துபோன வீடுகளுந்தான் காட்சி அளிக்கும். அதே போல் பெட்ரோல், இயற்கை ஆவி, டீசல் முதலிய சக்திப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுப் போக்குவரத்துத் தொழில் களில் மட்டுமன்றி ஏனைய சில தொழில்களிலும் அவை பயன் படுத்தப்பட்டதால் நிலக்கரிக்கு இருந்த தேவை பெருமளவில் குறைந்துவிட்டது. இதன் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளிகள் வேலையின்றித் தவிப்பதோடு, நிலக்கரித் தொழிலில் மேன்மையுற்றிருந்த நகரங்களும் பாழடைந்துவிடுகின்றன. அவ்வாறு பாழடைந்துவிட்ட மேற்கு வெர்ஜீனியா, பென்சில்வேனியா போன்ற பகுதிகளிலுள்ள நகரங்கள் அனைத்தும் பொருளாதார வளர்ச்சியினால் ஏற்படக் கூடிய நட்டத்தை நினைவூட்டும் சின்னங்களாகும்.

பொருளாதாரச் சீர்குலைவு
(Economic Instability)

மேற்கத்திய நாடுகளில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் போது இங்கும் அங்குமாக ஒரு சில இடங்களில் ஒரு சிலர் மட்டும் வேலையின்றித் தவிக்கும் நிலை ஏற்படுகிறது; அதுமட்டு மன்றி, பெரும்பாலான மக்களே வேலையின்றித் தவிக்கும் நிலையும் விட்டுவிட்டுத் தோன்றுகிறது. கடந்த நூற்றாண்டில் மட்டும் எத்தனையோ பொருளாதார மந்தங்கள் (depressions) தோன்றிப் பொருளாதார வளர்ச்சிக்கே தடை விளைவித்துள்ளன. சான்றாக, அமெரிக்கப் பொருளாதார வரலாற்றில் 1872, 1882, 1893, 1907, 1920, 1929 ஆகிய ஒவ்வோர் ஆண்டும் பொருளாதார மந்தம் தொடங்கி, உற்பத்தியைச் சீர்குலைத்ததோடு வேலையின்மைப் பிரச்சினையையும் உருவாக்கியிருக்கின்றன. இப் பொருளாதார மந்தங்களின்போதெல்லாம் ஆக்கச் செல்வம் கொழிக்கும் அமெரிக்காவில் உற்பத்தியும் வருமானமும் சரிவடைந்தன; உற்பத்தியான பொருள்களை விற்க முடியாத காரணத்தால் தொழிற்சாலைகள் மூடப்பட்டன; வேலையிழந்த தொழிலாளரோ வருமானத்திற்கு வழியின்றி வாடி வதங்கினர். 1930-லிருந்து ஒரு சில ஆண்டுகள்வரை தொழிலாளர்களில் ஆறிலொரு பகுதியினர் வேலையிழந்து தவித்திருக்கின்றனர். எஃகு ஆலைகளோ தம்

சக்தியில் 73 சதவீதத்திற்குக்கூட இயங்காமல் ஆண்டுதோறும் அவதிப்பட்டன. அமெரிக்க நாட்டுக் குடியரசுத் தலைவராயிருந்த ஃபிராங்கிளின் ரூஸ்வெல்ட் அவர்கள் இதைப்பற்றிக் குறிப்பிடும் போது, 'நாட்டு மக்களில் மூன்றிலொரு பகுதியினர் உண்ணப் போதுமான உணவின்றி, உடுக்கத் தரமான உடையின்றி, வாழ வசதியான வீடின்றிக் கஷ்டப்பட்டனர்' என்று கூறினர். எல்லா விதமான பொருள்களையும் பணிகளையும் ஏராளமாக உற்பத்தி செய்யக்கூடிய அமெரிக்காவிலேயே இக் கதி என்றால் என்ன சொல்வது?

பெரும் பொருளாதார மந்த காலங்களுக்கிடையே அடிக்கடி சிறிதளவு வீழ்ச்சிகளும் ஏற்பட்டதுண்டு. சான்றாக, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் மட்டும் நான்கு முறை பொருளா தாரப் பின்னிறக்கம் (recession) தோன்றியிருக்கின்றன. இருப் பினும், போருக்கு முன் தோன்றிய பெரும் பொருளாதார மந்தம் போல் இதுவரை ஏற்படவேயில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பொருளாதார மந்தம் பெரும் சிக்கலைக் கொண்டது; மந்தத்தின்போது எவ்வளவோ உற்பத்தியும் வருமானமும் இழக் கப்படுவதோடு, வேலையற்றோரின் எண்ணிக்கையும் பெருகிவிடு கிறது. ஆனால், முந்திய பிரிவில் கண்ட வேலையின்மை வேறு. ஒரு சில தொழிலாளர்கள் மட்டும் ஒரு சில இடங்களில் வேலை யின்றி இருக்கும்போது சில குறிப்பிட்ட தொழில்கள், இனத் தவர் மட்டுமே பாதிக்கப்படுகின்றனர். குறிப்பிட்ட இடங்களில் தோன்றும் இவ்வகையான வேலையின்மையைத் தொழிலமைப்பு மாறுதலைச் சார்ந்த வேலையின்மை என்றழைப்பர். பொருளா தார அமைப்பு மாறும்போது அதற்கேற்பத் தம்மை மாற்றிக் கொள்ளாதவர்கள் மட்டுமே வேலையிழக்க நேரிடுவதால் இப் பெயர் வழங்கப்படுகிறது. இதற்கு மாறாக, பொது அல்லது பெருவாரியான வேலையின்மையோ (mass unemployment) எங்கு பார்த்தாலும் பொருளாதார நடவடிக்கைகள் தேய்வதைப் புலப் படுத்துகிறது. இவ்வகை வேலையின்மையின்போது சில தொழில்கள் மற்றவற்றைக் காட்டிலும், சில இனத்தவர் ஏனை யோரைவிட அதிகமாகவும் பாதிக்கப்படுவர்; எனினும், எல்லா இனத்தவரும், எல்லாத் தொழில்களுமே பாதிக்கப்படுவதுதான் இயல்பு.[2]

[2] பொது வேலையின்மையைப் பொருளாதார அறிஞர்கள் 'கீன்ஸிய வேலையின்மை' என்றழைப்பர். புகழ்மிக்க ஆங்கிலப் பொருளாதார மேதை யான ஜான் மேனர்ட் கீன்ஸ் (John Maynard Keynes) அவர்கள் 1936-ல் 'The General Theory of Employment, Interest and Money' என்ற தலைப்பில் வெளியிட்ட நூல்தான் பொது வேலையின்மைபற்றிய நவீன ஆய்வுக்கு அடித்தள மாக உள்ளது.

பொது வேலையின்மை ஏற்படுவது கொடுமையானதொரு முரண்பாடாகும் என்பதைப் பல வழிகளில் அறிந்துகொள்ளலாம். சமுதாயத்திற்கு வேண்டிய உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் போதுமான அளவில் உற்பத்தி செய்ய முடியாத போது நிலவும் பொருளாதார மந்தத்தினால் ஏற்படும் விளைவுகள் எவ்வளவுதான் துயர் நிறைந்ததெனினும் அவை தவிர்க்க முடியாதவையாகும். சான்றாக, இன்றும்கூடப் பல நாடுகள் தம் மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களைக்கூட உற்பத்தி செய்ய முடியாமலிருப்பதை நாம் காண்கின்றோம். வெள்ளமோ வறட்சியோ ஏற்படும்போது அறுவடை பாழாகிவிடுவதால் இந்நாட்டு மக்கள் உயிர் வாழக்கூடக் கஷ்டப்படுகின்றனர். பஞ்சம், சமுதாயப் பட்டினி போன்ற கொடுமைகள் இன்றும் உலகில் இருக்கத்தான் செய்கின்றன. அதேபோல் நவீனப் போரும் கூட ஒரு நாட்டின் தொழில்களைப் பாழாக்கி, மக்களின் வாழ்க்கைத் தரத்தைச் சிதைத்துவிடக்கூடும். இவ்வாறாக, வேலை தரக்கூடிய ஆலைகளும் போக்குவரத்து வசதிகளும் சீரழிக்கப்பட்டுவிடுவதால் தோன்றும் வேலையில்லாத் திண்டாட்டம் கொடுமையானதுதான் என்றாலும், நம்மால் அதை எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், ஏராளமான பொருள்களையும் பணிகளையும் உற்பத்தி செய்யக்கூடிய நாடுகளில் மந்தம் ஏற்படுவதுதான் பொருளாதார மந்தத்தின் முக்கிய அம்சமாகும். உற்பத்தி செய்த துணிமணிகளை விற்க முடியாத நிலையில் நெசவாலைகளும் தொழிலாளர்களும் வேலையிழந்து இருக்க, துணிமணிகளை வாங்கப் போதுமான பணமின்றி தவிக்க நேரிடுகிறது. அதேபோல் வீடு கட்டும் வேலைகளும் ஸ்தம்பித்து விடுகின்றன; இந்நிலை கட்டடச் சாமான்களோ தொழிலாளரோ இல்லாத காரணத்தால் அன்று; கட்டும் வீட்டை வாங்குவதற்கு மக்களிடம் பணம் இல்லாத காரணத்தால்தான். இதனால் இலட்சக்கணக்கான குடும்பங்கள் வசதியற்ற வீடுகளில் வாழவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகிறது. இவ்வாறாக உற்பத்தி செய்வதற்கு வேண்டிய தொழிற்சாலைகள், மூலப் பொருள்கள், வேலை செய்யும் திறமை, ஆர்வம் ஆகியன அனைத்தும் இருந்தும்கூட உற்பத்தி நடைபெறுவதில்லை என்பதுதான் பொருளாதார மந்தத்தின் கொடுமையாகும்.

இதற்கு நேர்மாறாக, வேறு சில சமயங்களில் பொருளாதார நடவடிக்கைகள் தம் சக்தியை மீறிப் பணவீக்க நிலையை உருவாக்குகின்றன. அப்போது, பொருள்களுக்கும் பணிகளுக்குமுள்ள மொத்தத் தேவை நாட்டின் உற்பத்திச் சக்தியை எஞ்சிவிடுகிறது. நுகர்வோர், தொழில் நடத்துவோர், அரசாங்கம் ஆகியோரின்

தேவை உற்பத்திச் சக்தியை மிஞ்சும்போது வேலையின்மை குறைந்துவிடுகிறது; தொழில் நிறுவனங்கள் தத்தம் உற்பத்தியை விரிவாக்க ஆவலுடன் முயலுவதால் போதிய தொழிலாளர்கள் கிடைப்பதில்லை. இங்கிலையில் தொழிற் சங்கங்கள் உயர்ந்த ஊதியம் கோரிப் பெற்றுவிடுகின்றனர். இதனல் தொழில் நிறுவனங்களின் ஆக்கச் செலவு அதிகரித்ததால், அச்செலவைச் சரிக்கட்ட விலையை உயர்த்திவிடுகின்றன. சான்றாக, இரண்டாம் உலகப் போர், அதையடுத்து ஏற்பட்ட கொரியாப் போர், பின்னர் 1950-க்குப் பின் தோன்றிக் கடுமை பெற்ற வியட்னும் போர் ஆகிய போர்க்காலங்களிலெல்லாம் இவ்வித நிலைமைகள் தான் பல்வேறு தரங்களில் நீடித்தன. அப்போதெல்லாம் நாட்டின் உற்பத்தி சக்தியைக் காட்டிலும் அதிக அளவுத் தேவை ஏற்பட்டதால் பணவீக்கமும் தோன்றியது.

இவ்வாறாக, ஒரு நாடு தன்னிடமுள்ள உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும் முழுமையாகப் பயன்படுத்தினல் எந்த அளவு உற்பத்தி செய்யக்கூடுமோ அதற்கும் அந் நாடு நடைமுறையில் உற்பத்தி செய்யும் அளவிற்கும் வேறுபாடு உண்டு. செய்யக்கூடிய உற்பத்தியை முழுத்திறன் உற்பத்தி (potential output) என்றும் செய்கின்ற உற்பத்தியை நடைமுறை உற்பத்தி (actual output) என்றும் கூறுகின்றோம். பொதுவாக, பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினை என்பது நாட்டின் முழுத்திறன் உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய சக்திகளைத்தான் — நாட்டின் உற்பத்தித் திறனைத்தான் — ஆய்கிறது. பொருளாதாரச் சீர்குலைவுப் பிரச்சினையோ தொழில் செய்வோரும் நுகர்வோரும் மிகக் குறைந்த அளவில் வாங்கும்போது நாட்டின் முழுத்திறன் உற்பத்தியைக் காட்டிலும் நடைமுறை உற்பத்தி குறைந்துவிடுவதை ஆராய்கிறது. மாறாக, ஒரு நாடு உற்பத்தி செய்யக்கூடிய அளவைக் காட்டிலும் மொத்தத் தேவை அதிகரிக்கவும் கூடும். அதாவது, முழுத்திறன் உற்பத்தியைக் காட்டிலும் நடைமுறை உற்பத்தி எஞ்சிவிட முற்படும்போது, அளிப்பைக் காட்டிலும் தேவை விரிவாகி விலைவாசிகள் ஏற்றமடைந்துவிடுகின்றன. இவ்வகைப் பொருளாதாரச் சீர்குலைவை பணவீக்கம் என்றழைக்கின்றோம்.

நடைமுறை உற்பத்தி அளவுக்கும் முழுத்திறன் உற்பத்தி அளவுக்குமுள்ள வேறுபாடு மிக முக்கியமானதாகும். சான்றாக, முழுத்திறன் உற்பத்தியைவிட நடைமுறை உற்பத்தி அளவு குறையும்போது, நாட்டின் மொத்த உற்பத்தி குறைந்து மக்களின் வாழ்க்கைத்தரம் நசுங்கிவிடுகிறது. இங்கிலையில் போதுமான அங்காடி இல்லையென்பதுதான் முக்கியப் பிரச்சினையாகும்.

உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கும் பணிகளுக்கும் தேவை கிடையாது என்ற நிலை ஏற்படுவதால் தொழிற்சாலைகள் மூடப் படுவதோடு, மக்களும் தத்தம் வேலைகளை இழக்க நேரிடுகிறது. இந்நிலையைப் போக்குவதற்கு அங்காடிகள் விரிவாக்கப்பட வேண்டும்; அதாவது, பொருள்களும் பணிகளும் அதிகமாக வாங்கப்படவேண்டும். அப்போதுதான் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து, மறுபடியும் செழுமை உண்டாகும். வேலையின்றி இருக்கும் ஆள்களும் ஆலைகளும் மறுபடியும் வேலையிலமர்ந்து உற்பத்தியைப் பெருக்க முடியும். ஆனால், ஒரு நாட்டிலுள்ள தொழிற்சாலைகளும் தொழிலாளர்களும் முழுமையாகப் பயன் படுத்தப்பட்டு, அந்நாட்டின் நடைமுறை உற்பத்தி முழுத்திறன் உற்பத்தி அளவுக்குச் சமமாகிவிட்டதென்றால், அந்நாட்டின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் வழியாகத்தான் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும். பொருளாதார வளர்ச்சிப் (முழுத்திறன் உற்பத்தி அளவை அதிகரிக்கும்) பிரச்சினைகளைப் பற்றியும், பொருளாதார நிலைபேறுக்கப் (நடைமுறை உற்பத்தியை முழுத்திறன் உற்பத்திக்குச் சமமாக வைத்திருக்கும்) பிரச்சினைகளைப்பற்றியும் பின்வரும் அதிகாரங்களில் விரிவாக ஆராயப்படும்.

நேர்நிலைப் பொருளாதாரமும் தரஞ்சூழ் பொருளாதாரமும்
(Positive and Normative Economics)

பொருளாதாரம் அடிப்படையான மூன்று பிரச்சினைகளை ஆராய்கிறதென்றுச் சற்று முன்னர் சுட்டிக் காட்டினேம். இப் பிரச்சினைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் நாம் இரண்டு கேள்விகள் கேட்கலாம். முதலாவது, குறிப்பிட்டதொரு நாட்டில் —அமெரிக்கா, ஃபிரான்ஸ் அல்லது சோவியத் நாட்டில் — பொருளாதாரம் எப்படி இயங்குகிறது? சோவியத் நாட்டையோ சீனாவையோ சாராத அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகள், இன்னும் இவை போன்ற நாடுகளில் ஆயிரக் கணக்கான தொழில் நிறுவனங்களும் இலட்சக் கணக்கான நுகர்வோரும் தனித் தனியாக எடுக்கும் முடிவுகளைப் பொறுத்துத்தான் உற்பத்தியும் பகிர்வும் நடைபெறுகின்றன. இவ்வகைப் பொருளாதார அமைப்பை நாம் முழுமையாக எண்ணிப் பார்ப்போமாகில், யூகிக்கக்கூட முடியாத அளவிற்குப் பொருளாதார நடவடிக்கைகள் ஒன்றையொன்று சார்ந்தும் பின்னிப் பிணைந்தும் இருப்பது தெரியும்.

தனிப்பட்ட முறையில் இலட்சக் கணக்கானவர்கள் சுதந்திர மாக எடுக்கும் முடிவுகளால் பொருளாதாரக் குழப்பம்தானே ஏற்படும்; ஆனால் அவ்வாறின்றி, பெரும்பாலும் பொருள்களும் பணிகளும் ஏராளமாக உற்பத்தியாகிக்கொண்டே இருப்ப தெப்படி? அடுத்து, அமெரிக்க நாட்டில் பொருளாதார வளர்ச்சி வீதத்தை நிர்ணயிக்கும் சக்திகள் யாவை? பணவீக்கத்தையும் பொருளாதாரப் பின்னிறக்கத்தையும் உருவாக்குகின்ற சக்திகள் என்னென்ன? இவ்வகைக் கேள்விகளுக்குரியவற்றைத்தான் நேர் நிலைப் பொருளாதாரம் ஆய்கிறது. நடப்பதை அப்படியே கூறுவது நேர்நிலைப் பொருளாதாரம்; அதோடு குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் இப்படி இப்படி நடைபெறுவதற்குரிய காரணங் களைக் கண்டுபிடிக்கும் வகையில் பொருளாதார அமைப்புகளும் உறவுகளும் எப்படியெல்லாம் உள்ளன என்பதையும் அப்படியே விளக்குகிறது. சான்றாக, நுகர்வோரின் வருமானம் 10 சதவீதம் அதிகரித்துவிட்டால் அவர்களின் செலவினங்களில் என்னென்ன மாறுதல்கள் ஏற்படக்கூடும்? அதேபோல் தொழில் நிறுவனங்கள் புதிய இயந்திர சாதனங்களின் வாயிலாகத் தம் முதலீட்டை (investment) அதிகரித்தால் பொருளாதார வளர்ச்சி வீதம் எப்படி மாறுதல் அடையும்? ஒரு தொழிலில் பல நிறுவனங்கள் போட்டியிடும் நிலைமை மறைந்து அவற்றின் எண்ணிக்கை படிப் படியாகக் குறைந்து ஒரு நிறுவனம் மட்டுமோ அல்லது ஓரிரு நிறுவனங்கள் மட்டுமோ அத் தொழிலில் முற்றுரிமை (monopoly) பெற்றுவிட்டால், அத்தொழிலின் உற்பத்தி, விலை நிலை, தொழிலா ளரின் வேலை நிலை முதலியவற்றில் என்னென்ன மாறுதல்கள் நிகழக்கூடும் என்பனவற்றையெல்லாம் அப்படியே கூறுவதுதான் நேர்நிலைப் பொருளாதாரம்.

இவ்வாறாக, பொருளாதார உலகம் எப்படி இருக்கின்றதோ அதை அப்படியே விளக்குவதுதான் நேர்நிலைப் பொருளாதாரம். மாறாக, பொருளாதார உலகம் எப்படி இருக்க வேண்டும் என்பதை ஆய்வது தரஞ்சூழ் பொருளாதாரமாகும். நாட்டி- லுள்ள ஒவ்வொருவரின் விருப்பங்களையும் பொருளாதாரம் நிறைவு செய்யவேண்டுமென்ற நெறியியல் எடுகோளை ஆதார மாகக் கொண்டு, அவ் விருப்பங்களைச் சிறந்த முறையில் நிறைவு செய்வதெப்படி என்பதைத் தரஞ்சூழ் பொருளாதாரம் ஆய் கிறது. சான்றாக, தனியார் முயற்சிக்கு முக்கியத்துவம் தரும் பொருளாதார அமைப்பில் முற்றுரிமை கொண்ட நிறுவனமோ அல்லது கார்ட்டெலோ (cartel) இருப்பதைக் காட்டிலும் போட்டியிடக்கூடிய பல நிறுவனங்கள் இருந்தால்தான் நல்ல பலன்கள் கிடைக்குமென்று தரஞ்சூழ் பொருளாதாரம் கூறு

கிறது. இவ்வாறு கூறும்போது ஒருசில நிபந்தனைகளை மட்டுமன்றி விதிவிலக்குகளையும் சுட்டிக் காட்டுகிறது.[3] அதோடு, கட்டுப்பாடில்லாத சுதந்திர அங்காடி இருக்கும்போது எந்தெந்த வகையான பொருள்களைச் சிறந்த முறையில் உற்பத்தி செய்யக்கூடும்; எவ்வகைப் பொருள்களை அரசாங்கமோ அல்லது கூட்டாகச் சேர்ந்து மக்களோ திட்டமிட்டு உற்பத்தி செய்வது நல்லது என்பதையும் தரஞ்சூழ் பொருளாதாரம் பாகுபடுத்திக் காட்டுகிறது. சான்றாக, அழகு சாதனங்கள், கார்கள், துணிக் கொக்கிகள் போன்ற பொருள்களைத் தனியார் துறைக்கு விட்டுவிடுவதுதான் நல்லது. மாறாக, நாட்டின் பாதுகாப்புத் தொழில்கள், சட்டதிட்டங்களைப் பேணுதல், வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் போன்ற பணிகளைப் பொதுத் துறைதான் மேற்கொள்ள வேண்டும். ஏனெனில், தனியார் துறையில் இலாபம்தான் முக்கிய நோக்கமாகும்; ஆனால், பொதுத் துறையினரோ இலாபம் கருதி உற்பத்தி செய்யவோ விற்பனை செய்யவோ இயலாது. உதாரணமாக, அணுசக்தியில் இயங்கும் ஏவுகணைப் படையில் 200 மில்லியனில் ஒரு பகுதியை எவரும் வாங்க முடியாது. அதே போல் நியூயார்க் நகரக் காவல் துறையில் அரைக்கால் மில்லியன் பகுதியை யார் வாங்கக்கூடும்? எனவே, இவ்விதமான பொருள்களைப் பொதுத் துறையினர் உற்பத்தி செய்வதுதான் நல்லது. தனிப்பட்டவர்கள் வேண்டுமானால் தத்தம் கருத்துகளை அரசியலமைப்பு முறைப்படி எடுத்துக் கூறலாமேயன்றி, அங்காடி முறைப்படி இப் பொருள்களின் உற்பத்தியைத் தீர்மானிக்க முடியாது.

பொருளாதார அமைப்பு முறையில் நாட்டு மக்களின் விருப்பங்களைச் சிறந்த வழியில் நிறைவேற்ற வேண்டுமென்ற பொதுவானதோர் எடுகோளைக் கொண்டதுதான் தரஞ்சூழ் பொருளாதாரம் என்பதை முன்னரே சுட்டிக் காட்டினோம். ஆனால், மக்களின் விருப்பங்கள் நல்லவையா தீயவையா என்றோ அல்லது அவசியமானவையா அவசியமற்றவையா என்றோ அது எடைபோட்டுத் தீர்ப்புக் கூற முயற்சிப்பதுகூடக் கிடையாது. சான்றாக, இன்னிசைக் கச்சேரிகளைக் காட்டிலும் கார்களை உற்பத்தி செய்வதுதான் நல்லது என்றோ, அல்லது குமிழ் குமிழாக வெளிவரும் பசை உற்பத்தியைக் காட்டிலும் சுகாதாரக்

[3] தொலைபேசிப் பணியைப்போல் 'இயல்பான' முற்றுரிமை கொண்ட தொழில்களைப் பொறுத்தவரை போட்டி இருப்பதைக் காட்டினும் முற்றுரிமை இருப்பதுதான் பொதுவாக நல்லதென்று தரஞ்சூழ் பொருளாதாரம் முடிவு செய்கிறது. அவ்வாறு முடிவு செய்தபின், இவ்வகை முற்றுரிமைத் தொழில்களை ஒழுங்குபடுத்துவதெப்படி என்பதற்குப் பல அடிப்படையான விதிமுறைகளையும் புனைகிறது.

கேட்டைக் கட்டுப்படுத்துவதுதான் சிறந்தது என்றே தரஞ்சூழ் பொருளாதாரம் கூற இயலாது. மேலும், மக்களின் விருப்பங்களுக்கேற்ற பொருள்களையும் பணிகளையும் உற்பத்தி செய்ய வேண்டுமென்றால் என்னென்ன சூழ்நிலைகள் இருக்கவேண்டுமென்று நிர்ணயம் செய்வதற்கும் அது முயல்வதில்லை. சாதாரணமாகக் கூறுவதாயின், நேர்நிலைப் பொருளாதாரம் பொருளாதார உலகத்தை அப்படியே விவரிக்கிறது; தரஞ்சூழ் பொருளாரமோ அவ்வுலகத்தை மேம்படுத்துவதெப்படி என்று கூற முயல்கிறது. மேம்பாடு அடைவதை அளவிடுவதற்கு, சமுதாயத்தினரின் விருப்பங்களையே முக்கிய அளவுகோலாகப் பயன்படுத்துகிறது. ஆனால், அவ் விருப்பங்கள் நல்லவையா தீயவையா என்று தீர்ப்பு ஏதும் கூறுவதில்லை.

பொருளாதார நடவடிக்கைகளின் சுழல் ஓட்டம்
(The Circular Flow of Economic Activity)

நவீனப் பொருளாதார அமைப்பு எதுவாயிருந்தாலும், அது ஒன்றோடொன்று பின்னிய மிகப் பெரிய சங்கிலித் தொடர்புடையதாகும். ராபின்சன் குரூசோவைப்போல் தனித்து வாழ்வோர் மிகச் சொற்பம்தான். இன்றைய பொருளாதார உலகில் 'எந்த மனிதனும் தன்னையே ஓர் உலகமாக பாவித்து தனித்து இயங்க முடியாது'. நாம் செய்யும் தொழில்கள், வாங்கும் பொருள்கள், கஷ்டப்பட்டுச் சேகரித்துவைக்கும் சேமிப்பின் பாதுகாப்பு ஆகிய அனைத்தும் ஏனைய கோடிக்கணக்கான மக்களின் தொழில் நடவடிக்கைகளைச் சார்ந்துள்ளன; அவர்களில் பலர் யாரென்று கூட நமக்குத் தெரியாது; நமது வாழ்க்கையில் அவர்களைச் சந்திக்கப் போவதும் கிடையாது. இவ்வகையான தொடர்புகளில் நாட்டின் மொத்த உற்பத்தி, வருமானம், செலவு ஆகியவை எப்படி ஒன்றையொன்று சார்ந்துள்ளன என்பதுதான் மிக முக்கியமானதாகும். இதனை விளக்குவதுதான் இந் நூலின் மைய நோக்கமாகும். இவ்வகைத் தொடர்புகளை மிக எளிமையானதாக்கிப் படம் 1-1 காட்டுகிறது.

பழங்காலக் குடியானவர் தமக்குத் தேவைப்பட்டதனைத்தையும் தாமே உற்பத்திசெய்து கொண்டனர். ஆனால், இன்றைய தொழில் நிறுவனங்களோ அவ்வாறின்றி, மற்றவர்களுக்கு விற்பனை செய்வதற்கென்றுதான் உற்பத்தி செய்கின்றன. அவ்வாறாயின், உற்பத்தி செய்வதற்கு வேண்டிய தொழிலாளிகளை வேலைக்கமர்த்த வேண்டும்; அதோடு, இயந்திரங்களையும் தளவாடங்களையும் வாங்கவேண்டும். அப்போது தொழிலாளர்

களுக்கு ஊதியமும், இயந்திரங்களையும் தளவாடங்களையும் வாங்க நிதி அளித்து முதலீடு செய்தோருக்கு வட்டியும் இலாபமும் தரவேண்டியுள்ளது. இதன் வாயிலாகத் தொழிலாளர்களுக்கும் முதலீடு செய்தோருக்கும் வருமானம் கிடைக்கிறது. இந்த வருமானத்தை அவர்கள் என்ன செய்கின்றனர்? தத்தமக்கு வேண்டிய பொருள்களையும் பணிகளையும் வாங்கப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறாக, உற்பத்தி வருமானத்தை



படம் 1–1. பொருளாதார நடவடிக்கைகளின் சுழல் ஓட்டம்

உருவாக்குகிறது; இந்த வருமானம் உற்பத்தியான பொருள்களை வாங்கப் பயன்படுகிறது. எனவே, இன்றைய உற்பத்தி முறையில் நாம் ஒவ்வொருவரும் இரண்டு விதத்தில் பங்கு கொள்கிறோம்; முதலீடு செய்வோர் அல்லது ஊழியர் என்ற முறையில் நாம் செய்யும் பணிக்குத் தொழில் நிறுவனங்களிடமிருந்து வருமானம் பெறுகின்றோம்; நுகர்வோர் என்ற முறையில் நமக்குத் தேவையான உணவு, உடை, கார் போன்ற

எத்தனையோ பண்டங்களை வாங்குகின்றோம். இவற்றையெல்லாம் தொழில் நிறுவனங்கள்தான் நமக்கு உற்பத்திசெய்து அளிக்கின்றன.

தொழில் நிறுவனத்திற்கும் இரட்டைப் பங்கு உண்டு. முதலீடு செய்தோருக்கும் தொழிலாளருக்கும் வருமானம் கொடுக்கிறது; அதே சமயம், தான் உற்பத்தி செய்யும் பொருள்களை அல்லது பணிகளை விற்பனை செய்கிறது. இவ்வாறுக, மொத்தத்தில் ஒன்றோடொன்று தொடர்புடைய நான்கு ஓட்டங்களை நாம் காண்கின்றோம். நிறுவனங்களிடமிருந்து பொருள்களும் பணிகளும் நுகர்வோருக்குச் சென்றுகொண்டே இருக்கின்றன; அதற்கு இணையாக நுகர்வோரிடமிருந்து தொழில் நிறுவனங்களுக்குப் பணம் சென்றுகொண்டிருக்கிறது. அதே சமயம், உற்பத்தியில் பங்கு கொள்ளும் விதத்தில் தனிப்பட்டவர்களின் பணிகள் நிறுவனங்களுக்குச் சென்றுகொண்டிருக்க, அதற்கு இணையாகக் கூலி, இதர வருமானம் போன்ற வடிவில் நிறுவனங்களிடமிருந்து பணம் வெளியாகிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறுக, உற்பத்தி வருமானத்தை உருவாக்குகிறது; வருமானம் செலவை உண்டுபண்ணுகிறது; செலவு உற்பத்தியை மேற்கொள்ளச் செய்கிறது. இச் சுழல் ஓட்டத்தில் ஆரம்ப இடம் என்றே முடியும் இடம் என்றே ஒன்றும் கிடையாது. பழங்காலப் பொருளாதாரத்தில் ஒவ்வொருவரும் தத்தமக்குத் தேவையானதனைத்தையும் கூடுமானவரை தாமே உற்பத்தி செய்துகொள்கின்றனர். அப்போது ஒவ்வொருவரும் ஒரே சமயத்தில் ஒரு தொழில் நிறுவனமாய் மட்டுமன்றி, நுகர்வோராயும் தொழிலாளியாயும் திகழ்கின்றனர். ஆனால், இன்றைய நவீனப் பொருளாதார அமைப்பிலோ உற்பத்தி சிறப்புத் தேர்ச்சியுடன் (specialisation) நடைபெறுகிறது; எந்த அளவுக்குச் சிறப்புத் தேர்ச்சி இடம் வகிக்கிறதெனின், எவருமே தான் செய்யும் உற்பத்தியைக் கொண்டு மட்டும் வாழமுடியாது. சான்றாக, காலணித் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளிகள் தாம் செய்யும் காலணிகளை உண்ணமுடியாது; அல்லது மிகப்பெரிய பண்ணையில் கோதுமை சாகுபடி செய்யும் நிலக்கிழார் தன் கோதுமையை மட்டும் கொண்டு வாழ இயலாது. இன்றைய பொருளாதார வாழ்வு ஒன்றையொன்று சார்ந்தது தான் என்பது இதிலிருந்தே புலனாகும். காலணித் தொழிற் சாலையில் பணிபுரியும் தொழிலாளி ஊதியமாகப் பணம் பெறுகிறார்; அப் பணத்தைக் கொண்டு தன் வாழ்க்கைக்கு

இன்றியமையாத பொருள்களையும், கூடுமானல் போகப்பொருள் களையும் வாங்க முடிகிறது. நிலக்கிழாரோ அவரிடமிருந்து தனக்கு வேண்டிய காலணியை வாங்கி, அவருக்கு வேண்டிய கோதுமையை விற்கின்றார். இருவருமே ஒருவரையொருவர் சார்ந்தே வாழ வேண்டியுள்ளது.

தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யவேண்டுமாயின் செலவு செய்யவேண்டியுள்ளது. முதலீடு செய்தோருக்கு வட்டியும் இலாபமும் தரவேண்டும். இவ்வாறு ஏற்படும் செலவு களைக் காட்டிலும் பொருள்களை விற்பதிலிருந்து கிடைக்கும் வருமானம் அதிகமாயிருந்தால்தான் தொடர்ந்து உற்பத்தி செய்ய இயலும். நிறுவனம் செய்யும் உற்பத்தி செலவு தொழிலாளர்களுக்கும் முதலீடு செய்தோருக்கும் வருமானமாக அமைகிறது. இவ்வருமானம் அனைத்தையும் பொருள்களையும் பணிகளையும் வாங்குவதற்காக அவர்கள் செலவிட்டால்தான் நிறுவனத்திற்குக் கிடைக்கும் வருமானம் அதன் செலவைவிட அதிகமாயிருக்கும்; அப்போதுதான் நிறுவனம் தொடர்ந்து உற்பத்தி செய்துகொண்டிருக்க முடியும். இவ்வாறாக, உற்பத்தி → வருமானம் → செலவு ஆகிய மூன்றும் ஒன்றையடுத்து ஒன்றாகச் சுழன்று நடைபெற்றுக்கொண்டே இருந்தால்தான் உற்பத்தியும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கும்.

இவ்வாறாக, ஒரு புறம் வருமானம் வரும்போது, மறுபுறம் அதைச் செலவு செய்கிறோம்; இவ்விரண்டும் தங்குதடையின்றி தொடர்ந்து ஓடிக்கொண்டே இருந்தால்தான் ஏராளமான உற்பத்தி நடைபெறவும், அதனால் வேலை நிறைவு ஏற்படவும் முடியும். எனவே, தனியார் முயற்சிப் பொருளாதார (private-enterprise economy) அமைப்பில் ஒரு நாடு எந்த அளவுக்கு உற்பத்தி செய்யமுடியுமோ அதைக் காட்டிலும் ஏன் குறைந்த அளவு உற்பத்தி செய்கிறது என்பதற்குரிய காரணத்தை இச் சுழல் ஓட்டத்தின் வாயிலாகத்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

சான்றாக, ஒரு நாட்டிலுள்ள தொழில்கள் அனைத்தும் தத்தம் முழுச் சக்திக்கேற்ப இயங்கிக் கொண்டிருப்பதாகவும், தொழிலாளர் அனைவருமே அவற்றில் முழுமையாக வேலைசெய்து கொண்டிருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். வேறுவிதமாகக் கூறின், அந்நாடு தன் முழுத்திறனுக்கு உற்பத்தி செய்து கொண்டிருப்பதாக யூகித்துக் கொள்வோம். அவ்வாறாயின், அந்நாட்டின் மொத்த உற்பத்தி (Gross National Product) யின் மதிப்பும் நாட்டின் மொத்த வருமானமும் (Gross National Income) ஒன்றுக்கொன்று சமமாயிருக்கும் என்பதைத்தான் படம்

1-2-ன் இடதுபுறம் சுட்டிக்காட்டுகிறது. இருந்தபோதிலும், படம் 1-2-ன் மேற்பகுதி காட்டுவதுபோல் உற்பத்தியையும் வருமான ஓட்டத்தையும்விட மொத்தச் செலவு ஓட்டம் குறைந்துவிடுவதாக வைத்துக்கொள்வோம். அப்போது அங்காடியில் விற்பனை செய்யமுடியாத பொருள்கள் தேக்கமடைந்து



படம் 1-2 பொருளாதார நடவடிக்கைகளின் சுழல் ஓட்டத்தில் ஏற்படும் தடை

குவியத் தொடங்கும்; இதைக் கண்ட தொழில் நிறுவனங்கள் எந்த அளவுக்கு விற்பனை செய்ய முடிகிறதோ அந்த அளவுக்கு மட்டுமே உற்பத்தி செய்ய நேரிடும். இவ்வாறு, தேவைக் கேற்ப உற்பத்தி அளவு குறைக்கப்படும்போது பொருளாதார மந்த நிலை தோன்றிவிடுகிறது. மாறாக, உற்பத்தி செய்யும் அளவுக் கேற்ப அங்காடியின் விற்பனை அளவும் அதிகமாயிருந்தால்தான் தொழில்கள் அனைத்தும் தம் முழுச் சக்திக்கேற்ப உற்பத்தி செய்ய முடியும்; உற்பத்தியாகும் பொருள்கள் அனைத்தையும் விற்பனை செய்யவும் முடியும். முழுச் சக்திக்கேற்ப உற்பத்தி நடைபெறும்போது, உற்பத்திச் செலவு விற்பனை வருவாய்க்குச் சரிசமமாகிவிடும். அப்போது நிறுவனங்களும் தயக்கமின்றி அதே அளவு உற்பத்தி செய்யும். இவ்வாறாக, முழுத்திறன்

அளவுக்கு உற்பத்தி நடைபெறும்போது நாட்டில் வளரும் வேலை நிறைவும் தாமாகவே தோன்றிவிடும்.

மேற்கூறிய சான்று மிக எளிமையானதொரு சான்றுதான்; ஏனெனில் அரசாங்கத்தின் செலவைப் பற்றியோ வரியைப் பற்றியோ நாம் இதில் ஒன்றுமே கூறவில்லை (இவற்றையும் சேர்த்துப் பின்னர் ஆராய்வோம்). இருந்தபோதிலும், முக்கியமான விவரங்களைப் புலப்படுத்துவதற்கு இச்சான்றே போதுமானது. இதிலிருந்து தெரியும் உண்மை யாதெனில், ஒரு நாட்டின் தொழில் நடவடிக்கைகள் சில சமயங்களில் விரிவடைந்துவிடுவதற்கும், அதனால் மந்தமான காலம் என்றும் செழிப்பான காலம் என்றும் மாறி மாறி ஏற்படுவதற்குக் காரணம், நாட்டின் மொத்த உற்பத்தி, வருமானம், செலவீடு ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று சமமாயில்லாமல் வேறுபடுவதுதான்.

மொத்த உற்பத்தியும் அதன் பல்வேறு இனங்களும்; பருவினப் பொருளாதாரமும் நுண்ணினப் பொருளாதாரமும்

(Total Output and its Composition; Macro and Micro-Economics)

பொருளாதாரத்தில் ஒவ்வொன்றும் ஏனைய ஒவ்வொன்றையும் சார்ந்துள்ளது என்பது பொருளாதாரத் தத்துவங்களில் முக்கியமானதொன்றாகும். பொருளாதார அறிஞர் ஒருவரே இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் ஆழ்ந்து சிந்திப்போமானால் ஒவ்வொன்றும் எப்படி ஏனைய ஒவ்வொன்றையும் சார்ந்துள்ளது என்பது குறைந்த அளவு இரண்டு வழிகளில் உண்மைதான் என்பது புலனாகும். இன்று உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் என்னென்ன? அப்பொருள்கள் எத்தனைவிதமான உற்பத்தி நிலைகளைக் கடந்து வருகின்றன? இவற்றையெல்லாம் வாங்கி நுகரும் குடும்பங்கள்தான் எத்தனை? இதையெல்லாம் கணக்கிட எவராலும் முடியாது; எனினும் இம்மூன்று விஷயங்களைப் பற்றியும் சிறிது சிந்தித்துப் பார்த்தால், இன்றைய பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் நேரடியாகவோ அல்லது ஏதாவதொரு விதத்திலோ ஒன்றையொன்று சார்ந்துள்ளன என்பது புலனாகும். ஆனால் எது எது எப்படியெல்லாம் ஏனையவற்றைச் சார்ந்துள்ளது என்பதை ஒரே சமயத்தில் மொத்தமாக எண்ணிப் பார்க்க முடியாது. எப்பொழுதும் சுழன்று கொண்டேயிருக்கும் பொருளாதார நடவடிக்கைகளை மொத்த

மாக ஒரே சமயத்தில் ஆராய முடியாதாகையால், ஒவ்வொரு இனமாகப் பாகுபடுத்தி, ஆராய்ந்துதான் பொருளாதார அறிவைப் பெறக்கூடும். பொருளாதாரத்தில் மட்டுமன்றி, வரலாறு, உளவியல், இயற்பியல் போன்ற எல்லா அறிவியல் துறைகளிலுமே இப்படித்தான். பகுதி பகுதியாகத்தான் ஆராய முடியுமெனினும், எல்லாப் பகுதிகளின் ஆய்வையும் மொத்த மாகச் சேர்த்தால் பொருளாதாரத்தின் முழுமை தெரிந்துவிடும்.

இந்த நூலில்கூட பகுதி பகுதியாகத்தான் ஆராய இருக்கின்றோம். அதாவது, பொருளாதார வளர்ச்சியையும் பொருளாதார நிலைபேறுக்கத்தையும் பற்றிய சிக்கல்களை மட்டுமே இந்நூலில் ஆராயப் போகின்றோம். வேறுவிதமாகக் கூறின் இந்நூலில் நாம் பார்க்க இருப்பது நாட்டின் உற்பத்தி ஓட்டத்தையும் வருமான ஓட்டத்தையும் பற்றிய விவரங்கள்தாம்.

நாட்டின் மொத்த உற்பத்தியும் வருமானமும் மாறுவது ஏன்? நடைமுறையில் செய்யப்படும் உற்பத்தி சில சமயங்களில் சக்திக்குக் குறைவாகவும் வேறுசில சமயங்களில் சக்தியை மீறியும் செய்யப்படுவது எதனால்? உற்பத்தி சக்தியின் மட்டத்தை உயர்த்துவதற்கும் பொருளாதார வளர்ச்சியை உண்டுபண்ணுவதற்குமுரிய சக்திகள் யாவை? பொருளாதார வளர்ச்சியின் போது ஏற்படும் சமுதாய, பொருளாதாரச் செலவுகள் என்னென்ன? இக்கேள்விகளுக்குரிய விடைகளை ஆய்வதுதான் தொகுதிப் பொருளாதாரம் (Aggregate Economics) ஆகும். உற்பத்தி வருமானம் போன்றவற்றை மொத்தமாக ஆராய்வதைப் புலப்படுத்துவதற்குத்தான் 'தொகுதி' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதற்குப் 'பருவினப் பொருளாதாரம்' (Macro Economics) என்ற மற்றொரு பெயரும் உண்டு. இப் பெயர் 'Makros' என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து வந்ததாகும்; Makros என்றால் கிரேக்க மொழியில் 'பெரிய' என்று பொருள். பருவினப் பொருளாதாரத்தில், நாட்டின் மொத்த உற்பத்தியினைப் புள்ளி விவரங்களோடு காட்டும் நாட்டின் வருமான ஆய்வு, நாட்டு வருமானம் — நுகர்வு — முதலீடு ஆகியவையும், காலப் போக்கில் இவை மாறுவதனால் ஏற்படும் விளைவுகளைக் கண்டுபிடிப்பதும்தான் முக்கிய ஆய்வுக் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

நாட்டின் உற்பத்தியில் பங்குகொள்ளும் இனங்கள், வருமானப் பகிர்வு, விலைமுறை செயல்படும் விதம் ஆகியவற்றை நுணுக்கமாக ஆராய்வதுதான் நுண்ணினப் பொருளாதாரம் (Micro Economics). இச் சொல்லும் 'சிறிய' என்று பொருள்

தரும் 'Mikros' என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து பெறப்பட்ட தாகும். நுண்ணினப் பொருளாதாரத்தில் மிக முக்கியமானது விலை செயல்படும் முறைதான். அதாவது, தனியார் முயற்சிப் பொருளாதாரத்தில் குறிப்பிட்ட பொருள்களையும் பணிகளையும் உற்பத்தி செய்வதற்குரிய சாதனங்கள் எவ்வாறு பங்கிடப்படுகின்றன, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும் பணிகளும் சமுதாயத்தினரிடையே எப்படிப் பகிரப்படுகின்றன என்பதையெல்லாம் விலை இயங்கும் முறையைக் கொண்டுதான் விளக்க முடியும். நமது சுழல் ஓட்ட படத்தின் வாயிலாகவும் இதைப் பின் வருமாறு விளக்கலாம்: நாட்டின் மொத்த உற்பத்தி, வருமான ஓட்டத்தில் சேர்க்கப்படும் இனங்கள் என்னென்ன (சான்றாக, எத்தனை இலட்சம் கார்கள், எத்தனை தானிய மூட்டைகள்), செங்கல் செய்யும் தொழிலாளியின் கூலிக்கும் கணக்கரின் ஊதியத்திற்கும் இவ்வளவு வேறுபாடு இருப்பதேன், ரொட்டியின் விலைக்கும் சிகரெட்டின் விலைக்கும் இருக்கும் முரண்பாடு எதனால்? இது போன்ற ஆய்வினைக் கொண்டதுதான் நுண்ணினப் பொருளாதாரம். விலை இயங்கும் முறைதான் நுண்ணினப் பொருளாதாரத்தில் பயன்படுத்தப்படும் முக்கியமான ஆய்வுக் கருவி.

இவ்வாறாக, பருவினப் பொருளாதாரம் தொகுதி தொகுதியாகவும், நுண்ணினப் பொருளாதாரம் பகுதி பகுதியாகவும் ஆராய்கின்றன; எனினும், இவ்விதப் பாகுபாடு மதிப்பீடேயன்றி, முடிவானதென்று கூற முடியாது. ஏனெனில் சிறு சிறு பகுதிகள் சேர்ந்துதான் தொகுதியாகிறது; தொகுதியின் பரிமானம் மாறும்போது அதன் பகுதிகளும் மாறிவிடுகின்றன.

நாட்டின் மொத்த உற்பத்தி அளவைப் பாதிக்கக்கூடிய காரணிகள் பல; அவற்றில் ஒன்று சாதனப் பங்கீடு. பல்வேறு பயன்களுக்கிடையே சாதனங்கள் மிகச் சிறந்த முறையில் பங்கீடு செய்யப்படின், உற்பத்தியின் அளவு உயரும் என்பது திண்ணம். சான்றாக, அமெரிக்க நாட்டுத் தொழிலாளரும் மூலதனச் சாதனங்களும் விவசாயத் தொழிலுக்கு அவ்வளவு பொருத்தமானவையல்ல; அப்படியிருக்க, அவற்றை விவசாயப் பொருள்களை மட்டும் உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தினால் நம் நாட்டின் மொத்த உற்பத்தி குறைந்துவிடும். அடுத்து, ஒரு நாட்டின் உற்பத்தி அளவையும் வருமானத்தையும் பாதிக்கக் கூடிய மற்றொரு காரணி நாட்டு வருமானம் எந்த முறையில் மக்களிடையே பகிரப்பட்டுள்ளது என்பதாகும். சான்றாக, ஒரு சில செல்வந்தர்களிடையே மட்டும் ஏராளமான பணம் குவிந்து

விட்டால், நாளடைவில் பொருள்களுக்கும் பணிகளுக்குமுள்ள தேவை குறைந்துவிடும்; அப்போது நாட்டின் உற்பத்தி சரிவடைந்து, வேலையில்லாத் திண்டாட்டம் மலிந்துவிடும். இதற்கு நேர்மாறாக, நாட்டின் வருமானம் எல்லோருக்கும் சரிசமமாகப் பகிரப்படும்போது, மக்களிடையே உழைக்கும் உற்சாகம் குன்றி, பொருளாதார வளர்ச்சி தளர்ச்சியடைந்துவிடலாம்.

மேலும், நாட்டின் மொத்த உற்பத்தி பாதிக்கப்படும்போது, அதில் சேர்க்கப்பட்டுள்ள இனங்களின் தன்மையும் பாதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. சான்றாக, பொருளாதார மந்த காலத்தில் நீடித்துப் பயன்தராப் பொருள்களின் (non durables) உற்பத்தியைக் காட்டிலும் நீடித்துப் பயன்தரும் பொருள்களின் (durables) உற்பத்தி விரைவாகக் குறைந்துவிடும்; அதேபோல் நேரடிப் பணிகளைக் காட்டிலும் நீடித்துப் பயன்தராப் பொருள்களின் உற்பத்தி அதிகமாகக் குறைந்துவிடும். அதோடு, இலாபம் கூலியைக் காட்டிலும் அதிகமாகவும், கூலி வட்டியைக் காட்டிலும் அதிகமாகவும் குறைந்துவிடும். இதிலிருந்து புலப்படும் உண்மை யாதெனில் பருவினப் பொருளாதாரம், நுண்ணினப் பொருளாதாரம் என்று பாகுபடுத்துவது ஆய்வு நோக்கத்திற்காகத்தானே யொழிய, இவ்விரண்டும் ஒன்றையொன்று சார்ந்தது என்ற உண்மையை மறந்துவிடக் கூடாது.

பருவினப் பொருளாதாரம், நுண்ணினப் பொருளாதாரம் என்ற பாகுபாடும், அவற்றின் ஆய்வுக் கருவிகளான நாட்டின் வருமான ஆராய்ச்சி, விலைக் கோட்பாடு ஆகியவையும் பொருளாதாரப் பாடங்கள் அனைத்திலுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சான்றாக, தொழிலாளர்களின் அளிப்பு-கூலி ஆகியவற்றைப்பற்றித் தொழிலாளர் பொருளாதாரத்தில் (Labour economics) ஆயும்போது, அது நுண்ணினப் பொருளாதார ஆய்வாகிறது. அதேபோல்தான் குறிப்பிட்ட தொழில்கள் எவ்வாறு அமைந்துள்ளன, அவை உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு அங்காடி எப்படியுள்ளது என்ற ஆய்வு நுண்ணினப் பொருளாதார ஆய்வாகிறது. அடுத்து, பொது நிதி இயலில் அரசாங்கத்தின் நிதிப்பிரச்சினைகளை ஆராய்கிறோம்; இதில் பருவின, நுண்ணினப் பொருளாதார ஆய்வுக் கருவிகள் அனைத்துமே பயன்படுத்தப்படுகின்றன. அதேபோல் கடன் முறை (credit system), செலுத்து முறை (Payment) ஆகியவற்றை விவரிக்கும் பணவியல், வங்கியியல் ஆகியவற்றில் இருவகை ஆய்வுக் கருவிகளுமே பயன்படுத்தப்படுகின்றன.

பன்னாட்டுப் பொருளாதாரத்தை (International Economics) சுதந்திர நாடுகளிடையே நடைபெறும் வாணிபத்தில் தோன்றும் சிறப்பான பொருளாதார உறவுகளைப் பற்றி மட்டுமே ஆராய்கிறோம். பொருளாதார அமைப்பு முறைகளை ஆராயும்போதும், நுண்ணினப் பொருளாதாரப் பிரச்சினைகளும் பருவினப் பொருளாதாரப் பிரச்சினைகளும் நம் நாட்டில் எப்படித் தீர்க்கப் படுகின்றன, சோஷியலிச நாடுகளிலும், பொதுவுடைமை நாடு களிலும் எப்படியெல்லாம் தீர்க்கப்படுகின்றன என்பதைத்தான் பார்க்கின்றோம். முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் எப்படி முன்னேறியுள்ளன, அதனால் பின்தங்கிய நாடுகள் பெறக்கூடிய படிப்பினைகள் என்ன என்பதையெல்லாம் பொருளாதார வரலாற்றிலும் வளர்ச்சியிலும் படிக்கின்றோம்; அவ்வாய்விற் கேற்ற கருவிகள் பருவினப் பொருளாதாரத்தில் மட்டுமன்றி, நுண்ணினப் பொருளாதாரத்திலும் உள்ளன.

பொருளாதார ஆய்வுக் கருவிகள்
(Tools of Economic Analysis)

பொருளாதாரப் பாடங்கள் அனைத்திலும் பயன்படுத்தப் படும் சில முக்கியமான கருத்துகள் உள்ளன; எனவே, பொருளாதார வளர்ச்சியையும் நிலைபேருக்கத்தையும் பற்றிய நமது ஆய்வைத் தொடங்கு முன்னர், அக்கருத்துகளைச் சற்று விரிவாகத் தெரிந்துகொள்வது நன்று.

தேர்வு (Choice):

ஆழ்ந்து சிந்திப்போமாயின், பொருளாதாரம் தேர்வுசெய்ய வேண்டிய பிரச்சினைகளை ஆராயும் அறிவியல்தான் என்பது புலனாகும். எந்த மனிதனும் தன் விருப்பங்கள் அனைத்தையும் முழுமையாக நிறைவுசெய்ய முடிவதில்லை. செல்வம் கொழிக்கும் நாட்டில்கூட மக்களின் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறி விடுவதில்லை. உலகிலேயே அதிகத் தலா வருமானம் கொண்ட நாடு அமெரிக்காதான் என்பதை வரலாறு காட்டுகிறது. வீதி வாசிகள் ஏறிக்கொண்டேயிருந்தும், அதனால் பாதிக்கப்படாத அளவிற்கு நம் தலா வருமானம் (Per-Capita income) ஆண்டு தோறும் அதிகரித்துக்கொண்டேதான் இருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக அமெரிக்காதான் உலகிலேயே செல்வந்த நாடாகத் திகழ்ந்து வந்துள்ளது; இன்றும்கூட அமெரிக்கா விற்கு இணையாக எந்த நாடும் கிடையாது. அப்படியிருந்தும், வருமானம் அதிகரித்துவிட்டதே, அதை எப்படிச் செலவிடுவ தென்று எவரும் திண்டாடுவதில்லை. மாறாக, நம்மில்கூட ஒரு

சிலர் வறுமையில் வாடுகின்றனர் என்ற நிலையைத் தற்போது தான் அறியவருகின்றோம். நம் ஒவ்வொருவருடைய விருப்பங்களுமட்டுமன்றி, நம் நாட்டிலுள்ள அனைவரின் விருப்பங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவற்றை நிறைவு செய்யக்கூடிய சாதனங்கள் நம்மிடம் போதுமானதாக இல்லை என்பது புலனாகும். சான்றாக, நம்மிடமுள்ள நிலம், தொழிலாளர், இயந்திர சாதனங்கள் ஆகிய உற்பத்தி சாதனங்கள் (Productive resources) வரையறுக்கப்பட்டுள்ளன. ஏனைய நாடுகளைக் காட்டிலும் அதிகமாயிருந்த போதிலும் அவை குறிப்பிட்ட அளவில்தான் உள்ளன. எனவே, நம்மிடமுள்ள சாதனங்களைக் கொண்டு எந்தெந்தப் பொருள்களையும் பணிகளையும் உற்பத்தி செய்தால் நல்லதென்பதைத் தீர்மானிக்கவேண்டியுள்ளது. இத் தேர்வு செய்யவேண்டிய பிரச்சினை எல்லா நாடுகளுக்கும் பொதுவான பிரச்சினையாகும். டெலிவிஷன் பெட்டிகளை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமாயின், வேறு ஏதாவதொரு பொருளின் உற்பத்தியைக் குறைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் அதிகமான துப்பாக்கிகள் வேண்டுமானால், வெண்ணெய் உற்பத்தியைக் கைவிடவேண்டும்.[4] கல்விக்கு அதிகம் செலவு செய்யவேண்டுமாயின், வேறொரு செலவை நாம் குறைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அதேபோல் நம்மில் மருத்துவர்களாகவோ, வழக்கறிஞர்களாகவோ அல்லது மெக்கானிக்கர்களாகவோ ஆகியிருக்கக்கூடியவர்களைப் பள்ளி ஆசிரியர்களாகவும் நிர்வாகிகளாகவும் ஆக்கவேண்டுமாயின், அதற்குரிய தூண்டுகோல் அவசியம்.

இவ்வாறான தேர்வுப் பிரச்சினைகள் ஒவ்வொரு சமுதாயத்திலும் இலட்சக்கணக்கில் உள்ளன. பொருளாதார அமைப்புகளுக்கேற்பத் தேர்வு செய்யும் முறைகள் மாறலாம்; ஆனால் இப்பிரச்சினைகளே இல்லாமல் செய்துவிட முடியாது. இவ்வாறாக, எந்தெந்த அடிப்படையில் எதை எதைத் தேர்ந்தெடுத்து உற்பத்தி செய்வது என்பதை ஆயும் அறிவியலாகத்தான் பொருளாதாரம் அமைந்துள்ளது. இந்த அடிப்படையில் பொருளாதாரம் பல்வேறு அமைப்புகளை ஆய்வு முறையில் விளக்குவதோடு, என்னென்ன உற்பத்தி செய்தால் சிறந்தது என்ற வழிவகைகளையும் நமக்குக் காட்டுகிறது. எந்த

4 'துப்பாக்கியும் வேண்டும், வெண்ணெயும் வேண்டுமென்றால் இயலாது' என்பது பழமொழி. ஆனால் இப் பழமொழி தவறானதாகும். இரண்டையுமே நாம் உற்பத்தி செய்ய முடியும், உற்பத்தி செய்துகொண்டுதானிருக்கிறோம். சான்றாக, போர்க்காலத்தில் நாம் வெண்ணெய் இன்றிப் பட்டினி கிடப்பதில்லை. எனவே, உண்மைநிலை என்னவென்றால், ஒரே சமயத்தில் இரண்டையுமே ஏராளமாக உற்பத்தி செய்ய முடியாது.

நாட்டிலுமே மக்கள் விரும்பும் பொருள்களும் பணிகளும் ஏராளமாகக் கிடைப்பதில்லை; அவற்றை உற்பத்தி செய்யும் சாதனங்களும் அப்படித்தான். வேண்டியதனைத்தும் வரையறையின்றி கிடைக்குமாயின், தேர்வுசெய்ய வேண்டிய பிரச்சினைக்கே இடமில்லை. அப்படிக் கிடைக்கக்கூடிய காலம் வருமா என்பதும் சந்தேகம்தான்; நமது வாழ்க்கையில் அப்படியொரு காலத்தை நாம் காணப்போவதில்லை. எனவே, தேர்வு செய்யும் கட்டாயம் தவிர்க்கப்பட முடியாததாகும்.

பிறவாய்ப்புப் பெறுமானம்
(Opportunity cost)

தேர்வு செய்யவேண்டிய கட்டாயத்திலிருந்து பிறவாய்ப்புப் பெறுமானம் என்ற மற்றொரு கருத்தும் தானாகவே தோன்றுகிறது. இக்கருத்து பொருளாதாரத்தில் மிக முக்கியமானதொன்றாகும். ஜெனரல் மோட்டர்ஸ் கம்பெனியாரிடம் ஒரு காரை உற்பத்தி செய்வதற்கு என்ன செலவாகிறது என்று கேட்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது கார் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் தேனிரும்பு, இயந்திரம், தளவாடங்கள், உழைப்பு ஆகிய எல்லாவற்றிற்கும் ஏற்படும் செலவைக் கணக்கிட்டு, இவ்வளவு பணம் செலவாகிறது என்று கூறுவர். தனிப்பட்டவர்களுக்குப் பணச் செலவு (Money Cost) தான் முக்கியம். ஆனால் சமுதாயத்திற்கு அப்படியல்ல; ஒரு காரை உற்பத்தி செய்யவேண்டுமானால், வேறெந்தப் பொருள்களின் உற்பத்தியைக் கைவிடவேண்டியுள்ளதோ அதுதான் காரின் உற்பத்திச் செலவாகும். சான்றாக, ஒரு காரை உற்பத்திச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் உழைப்பு, தேனிரும்பு, இயந்திர சாதனங்கள் முதலியவற்றைக் கொண்டு டெலிவிஷன் பெட்டிகளையோ, குளிர்க் காப்புப் பெட்டிகளையோ அல்லது மருத்துவ மனைக்கு வேண்டிய கட்டில்களையோ[5] உற்பத்தி செய்திருக்கக் கூடும். இவ்வாறாக, உற்பத்தியில் ஏற்படுகிற பணச் செலவு வெறும் குறியீட்டுருவான (symbolic) செலவுதானேயன்றி, உண்மையான செலவல்ல. அதாவது, உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்ற சாதனங்களின் பண மதிப்பைத்தான் பணச் செலவு என்கிறோம்; ஆனால் அச்சாதனங்களைக் கொண்டு வேறொரு பொருளை உற்பத்தி செய்திருக்கவும் கூடும். சான்றாக,

[5] கார் உற்பத்தி செய்யப் பயன்படும் இயந்திர சாதனங்களைக் கொண்டு எப்படி மருத்துவமனைக் கட்டில்களைச் செய்ய முடியுமென்று நீங்கள் மறுப்புத் தெரிவிக்கலாம். ஆனால் முன்கூட்டியே காருக்குப் பதிலாக மருத்துவமனைக் கட்டில்களைச் செய்வதற்கேற்றார்போல் இயந்திர சாதனங்களை அமைத்திருக்க முடியுமல்லவா?

X என்னும் பண்டத்தை உற்பத்தி செய்யும்போது, *Y* அல்லது *Z* என்ற பண்ட உற்பத்தியைக் கைவிட வேண்டியுள்ளது; எனவே, *X*-ன் உண்மையான பொருளாதாரச் செலவு (real economic cost) *Y* அல்லது *Z*-ன் உற்பத்திச் சாத்தியத்தைத் தியாகம் செய்வதுதான். இவ்வாறுக, ஒரு பொருளை உற்பத்தி செய்யும் போது மற்றொரு பொருளின் உற்பத்தி வாய்ப்பை இழந்துவிடுவதுதான் பிறவாய்ப்புப் பெறுமானமாகும்.

பிறவாய்ப்புப் பெறுமானம் என்ற கருத்து பொருளாதாரத்தில் அடிக்கடி பயன்படுத்தப்படும் முக்கியமான கருத்தாகும். சான்றாக, அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதிகள் பொதுவாக வறட்சியானவை; கால்வாய்கள் வழியாகத்தான் அப்பகுதிகளுக்குத் தண்ணீர் கொண்டுபோய் விவசாயம் செய்யப்படுகிறது; அக்கால்வாய்களை வெட்டுவதற்கு ஏராளமான பணம் செலவாகியுள்ளது. ஆனால் அப்பணச் செலவு உண்மையான செலவல்ல. அத்தண்ணீரை ஆலைத் தொழில்களுக்குப் பயன்படுத்தியிருக்கலாம். அவ்வாறன்றி, ஆலைத் தொழில்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடிய தண்ணீரை விவசாயத்திற்குக் கொண்டுபோனதால் எவ்வளவு ஆலைப்பொருள் உற்பத்தியை இழந்திருக்கின்றோமோ அதுதான் அத் தண்ணீரின் உண்மைச் செலவாகும். அதோடு, அத்தண்ணீரை ஆலைகளுக்குப் பயன்படுத்தியிருந்தால் எவ்வளவு மதிப்புடைய பொருள்களை உற்பத்தி செய்திருக்கலாமோ அதைவிடக் குறைவாகத்தான் விவசாயப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே, எவ்வளவு ஆலைப்பொருள்களை இதனால் இழந்திருக்கின்றோமோ அதுதான் அத்தண்ணீரின் பிறவாய்ப்புப் பெறுமானமாகும்.

இராணுவச் செலவினை ஆராயும்போது, நாட்டின் பாதுகாப்பிற்கான செலவு எப்படி இருந்தாலும், அதைப்பற்றிக் கவலைப்படக்கூடாதென்றுதான் பலர் கருதுகின்றனர்; அவர்களின் கருத்துப்படி, குறிப்பிட்டதொரு ஆயுதப் படை நன்றாக இயங்கினால் போதும், அதற்கு எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. ஆனால், அரசியல் காரணத்தினாலோ அல்லது வேறெந்தக் காரணத்தினாலோ இராணுவச் செலவு குறைக்கப்பட்டுவிடுவதாக வைத்துக்கொள்வோம். அப்போது, குறிப்பிட்ட போர்த் தளவாடங்களை அதிகமாக வாங்கும்போது ஏனைய தளவாடங்களை குறைத்துக்கொள்ள வேண்டியுள்ளது; அப்படிக் குறைக்கப்பட்டுவிட்ட போர்த் தளவாடங்களைக் காட்டிலும் அதிகமாக வாங்கியுள்ள தளவாடங்களினால் நாட்டின் பாதுகாப்பு வலுப்பட்டுவிடுமென்றால் சரிதான். வேறு விதமாகக் கூறின், அதிகமாக வாங்கி

யுள்ள போர்த்தளவாடங்களின் பிறவாய்ப்புப் பெறுமானத்தைக் காட்டிலும் நாட்டின் பாதுகாப்பு அதிகரித்திருக்குமானால் அவற்றை வாங்கியது நல்லதுதான்; இல்லையெனில் அத்தளவாடங்களை அதிகமாக வாங்கியதில் அர்த்தமே இல்லை; நாட்டின் பாதுகாப்பும் குறைந்துவிடும். ஏனெனில் அதிகமாக வாங்கியுள்ள போர்த்தளவாடங்களை விட குறைத்துக்கொண்ட தளவாடங்கள்தான் (அவற்றின் பிற வாய்ப்புப் பெறுமானம்) அதிகப் பயனுள்ளவை. எனவே, நாட்டின் பாதுகாப்புத்தான் முக்கியம் என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால்கூட இராணுவச் செலவு முக்கியமானதுதான். அது வெறும் பணச் செலவாக இருப்பதால் அல்ல; இழந்துவிட்ட வாய்ப்புக்களைப் பிரதிபலிக்கும் பிறவாய்ப்புப் பெறுமானமாயும் இருப்பதால்தான். ஆனால் இவ்வாதத்தைப் பெரும்பாலான இராணுவத்தினர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; ஏற்றுக்கொள்ளச் செய்வதும் கடினம்.

உற்பத்தி சாத்திய வளைகோடு

(The Production Possiblity Curve)

குறிப்பிட்டதொரு காலத்தில் பொருள்களையும் பணிகளையும் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய சாதனங்கள் எந்த நாட்டிலுமே குறிப்பிட்ட அளவில்தான் இருக்கும்; அதோடு தொழில்நுட்பமும் (technology) குறிப்பிட்ட நிலையில்தான் இருக்கக் கூடும். இவ்வாறுக, உற்பத்தி சாதனங்கள் வரையறுக்கப்பட்டிருக்கும்போது (அவை தாராளமாய் இருப்பதில்லை) அவற்றைக் கொண்டு செய்யப்படும் உற்பத்தி அளவும் வரையறுக்கப்பட்டுவிடுகிறது. எனினும், குறிப்பிட்ட பொருள்களையும் பணிகளையும் உற்பத்தி செய்யும்போது, இவ்வரையறைக்குட்பட்ட பல்வேறு விதங்களில் உற்பத்தி செய்யக்கூடும். மேஜை, நாற்காலிகள் செய்யப் பயன்படுத்தப்படும் உழைப்பையும் சாதனங்களையும் கொண்டு பள்ளியும் கட்டலாம்; அதேபோல் பென்சில் உற்பத்தியைக் குறைத்துவிட்டு, குண்டூசி உற்பத்தியை அதிகரிக்க முடியும். இவ்வாறுக, இருக்கின்ற சாதனங்களையும் தொழில்நுட்பத்தையும் கொண்டு பல்வேறு பண்டங்களையும் பணிகளையும் வெவ்வேறு அளவில் உற்பத்தி செய்யக்கூடிய எத்தனையோ விதமான உற்பத்தி சாத்தியங்கள் உள்ளன.

சான்றுக, ஒரு நாட்டில் குறிப்பிட்ட அளவில் உற்பத்தி சாதனங்கள் இருப்பதாகவும் அவற்றைக் கொண்டு டெலிவிஷன்

பெட்டிகள், இயந்திரக் கருவிகள் ஆகிய இரண்டு பொருள்களை மட்டுமே அந்நாடு உற்பத்தி செய்வதாகவும் வைத்துக்கொள்வோம். அவ்வாறுயின், இத்தனை டெலிவிஷன் பெட்டிகள், இத்தனை இயந்திரக் கருவிகளென்று எத்தனையோ விதத்தில் அவற்றை உற்பத்தி செய்யக்கூடும். இவ்விதமான கற்பனைச் சாத்தியங்களை 1-1 பட்டியலில் காணலாம்.

1–1 பட்டியல் உற்பத்தி சாத்தியப் பட்டியல்:

டெலிவிஷன் பெட்டிகளும் இயந்திரக் கருவிகளும்

ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யக்கூடிய அளவு (மில்லியன்களில்)

பண்டம்	A	B	C	D	E	F
இயந்திரக் கருவிகள்	0	4	7	9	10	11
டெலிவிஷன் பெட்டிகள்	16	14	12	9	5	0

நமது கற்பனைப்படி இந்நாட்டிலுள்ள சாதனங்கள் அனைத்தையும் கொண்டு இயந்திரக் கருவிகளை மட்டும் உற்பத்தி செய்தால் 11 மில்லியன் கருவிகள் கிடைக்கும்; டெலிவிஷன் பெட்டிகளோ ஒன்றுமே உற்பத்தியாகாது. மாறுக, டெலிவிஷன் பெட்டிகளை மட்டும் உற்பத்திச் செய்தால் 16 மில்லியன் டெலிவிஷன் பெட்டிகள் கிடைக்கும்; இயந்திரக் கருவிகள் ஒன்றுகூட உற்பத்தியாகாது. இவ்விரு சாத்தியங்களுக்கு மிடையில் எத்தனையோ தொகுப்புகளில் (பட்டியலில் நான்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது) டெலிவிஷன் பெட்டிகளையும் இயந்திரக் கருவிகளையும் உற்பத்தி செய்ய முடியும்.

இப்பட்டியல் காட்டும் விவரங்களை வரைபடமாகத் (படம் 1-3) தீட்டினால் உற்பத்தி சாத்திய வளைகோடு கிடைக்கிறது. இருக்கின்ற சாதனங்கள் அனைத்தையும் இவ்விரு பொருள்களை மட்டும் உற்பத்தி செய்யப் பயன்படுத்தினால் எந்தெந்தத் தொகுப்பில் இவ்விரு பொருள்களும் கிடைக்கும் என்பதைத்தான் இவ்வளைகோட்டிலுள்ள ஒவ்வொரு புள்ளியும் புலப்படுத்துகிறது. மேலும், பொருளாதாரத்தில் பல்வேறு முக்கியமான கருத்துக்களை விளக்குவதற்கும் இந்த உற்பத்தி சாத்திய வளைகோட்

டையும் (PPC) அது புலப்படுத்தும் உற்பத்தி சாத்தியப் பட்டியலையும் நாம் பயன்படுத்த முடியும்.



படம் 1-3 உற்பத்தி சாத்திய வளைகோடு: டெலிவிஷன் பெட்டிகளும் இயந்திரக் கருவிகளும்.

தேர்வு: (choice)

தேர்வுதான் பொருளாதாரத்தின் அடிப்படை என்பதை முன்னரே கண்டோம். சாத்தியமான பல்வேறு தொகுப்புகளில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பதற்கு ஒவ்வொரு நாட்டிற்கும் ஏதாவதொரு வழிமுறை அவசியமாகிறது. டெலிவிஷன் பெட்டிகள் அதிகம் வேண்டுமானால், சில இயந்திரக் கருவிகளைக் கைவிடவேண்டியுள்ளது; அதேபோல் இயந்திரக் கருவிகள் அதிகம் வேண்டும்போது டெலிவிஷன் பெட்டிகள் சிலவற்றை இழக்க நேரிடுகிறது. நமது சான்றின்படி 14 மில்லியன் டெலிவிஷன் பெட்டிகளை உற்பத்தி செய்யும்போது 4 மில்லியன் இயந்திரக் கருவிகள்தான் கிடைக்குமேயன்றி, 9 மில்லியன் கருவிகளைப் பெற முடியாது.

பிறவாய்ப்புப் பெறுமானம்:

இயந்திரக் கருவிகள் அதிகம் வேண்டுமானால், டெலிவிஷன் பெட்டிகளைக் கைவிட வேண்டியுள்ளது; எனவே, கைவிடப்படும் டெலிவிஷன் பெட்டிகள்தான் இயந்திரக் கருவிகளின் பிறவாய்ப்புப் பெறுமானமாகும். சான்றாக, டெலிவிஷன் பெட்டிகளை உற்பத்தி செய்யாமல் இயந்திரக் கருவிகளை மட்டும் உற்பத்தி செய்யும்போது 11 மில்லியன் இயந்திரக் கருவிகள் கிடைக்

கின்றன ; 14 மில்லியன் டெலிவிஷன் பெட்டிகளை உற்பத்தி செய்தால் இயந்திரக் கருவிகள் 4 மில்லியன்தான் கிடைக்கிறது. எனவே, 14 மில்லியன் டெலிவிஷன் பெட்டிகளின் பிற வாய்ப்புப் பெறுமானம் 7 மில்லியன் இயந்திரக் கருவிகளாகும் என்று கணக்கிடலாம்.

இறுதிநிலைச் செலவு (marginal cost) :

டெலிவிஷன் பெட்டி உற்பத்தியை 9 மில்லியனிலிருந்து 12 மில்லியனாக அதிகரித்தால் என்ன செலவு ஏற்படும்? அப்படிச் செய்யும்போது 2 மில்லியன் இயந்திரக் கருவிகளைக் குறைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலையில் ஒவ்வொரு டெலிவிஷன் பெட்டிக்கும் ஏற்படும் 'செலவு' மூன்றிலிரண்டு இயந்திரப் பெட்டிகளாகிறது. இச்செலவுதான் டெலிவிஷன் பெட்டியின் இறுதிநிலைச் செலவாகும். அதாவது மேலும் ஓர் அலகு டெலிவிஷன் பெட்டியை உற்பத்தி செய்வதால் ஏற்படும் செலவுதான் அதன் இறுதிநிலைச் செலவு எனப்படுகிறது. அதேபோல் டெலிவிஷன் பெட்டி ஒன்றுமே உற்பத்தி செய்யப்படாமலிருக்க, புதிதாய் 5 மில்லியன் டெலிவிஷன் பெட்டிகளை உற்பத்தி செய்வதென்று முடிவெடுத்தால், அதற்கு 1மில்லியன் இயந்திரக் கருவிகள் செலவாகிறது. இந்நிலையில் டெலிவிஷன் பெட்டியின் இறுதிநிலைச் செலவு ஐந்திலொரு இயந்திரக் கருவி எனக் கணக்கிடலாம், இவ்வாறாக, ஒரு பொருளின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மற்றொரு பொருளை எவ்வளவு இழக்க நேரிடுகிறதோ அச்செலவைத்தான் இறுதிநிலைப் பிறவாய்ப்புப் பெறுமானம் (Marginal opportunity cost) என அழைக்கின்றோம்.

இறுதிநிலைச் செலவு என்னும் கருத்து பொருளாதாரத்தில் மிக முக்கியமான கருத்தாகும். பொதுவாக, இருக்கின்ற சாதனங்கள் அனைத்தையும் இயந்திரக் கருவிகளை உற்பத்திச் செய்வதற்காகப் பயன்படுத்தி டெலிவிஷன் பெட்டி ஒன்றுமே உற்பத்தி செய்யாத நிலையில் தேர்வுப் பிரச்சினை எழுவதில்லை. இது வேண்டுமா, அல்லது அது வேண்டுமா என்ற பிரச்சினை கிடையாது ; மாறாக, எது எது எவ்வளவு வேண்டுமென்றுதான் தேர்ந்தெடுக்கவேண்டியுள்ளது. சான்றாக, இயந்திரக் கருவிகளை ஓரளவு குறைத்துக்கொண்டு (அல்லது அதிகரித்து) டெலிவிஷன் பெட்டி உற்பத்தியை அதிகரிப்பதா (அல்லது குறைப்பதா) என்பது போன்ற தேர்வுநிலைதான் பொதுவாக ஏற்படுகிறது. எனவே, டெலிவிஷன் பெட்டிகளையோ அல்லது இயந்திரக் கருவிகளையோ மேலும் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமாயின், எவ்வளவு இயந்திரக் கருவிகளை அல்லது டெலிவிஷன் பெட்டி

களைக் கைவிடவேண்டியுள்ளதோ அதுதான் முக்கியம்; அதுதான் டெலிவிஷன் பெட்டியின் அல்லது இயந்திரக் கருவியின் இறுதி நிலைச் செலவாகும்.

இரண்டு பொருள்களைப் பல்வேறு சேர்மானங்களில் உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியங்கள் இருக்கும்போது, எந்தச் சேர்மானத்தில் அவற்றை உற்பத்தி செய்வது சிறந்தது என்பதைத் தேர்வு செய்வதெப்படி? இறுதிநிலைச் செலவு என்னும் கருத்துதான் இதற்குப் பெருந்துணையாக உள்ளது என்பது மிகவும் முக்கியம். சான்றாக, ஒரு நாடு C என்னும் புள்ளி காட்டும் சேர்மானத்தில் (7 மில்லியன் இயந்திரக் கருவிகளையும் 12 மில்லியன் டெலிவிஷன் பெட்டிகளையும்) உற்பத்தி செய்வதாக வைத்துக்கொள்வோம். அப்போது இயந்திரக் கருவிகளின் உற்பத்தியைக் குறைத்துக்கொண்டு, டெலிவிஷன் பெட்டி உற்பத்தியை அதிகரிப்பது நல்லதா என்பதைத் தீர்மானிக்க இறுதி நிலைச் செலவுதான் பெருந்துணை செய்கிறது. உற்பத்தி சாத்தியக் கோட்டிலுள்ள (P P C) C புள்ளியியல் ஒரு டெலிவிஷன் கருவியின் இறுதிநிலைப் பிறவாய்ப்புப் பெறுமானம் ஒன்றரை இயந்திரக் கருவிகளென்று தெரிகிறது. எனவே, மேலும் 2 மில்லியன் டெலிவிஷன் பெட்டிகளை உற்பத்தி செய்வதற்கு 3 மில்லியன் இயந்திரக் கருவிகளைக் கைவிட வேண்டியுள்ளது; இதனால் ஒன்றரை மில்லியன் இயந்திரக் கருவிகளைக் காட்டிலும் ஒரு மில்லியன் டெலிவிஷன் பெட்டிகள்தான் முக்கியமானதென்று சமுதாயத்தினர் கருதினால்தான் டெலிவிஷன் பெட்டி உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். ஏனெனில் அதனால் ஏற்படும் இழப்பைவிட ஆதாயம்தான் அதிகம். மாறாக, ஒரு டெலிவிஷன் பெட்டியைவிட ஒன்றரை இயந்திரக் கருவிகள்தான் அதிக மதிப்புடையதென்று சமுதாயம் கருதினால் டெலிவிஷன் பெட்டி உற்பத்தியை அதிகரிக்கக் கூடாது.

இவ்வாறாக, இருக்கின்ற உற்பத்தி சாதனங்களைக்கொண்டு பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்ய முடியுமாதலின், எந்தப் பொருள்களுக்கும் பணிகளுக்கும் சமுதாயம் அதிக முக்கியத்துவம் தருகிறது என்பதையும் அவற்றிற்கேற்படும் இறுதிநிலைப் பிறவாய்ப்புப் பெறுமானத்தையும் ஒப்பிட்டுத்தான் நல்ல முறையில் தேர்வு செய்யமுடியும். ஏதாவதொரு பொருளை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமானால் ஏனைய பொருள்களின் பயனை நாம் அனுபவிக்க முடியாது. எனவே, ஒரு பொருளை அதிகமாக உற்பத்தி செய்யும்போது அப்பொருளின் மதிப்பு கைவிடப்படும் பொருள்களின் மதிப்பைக் காட்டிலும் உயர்வாக இருந்தால்தான் முந்திய பொருளை அதிகரிப்பது

நல்லதாகும். இவ்வாறுக, பொருள்களின் மதிப்பையும் அவற்றின் இறுதிநிலைச் செலவையும் ஒப்பிட்டுப் பார்த்தால்தான் உகந்த தேர்வு எது என்று புலனாகும்.

தனியார் முயற்சிப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் தரும் நாட்டில் பொருள்களின் மதிப்பு பெரும் பாலும் அங்காடியில்தான் நிர்ணயமாகிறது. மாறாக, முறையான சோஷியலிச நாட்டில் மையத் திட்டக் குழுவினரே 'மதிப்பை' நிர்ணயித்து விடுகின்றனர். இவ்வாறாக, மதிப்பை நிர்ணயம் செய்கின்ற முறை எப்படியிருந்தாலும் சரி, அல்லது எந்தெந்த அளவில் பொருள்கள் உற்பத்தியாக வேண்டுமென்று தேர்வு செய்கிற நடைமுறை எதுவாயிருந்தாலும் சரி, பொருள்களின் இறுதிநிலைப் பிறவாய்ப்புப் பெறுமானத்தையும் அப் பொருள் களுக்குச் சமுதாயத்தினர் தரும் மதிப்பையும் ஒப்பிட்டுத்தான் நல்ல முறையில் தேர்வு செய்ய முடியும்.

இத்தேர்வு பற்றிய பிரச்சினையை நுண்ணினப் பொருளா தாரத்தில்தான் பெரும்பாலும் ஆராய்கிறோம். வரையறுக்கப் பட்டுள்ள உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு மக்களின் அள வற்ற விருப்பங்களை நிறைவேற்றுவதெப்படி என்ற பிரச்சினை எழும்போது எதை எதை எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற தத்துவங்களை நுண்ணினப் பொருளாதாரம் புலப்படுத்துகிறது. அதோடு, நமது அங்காடிப் பொருளாதாரம் (Market economy) செயல்படும் முறையையும் ஆராய்கிறது. அதாவது, உற்பத்தி, விலைவாசிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினை களில் எது எது எப்படி நடைபெறுகிறது என்பதை நாடெங் கிலும் பரவியுள்ள அங்காடி முறைதான் நிர்ணயம் செய்கிற தென்பதை நுண்ணினப் பொருளாதாரம் ஆய்வு முறையில் புலப்படுத்துகிறது. இவ்வாறாக, உசிதமாகத் தேர்ந்தெடுப்ப தெப்படி என்பதற்குரிய தத்துவங்களைக் கொண்டு உலகையே எடைபோடுவது நுண்ணினப் பொருளாதாரம்தான்.

வளர்ந்துசெல் இறுதிநிலைச் செலவு (Increasing marginal cost) :

டெலிவிஷன் பெட்டிகள் அல்லது இயந்திரக் கருவிகளின் உற்பத்தியை அதிகரித்துக்கொண்டே போனால் அவற்றின் இறுதிநிலைச் செலவும் வளர்ந்துகொண்டே செல்கிறது என்பதை நமது உத்தேசமான 1 – 1 பட்டியலிலிருந்து காணலாம். சான்றாக, டெலிவிஷன் பெட்டிகள் ஒன்றுமே உற்பத்தியாகாத நிலையி லிருந்து 5 மில்லியன் பெட்டிகளாக உற்பத்தியை அதிகரிக்கும் போது, ஒரு பெட்டியின் இறுதிநிலைச் செலவு ஐந்தில் ஒரு இயந் திரக் கருவியாக ஆகிறது; இச் செலவு மேலும் மேலும் அதிகரித்

துக்கொண்டே சென்று டெலிவிஷன் பெட்டியின் உற்பத்தி 14 மில்லியனாக ஆனபின்னர் மேலும் ஒரு பெட்டியை உற்பத்தி செய்வதற்கு ஏற்படும் இறுதிநிலைச் செலவு இரண்டு இயந்திரக் கருவிகளாக ஆகிவிடுகிறது. இயந்திரக் கருவிகளின் இறுதி நிலைச் செலவும் இதுபோன்றுதான். நமது பட்டியலிலுள்ள எண்ணிக்கைகள் உத்தேசமானவைதாம்; எனினும், ஒரு பொருளை மேலும் மேலும் அதிகமாக உற்பத்தி செய்யும்போது, அதன் இறுதிநிலைச் செலவு வளர்ந்துகொண்டேதான் செல்கிறது என்பது நடைமுறையிலும் உண்மைதான். உற்பத்தி சாத்தியக் கோட்டில் (P P C) எந்தப் பக்கம் நகர்ந்தாலும் இவ்வுண்மை புலனாகும்.

பொதுவாக, இறுதிநிலைச் செலவு ஏன் வளர்ந்துகொண்டே செல்கிறது என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. குறிப்பிட்ட தொருபொருளை உற்பத்தி செய்வதற்காகச் சாதனங்களைப் பயன் படுத்திக்கொண்டே இருக்கும்போது அவை அவ்வுற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி (Specialization) பெற்றுவிடுகின்றன. எனவே, அச்சாதனங்களை வேறொரு பொருளின் உற்பத்திக்கு மாற்றும்போது, அவை அடைந்துள்ள சிறப்புத் தேர்ச்சியின் பலன்கள் விரயமாகின்றன. ஒரு சான்றின் வழியாக இதனைத் தெளிவுபடுத்துவோம். பெரும் அளவில் நெல் விளைச்சல் தரக் கூடிய நிலத்தில் மக்காச் சோளம் சாகுபடி செய்தால் அதிக விளைச் சலைப் பெற முடியாது. மக்காச் சோள உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால், அதற்கேற்ற நிலங்களைத்தான் முதலில் பயன் படுத்துவோம்; மேலும் மேலும் அதிகமாகச் சாகுபடி செய்ய வேண்டிய நிலை வரும்போது அவ்வளவாகத் தகுதியில்லாத நிலத்திலுங்கூட மக்காச் சோளத்தைச் சாகுபடி செய்ய வேண்டிய அவசிய மேற்பட்டு விடுகிறது. அதேபோன்றுதான் உழைப்பாளிகளும். குறிப்பிட்டதொரு வேலையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ள தொழிலாளிகளை வேறொரு வேலைக்கமர்த் தினால் அதில் அவர்களுக்கு அவ்வளவு திறமை இருக்காது. மேலும், உற்பத்தி செய்யும் பொருள்களின் தன்மைக்கேற்ப நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய சாதனங்களை வெவ்வேறு வீதத்தில் இணைக்கவேண்டியுள்ளது. இச் சாதனக்கலப்பு (Combination of resources) எந்தெந்த முறையில் அமைய வேண்டுமோ, அப்படி அமைந்தால்தான் நல்ல பலன் கிட்டும். சான்றாக, நெசவாலைகளில் தொழிலாளர்கள் மிக அதிகமாகவும் மூலதனம் ஓரளவிற்கும் தான் பயன்படுத்தப்படுகின்றன. மாறாக, பெட்ரோல் போன்ற எண்ணெய் பக்குவப் படுத்தும் ஆலையிலோ மூலதனம் ஏராள மாயும் உழைப்பு ஓரளவிற்கும்தான் பயன்படுத்தப்படுகின்றன.

அப்படியிருக்க, நெசவாலைத் தொழிலிலுள்ள சாதனக் கலப்பை அப்படியே எண்ணெய்ப் பக்குவப்படுத்தும் தொழிலுக்கு மாற்றினால் நல்லதல்ல. இவ்வாறாக, ஒரு துறையிலுள்ள சாதனங்களைப் பிறிதொரு துறைக்கு மாற்றும்போது இறுதிநிலைச் செலவு அதிகரிக்க முற்படுவதற்கு மேலும் எத்தனையோ காரணங்கள் உள்ளன.

வேலையின்மை (Unemployment):

படம் 1-3-லுள்ள உற்பத்திச் சாத்தியக்கோட்டிற்கு உட்புறமாக இருக்கின்ற × என்னும் புள்ளி வேலையின்மையைச் சுட்டிக்காட்டுகிறது. இச் சூழ்நிலையில் ஒரு நாடு தன்னிடமுள்ள நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய சாதனங்களை முழுமையாகப் பயன்படுத்தாமல் இருக்கின்றது என்பது தெளிவு. எனவே, வேலையின்றி இருக்கும் சாதனங்களைப் பயன்படுத்துவதன் வழியாக டெலிவிஷன் பெட்டிகள், இயந்திரக் கருவிகள் ஆகிய இரண்டையுமே அதிகமாக உற்பத்தி செய்ய முடியும். இவ்வாறாக, கணிசமான அளவு வேலையின்மை இருக்கும்போது தேர்வு செய்யவேண்டிய பிரச்சினைகளுக்கு அவ்வளவாக இடமில்லை. காரணம், சாதனங்கள் வேலையின்றி இருப்பதால் எல்லாவற்றையுமே அதிகமாக உற்பத்தி செய்யக்கூடும். வேறு விதமாகக் கூறின், வேலையின்மை நிலவும்போது, இறுதிநிலைப் பிறவாய்ப்புப் பெறுமானம் சூன்யமாகத்தான் (Zero) இருக்கும். வேலை நிறைவு (Full employment)[6] கொண்ட நாட்டில்தான் ஒரு பொருளை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு மற்றொரு பொருளை ஓரளவு கைவிடவேண்டியுள்ளது; எனவே தேர்வு செய்ய வேண்டிய முக்கியமான பிரச்சினையும் இந்நாட்டில்தான் உள்ளது.

பொருளாதார வளர்ச்சி:

இன்றைய உலகில் பெரும்பாலான நாடுகள் பொருளாதார வளர்ச்சி பெற்று வருகின்றன; எனவே இந்நாடுகளிலெல்லாம் உற்பத்திச் சாத்தியக் கோடுகள் நிரந்தரமாக அப்படியே இருப்பதில்லை. தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துகொண்டே இருப்பதால் உற்பத்தித் தளவாடங்களும் ஆலைகளும் நவீனமயமாகிக் கொண்டு வருகின்றன; கல்வியும் பயிற்சியும் பரவலாகித் தொழி

6. வேலை நிறைவைப்பற்றி பின்னர் குறிப்பிடுவோம். வேலை நிறைவு என்றால் இருக்கின்ற சாதனங்கள் அனைத்தும் 100க்கு 100 பயன்படுத்தப்படுகின்றன என்று பொருளல்ல. நன்கு வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில்கூட ஓரளவிற்கு வேலையின்மை இருப்பதைக் காண்கிறோம். வேலை நிறைவு என்றால் என்ன என்பதற்குரிய முறையான இலக்கணம் இப்போதைய ஆய்விற்கு அவசியமில்லை; எனினும், வேலையின்றி இருக்கின்ற சாதனங்கள் கணிசமான அளவில் இல்லாதபோது வேலை நிறைவு இருப்பதாக வைத்துக்கொள்வோம்.

ல்ாளரின் திறமையும் வளர்ந்துகொண்டே இருக்கிறது. இதன் விளைவாக உற்பத்தித் திறனும் அதிகரித்த வண்ணமிருக்கிறது. இவ்வாறாக, பொருளாதார வளர்ச்சி ஏற்படும்போது படம் 1–3-லுள்ள உற்பத்திச் சாத்தியக்கோடு (PPC) வலது புறமாக நகர்ந்துவிடுகிறது. அப்படி நகர்ந்து விடும்போது தேர்வு செய்ய வேண்டிய பிரச்சினைகளும் மறைந்துவிடுவதாக எண்ணக்கூடாது. மாறாக, இப்போதுதான் அப்பிரச்சினைகள் சிக்கல்கள் நிறைந்த தாகி விடுகின்றன. விருந்தில் சுவை மிக்க உணவு வகைகள் ஏராளமாக இருந்தால் எதைச் சாப்பிடுவது என்று திண்டாடு கிறோமே அதைப்போலத்தான்.

பொருளாதார வளர்ச்சி பற்றிய பிறிதொரு உண்மையையும் படம் 1–3-லுள்ள உற்பத்திச் சாத்தியக்கோடு (PPC) புலப்படுத்துகிறது. பொருள்களை நுகர்வுப் பொருள்கள் (Consumer Goods) என்றும் முதலீட்டுப் பொருள்கள் (Investment Goods) என்றும் பாகுபடுத்துகிறோம். அதாவது, ஏனைய பொருள்களை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப் படும் இயந்திரங்கள், கருவிகள், தளவாடங்கள் போன்றவை முதலீட்டுப் பொருள்கள் எனப்படும். நமது உதாரணத்திலுள்ள டெலிவிஷன் பெட்டிகள் நுகர்வுப் பொருள்களையும், இயந்திரக் கருவிகள் முதலீட்டுப் பொருள்களையும் குறிப்பிடுவதாக வைத்துக்கொள்வோம். இப்போது, உற்பத்திச் சாத்திய வளை கோட்டில் (PPC) 'தென் மேற்காக' நகர்ந்தால் நுகர்வுப் பொருள் களின் உற்பத்தி குறைந்து, முதலீட்டுப் பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கும் நிலை புலப்படும். அவ்வாறு ஏற்படின், நாட்டு மக்கள் பொருளாதார வளர்ச்சி துரிதமாக ஏற்படவேண்டு மென்று விரும்புவதாகப் பொருள். அதாவது, உடனடியாக நுகரக்கூடிய பொருள்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சாதனங் களைப் பெயர்த்து, வருங்கால உற்பத்தியையும் நுகர்ச்சியையும் அதிகரிக்கக்கூடிய முதலீட்டுப் பொருள்களை ஏராளமாக உற் பத்தி செய்வதற்குப் பயன்படுத்த வேண்டுமென்று மக்கள் விழைகின்றனர் என்று பொருள். வேறு விதமாகக் கூறின், உற்பத்திச் சாத்திய வளைகோடு (PPC) எவ்வளவு விரைவாக வலது புறம் நகரக்கூடு மென்பது (வேறு காரணங்களோடு) மக்கள் செய்யும் தேர்வைப் பொருத்தது.

அளிப்பு, தேவை, சமநிலை
(Supply, Demand, Equilibrium)

உங்களில் பலர் ஏற்கெனவே நுண்ணினப் பொருளாதாரத் தைப் படித்திருப்பீர்கள்; எனவே, அளிப்புக்கோடு (supply

curve), தேவைக்கோடு (demand curve), சமநிலை ஆகிய அடிப்படைக் கருத்துக்களையும் அறிந்திருப்பீர்கள். பருவினப் பொருளாதாரத்தில்தான் பல்வேறு ஆய்வுக் கருவிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன; எனினும், பொருளாதாரச் சிக்கல்களை ஆராயும் போது அவ்வாய்வுக் கருவிகள் நுண்ணினப் பொருளாதாரத்திலும் கையாளப்படுகின்றன. அதேபோல் நுண்ணினப் பொருளாதாரத்திலுள்ள சில முக்கியமான கருத்துக்கள் பருவினப் பொருளாதாரத்திலும் அதிகமாகப் பயன்படுகின்றன.

மேலும், பொருளாதாரப் பாடங்கள் அனைத்திலும் பொதுவாகப் பயன்படும் கருத்துக்களில் சமநிலை என்ற கருத்து மிக முக்கியமானதாகும். அதேபோல்தான் தேவை, அளிப்பு என்ற கருத்துக்களும் எல்லாப் பாடங்களிலும் இடம் பெறுகின்றன. இக் கருத்துக்கள் நுண்ணினப் பொருளாதாரத்திற்கு மட்டுமன்றிப் பருவினப் பொருளாதாரத்திற்கும் அடிப்படையானவையாகும்.

பொருளாதார ஆய்வில் அங்காடிகளுக்குச் (markets) சிறப்பிடம் உண்டு. குறிப்பிட்ட பண்டங்களுக்குத் தேவையும் அளிப்பும் எப்படியுள்ளன, அவை இரண்டும் அங்காடியில் சேரும்போது சமநிலை விலை (equilibrium price) எப்படி நிர்ணயமாகிறது என்பதை நுண்ணினப் பொருளாதாரம் ஆய்கிறது. பருவினப் பொருளாதாரத்தில் பொருள்களுக்கும் பணிகளுக்குமுள்ள தொகு தேவை (aggregate demand) எப்படி உருவாகிறது, மொத்த உற்பத்தி எந்த அளவுக்கு அதிகமாக இருக்கும் என்பதை ஆராய்கிறோம். மேலும், குறிப்பிட்ட பண்டங்களைப் பொருத்தவரை அவற்றின் அளிப்பையும் தேவையையும் விலைதான் சமநிலைப்படுத்துகின்றது; ஆனால் மொத்த அளிப்பு—தேவைச் சமநிலையோ வருமானத்தால் நிர்ணயமாகின்றது.

மொத்த அளிப்பு, மொத்தத் தேவை பற்றிய ஆய்வை மேற்கொள்ளு முன்னர், நுண்ணினப் பொருளாதாரத்தில் தொடக்கத்தில் இடம் பெறும் இக்கருத்துக்களை மிகச் சுருக்கமாகப் பார்ப்போம்.[7]

அங்காடியில் விற்போர், வாங்குவோர் என்று இரு குழுவினர் பங்கு கொள்கின்றனர். விற்பனை செய்வோர் கூடுமானவரை

7. விலைக் கோட்பாட்டைப்பற்றி (Price theory) ஏற்கெனவே படித்துள்ள வாசகர்கள் இப்பகுதியை விட்டுவிட்டு, அடுத்த பகுதிக்குச் செல்ல விரும்பலாம். எனினும், இதைப்பற்றிய முழு விவரங்களையும் அறிய விரும்புவோர் R. Dorfman அவர்கள் எழுதியுள்ள "Prices and Markets", "The Price System" ஆகிய நூல்களைப் படிக்கவும். இவ்விரு நூல்களும் இந்நூல் வரிசையிலேயே வெளிவந்துள்ளன.

அதிக விலைக்கு விற்க முயல்கின்றனர்; ஆனால் வாங்கு வோரோ கூடுமானவரை மலிவாக வாங்க விரும்புகின்றனர். அவ்வாறாயின், விற்பனை நடைபெறுமா? எவ்வளவு விற்பனை யாகும்? எந்த விலையில்?

இதற்குக் கற்பிதமானதொரு பண்டம் *A*-ஐ எடுத்துக் கொள்வோம். இப் பண்டத்தின் அளிப்புக் கோட்டை படம் 1-4(*a*)-ல் காணலாம். *A*-யின் விலை தாழ்வாக இருக்கும்போது, பல விற்பனையாளர்கள் இப் பண்டத்தை விற்க முன்வரமாட்டார்கள். அதோடு, *A*-யின் உற்பத்தியாளர்களும் நல்ல இலாபம் கிடைத் தால்தான் செலவையும் பாராமல் உற்பத்தியைப் பெருக்க முற் படுவர். மாறாக, *A*-யின் விலை உயரும்போது விற்பனையாளரில் பெரும்பாலானோர் இதை விற்க முன்வருவர்; அதோடு, உற் பத்தியாளர்களும் நிறையச் செலவு செய்து உற்பத்தியைப் பெருக்கி இலாபம் பெறக்கூடும்; அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்பதற்காக ஆலைகளை நாள் முழுவதும் இயக்கலாம்; தொழிலாளர்களுக்கு உயர்ந்த ஊதியமளித்து அதிக நேரம் வேலை செய்ய வைக்கலாம்; வேண்டிய உற்பத்தி சாதனங்களையும் அதிக விலை கொடுத்து வாங்கலாம். ஆனால், அவ்வாறு உற்பத்தியை அதிகரிக்கும்போது, பொதுவாக இறுதிநிலைச் செலவும் உயர்கிறது; அதாவது, கூடுதலாக உற்பத்தி செய்யும் உருப்படிக்கு அதிகமாகச் செலவாகிறது. எனவே, உயர்ந்த விலைக்கு விற்க முடிந்தால்தான் உற்பத்தியாளர்கள் அதிகமாக உற்பத்தி செய்ய முடியும். சுருங்கக் கூறின், எவ்வளவுக் கெவ்வளவு உயர்ந்த விலை கொடுக்கப்படுமோ அவ்வளவுக் கவ்வளவு அளிப்பு அதிகரிக்கப்படும். இந்நிலையைத்தான் அளிப் புக்கோடு பிரதிபலிக்கின்றது. விலை உயரும்போது அளிப்பு அதிகரிக்கப்படும் என்பதை வலதுபுறமாக மேல் நோக்கிச் செல்லும் அளிப்புக் கோட்டிலிருந்து அறிந்துகொள்ளலாம்.



படம் 1-4 அளிப்புக் கோடுகள்

சில பொருள்களின் விலைகள் சிறிதளவு உயர்ந்தால்கூட அவற்றின் அளிப்புப் பெருமளவு அதிகரிக்கின்றன என்பதைப்

படம் 1 – 4(b) புலப்படுத்துகிறது. இதனைத்தான் நாம் நெகிழ்ச்சியுள்ள அளிப்பு (elastic supply) என்கின்றோம். வேறு சில பொருள்களைப் பொருத்தவரை, விலை கணிசமாக உயர்ந்தால் கூட அளிப்பு சிறிதளவே அதிகரிக்கின்றது என்பதைப் படம் 1 – 4(c) காட்டுகிறது. இது நெகிழ்ச்சியற்ற அளிப்பிற்குச் (inelastic supply) சான்றாகும். ஒரு பொருளின் அளிப்பு நெகிழ்ச்சியுடையதா நெகிழ்ச்சியற்றதா என்பது அப்பொருளை அளிப்போரிடமுள்ள இருப்பின் (stock) அளவு, உற்பத்திச் செலவு, வருங்காலத்தில் விலைவாசிகள் எப்படியிருக்கும் என்ற மதிப்பீடு போன்ற எத்தனையோ காரணங்களைப் பொருத்ததாகும். பொதுவாகக் கூறின், தேவைக் கேற்ப அளிப்பை அதிகரிப்பதற்குக் காலம் தேவை ; தேவைப்படும் காலம் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாயிருக்குமோ அவ்வளவுக்கவ்வளவு அளிப்பின் நெகிழ்ச்சியும் அதிகமாயிருக்கும். சான்றாக, *A*-யின் விலை இன்று உயர்வதாக வைத்துக்கொள்வோம். அவ்வாறாயின், வியாபாரிகளில் சிலர் தம்மிடமுள்ள இருப்பை விற்றுவிட நினைக்கலாம்; ஆனால் உடனடியாக இப்பண்டத்தின் உற்பத்தியை அதிகரித்துவிட முடியாது. ஏறிய விலை தொடர்ந்து நீடித்தால் தான் உற்பத்திச் செலவு அதிகமானாலும் கூட இலாபம் கிடைத்து விடுமென்று உற்பத்தியாளர்கள் தத்தம் திறமைக்கேற்ப உற்பத்தியை அதிகரிக்க முற்படுவர்.

வாங்குவோரின் நடவடிக்கைகளோ வேறு விதமாக இருக்கும். ஒரு பண்டத்தின் விலை மலிவாக இருக்கும்போது அதிகமாகவும் அதிகமாக இருக்கும்போது குறைவாகவும் வாங்குவர். அதாவது, விலை எவ்வளவுக்கெவ்வளவு மலிவாக இருக்குமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக வாங்குவர். மேலும், இதுவரை வேறோரு பண்டத்தை வாங்கிய பலர் அப்பண்டத்திற்குப் பதிலாக மலிவான இப் பண்டத்தையே இப்போது வாங்கக் கூடும்; அதோடு இப்பண்டத்தை வாங்கிவந்த அனைவரும் இப்போது விலை மலிவாக ஆகிவிட்டதால் முன்பைவிட அதிக அளவிலும் வாங்கக்கூடும்.

தேவைக் கோட்டின் இயல்பை படம் 1–5(*a*) அப்படியே புலப்படுத்துகிறது. ஒரு பண்டத்தின் விலை இறங்க இறங்க, அதற்கேற்படும் தேவை விரிவடைந்துகொண்டே செல்கிறது. படம் 1–5(*b*)வரை நெகிழ்ச்சியுள்ள தேவைக் கோட்டை உடையது; விலை சிறிதளவு ஏறினால்கூட (அல்லது இறங்கினால்) தேவை பெருமளவில் சுருங்கிவிடுகிறது (அல்லது விரிவடைகிறது) என்பதைத்தான் இக்கோடு புலப்படுத்துகிறது. பொதுவாக,

ஏதாவதொரு பொருளுக்கு நெருங்கிய பதிலீட்டுப் பொருள்கள் (Close substitutes) இருக்குமானால், அதன் தேவை நெகிழ்ச்சியுடையதாயிருக்கும். மாறாக, பதிலீட்டுப் பொருள்களே இல்லாத உப்புப் போன்ற பொருள்களின் தேவை நெகிழ்ச்சியற்றதாயிருக்கும் என்பதை படம் 1-5(c) புலப்படுத்துகிறது.



படம் 1-5 தேவைக்கோடுகள்

இப்போது பண்டம் A-யின் தேவைக்கோட்டையும் அளிப்புக் கோட்டையும் கொண்டு அதன் சமநிலை விலையை நிர்ணயிப்பது எளிதாகி விடுகிறது. படம் 1-6-ல் இவ்விரு கோடுகளும் போடப்பட்டுள்ளன. இவ்விரு கோடுகளும் E என்ற புள்ளியில் தான் ஒன்றையொன்று வெட்டுகின்றன ; இப்புள்ளியில்தான் P_1 என்னும் சமநிலை விலை நிர்ணயமாகிறது. மேலும், இப்புள்ளியில்தான் தேவை அளவும் அளிப்பின் அளவும் b அலகுகள் என்று ஒன்றுக்கொன்று சமமாகின்றன. எனவே, P_1 விலையில் மட்டுமே விற்பனை அளவும் வாங்கும் அளவும் ஒன்றுக்கொன்று சமமாவதால் இவ்விலைதான் சமநிலை விலையாகும்.



படம் 1-6 அளிப்பு, தேவை, சமநிலை விலை

விலை 1-7 படத்திலுள்ளதைப் போல் P_0க்கு இறங்குவதாக வைத்துக்கொள்வோம். அப்படியானால் தேவையின் அளவு C அலகுகளாக விரிவடைகிறது; ஆனால் அளிப்பின்

அளவோ d அலகுகள்தான். எனவே, அளிப்பைவிடத் தேவையின் அளவு dc அலகுகளுக்கு அதிகமாகி விடுகிறது. இவ்வாறு அளிப்பைவிடத் தேவையின் அளவு விரிவதால் விலை உயர முற்படுகிறது; விற்பனையாளர்களும் உயர்ந்த விலையில்தான் விற்க முயல்வர்.



படம் 1–7 எஞ்சிய தேவையும் எஞ்சிய அளிப்பும்

மாறுக, விலை P_2 மட்டத்திற்கு உயர்ந்திருப்பதாக வைத்துக் கொள்வோம். இவ்விலை சமநிலை விலையைக் காட்டிலும் உயர்வானது. எனவே, விற்பனையாளர்கள் தம் விற்பனையை e அலகுகளுக்கு விரிவாக்க முற்படுவர்; ஆனால் வாங்குவோரோ f அலகுகள்தான் வாங்குவர். அப்போது தேவையைக் காட்டிலும் அளிப்பின் அளவு fc அலகுகள் அதிகமாகி விடுவதால் விலை குறைய முற்படுகிறது. விற்பனையாளர்களும் தம் சரக்கு விற்பனையாகாதிருப்பதைக் கண்டு விலையைக் குறைப்பர். இவ்வாறுக, காலப்போக்கில் தேவையின் அளவுக்கேற்ப அளிப்பும், அளிப்பின் அளவுக்கேற்ப தேவையும் சரிக்கட்டப்பட்டு, P_1 என்ற சமநிலை விலையில் நிலைத்துவிடக் கூடும்.

அளிப்புக்கோடும் தேவைக்கோடும் நிலையானவையல்ல என்பது குறிப்பிடத்தக்கது. காலப்போக்கில் உற்பத்தி செலவு மட்டுமன்றி, நுகர்வோரின் பற்றுதல்களும் (Consumer's tastes) வருமானமும் கூட மாறுதல் அடைகின்றன; அப்படி நுகர்வோரின் வருமானம் உயரும்போது முன்பைவிட அதிக அளவில் பண்டங்களை வாங்கக்கூடும். இவ்வகையான மாறுதல்கள் ஏற்படும்போது தேவைக்கோடும் அளிப்புக்கோடும் இடம் பெயர்ந்து விடுகின்றன. சான்றுக, மலிவாக உற்பத்தி செய்யக்கூடிய புதிய முறை கண்டுபிடிக்கப்பட்டு கையாளப்படும்போது அளிப்புக் கோடு அப்படியே வலதுபுறமாகப் பெயர்ந்துவிடக்கூடும்.

அதேபோல் நுகர்வோரின் வருமானம் உயர்ந்து விட்டால் தேவைக்கோடும் அப்படியே வலதுபுறமாக நகர்ந்து விடும்.

உண்மையில் தேவைக்கோடும் அளிப்புக்கோடும் எப்பொழுதும் நகர்ந்துகொண்டுதானிருக்கின்றன. அளிப்பைக் காட்டிலும் தேவையின் அளவோ, அல்லது தேவையைக் காட்டிலும் அளிப்பின் அளவோ அதிகமாகிக்கொண்டிருக்கும்போது, அதற்கேற்றார்போல் விலை இணக்கமடையாமல் இருக்கக் கூடும். எனவேதான் சமநிலை விலையை நாம் அடைய முடிவதில்லை. இருந்தபோதிலும், சமநிலை விலை பொருளாதார ஆய்விற்கு முக்கியமானதாகவே உள்ளது. எவ்வாறெனில், குறிப்பிட்டதொரு காலத்தில் பொருளாதார சக்திகள் போகும் போக்கு எங்கே போய் முடியுமோ என்பதையும், விலைவாசிகள் எந்த அளவுக்கு ஏற்ற இறக்கமடைகின்றன என்பதையும் நாம் அறிந்துகொள்வதற்கு இச்சமநிலை விலைதான் நமக்குத் துணை புரிகிறது.

என்னென்ன பொருள்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகிக்கப்பட வேண்டுமென்பதைச் சமுதாயத்தினர்தான் நிர்ணயம் செய்கின்றனர்; அதாவது, அங்காடியில் இயங்கும் தேவை, அளிப்பு ஆகியவற்றின் சக்திகளின் வாயிலாக சமுதாயத்தினர்தான் முடிவு செய்கின்றனர். சமுதாயம் செய்யும் தேர்வுகள் உசிதமானவைதானா என்பதைக் கண்டுபிடிக்க, அச்சமுதாயம் எந்தெந்தப் பொருள்களுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறது என்பதையும் அந்தந்தப் பொருள்களின் இறுதிநிலைச் செலவையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டுமென்று நாம் ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளோம். பல்வேறு பொருள்களுக்குச் சமுதாயம் தரும் முக்கியத்துவத்தையும் அப்பொருள்களின் செலவுகளையும் பிரதிபலிக்கும் வகையில்தான் தேவை—அளிப்புச் சக்திகள் இயங்குகின்றன. அதாவது, சமுதாயம் எவ்வளவு மதிப்புத் தருகிறது என்பதைத்தான் தேவைக்கோடுகள் பிரதிபலிக்கின்றன; அதேபோல் இறுதிநிலைச் செலவுகள் பற்றிய விவரங்களை அளிப்புக்கோடுகள் பிரதிபலிக்கின்றன. எனவே, சமுதாயக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், ஒரு பொருள் சமநிலை அளவில் உற்பத்திச் செய்யப்படுமாயின், சமுதாயத்தின் தேர்வு உசிதமானதுதான் என்று கூறலாம். தேவைக்கோடு சமுதாயம் தரும் மதிப்பைப் பிரதிபலிப்பதெப்படி? அதேபோல் அளிப்புக்கோடு இறுதிநிலைச் செலவைப் பிரதிபலிப்பது எவ்வாறு? சமநிலை உற்பத்தி நடைபெற்றால் சமுதாயத்தின் தேர்வு உசிதமானதென்று எப்படிக் கூறமுடியும்? நுண்ணினப் பொருளாதாரப் பகுதிகளில் ஒரு பகுதி இக் கேள்விகளைப்

பற்றித்தான் முக்கியமாக ஆராய்கிறது. அதேபோல் அங்காடிகள் அனைத்தும் நிறைவானவையல்ல என்பது உண்மை; குறிப்பிட்டதொரு பண்டத்தின் தேவைக்கோடு சமுதாயம் செய்துள்ள தவருன தேர்வைப் பிரதிபலிப்பதாயிருக்கலாம்; அதேபோல் முற்றுரிமைச் சக்திகளால் (monopoly elements) அளிப்புக்கோடு உருமாறக்கூடும். இவ்வகையான நிறைவு குறைந்த அங்காடிகளைப் (imperfect markets) பற்றியும், அவற்றைச் சீர்படுத்தி நிறைவு செய்வதற்கான வழி வகைகளைப் பற்றியும் மற்றொரு பகுதி ஆராய்கின்றது.

தேவை, அளிப்பு, சமநிலை ஆகிய மூன்று கருத்துக்களும் நுண்ணினப் பொருளாதாரத்தில் மட்டுமன்றி, பருவினப் பொருளாதாரத்திலும் இடம் பெறுகின்றன என்பதைப் பின் வரும் அதிகாரங்களில் பார்க்க இருக்கின்றோம். எனினும் ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடுவது நன்று; அதாவது, பொருள்களுக்கும் பணிகளுக்குமுள்ள மொத்தத் தேவையும் அவற்றின் மொத்த அளிப்பும் ஒன்றுக்கொன்று முரணுகும்போதுதான் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டமோ அல்லது பணவீக்கமோ (inflation) ஏற்பட்டுத் தொல்லை கொடுக்கின்றது.

பொருளாதார அறிஞர்களிடையே அடிக்கடி கருத்து முரண்பாடு ஏற்படுவதேன்?

பொருளாதாரத்தைப் பலர் குறை கூறுவதை நாம் அறிவோம்; பொருளாதாரத்தைப் பயிலும் மாணவர்கள்கூட சில சமயங்களில் முறையிடுவதுமுண்டு. அவர்கள் கூறும் குறை இதுதான்; "நீங்களெல்லாம் பொருளாதார அறிஞர்களாக வாழ்கின்றீர்கள்; பொருளாதாரத்திற்குரியதென்று ஏதேதோ சொற்களைப் பயன்படுத்துகின்றீர்கள்; சிக்கல் நிறைந்த கணிதம், புள்ளி விவரங்கள், இன்னும் பிற அறிவியல்களுக்குரிய எதை எதையோவெல்லாம் பயன்படுத்தித் திணர வைக்கின்றீர்கள். ஆனால், முக்கியமானதொரு பொருளாதாரப் பிரச்சினைக்கு எந்தக் கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிப்பது நல்லது என்றால் உங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விடுகிறது. நீங்கள் அனைவரும் ஒருமித்து ஒரே ஆலோசனையைக் கூறுவதில்லை; அப்படியே கூறினாலும் அதை மற்றவர்கள் நம்பும்படி செய்ய முடிவதில்லை. சில சமயங்களில் நீங்கள் தரும் ஆலோசனை எங்களுக்கு விநோதமாகவும் தெரிகிறது; இதெல்லாம் ஏன்?"

பொருளாதார ஆய்வுகளில் பல, நாட்டின் கொள்கைகளுக்கு முக்கியமானவைதான். சான்றாக, நமது வாழ்க்கைத்

தரம் உயரவேண்டுமானால் பொருளாதாரப் போட்டி எப்படிப் பட்டதாயிருக்க வேண்டும்? ஒரு தொழிலில் ஒரு சில நிறு வனங்கள் மட்டும் (கார் உற்பத்தித் தொழிலில் மூன்று கம்பெனி கள் மட்டும் இருப்பதைப்போல்) இருந்தால் போட்டியின் பலன்கள் எந்த அளவுக்குச் சீர்கெடும்? அல்லது அப்படியிருப்பது டிரஸ்டு ஒழிப்புச் சட்டத்திற்கு மாறுனதாகுமா? செல்வந்தர்கள் மீதுள்ள வரிகளை அரசாங்கம் குறைத்துவிட்டால், அதனால் நாட்டின் உற்பத்தி எப்படிப் பாதிக்கப்படும்? உற்பத்தி அதி கரிக்கும் வீதம் என்னவாகும்? வருமான ஏற்றத்தாழ்வு அதி கரித்து விடுமா? விவசாயிகளுக்கு அரசாங்கம் மானியம் (subsidy) கொடுப்பதால் விவசாய வருமானம், நுகர்வுப் பொருள்களின் விலைவாசிகள், நாட்டு வருமானம் ஆகியவை எப்படிப் பாதிக்கப் படுகின்றன? மத்திய அரசாங்கம் தன் வரவை அளவுகடந்து செல விடுவது எப்பொழுதுமே தவறுகி விடுமா? அவ்வாறு செலவிடு வது எப்போது நல்லது, எப்போது நல்லதல்ல? இதுபோன்ற இன்னும் எத்தனையோ விதமான கொள்கைப் பிரச்சினைகளை யெல்லாம் பற்றி பொருளாதாரம் ஆய்கிறது. எனினும், இப் பிரச்சினைகளில் பொருளாதார அறிஞர்களிடையே மட்டுமன்றி, அரசியல் தலைவர்களிடையேகூட கருத்துவேறுபாடுகள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியும்.

அவ்வாறுயின், தத்தம் விருப்பப்படி தவறுன கருத்துக்களைக் கூட வலியுறுத்துவதுதான் பொருளாதாரமா? அப்படி யார் வேண்டுமானாலும் குருட்டுத்தனமான கருத்துக்களைக் கூறுவது முறைதானா? எல்லோருக்கும் பொதுவான பொருளாதாரத் தத்துவங்கள் ஏதும் கிடையாதா? அப்படியிருந்தால், பொரு ளாதாரக் கொள்கைகளைப்பற்றி ஏன் பொருளாதார அறிஞர் களிடையே கருத்து முரண்பாடு தோன்றுகின்றன? இயற்பியல் அறிஞர்களிடையே இவ்விதக் கருத்து முரண்பாடுகள் எழுவ தில்லையே? சான்றாக, வானவெளிக்கப்பல் வானவெளியில் சுற்றிக்கொண்டிருக்கும்போது புவிவிசைத் தத்துவமும் (Gravitation) சடத்துவத் தத்துவமும் (inertia) என்னவாகின்றன என்ப தைக் கேட்டால், இயற்பியல் அறிஞர்கள் அனைவருமே அதற்கு ஒரேவிதமான விளக்கத்தைத்தானே தருகின்றனர். அப்படி யிருக்க, பொருளாதார அறிஞர்களிடையே மட்டும் பொருளா தாரக் கொள்கைகளையோ தத்துவங்களையோ பற்றிய கருத்து முரண்பாடு ஏற்படுவதெப்படி?

இப் பிரச்சினைகளைப்பற்றி முழுமையாக ஆராயவேண்டு மாயின், அதற்கே ஒரு நூல் தேவைப்படும். ஆனால் ஒன்று;

குறிப்பிட்டதொரு பொருளாதார நிகழ்ச்சியைப்பற்றி ஆயும் போது, அந்நிகழ்ச்சியின் அம்சங்களைமட்டும் ஆராய்ந்தால்தான் பொருளாதார இயலின் தன்மை என்ன, அதன் எல்லை என்ன என்பதை நாம் உணர முடியும். ஆனால் அப்படி ஆராய முடிவ தில்லை. இதற்குரிய சில அடிப்படையான உண்மைகளை ஆரம் பத்திலேயே கூறிவிடுவது நல்லது.

சமூக மதிப்புகளில் முரண்பாடு

பெரும்பாலும், பொருளாதாரம் தேர்வு செய்வது பற்றிய ஆய்வுதான் என்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். சான்றாக, உற்பத்தி சாதனங்கள் வரையறுக்கப்பட்ட அளவில்தான் உள்ளன; அதோடு, அவை பல்வேறு பயனுடையவையும் ஆகும்; எனவே, எதை எதை எதற்குப் பயன்படுத்த வேண்டும் என்று தேர்வு செய்யவேண்டியுள்ளது. ஆனால், நகைச்சுவையான நூலைக் காட்டிலும் ஷேக்ஸ்பியரின் நூல் தான் நல்லதென்றோ, அல்லது புகையிலையையும் அழகு சாதனங்களையும் அதிகமாக உற்பத்தி செய்வதற்குப் பதிலாக, அவற்றின் உற்பத்தியைக் குறைத்துக்கொண்டு, கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குத்தான் அதிகமாகச் செலவு செய்ய வேண்டுமென்றோ பொருளாதாரம் கூற முடியாது. மாறாக, நாட்டில் மக்களின் பற்றுதல்களுக்கும், அவர்கள் தரும் முக்கியத் துவத்திற்கும் ஏற்ப பொருள்களும் பணிகளும் உற்பத்தியாகின்ற னவா? அவ்வாறு உற்பத்தி செய்யவேண்டுமாயின், விலை இயங்கும் முறையிலோ அல்லது அரசாங்கத்தின் செலவுக் கொள்கையிலோ என்னென்ன திருத்தங்களைச் செய்யலாம் என்பதைத்தான் பொருளாதாரம் விளக்குகின்றது. எனினும், சட்டமன்றக் கூட்டத்தில் பொருளாதார அறிஞர் பேசும்போது, அரசாங்கம் கல்விக்குத்தான் அதிகச் செலவு செய்யவேண்டும். என்று வலியுறுத்தலாம்; அதைக் கேட்கும் மற்றொருவர் (மற்றொரு பொருளாதார அறிஞர் என்றே வைத்துக்கொள் வோம்), 'அதெப்படி, இப்போது அரசாங்கம் கல்விக்காகச் செலவிடும் தொகையே அதிகம்; தனியார் துறையினர்தான் சிறிய அளவு செலவிடுகின்றனர், எனவே அவர்கள்தான் அதிகமாகச் செலவிட வேண்டும்' என்று வாதாடலாம். ஆனால் ஒன்று; இவ்விதக் கருத்து முரண்பாடுகளுக்கும் பொருளாதாரத் தத்துவங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. எனவே, கல்விக்காக அரசாங்கம் எவ்வளவு செலவிடவேண்டுமென்று அவர்கள் வாதாடும்போது, குடிமக்கள் என்ற முறையில்தான் தத்தம் கருத்துக்களை வலியுறுத்துகின்றனரேயன்றி, பொரு ளாதார அறிஞர்கள் என்ற முறையில் அல்ல.

மற்றொரு சான்றை எடுத்துக்கொள்வோம். வரி அமைப்பில், உயர்ந்த வீத வரிகளையெல்லாம் குறைத்துவிட வேண்டுமென்ப தற்காக, செல்வந்தர்கள் செலுத்தும் வரிகளைக் குறைத்துவிட்டு, நடுத்தர வகுப்பினரும் ஏழை மக்களும் பாதிக்கப்படக்கூடிய விதத்தில் விற்பனை வரியை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித் துள்ளதாக வைத்துக்கொள்வோம். அதனால் என்னென்ன பொருளாதார விளைவுகள் ஏற்படும்; அதாவது, நாட்டின் மொத்த வருமானம், உற்பத்தி, பொருளாதார வளர்ச்சி, வரு மானப் பகிர்வு ஆகிய ஒவ்வொன்றும் எப்படிப் பாதிக்கப்பட லாம் என்ற ஆய்வில் இரு பொருளாதார அறிஞர்களிடையே ஒற்றுமை நிலவலாம். எனினும், ஏற்கெனவே வருமான ஏற்றத் தாழ்வு அதிகமாயிருப்பதாகக் கருதும் ஒருவர், வரிக்குறைப்பைத் தனிப்பட்ட முறையில் எதிர்க்கக் கூடும்; அதே சமயம், அரசாங் கம் ஏற்கெனவே எடுத்துள்ள நடவடிக்கைகளால் வருமான ஏற்றத்தாழ்வு அதிக அளவு குறைக்கப்பட்டு விட்டதாகக் கருதும் மற்றொருவரோ இத்திட்டத்தை ஆதரிக்கக் கூடும்.

வேறு விதமாகக் கூறின், குறிப்பிட்டதொரு பொருளாதாரக் கொள்கையைப் பொருத்தவரை, பொருளாதார அறிஞர் களிடையே தோன்றும் கருத்து முரண்பாட்டிற்குப் பொருளா தாரத் தத்துவங்கள் காரணமல்ல; மாறாக, சமுதாயக் குறிக் கோள்களில், குடிமக்கள் என்ற முறையில் அவர்கள் கொண் டுள்ள மாறுபட்ட மதிப்புகள்தான் காரணமாகும். எனவே, அவர்களின் கருத்து முரண்பாடு சமுதாயம் சார்ந்த அல்லது அரசியல் சார்ந்த முரண்பாடுகளேயொழிய, பொருளாதார முரண்பாடுகள் அல்ல.

பொருளாதாரமும் இயற்பியல்களும்

குறிப்பிட்டதொரு பொருளாதாரக் கொள்கையினால் பொது வாக என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதில் பொருளாதார அறிஞர்களிடையே ஒற்றுமை ஏற்படலாம்; எனினும் அவ் விளைவுகள் எந்த அளவுக்கு ஏற்படும் என்பதிலோ, அல்லது எப்போது ஏற்படும் என்பதிலோ அவர்களின் கருத்து முரண் படலாம். சான்றாக, கார்ப்பரேஷன்களின் வருமானவரியை அரசாங்கம் குறைத்துவிடுமாயின், புதிய இயந்திர சாதனங்கள், தளவாடங்கள் ஆகியவற்றில் செய்யப்படும் முதலீடு பெருகி, நாட்டின் உற்பத்தி வளரும் வீதமும், உற்பத்தித்திறன் வீதமும் அதிகரிக்கும் என்பதில் பொருளாதார அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு தோன்றாது; எனினும், எந்த அளவுக்கு

அதிகரிக்கும் என்பதில் அவர்களின் கருத்து வேறுபடலாம். மேலும், இவ்வரிக் குறைப்பினால் அரசாங்க வருமானம் 1 பில்லியன் டாலர் குறைந்துவிடுவதாக வைத்துக்கொள்வோம். இதை ஈடுகட்டும் அளவுக்குத் தொழில் வளர்ச்சி ஏற்படாமல் சிறிதளவு வளர்ச்சிதான் ஏற்படுமென்று ஒரு சிலர் வாதிடலாம். காரணம், வேலை நிறைவு இருக்கும்போது, இந்த வரிக்குறைப்பால் அரசாங்கத்திற்கு ஏற்படும் நட்டத்தைச் சரிக்கட்ட வேண்டுமாயின், ஏனைய வரிகளை அதிகரிக்க வேண்டும், அல்லது அரசாங்கச் செலவைக் குறைக்க வேண்டும்; ஏதோ ஓரளவிற்குப் பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதற்காக ஏன் இவ்வளவு துன்பப் படவேண்டுமென்று அவர்கள் நினைக்கக்கூடும். மாறாக, முதலீடும் உற்பத்தியும் துரிதமாக வளரவேண்டுமாயின், கார்ப்பரேஷன் வருமான வரியைச் சிறிதளவேனும் குறைத்தாக வேண்டும் என்று நினைக்கும் பொருளாதார அறிஞரோ இவ்வரிக் குறைப்புத் திட்டத்திற்குப் பேராதரவு தரக்கூடும். எனவே, இவ்வகையான சூழ்நிலைகளில் பொருளாதார அறிஞர்களிடையே கருத்து முரண்படுவதற்குக் காரணம், அவரவரின் சமூகக் குறிக்கோள் முக்கியத்துவமோ அல்லது பொருளாதாரத் தத்துவங்களோ அல்ல; மாறாக, அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் ஏற்படக் கூடிய விளைவுகளை முன்கூட்டியே அளவிடுவதில் தோன்றும் வேறுபாடுதான் காரணமாகும். அதாவது, நமது சான்றின்படி, வருமான வரி 1 பில்லியன் டாலர் குறைக்கப்பட்டால், முதலீடு எவ்வளவு டாலர் அதிகரிக்கும் என்பதில்தான் கருத்து வேறுபாடு தோன்றுகிறது.

வரி, வருமானம், உற்பத்தி, வேலை நிலை, இன்னும் இது போன்றதனைத்தும் அளவிடப்படக் கூடியவைதானே? அப்படியிருக்க, பொருளாதாரக் கொள்கைகளினால் ஏற்படக்கூடிய விளைவுகளை அளவிடுவதில் என்ன துன்பம் இருக்கிறது? ஏன் இக்கருத்து வேறுபாடுகள் தோன்றவேண்டும்? என்று நீங்கள் கேட்கலாம். இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

முதலாவது: இயற்பியல் அறிஞர்கள் ஆய்வுக்கூடங்களில் பரிசோதனை நடத்துவதைப்போல் பொருளாதார அறிஞர்கள் நடத்த முடியாது. சான்றாக, இயற்பியல் அறிஞர் ஒருவர் வெவ்வேறு பரிமாணமுள்ள தாமிரக் கம்பிகளின் மின் கடத்தும் வேகத்தைப் பரிசோதிக்க விரும்புவதாக வைத்துக்கொள்வோம்; அப்படியானால், ஆய்வுக்கூடத்தின் தட்பவெப்ப நிலையை வேண்டிய அளவுக்குக் கட்டுப்படுத்தி, ஒவ்வொரு பரிமாணமுள்ள கம்பியாக எடுத்துப் பரிசோதித்துப் பார்க்க முடியும்.

வேறுவிதமாகக் கூறின், தான் பரிசோதித்துப் பார்க்கவேண்டிய கம்பிகளைத் தவிர, ஏனையதனைத்தையும் அவர் கட்டுப்படுத்தி விட்டு, ஒவ்வொரு கம்பியாக எடுத்துப் பரிசோதனை செய்ய முடியும். ஆனால் நாம் அவ்வாறு செய்ய முடியாது. என்னென்ன விளைவுகள் ஏற்படக்கூடும் என்பதைப் பரிசோதித்துப் பார்ப்பதற்காக எந்தப் பொருளாதாரக் கொள்கையையும் நாம் வகுக்கவோ அல்லது மாற்றவோ முடியாது? அப்படிச் செய்வது நல்லதுமல்ல. அப்படியே செய்தாலும் கூட, ஏனையதனைத்தையும் கட்டுப்படுத்திவிடவும் முடியாது. சான்றாக, 1964 ஆம் ஆண்டில் வரிகள் குறைக்கப்பட்டதால் பொருளாதார நடவடிக்கைகள் தீவிரமாக விரிவடையத் தொடங்கின; அதைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள்வரை ஏற்பட்ட விளைவுகளை மட்டும் வைத்துக் கொண்டு எல்லாமே வரிக்குறைப்பினால்தான் ஏற்பட்டன என்று கூறிவிட முடியாது. ஏனெனில், அப்போது வேறு எத்தனையோ மாறுதல்களும் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. பொதுவாகக் கூறின், பொருளாதார நடவடிக்கைகள் எப்பொழுதும் மாறிக்கொண்டும், ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தும், சிக்கல்கள் நிறைந்ததுமாகும்; இந்நிலையில்தான் நமக்கு வேண்டிய நிகழ்ச்சியினை நாம் ஆய்ந்து அளவிடவேண்டி உள்ளது; அல்லது அளவிட முயற்சிக்க வேண்டியுள்ளது. எனவே நமது முடிவுகள் வேறுபடுவதில் வியப்பொன்றும் இல்லை. இருந்த போதிலும், புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் நுட்பம் படிப்படியாகச் செம்மையடைந்து வருகிறது; அதோடு, புள்ளி விவரங்களை மிக வேகமாகக் கணக்கிடும் பொறியில் (computer) புரட்சிகரமான முன்னேற்றமும் இப்போது ஏற்பட்டுள்ளது. இதனால் முக்கியமான சில பொருளாதார நடவடிக்கைகளின் உறவுகளை அளவிட்டு நம்பிக்கையான புள்ளி விவரங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு இன்று உள்ளது; எனினும், இயற்பியல்களில் உள்ள திட்டவட்டமான அளவீட்டை நம்மால் அடையவே முடியாது.

இரண்டாவது : எலெக்ட்ரான்கள் (electrons) பெரும் எண்ணிக்கையில் இருக்கும்போது, எப்படிச் செயல்படும் என்பதை முன் கூட்டியே திட்டவட்டமாகக் கூறிவிடமுடியும். அதேபோல் மக்கள் பெரும் எண்ணிக்கையில் இருக்கும்போது, எப்படி அவர்கள் நடந்துகொள்வர் என்பதையும் கூறலாம். எனினும், இயற்பியல் நிகழ்ச்சிகளைக் காட்டிலும் மக்களின் நடவடிக்கைகள் சிக்கல் நிறைந்தவை; எனவே, திட்டவட்டமாக இப்படித்தான் நடப்பர் என்று கூறமுடியாது. மேலும் காலப்போக்கில் மக்களின் நடவடிக்கைகள் மாறுகின்றன — சில சமயங்களில்

தீவிரமாக மாறிவிடுகின்றன; இதன் விளைவாக, பொருளாதார நிகழ்ச்சிகளுக்கேற்ப அவர்கள் நடந்துகொள்ளும் விதமும் மாறி விடுகின்றன.

சுருங்கக் கூறின், பொருளாதார நிகழ்ச்சிகள் இயற்பியல் நிகழ்ச்சிகளைப்போல் அவ்வளவு துல்லியமானவை அல்ல; மனித சமுதாயம் எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கிறது ; மாறிக் கொண்டேதானிருக்கும்; வியக்கத்தக்க வகையிலும் மாறுகின்றது. எனவே, சமுதாய நடவடிக்கைகளைப்பற்றி முன்கூட்டியே திட்ட வட்டமாக ஒன்றும் கூற இயலாது. எந்தெந்தப் பொருளாதாரச் சூழ்நிலையில் என்னென்ன நடைபெறுமென்பதைக் கண்டுபிடிக்கக் கணிதச் சமன்பாடுகள் பொருளாதாரத்தில் கிடையாது. எனினும் பொருளாதாரத்தில் பொதுவான சில தத்துவங்கள் உள்ளன ; அவற்றை நாம் பயன்கொள்ளமுடியும். குறிப்பாக, பொருளாதாரத்தில் இயல்பான முறையில் ஆயக்கூடிய வழி முறைகளும் உள்ளன ; எனவே, பொருளாதார வளர்ச்சி யையும் நிலைபேறுக்கத்தையும் நாம் ஆராயும்போது, பண்டைக் காலப் பழமொழிகளுக்கோ சுலோகங்களுக்கோ நாம் முக்கியத் துவம் தரவேண்டிய அவசியமில்லை.

சுருக்கம்

ஒரு சமுதாயம் தன் பொருளாதார விருப்பங்களை நிறைவு செய்வதற்கு, வரையறுக்கப்பட்டுள்ள உழைப்பு, மூலதனம், கச்சாப் பொருள்கள் ஆகியவற்றை எப்படிப் பயன்படுத்துகிறது என்பதை ஆய்வதுதான் பொருளாதாரம் என்று கூறப்படுகிறது. ஆனால் தொன்மையான (Classical) இவ்விலக்கணம் முழுமை யானதல்ல. இன்றைய பொருளாதாரத்தில் வளர்ச்சியும் நிலையின்மையும்தான் முக்கியப் பிரச்சினைகளாக உள்ளன; ஆனால் இந்த இலக்கணம் இவ்விரண்டையும் முழுமையாகப் புலப் படுத்துவதில்லை.

கடந்த பல நூற்றாண்டுகளாக ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சிதான் மேலைநாட்டு நாகரிகத்தின் மைய அம்சமாக விளங்குகிறது. அந்நாடுகளில் மக்கள்தொகை வளர்ச்சியைக் காட்டிலும் பொருளாதார வளர்ச்சிதான் துரிதமாய் ஏற்பட் டுள்ளது. பொருள்களும் பணிகளும் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டிருப்பதோடு, அவற்றின் தரமும் எவ்வளவோ உயர்ந்துள்ளன. எனவே அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரமும் பன்மடங்கு உயர்ந்துள்ளது; அதோடு மட்டுமின்றி, கடந்த

60 ஆண்டுகளாக வருமான ஏற்றத்தாழ்வும் குறைந்து மக்கள் வசதியாக வாழ்கின்றனர்.

ஒரு நாட்டில் நிலை குலையாமல் பொருளாதார வளர்ச்சி திடமாக ஏற்படவேண்டுமாயின், தொழில்நுட்பமும் (technique) உற்பத்தி செய்யும் அமைப்பு முறையும் முன்னேறிக்கொண்டே இருக்கவேண்டும். அப்போதுதான் பழைய உற்பத்தி முறைகள் மறைந்து, புதிய முறைகள் தோன்றவும், பழைய பொருள்களுக்குப் பதிலாகப் புதுவகையான பொருள்கள் உற்பத்தியாகவும் முடியும். இவ்வாறுக, பொருளாதார வளர்ச்சி ஏற்படும்போது இணக்கம் (adoptation) இன்றியமையாததாகிறது; ஆனல் மாற்றம் என்பது துன்பமானது. பழைய தொழில்கள் மறைந்து புதிய தொழில்கள் தோன்றும்போது, பழையன மடிவதால் அத்தொழிலின் தொழிலாளிகள் மட்டுமன்றி, சில சமயங்களில் அப்பகுதியிலுள்ள அனைவருமே வேலையின்றி, வறுமையில் வாடவேண்டியுள்ளது. எனவே, மாறுதல்களுக்கேற்ப மக்களும் தங்களை இணக்கம் செய்து கொள்ள வேண்டும்; அவ்வாறு செய்துகொள்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடும். எனவே, பொருளாதாரப் பாதுகாப்புதான் முக்கியமென்று கருதி, முன்னேற்றமான தொழில்நுட்ட மாறுதல்களுக்கே முட்டுக்கட்டை போட்டுவிட்டால் வளர்ச்சி தடைப்படும்; நாளடைவில் பிரச்சினைகளும் பெரிதாகிவிடும்.

மேற்கத்திய நாடுகளில் பொருளாதார முன்னேற்றத்தின் போது, இங்கும் அங்குமாக வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டதோடு, பொது வேலையின்மையும் (mass unemployment) பொருளாதார மந்தமும் ஏற்பட்டுள்ளன. காரணம், உற்பத்தி செய்யும் திறமை இல்லாததால் அல்ல; மாறுக, தொழிலாளர்கள் அனைவரையும் வேலைக்கமர்த்தி உற்பத்தி செய்யும்போது கிடைக்கும் பொருள்கள் அனைத்தையும் விற்க முடியாததுதான் காரணமாகும். எனவே, மந்தம் தோன்றி, பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படுவதற்கான காரணங்களை ஆயும்போது, நாட்டின் முழுத்திறன் உற்பத்திக்கும் நடைமுறை உற்பத்திக்குமுள்ள வேறுபாடு என்ன என்பதை நாம் உணரவேண்டும். முழுத்திறன் உற்பத்தியைக் காட்டிலும் அங்காடித் தேவை குறைந்துவிட்டால் நாட்டில் வேலையின்மை ஏற்பட்டுவிடும். மாறுக, உற்பத்தி செய்யக்கூடிய அளவைவிடத் தேவை அதிகரித்துவிட்டால் பணவீக்கம் தோன்றும். பொருளாதார வளர்ச்சி என்றுல் உற்பத்தி செய்யக்கூடிய திறனை உயர்த்துவது என்று

தான் பொருள்; மாறுக, முழுத்திறன் உற்பத்தி அளவிலிருந்து நடைமுறை உற்பத்தி வேறுபடுவதைப் பொருளாதாரச் சீர்குலைவு என்கின்றோம்.

ஒன்றையொன்று சார்ந்துள்ள இன்றைய பொருளாதாரத்தில் நடைபெறும் பொருளாதார நடவடிக்கைகள் ஒரு சுழல் ஓட்டம் போன்றது. தொழில் நிறுவனங்கள் தொழிலாளரை வேலைக் கமர்த்துவதோடு, உற்பத்திக்கு வேண்டிய இயந்திர சாதனங்கள், தளவாடங்கள், கச்சாப்பொருள்கள் ஆகியவற்றை விலைக்கு வாங்குகின்றன. எனவே, உற்பத்தி செய்யும்போது நிறுவனங்களுக்குச் செலவு ஏற்படுகிறது; அச் செலவுதான் தொழிலாளர்களுக்கும் முதலீடு செய்தோருக்கும் வருமானமாக ஓடுகிறது. இவ்வருமானம் தொழில்கள் செய்த உற்பத்திப் பொருள்களை வாங்கப் பயன்படுகின்றது. இவ்வாறாக உற்பத்தி, வருமானத்தை உருவாக்குகிறது; வருமானமோ உற்பத்தியான பொருள்களை வாங்கச் செலவிடப்படுகின்றது.

ஒரு நாடு தன் முழுத்திறனுக்கு உற்பத்தி செய்யும்போது, உற்பத்தியான பொருள்கள் முழுவதையும் வாங்கக்கூடிய வருமானத்தை உருவாக்குகிறது. எனவே, தொழிலாளர்களும் முதலீடு செய்தோரும் தங்களுக்குக் கிடைக்கும் வருமானம் முழுவதையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொருள்களை வாங்குவதற்கென்று செலவழித்தால் உற்பத்தியானதனைத்தும் விற்கப்பட்டு விடுகின்றன. அப்படியின்றி, உற்பத்தியைக் காட்டிலும் செலவு குறைந்துவிட்டால், நிறுவனங்கள் மறுபடியும் அதே அளவு உற்பத்தி செய்ய முடியாது. உற்பத்தி அளவு குறையும்போது வேலையின்மை ஏற்படும்; நிறுவனங்களின் உற்பத்தி சக்தி எச்சமாகிவிடும். இவ்வாறாக, நாட்டின் உற்பத்தி, வருமானம், செலவு ஆகிய மூன்றுக்குமிடையே வேறுபாடு ஏற்படுவதால்தான் உற்பத்தி ஏற்ற இறக்கமடைந்து, செழுமைக் காலம், மந்தகாலம் என்று மாறி மாறித் தோன்றுகின்றன.

முன் சுருக்கம்
(A Preview)

நாட்டு உற்பத்தியும் வருமானமும் உலைவின்றி வளர்ச்சியடைவதைப்பற்றி ஆராயவேண்டுமாயின், உற்பத்தி என்றாலென்ன, வருமானமென்றாலென்ன, அவை எவ்வாறு அளவிடப்படுகின்றன என்பதையெல்லாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, நாட்டு வருமானம், உற்பத்தி என்பனவற்றிற்குரிய இலக்கணத்தையும், அவற்றில் என்னென்ன இனங்கள்

சேர்க்கப்படுகின்றன, அவற்றையெல்லாம் அளவிடுவதெப்படி என்பனவற்றைப் பற்றியும் இரண்டாம் அதிகாரம் ஆய்கிறது. அதற்கடுத்த மூன்று அதிகாரங்களிலும் பொருளாதார நிலையின் மைப் பிரச்சினையைப் பார்ப்போம். இவற்றில் மூன்றும் அதிகாரத் திலும் நான்காம் அதிகாரத்திலும் நாட்டின் உற்பத்தி அளவை நிர்ணயிக்கும் காரணிகளைப் பற்றி விளக்குவோம். முழுத்திறன் உற்பத்தி அளவைக் காட்டிலும் நடைமுறை உற்பத்தி எப்போது குறைந்துவிடுகிறது? பொருளாதார நடவடிக்கைகள் சீர்குலைந்து விடாமல் தடுப்பதற்குரிய முக்கிய வழிமுறைகள் யாவை? சீர் குலைந்துவிட்டால் மறுபடியும் சீர்படுத்துவதெப்படி என்பதை யெல்லாம் நாம் ஆராயப்போகின்றோம். இவற்றில், பொருளா தாரச் சீர்குலைவு என்பது மந்த வடிவிலும் இருக்கலாம், பண வீக்க வடிவிலும் இருக்கலாம். எனவே, மந்தத்தையும் வேலை யின்மையையும் பற்றிக் குறிப்பாக மூன்று, நான்காம் அதிகாரங் களில் ஆராய்வோம். ஐந்தாம் அதிகாரத்தில் பணவீக்கத்தைப் பற்றிப் பார்ப்போம். இறுதியாக, ஆறும் அதிகாரத்தில் மறுபடி யும் பொருளாதார வளர்ச்சிக்கே திரும்பி, நாட்டின் முழுத்திறன் உற்பத்தியை விரிவாக்கக்கூடிய முக்கியமான காரணிகளைப் பற்றி விளக்குவோம். பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினையும் நிலைபேறுக்கப் பிரச்சினையும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புள்ளவை என்பதை இரண்டாம் அதிகாரம் முதல் ஐந்தாம் அதிகாரம் வரையுள்ள ஆய்வுகள் புலப்படுத்தும். பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் அம்சங்களில் சில, பொருளாதாரச் சீர்குலைவிற்கும் காரணமாகலாம்; அப்படிப் பட்ட ஒரு சில அம்சங்கள் நம் நாட்டிலேயே உள்ளன. மாறுகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை உசிதமான அள விற்குக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது; இல்லையெனில், பொரு ளாதார வளர்ச்சி தளர்ச்சியடைந்துவிடக்கூடும்; அல்லது நின்றும்விடக்கூடும்;

2. நாட்டு உற்பத்தியும் வருமானமும்

ஒரு நாட்டில் பொருள்களும் பணிகளும் உற்பத்திச் செய்யப் பட்டு மக்களிடையே பகிரப்பட வேண்டுமென்ற காரணத்திற் காகத்தான் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு கின்றன. பொருளாதாரப் பாடங்கள் அனைத்துமே ஏதாவ தொரு வகையில் உற்பத்தியையும் வருமானத்தையும் ஆய்வு செய்கின்றன. நமது நாட்டில் பொருளாதார நடவடிக்கைகள் எப்படி நடைபெற்றுள்ளன—நமது பொருளாதாரம் எவ்வளவு வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது, எவ்வளவு நிலையானதாயுள்ளது, உற்பத்திச் சாதனங்களை எப்படிப் பல்வேறு உற்பத்திகளுக்குப் பகிர்ந்தளித்துள்ளது—என்பதை மதிப்பிட வேண்டுமாயின், உற்பத்தியையும் வருமானத்தையும் அளவிடக்கூடிய ஏதாவதொரு அளவுகோல் வேண்டும். ஆனால், 1935-வரை நாட்டின் உற்பத்தியையும் வருமானத்தையும் அள விட்டு மொத்தமாகக் காட்டக்கூடிய புள்ளி விவரங்கள் கிடையாது என்பதை நினைக்கும்போது வியப்பாக உள்ளது. ஏன் கிடை யாது என்பதற்கு ஒரு சில முக்கியமான காரணங்கள் உண்டு. ஒன்று, மொத்தமாக அளவிட்டுக் காட்டும் புள்ளி விவரங்களைக் கணக்கிடுவது அதுவரை கடினமான காரியமாக இருந்தது. இதைக் காட்டிலும் முக்கியக் காரணம் யாதெனில், 1935 வரை பொருளாதார அறிஞர்கள் அனைவருமே விலை இயங்கும் முறை யிலும் சாதனப் பங்கீட்டிலும்தான் (அதாவது நுண்ணினப் பொருளாதாரத்தில்தான்) அக்கரை கொண்டிருந்தனர்; பொரு ளாதார நடவடிக்கைகளை மொத்தமாக ஆராய்வதில் (அதாவது, பருவினப் பொருளாதாரத்தில்) கவனம் செலுத்தவில்லை. 1930–39-ல் ஏற்பட்ட கடுமையான பொருளாதார மந்தம்தான் பொருளாதார அறிஞர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, பொருளாதார நடவடிக்கைகளை மொத்தமாக எண்ணிப் பார்க்கும்படி செய்தது. பெரும் பொருளாதார மந்தத்தின்போது உற்பத்தி நசுக்கப்பட்டுச் சரிந்துவிட்டதோடு, வேலையில்லாத் திண்டாட்டமும் மலிந்துவிட்டது. இதுதான் அப்போதிருந்த பெரும் பொருளாதாரப் பிரச்சினையாகும். எனவே, இப் பிரச்சினையை ஆயும் வழியும் அப்போதுதான் சிந்திக்கப்பட்டது.

நாட்டு உற்பத்தியும் வருமானமும்

பொருளாதார மந்தத்தின் கொடுமையை அளவிடுவதற்கு மட்டுமன்றி, அம்மந்தத்திலிருந்து எந்த அளவுக்கு மீளக்கூடும் என்பதை ஆராய்வதற்கும், நாட்டு உற்பத்தியையும் வருமானத்தையும் அளவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.[1]

அமெரிக்க நாட்டின் உற்பத்தி, வருமானம், அவற்றின் இனங்கள் ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களை அமெரிக்க அரசாங்க வணிகத் துறையே கணக்கெடுத்து, 'நாட்டு வருமானக் கணக்கு' என்னும் தொகுப்பில் வெளியிடுகின்றது. இப்புள்ளி விவரங்களிலிருந்து நமது நாட்டுப் பொருளாதாரத்தைப் பற்றிய விவரங்களை நாம் அறிந்துகொள்ளலாம். அடுத்த ஆண்டில் பொருளாதார நடவடிக்கைகள் எந்த அளவுக்கு இருக்குமென்று இப்போதே தெரிந்துகொள்ள வேண்டுமா? அதற்கும் இதில் வழியுண்டு. நாட்டு வருமானக் கணக்கில் உற்பத்தி எவ்வளவு என்ற புள்ளி விவரங்களிலிருந்தே மதிப்பிட்டுக் கொள்ளலாம். வருங்காலத்தில் பொருளாதார வளர்ச்சி எப்படி இருக்குமென்று ஆராய வேண்டுமா? அதற்கும் வழி உண்டு. கடந்த கால வருமானக் கணக்கின் புள்ளி விவரங்களைக் கொண்டே அளவிடமுடியும்; அதாவது, சென்ற ஆண்டுகளில் உற்பத்தி எவ்வளவு விரைவாக அதிகரித்துள்ளது, அவ்வளர்ச்சி வீதத்தை மக்கள் தொகை, தொழிலாளரின் எண்ணிக்கை வளர்ச்சி வீதத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் என்ன தெரிகிறது, வருமானத்தில் எத்தனை சதவீதம் பொருளாதார வளர்ச்சியை உண்டுபண்ணக் கூடிய மூதலீட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற விவரங்களிலிருந்தே அறிந்துகொள்ளலாம். நாட்டின் வருமானத்தில் இலாபத்தின் பங்கு என்ன என்பதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமா? இதற்கு நாட்டு வருமானக் கணக்கில் ஒவ்வொரு இனத்தின் பங்கும் கொடுக்கப்படுகிறது; எனவே நமக்கு வேண்டிய இனத்தின் பங்கினைப் பார்த்தால் போதும்.

[1] நாட்டு வருமானத்தைக் கணிக்கத் தொடங்கியவர்களில் பேராசிரியர் சைமன் குஸ்னெட்ஸ் (Simon Kuznets) அவர்கள்தான் மிக முக்கியமானவர். National Bureau of Economic Research என்னும் தனியார் ஆராய்ச்சி நிறுவனத்திற்கென்று தாம் தம் கணிப்பைத் தொடங்கினர். 1935-க்குப் பின்னரும், இரண்டாம் உலகப் போரின்போதும் அமெரிக்க அரசாங்கமே தனது வணிகத் துறையின் வழியாக அதிகாரப் பூர்வமான வகையில் நாட்டு வருமானக் கணக்கெடுப்பைத் தொடங்கி, கணக்கெடுப்பு முறையை விருத்தி செய்தது. அன்றையிலிருந்து இன்றுவரை நாட்டு வருமானம் ஆண்டுதோறும் மட்டுமன்றி காலாண்டிற்கொருமுறையும் கணக்கிடப்பட்டு அறிவிக்கப்படுகிறது. போருக்குப் பின்னர் இப்பழக்கம் தொழில்வளமிக்க நாடுகளிலிருந்து ஏனைய நாடுகளுக்கும் பரவிவிட்டது. நாட்டின் வருமானக் கணக்கிலிருந்து ஒரு நாட்டின் உற்பத்தி சக்தியையும் சாதனங்களையும் மதிப்பிடமுடியும்; எனவே, வளர்ச்சி குன்றிய நாடுகள் தத்தம் பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமுன், நாட்டு வருமானத்தை அளவிடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளன. நாட்டு வருமானத்தைக் கணக்கிடுவதற்கென்று ஐக்கிய நாடுகள் தரமானதொரு வழியை வகுத்துள்ளன. இவ்வழியை ஒட்டித்தான் பெரும்பாலும் எல்லா நாடுகளுமே தத்தம் நாட்டு வருமானத்தைக் கணக்கிடுகின்றன.

நாட்டின் மொத்த உற்பத்தியும் மொத்த வருமானமும்
(Gross National Product and Gross National Income)

நாட்டில் செய்யப்படும் உற்பத்தியை முழுமையாக அளவிடும் போது நாட்டின் மொத்த உற்பத்தி கிடைக்கிறது. நாட்டின் மொத்த உற்பத்தியை GNP என்று சுருக்கிக் கூறுவது வழக்கம்.

ஆண்டொன்றுக்கு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் மதிப்பளவுதான் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) எனப்படுகிறது.

இதைப் படம் 1–1-ன் வாயிலாகவும் அறிந்துகொள்ளலாம். வளையத்தின் மேல் பாதி காட்டும் உற்பத்தி ஓட்டம்தான் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) ஆகும். நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) ஓர் ஓட்டம் என்பது குறிப்பிடத்தக்கது; அதாவது குறிப்பிட்டதொரு கால அளவில் (ஓராண்டில்) உற்பத்தி செய்யப்படும் அளவுதான் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP). இந்த மொத்த உற்பத்தியை ஆண்டுதோறும் ஓடிக் கொண்டிருக்கும் ஓட்டமாகக் கணக்கிடுவதுதான் மரபு. காரின் வேகத்தை மணிக்கு இத்தனை மைல்கள் என்று கணக்கிடுவதைப் போன்றதுதான் இது.

நாட்டின் மொத்த உற்பத்தியைப் (GNP) பற்றிய மற்றொரு முக்கியமான உண்மையும் இந்த வளைவு ஓட்ட படத்திலிருந்து புலனாகிறது. அதாவது, உற்பத்தி ஓட்டம்தான் வருமான ஓட்டத்தை உருவாக்குகிறது; எனவே, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) நாட்டின் மொத்த வருமானத்திற்குச் (GNI) சமமாகிவிடுகிறது என்பதை வளைவின் கீழ்ப் பாதி புலப்படுத்துகிறது.

எனவே, நாட்டின் மொத்த உற்பத்தியை (GNP) உருவாக்கும்போது (ஊதியம், இலாபம், வாரம், வட்டி என்று) ஈட்டிய வருமானங்கள் அனைத்தும் சேர்ந்ததுதான் நாட்டின் மொத்த வருமானம் (GNI) ஆகும். எனவே, நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) நாட்டின் மொத்த வருமானமும் (GNI) எப்போதுமே ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும்.

நாட்டின் மொத்த உற்பத்தியை (GNP) அளவிடுவதற்குக் குறைந்தபட்சம் இரண்டு வழிகள் உள்ளன என்பது இதிலிருந்தே

2-1 பட்டியல் **1969-ல் இரு கணக்கெடுப்பின்படி நாட்டின் மொத்த உற்பத்தி (GNP)**

(கடப்பிலுள்ள பில்லியன் டாலர்களில்)

இறுதி உற்பத்தி (GNP)		உருவாக்கப்பட்ட வருமானங்கள் (GNI)	
நுகர்வு	$ 576	தொழிலாளரின் நட்ட ஈடு (ஊதியம் உள்பட)	$ 564
முதலீடு	139	வட்டி	31
அரசாங்கம் வாங்கியது	215	வாரம்	22
நிகர ஏற்றுமதி	2	கார்ப்பரேஷன்களின் இலாபம்	88
		தனித் தொழில் வருமானம்	66
		தேய்மானம்	78
		ஏனைய வருமானங்கள் (பெரும்பாலும் சொத்துவரி, விற்பனை வரி வழியாக அரசாங்கம் பெற்ற வருமானம்)	83
நாட்டின் மொத்த உற்பத்தி	$ 932	நாட்டின் மொத்த வருமானம்	$ 932

தெரிகிறது. உற்பத்தியான பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் (விலை) மதிப்பையெல்லாம் மொத்தமாகக் கூட்டுவது ஒரு வழி; அடுத்து, பொருள்களும் பணிகளும் உற்பத்தியாகும்போது உருவாக்கப்பட்ட வருமானங்களின் அளவையும் மொத்தமாகக் கூட்டுவது இரண்டாவது வழி. நாட்டின் மொத்த உற்பத்தி = நாட்டின் மொத்த வருமானம் (GNP = GNI) என்றிருப்பதால் இவ்விரண்டில் எந்த வழியில் கணக்கெடுத்தாலும் விடை ஒன்றாகத் தானிருக்கும். அமெரிக்க அரசாங்க வணிகத் துறையினர் வெளியிடும் வருமானக் கணக்கில் இவ்விரு வழிகளுக்குமுள்ள புள்ளி விவரங்களும் உள்ளன. சில சமயங்களில் இவ்விரு வழிகளிலும் கணக்கிடும்போது விடை சிறிதளவு மாறுபடுவதுமுண்டு; கணக்கெடுப்பு முழுமையானதாக இல்லாமலிருப்பதுதான் இதற்குக் காரணம். 1969ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) வருமானமும் (GNI) எப்படி இருந்தன வென்பதை 2 – 1 பட்டியலில் காணலாம்.

உற்பத்தியின் மதிப்பீடு
(Valuation of Output)

ஒரு நாட்டில் ஆண்டொன்றுக்கு உற்பத்தியாகும் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் (விலை) மதிப்புத்தான் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) என்று வரையறுத்துள்ளோம். பொருள்களும் பணிகளும் ஆயிரக்கணக்கிலும் இலட்சக்கணக்கிலும் உள்ளன; எனவே, இவற்றையெல்லாம் இனம் இனமாகப் பாகுபடுத்தி மொத்தமாகக் கூட்டுவது கடினம். சான்றாக, கார்களையும் இன்னிசைக் கச்சேரிகளையும் கூட்டுவதெப்படி? மருத்துவப் பணிகளோடு உலர்த்தப்பட்ட உணவுப் பண்டங்களைச் சேர்த்துக் கூட்டுவது எவ்வாறு? விடுமுறை உல்லாசப் பயணத்தையும் பென்சில் சீவும் சாதனங்களையும் எப்படிச் சேர்த்துக் கூட்டுவது? இதற்கு ஒரே வழி, அந்தந்தப் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் (விலை) மதிப்பைக் கூட்டுவதுதான். ஒவ்வொரு பொருளுக்கும் பணிக்கும் தராதர மதிப்பு உண்டு; அதனதன் விலைதான் அந்த மதிப்பு. சான்றாக, 3,000 டாலர்களுக்கு ஒரு கார் விற்கப்படும்போது அதை நாட்டின் மொத்த உற்பத்திக் (GNP) கணக்கில் 3,000 டாலர்கள் என்றுதான் சேர்க்கின்றோம்; அதே போல் திரைப்பட நுழைவுக் கட்டணம் 2 டாலர்களெனின், அதை 2 டாலர்களென்று சேர்க்கின்றோம். இவ்வாறாக, ஒவ்வொரு பொருளின் அல்லது பணியின் அளவை அதனதன் விலையால் பெருக்கி, மொத்தம் கூட்டினால் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) மதிப்பு கிடைக்கும்.

இம்மதிப்பீட்டிலிருந்து ஓர் உண்மை புலனாகிறது. அதாவது, ஒவ்வொரு பண்டமும் எவ்வளவு முக்கியமானதென்பது அதனதன் விலையிலிருந்தே தெரிகிறது. சான்றாக, திரைப்படத்தில் ஒதுக்கப்படும் ஓரிடத்தைக் காட்டிலும் கார் 1,500 மடங்கு முக்கியத்துவம் கொண்டது; அதேபோல் முழு ஆடை 60 டாலர்களுக்கும் 6 பீர் புட்டிகள் கொண்ட பெட்டியொன்று 1·50 டாலர்களுக்கும் விற்கப்பட்டால் பீர் பெட்டியைப்போல் முழு ஆடை 40 மடங்கு முக்கியத்துவம் கொண்டதாகிறது. மேலும், நுகர்வோர் ஒவ்வொரு பொருளுக்கும் என்ன விலை கொடுக்கத் தயாராயிருக்கின்றனரோ, அந்தந்த விலைதான் அப்பொருள்களிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் இறுதிநிலைப் பயனைப் பிரதிபலிப்பதாகும்; எனவே, நாட்டின் மொத்த உற்பத்தியினால் அந்நாட்டு மக்களுக்கு எவ்வளவு பொருளாதாரப் பயன் கிடைக்கிறது (GP) தென்பதையும் அளவிட முடியும். இந்தப் பயன் அளவும் நாட்டின் மொத்த உற்பத்தி அளவும் ஏறக்குறைய ஒன்றுதான். பொருள்களின் தராதர விலைகள் இலட்சக்கணக்கான நுகர்வோரும் தொழில் செய்வோரும் சுதந்திரமாகச் செய்யும் தேர்வுகளால் நிர்ணயிக்கப்படும்போது இவ்வாறு ஒப்பிடுவது சரிதான். ஆனால் குறிப்பிட்ட கொள்கைகளையும் திட்டங்களையும் அடைய வேண்டுமென்பதற்காக (சோவியத் நாட்டிலுள்ளதைப்போல்) அரசாங்கமே விலையை நிர்ணயிக்கும்போது எப்படி ஒப்பிட முடியும்? விலை நிர்ணயமாகும் முறையில் இவ்வித வேறுபாடு இருக்கும்போது, சோவியத் நாட்டின் மொத்த உற்பத்தியை நம் நாட்டின் மொத்த உற்பத்தியோடு ஒப்பிடுவது கடினம்; அப்படியே ஒப்பிட்டாலும் அதனால் பயனேதும் இருக்காது. நமது நாட்டில் கூட சில பொருள்கள் நுகர்வோருக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை அந்தப் பொருள்களின் விலைகள் பிரதிபலிப்பதில்லை. சான்றாக, நாட்டின் உற்பத்தியில் பல்வேறு அரசாங்கப் பணிகளின் பங்கு எவ்வளவென்பதைக் கணக்கிடுவது கடினம்; ஏனெனில் நாட்டுப் பாதுகாப்புப் பணி போன்ற பணிகளுக்கு விலை ஏதும் கிடையாது; எனவே, அவற்றின் (விலை) மதிப்பை அவற்றிற்காகும் செலவைக் கொண்டுதான் கணக்கிட முடியுமே தவிர, வேறு வழி ஏதுமில்லை.

விலைவாசி மாறுதல்களைச் சரிக்கட்டல்

நாட்டின் மொத்த உற்பத்தியில் (GNP) சேர்க்கப்படும் பொருள்களுக்கும் பணிகளுக்கும் குறிப்பிட்ட பண மதிப்பு (அல்லது முக்கியத்துவம்) உண்டு. ஆனால் விலைவாசிகள் மாறும்போது அம் மதிப்பும் (அல்லது முக்கியத்துவமும்) மாறி

விடுகிறது. சான்றாக, பண வீக்கத்தின்போது விலைவாசிகள் ஏறிவிடுகின்றன; இவ் விலைவாசி உயர்வால் நாட்டின் மொத்த உற்பத்தியின் (GNP) மதிப்பும் உயர்ந்து விடுகிறது. இவ் வாறாக, விலைவாசி உயர்வால் நாட்டின் மொத்த உற்பத்தியின் (GNP) மதிப்பும் உயரும்போது, பொருள்களும் பணிகளும் அதிகமாக உற்பத்தியாகி விட்டதாக எண்ணக்கூடாது. உண்மை யில் உற்பத்தி எவ்வளவு அதிகரித்துள்ளது என்பதைக் கணக்கிடும்போது, விலைவாசி உயர்வால் அதிகரித்துள்ள நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பைச் சரிக்கட்டவேண்டும். விலைவாசி மாறுதல்களைச் சரிக்கட்டுவதற்குப் பொருளாதார அறிஞர்கள் கையாளும் வழி கருத்தளவில்தான் எளிமையானது; செய்முறையில் கடினமானது). ஏதாவதொரு சாதாரண காலத்தை ஆதாரமாகவைத்துக்கொண்டு அந்த ஆண்டில் நிலவிய விலைவாசிகளைக் கணக்கிட்டுக் கொள்ளவேண்டும். பின்னர் அக்கு வேண்டிய ஒவ்வொரு ஆண்டிலும் எவ்வளவு பொருள் களும் பணிகளும் உற்பத்தியானவோ அவற்றிற்கெல்லாம்



படம் 2-1 நிலையான (1958) டாலரிலும் நடப்பு டாலரிலும் மதிப்பிடப் பட்ட நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) 1947–1969.

ஆதார ஆண்டில் நிலவிய விலைவாசிகளைக்கொடுத்துக் கணித்துப் பார்த்தால் நிலையான டாலர் மதிப்பில் அந்தந்த ஆண்டிற்குரிய நாட்டின் மொத்த உற்பத்தியின் (GNP) மதிப்பு கிடைக்கும். நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) இவ்வாறு நிலையான டாலர் மதிப்பில் கணிக்கப்பட்டால்தான், உண்மையில் அது எவ்வளவு அதிகரித்துள்ளது அல்லது குறைந்துள்ளது என்பது தெளி வாகும். நிலையான டாலரில் கணிக்கப்படும் நாட்டின் மொத்த

உற்பத்திக்கும் (GNP) நடப்பிலுள்ள டாலரில் கணிக்கப்படும் உற்பத்திக்கும் கணிசமான மாறுதல் உள்ளது (2–1 படத்தைப் பார்க்கவும்). 1947-லிருந்து 1969 வரை நடப்பி லிருந்த டாலரில் கணிக்கப்பட்ட நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) ஆண்டொன்றுக்குச் சராசரி 6·5 சதவீதம் அதிகரித் திருந்தது; எனினும், விலைவாசி உயர்வைச் சரிக்கட்டிப் பார்த் தால் ஆண்டொன்றுக்கு சராசரி 3·9 சதவீதம்தான் அதிகரித்தது என்பது புலனாகும். மேலும், நடப்பு டாலரின்படி நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) அதிகரித்த போதிலும், உண்மையில் அது அதிகரிக்காமலேயே இருந்திருக்கலாம், அல்லது குறைந்து கூடப் போயிருக்கலாம். சான்றாக, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஏற்பட்ட சில பொருளாதாரப் பின்னிறக்க காலங் களில் நடப்பு டாலரின்படி நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) அதிகரித்திருந்ததெனினும், உண்மையில் அது குறைந்துபோய் விட்டது. 1957க்கும் 1958க்கு மிடையில் விலைவாசிகள் 2·5 சத வீதம் உயர்ந்திருந்தன; நடப்பு டாலரின்படி நாட்டின் மொத்த உற்பத்தி 1·5 சதவீதம் அதிகரித்திருந்த போதிலும், உண்மையில் அது 1 சதவீதம் குறைந்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இருமுறை கூட்டுவதைத் தவிர்த்தல் (Avoiding Double-Counting)

நாட்டின் மொத்த உற்பத்தியை (GNP) அளவிடுவது எளிதாகத் தோன்றலாம். சான்றாக, உற்பத்தியில் ஏதாவதொரு இனத்தின் அளவு எவ்வளவு (9 மில்லியன் கார்கள் என்று வைத்துக் கொள்வோம்) என்பதைக் கணக்கெடுத்து, அதன் உருப்படி ஒன்றின் விலையால் (காரின் விலை 3,000 டாலர்கள் என்று கொள்வோம்) பெருக்கினால் அந்த இனத்தின் மொத்த மதிப்புத் தெரிந்துவிடுகிறது. இதேபோல் ஒவ்வொரு இன மாகக் கணித்து, எல்லாவற்றையும் மொத்தமாகக் கூட்டினால், நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) எவ்வளவென்று தெரிந்து விடும். இப்படிப் பார்த்தால் மொத்த உற்பத்தியை அளவிடுவது எளிதானதாகத்தான் தோன்றும்; ஆனால் உண்மையில் அப்படி யல்ல. சான்றாக, ஒரு ரொட்டியை எடுத்துக்கொள்வோம்; அதன் விலை 20 சென்டுகளென்று வைத்துக்கொள்வோம் (2–2 படத்தைப் பார்க்கவும்). ரொட்டி சுடுபவர் ஒரு ரொட்டித் துண்டுக்கு வேண்டிய மாவை 11 சென்டுகள் கொடுத்து வாங் கினர்; மாவு விற்பவர் 6 சென்டுகள் கொடுத்து கோதுமை வாங்கி, அதை மாவாக அரைத்து 11 சென்டுகளுக்கு விற்றார்; கோதுமை விற்ற விவசாயி 1 சென்டு விலைக்குத் தனக்கு வேண்டிய

விதை, உரம் ஆகியவற்றை ஏனையோரிடமிருந்து வாங்கினர் என்று வைத்துக்கொண்டால், நாட்டின் மொத்த உற்பத்தியில் இதை அளவிடும்போது, ரொட்டி, மாவு, கோதுமை, உரம் ஆகியவற்றின் விலைகளனைத்தையும் கூட்டி மொத்தம் 38 சென்டுக ளென்று கணக்கிடலாமா? கூடவே கூடாது. அப்படிச் செய் தால் இரு முறை கூட்டிய தவறு ஏற்பட்டுவிடும். எவ்வாறெனில், ஒரு ரொட்டியின் விலையில் மாவின் விலையும் சேர்ந்துவிட்டது; அதேபோல் உரம், விதை ஆகியவற்றின் விலைகள் கோதுமை விலையில் அடங்கி விட்டன. எனவே, இருமுறை கூட்டும் தவறைத் தவிர்ப்பதற்கு உற்பத்தியின் செய்முறை முடிந்த பொருளின் மதிப்பை மட்டுமே கூட்டவேண்டும். அதாவது, பொருள்களையும் பணிகளையும் கடைசியாகப் பயன்படுத்துவோர் என்னென்ன விலைக்கு வாங்கினரோ அவற்றை மட்டும்தான் மொத்தமாகக் கூட்டவேண்டும். சான்றாக, படம் 2-2-ல் ரொட்டியின் விலையான 20 சென்டுகள் மட்டும்தான் நாட்டின் மொத்த உற்பத்தியில் (GNP) சேர்க்கப்படுகிறது. அப்படிச் செய்யும்போது, மாவு, கோதுமை ஆகியவற்றின் உற்பத்தியை மொத்த உற்பத்திக் கணக்கில் விட்டு விட்டதாக எண்ணக் கூடாது; மாறாக, அவற்றின் விலையெல்லாம் சேர்ந்ததுதான் ரொட்டியின் விலை. எனவே, நம் விதிப்படி முடிவுற்ற பொருள் களை மட்டும் சேர்க்கும்போது ஏனைய பொருள்களின் விலைகளும் அவற்றில் சேர்ந்து விடுகின்றன.

நாட்டின் மொத்த உற்பத்தியை (GNP) அளவிடும் இரண்டு வழிகளும் படம் 2-2-ல் உள்ளன. ஒருபுறம், இறுதி யாகச் செய்யப்பட்ட உற்பத்தியின் மதிப்பு (20 சென்டுகள்) எவ்வளவென்றும், மறுபுறம் ஒவ்வொரு தொழிலிலும் எவ்வளவு வருமானம் உருவாக்கப்பட்டதென்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்விரு வழிகளிலும் இருமுறை கூட்டுதல் என்னும் தவறு தவிர்க்கப்பட்டிருப்பதோடு, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP = GNI) நல்ல முறையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விரு வழிகளில் எதைக் கையாண்டாலும் கிடைக்கக் கூடிய மொத்தம் ஒன்றுதான் என்பது குறிப்பிடத்தக்கது. சான்றாக, ரொட்டித் துண்டை உற்பத்தி செய்யும்போது உருவாக்கப்பட்ட மொத்த வருமானங்களும் ரொட்டித் துண்டின் விலையும் ஒன்றுக்கொன்று சரிசமமாகிறது. ரொட்டியின் விலை யைக்காட்டிலும் ரொட்டி சுடுவதற்காகும் செலவு அதிகமாகி விடுகிறதென்று வைத்துக்கொள்வோம்; அப்போதும் மொத்த வருமானமும் உற்பத்தியின் மதிப்பும் சரிசமமாகத்தான்

இருக்கும். அதெப்படி எனில், இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும்படி 'இலாபம்' அமைந்துவிடுகிறது. சான்றாக, ஒரு ரொட்டித் துண்டுக்கு ஆகும் செலவு (மாவின் விலை, ஊதியம், இன்னும் பிற உற்பத்திச் செலவுகள் அனைத்தும் சேர்ந்து) 20

உற்பத்தியாகும் பண்டம்	விற்பனை	ஒவ்வொரு தொழிலிலும் சேர்க்கப் பட்ட மதிப்பு	உருவாக்கப் பட்ட வருமானம் (ஊதியம், இலாபம் முதலியன)
ரொட்டி	20 செ (உற்பத்தியின் மதிப்பு)		
	⟶ ரொட்டி சுடும் தொழில்	9 செ.	9 செ.
மாவு	11 செ.		
	⟶ மாவு அரைக்கும் தொழில்	5 செ.	5 செ.
கோதுமை	6 செ.		
	⟶ விவசாயத் தொழில்	5 செ.	5 செ.
உரம், விதை முதலியன	1 செ.		
	⟶ இரசாயனத் தொழில்	1 செ.	1 செ.
மொத்தம்	38 செ.	20 செ.	20 செ.



படம் 2-2 உற்பத்தியின் மதிப்பும் வருமான மதிப்பும் சமம்

சென்டுகளுக்குமேல் ஆகிவிடுவதாக வைத்துக்கொள்வோம் அப்போது ரொட்டியின் விலைக்கும் ஆக்கச் செலவிற்கும் எவ்வளவு வித்தியாசம் உள்ளதோ அவ்வளவுதான் ரொட்டி சுடுவோருக்கு நட்டமாக இருக்கும். இவ்வாறுகக் கிடைக்கும் இலாபம் உட்பட வருமானங்கள் அனைத்தையும் கூட்டினால் அதே 20 சென்டுகள் தான் வரும்.[2]

பொருளாதார உற்பத்தியை மட்டும் அளவிடுவதான நாட்டின் மொத்த உற்பத்தி (GNP): விற்பனைக்காகத்தான் உற்பத்தி

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பும் நாட்டின் மொத்த உற்பத்தியும் சமம் என்று சொல்கிறோம்; அவ்வாறு சொல்வதன் பொருள் என்ன? நாட்டின் மொத்த உற்பத்தியை அளவிடும்போது (இருமுறை கூட்டுதலைத் தவிர்ப்பதற்காக) முடிவான பொருள்களையும் பணிகளையும் மட்டும்தான் கணக்கில் சேர்க்கின்றோம் என்று வைத்துக்கொள்வோம்; அப்படியானால் அதோடு பிரச்சினைகள் முடிந்துவிடுமா? இல்லை; இன்னும் எத்தனையோ சிக்கல்களும் ஏற்படுகின்றன. சொல்லப்போனால், நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) என்பதென்ன? நம் நாட்டில் செய்யப்படும் உற்பத்தியை அளவிடக்கூடிய ஒரு மதிப்பீடுதானே! நாம் எத்தனையோ விதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஏதாவதொரு வகையில் 'உற்பத்தி' செய்கின்றோம்; ஆனால் அதையெல்லாம் பொருளாதார உற்பத்தி என்று கூற முடியாது. சான்றாக, வேலை முடிந்து நான் வீட்டிற்குப் போனதும் எனது நேரத்தைக் கழிக்க வேண்டுமென்பதற்காகத் தோட்டவேலையோ

[2] நாட்டின் உற்பத்தியை அளவிட மூன்றுவதொரு வழியும் உண்டு. ஒவ்வொரு தொழிலிலும் எவ்வளவு மதிப்பு சேர்க்கப்பட்டதென்பதைக் கூட்டுவதுதான் இவ்வழியாகும். ஒரு நிறுவனம் எவ்வளவு மதிப்புள்ள பொருள்களைப் பிற நிறுவனங்களிடமிருந்து வாங்குகின்றது என்பதை அந்நிறுவனம் விற்கும் விலையிலிருந்து கழித்து விட்டால் புதிதாகச் சேர்க்கப்பட்ட வருமானம் எவ்வளவென்று தெரியும். நமது 2-2 படத்தின்படி ரொட்டி சுடும் தொழிலில் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட மதிப்பு (ரொட்டித் துண்டின் விலையான 20 சென்டுகளிலிருந்து மாவுக்குக் கொடுத்த 11 சென்டு விலையைக் கழித்தால் கிடைக்கும் மதிப்பு) 9 சென்டுகளாகும். இவ்வாறாக, ஒவ்வொரு தொழிலிலும் எவ்வளவு மதிப்புச் சேர்க்கப்பட்டுள்ளதென்பதைக கணக்கெடுத்து, மொத்தமாகக் கூட்டினால் அது மொத்த உற்பத்தி மதிப்பிற்குச் சமமாகத்தானிருக்கும். அதோடு, ஒவ்வொரு தொழிலும் எவ்வளவு மதிப்பைச் சேர்க்கின்றதோ (விற்கும் விலையிலிருந்து கொடுத்த விலையைக் கழித்தால்) அது உருவாக்கப்பட்ட மொத்த வருமானத்திற்கும் (GNI) சமமாகத்தானிருக்கும். தொழில் வளமிக்க நாட்டில் எந்தப் பொருளையும் ஒரே நிறுவனம் செய்வதில்லை; அப்பொருளை உருவாக்கும் நிலைகளுக்கேற்றபடி பல தொழில்கள் உள்ளன; சாதனங்களை அளிக்கும் தொழில்கள், வாங்கும் தொழில்கள், செப்பனிட்டுப் பக்குவப்படுத்தும் தொழில்கள், அவற்றை அனுப்பும் தொழில்கள் என்று பல நிலையிலுள்ள தொழில்களில் எவ்வளவு மதிப்புச் சேர்க்கப்படுகிறதென்பதை அளவிட்டுவிட முடியும்.

அல்லது தச்சு வேலையோ செய்யலாம். அப்படி நான் விளைவித்த காய்கறிகளை அல்லது செய்த அலமாரியை நாட்டின் மொத்த உற்பத்திக் (GNP) கணக்கில் சேர்க்கலாமா என்றால் கூடாது. காரணம், நான் ஓய்வு நேரத்தில் செய்த தோட்டவேலையில் அல்லது தச்சுவேலையில் பொருளாதார இயல்பு ஏதுமில்லை. ஏதோ ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்காகத்தான் அவ்வேலையைச் செய்தேனேயன்றி, காய்கறிகளை அல்லது அலமாரியை விற்க வேண்டுமென்பதற்காக அல்ல.

அவ்வாறுயின், பொருளாதார நோக்கத்திற்காகச் செய்த வேலை என்றும், ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்காகச் செய்த வேலை என்றும் எப்படிப் பாகுபடுத்துவது? குடும்பம் நடத்தும் போது நாம் செய்யும் வேலைகளை எதில் சேர்ப்பது? இதற்கெல்லாம் இன்றையப் பொருளாதார அமைப்பில் நல்லதொரு வழியுண்டு; அதாவது நாம் செய்யும் உற்பத்தியோ அல்லது பணியோ விற்பனை செய்யப்படுகிறதா என்ற நிபந்தனைதான் அவ்வழியாகும். குறிப்பிட்டதொரு நடவடிக்கையை நாம் மேற்கொள்ளும்போது, அதனால் விளையும் பயனை பொருளாதார உற்பத்தியாகக் கருதி, நாட்டின் மொத்த உற்பத்தியில் (GNP) சேர்க்கலாமா கூடாதா என்பதற்கு இந்நிபந்தனைதான் உகந்ததாகும். விற்பனைக்காகச் செய்கின்றோமா என்ற இந்த நிபந்தனை உசிதமானதாகத் தோன்றியபோதிலும், சில சமயங்களில் இது விநோதமானதாகவும் ஆகிவிடுகிறது. சான்றாக, வருடம் முழுவதும் என் ஓய்வு நேரத்தில் நான் என் வீட்டிற்கென்று ஒரு புதிய அறையைக் கட்டி முடிக்கிறேன் என்றால், என் உழைப்பின் மதிப்பு நாட்டின் மொத்த உற்பத்தியில் (GNP) சேர்க்கப்படுவதில்லை; ஆனால் அதே சமயம் நான் இரும்புக் கடையிலிருந்து வாங்கிய கம்பிகள், ஆணிகள், வர்ணப்பூச்சிகள் ஆகியவற்றின் (விலை) மதிப்பு மட்டும் சேர்க்கப்பட்டுவிடுகிறது. எனவே, நமக்கு வேண்டிய அறையைக் கட்டவேண்டுமென்பதற்காகச் சுத்தியலால் ஆணியை அடிப்பதற்குப் பதிலாகப் பலமுறை நமது கட்டை விரலையே அடித்துக் கஷ்டப்பட்டு நாமே வேலை செய்வதற்குப் பதிலாக, கூடுமானால் ஒரு கட்டட ஒப்பந்தக்காரரிடம் அவ்வேலையை ஒப்படைத்துவிடலாம்; அப்போது அவருக்குக் கிடைக்கும் இலாபம், கூலியாட்களுக்குக் கொடுக்கும் கூலி ஆகியவை உட்பட அந்த அறைக்குச் செலவிடப்படும் செலவு அனைத்தும் நாட்டின் மொத்த உற்பத்திக் (GNP) கணக்கில் சேர்க்கப்பட்டுவிடும். காரணம் எல்லா வேலையுமே பொருளாதார நோக்க முடையதாயிருப்பதுதான். அதேபோல் வீட்டு வேலைக்கென்று பணியாட்களை அமர்த்தி, அவர்களுக்கு ஊதியம் தரும்போது,

அவ்வூதியம் நாட்டின் மொத்த உற்பத்திக் (GNP) கணக்கில் சேர்க்கப்படுகிறது; ஆனால் அவ்வேலைகளையெல்லாம் நமது மனைவியரே செய்தால் அது கணக்கில் சேர்க்கப்படுவதில்லை. இதென்ன விநோதம்! இதனால்தான் இங்கிலாந்தின் பொருளாதார அறிஞர் ஒருவர் "எவன் தன் வீட்டுப் பணிப் பெண்ணையே மணந்துகொள்கின்றானோ, அவன் நாட்டு வருமானத்தைக் குறைத்துவிடுகிறான்" என்று குறிப்பிட்டார் போலும்.

இவ்வகையான ஒரு சில பொருள்களையும் பணிகளையும் தவிர, மற்றபடி அங்காடி நிபந்தனைதான் சிறந்ததாகத் தெரிகிறது; பொருளாதார உற்பத்தியை மட்டும்தான் நாட்டின் மொத்த உற்பத்திக் கணக்கில் சேர்க்கவேண்டு மென்பதற்கு இந்த நிபந்தனைதான் நல்லது. எனினும், சிலவகை உற்பத்திப் பணிகளைப் பொருத்தவரை இந்த நிபந்தனை அர்த்தமற்றதாகி விடுவதால் இதைத் தளர்த்திவிட வேண்டியுள்ளது. ஒரு விவசாயி தன் பண்ணையில் விளைந்த உணவுப் பொருளைத் தானே நுகருவது இதற்கு முக்கியமானதொரு சான்றாகும். இதைக் காட்டிலும் முக்கியமான சான்றும் உண்டு; அதாவது ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரரே அவ்வீட்டில் குடியிருக்கும் போது, அவ்வீட்டிற்குரிய வாடகை மதிப்பை நாட்டின் மொத்த உற்பத்திக் கணக்கில் சேர்க்கின்றோம்; வாடகை என்பது குடியிருப்பு வசதியைப் பிரதிபலிப்பதாகும்; அவ்வசதி (கட்டடப் பொருள்கள், உழைப்பு, மூலதனம் ஆகிய) கிடைப் பருமைச் சாதனங்களைக் கொண்டுதான் உருவாக்கப்பட்டுள்ளது; அதனால்தான் அது உற்பத்திக் கணக்கில் சேர்க்கப்படுகிறது. தற்போது, அமெரிக்காவிலுள்ள வீடுகளில் 40 சதவீதம்தான் வாடகை வீடுகளாகும்; எஞ்சிய 60 சதவீத வீடுகளில் சொந்தக்காரர்களே வாழ்கின்றனர். எனவே, வாடகை வீடுகளை மட்டும் கணக்கெடுத்து, அவ்வாடகை மதிப்பை மட்டும் நாட்டின் மொத்த உற்பத்திக் கணக்கில் சேர்த்துவிட்டு, சொந்த வீடுகளின் வாடகை மதிப்பை விட்டுவிடுவது விநோதமானதாகி விடும். சொந்தமாக வீட்டைக் கட்டிக்கொள்வதிலும் பொருளாதார இயல்பு உண்டு; வாடகைக்கு விடாவிட்டாலும்கூட அது ஒரு தொழிலில் செய்யப்படும் முதலீட்டைப் போன்றதுதான். எனவேதான், சொந்தக்காரர்களே குடியிருந்தாலும் அவ்வீடுகளின் வாடகை மதிப்பைக் கணக்கில் சேர்த்துக் கொள்கின்றோம்; சொல்லப்போனால் வீட்டுச் சொந்தக்காரரே அதில் வாழும்போது, அவர் தனக்கே வாடகைக்கு விட்டிருப்பதுபோல் கருதப்படுகிறது.

நாட்டின் மொத்த உற்பத்தியின் (GNP) முக்கியப் பயன்கள்

நாட்டின் மொத்த உற்பத்தியில் (GNP) சேர்க்கப்படுபவை எந்தெந்த வழிகளில் பயன்படுகின்றன என்பதை ஆதாரமாகக் கொண்டு, அவற்றை நுகர்வு, முதலீடு, அரசாங்கம் வாங்குபவை, நிகர ஏற்றுமதி என்று நான்கு இனங்களாகப் பாகுபடுத்தலாம். உற்பத்தி யானதனைத்தும் இந்நான்கில் ஏதாவதொன்றுக்குத் தான் பயனாகின்றன. எனவே, இந்நான்கு இனங்களிலும் உள்ள மொத்த அளவு நாட்டின் மொத்த உற்பத்திக்குச் (GNP) சமமாகி விடுகிறது. அதோடு, நாட்டில் உற்பத்தியானதனைத்தும் இந் நான்கு இனங்களுக்குத்தான் வந்தடைகின்றன.

நுகர்வு

தற்போது நாட்டின் உற்பத்தியில் 62 சதவீதம் நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படுகிறது; 1920 முதல் 1929 வரை நுகர்வுக்காகப் பயன்பட்டது 75 சதவீதமாக இருந்தது. தற்போது நாட்டின் பாதுகாப்புச் செலவும் (1929-ல் நாட்டின் மொத்த உற்பத்தியில் 1 சதவீதமாக இருந்த இச்செலவு 1969-ல் 8 சதவீதமாக அதிகரித்துள்ளது). மற்ற பொதுச் செலவுகளும் பெருமளவில் அதிகரித்துவிட்டதால் நுகர்வுச் செலவு பாதிக்கப் பட்டுள்ளது.

நுகர்வுச் செலவு மூன்று வகைப்படும். 1929-லிருந்து மொத்த நுகர்வுச் செலவு எவ்வளவு அதிகரித்துள்ளதென்பதை 2-2 பட்டியலில் காணலாம். 1930 – 39 வரை நிலவிய பெரும் பொருளாதார மந்தத்தின்போது இம்மூன்று வகை நுகர்வுச் செலவுகளும் எவ்வாறு வெவ்வேறு விதத்தில் பாதிக்கப்பட்டன என்பதைக் கவனியுங்கள். 1932-ல் பொருளாதார மந்தம் மிகக்கடுமையாக இருந்தபோது, 1929-லிருந்ததைக் காட்டிலும் நுகர்வுச் செலவு 17 சதவீதம் குறைந்து விட்டது. நீடித்துப் பயன் தரும் நுகர்வுச் செலவு 48 சதவீதம் குறைந்தபோது, பணிகளுக்கான செலவு 15 சதவீதமும், நீடித்துப் பயன்தரா நுகர்வுச் செலவு 13 சதவீதமும்தான் குறைந்தன. நீடித்துப் பயன்தரும் நுகர்வுச் செலவு பெருமளவில் குறைந்ததற்குக் காரணம் உண்டு. வேலையின்மை அதிகரித்து, வருமானம் தாழ்ந்துவிடும்போது நீடித்துப் பயன் தரும் பொருள்களை உடனடியாக வாங்காமல் பின்னர் வாங்கிக்கொள்ள முடியும். சான்றாக, புதிய கார் வாங்குவதற்குப் பதிலாகப் பழைய

காரையே மேலும் ஓரிரு மாதங்கள் வரை பயன்படுத்தக்கூடும். அதேபோல் வீட்டிற்கு வேண்டிய தட்டுமுட்டுச் சாமான்களையும் பின்னர் வாங்கிக்கொள்ளலாமென்று தள்ளிப்போட முடியும். ஆனால், உணவு, வாடகை, மருந்து போன்ற செலவுகளைத் தள்ளிப்போட இயலாது. பணமில்லாவிட்டால்கூட கடந்தகால சேமிப்பிலிருந்தோ அல்லது கடன் வாங்கியோ இவற்றிற்குச் செலவு செய்தாக வேண்டும். இருந்தபோதிலும், வழக்கத்திற்கு மாறுக, 1929 முதல் 1969 வரை நீடித்துப் பயன்தரும் நுகர்வுப் பொருள்களை வாங்குவதில்தான் நுகர்வோர் அதிகமாகச் செலவு செய்திருக்கின்றனர்; அதையடுத்து பணிகளுக்கும், கடைசியாக நீடித்துப் பயன்தராப் பொருள்களுக்கும் அதிகச் செலவு செய்துள்ளனர்.

2–2 பட்டியல் **நுகர்வுச் செலவின் வளர்ச்சி**

(1958–லிருந்த டாலர் மதிப்பின்படி பில்லியன் டாலர்களில்)

				விகிதாச்சார மாறுதல்	
இனம்	1929	1932	1969	1929 முதல் 1932 வரை	1929 முதல் 1969 வரை
நுகர்வு	$ 140	$ 115	$ 466	– 18%	+233%
நீடித்துப் பயன் தரும் பொருள்கள்	16	8	85	– 48	+431
நீடித்துப் பயன் தராப் பொருள்கள்	69	60	199	– 13	+188
பணிகள்	54	46	182	– 15	+237

குறிப்பு: 1958–லிருந்த டாலரின் மதிப்பில்தான் இப்பட்டியலிலுள்ள புள்ளி விவரங்கள் கணிக்கப்பட்டுள்ளன என்பதை மறந்துவிடாதீர்கள். 1958–லிருந்த விலைவாசிகளில் மதிப்பிடப்பட்டுள்ளதால் 2–1 பட்டியலின்படி 1969–ல் 576 பில்லியன் டாலர்களாக இருந்த நுகர்வுச் செலவு இப்பட்டியலில் 466 பில்லியன் டாலர்களாக உள்ளது. 1969–ல் 2–1 பட்டியல் காட்டுவதைப்போல் விலைவாசிகள் உயர்ந்திருந்ததால் பொருள்களுக்கு அதிக விலைமதிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

முதலீடு

நாட்டின் உற்பத்தியில் ஒரு பகுதி நுகர்விற்காகச் செலவிடப்படாமல், பொருளாதார உற்பத்திக்கு வேண்டிய நிறுவனங்கள், இயந்திரங்கள், தளவாடங்கள் ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தப்படுகிறது. எப்படி ஒரு குடும்பத்தினர் சிக்கனமாகச் செலவு செய்து, வருமானத்தில் ஒரு பகுதியை

வருவாய் தரக்கூடிய விதத்தில் பயன்படுத்துகின்றனரோ, அதே போன்றுதான் ஒரு நாடும் தன் வருவாயில் ஒரு பகுதியை உற்பத்தி செய்யக்கூடிய சொத்துக்களில் செலவிட்டு, நாட்டின் உற்பத்தி சக்தியை விரிவாக்க முடியும். இவ்விதச் செலவுகளால்தான் முதற்கருவிப் பொருள்கள் (Capital Goods) உருவாகின்றன; இவை இருந்தால்தான் திறன்மிக்க உழைப்பையும் தொழில்நுட்ப வளர்ச்சியையும் பயன்படுத்தி, ஒரு நாடு தன் உற்பத்தியைப் பெருக்கவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் முடியும்.

நாட்டு வருமானக் கணக்கு ஆய்வில் 'முதலீடு' என்ற சொல்லிற்குத் தனிப் பொருள் உண்டு; பொதுவாக நாம் நாளும் பயன்படுத்தும் பொருளில் இச்சொல்லை நாம் உபயோகிப்பதில்லை. சான்றாக, ஜெனரல் மோட்டார் கம்பெனியின் கையிருப்புப் பங்கு ஒன்றை (share of stock) நான் வாங்கினால், அது எனக்கு முதலீடாகிறது; ஆனால் நாட்டின் கண்ணோட்டத்தில் அது முதலீடாகாது. காரணம், நான் வாங்கியுள்ள இப்பங்கினால் நாட்டின் சொத்து அதிகரிப்பதில்லை; மாறாக, இப்பங்கு வேறொருவரிடமிருந்து என் கைக்கு மாறுகிறது, அவ்வளவுதான். இதேபோல், ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள வீட்டை நான் வாங்கினால், அதை என் முதலீடாகக் கருதுகின்றேன்; ஆனால் இதனால் வீட்டுரிமைதான் கைமாறுகிறதே யன்றி, நாட்டிற்கு இது முதலீடாகாது. அதோடு, வீடு வாங்கும்போது நான் செய்யும் முதலீடு, விற்பவருக்கு முதலீட்டிழப்பாக ஆகிவிடுவதால் ஒன்றுக்கொன்று சமமாகி விடுகிறது. எனவே, நாட்டின் மொத்த உற்பத்தியில் (GNP) முதலீடு ஓரினமாகக் கருதப்படவேண்டுமாயின், நடப்பு உற்பத்தியில் ஒரு பகுதி உண்மையான ஆக்கச் சொத்தினை அதிகரிக்கும் வழியிலோ அல்லது அச் சொத்தினை ஈடு செய்யும் (Replacement) வடிவிலோ இருக்கவேண்டும்.

நாட்டின் மொத்த முதலீடு இரு நோக்கங்களை நிறைவு செய்கிறது. இருக்கின்ற மூலதனத்தை ஆண்டுதோறும் பயன்படுத்தும்போது, அதில் ஒரு பகுதி வீணாகிவிடுகிறது; அதாவது, இயந்திரங்களும் ஆலைகளும் படிப்படியாகத் தேய்மானம் (depreciation) அடைகின்றன; அதோடு, புதிய உற்பத்தி முறைகளைப் புகுத்தும்போது பழைய இயந்திர சாதனங்கள் வழக்கற்று (obsolete) விடுகின்றன. எனவே, இவற்றையெல்லாம் ஈடு செய்யும் முறையில் புதிய இயந்திர சாதனங்களும் தளவாடங்களும் உற்பத்தியாகி நிறுவப்பட்டால்

தான் இருக்கின்ற மூலதனம் குறைந்துவிடாமல் பேணப்படும். இதுபோக, எஞ்சிய முதலீடுதான் இருக்கின்ற மூலதனத்தை அதிகரிக்கக்கூடிய நிகர முதலீடாகும். எனவே, மொத்த முதலீட்டில் தேய்மானம் போக எஞ்சிய பகுதிதான் நிகர முதலீடாகிறது.

1969-ன் (மொத்த, நிகர) முதலீடு

மொத்த முதலீடு	131	பில்லியன் டாலர்கள்
தேய்மானம்	79	,, ,,
நிகர முதலீடு	52	,, ,,

முதலீட்டோடு தொடர்புடைய பல சொற்கள் உள்ளன; எனவே, இச் சொற்கள் எதை எதைப் புலப்படுத்துகின்றன என்று தெளிவாக்கிக் கொள்வது நன்று. **மூலதனம்** என்பது, குறிப்பிட்டதொரு காலத்தில் இருக்கின்ற நிறுவனங்கள், இயந்திர சாதனங்கள், தளவாடங்கள். வீடுகள், லாரிகள், கப்பல்கள் ஆகிய ஆக்கச் சொத்துக்களின் மொத்த இருப்பைக் குறிக்கும். **மொத்த முதலீடு** என்பது ஆண்டுதோறும் உற்பத்தியாகி (1) மூலதன இருப்பில் ஆண்டுதோறும் தேய்மானம் அடைந்தோ அல்லது வழக்கிழந்தோ போகின்ற ஒரு பகுதியை ஈடு செய்வதற்கு, அல்லது (2) மூலதன இருப்பை அதிகரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஆக்கச் சொத்துக்களைக் குறிப்பிடுவதாகும். எனவே, குறிப்பிட்டதோர் ஆண்டில் மூலதனம் எவ்வளவு அதிகரித்துள்ளதோ அதுதான் நிகர முதலீடாகும்.

ஒரு நாட்டின் மொத்த முதலீடு தேய்மான அளவிற்கு மட்டும் சமமாக இருந்தால் அந்நாடு தன் உற்பத்திச் சக்தியை அதிகரிக்க முடியாது. மாறாக, மொத்த முதலீடு தேய்மான அளவைக் காட்டிலும் குறைவாக இருந்தால் நிகர முதலீடு எதிர்க் கணியமாகி (negative), நாட்டிலுள்ள மொத்த மூலதன இருப்பே குறைந்துவிடும். எனவே, நிகர முதலீடு நேர்க் கணியமாக (positive) இருந்தால்தான் ஆக்கச் சொத்துக்களின் இருப்பை அதிகரிக்கக்கூடும்.

நாட்டின் மொத்த உற்பத்திக் (GNP) கணக்கில் மூன்று வகையான முதலீடுகள் இடம் பெறுகின்றன.

1. **உருப்பெற்ற தொழில் முதலீடு** (Business fixed investment): இதில் இயந்திர சாதனங்கள், தொழிற்சாலைக் கட்ட

டங்கள், அலுவலகங்கள், கடைகள் முதலிய மூலதனச் சொத்துக்களும் தனிக் குடியிருப்பு இல்லங்களும் அடங்கும்.

2. **குடியிருப்புக் கட்டடங்கள்** (Residential Construction): இதில் சொந்த வீடுகள், வாடகை வீடுகள், தனி வீடுகள், பல குடும்பங்கள் குடியிருக்கக்கூடிய அடுக்குமாடிக் கட்டடங்கள் முதலியன அடங்கும். (ஒரு குடும்பத்தினர் புதிய வீடு வாங்கும் போது, அவ்வீட்டின் மதிப்பும் நாட்டு வருமானக் கணக்கில் சேர்க்கப்படுகிறது. அவ்வாறு புதியதொரு வீடு வாங்குவது முதலீடாகத்தான் கருதப்படுகிறதேயன்றி, நுகர்வோரின் செலவினமாக அல்ல. காரணம், தொழில் நிறுவனம் புதியதொரு கட்டடத்தை வாங்குவதற்கும், ஒருவர் தனிப்பட்டு வீடு வாங்குவதற்கும் அவ்வளவாக வித்தியாசம் கிடையாது; இரண்டுமே ஆக்கச் சொத்துகளாக, அதாவது, முதலீடாகத்தான் கருதப்படுகின்றன).

3. **தொழில் இருப்புகளின் மாறுதல்கள்** (அல்லது இருப்பு முதலீடு): நாட்டின் மொத்த உற்பத்தியில் ஒரு பகுதியைத் தொழில் நிறுவனங்கள் தம்மிடமுள்ள கச்சாப் பொருள்கள், உற்பத்திப் போக்கிலுள்ள பொருள்கள், முடிவுற்ற பொருள்கள் ஆகியவற்றின் இருப்பை அதிகரிப்பதற்கென்று ஈர்த்துக் கொள்வதை இது குறிப்பிடுகிறது. ஆண்டொன்றுக்குச் செய்யப்படும் மொத்த உற்பத்தி ஒன்றில் இறுதியாகப் பயன்படுத்துவோருக்கு (அதாவது, நுகர்வோர், முதலீடு செய்வோர், அரசாங்கம், ஏற்றுமதி செய்வோருக்கு) விற்கப்படலாம், அல்லது தொழில் நிறுவனங்களின் இருப்பை அதிகரிக்கப் பயன்படலாம். எனவே, நாட்டின் மொத்த உற்பத்திக் (GNP) கணக்கில் இவ்விரண்டும் சேர்த்து அளவிடப்பட வேண்டும். இவ்வாறாக, முடிவான உற்பத்தி அவற்றை இறுதியாகப் பயன்படுத்துவோருக்கு விற்கப்படுவதையும் தொழில்களின் இருப்பு அதிகமாகவோ குறைவாகவோ ஆவதையும் கொண்டதாகும்.

தொழில் நிறுவனங்களிடமுள்ள இருப்புகள் அதிகரிக்கலாம், அல்லது குறையலாம். 2-3 பட்டியலில் நிகழ்ச்சி 1-ன்படி இருப்புகள் குறையும்போது, உற்பத்தியாகும் அளவைக் காட்டிலும் இறுதியாகப் பயன்படுத்துவோருக்கு விற்கப்படும் அளவு அதிகமாகிவிடுகிறது. ஆனால் அவ்வாறு விற்கப்படும் அளவில் ஒரு பகுதி நடப்பு உற்பத்தியிலிருந்து விற்கப்படாமல் இருப்புகளிலிருந்துதான் விற்கப்பட்டதாகும். எனவே, நாட்டின் மொத்த உற்பத்தியை (GNP) அளவிடும்போது, விற்பனையான

மொத்த அளவிலிருந்து இருப்புகள் எவ்வளவு குறைந்துள்ளதோ அந்த அளவைக் கழித்துவிட வேண்டும். மாறுக, நிகழ்ச்சி

2-3 பட்டியல் இருப்புகள், விற்பனை, உற்பத்தி: ஒரு சான்று
(பில்லியன் டாலர்களில்)

நிகழ்ச்சி 1. இருப்புகள் குறைந்துவிடல்: உற்பத்தியைவிட விற்பனை அளவு எஞ்சிவிடுகிறது.

1. இறுதியாகப் பயன்படுத்து வோருக்கு விற்றது	$ 560
ஆண்டின் தொடக்க இருப்பு.. 90	
ஆண்டின் முடிவில் இருப்பு...85	
2. இருப்பில் மாறுதல்	— 5
3. மொத்த உற்பத்தி = GNP =	$ 555

நிகழ்ச்சி 2. இருப்புகள் அதிகரித்தல்: உற்பத்தி விற்பனையை எஞ்சிவிடுகிறது.

1. இறுதியாகப் பயன்படுத்து வோருக்கு விற்றது	$ 560
ஆண்டின் தொடக்க இருப்பு...85	
ஆண்டின் முடிவில் இருப்பு...90	
2. இருப்பில் மாறுதல்	+ 5
3. மொத்த உற்பத்தி = GNP =	$ 565

2-ன்படி இருப்புகள் அதிகரிக்கும்போது மொத்த உற்பத்தியில் ஒரு பகுதி இறுதியாகப் பயன்படுத்துவோருக்கு விற்கப்படுவ தில்லை. அப்போது, நாட்டின் மொத்த உற்பத்தியை அளவிடும் போது இருப்புகள் எவ்வளவு அதிகரித்துள்ளனவோ அவற்றை இறுதியான விற்பனை அளவில் சேர்க்கவேண்டும். நாட்டின் மொத்த உற்பத்திக் (GNP) கணக்கில் இருப்புகளின் மொத்தம் எவ்வளவு என்பது முக்கியமல்ல; இருப்புகள் எவ்வளவு அதிகரித் துள்ளன, அல்லது குறைந்துள்ளன என்பதுதான் முக்கியம். மொத்த உற்பத்தியில் ஒரு பகுதி எவ்வாறு இயந்திரச் சாத னங்கள், கட்டடங்கள் போன்ற முதற்கருவிப் பொருள்களை அதிகரிக்கப் பயன்படுகிறதோ, அவ்வாறே தொழில் நிறுவன களின் இருப்புகளை அதிகரிக்கவும் பயன்படக்கூடும்.

முதலீட்டுச் செலவின் மாறும் தன்மை

1929-க்குப் பின்னர் முக்கியமான முதலீட்டு இனங்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைச் சுருக்கமாக 2-4 பட்டியலில் காண

2-4 பட்டியல் குறிப்பிட்ட சில ஆண்டுகளில் முதலீட்டுச் செலவு
(1958-ன் டாலர் மதிப்பில் பில்லியன் டாலர்களாக)

இனம்	1929	1932	1969	விகிதாச்சார மாறுதல் 1929 முதல் 1932 வரை	விகிதாச்சார மாறுதல் 1929 முதல் 1969 வரை
எல்லாவகை முதலீட்டின் மொத்தம்	$ 40·4	$ 4·6	$ 111	– 89%	+ 175%
தொழில்களின் உருப்பெற்ற முதலீடு	26·5	8·1	81	– 69	+ 206
உற்பத்தியில் நீடித்து உழைக்கும் தளவாடங்கள்	12·6	3·8	57	– 70	+ 352
குடியிருப்பு மனைகளைத் தவிர ஏனைய கட்டடங்கள்	13·9	4·3	24	– 69	+ 73
குடியிருப்புக் கட்டடங்கள்	10·4	2·7	23	– 74	+ 121
தொழில் நிறுவனங்களின் இருப்பு மாறுதல்	3·5	– 6·2	7	–	+ 100

லாம். பொருளாதார மந்த ஆண்டுகளில் முதலீடு பெருமளவிற்குச் சரிந்துள்ளதைக் கவனியுங்கள். 1929 முதல் 1932-வரை நுகர்வோரின் செலவீடு 18 சதவீதம்தான் குறைந்தது; ஆனால் முதலீடோ 89 சதவீதம் இறங்கிவிட்டது. எல்லா வகை முதலீடுகளுமே குறைந்துவிட்டன; எனினும், இருப்பு முதலீடோ (Inventory investment) எதிர்க் கணியமாகி விட்டது குறிப்பிடத்தக்கது. அதாவது தொழில் நிறுவனங்கள் தம்மிடமிருந்த இருப்புகளைக் காலி செய்து வந்தன என்பதையே இது புலப்படுத்துகிறது. மந்த காலத்தில் மூலதன இருப்பின் மதிப்பு சரிந்து கொண்டே வந்ததால், மொத்த முதலீடும் கீழ்மட்டத்திற்குச் சரிந்து, நிகர முதலீடு எதிர்க் கணியமாகிவிட்டது. வேறு விதமாகக் கூறின், இயந்திர சாதனங்கள், தளவாடங்கள், வீடுகள் முதலியன பெருமளவில் தேய்மானமடைந்து காலத்திற் கொவ்வாதவையாய் ஆகிவிட்ட போதிலும், அத் தேய்மானத்தைச் சரிக்கட்டக்கூடிய அளவுக்குக்கூட அவை உற்பத்தி செய்யப்படவில்லை. இதனால்தான் மந்த ஆண்டுகளின்போது நாட்டின் மூலதன இருப்பும் பெருமளவில் குறைந்துவிடும்.

பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைவதற்கும் சுருங்குவதற்கும் மிக முக்கியமான காரணம் முதலீட்டுச் செலவு ஏற்ற இறக்கமடைவதுதான். 1929–1932 ஆண்டுகளின் அனுபவமே இதற்குச் சிறந்த சான்றாகும். எனினும், சாதாரண காலத்தில்கூட நாட்டின் மொத்த உற்பத்தியிலுள்ள ஏனைய இனங்களைக் காட்டிலும் (போர்க் காலத்தில் நாட்டின் பாதுகாப்புச் செலவு அதிகரிப்பதைத் தவிர) முதலீட்டுச் செலவுதான் அடிக்கடி பெருமளவில் மாறுகின்றன. முதலீட்டுச் செலவுகள் ஏன் இப்படி மாறுகின்றன, அவ்வாறு மாறுவதால் நாட்டின் மொத்த உற்பத்தியும் வேலை வாய்ப்பும் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகின்றன என்பதைப்பற்றி 3, 4ஆம் அதிகாரங்களில் விரிவாக ஆராய்வோம்.

அரசாங்கம்

அரசாங்கம் ஒரு போர்க் கப்பலை வாங்கினாலும் சரி, அல்லது ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்குக் கட்டட ஒப்பந்தக்காரருக்குப் பணம் கொடுத்தாலும் சரி, அது விலை மதிப்புடைய பொருளை (போர்க் கப்பல், கட்டடம்) வாங்குகின்றதென்றுதான் அர்த்தமாகும்; அதேபோல் நாட்டின் மொத்த உற்பத்தியை (GNP) அளவிடுவதற்கென்று புள்ளியியல் நிபுணரை அமர்த்தி, அவருக்கு ஊதியம் தரும்போது அவரது பணியை விலைக்கு வாங்குகிறது

என்றுதான் பொருள். எனவே, நாட்டின் மொத்த உற்பத்தியில் (GNP) அரசாங்கம் வாங்கியுள்ள பொருள்களும் பணிகளும் எவ்வளவென்று கணக்கெடுத்து அதையும் சேர்க்க வேண்டும்.

அரசாங்கம் பொருள்களையும் பணிகளையும் வாங்குவதோடு மட்டுமன்றி, வேறு பல வழிகளிலும் கணிசமான அளவு செலவிடுகிறது. ஓய்வுபெற்ற ஊழியர்களுக்குக் கொடுக்கும் ஓய்வு கால ஊதியம், சமூகப் பாதுகாப்புச் செலவு, நிவாரணச் செலவு, வேலையற்றோருக்கு அளிக்கும் பண உதவி ஆகியவை முக்கியமான சில செலவுகளாகும். இவ்வகைச் செலவுகள் அனைத்தும் சமுதாயத்தில் கைமாறும் செலவுகளேயன்றி, ஆக்கச் செலவுகளல்ல. வரி செலுத்துவோரிடமிருந்து பெறும் வருமானத்தை அரசாங்கம் பயன்பெறுவோருக்குக் கைமாற்றுகிறது. எனவே, இவ்விதச் செலவுகள் பொருள்களையோ அல்லது பணிகளையோ வாங்குவதற்காகச் செலவிடப்படாததால் இவை நாட்டின் மொத்த உற்பத்திக் (GNP=GNI) கணக்கில் சேர்க்கப்படுவதில்லை.

1929-க்குப் பின்னர் நாட்டின் மொத்த உற்பத்தியில் அரசாங்கம் வாங்கிய பொருள்களும் பணிகளும்தான் ஏனைய வற்றைக் காட்டிலும் பெருமளவில் அதிகரித்துள்ளன (2-5 பட்டியலைப் பார்க்கவும்). 1929 முதல் 1969 வரை மத்திய அரசாங்கம் வாங்கிய பொருள்களும் பணிகளும் மட்டும் 67 பில்லியன் டாலர்கள் அதிகரித்துள்ளது; இதில் இராணுவத்திற்கு மட்டும் 52 பில்லியன் டாலர்கள் கூடுதலாகச் செலவாகியுள்ளன. மாநில, தல அரசாங்கங்களின் செலவுகளும் இவ்வாறே அதிகரித்துள்ளன. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. மக்கள் தொகை நெருக்கடியின் விளைவாக ஆயிரக்கணக்கான மக்கள் போருக்குப்பின்னர் நகரங்களை விட்டு விட்டு, சுற்றுப்புறங்களுக்குச் சென்று குடியமர்ந்து வருகின்றனர்; எனவே, அப்பகுதிகளில் பள்ளிகள், பெருஞ்சாலைகள், குடி நீர் வசதிபோன்ற பல்வேறு பொதுப்பணிகளை மாநில, தல அரசுகள் செய்ய வேண்டியதாயிற்று என்பது முக்கிய காரணமாகும். மத்திய, மாநில, தல அரசாங்கங்களின் செலவுகளில் ஒரு பகுதி, நாட்டின் உற்பத்தித் திறனை அதிகரிக்கக் கூடிய வகையில் ஆக்கச் சொத்துக்களின் வடிவில் முதலீடாகவும் அமைந்துள்ளன. இருந்தபோதிலும், அமெரிக்க நாட்டு வருமானக் கணக்கில் அரசாங்கம் செய்யும் முதலீடுகள் இடம் பெறுவதில்லை. ஏனைய பல நாடுகளோ அரசாங்க முதலீட்டையும் தத்தம் வருமானக் கணக்கில் சேர்த்துக்கொள்கின்றன.

2 – 5 பட்டியல்

குறிப்பிட்ட ஆண்டுகளில் அரசாங்கச் செலவுகள்
(1958-ன் டாலர் மதிப்பில் பில்லியன் டாலர்களாக)

இனம்	1929	1947	1969
1. அரசாங்கம் வாங்கிய பொருள்களும் பணிகளும்	$ 22	$ 40	$ 147
மத்திய அரசாங்கம்	4	19	71
மாநில, தல அரசாங்கங்கள்	18	21	76
2. அரசாங்க இதரச் செலவுகள்* (பெரும்பாலும் கைமாறிய வகையில்)			
மத்திய அரசாங்கம்	3	23	70
மாநில, தல அரசாங்கங்கள்	1	2	6

*குறிப்பு: அரசாங்கச் செலவுகளையெல்லாம் கணக்கெடுக்கும்போது மத்திய, மாநில, தல அரசாங்கங்களின் செலவுகளையெல்லாம் அப்படியே மொத்தமாகக் கூட்டிவிட முடியாது. ஏனெனில் மத்திய அரசாங்கத்தின் செலவுகளில் மாநில, தல அரசாங்கங்களுக்குக் கொடுக்கப்பட்ட உதவி மானியங்களும் (grants-in-aid) அடங்கும்; ஆனால் அவையெல்லாம் மாநில, தல அரசாங்கச் செலவுகளில் ஏற்கெனவே சேர்க்கப்பட்டிருக்கும்.

நிகர ஏற்றுமதி

நாட்டின் மொத்த உற்பத்தியில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களும் பணிகளும் அளவிடப்பட்டு சேர்க்கப்படுகின்றன. ஒரு நாட்டில் நுகர்வோர், முதலீடு செய்வோர், அரசாங்கம் வாங்கிய பொருள்களும் பணிகளும் அந்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படாமல் பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகவும் இருக்கலாம்; எனவே இறக்குமதி செய்யப்பட்டு வாங்கிய அளவை நாட்டின் மொத்த உற்பத்திக் (GNP) கணக்கில் சேர்த்துவிடக் கூடாது. அப்படிச் சேர்த்துவிட்டால் மொத்த உற்பத்தி மதிப்பு உண்மையான மதிப்பைக் காட்டிலும் அதிகமாகிவிடும். உண்மையில் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) எவ்வளவு என்பதை அளவிடும்போது, வாங்கிய பொருள்கள் பணிகள் ஆகியவற்றின் மொத்தத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களையும் பணிகளையும் கழித்து விடவேண்டும். இதற்கு ஒரு நல்ல வழியுண்டு; அதாவது, நாட்டின் மொத்த உற்பத்தியை (GNP) அளவிட்டு, புள்ளி விவரங்களைக் கொடுக்கும்போது, ஏற்றுமதியிலிருந்து இறக்குமதியைக் கழித்து, நிகர ஏற்றுமதியை மட்டும் தனியொரு இனமாகக் காண்பிக்கவேண்டும். பொதுவாக, நாட்டின் மொத்த உற்பத்தி

யில் (GNP) நிகர ஏற்றுமதி மிகச்சிறு வீதத்தில்தான் இருக்கும். சான்றாக, 1969-ல் அமெரிக்க நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) 932 பில்லியன் டாலர்களாகும்; இதில் நிகர ஏற்றுமதி 2 பில்லியன் டாலர்கள்தான். ஆனால் மொத்த ஏற்றுமதி 55 பில்லியன் டாலர்களாகவும், மொத்த இறக்குமதி 53 பில்லியன் டாலர்களாகவும் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் மொத்த வருமானம்

ஒரு நாட்டில் எவ்வளவு மதிப்புடைய பொருள்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்படுகின்றனவோ அதே அளவு மதிப்புடைய வருமானமும் உற்பத்தியாகிவிடுகின்றது; அதாவது நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) நாட்டின் மொத்த வருமானமும் ஒன்றுக்கொன்று சமமாகத்தானிருக்கும். சான்றாக, புதிய கார் ஒன்று 3,500 டாலர்களுக்கு விற்கப்பட்டால், அந்த 3,500 டாலர்களும் நாட்டின் மொத்த உற்பத்திக் கணக்கில் (GNP) சேர்க்கப்படுகின்றன; அதே சமயம் இந்த 3,500 டாலர்களும் பல இனங்களுக்கு வருமானமாகவும் ஆகின்றன. அதாவது, 3,500 டாலர்களில் ஓரளவு கார் தொழிலாளிகளுக்கும் விற்பனை செய்வோருக்கும் ஊதியமாகச் செல்கிறது; இன்னும் ஒரு பகுதி கார் உற்பத்தி செய்வோருக்கு இலாபமாகப் போய்விடுகிறது; கார் உற்பத்தியாளர்கள் வங்கியிடமிருந்து வாங்கிய கடனுக்கு வட்டியாக மற்றொரு பகுதி செல்கிறது; அதோடு மட்டுமன்றி, நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு மத்திய அரசாங்கம் ஆயத்தீர்வை (excise tax) விதிப்பதால், இக்காருக்குரிய ஆயத்தீர்வை எவ்வளவோ அதை அரசாங்கம் வசூலித்துக் கொள்கிறது. இவ்வாறாக, நாட்டின் மொத்த உற்பத்தியில் (GNP) சேர்க்கப்படும் ஒவ்வொரு பொருளின் விலை மதிப்பும் எப்படிப் பல்வேறு இனங்களுக்கு வருமானமாக ஓடுகின்றது என்பதை நாம் பாகுபடுத்திக் கணக்கெடுக்க முடியும். அவ்வாறு கணக்கெடுத்து எல்லா வருமானங்களையும் மொத்தமாகக் கூட்டினால் நாட்டின் மொத்த வருமானம் (GNI) எவ்வளவென்று தெரியும். இந்த மொத்த வருமானம் (GNI) நாட்டின் மொத்த உற்பத்திக்குச் (GNP) சமமாகத்தானிருக்கும்.[3]

[3] நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) மொத்த வருமானமும் (GNI) கருத்தளவில்தான் சரிசமமாகின்றன; ஆனால் இவற்றை நாம் மதிப்பிடும் புள்ளி விவர முறையில் ஒரு சில குறைகள் இருப்பதால் நாட்டு வருமானக் கணக்கெடுப்போர் தனித்தனியாகக் கணக்கெடுக்கும்போது நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) மொத்த வருமானமும் (GNI) சமமாவதில்லை. இவ்விரண்டிற்கும் சிறிதளவு வேறுபாடு வந்துவிடுகிறது. இவ்வேறுபாட்டைப் புள்ளி விவரத் தவறு என்று குறிப்பிடுவர். எனவே, புள்ளி விவரக் கணக்கின்படி நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) = நாட்டின் மொத்த வருமானம் (GNI)+ புள்ளிவிவர முரண்பாடு என்றாகிறது.

நாட்டின் மொத்த வருமானத்தில் தொழிலாளர்கள் பெறும் ஈட்டுத் தொகைதான் மிகப் பெரிய இனமாகும். 1969-ல் நாட்டு வருமானத்தில் தொழிலாளர்களின் ஈட்டுத் தொகை 60 சதவீத மாக இருந்தது. இதில் தொழிலாளர் பெறும் ஊதியம், சம்பளம், ஒய்வு கால ஊதியத் திட்டத்திற்கென்று முதலாளிகள் கொடுக்க வேண்டிய பங்குத் தொகை, இன்னும் பிற நட்டஈடுகள் முதலியன அடங்கும். இவ்விதச் செலவுகள் உற்பத்திச் செலவிலும், அதன் வழியாக விலைவாசிகளிலும் இணைந்துவிடுவதால் நாட்டின் மொத்த உற்பத்தியில் (GNP) இவையும் ஒரு பகுதியாக உள்ளன. எனவே, நாட்டு வருமானக் கணக்கில் (GNI) இவையும் சேர்க்கப் படுகின்றன. நாட்டு வருமானக் கணக்கில் தொழிலாளர்களின் முழுச் சம்பளமும் அப்படியே சேர்க்கப்படுகிறதேயொழிய, அவர்கள் செலுத்த வேண்டிய வரி, இன்னும் பிற இனங்கள் போக மீதி அவர்களுக்கு எவ்வளவு கிடைக்கின்றது என்பது முக்கியமல்ல.

நாட்டின் மொத்த வருமானத்தில் (GNI) அடுத்த பெரிய இனம் இலாபமாகும். இலாபம் இரு வகைப்படும்; கார்ப்ப ரேஷன்கள் பெறும் இலாபம், கார்ப்பரேஷனல்லாத ஏனைய தொழில்கள் (விவசாயமும் உட்பட) பெறும் இலாபம். 1969-ன் நாட்டு வருமானத்தில் இவ்விருவகை இலாபமும் சேர்ந்து 16 சதவீதமாக இருந்தது. இந்த இலாபம்கூட வரி செலுத்து வதற்கு முன்பே கணிக்கப்பட்டு நாட்டு வருமானக் கணக்கில் சேர்க்கப்பட்டுவிடுகிறது. இந்த இலாபத்தில் ஒரு பகுதி வரிகளாக அரசாங்கத்திற்குச் செலுத்தப்படுவது உண்மைதான்; எனினும் நாட்டு மொத்த வருமானக் கணக்கில் (GNI) இலாப மனைத்தையும் அப்படியேதான் சேர்க்கின்றோம். ஏனெனில் நாட்டு வருமானக் கணக்கில் இலாபம்தான் சரிக்கட்டக்கூடிய தோர் இனமாக உள்ளது. சான்றாக, சில சந்தர்ப்பங்களில் ஒரு சில தொழில் நிறுவனங்கள் நட்டத்தில் நடைபெறக்கூடும்; அப்போது அந்நிறுவனங்களுக்கேற்படும் உற்பத்திச் செலவு விற்பனை வருவாயைக் காட்டிலும் அதிகரித்துவிடுகின்றது. அப்படியிருக்கும்போது, நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) மொத்த வருமானமும் எப்படிச் சமமாக முடியுமென்று ஆச்சரியப்படலாம். ஆனால் அந்நிலை ஏற்படும்போது தொழில் நிறுவனங்களின் இலாபம் எதிர்க்கணியமாகி (நட்டமாகி) விடுகிறது. அப்போது அத்தொழில் நிறுவனங்களின் உற்பத்திச் செலவுக்கும் (அதாவது, பிற இனங்களுக்கு வருமானமாகக் கொடுத்ததற்கும்) விற்பனை வாயிலாக வந்த வருமானத்திற்கு முள்ள வேறுபாடு எவ்வளவோ அவ்வளவுக்குத்தான் இந்த

நட்டமும் இருக்கும். இவ்வாறுக, எதிர்க்கணியமான இலாபம் (நட்டம்) உட்பட பல்வேறு இனங்களின் மொத்த வருமானம் விற்பனை செய்த பொருள்களின் மதிப்பிற்குச் சமமாகத்தான் இருக்க முடியும். எனவே, நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) நாட்டின் மொத்த வருமானமும் (GNI) சரிசமமாகிவிடுகின்றன.

நாட்டின் மொத்த வருமானக் கணக்கில் (GNI) அடுத்து வரும் இனங்கள் வட்டியும் வாரமுமாகும். உற்பத்தி செய்வதற்கென்று வாங்கிய கடன்தொகைக்கு வட்டி செலுத்தப்படுவதால், உற்பத்திச் செலவில் மட்டுமன்றி, பொருள்களின் விலையிலும் வட்டித் தொகை சேர்க்கப்பட்டுவிடுகிறது. நில வாரமும் இதே போன்றுதான்.

நாட்டின் வருமானக் கணக்கில் தேய்மானமும் முக்கியமான தொரு இனமாகும். உற்பத்தி நடைபெறும்போது நிறுவனங்களும் இதர இயந்திரத் தளவாடங்களும் எவ்வளவு தேய்மானமடைந்துள்ளன என்பதைத்தான் இது சுட்டிக்காட்டுகிறது. எனவே, பொருள்களின் விற்பனை மதிப்பிலிருந்து இத்தேய்மானச் செலவு கழிக்கப்படுகிறது. இவ்வாறுக, தேய்மானச் செலவும், இன்னும் பிற செலவுகளும் கழிக்கப்பட்ட பின்னர் கிடைக்கும் இலாபம்தான் நிகர இலாபமாகும். வேறு விதமாகக் கூறின், தொழில் நிறுவனங்களுக்கு விற்பனை வாயிலாகக் கிடைக்கும் மொத்த இலாபத்தில் ஒரு பகுதி முதற்கருவிப் பொருள்களின் தேய்மானத்தைச் சரிக்கட்டப் பயன்படுகிற்து. எனவே, மொத்த இலாபத்தில் தேய்மானச் செலவு போக எஞ்சி இருப்பதுதான் நிகர இலாபமாகும்.

நாட்டின் மொத்த வருமானக் கணக்கில் (GNI) கடைசியாக இடம் பெறுவது மறைமுகத் தொழில் வரிகள். தனி நபர்களின் வருமான வரி, கார்ப்பரேஷன்களின் இலாப வரி போன்ற நேர்முக வரிகள் வருமானத்தின் மீதே விதிக்கப்படுகின்றன. ஆனால் மறைமுக வரிகள் அப்படியல்ல; வருமானமாக ஆவதற்கு முன்பே வருமான ஓட்டத்தின்போது இவை செலுத்தப்பட்டு விடுகின்றன. மறைமுக வரிகளில் விற்பனை வரி, ஆயத்தீர்வை, சொத்து வரி முதலியன குறிப்பிடத்தக்கவை. சான்றாக, ஒருவர் புதிய காரை வாங்கும்போது அவர் கொடுக்கும் விலையில் அக்கார் உற்பத்தியாளர் மத்திய அரசாங்கத்திற்குச் செலுத்திய ஆயத்தீர்வை, சொத்து வரி முதலியனவும் சேர்க்கப்பட்டு விடுகின்றன.

நுகர்வோர், தொழில்கள், அரசாங்கம் ஆகிய இனங்களுக்கு ஓடும் நாட்டின் மொத்த வருமான ஓட்டம்

உற்பத்தி வருமானத்தை உண்டாக்க, வருமானம் செலவை ஏற்படுத்த, செலவு மறுபடியும் உற்பத்தியை உருவாக்குகிறது. இவ்வாறான பொருளாதார நடவடிக்கைச் சுழல் ஓட்டத்தைத் தான் நாம் அறிந்துகொள்ள முற்படுகின்றோம். நாட்டின் மொத்த உற்பத்தி (GNP), மொத்த வருமானம் (GNI) ஆகியவற்றின் புள்ளி விவரங்கள் இச்சுழல் ஓட்டத்தில் எவ்வாறு பொருந்தும் என்பதை அறிந்துகொள்வதற்கு வருமானம் பற்றிய புள்ளி விவரங்களை வேறொரு வகையில் ஒழுங்குபடுத்த வேண்டும்.

நாட்டில் வருமானம் பெறுகின்ற ஒவ்வொரு இனத்திற்கும் எவ்வளவு வருமானம் கிடைக்கின்றதோ அவற்றின் மொத்தத் தைத்தான் நாட்டின் மொத்த வருமானம் (GNI) என்கின்றோம். ஆனால் நுகர்வோரின் வருமானமும் நாட்டின் மொத்த வருமானமும் ஒன்றுக்கொன்று சமமாகிவிடாது. முதலாவதாக, மொத்த வருமானத்தில் ஒரு பகுதி பல்வேறு வரிகளின் வழியாக அரசாங்கத்திற்குச் சென்றுவிடுவதால் தொழில் நிறுவனங்களோ குடும்பத்தினரோ செலவு செய்யக்கூடிய தொகை குறைந்து விடுகிறது. சான்றாக, நான் ஓர் ஊழியனாகவோ, நிலக்கிழாராகவோ அல்லது வியாபாரியாகவோ சம்பாதிக்கின்ற வருமானத்தில் ஒரு பகுதியை மத்திய, மாநில, தல அரசாங்கங்களுக்கு வருமான வரியாகச் செலுத்திவிட வேண்டியுள்ளது. அதே போல் கார்ப்பரேஷன்களும் தம் வருவாயில் ஏறக்குறைய பாதி அளவை கார்ப்பரேஷன் இலாப வரியாகச் செலுத்திவிடுகின்றன. இரண்டாவது, கார்ப்பரேஷன்கள் தம் முதற்கருவிப் பொருள்களின் தேய்மானத்தை ஈடு செய்ய வேண்டியுள்ளது; எனவே, இலாப வரி போக எஞ்சியுள்ள வருமானத்தில் சுமார் மூன்றிலொரு பகுதியைத் தேய்மான ஈட்டிற்கென்று வைத்துக் கொள்கின்றன. இவ்வாறாக, நாட்டின் மொத்த வருமானத்தில் மொத்தத் தொழில் சேமிப்பு எவ்வளவோ அது குடும்பங்களுக்கு வருவதில்லை; எனவே, நுகர்வோர் அதைச் செலவிடவும் முடியாது. மூன்றாவதாக, அரசாங்கத்திடமிருந்தும் நுகர்வோருக்கு ஓரளவு வருமானம் கிடைக்கிறது; நாட்டின் மொத்த வருமானக் கணக்கில் இடம் பெறாத இவ்வருமானம் (அரசாங்கத்திடமிருந்து நுகர்வோருக்கு) வெறும் கைமாறும் வருமானம்தான். இவ்வாறாக, நாட்டின் மொத்த வருமானம் (GNI) முழுவதும் நுகர்வோரை அடைவது கிடையாது; மொத்த வருமானத்தில்

வரிகள், மொத்தத் தொழில் சேமிப்பு என்று ஒரு பகுதி போக எஞ்சியதுதான் நுகர்வோரின் சொந்த வருமானமாகும். இதோடு, அரசாங்கத்திடமிருந்து கைமாறி வந்துள்ள வருமானத்தையும் சேர்த்துக்கொள்ளலாம். வேறு விதமாகக் கூறின், நாட்டின் மொத்த வருமானத்தை (GNI) தொழில் வருமானம், அரசாங்க வருமானம், நுகர்வோர் வருமானம் என்று செலவீட்டின் அடிப்படையில் மூன்று வகையாகப் பாகுபடுத்தலாம். இவற்றில் (1) தொழில் வருமானம் என்பது தொழில் நிறுவனங்களின் மொத்தச் சேமிப்பாகும்; (2) அரசாங்க வருமானமோ வரிகளின் வாயிலாக வரும் நிகர வருமானமாகும்; (3) நுகர்வோர் வருமானம் என்பது குடும்பத்தினரின் சொந்த வருமானமாகும்(படம் 2-3).



படம் 2-3. நுகர்வோர், தொழில்கள், அரசாங்கம் ஆகியோருக்கு ஓடும் வருமானம்

மொத்தத் தொழில் சேமிப்பு
(Gross Business Saving)

ஒரு கார்ப்பரேஷன் தான் வாங்கிய கடனுக்கு வட்டியைச் செலுத்தி, உற்பத்திச் செலவையும் சரிக்கட்டிய பின்னர்தான் இலாபமாகவும் தேய்மான ஈட்டு நிதியாகவும் தன் வருமானத்தைப் பெறுகிறது. இந்த இலாபத்தில் ஒரு பகுதியை அரசாங்கத்திற்கு வரியாகச் செலுத்திவிடுகிறது; மற்றொரு பகுதி கார்ப்பரேஷனின் பங்குதாரர்களுக்கு இலாப ஈவாகச் (dividend) சென்றுவிடுகிறது. எஞ்சிய பகுதிதான் கார்ப்பரேஷனின் மொத்தத் தொழில் சேமிப்பாகும். இத்தொழில் சேமிப்பைத் தான் பல வகையான முதலீடுகளில் பயன்படுத்த முடியும்.

2 – 6 பட்டியல் **மொத்தத் தொழில் சேமிப்பு**

	1969-ன் டாலர் மதிப்பில் பில்லியன் டாலர்களாக
கார்ப்பரேஷன்களின் இலாபம்	$ 88
(கழித்தல்) இலாப வரிகள்	43
,, பங்குதாரர்களின் இலாப ஈவு	24
(சமம்) தம்மிடம் வைத்துக் கொண்ட இலாபம்	21
(கூட்டல்) தேய்மானம்	78
∴ மொத்தத் தொழில் சேமிப்பு	99

நிகர வரிகள்

நாட்டின் மொத்த வருமானத்தில் (GNI) கணிசமான பகுதி அரசாங்கத்திற்குக் கிடைக்கிறது. நாட்டு வருமானத்தில் சுமார் மூன்றிலொரு பகுதி வரிகளின் வாயிலாக மத்திய, மாநில, தல அரசாங்கங்களே வந்தடைகின்றன. அதே சமயம், நாட்டின் மொத்த வருமானத்தில் இடம் பெறுத, வெறும் கைமாறும் தொகையாக அரசாங்கத்திடமிருந்து ஓரளவு வருமானம் நுகர்வோருக்குச் செல்வதால், அவர்களின் சொந்த வருமானம் கூடிவிடுகிறது. எனவே, வருமான ஓட்டத்தில் அரசாங்கம் பெறும் நிகர வருமானத்தை அளவிடும்போது, வரிகளிலிருந்து கிடைத்த மொத்த வருமானத்தில் நுகர்வோருக்குக் கைமாறிய தொகையைக் கழித்துவிட வேண்டும்.

2-7 பட்டியல் நிகர வரிகள் (மத்திய, மாநில, தல அரசாங்கங்கள்)

		1969-ன் மதிப்பில் பில்லியன் டாலர்களாக
வரி வருமானம்		$ 303
சொந்தமாக வரி செலுத்தியது (வருமான, சொத்து, கொடை வரிகள்)	$ 118	
கார்ப்பரேஷன் இலாப வரி	43	
மறைமுகத் தொழில் வரிகள் (பெரும்பாலும் விற்பனை, சொத்து வரிகள்)	88	
சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்படி பெற்றது	54	
— சமூகத்திற்குக் கைமாறியது		78
= நிகர வரிகள்		$ 225

செலவீடும் நாட்டின் மொத்த வருமானமும்

உற்பத்தியில் உருவாக்கப்பட்ட வருமானத்தை நுகர்வோர் வருமானம், மொத்தத் தொழில் சேமிப்பு, நிகர வரிகள், என்று தான் பாகுபடுத்த முடியும். இப் பாகுபாட்டைத்தான் 2-3, 2-4 படங்கள் புலப்படுத்துகின்றன. உற்பத்தி அப்படியே தொடர்ந்து நடைபெறுமா என்பது நுகர்வோர், முதலீடு செய்வோர், அரசாங்கம் ஆகிய மூன்று இனத்தவரும் தத்தம் வருமானத்தை எப்படிச் செலவிடுகின்றனர் என்பதைப் பொருத்ததாகும். நாட்டு வருமானத்தைப் பெறும் மூன்று இனங்களும், அவ்வருமானத்தைச் செலவிடும் அதே மூன்று இனங்களும் 2-4 படத்தில் ஒன்றையடுத்து ஒன்றுக வைக்கப்பட்டுள்ளன. நுகர்வோர் தம் வருமானம் முழுவதையும் செலவிடுகின்றனர் என்றோ, தொழில் நிறுவனங்கள் தம் சேமிப்பு முழுவதையும் முதலீடு செய்கின்றன என்றோ, அல்லது அரசாங்கம் தன் வருவாயனைத்தையும் பொருள்களையும் பணிகளையும் வாங்குவதற்காகப் பயன்படுத்துகின்றதென்றோ இப் படம் காட்டுவதாக எண்ணிவிடக் கூடாது. பொதுவாக, நுகர்வோர் தம் வருமானத்தில் 90 முதல் 95 சதவீதம் வரைதான் செலவு செய்கின்றனர்; எஞ்சிய 5 முதல் 10 சதவீத வருமானத்தைச் சேமித்து விடுகின்றனர். மாறுக, தொழில் நிறுவனங்களோ தம் சேமிப்பைத்

காட்டிலும் அதிக அளவில் முதலீடு செய்கின்றன. எவ்வாறெனில், பொருளாதார வளமைக் காலங்களில் முதலீடு செய்யும் வாய்ப்புகள் அதிகமாகிவிடுகின்றன; ஆனால் அம் முதலீட்டிற்குப் போதுமான அளவில் தொழில் சேமிப்பு இருப்பதில்லை; எனவே, தொழில் நிறுவனங்கள் தம் கடன் பத்திரங்களை வெளியிட்டு தனி நபர்களின் சேமிப்பைக் கவர்ந்தோ அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்கியோ முதலீடு செய்கின்றன. அரசாங்கத்தை எடுத்துக் கொண்டால் தன் வருவாய் அளவிற்கு மட்டும்தான் பொருள்களையும் பணிகளையும் வாங்குகின்றதென்று சொல்ல முடியாது; பெரும்பாலும், வருமானத்தை மிஞ்சிதான் அரசாங்கம் செலவு செய்கிறது; அதற்காகக் கடனும் வாங்குகிறது.



படம் 2 – 4 சுழல் ஓட்டத்தில் செலவிடும் மூன்று முக்கிய இனங்கள்

வருமானத்திற்கும் செலவீட்டிற்குமுள்ள தொடர்பு மாறுவதனால்தான் பெரும்பாலும் பொருளாதார மந்தமோ பணவீக்கமோ ஏற்படுகின்றது. ஒவ்வொரு இனமும் தத்தம்

வருமானத்தையும் செலவையும் சமப்படுத்திவிடுமாயின், பொருளாதாரச் சீர்குலைவே ஏற்படாது; அல்லது இம் மூன்று இனங்களில் ஏதாவதொன்றின் வருவாய்-செலவு விகிதாச்சாரம் மாறும் போது, அதன் விளைவுகளைச் சரிக்கட்டக்கூடிய விதத்தில் மற்ற இனங்கள் தத்தம் வருவாய்-செலவு விகிதாச்சாரத்தை அமைத்துக்கொண்டு விட்டாலும், பொருளாதார மந்தமோ பணவீக்கமோ தோன்றுது. ஆனல் நடைமுறையில் செலவு செய்யும் விதங்கள் மாறுபடுகின்றன; குறிப்பாக, முதலீட்டுச் செலவுதான் அதிகமாக ஏற்ற இறக்கமடைகின்றது; அப்போது உற்பத்தி, வருமானம், வேலைமட்டம் ஆகியவையும் ஏற்ற இறக்கமடைந்து விடுகின்றன.

ஒன்றோடொன்று தொடர்புள்ள வருமானக் கருத்துகள்

நாட்டின் உற்பத்தி-வருமானச் சுழல் ஓட்ட ஆய்வில் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP), மொத்த வருமானம் (GNI), அவற்றின் பல்வேறு இனங்கள் ஆகியவைதான் முக்கியமான ஆய்வுக் கருவிகளாகும்; எனினும், வேறுசில பயனுள்ள கருத்துகளும்கூடப் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

நாட்டின் நிகர உற்பத்தி (NNP): நாட்டின் மொத்த உற்பத்தி அளவில் முதற்கருவிப் பொருள்களின் தேய்மானம்போக எஞ்சியுள்ள உற்பத்திதான் நாட்டின் நிகர உற்பத்தியாகும். நாட்டின் மொத்த உற்பத்தியில் ஒரு பகுதி தேய்மான ஈட்டிற்குத்தான் சரியாகி விடுகிறது. எனவே, அதுபோக நிகர உற்பத்தி இருந்தால்தான் பல்வேறு பலன்களை நாம் பெறமுடியும்;/, அதாவது, நுகர்ச்சி, அரசாங்கம் வாங்குதல், மூலதன இருப்பைக் கூட்டுதல் போன்ற பல காரியங்கள் நடைபெறுவதற்கு நிகர உற்பத்தி கணிசமான அளவில் இருக்கவேண்டும். இவ்வாறாக, நாட்டின் நிகர உற்பத்தி = நாட்டின் மொத்த உற்பத்தி – தேய்மானம் ஆகும்.

நாட்டு வருமானம்: நாட்டின் நிகர உற்பத்தியில் மறைமுகத் தொழில் வரிகள் போக எஞ்சியிருப்பதுதான் நாட்டு வருமானமாகும். நாட்டு வருமானத்தை அளவிடும்போது, விற்பனை வரி, சொத்து வரிகளுக்கான மதிப்பளவை மொத்த வருமானத்திலிருந்து கழித்துவிடுகிறோம். அவ்வாறு கழித்தது போக எஞ்சியிருப்பதனைத்தும் நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய உற்பத்திக் காரணிகளின் வருமானமாக ஆகிவிடுகின்றன.

எனவே, நிகர உற்பத்தியின் மதிப்பளவுதான் நாட்டு வருமான மாகிறது. இவ் வருமானத்தை உற்பத்திக் காரணிகளுக்காகும் செலவைக்கொண்டும் அளவிடலாம்.

நாட்டு வருமானத்தை அளவிடும்போது, நிகர உற்பத்தி மதிப்பை மட்டும் கணிப்பதுதான் நல்லதாகத் தோன்றுகிறது; ஏனெனில் அப்படி அளவிடும்போதுதான் மறைமுக வரிகள் எவ்வளவு மாறினாலும் நாட்டு வருமானக் கணக்கு பாதிக்கப் படாது. சான்றாக, விற்பனை வரிகள் அதிகரிக்கப்படும்போது நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) நிகர உற்பத்தியும் (NNP) உயர்ந்துவிடுகிறது; ஆனால் உண்மையில் உற்பத்தி அதிகரிப்பது கிடையாது. எனினும், நாட்டு வருமானம் மாறாமல் அப்படியேதானிருக்கும்.[4] எனவே, பல்வேறு நாடுகளின் வருமானத்தை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் வருமானக் கணக்குதான் சிறந்ததேயன்றி, உற்பத்திக் கணக்கல்ல.

சொந்த வருமானம் (Personal income): சொந்த வருமானம் என்பது வரி செலுத்து முன்னர் குடும்பத்தினர் பல்வேறு வழிகளில் பெற்ற வருமானத்தைக் குறிப்பிடுகிறது. நாட்டு வருமானக் கணக்கிலிருந்து சொந்த வருமானம் எவ்வளவென்பதை எளிதாகக் கணித்துவிடலாம். எவ்வாறெனில், தொழில் இலாபங்கள், இலாப வரிகள், சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கெனச் செலுத்தப்பட்டது ஆகிய மூன்று இனங்களின் மொத்தம் எவ்வளவு என்பதைக் கணக்கிட்டு, அதை நாட்டு வருமானத்திலிருந்து கழித்துவிட்டால் சொந்த வருமானம் எவ்வளவென்று

[4] நாட்டின் மொத்த வருமானக் கணக்கெடுப்பு முறைகளில் இந்த வருமானக் கணக்கெடுப்பு முறைதான் முதன்முதலில் கையாளப்பட்டது. 1665ஆம் ஆண்டிற்கு முன்னரும் பின்னரும் பல புள்ளியியல் நிபுணர்கள் நாட்டு வருமானத்தை அளவிட முயன்றனர்; ஆனால் 1665ஆம் ஆண்டில்தான் சர் வில்லியம் பெட்டி (Sir William Petty) என்பவர் இங்கிலாந்து நாட்டின் வருமானத்தை 40 மில்லியன் பவுன்களென்று அளவிட்டுக் காட்டினார். அவரது மதிப்பீட்டின்படி 'உணவு, உடை, இருப்பிடம் போன்ற இன்றியமையாத பொருள்களுக்குச்' சாதாரண மனிதன் செய்த அன்றாடச் செலவு 4½ பென்சுகள்தான்; இதன்படி பார்த்தால் ஆண்டொன்றுக்கு ஆன செலவு 6 பவுன், 13 ஷில்லிங், 4 பென்சுகள்தான். அவரது அளவீட்டின்படி அன்றைய இங்கிலாந்தின் மக்கள்தொகை 6 மில்லியன் ஆகும். எனவே, நாட்டின் மொத்தச் செலவும் 40 மில்லியன் பவுன்கள்தான் (நாட்டு வருமானமும் செலவீடும் ஒன்றுக்கொன்று சமம் என்பது அவரது எடுகோள்).

இன்று, நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) மொத்த வருமானமும்தான் முக்கிய அளவீடுகளாகும். இவ்வளவீட்டில்தான் நாட்டில் உற்பத்தியான பொருள்களும் பணிகளும் மொத்தம் எவ்வளவு என்பது தெரியும். அதோடு, இவ்வளவீட்டு முறையில் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை. மேலும், நாட்டின் மொத்த உற்பத்தி (GNP), மொத்த வருமான (GNI) அளவீட்டிற்கு தேய்மானம் எவ்வளவென்று கச்சிதமாகக் கணக்கெடுக்கத் தேவையில்லையாதலால் அளவிடுவோருக்கும் பொருளாதார அறிஞர்களுக்கும் வேலையும் குறைந்துவிடுகிறது.



படம் 2–5 வருமான, செலவு ஓட்டங்கள், 1969 (பில்லியன் டாலர்களில்)

தெரிந்துவிடும். இதோடு, அரசாங்கத்திடமிருந்து கைமாறி வந்துள்ள தொகையையும் கூட்டினால் போதும். இக்கைமாறிய தொகை நாட்டு வருமானக் கணக்கில் சேர்க்கப்படுவதில்லை; எனினும், குடும்பத்தினருக்கு இது வருமானமாகச் சேருவதால் சொந்த வருமானக் கணக்கில் சேர்க்கப்படுகிறது.

செலவிடக்கூடிய சொந்த வருமானம் (disposable personal income): செலவிடக்கூடிய சொந்த வருமானம் என்பது, தானே செலுத்தவேண்டிய வரிபோக எஞ்சியுள்ள குடும்ப வருமானத்தைக் குறிப்பிடுகிறது. இந்த வருமானத்தைக் குடும்பத்தினர் செலவு செய்யலாம் அல்லது சேமித்து வைக்கலாம். நாட்டின் மொத்த வருமானத்தில் (GNI) இச் செலவிடக்கூடிய சொந்த வருமானம் ஓர் ஒட்டமாக உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. அதாவது, அரசாங்கத்திற்கு வரி வருமானமாயும், தொழில் நிறுவனங்களுக்கு இலாப வருமானமாயும் சென்றது போக எஞ்சிய நாட்டு வருமானம் குடும்பத்தினரை வந்து அடைகிறது.

படம் 2–5 பார்ப்பதற்குச் சிக்கல் நிறைந்த சுழல் ஒட்டப் படமாகும். இப்படத்தில் வருமானம் பற்றிய எல்லாக் கருத்துக்களுமே உள்ளன; அதோடு மட்டுமன்றி, செலவிடக் கூடிய சொந்த வருமானம், மொத்தத் தொழில் சேமிப்பு, நிகர வரிகள் ஆகிய அனைத்தும் நாட்டின் மொத்த உற்பத்தியிலும் (GNP), மொத்த வருமானத்திலும் (GNI) எப்படியெல்லாம் உருவாகின்றன என்பதையும் இதில் காணலாம். இப்படத்தைக் குழப்பமின்றித் தெளிவாகப் புரிந்துகொண்டுவிட்டால் நாட்டு வருமானக் கணக்கு எப்படியெல்லாம் அமைகிறது என்பது நன்றாகப் புரிந்துவிடும்.

முழுத்திறன் உற்பத்திக்கும் நடைமுறை உற்பத்திக்கும் முரண்பாடு
(Potential versus Actual GNP)

நடைமுறை உற்பத்தி, வருமானம் என்றாலென்ன என்பதை வரையறை செய்வதையும், அவற்றை அளவிடுவதெப்படி என்பதையும் பற்றித்தான் இவ்வதிகாரத்தில் இதுவரை கண்டோம். ஆனால், நாட்டின் முழுத்திறன் உற்பத்தி எவ்வளவு, அல்லது வேலை நிறைவின்போது நடைபெறக் கூடிய உற்பத்தி எவ்வளவு என்பதும் முக்கியமானதாகும்.

முழுத்திறன் உற்பத்தி என்பது, உற்பத்திச் சக்திகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு, தொழிலாளர் அனைவரும் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கும்போது உற்பத்தி செய்யக்கூடிய அளவைக் குறிப்பிடும். வேலை நிறைவு என்றால், தொழிலாளர்கள் அனைவரும் (நூற்றுக்கு நூறுபேர்) வேலையில் உள்ளனர் என்று பொருளல்ல. செழுமையான காலத்தில்கூட இருந்த வேலையை விட்டுவிட்டு, வேறுவேலையை நாடும் தொழிலாளர் அவ்வேலை கிடைக்கும்வரை வேலையின்றி இருப்பதுண்டு. அதேபோல் வளமான காலத்திலும் ஒரு சில தொழில்கள் நலிவுறுவதும், அதனால் பல தொழிலாளர் வேலையிழப்பதும் உண்டு. எனவே, அனைவருக்கும் வேலை என்ற நிலை ஏற்படுவது மிகக் கடினம். பொதுவாகக் கூறும்போது, தொழிலாளர்களில் 96 அல்லது 97 சதவீதம் பேர் வேலைக்கமர்த்தப்பட்டும், உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தம் சக்தியில் 90 முதல் 95 சதவீதம் வரை பயன் படுத்திக்கொண்டும் இருந்தால், வேலைநிறைவு உள்ளதாகவும் ஆக்க சக்திகள் முழுமையாகப் பயன்படுவதாகவும் கொள்ளலாம். இவற்றைப் பற்றி விரிவாக ஆறும் அதிகாரத்தில் ஆராய்வோம்.

ஒரு நாட்டின் வளமையை எடைபோட வேண்டுமாயின், அதன் முழுத்திறன் உற்பத்தியையும் நடைமுறை உற்பத்தியையும் ஒப்பிட்டுப் பார்த்துத்தான் மதிப்பிடவேண்டும். முடிவுற்ற பொருள்களையும் பணிகளையும் நுகர்வோர், முதலீடு செய்வோர், அரசாங்கம் ஆகிய மூன்று இனத்தவரும்தான் பயன்படுத்து கின்றனர். எனவே, ஒரு நாடு தன் முழுத்திறனுக்கு உற்பத்தி செய்யும்போது, உற்பத்தியாகும் பொருள்கள், பணிகள் முழுவதையும் வாங்குவதற்காக இவர்கள் தம் வருமானத்தைச் செலவிடவில்லையென்றால் நடைமுறை உற்பத்தி முழுத்திறன் உற்பத்தி அளவைக் காட்டிலும் குறைந்துவிடும். அப்போது, தொழிலாளர் வேலை இழக்க நேரிடுவதோடு, தொழில் நிறுவனங்கள் தம் முழுச் சக்திக்கேற்ப உற்பத்தி செய்ய முடியா மலும் போய்விடுகிறது. இவ்வாறாக, முழுத்திறன் உற்பத்திக்கும் நடைமுறை உற்பத்திக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கின்ற தென்பதைக் கொண்டே பொருளாதார மந்தத்தின் கடுமையை நாம் அளவிட்டு விடலாம். இதுதான் சிறந்த அளவீடுமாகும்.

சுருக்கம்

ஒரு நாட்டில் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின்(விலை) மதிப்புத்தான் அந் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) ஆகும். நாட்டின் மொத்த

உற்பத்தியில் (GNP) ஒவ்வொரு டாலர் மதிப்புள்ள உற்பத்தியும் ஒவ்வொரு டாலர் வருமானத்தை உருவாக்குகிறது. இவ் வருமானங்கள் அனைத்தும் சேர்ந்த மொத்தம்தான் நாட்டின் மொத்த வருமானமாகும் (GNI). எனவே, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) = நாட்டின் மொத்த வருமானம் (GNI) என்றாகிறது.

நாட்டில் இலட்சக் கணக்கான பொருள்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன; எனவே, அவற்றையெல்லாம் மொத்தமாகக் கூட்டுவதற்கு ஏதாவதொரு பொது அளவுகோல் தேவை. விலை மதிப்புத்தான் சிறந்த பொது அளவுகோலாகும். ஒவ்வொரு பொருளும் பணியும் அதனதன் அங்காடி விலையில் மதிப்பிடப்படுகிறது. இவ்வாறாக, உற்பத்தியான பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்த மதிப்புத்தான் (விலை × அளவு) நாட்டின் மொத்த உற்பத்தி அளவாகும் (GNP). ஆனால் விலைவாசிகள் ஏற்ற இறக்கமடைகின்றன; பணவீக்கத்தின் போது விலைவாசிகள் ஏறிக்கொண்டேயிருக்கின்ற ஒரே காரணத்தால்கூட நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) உயர்ந்து விடலாம். எனவே, உண்மையில் மொத்த உற்பத்தி எவ்வளவு அதிகரித்துள்ளது அல்லது குறைந்துள்ளது என்பதை அளவிடுவதற்கு, ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பொருளின் மதிப்பையும் பணியின் மதிப்பையும் ஏதாவதொரு ஆதார ஆண்டின் விலைகளில் அளவிடுகின்றோம். அவ்வாறு அளவிடப்பட்ட நாட்டின் மொத்த உற்பத்தியைத்தான் நிலையான டாலரில் நாட்டின் மொத்த உற்பத்தி என்றழைக்கின்றோம்.

நாட்டின் உற்பத்தியை அளவிடுவதற்கு இரு வழிகள் உள்ளன. ஒன்று, முடிவான உற்பத்தி மதிப்பையெல்லாம் மொத்தமாகக் கூட்டுவது. அதாவது, இறுதியாகப் பயன்படுத்துவோருக்கு விற்கப்படும் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் மதிப்பு எவ்வளவென்று கணித்து, அதோடு தொழில் நிறுவனங்களின் இருப்புகள் எவ்வளவு அதிகரித்துள்ளன அல்லது குறைந்துள்ளன என்பதைக் கூட்டுவதுதான் முதல்வழி. ஒரே பொருளை இருமுறை கூட்டிவிடக்கூடாதென்பதற்காக முடிவான பொருள்களை மட்டுமே கணக்கில் சேர்க்கின்றோம். ஏனெனில் உற்பத்திப் போக்கிலுள்ள பொருள்களின் விலையும் சேர்ந்ததுதான் முடிவுப் பொருள்களின் விலைகள். சான்றாக, மாவின் விலையும் சேர்ந்ததுதான் ரொட்டியின்விலை; அதேபோல் உருக்கின் விலையையும் கொண்டதுதான் காரின் விலை.

பொருள்களும் பணிகளும் உற்பத்தியாகும்போது கிடைத்த வருமானங்களையெல்லாம் மொத்தமாகக் கூட்டுவது இரண்டாவது வழியாகும். இம் மொத்தம்தான் நாட்டின் மொத்த வருமானம் (GNI) ஆகிறது. முடிவான உற்பத்தியின் மதிப்பு எவ்வளவு டாலர்களோ அந்த அளவுக்குச் சமமாகத்தான் வருமானமும் உருவாக்கப்படுகிறது. எனவே, நாட்டின் மொத்த உற்பத்தி = நாட்டின் மொத்த வருமானம் ஆகும் (GNP = GNI). விற்பனையிலிருந்து கிடைத்த வருமானத்திற்கும் உற்பத்திச் செலவிற்குமுள்ள வித்தியாசம்தான் இலாபமாகிறது; எனவே, இலாபம்தான் இக் கணக்கில் சமநிலைப்படுத்தும் இனமாக உள்ளது.

நாட்டின் மொத்த உற்பத்தியில் நுகர்வு, முதலீடு, அரசாங்கம் வாங்குதல், நிகர ஏற்றுமதி என்று நான்கு இனங்கள் உள்ளன; நாட்டின் மொத்த உற்பத்தியை இந் நான்கு இனங்கள்தான் ஏதாவதொரு வழியில் பயன்கொள்கின்றன.

நாட்டின் மொத்த உற்பத்தியில் (GNP) ஒரு பகுதி உண்மையான ஆக்கச் சொத்துக்களை அதிகரிக்கவோ அல்லது அச் சொத்துக்களின் தேய்மானத்தை ஈடு செய்யவோ பயன்படுகின்றன; இதைத்தான் நாம் முதலீடு என்கிறோம். ஆக்கச் சொத்துக்களை ஆண்டுதோறும் பயன்படுத்தும்போது, அவை தேய்மானமடைகின்றன, அல்லது வழக்கிலிருந்து போகின்றன; எனவே, மொத்த முதலீட்டில் ஒரு பகுதி அவற்றை ஈடுசெய்யப் பயன்படுகிறது; எஞ்சிய நிகர முதலீடுதான் ஆக்கச் சொத்துக்களின் இருப்பை அதிகரிக்கிறது. நாட்டின் மொத்த உற்பத்தியிலுள்ள (GNP) முதலீடு என்ற இனம் தொழில் நிறுவனங்களின் இருப்புகளில் ஏற்படும் மாறுதல்களையும் குறிப்பிடுவதாகும். அதாவது, அவ்விருப்புகள் நேர்க்கணியமாயும் மாறலாம் (விற்பனை அளவைக் காட்டிலும் இருப்பின் அளவு அதிகரிக்கலாம்), அல்லது எதிர்க்கணியமாயும் மாறலாம் (விற்கப்படும் அளவைக் காட்டிலும் இருப்பின் அளவு குறையலாம்). நாட்டின் மொத்த உற்பத்தியில் (GNP) மத்திய, மாநில, தல அரசாங்கங்கள் வாங்கும் பொருள்களும் பணிகளும் மற்றொரு இனமாக உள்ளது; ஆனால் அரசாங்கம் அவ்வாறு பொருள்களையோ பணிகளையோ வாங்குவதற்குப் பதிலாக, தன் வருவாயில் ஒரு பகுதியை பொதுமக்களுக்குக் கைமாற்றிவிடும்போது, அப்பகுதி நாட்டின் உற்பத்திக் கணக்கில் இடம்பெறுவதில்லை.

உற்பத்தியின் வழியாகப் பெற்ற தொழிலாளர் சம்பளம், இலாபம், தேய்மானம், வட்டி, வாரம், மறைமுகத் தொழில்

வரிகள், ஆகியவைதான் நாட்டின் மொத்த வருமானத்தில் (GNI) இடம் பெறும் முக்கிய இனங்களாகும். இவற்றின் வருமானங்கள் வரிசெலுத்தப்படு முன்னரே அளவிடப்படுகின்றன. மறைமுகத் தொழில் வரிகளில் விற்பனை வரி, ஆயத்தீர்வை, சொத்து வரி ஆகியவைதான் முக்கியமானவை; இவ் வரிகள் வருமானத்தின் மீது விதிக்கப்படுவதில்லையாதலின், வருமான இனங்களில் வேறெங்கும் இவை சேர்க்கப்படுவதில்லை.

நாட்டின் மொத்த வருமானம் அனைத்தும் நுகர்வோர் வருமானமாக ஆவதில்லை. மொத்த வருமானத்தில் ஒரு பகுதி தொழில் சேமிப்பாகச் சென்றுவிடுகிறது; மற்றுமொரு பகுதி வரிகளின் வாயிலாக அரசாங்கத்திற்குச் சென்றுவிடுகிறது. அதே சமயம், நாட்டின் வருமானக் கணக்கில் இடம்பெறுத கைமாறும் இனமாகச் சிறிதளவு அரசாங்கத்திடமிருந்து நுகர் வோரை வந்தடைகிறது. எனவே, நாட்டின் மொத்த வருமானத் தில் மொத்தத் தொழில் சேமிப்பும் அரசாங்க வரிகளும் போக எஞ்சியிருக்கும் அளவும் அரசாங்கத்திடமிருந்து கைமாறி வந்த அளவும் சேர்ந்துதான் நுகர்வோர் செலவிடக்கூடிய சொந்த வருமானமாகும். நாட்டு வருமான ஓட்டத்தில் நுகர்வோருக்குக் கைமாறியதுபோக எஞ்சியுள்ள வரி வருமானம்தான் அரசாங்க வருமானமாகச் செல்கிறது. இவ்வாறுக, மொத்தத் தொழில் சேமிப்பு, நிகர அரசாங்க வரிகள், செலவிடக்கூடிய நுகர்வோர் வருமானம் என்ற மூன்று ஓடைகளின் வழியாக ஓடும் ஓட்ட மாகவே நாட்டின் மொத்த வருமானத்தைக் (GNI) கருதலாம். இம் மூன்று வருமான இனங்களில் ஒவ்வொன்றும் தொழில் முதலீடு, அரசாங்கம், நுகர்வு என்று மூன்று முக்கிய செலவினங் களில் ஏதாவதொன்றுக்குத்தான் செல்கிறது.

இம் மூன்று செலவினங்களில் ஒன்றுமே தன் வருமானத்திற்கு நிகராக எப்போதும் செலவிடுவது கிடையாது. சொல்லப் போனால் மொத்த வருமானத்திற்கும் செலவீட்டிற்கும் மாறுபாடு இருப்பதனால்தான் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) ஏற்ற இறக்கமடைந்து, அதன் வழியாகப் பணவீக்கமோ பொருளா தார மந்தமோ தோன்றுகின்றன என்று கூறலாம்.

நாட்டின் முழுத்திறன் உற்பத்தி அளவுக்குச் சமமாக நடை முறை உற்பத்தி எப்போதும் இருப்பதில்லை. நாட்டின் முழுத் திறன் உற்பத்தி (Potential GNP) என்பது ஒரு நாட்டில் வேலை நிறைவு உள்ளபோது, அது தன் ஆக்க சக்திகளையெல்லாம் முழுமையாகப் பயன்படுத்திச் செய்யக்கூடிய சாத்தியமான

உற்பத்தி அளவைக் குறிப்பிடும். முழுத்திறன் உற்பத்தியைக் காட்டிலும் நடைமுறை உற்பத்தி குறைந்துவிடும்போது, வேலை யின்மை தோன்றுவதோடு மட்டுமன்றி, தொழில் நிறுவன சக்தி களும் முழுமையாகப் பயன்படாமல் போய்விடுகின்றன. எனவே, முழுத்திறன் உற்பத்தியைக் காட்டிலும் நடைமுறை உற்பத்தி எவ்வளவு தாழ்வாக உள்ளது என்பதைக் கொண்டே பொரு ளாதார மந்தத்தின் தீவிரத்தைச் சரியான முறையில் அளவிட்டு விடலாம்.

3. நாட்டின் மொத்த உற்பத்தியை நிர்ணயிப்பன

நாட்டு வருமானம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்ற நவீனக் கோட்பாட்டைத்தான் இவ்வதிகாரத்தில் ஆராயப் போகின்றோம். குறிப்பிட்டதோர் ஆண்டில் நாட்டின் மொத்த உற்பத்தியைப் (GNP) பாதிக்கக்கூடிய சக்திகள் யாவை? ஆண்டுக்காண்டு நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) அளவு மாறுவது எதனால்? ஏற்கெனவே பார்த்ததுபோல், நாட்டின் நடைமுறை உற்பத்தியும் வருமானமும் நாட்டின் முழுத்திறன் உற்பத்திக்கும் வருமானத்திற்கும் சமமாக இருப்பதில்லை; எனவே, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) ஏன் இவ்வளவு தான் உள்ளது என்பதை அறிந்துகொள்ள முழுத்திறன் உற்பத்தி எவ்வளவு என்பதை மட்டும் தெரிந்துகொண்டால் போதாது; முழுத்திறன் உற்பத்தி அளவைக் காட்டிலும் ஏன் நடைமுறை உற்பத்தி குறைந்துள்ளது என்பதை விவரமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமாயின், நாட்டு வருமானம் எவ்வாறு நிர்ணயமாகிறது என்பது பற்றிய கோட்பாடு அவசியமாகிறது.

தொகு தேவை

நாட்டிலுள்ள ஆலைகளும் ஆலைத்தொழிலாளரும் தம் முழுச் சக்திக்கு உற்பத்தி செய்யும் பொருள்கள் விற்கப்படவில்லை யென்றால் அவ்வாலைகளும் தொழிலாளரும் ஓரளவிற்கு வேலை யின்றி இருக்க நேரிடுகிறது. மேலும், தாம் உற்பத்தி செய்யும் பொருள்களை ஓரளவிற்காகிலும் இலாபம் தரக்கூடிய விலைக்கு விற்க முடிந்தால்தான் தொழிலதிபர்கள் தொடர்ந்து உற்பத்தி செய்யமுடியும்; இல்லையெனில், தம் ஆலைகளின் முழுச்சக்தியை யும் அவர்கள் பயன்படுத்த முடியாது. தொழில் நிறுவனங்கள் எந்த அளவுக்கு உற்பத்தி செய்யக்கூடுமென்பது, தொகு தேவை எவ்வளவு என்பதைப் பொருத்தது; அதாவது, நுகர்வோர், அரசாங்கம், முதலீடு செய்வோர் அனைவரும் எந்த அளவுக்கு வாங்கத் தயாராயிருக்கின்றனர் என்பதைச் சார்ந்ததாகும். விற்பனைக்குத் தயாராயுள்ள பொருள்களும் பணிகளும் முழுமை

யாக விற்கப்படவேண்டுமாயின், அந்த அளவிற்குத் தொகு தேவை இருக்கவேண்டும்; அவ்வாறில்லையென்றால், தொழில் நிறுவனங்களிடமுள்ள இருப்புகள் குவிந்துவிடும்; அவ்வாறு குவிந்துவிட்ட இருப்புகளை நட்டத்திற்குத்தான் விற்கநேரிடும் என்பதை அறிந்துகொண்ட தொழில் நிறுவனங்கள் தத்தம் உற்பத்தியைக் குறைத்துக்கொள்ள முற்படும்; அப்போது தொழிலாளர்களும் வேலையிழக்க வேண்டியுள்ளது. எனவே, ஒரு நாட்டில் பொருள்களுக்கும் பணிகளுக்குமுள்ள மொத்தத் தேவை எந்த அளவு இருக்கின்றதோ அந்த அளவிற்குத்தான் உற்பத்தி நடைபெற முற்படும். வேறுவிதத்தில் கூறுவதாயின், ஒரு நாட்டின் முழுத்திறன் உற்பத்தி எந்த அளவுக்கு இருந்த போதிலும், இலாபகரமாக விற்பனை செய்யக்கூடிய அளவிற்குத் தான் உற்பத்தி நடைபெறும். நாட்டின் முழுத்திறன் உற்பத்தி அளவைக் காட்டிலும் தொகு தேவை குறைவாக இருந்தால் நடைமுறை உற்பத்தியும் குறைந்துவிடும். சான்றாக, 1930–1939-லிருந்த பெரும் பொருளாதார மந்தத்தின் விளைவாக நாட்டின் உற்பத்தி சக்தி 1929-ல் இருந்ததைக் காட்டிலும் பெருமளவில் குறைந்துவிட்டது என்பதை நாம் அறிவோம். அவ்வாறு உற்பத்தி அளவு சீரழிந்து விட்டதால் நாட்டின் உற்பத்தித் திறனும் குறைந்துவிட்டதாக எண்ணக்கூடாது; மாறாக, அங்காடியில் போதுமான அளவு தேவை இல்லாததால்தான் தொழில் நிறுவனங்கள் தம் முழுச் சக்திக்கு உற்பத்தி செய்ய முடியாமல் போயிற்று.

ஒரு நாட்டில் குறிப்பிட்டதொரு நிறுவனம் மட்டும் அல்லது தொழில் மட்டும்தான் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை விற்பனை செய்ய முடியாமல் நொடித்துப்போவது சகஜம். அவ்வாறு நொடித்துப் போவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்; அப் பொருளின் விலை மிக அதிகமானதாயிருக்கலாம்; அல்லது அப் பொருள் தரம் கெட்டுப்போயிருக்கலாம்; அல்லது நுகர்வோரின் விருப்புகள் மாறி, அப் பொருளுக்கிருந்த தேவை இப்போது இல்லாமல் போயிருக்கலாம். ஆனால், மொத்தச் செலவீடு—மொத்தத் தேவை—குறைவதும், அதனால் பெரும் பாலான நிறுவனங்கள் தம் முழுச் சக்திக்கேற்ப உற்பத்தி செய்ய முடியாமல் உற்பத்தி அளவைக் குறைத்துக்கொள்வதும், அதன் விளைவாகத், தொழிலாளர்களில் பலர் வேலையிழந்து தவிப்ப தற்கும் காரணம் என்ன? இந்தச் சூழ்நிலை ஏன், எப்போது ஏற்படுகிறது? நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) மொத்த வருமானமும் (GNI) எப்போதுமே சரிசமமாகத்தானிருக்கும் என்பதை முன்னரே கண்டோம்; அதாவது, ஒவ்வொரு

டாலர் மதிப்புள்ள உற்பத்தியும் ஒவ்வொரு டாலர் வருமானத்தை உருவாக்குகிறது; இந்த வருமானம் நாட்டிலுள்ள ஏதாவதொருவருக்கு அல்லது இனத்திற்குச் சென்றுவிடுகிறது. சான்றாக, நாட்டின் முழுத்திறன் உற்பத்தி 950 மில்லியன் டாலர்களென வைத்துக்கொள்வோம்; நடைமுறை உற்பத்தியும் இதே அளவுக்கு இருக்குமாயின், உற்பத்தியில் உருவாக்கப்பட்ட நாட்டின் மொத்த வருமானமும் 950 மில்லியன் டாலர்களாகத்தான் இருக்கமுடியும். இந்த 950 மில்லியன் டாலர் வருமானமும் அப்படியே செலவிடப்பட்டால் முழுத்திறனுக்கு உற்பத்தி செய்யப்பட்டதனைத்தும் விற்கப்பட்டுவிடும். அப்போது, முழுத்திறன் உற்பத்தி அளவும் நடைமுறை உற்பத்தி அளவும் ஒன்றுக்கொன்று சமமாகிவிடும். ஆனால் 950 மில்லியன் டாலர் உற்பத்தியில் எத்தனையோ மாறுதல்கள் இருக்கக்கூடும். ஒரு சில நிறுவனங்கள் தம் சக்திக்குக் குறைவாகவே உற்பத்தி செய்து விற்பனை செய்யும்போது, வேறு சில நிறுவனங்களோ தம் சக்திக்கு மீறி உற்பத்தி செய்து அவ்வளவையும் விற்கக்கூடும். அதேபோல் ஒரு சில நிறுவனங்கள் மேலும் மேலும் தொழிலாளர்களை வேலைக்கமர்த்திக்கொண்டிருக்க, வேறு சில நிறுவனங்கள் இருக்கின்ற தொழிலாளர்களைக்கூட வெளியேற்றக்கூடும். எது எப்படியிருந்தாலும், நாட்டின் மொத்த வருமானமும் (GNI) தொகு தேவையும் ஒன்றுக்கொன்று சமமாகவே இருக்குமானால், மொத்த உற்பத்தியும் விற்பனையும் நாட்டின் முழுத்திறன் உற்பத்தி அளவுக்குச் சமமாகவேதான் இருக்கும்.

எனவே, நாட்டின் முழுத்திறன் உற்பத்தி அளவைக் காட்டிலும் தொகு தேவை குறைந்துவிடுவதற்கும், அதனால் நடைமுறை உற்பத்தி அளவும் குறைக்கப்படுவதற்கும் காரணம், நாட்டின் மொத்த வருமானம் அல்லது பொருள்களை வாங்கும் சக்தி குறைந்து விடுவதனால் அல்ல; ஏனெனில் நாட்டின் மொத்த உற்பத்தியும் வருமானமும் சரிசமமாகவேதான் உள்ளன (GNP = GNI). மாறாக, நாட்டின் மொத்த வருமானத்தைக் காட்டிலும் மொத்தத் தேவை குறைந்துவிடுவதுதான் காரணமாகும்.[1] எனவே, நாட்டின் வருமானத்தைக் காட்டிலும் தொகு

[1] இங்கு ஒரு சிறு மாற்றம் தேவை. நாட்டின் முழுத்திறன் உற்பத்தி அளவைக் காட்டிலும் அங்காடியின் தேவை குறைந்துவிடுவதற்கு மொத்தமாக வாங்கும் திறன் (வருமானம்) குறைந்துவிட்டதுதான் காரணம் என்று கூற முடியாது (ஏனெனில், நாட்டின் மொத்த உற்பத்தியும் மொத்த வருமானமும் சரிசமமாகவேதானிருக்கும்). நாட்டின் மொத்த வருமானம் (GNI) மக்களிடையே முறையாகப் பகிரப்படாமலிருப்பதும் முக்கிய காரணமாயிருக்கலாம். நாட்டின் வருமானம் யார் யாருக்குச் செல்லுகிறது என்பதைப் பொறுத்துத்தான் மொத்தத் தேவையின் தீவிரம் நிர்ணயமாகிறது. சான்றாக, 1930 முதல் 1939

தேவை அதிகமாகவோ குறைவாகவோ ஆகிவிடுவதனால்தான் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படுகிறது. இதன் விளைவாகத் தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யக்கூடிய அளவும் நாட்டின் முழுத்திறன் உற்பத்தியைக் காட்டிலும் அதிக மாகவோ குறைவாகவோ ஆகிவிடுகின்றன.

மொத்தச் செலவீட்டை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை, சில சமயங்களில் நாட்டின் முழுத்திறன் உற்பத்தி அளவைக் காட்டிலும் மொத்தச் செலவீடு குறைந்துவிடுவதேன் என்பதை யெல்லாம் முறையாக அறிந்துகொள்வதற்கு நாட்டின் வருமானத் திற்கும் தொகு தேவைக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இதைத்தான் இவ்வதிகாரத்தில் நாம் ஆராயப்போகின்றோம். அதாவது, தொகு தேவை எப்படி நாட்டின் மொத்த வருமானத்தோடு தொடர்புடையது, இத் தொடர்பு எவ்வாறு நாட்டின் மொத்த உற்பத்தியை (GNP) நிர்ணயிக்கிறது என்று பார்க்கப் போகின்றோம்.

நுகர்வுச் செலவு, முதலீட்டுச் செலவு, அரசாங்கச் செலவு ஆகிய மூன்றும் சேர்ந்ததுதான் தொகு தேவை. எனவே, முதலில் நுகர்வுச் செலவைப்பற்றி, குறிப்பாக நுகர்வுச் செல விற்கும் வருமானத்திற்குமுள்ள தொடர்பைப்பற்றி ஆராய்வோம்.

தொகு தேவையை நிர்ணயிப்பன

நுகர்வுச் சார்பு (Consumption function).

குடும்ப வருமான-நுகர்வுத் தொடர்பு: குடும்பங்களின் நுகர்வு பெரும்பாலும் அவற்றின் சொந்த வருமானத்தைச் சார்ந்ததாகும். பொருளாதாரச் சொற்களில் கூறுவதாயின், நுகர்வு வருமானத்தின் சார்பாகும் (அதாவது வருமானத்தைச் சார்ந்தது). நுகர்விற்கும் வருமானத்திற்குமுள்ள தொடர்பைத் தான் 'நுகர்வுச் சார்பு' என்றழைக்கின்றோம். எல்லாக் குடும் பங்களின் நுகர்வும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சான்றாக, பணக்காரக் குடும்பங்கள் ஏழைக்குடும்பங்களைக் காட்டிலும் அதிக அளவில் நுகர்வுச் செலவு செய்கின்றன. வருமானம் உயரும்போது பொதுவாக நுகர்வும் உயர்ந்துவிடுகிறது.

வரை தொகு தேவை குறைந்துகொண்டே வந்து, கடைசியில் 1929-ல் பொருளாதாரமே சீர்குலைந்து விட்டதற்கு நாட்டின் வருமானம் செல்வந்தர் களிடம் மட்டும் அதிகமாகக் குவிந்துகொண்டிருந்ததுதான் முக்கியமான காரணமென்று ஒரு சில பொருளாதார அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். இது எந்த அளவுக்கு உண்மையென்று தெரியாது. இருந்தபோதிலும், நாட்டின் வருமானம் முறையான வழியில் பகிரப்படாமலிருந்ததுதான் தொகு தேவை குறைந்ததற்குக் காரணமேயொழிய, நாட்டு வருமானம் குறைந்துவிட்டதல்ல.

குடும்ப வருமானத்திற்கும் நுகர்விற்குமுள்ள தொடர்பின் இயல்பை 3-1 பட்டியல் காட்டுகிறது. இப் பட்டியல் 1950-ல் குடும்பச் செலவீட்டு மதிப்பீட்டிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.[2] பட்டியலின் முதல் இரண்டு பத்திகளில் குடும்ப வருமான அளவும் அதற்கேற்றார் போன்ற நுகர்வுச் செலவும் எப்படியுள்ளன என்னும் நுகர்வுச் சார்பினை வரிசையாகக் காணலாம். வருமானத்திற்கும் நுகர்வுச் செலவிற்குமுள்ள வேறுபாடுதான் சேமிப்பு. இதைப் பட்டியலின் மூன்றாவது பத்தியில் காணலாம். நாம் சாதாரணமாக நினைப்பது போன்று, வருமானம் உயர உயர நுகர்வுச் செலவும் உயர்கிறது; அதே சமயம் சேமிப்பும் அதிகமாகிறது. வேறுவிதமாகக் கூறின், வருமானம் உயர்ந்தால் நுகர்வு மட்டுமன்றி சேமிப்பும் உயர முற்படுகிறது.

குடும்பங்களின் நுகர்வுச் செலவு வருமானத்தை மட்டும் சார்ந்ததல்ல; வேறு எத்தனையோ வகையான காரணிகளையும் சார்ந்ததாகும். சான்றாக, குடும்பத்திலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை, அவர்களின் வயது, குடும்பத் தலைவரின் தொழில், கடந்த காலத்திய குடும்ப வரலாறு, வருங்காலத்தில் குடும்பம் எதிர்பார்க்கும் வருமானம் ஆகிய பல்வேறு காரணிகளையும் சார்ந்ததாகும். எனவே, இரண்டு குடும்பங்களின் வருமானம் ஒரே அளவில் இருந்தால்கூட இக் காரணிகள் மாறுபடும்போது, அவற்றின் செலவுகளும் வெவ்வேறாகி விடுகின்றன. இருந்த போதிலும், சராசரியாகப் பார்க்கும்போது, பணக்காரக் குடும்பத்தினரின் நுகர்வுச் செலவு ஏழைக் குடும்பத்தினரின் செலவைக் காட்டிலும் அதிகமாகத்தானிருக்கும். இவ்வாறாக, வருமானத்திற்கும் நுகர்வுச் செலவிற்குமுள்ள பொதுவான தொடர்பைத்தான் நுகர்வுச் சார்பு புலப்படுத்துகிறது. நாட்டின் மொத்த உற்பத்தியை (GNP) நிர்ணயிக்கும் காரணிகளைப் பற்றிய ஆய்வில் நுகர்வுச் சார்பு முக்கிய பங்கு கொள்வதால் அதைப்பற்றிச் சற்று விரிவாகவே பார்ப்போம்.

பட்டியலிலுள்ள கடைசி நான்கு பத்திகளும் முறையே சராசரி நுகர்வு நாட்டம் (Average propensity to consume), சராசரி சேமிப்பு நாட்டம் (Average propensity to save), இறுதி நிலை நுகர்வு நாட்டம் (Marginal propensity to consume), இறுதி நிலைச் சேமிப்பு நாட்டம் (Marginal propensity to save) ஆகிய நான்கு கருத்துக்களைச் சார்ந்ததாகும்; இக் கருத்துக்கள் பொருளாதார ஆய்வில் முக்கியமானவைகளாகும்.

[2] அடிப்படையான தொடர்பை எளிமையாக்க வேண்டுமென்பதற்காக துண்டு துண்டாக இருந்த எண்களெல்லாம் முழுமையானவைகளாக ஆக்கப் பட்டுள்ளன.

செலவிடக்கூடிய குடும்ப வருமானம் (வரி செலுத்திய பின்னர்)	நுகர்வுச் செலவு	சேமிப்பு	சராசரி நுகர்வு நாட்டம் (APC)	சராசரி சேமிப்பு நாட்டம் (APS)	இறுதி நிலை நுகர்வு நாட்டம் (MPC)	இறுதி நிலை சேமிப்பு நாட்டம் MPS
$ 2,000	$ 2,150	–$ 150	1.08	–.08		
					.95	.05
3,000	3,100	– 100	1.03	–.03		
					.90	.10
4,000	4,000	0	1.00	0		
					.85	.15
5,000	4,850	150	.97	.03		
					.80	.20
6,000	5,650	350	.94	.06		
					.73	.27
7,000	6,380	620	.91	.09		
					.67	.33
8,000	7,050	950	.88	.12		
					.62	.38
9,000	7,670	1,330	.85	.15		
					.51	.49
10,000	8,180	1,820	.82	.18		

வருமானத்தில் எத்தனை சதவீதம் நுகரப்படுகிறதோ, (அதாவது வருமானத்திற்கும் நுகர்விற்குமுள்ள விகிதம்) அது தான் சராசரி நுகர்வு நாட்டமாகும். அதேபோல், வருமானத்தில் எத்தனை சதவீதம் சேமிப்பாகிறதோ அதுதான் சராசரிச் சேமிப்பு நாட்டம் (APS) ஆகும். வருமானத்தை ஒன்று நுகர்விற்காகச் செலவிட வேண்டும் அல்லது சேமிக்க வேண்டும். எனவே சராசரி நுகர்வு நாட்டமும் (APC) சராசரிச் சேமிப்பு நாட்டமும் (APS) சேர்ந்து எப்போதுமே 1-க்குச் சமமாகத்தானிருக்கும்.[3] அதனால், வருமானம் 2,000 டாலர்களாக இருக்கும்போது, சராசரி நுகர்வு நாட்டம் 1·08 ஆக இருப்பதால் சராசரிச் சேமிப்பு நாட்டம் —·8 என்றாகிறது. வருமானம் உயர்ந்து, 10,000 டாலர்களாக இருக்கும்போது, சராசரி நுகர்வு நாட்டம் ·82 ஆகவும், சராசரிச் சேமிப்பு நாட்டம் 1—·82, அதாவது ·18 ஆகவும் உள்ளன.

வருமானம் உயர உயர, சராசரிச் சேமிப்பு நாட்டம் உயர்வதையும் (சராசரி நுகர்வு நாட்டம் தாழ்வதையும்) கவனியுங்கள். ஏழைகளைவிட செல்வந்தர்கள்தான் அதிக விகிதத்தில் சேமிக்கின்றனர் என நாள்தோறும் நாம் பேசிக்கொள்வது இங்கு உறுதியாகிவிடுகிறது. சொல்லப் போனால் வருமானம் மிகத் தாழ்வாக இருக்கும்போது சேமிப்பு எதிர்க்கணியமாகி விடுகிறது. பொதுவாக, மிகத் தாழ்ந்த வருமானமுடையோர் தம் வருமானத்தைக் காட்டிலும் அதிகமாகச் செலவு செய்கின்றனர். வருமானம் 4,000 டாலர்களுக்குமேல் உயரும்போதுதான் சேமிக்க முடிகிறது (அதாவது, வருமானத்தைவிடச் செலவு குறைகிறது). வருமானம் 4,000 டாலர்களுக்குமேல் உயர உயர சேமிப்பு ஒரே விகிதத்தில் உயராமல் அதிக விகிதத்தில் உயர்ந்துகொண்டே செல்கிறது.

நுகர்வுச் சார்பினை 3-1 படத்திலுள்ளதைப்போல் படவாயிலாகவும் விளக்கலாம். இப் படத்திலுள்ள படுகிடை அச்சில் (horizontal axis) செலவிடக்கூடிய குடும்ப வருமானமும், செங்குத்தான அச்சில் (vertical axis) குடும்ப நுகர்வும் அளவிடப்படுகின்றன. 3-1 பட்டியலிலுள்ள முதல் இரண்டு பத்திகளும் காட்டுவதுபோல் ஒவ்வொரு வருமான அளவிலும் நுகர்வு எவ்வளவு என்பதைப் படத்திலுள்ள கரும்புள்ளிகள் குறிப்பிடுகின்றன. சான்றாக, C புள்ளி 6,000 டாலர் வருமானத்தையும்

3. C=நுகர்வு, S=சேமிப்பு, Y=வருமானம் என்று வைத்துக்கொள்வோம். அவ்வாறாயின், $C+S=Y$ ஆகிறது; எனவே $\frac{C}{Y}+\frac{S}{Y}=1$.

5,650 டாலர் நுகர்வுச் செலவையும் குறிப்பிடுகின்றது. இரு பரிமாண படத்தில் (two-dimensional graph) எந்தப் புள்ளியுமே இரண்டு அளவுகளைக் குறிப்பிடும்; எனவே, இரண்டு விதமான பிறவுகளின் எண்ணிக்கையைக் காட்டவும் இப் படம் பயன்படுகிறது; இங்கு வருமானத்திற்கும் நுகர்விற்கு முள்ள தொடர்பை இது காட்டுகிறது. இப் படத்திலுள்ள CC கோடு எல்லாப் புள்ளிகளையும் கூடுமானவரை தொடுவதுபோல் இணக்கமாகப் போடப்பட்டுள்ளது. எல்லாப் புள்ளிகளுமே இக் கோட்டில் இல்லையெனினும், இக் கோட்டிற்குப் பக்கத்தில்தான் உள்ளன. ஒவ்வொரு வருமான மட்டத்திலும், வருமானத்திற்கும் நுகர்விற்குமுள்ள பொதுவான தொடர்பைத்தான் CC கோடு புலப்படுத்துகிறது. வேறுவிதமாகக் கூறின், நுகர்வுச் சார்பு முழுவதையும் இக் கோடு குறிப்பிடுகிறது. எனவே, இக் கோட்டில் எந்தப் புள்ளியை எடுத்துக் கொண்டாலும், அந்தப் புள்ளியில் வருமானம் எவ்வளவு, நுகர்வு எவ்வளவு என்பது புலனாகும்.

3-1 பட விளக்கத்தை எளிமையாக்க வேண்டுமென்பதற்காக 45° கோடு போடப்பட்டுள்ளது. இந்தக் கோட்டில் எந்தப் புள்ளியை எடுத்துக்கொண்டாலும், அது இரண்டு அச்சுகளிலுமே ஒரே அளவைத்தான் குறிப்பிடும். சான்றாக, B புள்ளியில் வருமானமும் 6,000 டாலர்கள்தான், நுகர்வும் 6,000 டாலர்கள்தான். எனவே, வருமானத்தின் அளவை OD மட்டுமன்றி OA-யும் சுட்டிக் காட்டுகிறது. இவ்வாறாக, படுகிடை அச்சிற்கும் 45° கோட்டிற்குமிடையேயுள்ள தூரத்தைக் கொண்டே வருமானத்தை நாம் அளவிட்டுவிடலாம். அதோடு நுகர்வு, வருமானம், சேமிப்பு ஆகியவைகளுக்கிடையேயுள்ள தொடர்பையும் இதன் வழியாகவே நாம் அறிந்துகொள்ள முடியும். சான்றாக, வருமானம் 6,000 டாலர்களாக இருக்கும்போது, நுகர்வு 5,650 டாலர்களென்பதை C-க்கும் D-க்குமுள்ள இடைவெளி காட்டுகிறது; வருமானத்தில் நுகர்வுபோக எஞ்சியிருப்பதுதான் சேமிப்பு; இச் சேமிப்பை BC காட்டுகிறது. பொதுவாகக் கூறின், படுகிடை அச்சிற்கும் CC கோட்டிற்குமுள்ள இடைவெளி நுகர்விற்குச் சமமாகிறது; அதேபோல் CC கோட்டிற்கும் 45° கோட்டிற்குமுள்ள இடைவெளி சேமிப்பிற்குச் சமமாகிறது. Z புள்ளியில் (4,000 டாலர் வருமானமுள்ளது) வருமானமும் நுகர்வும் ஒன்றுக்கொன்று சமம். எனவே, சேமிப்பு சூன்யமாகிறது (Zero). அதோடு, இப் புள்ளியில் CC கோடு 45° கோட்டினை வெட்டுவதால் இவ்விரு கோடுகளுக்குமிடையே இடைவெளி கிடையாது. அடுத்து, Y புள்ளியில் (2,000 டாலர் வருமானத்தில்) வருமானத்தைக் காட்டிலும்

நுகர்வு அதிகமாகி விடுவதால் சேமிப்பு எதிர்க்கணியமாகிறது. இவ்வாறு எதிர்கணியமான சேமிப்பைப் புலப்படுத்துவதற்கு CC கோட்டிலிருந்து 45° கோட்டை அடைய கீழ்நோக்கி வருகிறோம் என்பதும், சேமிப்பு நேர்க்கணியமாக இருக்கும் போது Z புள்ளிக்கு வலப்புறமுள்ள எல்லாப் புள்ளிகளிலும் CC கோட்டிலிருந்து 45° கோட்டை அடைய மேல்நோக்கிச்





படம் 3 - 1. குடும்ப நுகர்வுச் சார்பு

செல்கிறோம் என்பதும் குறிப்பிடத்தக்கது. வருமானத்தையும் நுகர்வையும் ஒரே திசையில் அளவிடுவதற்கென்று ஒரு குறுக்கு வழியாகத்தான் 45° கோட்டைப் பயன்படுத்தினோம். இனிமேல் இக் கோட்டை வருமானக் கோடு (income line) என்றழைப் போம். நுகர்வுச் சார்பும் 45° கோடுமுள்ள படத்தில் நுகர்வுச்

சார்புக் கோட்டிற்கும் வருமானக் கோட்டிற்குமிடையேயுள்ள செங்குத்தான இடைவெளிதான் சேமிப்பாகும் (3-1, 3-2, 3-3 ங்களைப் பார்க்கவும்).



படம் 3-2. அமெரிக்காவில் செலவிடக்கூடிய வருமான நுகர்வுத் தொடர்புகள் (1929-1969)

குறிப்பு : நுகர்வோர் வருமானமும் செலவீடும் மாறுத மதிப்புடைய டாலர்களில் அளவிடப்பட்டுள்ளன.

நாட்டு வருமான – நுகர்வுத் தொடர்புகள் : குடும்ப வருமானத்திற்கும் நுகர்விற்குமுள்ள தொடர்பு தெரிந்திருக்க, செலவிடக்கூடிய நாட்டின் வருமானம் உயரும்போதும் தாழும் போதும் நாட்டின் மொத்த நுகர்வும் உயரவும் தாழவும் முற்படும். நாட்டின் நுகர்வுச் சார்பினைப் படம் 3-2 காட்டுகிறது. இதிலுள்ள ஒவ்வொரு புள்ளியும் குறிப்பிட்ட ஆண்டில் வருமான-நுகர்வுத் தொடர்பு எப்படி இருந்ததென்பதைப் புலப்படுத்துகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் வருமானமும் நுகர்வும் எப்படி இருந்தன என்பதைக் குறிப்பிடும் புள்ளிகள் அனைத்தும் நுகர்வுச் சார்புக் கோட்டில் இல்லை என்பது உண்மைதான். எனினும் இரண்டாம் உலகப் போர் காலத்திலும், போர் முடிந்த ஒரு சில ஆண்டுகளிலுமிருந்த தொடர்பினைக் காட்டும் புள்ளிகளைத் தவிர ஏனைய புள்ளிகள் அனைத்துமே கூடுமானவரை இக் கோட்டில்தான் உள்ளன. இவ்வாறுக, செலவிடக்கூடிய நாட்டின் மொத்த வருமானத்திற்கும் நுகர்விற்குமுள்ள அடிப்படைத்

தொடர்பினை CC புலப்படுத்தும் பட்டியலிலிருந்து அறிந்து கொள்ளலாம். பொதுவாக, இத் தொடர்புகள் பட்டியல் காட்டுவதைப்போல்தான் இருக்கும். எனினும், நடைமுறையில் இவை மாறக்கூடும் என்பதை மறந்துவிடக் கூடாது. குடும்ப வருமான நுகர்வுப் பட்டியல் படத்தில் குறுக்கு வழியாகக் கையாண்டதைப்போல் இப் படத்திலும் வருமானக் கோட்டைக் கையாளலாம். அப்போது எந்தெந்த வருமான மட்டத்தில் எவ்வளவு நுகர்வாகிறது என்பதை இக்கோடு புலப்படுத்தும். செங்குத்துக் கோடான $AE\ (=OA)$ செலவிடக் கூடிய மொத்த வருமான அளவாகும். இந்த வருமானம் எப்படி நுகர்விற்கும் சேமிப்பிற்கும் பயன்படுகிறதென்பதை இப் படம் புலப்படுத்துகிறது.

செலவிடக்கூடிய மொத்த வருமானம் உயரும்போது, நுகர்வும் உயர்கிறது. அதோடு, தனிப்பட்ட குடும்பங்களில் நிகழ்வதைப் போலவேதான் மொத்த வருமானம் உயரும்போது, உயர்ந்துள்ள வருமானம் அனைத்தும் நுகரப்படாமல், அதில் ஒரு பகுதி சேமிப்பாகிறது. எனவே, நாட்டை முழுமையாக ஆயும்போது, இறுதிநிலை நுகர்வு நாட்டம் 1-க்குக் குறைவாகவே தானிருக்கும்; அதனால் இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் நேர்கணியமாகத்தானிருக்கும்.

நுகர்வுச் சார்பின் வேறுசில தன்மைகள்

செலவிடக்கூடிய மொத்த வருமானத்திற்கேற்ப நுகர்வுச் செலவும் உயர்கிறது அல்லது தாழ்கிறது என்பது உண்மைதான். எனினும், படங்கள் 3–1, 3–2 காட்டுவதுபோல் நுகர்வோரின் போக்கு எளிமையானதுமன்று, துல்லியமானதுமன்று. மாறாக, நுகர்வோரின் நடவடிக்கைகள் சிக்கல் நிறைந்தனவாகும்.

முதலாவதாக, ஒரு குடும்பத்தினர் தம் வருமானத்தில் எத்தனை சதவீதத்தை நுகர்விற்காகச் செலவிடுவர் என்பது அக் குடும்பத்தினரின் வருமான அளவை மட்டும் சார்ந்ததன்று. மற்றவர்களின் சராசரி வருமானம் எவ்வளவென்பதையும் சார்ந்ததாகும். சான்றாக, 3–1 படத்தின்படியும் 3–1 பட்டியலின்படியும் 1950-ல் 4,000 டாலர் வருமானம் பெற்ற குடும்பத்தின் வருமானம் முழுவதையுமே நுகர்விற்காகச் செலவிட்டுள்ளது. ஆனால் 50 ஆண்டுகளுக்கு முன்னர் 4,000 டாலர் வருமானம் பெற்ற குடும்பம் சாதாரணக் குடும்பமாய் இருந்திருக்கமுடியாது. அவ் வருமானத்தில் கணிசமான அளவைச் சேமித்திருக்கும்.

இன்றைய நிலையை எடுத்துக்கொண்டால், சராசரி ஒவ்வொரு குடும்பத்திற்கும் 8,000 டாலர் வருமானம் கிடைக்கிறது. ஆனால் 1950-ல் இருந்ததைப்போல் 4,000 டாலருக்குமேல் வருமான முள்ள குடும்பங்கள் இன்று சேமிக்க முடிவதில்லை. எனவே, இன்றைக்குச் சேமிக்கக்கூடிய அளவு வருமானம் 4,000 டாலரன்று. அதைக் காட்டிலும் அதிகமாயிருந்தால்தான் சேமிக்கமுடியும். குடும்பத்தினர் காலத்திற்கும் சூழ்நிலைக்குமேற்ப செலவுசெய்ய வேண்டியுள்ளது. இதுதான் நுகர்வோரின் போக்குகளில் முக்கியமானதொன்று. பொதுவாக, நாட்டின் வருமானம் உயர உயர, சராசரி வருமானமும் உயர்ந்துவிடுவதால் குறிப்பிட்ட தொரு வருமானம் குறைந்ததாகிவிடுகிறது. எந்த அளவு வருமானம் கிடைத்தாலும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்படும்போது, வருமானத்தில் நுகர்விற் காகச் செலவிடப்படும் பகுதி அதிகரித்துக்கொண்டே செல்கிறது. 1900ஆம் ஆண்டிற்கான 3-1 படத்தை நாம் வரைந்தோமென்றால், நுகர்வுப் பட்டியலின் இலக்குகள் 1950-லிருப்பதைக் காட்டிலும் தாழ்வாகத்தானிருக்கும். அதோடு, நுகர்வுச் சார்புக் கோடு 45° கோட்டை இன்னும் கீழ்மட்டத்திலேயே வெட்டும். மாறுக, 1980 ஆம் ஆண்டிற்கான நுகர்வுச் சார்போ 1950-லிருந்ததைக் காட்டிலும் எவ்வளவோ மேலே இருக்கும். எனவே, குறிப்பிட்டதொரு காலத்தில் குடும்ப வருமானம் உயர்வாயிருந்தபோது சராசரிச் சேமிப்பு நாட்டமும் அதிகமாயிருந்தது என்பதைக் கொண்டு, நாட்டின் மொத்த வருமானம் உயரும்போதெல்லாம் நாட்டின் சராசரிச் சேமிப்பு நாட்டமும் உயர்ந்துவிடும் என்ற முடிவிற்கு வரமுடியாது. சான்றாக, கடந்த நூறாண்டுகளில் குடும்பங்களின் சராசரி வருமானம் ஆறு மடங்கு உயர்ந்துள்ள போதிலும், சேமிப்பின் விகிதம் உயராமல் அப்படியேதான் இருந்திருக்கிறது.

பொருளாதாரச் சமநிலை ஆய்வில் முக்கியத்துவம் வாய்ந்த மற்றுமொரு நுகர்வோரின் போக்கும் குறிப்பிடத்தக்கது. அதாவது, வருமானம் எந்த அளவுக்கு மாறினாலும் சரி, அந்த அளவுக்கு நுகர்வோரின் செலவுகள் உடனடியாக மாறிவிடுவதில்லை. ஏனெனில் நுகர்வோரின் பழக்கவழக்கங்கள் வருங்காலத்தில் வருமானம் எந்த அளவுக்கு இருக்கக்கூடுமென்பதையும் ஆதாரமாகக் கொண்டவை. சான்றாக, திடீரென்று வேலையிழந்த தொழிலாளி, அல்லது இவ்வாண்டில் நட்டம் கண்ட சிறு வியாபாரி காலமெல்லாம் இப்படியேதான் போதுமான வருமானமின்றி கஷ்டப்படவேண்டுமென்று நினைப்பதில்லை. அதனால் சிறிது காலம்வரை பழக்கப்பட்டுவிட்ட நுகர்வுச் செலவைச்

செய்துகொண்டேதானிருப்பர். நீண்ட காலத்திற்கு இம் மோச மான நிலை நீடித்தால்தான் தத்தம் நுகர்வுச் செலவை அதற் கேற்ப மாற்றிக்கொள்வர். அதுவரை தன் வாழ்க்கைத் தரத் தைத் தாழ்த்திக்கொள்ளார். அதேபோல், மிகத் தாழ்ந்த வருமானமுடையோர் தம் வரவுக்குமீறி நுகர்வுச் செலவு செய்வ தற்கும் (3-1 படத்தைப் பார்க்கவும்) பல காரணங்கள் இருக்கலாம். இங்குக் குறிப்பிடத்தக்க காரணம் யாதெனில், எளிய குடும்பங்கள் பல நிரந்தரமாக ஏழ்மையில் இருப்பதில்லை. காலமெல்லாம் இப்படித்தான் வறுமையில் வாடப்போகின்றோம் என்று அவர்கள் நினைப்பதுமில்லை. மாறாக, 'நமக்கும் நல்ல காலம் வரும்' என்றுதான் நினைக்கின்றனர். மிக மோசமான பொருளாதார மந்தத்தின்போதுகூட நாட்டு மக்கள் அனை வருமே தம் சொந்த வருமானத்தைக் காட்டிலும் அதிகமாக நுகர்வுச் செலவு செய்ததற்கும் (3-2 படத்தைப் பார்க்கவும்) இம் மனப்போக்குத்தான் காரணமாகும்.

இவ்வாறாக, நுகர்வுச் சார்பு பல்வேறு சிக்கல்களைக் கொண்டதாகும். எனினும், வருமானம் உயரும்போதோ, தாழும் போதோ, நுகர்வுச் செலவும் உயருகிறது அல்லது தாழ்கிறது என்ற அடிப்படைத் தத்துவம் உண்மைதான். இதைக் காட்டிலும் முக்கியமான உண்மையாதெனில், வருமானம் எந்த அளவுக்கு மாறுகின்றதோ அதே அளவுக்கு நுகர்வு மாறுவதில்லை. அதாவது, இறுதிநிலை நுகர்வு நாட்டம் 1-க்குக் குறைவாகத் தான் இருக்கும்.

நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) நிர்ணயமாவது எப்படி: எளிமையானதொரு சான்று

நாட்டின் உற்பத்தி, வருமானம், செலவீடு ஆகியவற்றிற் கிடையேயுள்ள தொடர்பு எவ்வாறு நிர்ணயமாகிறது என்பது தான் நமது முக்கியமான பிரச்சினையாகும். இப் பிரச்சினைக்கு உண்மையான தீர்வுகாண வேண்டுமாயின், முந்திய அதிகாரத் திலுள்ள 2-5 படத்தைப் பாருங்கள்; பார்த்தவுடன் அச்சுறுத்தும் வண்ணம் தீட்டப்பட்டுள்ள இப் படத்தின்படி, குடும்பங்கள், தொழில்கள், அரசாங்கம் ஆகிய ஒவ்வொரு இனத்திற்கும் உற்பத்தி, வருமானம், செலவீடு எப்படியுள்ளன, அவை ஒவ் வொன்றுக்குமிடையே எவ்வாறெல்லாம் தொடர்புகள் உள்ளன என்பதை ஒரே சமயத்தில் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இது கடினம்.

எனினும், இத் தொடர்புகளின் முக்கியமான சாரங்களை அறிந்துகொள்வதற்கு எளிமையானதொரு உலகை கற்பனை செய்துகொண்டு ஆராயத் தொடங்குவோம். நாட்டின் சேமிப்பனைத்தும் குடும்பங்களால் மட்டுமே உருவாவதாக வைத்துக் கொள்வோம். அப்படியானால் தொழில் சேமிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. அரசாங்கம் இல்லை (ஏனைய நாடு எதுவுமே உலகில் கிடையாது) என்றும் யூகித்துக் கொள்வோம். அப்படியானால், தொழில் சேமிப்பும் கிடையாது; வரிகளும் கிடையாது. இந் நிலையில் நாட்டின் மொத்த வருமானம் (GNP) முழுவதும் செலவிடக்கூடிய சொந்த வருமானமாகக் குடும்பங்களுக்கு மட்டுமே சென்றுவிடுகிறது. இந்த வருமானம் முழுவதும் நுகரப்படவேண்டும் அல்லது தொழில் முதலீடு செய்யப் படவேண்டும்; செலவிடுவதற்கு வேறு வழி ஏதுமில்லை. அப்போது, நாட்டின் மொத்த உற்பத்தி அளவை (GNP) நிர்ணயிக்கும் தொகு தேவை மிக எளிமையானதாகி விடுகிறது; அதாவது, குடும்ப நுகர்வுச் சார்பினையும், எவ்வளவு முதலீடு செய்வதென்று தொழில்கள் தீர்மானித்துள்ள முடிவுகளையும் மட்டுமே தொகு தேவை சார்ந்ததாகி விடுகிறது.



படம் 3 – 3 நுகர்வுச் சார்பு

நாட்டின் மொத்த உற்பத்தி எந்த அளவில் இருந்தாலும் 80 பில்லியன் டாலர் முதலீடுதான் செய்யவேண்டுமென்று

தொழில் நிறுவனங்கள் தீர்மானித்துவிட்டதாக வைத்துக்கொள் வோம். அதோடு, நுகர்வுச் சார்பு 3 – 3 படத்திலுள்ள அமைப் பில் இருப்பதாகவே யூகித்துக்கொள்வோம். அவ்வாறுயின், இவ்விரண்டையும் ஒன்றுகச் சேர்த்து மொத்தச் செலவீட்டைக் காட்டக்கூடிய வகையில் புதியதொரு 3 – 4 படத்தைப் போட்டு விடலாம். (சுழல் ஓட்டத்தன்மையைக் காட்டுவதற்கு இப் படம் தான் முறையானதாகும்).

3 – 4 படத்திலுள்ள $C + I$ கோடு நுகர்வுச் சார்பை மட்டு மன்றி, முதலீட்டையும் சேர்த்து மொத்தமாக அளவிடுகிறது. நாட்டின் மொத்த வருமானம் (GNP) எந்தெந்த மட்டத்தில் இருக்கும்போது, நுகர்வுச் செலவும் எந்தெந்த அளவில் உள்ளது என்பதை நுகர்வுச் சார்பு புலப்படுத்துகிறது. நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) வருமானமும் (GNI) எந்த மட்டத்தில் இருந்



படம் 3–4 தொகு தேவை

தாலும் முதலீடு மாறுமல் அப்படியேதான் (80 பில்லியன் டால ராகவே) இருக்கிறது என்று அனுமானித்துள்ளோம். எனவே, நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) வருமானமும் (GNI) எந்தெந்த மட்டத்தில் இருக்கும்போது, மொத்தச் செலவீடு எவ்வளவு இருக்கும் என்பதை அளவிடுவதற்கு (மாறுத) முதலீட்டின் அளவை நுகர்வுச் சார்போடு கூட்ட வேண்டும்.

இவ்வாறுக, C + 1 கோடு தொகு தேவைப் பட்டியல் கோடாகும்; எனவே, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP = GNI) எந்தெந்த மட்டத்தில் இருப்பினும், அந்தந்த மட்டத்திற்கேற்ற மொத்தச் செலவீடு எவ்வளவு என்பதை இக் கோடு புலப்படுத்துகிறது.

நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) சாத்தியமான எத்தனையோ மட்டங்களில் உற்பத்தி செய்யப்பட முடியுமெனினும், உற்பத்தியும் (GNP) மொத்தச் செலவீடும் (தொகு தேவை) எந்த மட்டத்தில் ஒன்றுக்கொன்று சமமாகின்றனவோ அந்த மட்டத்தில்தான் உற்பத்தி செய்யப்படும். ஏனெனில், உற்பத்தியான தனைத்தும் விற்கப்பட வேண்டுமானால் மொத்த உற்பத்தி அளவிற்குச் சமமாக மொத்தச் செலவீடும் இருக்க வேண்டும். படத்தில் a என்னும் புள்ளியில்தான் இச் சமநிலை தோன்றுகிறது. இப் புள்ளியில்தான் தொகு தேவையும் (C+1) நாட்டின் மொத்த உற்பத்தியும் சமம்; இரண்டுமே 550 என்ற அளவில் அமைகின்றன. மொத்தச் செலவீடும் உற்பத்தியும் சமமாகின்ற இந்த அளவைத்தான் சமநிலை உற்பத்தி என்கின்றோம்.

> நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) தொகு தேவையும் சமமாகின்ற மட்டம்தான் சமநிலை உற்பத்தி மட்டமாகும்; இந்த மட்டத்திற்குத்தான் உற்பத்தி நடைபெற முற்படும். படத்தின் வாயிலாகக் கூறின், இந்தப் புள்ளியில்தான் தொகு தேவைப் பட்டியல் கோடு (C+1), 45° கோட்டை வெட்டுகிறது.

நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) 550-க்குப் பதிலாக 650 ஆக இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம் (படம் 3 – 5 பார்க்கவும்). அப்போது, தொகு தேவை 610 ஆக இருப்பதால் உற்பத்தியில் 40 அலகுகள் விற்பனையாகாது. எனவே, தொகு தேவை 550 என்றிருப்பதால் அந்த அளவிற்கு உற்பத்தி குறைக்கப்பட்டுவிடும்.

மாறுக, உற்பத்தி 450ஆக மட்டும் இருந்தால், தேவை முழுமையாக நிறைவு செய்யப்படாமல், இருப்பிலுள்ள சரக்குகளுக்கு கிராக்கி ஏற்படும்; எனவே, விரிவடைந்துள்ள தேவையை நிறைவு செய்து தம் வருமானத்தை அதிகரிக்க முடியுமென்பதால் உற்பத்தி செய்வோர் உற்பத்தி அளவை அதிகரிக்க முற்படுவர்; அவ்வாறு அதிகரித்து, தொகு தேவை இருக்கின்ற 550 மட்டத்திற்குக் கொண்டு வருவர்.

சமநிலை மட்டத்தில் ஏற்படும் இரு முக்கியமான நிலைமை களைக் கவனியுங்கள்:

- தொகு தேவை நாட்டின் மொத்த உற்பத்திக்குச் (GNP) சமமாகிறது.
- சேமிப்பு முதலீட்டிற்குச் சமமாகிறது.

நமது பிரச்சினைக்குரிய தீர்வின் சாரம் இதுதான். மொத்தச் செலவீடு எந்த அளவிற்கு உள்ளதோ அந்த அளவிற்குச் சமமாகத் தான் தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்ய முற்படும். உற்பத்தி எந்த அளவிற்கு நடைபெறுகிறதோ அதே அளவிற்குத் தான் வருமானமும் உருவாக்கப்படுகிறது. வருமானத்தில் ஒரு பகுதி நுகர்விற்காகச் செலவிடப்படுகிறது; எஞ்சிய பகுதி சேமிப்பாகிறது. நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) எந்த



படம் 3-5 சமநிலை உற்பத்தி (GNP) நிர்ணயம்

மட்டத்தில் இருக்கும்போது சேமிப்பு முதலீட்டிற்குச் சமமா கின்றதோ அந்த மட்டத்தில்தான் மொத்தச் செலவீடும் மொத்த உற்பத்தியும் சரிசமமாகிறது. எனவே, இந்த மட்டத்திற்குத் தான் நடைமுறை உற்பத்தி செய்யப்பட முற்படும். வருமா னத்தில் ஒரு பகுதி செலவிடப்படாமல் கசிந்தோடிச் சேமிப்பாக உருவாகிறது; அச் சேமிப்புக்கு இணையாக முதலீடு செய்யப் பட்டால்தான் மொத்த உற்பத்தியும் மொத்தச் செலவீடும் ஒன்றுக் கொன்று சமமாக இருக்க முடியும். வேறு விதமாகக் கூறின்,

நாட்டின் மொத்த வருமானத்தில் நுகர்விற்காகச் செலவழிக்கப் படாத பகுதி (சேமிப்பு) வேறெருரு வழியில் (முதலீட்டில்) செல விடப்பட வேண்டும்; அவ்வாறு செலவிடப்பட்டால்தான் நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) வருமானமும் (GNI) சமநிலை மட்டத்தை அடைய முடியும். மாறுக, நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) வருமானமும் (GNI) குறிப்பிட்டதொரு மட்டத்தில் இருக்கும்போது, சேமிப்பைக் காட்டிலும் முதலீடு குறைவாகிவிட்டால், மொத்தச் செலவீடு பெருமளவில் குறைந்து, நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) வருமானமும் (GNI) இறங்கிவிடும். இதற்கு நேர் மாறுக, சேமிப்பைக் காட்டிலும் முதலீடு அதிகரித்துவிட்டால் நாட்டின் மொத்த உற்பத்தியைக் (GNP) காட்டிலும் மொத்தச் செலவீடு உயர்ந்து உற்பத்தி மட்டத் தையும் உயர்த்த முற்படும்.

இந்த உண்மையை இன்னும் நேரடியாகப் புலப்படுத்து வதற்கு படம் 3 – 6 உதவியாயிருக்கும். சேமிப்பு எவ்வாறு வருமானத்தைச் சார்ந்துள்ளது என்பதை இப் படம் புலனுக்கு கிறது. (இப் படத்திலுள்ள கோட்டை படம் 3 – 3-லிருந்து பெறுவதற்கு முயன்று பாருங்கள்). நாட்டு வருமானம் 550 பில்லியன் டாலருக்குமேல் இருந்தால்தான் சேமிக்க முடியும்:



படம் 3-6 சேமிப்பு முதலீட்டுச் சமநிலை

வருமானம் உயர உயர சேமிப்பும் உயர்ந்து கொண்டே போகிறது. நமது எடுகோளின்படி முதலீடு மாறுமல் 80 பில்லியன் டாலர்களாகவே இருப்பதாக வைத்துக் கொள்வோம். அவ்வா ருயின், நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) வருமானமும் (GNI) 550 பில்லியன் டாலர்களாக இருக்கும்போதுதான் சேமிப்பும் முதலீடும் ஒன்றுக்கொன்று சமமாகின்றன.

இந்த வழியில் ஆராயும்போது, நாட்டின் ஆக்க சக்திகள் அனைத்தும் முழுமையாகப் பயன்படுத்தப்படாமலிருப்பதை மறந்துவிடாதீர்கள். அதாவது, வேலை நிறைவுள்ளபோது நாட்டின் மொத்த உற்பத்தி எந்த அளவு இருக்குமோ, அந்த அளவிற்கு இச் சமநிலை உற்பத்தி இருக்க வேண்டியதில்லை. நமது இந்த எளிமையான சான்றில் சமநிலை உற்பத்தி என்பது நுகர்வுச் சார்பையும் முதலீட்டுச் செலவையும் மட்டுமே சார்ந்ததாகிறது. இருந்தபோதிலும், நாம் பின்னர் ஆராயப்போகின்றபடி சிக்கல் நிறைந்த நிலைமைகளில்கூட இந்த அடிப்படையான முடிவு மாறுவதில்லை. இதற்குரிய முக்கியமான காரணம் வருமாறு: சேமிக்கும் தீர்மானம் நுகர்வோரால் எடுக்கப்படுகிறது; ஆனால் முதலீடு செய்யும் தீர்மானமோ தொழில் நிறுவனங்களால் எடுக்கப்படுகிறது. எந்த உற்பத்தி மட்டத்தில் இச் சேமிப்பும் முதலீடும் சமமாகின்றதோ அதுதான் சமநிலை உற்பத்தி மட்டமாகும் என்றும், அச்சமநிலை உற்பத்தியின்போதுதான் தொகுதேவை மொத்த உற்பத்திக்கும் வருமானத்திற்கும் சரிநிகராகிறது என்றும் கண்டோம். ஒரு வேளை வேலை நிறைவின்போதுள்ள உற்பத்தி மட்டத்தில் சேமிப்பும் முதலீடும் சரிசமமாகக்கூடிய வழியில் நுகர்வோரும் முதலீடு செய்வோரும் தனித்தனியாக எடுக்கும் தீர்மானம் அமைந்துவிட்டால் அது தெய்வச் செயல்தான். ஏனெனில் வேலை நிறைவின்போது செய்யப்படும் உற்பத்தி மட்டத்தில் முதலீட்டைக் காட்டிலும் சேமிப்பு அதிகமாயிருக்க முடியாது; அப்படியிருந்தால் அது வேலை நிறைவில் செய்யப்படும் உற்பத்தியாகாது. காரணம், முழுத் திறனுக்கு உற்பத்தியாகும் அனைத்தும் விற்பனையாகாது. மாறாக, வேலை நிறைவுள்ள உற்பத்தி நடைபெறும்போது சேமிப்பைக் காட்டிலும் முதலீடு அதிகமாகிவிட்டால் முழுத் திறன் உற்பத்தி அளவைக் காட்டிலும் தொகு தேவை அதிகமாகி நாட்டில் பணவீக்கத்தை ஏற்படுத்திவிடும்.

இவ்வாறாக, நுகர்வுச் சார்பு கொடுக்கப்பட்டிருக்க, ஒரு நாடு தன் முழுத் திறனுக்கு உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு முதலீடு தேவைப்படுகிறதோ அந்த அளவிற்குச் சேமிப்பும் நடைபெற்றால் தான் அந்நாடு வேலை நிறைவை அடைந்து, அதைப் பேணிக்காக்க முடியும். சுருங்கக் கூறின், வேலை நிறைவுள்ள நாட்டில் உற்பத்தியின்போது உருவாக்கப்படும் வருமானத்தில் நுகர்வுப் பொருள்களுக்காகச் செலவிடப்படாத பகுதி முழுவதும் ஏனைய பொருள்களில் செலவிடப்பட்டால்தான் அந்நாடு தன் முழுத் திறனுக்கு உற்பத்தி செய்ய முடியும்.

எண் கணித விளக்கம்[4]

நாட்டின் சமநிலை உற்பத்தி நிர்ணயமாவதைக் கணிதச் சான்றின் வழியாகவும் விளக்கலாம். 3–2 பட்டியலிலுள்ள முதல் பத்தியில் சாத்தியமான பல்வேறு உற்பத்தி அளவுகள் (GNP = GNI) கொடுக்கப்பட்டுள்ளன. அந்தந்த அளவுகளில் நுகர்வோர் வாங்கும் அளவு எவ்வளவென்பதை இரண்டாம் பத்தியில் காணலாம். நாட்டின் மொத்த வருமானத்தில் (GNI) நுகர்வுக்காகச் செலவிடப்படாத பகுதி, அதாவது முதல் பத்தியிலுள்ள அளவிலிருந்து இரண்டாம் பத்தியிலுள்ள அளவைக் கழித்தால் அதுதான் சேமிப்பாகும். இச் சேமிப்பு மூன்றும் பத்தியில் உள்ளது.

நம் ஆய்விற்கு ஏற்ற வகையில், நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) எவ்வளவு அதிகரித்தாலும் குறைந்தாலும், முதலீட்டுத் தேவை மாறுமல் 80 பில்லியன் டாலர்களாகவே இருப்பதாக வைத்துக்கொள்வோம். இம் முதலீட்டுத் தேவைதான் நான்காம் பத்தியில் உள்ளது. இரண்டாம் பத்தியையும் நான்காம் பத்தியையும் கூட்டினால், நுகர்வுச் செலவும் முதலீட்டுச் செலவும் சேர்ந்து எவ்வளவென்று தெரியும்; அதாவது, தொகு தேவை எவ்வளவு என்பது புலனாகும். இத் தொகு தேவையை ஐந்தாம் பத்தியில் காணலாம். ஒருபுறம் நுகர்வுச் சார்பும், மறுபுறம் முதலீட்டுத் தேவையும் சேர்ந்து உருவாக்குவதுதான் தொகு தேவை என்பதை நாம் அறிவோம். இவ்வாறாக, சாத்தியமான ஒவ்வொரு உற்பத்தி அளவிற்குமேற்ப தொகு தேவையின் அளவும் தோன்றுகிறது. எனவே, தொகு தேவையின் பட்டியலைத்தான் ஐந்தாம் பத்தி காட்டுகிறது; அதாவது, எந்தெந்தச் சாத்தியமான உற்பத்தி அளவில் பொருள்களையும் பணிகளையும் வாங்குவதற்காகச் செலவிடப்படும் மொத்தச் செலவீடு எவ்வளவென்பதைத்தான் இப் பத்தி புலப்படுத்துகிறது. அடுத்து, மொத்த உற்பத்திக்கும் தொகு தேவைக்குமுள்ள வேறுபாட்டை ஆறாம் பத்தியில் காணலாம். நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) மிகத் தாழ்வாக இருக்கும்போது, உற்பத்தி அளவைக் காட்டிலும் தேவை அதிகரித்துவிடுகிறது; மாறாக, மிக உயர்ந்த மட்டத்தில் இருக்கும்போது தேவையைக் காட்டிலும் உற்பத்தி விரிவடைந்து விடுகிறது. ஆனால் விற்க முடிந்த அளவிற்குத்தான் தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்ய முற்படுகின்றன. அவ்வாறு, விற்பனை அளவும் உற்பத்தி அளவும்

4. இவ்வதிகாரத்தின் பிற்சேர்க்கையில் இயற்கணித (algebraic) விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

3 – 2 பட்டியல்

சமநிலை மட்டத்தில் நாட்டின் மொத்த உற்பத்தி

(பில்லியன் டாலர்களில்)

நாட்டின் மொத்த உற்பத்தி = மொத்த வருமானம் (GNP = GNI)	நுகர்வு	சேமிப்பு	முதலீடு	தொகுதேவை (2+4)	தொகுதேவையில் உற்பத்தி போக எஞ்சியது (5 – 1)	முதலீட்டில் சேமிப்புப் போக எஞ்சியது (4 – 3)	
1	2	3	4	5	6	7	
400	380	20	80	460	60	60	தேவை உற்பத்தியை எஞ்சி விடுகிறது ↓
450	410	40	80	490	40	40	
500	440	60	80	520	20	20	
550	**470**	**80**	**80**	**550**	**0**	**0**	**சமநிலை**
600	500	100	80	580	—20	—20	உற்பத்தி தேவையை எஞ்சி விடுகிறது ↑
650	530	120	80	610	—40	—40	

சமமாகக்கூடிய நிலை ஒன்றுதான் 3–2 பட்டியலில் உள்ளது; அதாவது 550 பில்லியன் டாலர் உற்பத்தியில்தான் உற்பத்தியும் தேவையும் ஒன்றுக்கொன்று சமமாகின்றன. வேறெந்த அளவை எடுத்துக் கொண்டாலும், ஒன்றில் உற்பத்தியைக் காட்டிலும் தேவை அதிகமாயுள்ளது அல்லது தேவையைக் காட்டிலும் உற்பத்தி அதிகமாயுள்ளது என்பது தெளிவு. சேமிப்பைக் காட்டிலும் முதலீடு எவ்வளவு எஞ்சிவிடுகிறதென்பதை ஏழாம் பத்தியில் காண்கின்றோம். இதே அளவு வேறுபாடுதான் மொத்த உற்பத்திக்கும் தொகு தேவைக்கும் உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. இவ்வாறுக, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) 550 பில்லியன் டாலராக இருக்கும்போது மட்டும்தான் முதலீடு சேமிப்பிற்குச் சமமாகிறது; அதோடு, உற்பத்தி அளவும் தொகு தேவையும் சரிசமமாகின்றன.

3–2 பட்டியலின் முதல் வரிசையில் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) 400 பில்லியன் டாலர் என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்த அளவு உற்பத்தி நடைபெறும் போது தொகு தேவை 60 பில்லியன் டாலர் அதிகமாயுள்ளது. எனவே, இந்த அளவைவிட அதிகமாய் உற்பத்தி செய்து விற்பனை செய்யக்கூடும் என அறிகிறோம். ஆனால் உற்பத்தி எவ்வளவு அதிகரித்தாலும் அவ்வளவும் விற்பனையாகிவிடுமென்று நினைக்கக் கூடாது. ஏனெனில் இறுதி நிலை நுகர்வு நாட்டம் ஒன்றுக்குக் குறைவாகத்தான் உள்ளது. அதாவது, மொத்த வருமானம் எவ்வளவு அதிகரித்துள்ளதோ அதில் ஒரளவுதான் நுகர்வுச் செலவை அதிகரிக்கப் பயன்படும்; எஞ்சியது சேமிக்கப் பயன் படும். சான்றாக, நாட்டின் மொத்த உற்பத்தி 400 பில்லியன் டாலரிலிருந்து 500 பில்லியனாக உயரும்போது, நுகர்வும் 380 பில்லியனிலிருந்து 440 பில்லியன் டாலருக்கு உயர்கிறது; அவ்வாறுயின் இறுதி நிலை நுகர்வு நாட்டம் ·6 ஆகிறது (உற்பத்தி அளவு 100 பில்லியன் டாலர் அதிகரிக்கும்போது நுகர்வு 60 பில்லியன் டாலர்தான் அதிகரிக்கிறது). அதோடு, மொத்த உற்பத்தி 500 பில்லியன் டாலராக இருக்கும்போது, தொகு தேவை 520 பில்லியன் டாலராக உள்ளது; எனவே, 20 பில்லியன் டாலர் அதிகமாயுள்ள தேவையைக் குறைக்கவேண்டி யுள்ளது. இவ்வாறுக, நாட்டின் மொத்த உற்பத்தி 550 பில்லியன் டாலராக இருக்கும்போது மட்டுமே தேவையை அல்லது உற்பத்தி அளவைக் குறைக்க வேண்டிய அல்லது அதிகரிக்க வேண்டிய அவசியமே இல்லை. இதைக் காட்டிலும் அதிக அளவில் உற்பத்தியாகும்போது, உற்பத்தி தேவையை எஞ்சிவிடுகிறது; அப்போது உற்பத்தி அனைத்தையும் விற்பனை செய்ய இயலாது.

இவ்வாறுக, தொகு தேவையும் உற்பத்தியும் ஒன்றுக் கொன்று சமமாயிருக்கும் நிலையில்தான் நாட்டின் மொத்த உற்பத்தி நடைபெற முற்படும். மேலும், நாட்டின் மொத்த வருமானத்தில் நுகர்விற்காகச் செலவிடப்படாத பகுதி அனைத்தும் முதலீட்டிற்காகச் செலவிடப்பட்டால்தான் தொகு தேவை மொத்த உற்பத்திக்குச் சமமாக இருக்கும். எனவே, நாட்டின் மொத்த உற்பத்தி 550 பில்லியன் டாலராக இருக்கும்போது மட்டும்தான் சேமிப்பும் முதலீடும் சமமாகின்றன; அதோடு, மொத்த உற்பத்திக்கும் நுகர்வுச் செலவுக்குமுள்ள வேறுபாடும் முதலீட்டிற்கு இணையாகிவிடுகிறது.

மொத்தத் தொழில் சேமிப்பும் நாட்டின் மொத்த உற்பத்தி நிர்ணயமும்

இதுவரை, நாட்டின் வருமானம் அனைத்தும் செலவிடக்கூடிய சொந்த வருமானமாக ஒடுகின்றது என்ற அனுமானத்தில் எளிமையானதொரு சுழல் ஓட்டத்தை ஆராய்ந்தோம். இவ்வாய்வின்படி, அரசாங்கத்திற்கோ தொழில் நிறுவனங்களுக்கோ செல்லாமல், நாட்டு வருமானம் முழுவதும் செலவிடக்கூடிய சொந்த வருமானமாக நுகர்வோருக்கு மட்டுமே செல்கின்றது என்ற சாதகமான முடிவு கிடைக்கிறது. ஆனால், உண்மையில் செலவிடக்கூடிய சொந்த வருமானம் நாட்டு வருமானத்தில் ஒரு பகுதிதான் என்பதை முந்திய அதிகாரத்தில் கண்டோம்; அதோடு, எஞ்சிய பகுதி மொத்தத் தொழில் இலாபமாக (அதாவது, நிகர இலாபமாயும் தேய்மான ஈடாயும்) தொழில் நிறுவனங்களுக்கும், வரி வருமானமாக அரசாங்கத்திற்கும் செல்கின்றது என்பதையும் பார்த்தோம். இருந்தபோதிலும் இவ்விரண்டில் ஒன்றை மட்டும் தற்போது ஆராய்வோம். நாட்டில் அரசாங்கமோ அரசாங்க வருமானமோ இல்லையென்று யூகித்துக் கொண்டு, தொழில் நிறுவனங்களின் மொத்த இலாபத்தை மட்டும் சேர்த்து ஆராய்வோம். தொழில் நிறுவனங்கள் தேய்மான ஈட்டிற்கும் இலாப ஈவு வழங்குவதற்கும் தம் இலாபம் அனைத்தையும் செலவிடுவதில்லை. இலாபத்தில் ஒரு பகுதியைத் தொழிலுக்கென்று தாமே வைத்துக் கொள்கின்றன. இவ்வாறுக, நாட்டின் மொத்த வருமானம் (GNI) மொத்தத் தொழில் சேமிப்பு, செலவிடக்கூடிய சொந்த வருமானம் ஆகிய இரண்டு இனங்களை மட்டும் கொண்டதாகி விடுகிறது.

நாட்டின் மொத்த உற்பத்தி (GNP = GNI) அதிகரிக்கும் போது, தொழில்களின் இலாபமும் அதிகரிக்க முற்படும்;

இலாபம் எவ்வளவு அதிகரிக்குமென்பதைத் தோராயமாகக் கணிக்கலாம். தொழில் நடவடிக்கைகளின் அளவைப் பொருத்ததுதான் இலாபம். இலாபத்தில் ஒரு பகுதி பங்குதாரர்களுக்கு இலாப ஈவாகச் சென்றுவிடுகிறது; எஞ்சிய பகுதியைத் தொழில் நிறுவனங்களே வைத்துக்கொள்கின்றன. இவ்வாறாக, நாட்டின் மொத்த வருமானம் (GNI) எந்தெந்த மட்டத்தில் இருக்க, அந்தந்த மட்டத்திற்கேற்ற தொழில் சேமிப்பு எந்தெந்த அளவில் இருக்குமென்பதைக் கணக்கிட முடியும். தொழில் சேமிப்பு என்று கூறும்போது, செலவிடக்கூடிய சொந்த வருமானமாக நுகர்வோருக்குச் சென்றுவிடாமல், தொழில்களே தம்மிடம் வைத்துக்கொள்ளும் வருமானப் பகுதியைக் குறிக்கும்.

நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) உயரும்போது, நாட்டின் வருமானமும் (GNI) அதே அளவிற்கு உயர்ந்து விடுகிறது; இவ்வாறு உயரும் ஒவ்வொரு டாலர் வருமானத்திலும் ஒரு பகுதி தொழில் சேமிப்பாகவும், எஞ்சிய பகுதி செலவிடக்கூடிய சொந்த வருமானமாகவும் செல்கிறது. செலவிடக்கூடிய சொந்த வருமானம் உயரும்போது, அதில் எவ்வளவு நுகரப்படும், எவ்வளவு சேமிக்கப்படும் என்பதை நுகர்வுச் சார்பு புலப்படுத்துகிறது. இதை விளக்குவதற்கு ஒரு சான்றைக் கையாள்வது நன்று.

அதிகரித்துள்ள நாட்டின் மொத்த வருமானம் (GNI = GNP) ஒரு டாலர் என்று வைத்துக் கொள்வோம். .... $ 1

(அ) இந்த ஒரு டாலரில் 40 சென்ட் மொத்தத் தொழில் இலாபமாகச் செல்லலாம்; அந்த 40 சென்டில் 15 செ. இலாப ஈவாகச் சென்றுவிடலாம்; அப்போது அந்த 15 செ. இலாப ஈவு செலவிடக் கூடிய சொந்த வருமானமாகச் செல்கிறது. எஞ்சியுள்ள 25 செ. மொத்தத் தொழில் சேமிப்பாக வைத்துக் கொள்ளப்படுகிறது. ... ·25

(ஆ) ஒரு டாலரில் மொத்தத் தொழில் இலாபமாகச் செல்லும் 25 செ. போக மீதி செலவிடக்கூடிய சொந்த வருமானமாக அதிகரிக்கிறது. ... ·75

(இ) செலவிடக்கூடிய சொந்த வருமானம் 75 செ. உயரும்போது அந்த 75 சென்டுமே நுகர்விற்காகப் பயன்படுத்தப்படாது; அதில் ஒரு பகுதி சேமிக்கப்படும். செலவிடக்கூடிய சொந்த வருமானத்தில் இறுதிநிலை நுகர்வு நாட்டம் ·80 என்றால் அதிகரிக்கக்கூடிய நுகர்வுச் செலவு (·85 × ·75). ... ·60

இவ்விதத் தொடர்புகளைக் கொண்டு ஒன்று கூறலாம். அதாவது, நாட்டின் மொத்த உற்பத்தியோடு நுகர்வு இரண்டு வழிகளில் பிணைக்கப்படுகிறது.

- நாட்டின் மொத்த உற்பத்தி அளவு (GNP = GNI) ஒவ்வொன்றிலும் ஒரு பகுதி செலவிடக்கூடிய சொந்த வருமானமாகும்.
- செலவிடக்கூடிய சொந்த வருமானத்தின் அளவு ஒவ்வொன்றிலும் ஓரளவு நுகர்விற்காகச் செலவிடப்படுகிறது.

நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) அளவு மாறும்போது, நுகர்வு எவ்வளவு மாறும் என்பது இவ்விரு தொடர்புகளாலும் நிர்ணயிக்கப்படுகிறது. எனினும், பொதுவாகக் கூறின், நாட்டின் மொத்த உற்பத்தி எவ்வளவு அதிகரிக்கின்றது அல்லது குறைகின்றதோ அதைக் காட்டிலும் குறைவாகத்தான் நுகர்வு அதிகரிக்கும் அல்லது குறையும்.

செலவிடக்கூடிய சொந்த வருமானம் மாறும்போது, நுகர்வுச் செலவும் மாறுவதைத்தான் இறுதி நிலை நுகர்வு நாட்டம் (MPC) என அழைக்கின்றோம். நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) மாறும்போது நுகர்வும் மாறுகிறது; எனவே, இதை நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பு என்றும், இம் மாறுபாட்டின் இறுதிநிலை மதிப்பை MPC $_g$ என்றும் வைத்துக் கொள்வோம்.

நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பை படம் 3–7 புலப்படுத்துகிறது. நாட்டின் மொத்த உற்பத்தியும் வருமானமும் (GNP and GNI) உயரும்போது, செலவிடக்கூடிய சொந்த வருமானமும் உயர்வதை இடைவெளியுள்ள கோடு காட்டுகிறது. செலவிடக்கூடிய சொந்த வருமானக் கோட்டிற்கும் 45° வருமானக் கோட்டிற்கும் இடையேயுள்ள

செங்குத்தான இடைவெளி மொத்தத் தொழில் சேமிப்பை அளவிடுகிறது. நாட்டின் மொத்த வருமானத்திற்கும் செலவிடக்கூடிய சொந்த வருமானத்திற்குமுள்ள வேறுபாடுதான் மொத்தத் தொழில் சேமிப்பாகும். எனவே, நாட்டின் மொத்த வருமானம் உயர உயர, இந்த வேறுபாடும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. அதேபோல், நுகர்வுச் சார்பிற்கும் செலவிடக்கூடிய சொந்த வருமானக் கோட்டிற்குமிடையேயுள்ள செங்குத்தான இடைவெளிதான் சொந்தச் சேமிப்பாகும். உற்பத்தி செய்யப்படும் நாட்டின் மொத்த உற்பத்தி OK (அல்லது EK) அளவுக்குச் சமம்; எனவே நாட்டின் மொத்த வருமானமும் இதே அளவுதான். இந்த அளவு உற்பத்தியாகும்போது, மொத்தத் தொழில் சேமிப்பு EG அளவும், செலவிடக்கூடிய சொந்த வருமானம் GK அளவுமாக உள்ளன. செலவிடக்கூடிய சொந்த வருமானத்தில் நுகர்வு FK அளவாகும்; எஞ்சியுள்ள EF நுகரப்படாத மொத்த வருமானத்தைக் குறிப்பிடுகிறது; அதாவது நுகரப்படாத மொத்த வருமானம் (EF) = மொத்தத் தொழில் சேமிப்பு (EG) + சொந்தச் சேமிப்பு (FG) என்றாகிறது.



படம் 8–7 நுகர்வு–நாட்டின் மொத்த உற்பத்தித் தொடர்பும் மொத்தத் தொழில் சேமிப்பும் நாட்டின் சமநிலை உற்பத்தியும்

நாட்டின் சமநிலை உற்பத்தி OK அளவாகும். தொழில் சேமிப்பும் (EG) சொந்தச் சேமிப்பும் (FG) சேர்ந்துதான் மொத்த முதலீட்டிற்குச் சமமாகிறது. வேலை நிறைவுள்ள சமநிலையை அடைய வேண்டுமாயின், வேலை நிறைவின்போது

ஆக்கப்படும் நாட்டின் மொத்த உற்பத்தியிலிருந்து (GNP) வரும் மொத்தத் தொழில் சேமிப்பும் சொந்தச் சேமிப்பும் சேர்ந்து முதலீட்டிற்குச் சரிசமமாக இருக்கவேண்டும். எனவே, முன்பு நாம் குறிப்பிட்டபடி இங்கும் நாட்டின் மொத்த உற்பத்தி நிர்ணயமாவதன் அடிப்படை விதிகள் மாறுமல் அப்படியேதான் உள்ளன. அதாவது, எந்த அளவு உற்பத்தியில் தொகுதேவை உற்பத்தி அளவுக்குச் சமமாகவும், நுகர்விற்காகச் செலவிடப் படாத வருமானம் (சேமிப்பு) முதலீட்டிற்குச் சமமாகவும் இருக்குமோ அந்த அளவிற்குத்தான் உற்பத்தி நடைபெற முற்படும். சற்று முன்னர் நாம் பார்த்த மிக எளிமையான சான்றுக்கும் இதற்கும் ஒரே ஒரு வேறுபாடுதான்; அதாவது இந்தச் சான்றின்படி, மொத்தச் சேமிப்பில் நுகர்வோரின் சொந்தச் சேமிப்போடு தொழில் சேமிப்பும் சேர்ந்துவிடுகிறது. இப்போது, சேமிப்பு அதிக அளவாகிவிடுவதால் நாட்டின் மொத்த வருமானத்தில் (GNI) நுகரப்படும் அளவு முன்பை விடக் குறைந்து விடுகிறது. எனவே, அதிகரித்துள்ள சேமிப்பின் அளவிற்கு முதலீடும் அதிகரித்தால்தான் நாட்டின் மொத்த உற்பத்தியும் தொகு தேவையும் சரிசமமாக இருக்கமுடியும்.

சமநிலை உற்பத்தியில் அரசாங்கச் செலவும் வரியும்

நாட்டின் மொத்த உற்பத்தி நிர்ணயம் பற்றிய ஆய்வில் இது வரை அரசாங்கமே இல்லையென்று வைத்துக்கொண்டோம். இப் போது, நமது ஆய்வை விரிவுபடுத்தி, அரசாங்க வரிகளும் செலவு களும் பங்கு கொள்ளும்போது, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) எப்படி மாறுகிறது என்பதை ஆராய்வோம். நமது பழைய சான்றுகளில் இரண்டு மாறுதல்கள் இப்போது தேவைப் படுகின்றன: ஒன்று, நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்கு முள்ள தொடர்பினை அளவிடும்போது, நாட்டு வருமானத்தி லிருந்து (GNI) அரசாங்க வரிகளாக வழிந்தோடும் பகுதியைக் கணக்கிடவேண்டும்; இரண்டாவது, அரசாங்கம் வாங்கும் பொருள்களையும் பணிகளையும் தொகு தேவையில் சேர்க்க வேண்டும்.

வரிகள்

நாட்டின் மொத்த வருமானம் என்பது மொத்தத் தொழில் சேமிப்பு, செலவிடக்கூடிய சொந்த வருமானம் ஆகிய இரண்டு இனங்களை மட்டும் கொண்டதாக இதுவரை ஆராய்ந்தோம். இப்போது, அரசாங்க வரிகளையும் கொண்டதாக ஆராய

வேண்டும். செலவிடக்கூடிய சொந்த வருமானத்தின் அளவைக் கணக்கிடுவதற்கு நாட்டின் மொத்த வருமானத்திலிருந்து (GNI) மொத்தத் தொழில் சேமிப்பை மட்டும் கழித்தால் போதாது; அரசாங்கத்திற்குச் செலுத்தப்படும் வரிகளையும் சேர்த்துக் கழிக்கவேண்டும்.

அரசாங்க வரிகள் சொந்த வருமானம், தொழில் வருமானம், விற்பனை அளவு ஆகியவற்றின்மீதுதான் பெரும்பாலும் விதிக்கப் படுகின்றன; எனவே, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) உயரும்போதும் தாழும்போதும் அரசாங்கம் பெறும் வரி வருவாயும் உயர்கின்றது அல்லது தாழ்கின்றது. நாட்டின் வரிச் சட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்க, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) மாறும்போது, வரி வருவாய் எப்படி மாறும் என்பதை நாம் முன்கூட்டியே கூறிவிடமுடியும். எனவே, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) அதிகரிக்கும்போது, அதிகரித்துள்ள அளவில் ஒரு பகுதி மொத்தத் தொழில் சேமிப்பிற்கும், மற்றொரு பகுதி வரி வருவாயாக அரசாங்கத்திற்கும், எஞ்சிய பகுதி செலவிடக் கூடிய சொந்த வருமானமாகக் குடும்பங்களுக்கும் செல்கின்றன.[5] அடுத்து, செலவிடக்கூடிய சொந்த வருமானம் எவ்வளவு அதிகரித்துள்ளதோ, அதில் ஒரு பகுதி நுகர்வை அதிகரிக்கவும், எஞ்சிய பகுதி சேமிப்பை வளர்க்கவும் பயன்படுகிறது. இப்போது நமது சான்றில், வரிகள் சேர்க்கப்படுவதாக வைத்துக் கொள்வோம். அதனால் நாட்டின் மொத்த உற்பத்தி மாறும் போது, செலவிடக்கூடிய சொந்த வருமானமும், அவ் வருமானத் தைச் சார்ந்துள்ள நுகர்வும் வரி இல்லாமலிருந்தால் எவ்வளவு மாறியிருக்குமோ அதைக் காட்டிலும் குறைவாகத்தான் இப் போது மாறுகின்றன. வரிகளினால் இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC_g) எப்படிப் பாதிக்கப்படுகிறதென்பதை முன்னர் பயன் படுத்திய சான்றில் ஒரு மாறுதலை மட்டும் புகுத்தி விளக்கலாம்.

நாட்டின் மொத்த வருமானம் (GNP = GNI)
ஒரு டாலர் அதிகரிப்பதாக வைத்துக்
கொள்வோம் ... $ 1.00

(அ) மொத்தத் தொழில் சேமிப்பு 25 செ.
அதிகரிக்கலாம். ... ·25

(ஆ) அரசாங்க வரி வருவாய் 20 செ.
அதிகரிக்கும். ... ·20

5. அரசாங்கம் தன் வருவாயில் ஒரு பகுதியை நுகர்வோருக்குக் கைமாற் றும்போது வரியின் விளைவுகள் மிதமாக்கப்பட்டு விடுகின்றன. எனவே, இவ் வருவாய் மாற்றத்தை எதிர்க்கணிய வரிகளாகப் பாவித்து, நிகர வரி வருவாயை மட்டுமே பின்வரும் சான்றுகளில் பயன்படுத்துவோம்.

(இ) அதிகரித்துள்ள 1 டாலர் நாட்டு வருமானத்தில் மொத்தத் தொழில் சேமிப்பும் (25 செ.), அரசாங்க வரியும் (20 செ.) போக எஞ்சியதுதான் செலவிடக் கூடிய சொந்த வருமானமாகும். இச் சொந்த வருமானம் உயரும் அளவு (1·00 — ·25 — ·20) ... ·55

(ஈ) செலவிடக்கூடிய சொந்த வருமானம் அதிகரித்துள்ள அளவிற்கு நுகர்வு அதிகரிக்காது. இறுதி நிலை நுகர்வு நாட்டம் ·80 என இருந்தால் நுகர்வு உயரும் அளவு (·80 × ·55) ... ·44

இவ்வாறாக, நமது சான்றில் அரசாங்கத்தின் வரிகளைப் புகுத்தும்போது நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்கு முள்ள தொடர்பு மாறிவிடுகிறது. நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) எவ்வளவு அதிகரித்துள்ளதோ அதில் ஒரு பகுதி இப்போது உயர்த்தப்பட்டுள்ள வரிகளாகிவிடுகின்றது; இதனால் செலவிடக்கூடிய சொந்த வருமானமும், நுகர்வும் முன்பைவிடச் சிறிதளவுதான் அதிகரிக்கின்றன. எனவே, படம் 3–7-லுள்ள C கோடு கீழே இறங்கிவிடுகிறது (ஏனெனில் நாட்டின் மொத்த உற்பத்தி அளவு ஒவ்வொன்றிலும் நுகர்வின் அளவு முன்பைவிடக் குறைந்துவிடுகிறது); அதோடு, C கோடு முன்பைவிடத் தட்டையாகவும் ஆகிவிடுகிறது (ஏனெனில் நாட்டின் மொத்த உற்பத்தி மாறும்போது, முன்பைவிடக் குறைவாகத்தான் நுகர்வு மாறுகிறது).

அரசாங்கக் கொள்முதல் (Government Purchases)

அரசாங்கம் வரிகளை விதிக்கும்போது நுகர்வுச் செலவும் தொகு தேவையும் குறைய முற்படுகின்றன; ஆனால் அரசாங்கம் பொருள்களையும் பணிகளையும் வாங்கும்போது தொகு தேவை அதிகமாகிவிடுகிறது. இப்போது தொகு தேவை நுகர்வு, முதலீடு, அரசாங்கக் கொள்முதல் ஆகிய மூன்று இனங்களால் உருவாக்கப்படுகிறது. எனவே, நுகர்வுச் செலவு, முதலீட்டுச் செலவு, அரசாங்கச் செலவு ஆகிய மூன்றும் உற்பத்தி அளவுக்குச் சமமாயிருக்கும் நிலையில்தான் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) நிலைக்க முற்படும். நாட்டு வருமானத்தில் நுகர்விற்கென்று செலவிடப்படாத பகுதி (தொழில் சேமிப்பு, சொந்தச் சேமிப்பு, வரிகள்) முதலீட்டுச் செலவிற்கும் அரசாங்கச்

செலவிற்கும் சமமாகின்ற நிலையில்தான், தொகு தேவை மொத்த உற்பத்திக்குச் சமமாகும். சுருங்கக் கூறின், மொத்தச் சேமிப்பும் வரியும் சேர்ந்து முதலீட்டுச் செலவுக்கும் அரசாங்கச் செலவுக்கும் சமமாயிருந்தால்தான் தொகு தேவையும் மொத்த உற்பத்தியும் சரிசமமாக இருக்கும்.

நமது ஆய்வில் அரசாங்கத்தைப் புகுத்தும்போது நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) எப்படி நிர்ணயமாகிறதென்பதை படம் 3–8 காட்டுகிறது. நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள புதிய தொடர்பை C கோடு காட்டுகிறது. அதோடு, நாட்டின் மொத்த வருமானத்திலிருந்து (GNI) வரிகள், தொழில் சேமிப்பு, சொந்தச் சேமிப்பு என்று கசிந்தோடும் பகுதியைப்



படம் 3-8 சமநிலை மட்டத்தில் நாட்டின் மொத்த உற்பத்தி (அரசாங்கம் உட்பட)

பிரதிபலிப்பதாகவும் இக்கோடு உள்ளது. எனவே, படம் 3–7 -லிருப்பதைக்காட்டிலும் இக்கோடு தாழ்வாகவும் தட்டையாகவும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தொகு தேவையைக் காட்டும் C+I கோடு அரசாங்கக் கொள்முதலையும் கொண்ட

தொகு தேவையைப் புலப்படுத்த வேண்டும்; எனவே, அரசாங்கக் கொள்முதலையும் கொண்ட தொகு தேவைப் பட்டியலைக் குறிப்பிடும் வகையில் இக்கோட்டிற்கு C+I+G என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இப் படத்தில் நாட்டின் மொத்த உற்பத்தி மட்டத்தில் தொகு தேவையும் உற்பத்தியும் சமமாகின்றன; எனவே, இந்த மட்டத்தில்தான் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) நிலைக்க முற்படும். இந்த நிலையில்தான் நாட்டின் மொத்த வருமானத்தில் (GNI) நுகர்விற்குச் செலவிடப்படாத பகுதி (தொழில் சேமிப்பு, சொந்தச் சேமிப்பு, வரிகள் ஆகிய மூன்றும்) முதலீட்டுச் செலவிற்கும் அரசாங்கச் செலவிற்கும் (I+G) சரிசமமாகின்றது.

பெருக்கி
(Multiplier)

முதலீட்டுச் செலவும் அரசாங்கச் செலவும் மாறுமல் அப்படியே இருக்கும்போது, சமநிலை மொத்த உற்பத்தி (Equilibrium GNP) எப்படி நிர்ணயமாகிறது என்பதை ஆராய்ந்தோம். முதலீட்டுச் செலவும் அரசாங்கச் செலவும் மாறினால் என்ன ஆகும்? முதலீட்டுச் செலவும் அரசாங்கச் செலவும் அதிகரித்தால் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) அதிகரிக்கும்; குறைந்தால் மொத்த உற்பத்தியும் குறையும் என்பது வெளிப்படை. I முதலீட்டுச் செலவையும் G அரசாங்கச் செலவையும் குறிப்பிடுவதாக வைத்துக்கொள்வோம். I + G குறிப்பிட்டதோர் அளவு மாறும்போது, அதைக் காட்டிலும் அதிக அளவில் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) மாறுகிறது என்பதை படம் 3 – 8 அல்லது 3 – 2-ன் பட்டியலைப் பார்த்தால் தெரியும். சான்றாக, 3 – 2 பட்டியலையே எடுத்துக்கொள்வோம். இப் பட்டியலில் முதலீட்டுச் செலவு மாறுமல் 80 பில்லியன் டாலராகவே இருப்பதாக வைத்துக் கொண்டோம்; அப்படி மாறுமல் இருக்கும்போது நாட்டின் சமநிலை உற்பத்தி 550 பில்லியன் டாலராக இருந்தது. ஆனால், இப்போது முதலீட்டுச் செலவு 80 பில்லியனிலிருந்து 100 பில்லியன் டாலர் அதிகரிப்பதாக வைத்துக் கொள்வோம்; அப்படி அதிகரிக்கும்போது நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) அதே 20 பில்லியன் டாலர் அதிகரிப்பதில்லை; மாறாக, 50 பில்லியன் அதிகரித்து, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) 600 பில்லியன் டாலராக ஆகிவிடுகிறது. இவ்வாறாக, நாட்டின் மொத்த உற்பத்தியும் வருமானமும் 600 பில்லியன் டாலராக உயரும்போது, நுகர்வுச் செலவு 500 பில்லியன் டாலராக ஆகிறது; எனவே, முதலீட்டுச்

செலவு 100 பில்லியன் டாலராக இருப்பதால், தொகு தேவை 600 பில்லியன் டாலராகிறது. அதாவது, தொகு தேவையும் நாட்டின் மொத்த உற்பத்தியும் சரிசமமாகி விடுகின்றன. இவ்வாறுக, முதலீடு செய்வோர் தம் முதலீட்டுச் செலவை 20 பில்லியன் டாலர் அதிகரித்தால் தொகு தேவையும் 50 பில்லியன் டாலர் அதிகரிக்கின்றது. நாட்டின் மொத்த உற்பத்தியும் 50 பில்லியன் டாலர் அதிகரிக்கின்றது.

இவ்வாறுக, முதலீட்டுச் செலவு (அல்லது அரசாங்கச் செலவு) சிறிதளவு அதிகரிக்கும்போது நாட்டின் மொத்த உற்பத்தி பெருக்கல் முறையில் அதிகரிப்பதற்குக் காரணம் என்ன? மொத்த வருமானம் உயரும்போது, நுகர்வுச் செலவும் அதிகரிப்பதுதான் இதற்குக் காரணமாகும். நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பின் அடிப்படையில் இறுதி நிலை நுகர்வு நாட்டம் (MPC_g) எப்போதும் ஒன்றுக்குக் குறைவாகவும் பூஜ்யத்திற்கு அதிகமாகவும்தான் இருக்கிறது. இதன் விளைவாக, தொகு தேவை ஓரளவு அதிகரிப்பதால், மொத்த உற்பத்தியும் வருமானமும் உயர்ந்து, மறுபடியும் தொகு தேவையை அதிகரிக்கச் செய்கிறது; இப்படியே வருமானம் சிறிதளவு உயரும்போது, நுகர்வுச் செலவும் அதிகரித்து, நுகர்வுச் செலவு அதிகரிப்பதால் உற்பத்தியும் வருமானமும் மறுபடியும் உயர்ந்து, இப்படி மாறி மாறிச் செயல்படுகின்றன. சான்றுக, முதலீட்டுச் செலவு 20 பில்லியன் டாலர் அதிகரித்தால், தொழில் நிறுவனங்கள் தமக்குத் தேவையான இயந்திர சாதனங்களையும் மற்ற உற்பத்தித் தளவாடங்களையும் மேலும் 20 பில்லியன் டாலருக்கு வாங்க முற்படுகின்றன என்றுதான் பொருள். எனவே, அவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தம் இயந்திர சாதனங்களுக்கும் உற்பத்தித் தளவாடங்களுக்கும் 20 பில்லியன் டாலர் தேவை அதிகரித்துள்ளதை உணர்ந்து, தம் உற்பத்தி அளவையும் 20 பில்லியன் டாலர் அதிகரிக்க முற்படுகின்றன. அவ்வாறு அந்நிறுவனங்கள் முதற்கருவிப் பொருள்களை அதிகரிக்கும்போது, அதன் வழியாக மேலும் 20 பில்லியன் டாலர் வருமானம் உருவாக்கப்படுகிறது. உருவாக்கப்படும் இந்த வருமானம், பெரும்பாலும் ஊதிய வருமானத்தையும் இலாப வருமானத்தையும் அதிகரித்து விடுகின்றது. இப்படியாக வருமானம் உயரும்போது, மறுபடியும் நுகர்வுச் செலவு அதிகமாக முற்படுகிறது. சான்றுக, இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC_g) ·6 ஆக இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது முதற் கருவிப் பொருள்களின் உற்பத்தியை 20 பில்லியன் டாலர் அதிகமாக்கும்போது, வருமானமும் 20 பில்லியன் டாலர்

அதிகரித்துவிடுகிறது; 20 பில்லியன் டாலர் அதிகரித்துள்ள வருமானத்தால் நுகர்வுச் செலவும் 12 பில்லியன் டாலர் அதிகரிக்கிறது. இதனால் மேலும் 12 பில்லியன் டாலர் வருமானம் உயர்வதால், நுகர்வுப் பொருள்களின் உற்பத்தி இன்னும் அதிகரிக்கிறது; இது மேலும் நுகர்வுச் செலவை (·6 × 12 பில்லியன் டாலர் அல்லது 7·2 பில்லியன் டாலர்) அதிகரிக்கிறது.

இவ்வாறு, செலவும் உற்பத்தியும் சிறிதளவு அதிகரிக்கத் தொடங்கிவிட்டால், இவை இரண்டும் ஒன்றையொன்று மாறி, மாறி அதிகரிக்கச் செய்து, 'சங்கிலித் தொடர்' போன்ற விளைவை ஏற்படுத்திவிடுகின்றன. அதாவது, உயர்ந்த செலவு உற்பத்தியை உயர வைக்கிறது; உயர்ந்த உற்பத்தி வருமானத்தையும் உயர்த்தி மீண்டும் நுகர்வுச் செலவை அதிகரிக்கச் செய்கிறது. எனினும், செலவும் வருமானமும் ஒன்றையொன்று மாறி மாறி அதிகரிக்கச் செய்யும்போது, அதிகரித்துக் கொண்டிருக்கும் செலவும் வருமானமும் படிப்படியாகக் குறைந்து கொண்டே செல்வதை மறந்துவிடக் கூடாது. ஏனெனில், நாட்டின் மொத்த வருமானம் (GNI) அதிகரிக்கும்போது, அதிகரித்துள்ள வருமானம் முழுவதும் நுகர்வோருக்குச் செல்வதில்லை; அதோடு, அதிகமாகக் கிடைக்கின்ற வருமானத்தையும் நுகர்வோர் அப்படியே செலவிடுவதில்லை; அதில் ஒரு பகுதியைச் சேமிக்கின்றனர். இவ்வாறுக, வருமானம் அதிகரிக்க அதிகரிக்க, அதிகரித்துள்ள வருமானத்தில் ஒரளவுதான் மறுபடியும் செலவிடப்படுகிறது. இதனால் அதிகரித்துக் கொண்டே செல்லும் வருமானத்தில் நுகர்விற்காகச் செய்யப்படும் செலவு படிப்படியாகக் குறைந்துகொண்டே செல்வதால், நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) அதிகபட்சம் எவ்வளவு உயரும் என்பதற்கு ஒரு வரம்பு ஏற்பட்டுவிடுகிறது.

முதலீட்டுச் செலவு அல்லது அரசாங்கச் செலவு ஒரளவு அதிகரிப்பதால் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) எவ்வளவு அதிகரிக்குமென்பதை பின்வருமாறு அளவிடலாம். (நமது அளவீட்டில் Δ என்னும் குறி 'மாறுதலைக்' குறிப்பிடும்; சான்றாக ΔI என்றால் முதலீட்டுச் செலவில் ஏற்படும் மாறுதல் என்று பொருள்.)

1. முதலீட்டுச் செலவு 20 பில்லியன் டாலர் அதிகரிப்பதாக வைத்துக் கொள்வோம் ($\Delta I = 20$). இதனால் இயந்திர சாதனங்களும் மற்ற உற்பத்தித் தளவாடங்களும் அதிகமாக உற்பத்திச் செய்யப்படும்போது, வருமானமும் உடனடியாக அதிகரிக்கிறது. இவ்வாறு அதிகரித்துள்ள வருமானம், அதிக அளவில் உற்பத்தி

செய்யப்பட்டுள்ள இயந்திர சாதனங்கள், தளவாடங்களின் மதிப்பிற்குச் சமமாகத்தான் இருக்கும்.

$$\Delta I = 20$$

2. இறுதி நிலை நுகர்வு நாட்டம் (அரசாங்கமும் உட்பட, MPC_g) ·6 என்று ($\Delta C = \cdot 6 \Delta GNP$) வைத்துக் கொள்வோம். முதன்முதலில் அதிகரித்துள்ள வருமானம் நுகர்வுச் செலவையும் அதிகரிக்கும்; அதிகரித்துள்ள நுகர்வுச் செலவு மறுபடியும் உற்பத்தியையும் வருமானத்தையும் அதிகரிக்கச் செய்யும். எவ்வளவு அதிகரிக்குமென்பது கீழேயுள்ளது.

$$\cdot 6 \times 20 = 12$$

3. இரண்டாம் முறையாக உயர்ந்துள்ள வருமானம் மறுபடியும் நுகர்வுச் செலவை எவ்வளவு அதிகரிக்கிறது எனின்,

$$\cdot 6 \times 6 \times 20 = \cdot 36(20) = 7 \cdot 2$$

4. இவ்வாறுக, வருமானம் அதிகரிக்கும்போது, அதிகரித்துள்ள வருமானத்தில் ஒரு பகுதி நுகர்வுப் பொருள்களுக்காகச் செலவிடப்படுவதும், இச் செலவீடு மறுபடியும் வருமானத்தை உயர்த்துவதுமாய் மாறிமாறிச் செயல்படுகிறது. அவ்வாறு செயல்படும்போது, ஒவ்வொரு முறையும் அதிகரிக்கின்ற வருமானங்கள் அனைத்தையும் கூட்டினால் எவ்வளவு கிடைக்குமோ, அந்த அளவு நாட்டின் மொத்த உற்பத்தி அதிகரிக்கும். அதாவது :

Δ GNP = 20 (செலவிலும் உற்பத்தியிலும் தொடக்கத்தில் ஏற்பட்ட மாறுதல்)

+ ·6(20) [= 12 அல்லது 32 இரண்டாம் சுற்றின் இறுதியில் மொத்தம்]

+ ·36(20) [= 7·2 அல்லது 39·6 மூன்றும் சுற்றின் இறுதியில் மொத்தம்]

+ ·22(20) [= 4·4 அல்லது 43·6 நான்காம் சுற்றின் இறுதியில் மொத்தம்]

+ ·14(20) [= 2·8 அல்லது 46·4 ஐந்தாம் சுற்றின் இறுதியில் மொத்தம்]

+ ·08(20) [= 1·6 அல்லது 48·0 ஆறும் சுற்றின் இறுதியில் முதலிய மொத்தம்]

ஆக 50

Δ GNP = 50 (சமநிலை மொத்த உற்பத்தியில் அதிகரித்துள்ளது)

5. சங்கிலித் தொடர்களின் எண்ணிக்கை எண்ண முடியாத அளவிற்கு அதிகரிக்கும்போது, பெருக்குத் தொடரின் சூத்திரப்படி நாட்டின் மொத்த உற்பத்தி (வருமான) உயர்வு எவ்வளவெனின்,

$$\Delta \text{ GNP} = \frac{1}{(1-\cdot 6)} (20) = \frac{1}{\cdot 4} (20) = 2\tfrac{1}{2} (20) = 50$$

இன்னும் பொதுவாகக் கூறின்,

$$\Delta \text{ GNP} = \frac{1}{1-\text{MPC}_g} \Delta \text{ I}$$

இவ்வாறுக, முதலீட்டுச் செலவில் சிறிதளவு மாறுதல் ஏற்படும்போது நாட்டின் மொத்த உற்பத்தி அதைப்போல் பன்மடங்கு மாறுகிறது. எனவே, முதலீட்டுச் செலவில் ஏற்படும் சிறு மாறுதலால் நாட்டின் மொத்த உற்பத்தி எந்த விதத்தில் மாறுதல் அடைகிறதோ அதைத்தான் பெருக்கி என அழைக்கின்றோம்.

மேற்கூறிய சான்றிலிருந்து பெருக்கியை $\frac{1}{1-\text{MPC}_g}$ என்று கணக்கிடலாம். மேலும், நிகர வரிகள், தொழில் சேமிப்பு, சொந்தச் சேமிப்பு ஆகியவை உட்பட MPS_g என்பதையும் வரையறுக்கலாம்; அதாவது நாட்டின் மொத்த வருமானத்தில் (GNI) இறுதி நிலைச் சேமிப்பு நாட்டம்தான் MPS_g ஆகும். அவ்வாறாயின்,

$\text{MPC}_g + \text{MPS}_g = 1$ என்றாகிறது; அல்லது

$\text{MPS}_g = 1 - \text{MPC}_g$ என்று ஆகிறது.

எனவே, நாட்டின் மொத்த வருமானத்தில் இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் (MPS_g) எவ்வளவோ, அதைத் தலைகீழாக மாற்றினால் பெருக்கி எவ்வளவு என்று தெரியும். அதாவது,

$$\text{பெருக்கி} = \frac{1}{\text{MPS}_g}.$$

மேற்கூறிய சான்றிலிருந்து பெருக்கியின் எண் $2\frac{1}{2}$ என்றாகிறது. முதலீட்டுச் செலவிலும் அரசாங்கச் செலவிலும் ஏற்படுகின்ற ஒரு சிறு மாற்றத்தினால் மொத்த உற்பத்தியும் வருமானமும் எவ்வளவு மாறுதல் அடையும் என்பது பெருக்கியைப்

பொருத்தது. பெருக்கி பெரிய எண்ணிக்கை இருந்தால் மொத்த உற்பத்தியும் வருமானமும் பெருமளவில் மாறுதல் அடையும். பெருக்கியின் எண் எப்படி இருக்குமென்பது இறுதி நிலை நுகர்வு நாட்டத்தின் (MPC_g) தீவிரத்தைப் பொருத்தது. இவ்வாறாக, இயற்கணித வாயிலாகக் கிடைக்கும் முடிவு நமது பொது அறிவு புலப்படுத்தும் முடிவை ஊர்ஜிதப்படுத்துவதாய் உள்ளது. இறுதி நிலை நுகர்வு நாட்டம் (MPC_g) 1-க்குச் சமீபத்தில் (சான்றாக ·99ஆக) இருக்குமாயின், அதிகரித்துள்ள வருமானம் பெரும்பாலும் நுகர்வுப் பொருள்களில்தான் செலவிடப்படும்; அப்போது, தொடர்ந்து மாறி மாறி ஏற்படும் வருமான உயர்வு→ செலவு உயர்வு → வருமான உயர்வு படிப்படியாகத் தேய்ந்து கொண்டே சென்று முடிவடையும்; பெருக்கியும் மிகப் பெரிய எண்ணிக்கை இருக்கும். மாறாக, இறுதி நிலை நுகர்வு நாட்டம் (MPC_g) மிகச் சிறிய அளவிலிருந்தால் — கூடுதலாகும் வருமானத்தில் பெரும் பகுதி வரிகளாலும் சேமிப்பாலும் ஈர்க்கப்பட்டு விடுவதால் — அதிகரித்துள்ள வருமானத்தில் மிகச் சிறிய பகுதிதான் நுகர்வுப் பொருள்களுக்காகச் செலவிடப்படும்; எனவே, வருமான உயர்வு → செலவு உயர்வு → வருமான உயர்வு என்று மாறி மாறித் தோன்றும்போது உயர்ந்து வரும் வருமானமும் செலவும் மிக விரைவாகக் குறைந்து செல்லும்; நாட்டின் மொத்த உற்பத்தியும் சிறிதளவுதான் அதிகரிக்கும். பெருக்கியோ மிகச் சிறிய எண்ணிக்கைத்தான் அமையும். பெருக்கி இரண்டு வழிகளிலுமே செயல்படக்கூடியது என்பதை மறந்துவிடக் கூடாது. அதாவது, முதலீட்டுச் செலவு குறையும்போதும் எந்த அளவு அச் செலவு குறைகிறதோ அதைக் காட்டிலும் பன்மடங்கில் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) குறைந்துவிடும்.

முதலீட்டுச் செலவு சிறிதளவு அதிகரிக்கப்பட்டாலும் நாட்டின் சம நிலை உற்பத்தி அளவு எப்படி மாறி, புதிய சம நிலை உற்பத்தி தோன்றுகிறது என்பதை படம் 3 – 9 காட்டுகிறது. இப் படத்தில் "1. பழைய சமநிலை" என்ற முதல் படத்தைப் பாருங்கள், நாட்டின் சமநிலை உற்பத்தி (550 மில்லியன் டாலராக இருக்கும்போது) E புள்ளியில் ஏற்படுகிறது; இப் புள்ளியில்தான் தொகு தேவையும் உற்பத்தி அளவும் சமமாகின்றன. இப்போது, முதலீட்டுச் செலவு 20 மில்லியன் டாலர் அதிகரிப்பதாக வைத்துக்கொள்வோம். "2. புதிய சமநிலை" என்ற இரண்டாம் படத்தைப் பாருங்கள். அவ்வாறுயின், புதிய தொகு தேவைப் பட்டியல் கோடு மேல் நோக்கி நகர்ந்து விடுகிறது. பெருக்கி $2\frac{1}{2}$ ஆக இருக்கும்போது, முதலீட்டுச் செலவு 20 மில்லியன் டாலர் அதிகரித்துள்ளதால் நாட்டின்

1. பழைய சமநிலை



2. புதிய சம நிலை (முதலீடு 20 மில்லியன் டாலர் அதிகரித்த பின்



படம் 5-9 படத்தின் வாயிலாகப் பெருக்கி

மொத்த உற்பத்தி 50 பில்லியன் டாலர் அதிகரித்து விடுகிறது. இந்நிலையில் புதிய சமநிலை E' புள்ளியில் ஏற்படுகிறது. இச் சமநிலையில் தொகு தேவையும் 50 பில்லியன் டாலர் அதிகரித்து, மொத்த உற்பத்திக்குச் சரிசமமாகி விடுகிறது. முதலீட்டுச் செலவு 20 பில்லியன் டாலர் உயர்ந்து விட்டது; இதனால் நுகர்வுச் செலவும் தூண்டப்பட்டு 30 பில்லியன் டாலர் அதிகமாகியுள்ளது. ($MPC_{\frac{3}{5}}$ என்பதால் நாட்டின் மொத்த உற்பத்தி 50 பில்லியன் டாலர் அதிகரித்துள்ளபோது நுகர்வுச் செலவும் 30 பில்லியன் டாலர் அதிகமாகிறது.) மாறுக, முதலீட்டுச் செலவு குறையுமாயின், இதற்கு நேர்மாறான விளைவுகள் ஏற்படும்.

செலவில் சிறிதளவு மாறுதல் ஏற்பட்டாலும் அம் மாறுதலைப் போல் பன்மடங்கில் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) அதிகரித்து விடுகிறதென்பதை முதலீட்டுச் செலவைச் சான்றாகக் கொண்டுதான் இதுவரை ஆராய்ந்தோம். அரசாங்கச் செலவு மாறினாலுங்கூட இதே போன்ற தொடர் விளைவுகள்தான் ஏற்படும். வரிகள் மாறாமல் அப்படியே இருக்க, அரசாங்கத்தின் கொள் முதல் செலவு ஓரளவு அதிகரித்தால் தொகு தேவைப் பட்டியல் கோடு மேல்நோக்கி நகர்ந்து விடுகிறது; இதனால் சமநிலை உற்பத்தி அளவும் மாறி புதிய சமநிலை உற்பத்தி ஏற்படுகிறது. முதலீட்டுச் செலவில் எப்படியோ அப்படியேதான் அரசாங்கச் செலவும் சிறிதளவு அதிகரிக்கும்போது, அதைப்போல் பன்மடங்கில் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) உயர்ந்து விடுகிறது. 3 – 9 படத்தில் முதலீட்டுச் செலவிற்குப் பதிலாக அரசாங்கத்தின் செலவு 20 பில்லியன் டாலர் அதிகரிக்கின்றது என்று வைத்துக் கொண்டாலும், அதே விளைவுகள்தான் ஏற்படுகின்றன.

சொந்த வருமானம் மாறும்போதும் இதேபோன்றுதான். செலவிடக்கூடிய சொந்த வருமானம் ஒவ்வொரு டாலரிலும் நுகர்விற்காக முன்பைவிட அதிகமாகச் செலவிடும்போதும், நுகர்வுச் சார்பு உயர்ந்து தொகுதேவைப் பட்டியலை உயர்த்தி விடுகின்றது; இதன் விளைவாக, அதிகரித்துள்ள நுகர்வுச் செலவைப்போல் பன்மடங்கில் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) அதிகரித்துவிடுகிறது. சான்றாக, 1950 ஆம் ஆண்டு கோடை காலத்தில் கொரியாப் போர் தொடங்கியபோது, விலைவாசிகளெல்லாம் ஏறிவிடக் கூடுமென்றும், பங்கீட்டுமுறை (rationing) வந்துவிடுமென்றும் மக்கள் அனைவரும் பீதி அடைந்தனர்; அதனால் பெரும் பரபரப்புடன் பொருள்களை வாங்கத் தொடங்கினர். இதன் விளைவாக, அரசாங்கம் போர்த் தளவாடங்

கூட ஏராளமாக வாங்குவதற்குமுன்பே நுகர்வுச் சார்பு விரைவாக உயர்ந்து, நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) பெருமளவிற்கு அதிகரித்து விட்டது. இவ்வாறுக, நுகர்வோர் தம் செலவை அதிகரிக்கும்போதும் இத் தொடர் விளைவுகள் ஏற்பட்டு விடுகின்றன.

சுருங்கக் கூறின், அரசாங்கமோ, நுகர்வோரோ அல்லது முதலீடு செய்வோரோ தம் செலவை ஒரளவு மாற்றும்போது, தொகு தேவைப் பட்டியலும் மாற முற்படுகிறது; அதோடு, பெருக்கியின் வாயிலாக நாட்டின் மொத்த உற்பத்தியும் அதிகரித்துள்ள செலவைக் காட்டிலும் பன்மடங்கில் உயர்ந்து விடுகிறது. பெருக்கியின் எண் இறுதிநிலை நுகர்வு நாட்டத்தின் (MPC_c) அளவைப் பொருத்ததாகும். நாட்டின் மொத்த வருமானம் எவ்வளவு மாறியுள்ளதோ அதில் பெரும்பகுதி நுகர்வுச் செலவாக ஓடினால், பெருக்கியும் பெரிய அளவில் இருக்கும்.

வரி மாறுதல்கள்

அரசாங்கச் செலவு அதிகரிக்கும்போது தொகு தேவைப் பட்டியல் உயர்ந்து விடுவதோடு, நாட்டின் மொத்த உற்பத்தியும் அதிகரித்து விடுகிறது. அரசாங்கம் வரிகளை உயர்த்தும்போது, தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் முன்பைவிடக் குறைந்த அளவில்தான் பொருள்களை வாங்க முடியும்; இதனால் தொகு தேவைப் பட்டியல் இறங்கி விடுவதோடு, நாட்டின் மொத்த உற்பத்தியும் தாழ்ந்து விடுகிறது. வரிகளினால் தனிநபர்களிடமும் தொழில் நிறுவனங்களிடமும் உள்ள வருமானம் அரசாங்கத்திற்குப் போய்விடுகிறது. இதனால் மக்களின் வாங்கும் திறன் குறைந்து விடுவதோடு, பொருள்களையும் பணிகளையும் உற்பத்தி செய்யப் பயன்படும் சாதனங்களை அரசாங்கமே பயன்படுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டுவிடுகிறது. வரி உயர உயர, நாட்டின் மொத்த வருமானத்தில் (GNI) பெரும்பகுதி அரசாங்கத்திற்கே ஓடிவிடுகிறது; நுகர்வோருக்குக் கிடைக்கும் வருமானம் குறைந்துவிடுகிறது. (கார்ப்பரேஷன்களின் இலாபவரியும் தொழில் சேமிப்பையும் முதலீட்டையும் பாதிக்கின்றது; ஆனால் அதைப்பற்றி இவ் வதிகாரத்தில் ஆராய வேண்டிய அவசியமில்லை.) நுகர்வோரின் வருமானம் குறைந்துவிட்டால் நுகர்வுச் செலவும் குறைந்துவிடுகிறது. எனவே, வரிகள் உயர்த்தப்படும்போது, குறிப்பிட்டதோர் அளவிலுள்ள நாட்டின் மொத்த உற்பத்தியில் (GNP) நுகர்வுச் செலவின் அளவு

குறைந்துவிடும். வேறுவிதமாகக் கூறின், வரிகள் உயர்த்தப் படும்போது, நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பு தாழ்ந்து விடுகிறது; வரிகள் குறைக்கப்படும்போது உயர்ந்து விடுகிறது.

வரிகள் மாறுவதால் நுகர்வு எவ்வாறு பாதிக்கப்படுகின்ற தென்பதை 3 – 10 படம் காட்டுகிறது. நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பை, அதாவது, எந்தெந்த அளவு உற்பத்தியில் எந்தெந்த அளவு நுகரப்படுமென்பதை C_1 கோடு அளவிடுகிறது. நாட்டின் மொத்த வருமானத்தில் (GNI) தொழில் சேமிப்பாகவும் வரிகளாகவும் ஓடிவிடுகின்ற பகுதியை நுகர்விற்குப் பயன்படுத்த முடியாது; எனவே அப் பகுதியை C_1 கோடு பிரதிபலிப்பதில்லை. நாட்டின் மொத்த



படம் 3–10 வரிகள் மாறும்போது நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பு எப்படிப் பாதிக்கப்படுகிறது

உற்பத்தி (GNP) 500 பில்லியன் டாலராக இருக்கும்போது, அரசாங்கத்திற்கு நிகர வரிவருமானமாக 120 பில்லியன் டாலர் கிடைக்கும் வகையில் வரிகள் இருப்பதாக வைத்துக்கொள் வோம்; அதோடு நாட்டின் மொத்த வருமானத்தில் 60 பில்லியன் டாலர் தொழில் சேமிப்பாகவும், 320 பில்லியன் டாலர் செல விடக்கூடிய சொந்த வருமானமாகவும், செலவிடக்கூடிய சொந்த

வருமானத்தில் 280 பில்லியன் டாலர் நுகர்வுச் செலவாகவும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்படியானால் நமது அனுமானத்தின்படி,

நாட்டின் மொத்த உற்பத்தி (GNP = GNI)	:	$ 500
— வரிகள்	:	120
— மொத்தத் தொழில் சேமிப்பு	:	60
செலவிடக்கூடிய சொந்த வருமானம்	:	320
நுகர்வுச் செலவு	:	280

இப்போது, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) மாறுமல் அதே 500 பில்லியன் டாலராக இருக்கும்போது, மேலும் 10 பில்லியன் டாலர் வருமானம் கிடைக்கும் வகையில் அரசாங்கம் வரிகளை உயர்த்துவதாக வைத்துக் கொள்வோம். அப்படியானால், நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பின் கோடு 3 – 10 படத்தில் உள்ளதைப்போல C_0 மட்டத்திற்கு இறங்கிவிடுகிறது. நாட்டின் மொத்த வருமானமாகிய 500 பில்லியன் டாலரில் அரசாங்கம் இப்போது 10 பில்லியன் டாலர் அதிகமாக வரி வசூல் செய்து விடுகிறது; எனவே, செலவிடக்கூடிய நுகர்வோர் வருமானம் 10 பில்லியன் டாலர் குறைந்து விடுகிறது. அடுத்து, இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC) ·80 என்று வைத்துக் கொண்டால் நுகர்வுச் செலவு முன்பைவிட 8 பில்லியன் டாலர் குறைந்துவிடுகிறது. பழைய வரி முறைப்படி 500 பில்லியன் டாலர் நாட்டு வருமானத்தில் நுகர்வுச் செலவு 280 பில்லியன் டாலராக இருந்தது; இப்போது வரி அதிகரிக்கப்பட்டுவிட்டதால் அதே 500 பில்லியன் டாலர் நாட்டு வருமானத்தில் நுகர்வுச் செலவு 272 பில்லியன் டாலராகக் குறைந்துவிடுகிறது. அதாவது,

நாட்டின் மொத்த உற்பத்தி (GNP = GNI)	:	$ 500
— வரிகள்	:	130
— மொத்தத் தொழில் சேமிப்பு	:	60
செலவிடக்கூடிய சொந்த வருமானம்	:	310
நுகர்வுச் செலவு	:	272

இவ்வாறுகச், சொந்த வருமானத்தின் மீதுள்ள வரியை அரசாங்கம் உயர்த்தும்போது, நாட்டின் மொத்த வருமானத்தில் (GNI) நுகர்வுச் செலவின் அளவு குறைந்துவிடுகிறது. இவ்வித வரி உயர்வால் செலவிடக்கூடிய சொந்த வருமானம் குறைவதோடு மட்டுமன்றி, நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்கு

முள்ள தொடர்பும் கீழே வந்துவிடுகிறது. எனவே, பழைய வரி முறையிலிருந்த சமநிலை கெட்டுவிடுகிறது. பெருக்கியின் செயலாற்றலால் புதிய சமநிலை ஏற்படுகிறதெனினும், இப்புதிய உற்பத்திச் சமநிலை முன்பிருந்ததைக் காட்டிலும் தாழ்வாகத் தானிருக்கும்.

இதற்கு நேர்மாறாக, வரி குறைக்கப்படும்போது, நாட்டின் மொத்த வருமானத்தில் (GNI) நுகர்வின் பகுதி உயர்வதோடு, அதனால் நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பும் அதிகரித்துவிடுகிறது. அவ்வாறு அதிகரிப்பதால் நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) உயர்ந்து விடுகிறதென் பதை படம் 3 – 11-ல் காணலாம். வரி குறைக்கப்பட்டிருப்பதால்



படம் 3–11 வரியைக் குறைக்கும்போது நாட்டின் மொத்த உற்பத்தி உயர்கிறது

நுகர்வுக் கோடு மேல் நோக்கி நகர்ந்துவிடுகிறது; அதோடு, தொகு தேவைப் பட்டியலும் மேலே நகர்ந்து சென்றுவிடுகிறது. மேலும், நுகர்வுச் செலவு தொடக்கத்தில் எவ்வளவு அதிகரித்ததோ அதைக் காட்டிலும் பன்மடங்கில் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) பெருக்கியின் செயலால் உயர்ந்துவிடுகிறது. சான்றாக, பெருக்கி $2\frac{1}{2}$ ஆக இருந்தால் நுகர்வுச் செலவு 8 பில்லியன்

டாலர் அதிகரிக்கும்போது, நாட்டின் மொத்த உற்பத்தி 20 பில்லியன் டாலர் உயர்ந்துவிடுகிறது.

வரியை மாற்றும்போது எந்த அரசாங்கமும் சொந்த வருமான வரியை மட்டும் மாற்றுவதில்லை; கார்ப்பரேஷன்களின் இலாப வரியையும் உயர்த்தலாம் அல்லது குறைக்கலாம். அவ்வாறு கார்ப்பரேஷன் இலாப வரி மாற்றப்படும்போது முதன்முதலில் பாதிக்கப்படுவது தொழில் முதலீடுதான். சான்றாக, கார்ப்பரேஷன் இலாப வரி குறைக்கப்படும்போது, முதலீடு அதிகரிக்க நேரிடும்; அப்படி அதிகரித்தால் தொகு தேவை மட்டுமன்றி, நாட்டின் மொத்த உற்பத்தியும் உயர முற்படும். மாறாக, கார்ப்பரேஷன் இலாப வரி உயர்த்தப்பட்டால் முதலீடு மட்டுமன்றி, நாட்டின் மொத்த உற்பத்தியும் மந்தமடையும்.

அரசாங்கத்தின் நிதிக் கொள்கை[6]

நாட்டின் மொத்த உற்பத்தி அளவைச் சீராக்க வேண்டுமென்பதற்காக அரசாங்கம் தன் வரிகளையும் செலவினங்களையும் மாற்றி அமைக்கும் முயற்சிதான் நிதிக் கொள்கை எனப்படுகிறது. அரசாங்க நிதிக் கொள்கையின் அடிப்படைத் தத்துவங்கள் எளிமையானவைதான்; இருந்தாலும், அக் கொள்கையினால் ஏற்படக்கூடிய விளைவுகள் எப்போது, எந்த அளவுக்குப் பயனளிக்குமென்று முன்கூட்டியே கூறிவிட முடியாது. நாட்டில் வேலையின்மை இருக்கும்போது, உற்பத்தித் திறனோடு ஒப்பிட்டுப் பார்த்தால், தொகு தேவை பெரும்பாலும் குறைவாகத்தான் இருக்கும். இத்தேவையை உயர்த்துவதற்கு அரசாங்கம் பின்பற்றக்கூடிய வழிகள் இரண்டு உள்ளன. அவை:

1. அரசாங்கச் செலவினை அதிகரிப்பது,
2. வரிகளைக் குறைப்பது.

இவ்விரண்டில், வரிகளை எவ்வளவு குறைத்தாலும் சரி, அல்லது செலவை எவ்வளவு அதிகரித்தாலும் சரி, அந்த அளவைக் காட்டிலும் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) பெருக்கியின் வாயிலாகப் பன்மடங்கு அதிகமாக ஆகிவிடும். உண்மையில், அரசாங்கம் தன் செலவை அதிகரித்தோ, அல்லது மக்களின் செலவை அதிகரிக்கக் கூடிய வகையில் வரிகளைக் குறைத்தோ தொகு தேவையை உயர்த்த முடியும். வேலை

6. அரசாங்கத்தின் நிதிக் கொள்கை பற்றிய முழு ஆய்விற்கு Otto Eckstein அவர்கள் எழுதியுள்ள "Public Finance" என்ற நூலினைப் பார்க்கவும். இந்நூலும் இதே வரிசையில் இரண்டாம் பதிப்பாக வெளி வந்துள்ளது.

நிறைவை அடைவதற்கான இவ்விரு வழிகளுமே நடைமுறைக் கேற்றவைதான்.

வேலை நிறைவை அடைவதற்கு நிதிக் கொள்கையைப் பயன் படுத்தும் பழக்கம் அண்மையில்தான் தோன்றியது. பொரு ளாதார மந்தத்தின்போது அரசாங்கம் தன் வரவு - செலவைச் சமநிலையில் வைத்திருப்பதுதான் சிறந்த கொள்கை என்று 1936 வரை அனைவருமே நம்பினர். 1932-ல் ஃபிராங்லின் டி. ரூஸ்வெல்ட் (Franklin D. Roosevelt) அவர்கள்கூட இக்கொள் கையைத்தான் தன் பிரசாரத்தில் வலியுறுத்தினர். இவ்வாறாக, அரசாங்கச் செலவை அதிகரித்தாலும் அல்லது வரியைக் குறைத் தாலும் அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம் பாதிக்கப்பட்டு விடுமென்றுதான் பெரும்பாலும் அரசியல் தலைவர்கள் அனைவ ருமே கருதினர்; எனவே, இவ்விரண்டு வழிகளுக்கும் நேர் மாறான கொள்கையைத்தான் அவர்கள் கடைப்பிடித்து வந்தனர். பொருளாதாரப் பின்னிறக்கத்தின்போதுகூட பற்றாக்குறை வரவு - செலவுத் திட்டத்தை மேற்கொள்வது ஆபத்துதான் என்று சில வருடங்களுக்கு முன்னர்கூட ஒரு சிலர் நம்பினர். எனினும், வளமைமிக்கப் பொருளாதாரச் சமன்பாட்டினை அடை வதற்கு நிதிக் கொள்கையைப் பயன்படுத்தலாம், பயன்படுத்தத் தான் வேண்டும் என்ற நம்பிக்கை இப்போது ஏற்பட்டுவிட்டது.

செலவை அதிகரித்தோ அல்லது வரியைக் குறைத்தோ நாட்டின் மொத்த உற்பத்தியை (GNP) உயர்த்த முடியும்; எனினும், இக் கொள்கைகளை எப்பொழுதுமே கடைப்பிடிக்கலா மென்பது தவறு. நடைமுறையிலுள்ள உற்பத்தி முழுத் திறன் உற்பத்தியைக் காட்டிலும் குறைவாக இருந்தால் மட்டுமே நிதிக் கொள்கையின் வாயிலாக மொத்தச் செலவை அதிகரித்து, நடை முறை உற்பத்தியை உயர்த்தக்கூடும். முழுத் திறன் உற்பத்தியை அடைந்த பின்னர், மேலும் உற்பத்தியை அதிகரிக்க வேண்டு மானால் உற்பத்தித் திறனைத்தான் உயர்த்த வேண்டும்; அப்படி யின்றி, மேலும் மேலும் அதிகமாகச் செலவழித்துக் கொண்டே போனால் பணவீக்கம்தான் ஏற்படும். சொல்லப்போனால், முழுத் திறன் உற்பத்தி அளவைக் காட்டிலும் தொகு தேவை தீவிர மடைந்து எஞ்சிவிடும்போதும்சரி, அல்லது எஞ்சிவிடப் போகின்ற அபாயம் வரும்போதும்சரி (அதாவது, நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அளவைக் காட்டிலும் அதிகமாக வாங்கக் கூடிய நிலை ஏற்படும்போது) தொகு தேவையைக் குறைக்கும் வகையில்தான் நிதிக் கொள்கை அமைய வேண்டும். அதாவது, பணவீக்க ஆபத்தைப் போக்க வேண்டுமாயின், அரசாங்கம் தன்

செலவைக் குறைத்துக் கொள்ளவேண்டும் அல்லது வரிகளை உயர்த்திவிட வேண்டும்.

நடைமுறையிலுள்ள உற்பத்தி அளவு முழுத் திறன் உற்பத்தி அளவிற்குச் சமமாக ஆகும்படி செய்வதுதான் நிதிக் கொள்கையின் குறிக்கோளாகும். எனவே, நிதிக் கொள்கை எப்போதும் ஒரே மாதிரியாக இருக்க முடியாது. சில சமயங்களில் (நடைமுறை உற்பத்தி முழுத் திறன் உற்பத்தியைக் காட்டிலும் குறைவாக இருக்கும்போது) நாட்டின் மொத்தச் செலவை அதிகரிக்கச் செய்யும் வகையிலும், வேறு சில சமயங்களில் (முழுத் திறன் உற்பத்தி அளவை மிஞ்சி மொத்தச் செலவீடு ஏற்படும்போது) மிதமிஞ்சிய செலவைக் கட்டுப்படுத்தும் வகையிலும் நிதிக் கொள்கையை உருவாக்க வேண்டியுள்ளது.

நிதிக் கொள்கையைப் பயன்படுத்துவதிலுள்ள சிக்கல்கள்

நிதிக் கொள்கையின் அடிப்படைத் தத்துவங்கள் மிக எளிமையானவைதான்; எனினும் இலட்சியமான நிதிக் கொள்கையை அடைவது எப்படி என்பதில் கருத்து முரண்பாடுகளும் நடைமுறைச் சிக்கல்களும் தோன்றிவிடுகின்றன. நமது வரி அமைப்பு முறை சிக்கலானது; எனவே வரிகளை அதிகரிப்பதற்கும் குறைப்பதற்கும் எத்தனையோ வழி வகைகள் உள்ளன. அதனால், குறிப்பிட்டதொரு சூழ்நிலையில் எப்படிப்பட்ட மாறுதல் களைச் செய்தால் நல்லது என்பதில் கருத்து வேறுபாடு தோன்றி விடுகிறது. அப்படி முரண்பாடு ஏற்பட்டுவிடும்போது, சில சமயங்களில் எந்தவிதமான முடிவிற்கும் வர முடியாமல் போய் விடுகிறது. மேலும், நிதிக் கொள்கை நடவடிக்கைகளை மேற் கொள்ளும்போது, அவற்றின் விளைவுகள் உடனடியாக ஏற்படுவதில்லை; எவ்வளவு காலமாகும் என்று திட்டவட்டமாகக் கூறவும் இயலாது. சில சமயங்களில் சிறிது காலத்திலேயே அவ்விளைவுகள் ஏற்பட்டுவிடுகின்றன; வேறு சில சூழ்நிலைகளின்போதோ நெடுங்காலமாகியும் விளைவுகள் திட்டவட்டமாகத் தோன்றுவதில்லை. சான்றாக, பணவீக்கம் தொடர்ந்து இருந்துகொண்டேதான் இருக்கப் போகின்றது என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால், விலைவாசிகள் மட்டுமன்றி விற்பனை அளவும் உயர்ந்துகொண்டு தானிருக்கும் என்று வியாபாரிகளும் நுகர்வோரும் கருதக்கூடும்; அப்படிப்பட்ட நிலையில் நிதிக் கொள்கை நடவடிக்கைகளால் அப் போக்கினைத் தகர்த்துவிடுவதற்கு நீண்ட காலமாகலாம். அதேபோல், செலவிடக்கூடிய சொந்த வருமானத்தைக் குறைக்க வேண்டுமென்பதற்காக அரசாங்கம் வரிகளை உயர்த்திவிட்டால்,

உடனடியாகச் செலவுகள் குறைந்துவிடுவதில்லை. எனவே. வரிகளையும், அரசாங்கச் செலவுகளையும் மாற்றி அமைத்தால் அதற்கேற்ப தொகு தேவை எப்போது, எப்படி அமையுமென்று திட்டவட்டமாகக் கூற முடியாது. இதனால்தான் நிதிக் கொள்கையையும் பணவாக்கக் கொள்கையையும் (Monetary Policy) கடைப்பிடித்து நாட்டின் நடைமுறை உற்பத்தியை முழுத் திறன் உற்பத்தி அளவுக்குக் கொண்டுவர முடிவதில்லை. இருந்த போதிலும், பழங்காலத்தில் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்குலைவுகளை நாம் எவ்வளவோ தடுத்து நிறுத்தியுள்ளோம். இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் தொகு தேவை துரிதமாக ஏறுவதும் இறங்குவதுமாக ஆட்டம் கொண்டிருந்த நிலை இன்று கிடையாது. நமது அறிவும் ஆற்றலும் நிறைவானவை அல்லதான் ; இருந்தாலும் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) கட்டுக்கு மீறி உயர்வதையோ அல்லது சரிவடைந்து விடுவதையோ நம்மால் கட்டுப்படுத்த முடியும். பொங்கிவரும் பணவீக்கத்தை மட்டுப்படுத்தவும், பொருளாதார நடவடிக்கைகள் சரிவடையத் தொடங்கினால் அவற்றை உயர்த்தவும் நம்மால் முடியும்.

நிதிக் கொள்கைகளை மதிப்பிடும்போது ஒன்றை நாம் மறந்துவிடக் கூடாது ; அதாவது, நிதிக் கொள்கை எதுவாயிருந்தாலும், கண்ணும் கருத்துமாயிருந்து அதன் விளைவுகளை நாம் கண்டுணர முடியாது. சான்றாக, தொகு தேவை சரிவடையத் தொடங்கியிருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது, தொழில் நிறுவனங்கள், புதிய வீடுகளை வாங்குவோர், நீடித்துப் பயன்தரும் நுகர்வுப் பொருள்களை வாங்குவோர் அனைவருமே தத்தம் செலவைக் குறைக்க முற்படுவர். இந்நிலை நீடித்தால் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) குறைந்துகொண்டே செல்லும் என்றும், வேலையில்லாத் தொழிலாளரின் எண்ணிக்கை 4 சதவீதத்திலிருந்து 8 சதவீதம் அதிகரித்துவிடுமென்றும் வைத்துக்கொள்வோம். இப்போது, நமது மத்திய அரசாங்கம் உரிய நிதிக் கொள்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு (வரிகளைக் குறைத்தும் அரசாங்கச் செலவை அதிகரித்தும்) சரிவடைந்த நாட்டின் மொத்த உற்பத்தியை 75 சதவீதம் உயர்த்தி விட்டதாகக் கொள்வோம். அப்படியானால் 8 சதவீதமாக உயர்ந்திருக்கக்கூடிய வேலையின்மை 5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டு விட்டது என்றுதான் பொருள். இந்த விளைவுகளை மட்டும் மனத்தில் வைத்துக்கொண்டு, நிதிக் கொள்கை பயனற்றதாகிவிட்டதென்று குருட்டுத்தனமாக ஒருவர் குறைகூறலாம். காரணம், நிதிக் கொள்கையைக் கடைப்பிடித்தும்கூட பொருளாதாரம் பின்னிறக்கம் கண்டுவிட்டது ; வேலையின்மையும் அதிகரித்துவிட்டது

என்று அவர் நினைக்கக்கூடும். ஆனால் உண்மையில் நிதிக் கொள்கை வெற்றியடைந்து விட்டது என்றுதான் இச் சூழ் நிலையில் சொல்லவேண்டும். இருந்தாலும்கூட, பின்னிறக்கம் முழுமையாகச் சீராக்கப்படவில்லையே, அரசாங்கம் இன்னும் வலுவான முறையில் தன் நிதிக் கொள்கையைக் கடைப்பிடித் திருக்கலாமே என்று அரசாங்கத்தை ஒருவர் குறைகூறுவதும் நியாயமாக இருக்கலாம். ஆனால் நிதிக் கொள்கையைக் கடைப் பிடித்தும்கூட வேலையின்மை அதிகரித்துவிட்டது; எனவே, பின்னிறக்கத்தைத் தடுக்க அரசாங்கம் மேற்கொண்ட நட வடிக்கைகளெல்லாம் வீண்தான் என்று வாதாடுவது சரியல்ல. ஏனெனில், இந் நிதிக் கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிக் காமல் இருந்திருந்தால் என்னென்ன விளைவுகள் ஏற்பட்டிருக்கும்; இப்போது அவையனைத்தும் எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தப் பட்டுவிட்டன என்பதை ஒப்பிட்டுப் பார்த்துத்தான் எந்தப் பொருளாதாரக் கொள்கையையும் நாம் மதிப்பிட வேண்டும்.

நிதிக் கொள்கையின் வலிமைகளையும், அதன் சிக்கல்களையும் முழுமையாக அறிந்துகொள்ள வேண்டுமாயின், இந்த வரிசையில் வெளிவந்துள்ள 'Public Finance' என்ற நூலைப் படிக்கவும். அதேபோல், பணவாக்கக் கொள்கைக்கும் நிதிக் கொள்கைக்கு முள்ள உறவை அறிய விரும்புவோர் இதே வரிசையில் வெளி வந்துள்ள 'Money and credit' என்ற நூலைப் பார்க்கவும்.

நிதிக் கொள்கைக்கும் பணவாக்கக் கொள்கைக்குமுள்ள தொடர்பு :

நாட்டின் பொருளாதாரத்தை நிலைபேருக்குவதற்கு நிதிக் கொள்கையை மட்டும் அரசாங்கம் நிறைவேற்றினால் போதாது; பணவாக்கக் கொள்கையையும் கடைப்பிடிக்க வேண்டும். நாட்டில் புழக்கத்திலுள்ள பண அளவை (செலாவணித்தாள்கள், கணக்கு வழக்குகளைச் சரிபார்த்தல் வழியாக) அரசாங்கம் ஒழுங்குபடுத்த முடியும். அதேபோல் கடன்பெறுவோர் செலுத்தவேண்டிய வட்டி வீதம், கடன் பெறுவதற்குரிய நிபந்தனைகள் ஆகியவற் றைச் சூழ்நிலைக்கேற்ப மாற்றி அமைப்பதன் வழியாக கடன் பெறும் வசதிகளையும் அரசாங்கம் ஒழுங்கு படுத்தலாம். பண அளிப்பையும் கடனளிக்கும் நிபந்தனைகளையும் எப்படியெல்லாம் ஒழுங்குபடுத்த முடியும் என்ற விவரங்களை இந்நூலின் வரிசை யிலேயே வெளிவந்துள்ள 'Money and credit' என்ற நூலில் காணலாம். ஒன்றைமட்டும் இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, பண அளிப்பை விரைவாக அதிகரிக்கும்

போதும், அதன் விலைவாகக் கடன் பெறும் வசதிகளை எளிமையானதாகச் செய்யும்போதும் (வட்டி வீதத்தைக் குறைத்து, எளிய தவணை முறையில் கடனளிக்க ஏற்பாடு செய்யும்போது) C+I+G கோடு மேல்நோக்கி நகர்ந்துவிட முற்படும்; இதற்கு நேர் மாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போதோ இக் கோடு கீழ்நோக்கி வந்துவிடுகிறது.

கடன் நிபந்தனைகள் எளிமையானதாயும் வட்டிவீதம் குறைவாயும் இருக்கும்போது மக்கள் வீடுகளை வாங்க முற்படுவர். மேலும், அரசாங்கம் பத்திரங்களை வெளியிட்டு, அதிலிருந்து கிடைக்கும் பணத்தைக் கொண்டு சாலைகளையும் பள்ளிகளையும் அமைத்தல் போன்ற முதலீட்டிற்கு இதுதான் நல்ல சந்தர்ப்பமும் ஆகும். அதோடு, இச் சந்தர்ப்பங்களில்தான் மக்கள் தமக்கு வேண்டிய கார்களையும், இன்னும் பிற உறுதியான நுகர்வுப் பொருள்களையும் அதிகமாக வாங்குவர். எளிதாகக் கடன் பெற முடியும்போது, பெரிய தொழில் நிறுவனங்கள்கூட தம் முதலீட்டை விரிவு படுத்தலாம்; ஆனால் முதலீடு உடனடியாகப் பெருகி விடுமென்று சொல்ல முடியாது; இருந்தபோதிலும், தொழில் முதலீடும் ஓரளவிற்கு அதிகரிக்கும். இதற்கு நேர் மாறாக, வட்டி வீதத்தை உயர்த்தும்போதும் கடன் நிபந்தனைகளைக் கடுமையானதாகச் செய்யும்போதும் நேர்மாறான விளைவுகள் ஏற்படுகின்றன. பலவகையான செலவுகள், குறிப்பாக வீடு வாங்கும் செலவீடு குறைந்து விடுகின்றன. இவ்வாறாக, நிதிக் கொள்கையால் மட்டுமன்றி, பணவாக்கக் கொள்கையாலும் C+I+G (தொகு தேவைக்) கோட்டை உயர்த்தவோ தாழ்த்தவோ முடியும்; அப்போது நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) உயரவோ இறங்கவோ முற்படும்.

இந்த விவரங்களின் அடிப்படையில் பணவாக்கக் கொள்கையின் முக்கியமான இரண்டு அம்சங்களை நாம் மனத்தில் கொள்ள வேண்டும்.

முதலாவது, நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) தொகு தேவையும் உயரும்போது – அரசாங்கச் செலவு அதிகரிக்கின்ற காரணத்தால் என்று வைத்துக்கொள்வோம் – கடனுக்குமுள்ள தேவையும் உயர்கிறது. உற்பத்தி அளவை அதிகரிப்பதற்குத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் கடன் அதிகரிக்கலாம்; அதேபோல் தன் வருமானத்தைக் காட்டிலும் அதிகமாகச் செலவிட்டு விட்டதால் அரசாங்கத்திற்கும் அதிகக் கடன் தேவைப்படலாம். இவ்வாறுகப் பணத்திற்குள்ள தேவை உயரும்

போது, பண அளிப்பையும் கடன் வசதிகளையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. ஆனல் அரசாங்கம் பண அளிப்பை அதிகரிக்காமல் அப்படியே வைத்திருந்தால் கடனுக்குள்ள விலைதான் — அதாவது வட்டிவீதம் — உயரும். வட்டி உயர்ந்து விட்டால் செலவீடு குறைந்து. அதிகரித்திருந்த நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) அளவும் குறைந்துவிடும். எனவே, அரசாங்கம் நிதிக் கொள்கையை மட்டும் செயல்படுத்தினல் போதாது; பணவாக்கக் கொள்கையையும் உரிய முறையில் அமலாக்கவேண்டும். அவ்வாறின்றி, நாட்டின் மொத்த உற்பத்தியைச் (GNP) சீர்படுத்துவதற்கென்று நிதிக் கொள்கையை மட்டும் கடைப்பிடித்தால், வட்டி வீதத்திலும் கடனளிக்கும் நிபந்தனைகளிலும் ஏற்படும் மாறுதல்களால் உற்பத்தியைச் சீர்படுத்தும் முயற்சி பயனளிக்காது போய்விடும்.

இரண்டாவது, பொருளாதார நிலைபேருக்கத்திற்கு நிதிக் கொள்கையை மட்டும் அல்லது பணவாக்கக் கொள்கையை மட்டும் கடைப்பிடிப்பது ஒரளவிற்குத்தான் பயனளிக்கும். சான்றாக, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) முழுத்திறன் உற்பத்தி அளவைக் காட்டிலும் குறைந்துவிடும்போது, தொகு தேவையைத் தீவிரப்படுத்த வேண்டுமாயின், நிதிக் கொள்கை நடவடிக்கைகளையும் (வரியைக் குறைப்பது, செலவை அதிகரிப்பது) மேற்கொள்ளலாம்; அல்லது பணவாக்கக் கொள்கையையும் (வட்டி வீதத்தைக் குறைப்பது, கடன் வசதியைப் பெருக்குவது) கடைப் பிடிக்கலாம். அதுபோன்றே, நாட்டின் மொத்த உற்பத்தி முழுத்திறன் உற்பத்தி அளவை எஞ்சி, பணவீக்கம் தோன்றிவிட்டால், நடைமுறை உற்பத்தியைக் குறைப்பதற்கும் இவ்விரு கொள்கைகளுமே பயன்படுத்தப்படலாம்; அதாவது, நிதிக் கொள்கையின் வாயிலாக அரசாங்கச் செலவைக் குறைக்கவும் வரிகளை உயர்த்தவும் செய்யலாம், அல்லது பணவாக்கக் கொள்கைமூலம் வட்டிவீதத்தை உயர்த்தவும் கடன் வசதியைக் கட்டுப்படுத்தவும் கூடும். அல்லது ஒரே சமயத்தில் இவ்விரண்டையுமே எத்தனையோ வழிகளில் இணைத்தும் பயன்படுத்த முடியும்.

நிதிக் கொள்கையும் பணவாக்கக் கொள்கையும் எந்த அளவுக்கு ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புள்ளவை என்பதற்கு 1965 முதல் 1969 வரை நடைபெற்ற பொருளாதார நிகழ்ச்சிகளே நல்ல சான்றுகளாகும். வியட்நாம் போரினல் அரசாங்கத்தின் செலவு பெருமளவில் அதிகரித்தது; அதனல் 1965 ஆம் ஆண்டின் இறுதியில் தீவிரமடையத் தொடங்கிய தொகு தேவை

நாட்டின் மொத்த உற்பத்தியை (GNP) எஞ்சிவிட முற்பட்டது. 1960 முதல் 1965 வரை ஆண்டுதோறும் 1 முதல் 1.5 சதவீதம் வரை அதிகரித்துக் கொண்டிருந்த விலைவாசிகள், 1965-க்குப்பின் ஆண்டொன்றுக்கு 3, 4 சதவீதம் உயர்ந்துவிட்டன. எனவே, (அமெரிக்க நாட்டு) சட்டமன்றத்தில் மிகப் பெரும் வாதம் தொடங்கி, இறுதியில் வரிகளை 10 சதவீதம் உயர்த்திவிடுவ தென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதோடு, அரசாங்கச் செலவையும் 6 பில்லியன் டாலர் குறைத்து விடுவதற்கான சட்டமும் நிறைவேறியது. இவ்வாறுக, பண வீக்கத்தைக் கட்டுப் படுத்துவதற்கென்று (வரி வருமானம் 11 பில்லியன் டாலர் அதிகரிக்கும் வகையில்) வரி உயர்வுச் சட்டமும், அரசாங்கச் செல விணைக் குறைக்கும் சட்டமும் ஒரே சமயத்தில் தீவிரமாகச் செயல் பட்டால், நாட்டின் பொருளாதாரம் பின்னிறக்கமடைந்துவிடக் கூடுமென்று பணவாக்க அதிகாரிகள் பயந்தனர்; எனவே, 1968-ன் இறுதியிலும் 1969-ன் தொடக்கத்திலும் எளிதாகக் கடனளிக்கும் கொள்கையைக் கடைப்பிடித்தனர். இதன் விளைவாக, தேவையின் தீவிரத்தைக் கட்டுப்படுத்தும் நிதிக் கொள்கை ஒருபுறமும், தேவையின் தீவிரத்தை அதிகரிக்கக் கூடிய வகையில் முதலீட்டுக் கடனையும் உறுதியான நுகர்வுப் பொருள் கடனையும் மலிவாக்கிய பணவாக்கக் கொள்கை மறுபுறமும் ஒன்றுகச் செயல்பட்டதால் குறிக்கோளை முழுமை யாக அடைய முடியாமல் போய்விட்டது.

இதிலிருந்து தெரிவது யாதெனில், பணவாக்க அதிகாரிகள் நம்பியதற்கு மாறுக, நாட்டில் பண வீக்கம் கடுமையாகவே இருந்தது; எனவே, அவர்களின் நம்பிக்கையின்படி வரி உயர்த் தப்பட்டதும் செலவு குறைக்கப்பட்டதும் தீவிரமான நடவடிக்கை களல்ல. எனினும் நிதிக் கொள்கைக்கு எதிராகப் பணவாக்கக் கொள்கை பயன்படுத்தப்பட்டதால்தான் பண வீக்கத்தைக் குறைக்க முடியவில்லை. அதன் பின்னர் 1969-ன் இறுதியிலும் 1970-ன் தொடக்கத்திலும் கடனளிப்பை இறுக்கமாக்கக்கூடிய பணவாக்கக் கொள்கையும், பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய நிதிக் கொள்கையும் சேர்ந்து ஒன்றுகச் செயல்படுத்தப் பட்டதன் விளைவாகத்தான் மிதமிஞ்சியதொரு தேவையின் தீவிரம் தணியத் தொடங்கியது. இதனால் நாட்டின் நடைமுறை உற்பத்தி அளவும் முழுத் திறன் அளவைக் காட்டிலும் குறைந்து, வேலையின்மை அதிகரித்துவிட்டது.

நிதிக் கொள்கை நல்ல பலன் தருமா அல்லது பணவாக்கக் கொள்கை நல்ல பலன் தருமா என்பதில் பொருளாதார அறிஞர்

களிடையே ஓரளவு கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. நாட்டில் பணத் தொடர்புடைய சக்திகள்தான் வலுவானவை; எனவே, பணவாக்கக் கொள்கையை மாற்றுமல் நிதிக் கொள்கையை மட்டும் மாற்றினுல் நாம் எதிர்பார்க்கும்படி தொகு தேவையை மாற்றிவிட முடியாதென்று ஒரு சிலர் நம்புகின்றனர். எனினும், இரு கொள்கைகளுமே முக்கியமானவைதான் என்பது பெரும்பாலரின் கருத்தாகும். இருப்பினும், ஒவ்வொரு கொள்கை யும் எந்த அளவுக்குப் பயன் தரும் என்பதில் கருத்து முரண்பாடு இருந்துகொண்டிருக்கிறது.

நாட்டிலுள்ள தன்னியக்கமுடைய நிலைபேருக்கிகள்
(Automatic Stabilizers in the Economy)

முதலீடோ அல்லது வேறெந்தச் செலவோ சிறிதளவு குறைந் தாலும், அதைப்போல் பன்மடங்கில் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) குறைந்து விடுகிறது; இதற்குக் காரணம் பெருக்கிதான். எனவே, பெருக்கி பெரிய எண்ணுக இருக்கும்போது, செலவீடு சிறிதளவு குறைந்தாலும் கடுமையான பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படக்கூடும். நல்ல காலமாக, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், பெருக்கி சிறிய எண்ணுகவேதான் இருந்து வருகிறது; அதனல்தான் நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னிறக்கங் களால் நாம் அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லை. நாட்டில் தன்னியக்கமுடைய பல நிலைபேருக்கிகள் இயங்கிக் கொண்டிருப்ப தால்தான் பெருக்கியின் எண் சிறியதாகவே இருக்க முற்படு கிறது. 'தன்னியக்கமுடைய' என்ருலென்ன? நாட்டில் பொரு ளாதாரப் பின்னிறக்கமோ அல்லது பண வீக்கமோ ஏற்படக் கூடிய நிலையில் சட்டமன்றம் அல்லது குடியரசுத் தலைவரின் அதிகாரபூர்வமான நடவடிக்கை ஏதுமின்றி, தாமாகவே இயங்கிக் கொண்டிருக்கும் நிலைபேருக்க அம்சங்களைத்தான் 'தன்னியக்க முடைய' நிலைபேருக்கிகள் என்றழைக்கின்ருேம்.

பெருக்கியின் எண் நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத் திக்குமுள்ள தொடர்பை, அதாவது இறுதி நிலை நுகர்வு நாட்டத் தைப் (MPC_g) பொருத்ததாகும். நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) எவ்வளவு அதிகரிக்குமோ, அதில் பெரும் பகுதி நுகர்விற் காகப் பயன்பட்டால் பெருக்கி பெரிய எண்ணுகிவிடும். மாருக, இறுதி நிலை நுகர்வு நாட்டம் (MPC_g) மிகக் குறைவாயிருந்தால் பெருக்கியும் சிறியதாகிறது. நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) ஓரளவிற்கு மாறும்போது, இறுதி நிலை நுகர்வு

நாட்டத்தைக் (MPC_g) குறைக்கவல்ல நான்கு முக்கிய அம்சங்கள் நம் நாட்டிலுள்ளன.

1. நாட்டின் மொத்த வருமானம் (GNI) எவ்வளவு அதிகரித்தாலும் அதில் பெரும் பகுதி மொத்தத் தொழில் சேமிப்பாகக் கவரப்பட்டு விடுகிறது; இதனால் செலவிடக்கூடிய நுகர்வோர் வருமானம் அதிகரிக்காமல் அப்படியே நிலைத்துவிடுகிறது. பொருளாதார நடவடிக்கைகள் விரிவடையும்போதும் சுருங்கும் போதும் இலாபமும் அதிகரிக்க அல்லது குறைய முற்படுகிறது; எனவே, நாட்டின் மொத்த உற்பத்தி குறைந்தால் இலாபம் பெருமளவில் சரிந்துவிடுகிறது. மேலும் நாட்டிலுள்ள கார்ப்பரேஷன்கள் தாங்கள் அளிக்கும் இலாப ஈவை மாற்றமல் ஒரே மட்டத்தில் பேணிக்காக்க முயன்று வருகின்றன; இலாபங்கள் குறைந்தால்கூட பெரும்பாலும் இலாப ஈவைக் குறைத்துவிடுவதில்லை. இதன் விளைவாக, நாட்டின் மொத்த வருமானம் (GNI) சரியும்போது ஏனைய இனங்களைக் காட்டிலும் மொத்தத் தொழில் சேமிப்பும், அதைச் சார்ந்த நிகர இலாபமும்தான் அதிகமாகக் குறைகின்றன. இவ்வாறாக, நாட்டு வருமானம் இறங்கும்போது, அவ்விரக்கத்தில் பெரும்பங்கைத் தொழில் நிறுவனங்களே தாங்கிக் கொள்கின்றன. மாறாக, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) பெருமளவு உயர்ந்தால் இதற்கு நேர்மாறான விளைவுகள் ஏற்படுகின்றன.

2. நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) உயரும்போதும் தாழும்போதும் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வரி வருவாயும் உயர்கின்றது அல்லது தாழ்கின்றது. எனவே, நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) வருமானமும் (GNI) இறங்கும் போது, அவ்விறக்கத்தில் ஒரு பகுதியை அரசாங்க வரி வருவாய் தாங்கிக் கொள்வதால் செலவிடக் கூடிய நுகர்வோர் வருமானம் அவ்வளவாகக் குறைவதில்லை.

3. நாட்டின் வருமானமும் (GNI) வேலை வாய்ப்பும் குறையும்போது, அரசாங்க வருமானத்தில் மக்களுக்கு கைமாறும் பங்கு அதிகரித்துவிடுகிறது. வேலையிழந்தோருக்கு வருமானம் கிடைக்கக்கூடிய வகையில் நமது சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்படி உதவித்தொகை வழங்கப்படுகிறது. எனவே, நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) வருமானமும் தாழ்ந்துவிட்டால் கூட தொழிலாளர்கள் அதிகமாகப் பாதிக்கப்படாத வகையில் அவர்களுக்குப் பெருமளவில் நட்ட ஈடு கொடுக்கப்படுகிறது.

4. இறுதியாக, செலவிடக்கூடிய நுகர்வோர் வருமானம் குறைந்தாலும், அவர்கள் தம் வாழ்க்கைத் தரத்தை உடனடி

யாகக் குறைத்துக்கொள்வதில்லை. கூடுமானவரை தம் வாழ்க்கைத் தரத்தை அப்படியே பேணிக்காக்கத்தான் முற்படுகின்றனர். தங்களின் வருமானம் ஏதோ தற்காலிகமாகத்தான் குறைந்துள்ளது என்ற நம்பிக்கையில் பல குடும்பத்தினர் எவ்வளவுதான் வருமானம் குறைந்தாலும் அந்த அளவுக்குத் தம் செலவினங்களைக் குறைத்துக்கொள்வதில்லை.

இந்தத் தன்னியக்கமுடைய நிலைபேறுக்கிகள் இருப்பதால் தான், நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) ஓரளவு மாறினாலும் இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC_g) சிறிதாகவே இருக்க முற்படுகிறது. முந்திய நமது சான்றுகளில் இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC_g) ·6 ஆக இருப்பதாகக் கருதினோம். ஆனால், பொருளாதார ஏற்ற இறக்கம் ஓரளவு ஏற்படும்போதெல்லாம் இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC_g) .25 அல்லது ·35 ஆகத் தான் இருக்க நேரிடுகிறது. அப்படியானால் பெருக்கி 1·3 அல்லது 1.6 என்றுதான் ஆகிறது. $\left(\text{பெருக்கி} = \frac{1}{1 - MPC_g}\right)$. இந்நிலையைக் கொண்டு பார்க்கும்போது, முதலீட்டுச் செலவோ அல்லது அரசாங்கச் செலவோ ஓரளவு மாறினால்கூட பயங்கரமான பொருளாதார மந்தமோ அல்லது பணவீக்கமோ ஏற்படாது என்றுதான் தோன்றுகிறது.

எவ்வாறிருந்தாலும், தன்னியக்கமுடைய இந்த நிலைபேறுக்கிகளை நாம் முழுக்க நம்பி இருக்கவும் கூடாது; அவை இயங்குவதற்கும் ஓர் வரம்பு உள்ளது. நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) பெருமளவில் சரிந்துவிடாமல் அச் சரிவை இவை மட்டுப்படுத்துகின்றன; எனினும், இவை இயங்குவதால் மட்டும் பொருளாதார மீட்சி (recovery) வேலை நிறைவு ஏற்பட்டு விடாது. மேலும், செலவு பெருமளவில் குறைந்து விட்டால் இவை சக்தியற்றுப்போய் விடுகின்றன. சான்றாக நாட்டு வருமானம் பெருமளவில் சரிந்துவிடும்போது, அச் சரிவில் பெரும் பகுதியை எவ்வளவு காலத்திற்குத்தான் தொழில் நிறுவனங்கள் (தம் சேமிப்புப் பாதிப்பின் வழியாக) தாங்கிக் கொள்ளமுடியும்? பொருளாதாரப் பின்னிறக்கம் நீடித்துக்கொண்டே போனால் இலாப ஈவைக் குறைத்துத்தானே ஆகவேண்டும்; அப்போது செலவிடக்கூடிய நுகர்வோர் வருமானம் குறைந்தாக வேண்டுமல்லவா? அதேபோல் வேலையிழந்தோரின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போனால் வேலைக் காப்பீட்டுத் திட்டமே (unemployment insurance) செயலற்றதாகி விடுகிறது. மேலும் நுகர்வோர் வருமானம் நீண்ட காலம்வரை குறைவாகவே

இருந்தால் அவர்கள் தம் பழைய வாழ்க்கைத் தரத்தைப் பேணுவது எப்படி? அவர்களுடைய சேமிப்பும் கரைந்திருக்கும்; கடன் பெறுவதற்குக்கூட வழி இருக்காது.

சுருங்கக் கூறின், முதலீட்டுச் செலவோ அல்லது பிற செலவோ ஓரளவு குறைந்தால், நாட்டு வருமானம் பெருமளவில் பாதிக்கப்படாமலிருக்கத்தான் இந் நிலைப்பேருக்கிகள் உதவுகின்றன. ஆனல், செலவீடு பெருமளவில் குறையும்போது அல்லது நீண்ட காலத்திற்குக் குறைவாகவே இருக்கும்போது இத் தன்னியக்கமுடைய நிலைப்பேருக்கிகள் சக்தியற்றுப் போய் விடுகின்றன; அப்போது பெருக்கியின் எண் பெரியதாகி, நாட்டின் மொத்த உற்பத்தியும் பெருமளவில் குறைந்து விடுகிறது.

சுருக்கம்

எந்த அளவு இலாபகரமாக விற்க முடியுமோ அந்த அளவு தான் உற்பத்தி செய்யப்படும். நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாகக் கொண்டு பார்த்தால், தொகு தேவையும மொத்த உற்பத்தி அளவும் ஒன்றுக்கொன்று சமமாகின்ற நிலையில்தான் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) நிலைக்க முற்படும். நாட்டின் மொத்த உற்பத்தியில் (GNP) ஒவ்வொரு டாலரும் ஒவ்வொரு டாலர் வருமானத்தை உருவாக்குகிறது; எனினும், நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) எந்த அளவில் இருந்தாலும் அந்த அளவுக்குத் தொகு தேவை சமமாகிவிடாது. உருவாக்கப்பட்ட வருமானம் அனைத்தும் செலவிடப்படுவதில்லை.

நாட்டின் மொத்த உற்பத்தி (GNP = GNI) எந்தெந்த அளவிலிருந்தாலும், அந்தந்த அளவில் நுகரப்படும் அளவு எவ்வளவு என்பதுதான் முக்கியம். நாட்டின் மொத்த வருமானத்தில் (GNI) ஒரு பகுதி தொழில் சேமிப்பாகவும் வரியாகவும் கசிந்தோடி விடுகிறது; எஞ்சிய பகுதிதான் செலவிடப்படக்கூடிய நுகர்வோர் வருமானமாகும். செலவிடக்கூடிய வருமானத்தில் நுகர்வோர் எவ்வளவு செலவிடுவர் என்பதைத்தான் நுகர்வுச் சார்பு என்கின்றோம். செலவிடக்கூடிய நுகர்வோர் வருமானம் உயரும்போது, உயர்ந்துள்ள வருமானத்தில் ஒரு பகுதிதான் நுகர்விற்காகச் செலவிடப்படுகிறது; எஞ்சிய பகுதி சேமிக்கப் படுகிறது. இந்தத் தொடர்புகளையெல்லாம் மொத்தமாகக் கொண்டதுதான் நுகர்விறகும் நாட்டின் மொத்த உற்பத்திக்கு முள்ள தொடர்பு. நாட்டின் மொத்த உற்பத்தி (GNP = GNI)

எந்தெந்த அளவில் இருக்கும்போது, நுகர்வுத் தேவை எந்தெந்த அளவில் இருக்கும் என்பதை இத்தொடர்பு புலப்படுத்துகிறது. நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பு தான் இறுதி நிலை நுகர்வு நாட்டத்தை (MPC_g) நிர்ணயிக்கிறது. இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC_g) என்பது நாட்டின் மொத்த உற்பத்தி மாறும் அளவிற்கும் நுகர்வில் ஏற்படும் மாறுதல் அளவிற்குமுள்ள விதமாகும். நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்போடு முதலீட்டுத் தேவையையும் அரசாங்கத் தேவையையும் கூட்டினால் நாட்டு வருமான மட்டத்திற்கேற்ப தொகு தேவைப் பட்டியல் கிடைக்கிறது.

நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) எந்த அளவிலிருந்தால், நாட்டின் மொத்த வருமானத்திலிருந்து ஓடிவரும் தொழில் சேமிப்பு, சொந்தச் சேமிப்பு, வரிகள் ஆகியவற்றின் மொத்தம் முதலீட்டுச் செலவு, அரசாங்கச் செலவு ஆகிய இரண்டிற்கும் சமமாக இருக்குமோ, அந்த உற்பத்தி அளவில் தொகு தேவையும் மொத்த உற்பத்தியும் சரிசமமாயிருக்கும். வேறுவிதமாகக் கூறின், இந்த அளவில்தான் நாட்டின் மொத்த வருமானத்தில் (GNI) நுகர்விற்காகச் செலவிடப்படாத பகுதி முதலீட்டிற்காகச் செலவிடப்படும். எனவே, இந்த அளவுதான் சமநிலை உற்பத்தி அளவாகும். அதாவது, தொகு தேவை அளவும் உற்பத்தி அளவும் ஒன்றுக்கொன்று சமமாகின்ற நிலையில்தான் சமநிலை உற்பத்தி ஏற்படுகிறது.

சமநிலை உற்பத்தி அளவைக் காட்டிலும் நடைமுறை உற்பத்தி நீண்ட காலத்திற்கு அதிகமாயிருக்க முடியாது; ஏனெனில், தொகு தேவை குறைவாயிருக்கும்போது, உற்பத்தியான பொருள்கள் அனைத்தும் விற்பனையாகாது. மாறாக, சமநிலை உற்பத்தி அளவைக் காட்டிலும் நடைமுறை உற்பத்தி நீண்ட காலத்திற்குக் குறைவாக இருக்கவும் முடியாது; ஏனெனில், தொகு தேவை உற்பத்தி அளவை எஞ்சிவிடும்.

நாட்டின் மொத்த உற்பத்தி (GNP = GNI) ஓரளவு மாறினால் கூட, நுகர்வுத் தேவையும் மாறிவிடுகிறது; எனவே, முதலீட்டுச் செலவோ அல்லது அரசாங்கச் செலவோ சிறிதளவு மாறினாலும், அதைக் காட்டிலும் பெருமளவில் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) மாறிவிடும். செலவீடு அதிகரிக்கத் தொடங்கினால், உற்பத்தியும் வருமானமும் உயர முற்படுகின்றன; வருமானம் உயரும்போது, நுகர்வுச் செலவு அதிகரிக்கிறது; நுகர்வுச் செலவு அதிகரிக்கும்போது, மறுபடியும் உற்பத்தியும் வருமான

மும் உயர்ந்துவிடுகின்றன. இவ்வாறாக செலவும் வருமானமும் ஒன்றுக்குப்பின் ஒன்றாக உயர முற்படுகின்றன. தொடக்கத்தில் ஏற்படும் மாற்றத்திற்கும் இறுதியாக நாட்டின் மொத்த உற்பத்தியில் (GNP) ஏற்படும் மாற்றத்திற்குமுள்ள விகிதம்தான் பெருக்கி என அழைக்கப்படுகிறது. எனவே, பெருக்கி $= \frac{1}{1-MPC_g}$ என்றாகிறது. இறுதி நிலை நுகர்வு நாட்டம் (MPC_g) எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாயிருக்குமோ அவ்வளவுக்கவ்வளவு பெருக்கியும் பெரிய எண்ணாயிருக்கும்.

அரசாங்கம் வரிகளைக் குறைக்கும்போது, நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பு உயர்கிறது; வரிகள் குறைவாயிருந்தால் நாட்டு வருமானத்திலிருந்து செலவிடக்கூடிய நுகர்வோர் வருமான இனத்திற்கு அதிக வருமானம் செல்கிறது; அப்போது, நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பு உயர்வதோடு, தொகு தேவைப் பட்டியலும் உயர்ந்துவிடுகிறது. வரிகளை உயர்த்தும்போது, இதற்கு நேர்மாறான விளைவுகள் ஏற்படுகின்றன. நடப்பிலுள்ள நாட்டின் மொத்த உற்பத்தி அளவு முழுத்திறன் உற்பத்தி அளவைக்காட்டிலும் தாழ்வாக இருக்கும்போது, அரசாங்க நிதிக் கொள்கையால் வேலை நிலையையும் உற்பத்தி அளவையும் உயர்த்த முடியும். இவ்விதச் சூழ்நிலையில் அரசாங்கம் தன் செலவை அதிகரிப்பதும் அல்லது வரிகளைக் குறைப்பதும் அல்லது இரண்டையுமே செய்வதும்தான் நல்லது. அப்படிச் செய்யும்போது பொருள்களுக்குள்ள தேவை அதிகரித்து, பெருக்கியின் வாயிலாக நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) உயர்ந்துவிடும். மாறாக, தொகு தேவை நாட்டின் முழுத்திறன் உற்பத்தி அளவை எஞ்சி, வீக்கம் ஏற்படக்கூடிய சூழ்நிலையில் எஞ்சியுள்ள தேவையைக் குறைப்பதற்கு அரசாங்கம் தன் செலவைக் குறைத்துக் கொள்வதும் வரிகளை உயர்த்துவதும்தான் உசிதமான நிதிக் கொள்கையாகும்.

பொருளாதார ஏற்ற இறக்கம் மிதமானதாக இருக்கும்போது, தன்னியக்கமுடைய பல பொருளாதார நிலைப்பாருக்கிகளால் பெருக்கி சிறிய எண்ணாக ஆக்கப்படுகிறது. நாட்டின் மொத்த வருமானம் (GNI) மாறும்போது, அம் மாறுதலின் பெரும் பகுதியை மொத்தத் தொழில் சேமிப்பும் அரசாங்க வரிகளும் கவர்ந்து கொள்கின்றன; எனவே, செலவிடக்கூடிய நுகர்வோர் வருமானம் ஏறுவதும் இறங்குவதும் தவிர்க்கப்பட்டுவிடுகிறது. பொருளாதாரப் பின்னிறக்கம் ஏற்படும்போது, அதனால் பாதிக்

கப்படக்கூடிய தொழிலாளர்களுக்கு அரசாங்கம் உதவித் தொகை அளிப்பதால் அவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவதில்லை. மேலும், தற்காலிகமாக வருமானம் குறையும்போது, நுகர்வோர் தம் பழைய வாழ்க்கைத் தரத்தை அப்படியே பேணிக்காக்க முற்படுவர். இவ்விதக் காரணங்களால் நாட்டின் மொத்த வருமானம் (GNI) மாறும்போது, நுகர்வு அவ்வளவாக மாற்ற மடைவதில்லை. எனினும், செலவீடு பெருமளவில் குறையும் போதும், அல்லது நீண்ட காலமாகக் குறைந்து கொண்டேயிருக் கும்போதும் தன்னியக்கமுடைய நிலைபேருக்கிகளின் செய லாற்றல் நலிந்துவிடுகிறது. பொருளாதார நிலைபேருக்கத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, முதலீட்டுச் செலவு ஓரளவு குறைவதால் ஏற்படக்கூடிய பொருளாதார விளைவுகளை மட்டுப் படுத்தக்கூடிய சக்திகள் நம் நாட்டில் உள்ளன என்று தெரிகிறது. எனினும், முதலீட்டுச் செலவு பெருமளவில் குறைந்துவிட்டால் அல்லது தொடர்ந்து குறைந்துகொண்டே போனால் தன்னியக்க முடைய நிலைபேருக்கிகள் வலுவிழந்துவிடக்கூடும்.

மூன்றும் அதிகாரத்தின் பிற்சேர்க்கை

நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) நிர்ணயமாவதெப்படி? இயற்கணித விளக்கம்

நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) எவ்வாறு நிர்ணயமாகிற தென்பதை எளிய இயற்கணித வாயிலாகவும் விளக்கலாம். நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) வருமானமும் (GNI) Y என்றும், தொகு தேவை D என்றும் வைத்துக்கொள்வோம்.

நுகர்வு, முதலீடு, அரசாங்கக் கொள்முதல் ஆகியவற்றின் மொத்தம்தான் தொகு தேவை. எனவே,

$$D = C + I + G \qquad (1)$$

சமநிலையில் $Y = D$ என்பதால், இச் சமநிலையின் நியதியாகப் பின்வருமாறும் எழுதலாம்:

$$Y = C + I + G \qquad (2)$$

நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்கு முள்ள தொடர் பைப் பின்வருமாறு கூறலாம்:

$$C = a + bY \qquad (3)$$

($a + bY$ என்பது நேர் கோட்டிற்கான சூத்திரமாகும்.)

3-வது சமன்பாட்டிலுள்ள b என்பது நாட்டின் மொத்த வருமானம் (GNI = GNP) மாறும்போது, அம் மாறுதல் அளவில் நுகரப்படும் பகுதியாகும்; அதாவது $b = MPC_g$.

2-வது சமன்பாட்டிலுள்ள C-ன் மதிப்பை 3-வது சமன் பாட்டின் வாயிலாகவும் விளக்கலாம்.

$$Y = a + bY + I + G \qquad (4)$$

இப்போது, a என்பதும் தெரியும்; I+G என்பதும் நமக்குத் தெரியும்; தெரியாதது ஒன்றே ஒன்றுதான். C-ஐ Y-ன் வாயி லாகவும் குறிப்பிட்டு விட்டோம். எனவே, தெரியாத இனத்தைக் (Y) கண்டுபிடிக்க, இச் சமன்பாட்டிலுள்ள இரு பக்கங்களிலு மிருந்து bY-ஐக் கழிக்க வேண்டியதுதான்.

$$Y - bY = a + I + G \qquad (5)$$

இப்போது, Y-ஐ வெளியே கொண்டு வந்தால்

$$Y\ (1-b) = a + I + G \text{ என்றாகும்.} \qquad (6)$$

இச் சமன்பாட்டிலுள்ள இரண்டு பக்கங்களையும் (1 - b)ஆல் வகுத்தால்

$$Y = \frac{a + I + G}{1 - b} \text{ என்று வரும்.} \qquad (7)$$

நாட்டின் சமநிலை உற்பத்தி என்பது நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்புக் கோட்டின் வடிவத்தை யும் (a, b காட்டுவது போல்), முதலீட்டின் அளவையும், அரசாங்கச் செலவையும் (I+G) சார்ந்ததாகும்.

இக் கணித முறை எப்படி என்பதை அறிந்துகொள்வதற்கு எண்களைக் கொண்டு சான்று உதவக்கூடும். $a = 60$, $b = \cdot 6$, $I = 80$, $G = 80$ என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் நமக்குக் கிடைக்கும் சமன்பாடு வருமாறு:

$$Y = C + 80 + 80 \qquad (2a)$$

$$C = 60 + \cdot 6Y \qquad (3a)$$

(3a) சமன்பாட்டிலுள்ள C-ஐ (2a) சமன்பாட்டிற்குக் கொண்டு வந்தால்

$$Y = 60 + \cdot 6Y + 80 + 80 \text{ என்றாகும்.} \qquad (4a)$$

இப்போது, இரண்டு பக்கங்களிலுமிருந்து ·6Y-ஐக் கழித்தால்,

$$Y - \cdot 6Y = 60 + 80 + 80 = 220 \text{ என்றாகும்.} \qquad (5a)$$

இப்போது, Y-ஐ வெளியே கொண்டு வந்தால்

$$Y\ (1 - \cdot 6) = 220 \qquad (6a)$$

முடிவு

$$Y = \frac{220}{1 - \cdot 6} = \frac{220}{\cdot 4} \qquad (7a)$$

எனவே $Y = 550$ (8a)

நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பு கொடுக்கப்பட்டிருக்க, முதலீட்டுச் செலவும் அரசாங்கச் செலவும் நாம் யூகித்துள்ள அளவாக இருக்கும் போது, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) 550 பில்லியன் டாலர்களாகும்.

மொத்தத் தொழில் சேமிப்பு எவ்வளவு, வரிகள் எவ்வளவு என்று திட்டவட்டமாகச் சமன்பாட்டின் மூலம் அறிந்துகொள்வது எப்படி? முதலீடு இவ்வளவென்று திட்டவட்டமாகக் கொடுக்கப் படாமல், Y-ஐச் சார்ந்தது என்று மட்டுமிருந்தால் சமன்பாடுகள் எப்படி யெல்லாம் மாறுகின்றன? இது போன்ற இன்னும் எத்தனையோ விதமான விரிவான சமன்பாடுகளையும் நாம் கண்டுபிடிக்க முடியும்.

4. முதலீடு

நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பு, முதலீட்டின் அளவு, அரசாங்கச் செலவு ஆகியவை ஒன்றையொன்று எப்படிச் செயல்படுத்துகின்றன என்பதைப் பொறுத்துத்தான் நாட்டின் மொத்த உற்பத்தி அளவு (GNP) நிர்ணயமாகின்றது என்பதை முன்றும் அதிகாரத்தில் கண்டோம். இன்றையத் தொழில்வளமிக்க நாடுகளிலெல்லாம் நாட்டின் மொத்த உற்பத்தி பெருமளவில் ஏற்ற இறக்கமடைந்து வந்ததற்கு முக்கிய காரணம் முதலீடு ஏற்ற இறக்கமடைந்ததுதான் என்பதை வரலாறு புலப்படுத்துகிறது. முதலீட்டுச் செலவு பெருமளவில் ஏற்ற இறக்கம் அடைந்ததால்தான், பெருக்கியின் வாயிலாக மொத்தச் செலவீடும் மொத்த உற்பத்தியும் மிகப் பெருமளவில் ஏற்ற இறக்கமடைந்து வந்துள்ளன. இவ்வாறாக, சில சமயங்களில் நாட்டின் முழுத் திறன் உற்பத்தியைக் காட்டிலும் நடைமுறை உற்பத்தி அளவு குறைந்து, அதனால் தொழிலாளர்களும் இயந்திர சாதனங்களும் வேலையிழக்க நேரிடுகிறது; வேறு சில சமயங்களிலோ நாட்டின் முழுத் திறன் உற்பத்தியைக் காட்டிலும் நடைமுறை உற்பத்தி எஞ்சி, அதனால் பொருளாதார வீக்கம் தோன்றிவிடுகிறது. இதற்கெல்லாம் காரணம் என்ன வென்பதை அறியவேண்டுமாயின், முதலீட்டு அளவைப் பாதிக்கக் கூடிய சக்திகள் யாவை என்பதை முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதுதான் இவ்வதிகாரத்தின் முக்கிய நோக்கமாகும்.

போர்க் காலத்தில் அரசாங்கத்தின் செலவு பெருமளவில் அதிகரிப்பது இயல்புதான்; ஆனால், சாதாரண காலங்களில் நாட்டின் மொத்த உற்பத்தியில் பங்கு கொள்ளும் இனங்களில் முதலீடுதான் பெரும்பாலும் அதிக ஏற்ற இறக்கம் அடைகிறது. இயந்திர சாதனங்களையும், இதர உற்பத்தித் தளவாடங்களையும் உற்பத்தி செய்வது, அவற்றைத் தொழில் நிறுவனங்களில் பொறுத்துவது, கட்டடங்கள் கட்டுவது, பொதுப்பணி வேலைகள் செய்வது ஆகிய அனைத்துமே நாட்டின் உற்பத்தி சக்தியைப் பெருக்கக்கூடிய மூலதன இருப்பை அதிகரிக்கின்றன. ஆனால்,



படம் 1 – 1. 1910 – 1969 வரை அமெரிக்காவில் செய்யப்பட்ட உள்நாட்டுத் தனியார் துறை மொத்த முதலீடு (மாறுத டாலர் மதிப்பில்)

இவ்வகையான முதற் கருவிப் பொருள்கள் ஆண்டுதோறும் ஒரே சீராக அதிகரிப்பதில்லை; பெரும்பாலும் பல ஆண்டுகள் வரை அவை அதிகரித்துக் கொண்டே வந்து, திடீரெனச் சரிந்துவிடுகின்றன. அமெரிக்க நாட்டுப் பொருளாதார வரலாற்றை எடுத்துக்கொண்டால் கடந்த நூறுண்டுகளில் எத்தனையோ முறை பொருளாதார மந்தங்கள் ஏற்பட்டு நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலையச் செய்துள்ளன; சான்றாக, 1870 முதல் 1879 வரை, 1890 முதல் 1899 வரை, 1907-ல், 1921-ல், 1930 முதல் 1939 வரை பல பொருளாதார மந்தங்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கெல்லாம் நாட்டின் முதலீட்டுச் செலவுகள் குறைந்துவிட்டதுதான் முக்கியமான காரணமாகும். இப் பெரிய பொருளாதார மந்தங்களுக்கிடையே அவ்வப்போது மிதமான மந்தங்களும் தோன்றி நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை ஓரளவு பாதித்துள்ளன; இதற்கும் முதலீடு குறைந்ததுதான் காரணமாகும். 1929ஆம் ஆண்டிற்குப் பின்னர், அமெரிக்காவில் தனியார் முதலீட்டுச் செலவு எப்படியெல்லாம் ஏற்ற இறக்கமடைந்து வந்துள்ளது என்பதைப் படம் 4 – 1 புலப்படுத்துகிறது.

முதலீடு எத்தனையோ வகைப்படும்; அவற்றில் தொழிலுக்குத் தேவையான இயந்திர சாதனங்களையும் பிற உற்பத்தித் தளவாடங்களையும் தொழில் நிறுவனங்கள் கொள்முதல் செய்வது, தொழில்களின் இருப்புச் சரக்குகளை அதிகரிப்பது, குடியிருப்பு மனைகள் கட்டுவது ஆகியவைதான் மிக முக்கியமான வகைகள் ஆகும். இவற்றில் ஒவ்வொன்றைப் பற்றியும் சற்று விரிவாக ஆராய்வோம்.

தொழில்களுக்குத் தேவையான இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் கொள்முதல் செய்தல்

புதுமைகளும் முதலீடும் (Innovations and Investment)

தொழில் முதலீடுதான் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தும் மிக முக்கியமான வழிபோலும். உற்பத்தி செய்வதில் புதுமையான வழிமுறைகளைக் கண்டுபிடித்தால் அவையனைத்தும் இயந்திர சாதனங்களிலும் தளவாடங்களிலும்தான் பெரும்பாலும் உருவாகின்றன. அமெரிக்க நாட்டுப் பொருளாதார வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஒரு மகத்தான யுகமாகும்; அந் நூற்றாண்டில்தான் இரயில் பாதைகள் நாடெங்கும் உருவாகி, போக்கு வரத்து வசதிகளை மட்டுமன்றி, புதிய

அங்காடிகளையும் உருவாக்கின ; அதோடு, ஏராளமான முதலீடும் செய்யப்பட்டு, அமெரிக்க நாட்டுப் பொருளாதார வளர்ச்சியில் ஒரு புதிய திருப்பத்தையே ஏற்படுத்தின. இரயில் பாதைகளை அமைப்பதற்குத் தண்டவாளங்களைப் பொருத்த வேண்டும் ; பாதையின் குறுக்கே நதிகளும் கால்வாய்களும் இருந்தால் பாலங்களை அமைக்க வேண்டும் ; இதற்கெல்லாம் உருக்கும் தேவைப்படும் ஏராளமாக வேண்டும். அதோடு மட்டுமன்றி என்ஜின்களும் இரயில் பெட்டிகளும் பெருமளவில் உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது ; பொருள்களை எடை போட்டு அனுப்புவதற்கு பெரிய பெரிய முற்றங்களும் தேவைப்படுகின்றன. இவை மட்டுமன்றி, இன்னும் எத்தனையோ வகையான முதலீடுகளைச் செய்ய வேண்டியுள்ளது. அதேபோல் மின்சக்தியைப் பயன்படுத்த வேண்டுமாயின், அச் சக்தியை உருவாக்குவதோடு, நாடெங்கிலும் அதை விநியோகமும் செய்ய வேண்டியுள்ளது. எனவே, மின் உற்பத்தி நிலையங்கள், மின்சக்தியைக் கொண்டு செல்லும் கம்பிப் பாதைகள், மின்சக்தி மாற்றமைவு நிலையங்கள் என்று எத்தனையோ வழிகளில் முதலீடு செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறுக இரயில் பாதைகள், மின்சக்தி, பெட்ரோல், மோட்டார் இதைப்போன்ற இன்னும் எத்தனையோ விதமான புதுமைகள் நம் பொருளாதார வாழ்க்கையில் தோன்றியுள்ளன. இவை அனைத்திற்கும் தொடக்கத்தில் ஏராளமான முதலீடு தேவைப்படுகிறது ; பின்னர் தேவைப்படும் முதலீடு சிறிது சிறிதாகக் குறைகிறது. இவ்வகையான தொழில் முதலீடுகள் அனைத்துமே புத்தம் புதிய தொழில்களை உருவாக்குவதற்கோ, அல்லது புதிய பொருள்களை உற்பத்தி செய்வதற்கோ நேரடியாகப் பயன்படுவதில்லை. எனினும், முக்கியமான புதுமைகள் தோன்றிவிட்டால், அவற்றின் பலனை அனுபவிக்க நாடெங்கிலும் முதலீடு செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறு, புதுமையான வழிகளில் உற்பத்தி செய்வதற்கென்று பெருமளவில் முதலீடு செய்யப்படும்போதும், அம் முதலீடு அதிகரித்துக் கொண்டே வரும்போதும் பொருளாதார மந்தம் ஏற்பட முடியாது. காரணம், புதுமையான வழிகளில் உற்பத்தி செய்யும் தொழில்களில் முதலீடு செய்யும் போது அதனால் பெருமளவில் இலாபம் கிடைக்கும் ; அதோடு மட்டுமன்றி, அத் தொழில்களுக்கு வேண்டிய இயந்திர சாதனங்களையும் பிற தளவாடங்களையும் உற்பத்தி செய்யும் நிறுவனங்களும் தம் உற்பத்தியை விரிவாக்குவதற்கென்று முதலீடு செய்து பெரும் இலாபம் பெறக்கூடும். ஆனால், நாடெங்கிலும் புதுமையான முதலீடு செய்து முடித்த பின்னர் மொத்த முதலீட்டின் அளவு குறைந்து, பெரும் சிக்கலை ஏற்படுத்தக்கூடும். எவ்வாறெனில், புதுமையான தொழிலில் செய்யப்பட்டுவந்த முதலீடு

குறையத் தொடங்கினால், அத் தொழில் வாங்கி வந்த இயந்திர சாதனங்களுக்கும் தளவாடங்களுக்கும் இருந்த தேவை சரிந்து விடும்; எனவே, அவற்றை உற்பத்தி செய்து அளித்து வந்த நிறுவனங்களின் வளர்ச்சி தளரும். அதோடு மட்டுமன்றி, இத் தொழில்களுக்கும் நிறுவனங்களுக்கும் தேவையான உருக்கிற்கும் இதரச் சாதனங்களுக்கும் இருந்த தேவை குறைந்துவிடுமாதலால், அவற்றை அளித்துவந்த நிறுவனங்களின் விற்பனையும் குறைந்துவிடும். இவற்றின் விளைவாக, இத் தொழில்களின் முதலீடு குறைய முற்பட்டு, நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) பெருமளவில் இறங்கிவிடக்கூடும்.

எதிர்பார்க்கும் இலாப வாய்ப்புகளும் முதலீடும்

வருங்காலத்திய இலாப வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டுதான் பெரும்பாலும் முதலீடு செய்யப்படுகிறது. இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் கொண்டு உற்பத்தி செய்யவும், உற்பத்தியான பொருள்களை வருங்காலத்தில் விற்று இலாபம் பெறவும் முடியும் என்பதனால்தான் அவை விலை மதிப்புடையவையாகின்றன. இதில், 'வருங்காலம்' என்ற சொல்தான் முக்கியம். பொதுவாக, இவற்றின் வழியாகப் பல ஆண்டுகளுக்கு வருமானம் வந்துகொண்டே இருக்கும். எனவே, இவற்றிற்கேற்படும் செலவு எவ்வளவு, இவற்றின் வழியாகப் பொருள்களை உற்பத்தி செய்து வருங்காலத்தில் விற்றால் கிடைக்கக்கூடிய இலாபம் எவ்வளவு என்ற தோராயமான மதிப்பீட்டின் அடிப்படையில்தான் இவற்றில் முதலீடு செய்யப்படுகிறது. இவ்வாறாக, வருங்காலத்தில் இலாபம் கிடைக்குமென்று எதிர் பார்த்தால்தான் முதலீடு செய்யப்படுகிறது; இல்லையெனில், முதலீடு செய்யும் எண்ணம் கைவிடப்பட்டுவிடுகிறது.

இதிலிருந்து தெரியும் உண்மை யாதெனில், தொழிலதிபர்கள் எதிர்பார்க்கும் வருங்கால இலாபநட்ட மதிப்பீடுதான் முதலீட்டின் அளவை நிர்ணயம் செய்வதில் முக்கிய பங்கு கொள்கிறது. வருங்காலத்தைப் பற்றிய நம்பிக்கையோ பயமோ இன்றைய நிகழ்ச்சிகளால்தான் உருவாகின்றனவேயன்றி, நமது வெறும் கற்பனையால் அன்று. அண்மையில் நடந்த நிகழ்ச்சிகளும் இன்று நடக்கும் நிகழ்ச்சிகளும் சேர்ந்துதான் வருங்காலத்தை உருவாக்குகின்றன. தொழிலதிபர்களின் வருங்காலத்தைப் பற்றிய எதிர்நோக்கு பெரும்பாலும் கண்டபடி மாறுவது கிடையாது; இருந்தாலும், அவர்கள் எதிர்பார்ப்பது சில சமயங்களில் தவறுகவும் முடியலாம். சான்றாக, இன்றுள்ள மிதமான

பொருளாதாரப் பின்னிறக்கம் வருங்காலத்தில் மிக மோசமான தாகிவிடலாம் என்று தொழிலதிபர்கள் முடிவெடுத்துவிட்டால், நிதமானதாயும் தற்காலிகமாயும் இருந்திருக்கக்கூடிய கஷ்டங்கள் மிகக் கொடியவையாய் ஆகிவிடலாம். பொதுவாக, ஊக வணிகத்தினால் (speculation) பொருளாதார வீக்கம் ஏற்பட்டபோது அளவுக்கு மிஞ்சி இலாபம் பெறலாம் என்று தொழிலதிபர்கள் தவருக நினைத்திருக்கக்கூடும்; பொருளாதாரப் பின்னிறக்கம் ஏற்படும்போது, முன்பிருந்த பொருளாதார வீக்கம் ஊக வணிக நடவடிக்கைகளால் ஏற்பட்டது என்பதைத் தொழிலதிபர்கள் புரிந்துகொண்டதும் அவர்களின் மனப்பான்மை நொடிப்புள்ள தாகத் தோன்றுவது சகஜம்.

முதலீடு மாறுவதற்குரிய அம்சங்களில் இரண்டை மட்டும் இதுவரை ஆராய்ந்தோம். ஒன்று, முதலீட்டின் அளவு புதுமையான உற்பத்தி வழிகளோடு தொடர்புடையது என்பது; மற்றொன்று, வருங்கால எதிர்நோக்கைச் சார்ந்ததாக முதலீடு அமைவது. ஆனால் இவ்விரண்டும் பொதுவான அம்சங்கள்தான்; எனவே, இவ்விரண்டை மட்டும் கொண்டு குறிப்பிட்டதொரு சூழ்நிலையில் முதலீடு எந்த அளவுக்கு நடைபெறுமென்று திட்டவட்டமாகக் கூற முடியாது. இருந்தபோதிலும், நாட்டின் மொத்த உற்பத்தி அளவு ஏன் அடிக்கடி ஏற்ற இறக்கமடைகின்றது என்பதை முழுமையாகத் தெரிந்து கொள்வதற்கு இவ்விரண்டு அம்சங்களையும் நாம் அறிந்திருக்க வேண்டும். இப்போது, தொழில் நிறுவனங்கள் எவ்வளவு முதலீடு செய்வதென்று எப்படித் தீர்மானிக்கின்றன, அத் தீர்மானங்களினால் ஏற்படக் கூடிய பொருளாதார விளைவுகள் யாவை என்பதை ஆராயத் தொடங்குவோம். முதலீட்டின் அளவை நிர்ணயிக்கும் சக்திகளில் மிக முக்கியமானவை இரண்டு. ஒன்று, தொழிலின் விற்பனை அளவு (நடந்ததும் நடைபெறக்கூடியதும்), இரண்டாவது தொழில் இலாபம்.

தலா உருப்படி ஒன்றுக்கு வேண்டிய நிலைமுதல் பொருள்கள்

உற்பத்தி செய்வதற்கு உழைப்பாளிகளும் மூலப் பொருள்களும் இருந்தால் மட்டும் போதாது; கட்டடங்கள், தளவாடங்கள் போன்ற நிலைமுதல் பொருள்களும் (fixed capital) தேவை. தொழில் நிறுவனங்கள் தம்மிடமுள்ள முதற் கருவிப் பொருள்களின் இருப்பை அதிகரிப்பதற்கோ அல்லது அவற்றின் தேய்மானத்தை ஈடு செய்வதற்கோ முதற் கருவிப் பொருள்களை வாங்குகின்றன; இதைத்தான் நாம் முதலீடு என்கின்றோம். ஒரு நிறுவனம் செயல்படுவதற்கு எவ்வளவு முதற் கருவிப் பொருள்கள்

தேவைப்படுகின்றன என்பது உற்பத்தியாகும் உருப்படி ஒன்றுக்கு எவ்வளவு மூலதனத்தைப் பயன்படுத்துவது என்பதையும், மொத்தம் எவ்வளவு உற்பத்தி செய்வது என்பதையும் பொறுத்தது. சான்றாக, மிகச் சிறந்த உற்பத்தி முறையை ஒரு நிறுவனம் பயன்படுத்தினால் 1 மில்லியன் உருப்படிகளுக்கு 2 மில்லியன் டாலர் மதிப்புடைய மூதற் கருவிப் பொருள்கள் தேவைப்படுவதாயும், அந் நிறுவனம் ஆண்டுதோறும் 20 மில்லியன் உருப்படிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதாகவும் வைத்துக்கொள்வோம். அவ்வாறாயின், அந் நிறுவனத்திற்கு 40 மில்லியன் டாலர் மதிப்புடைய நிலைமுதல் பொருள்கள் தேவை. அதன் மூலதன – உற்பத்தி விகிதம் (Capital-output ratio) 2 ஆகிறது. இவ்வாறாக, 1962ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி அமெரிக்காவிலிருந்த முக்கியத் தொழில்களின் மூலதன – உற்பத்தி விகிதத்தை 4 – 1 பட்டியலில் காணலாம். போருக்குப் பின்னர், மூலதன – உற்பத்தி விகிதம் படிப்படியாகக் குறைந்து வந்துள்ளது. மூலதனம் திறன் மிக்கதாய் ஆகிவிட்டதுதான் இதற்குக் காரணமாகும். எனவே, இப்போதுள்ள இயந்திர சாதனங்கள் உற்பத்தித் திறன் மிக்கவையாகும்; அதோடு, ஆலைகளைக் கட்டுவதிலும் பயன்படுத்துவதிலும் சிக்கனங்களும் ஏற்பட்டுள்ளன.

4 – 1 பட்டியல்

1962-ல் அமெரிக்கத் தொழில்களின்
மூலதன – உற்பத்தி விகிதம்

தொழில் அல்லது துறை	1962
பொறிவழியாக்கத் தொழில் அனைத்தும்	·66
மூல உலோகத் தொழில்	1·38
இயந்திர உற்பத்தித் தொழில்	·34
மோட்டார் வாகனத் தொழில்	·48
மோட்டார் இல்லாத பிற வாகனத் தொழில்	·42
கல், மண், கண்ணாடித் தொழில்	·79
பிற உறுதிப் பொருள் உற்பத்தித் தொழில்கள்	·39
உணவு, மதுபானம்	·42
நெசவு	·81
காகிதம்	·83
இரசாயனத் தொழில்	·68
பெட்ரோல், நிலக்கரி	2·28
இரப்பர்	·62
உறுதியற்ற பிற பொருள்கள்	·22

இரயில் போக்குவரத்து	4·63
இதரச் சாலைப் போக்குவரத்து	·70
பொதுப் பணிகள்	3·54
செய்தித் தொடர்பு	1·73
வாணிபமும் மற்ற சில்லரைத் தொழில்களும்	·65
பண்ணை	2·57
ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட எல்லாத் தொழில்களும்	1·01

மூலம் : Bert G. Hickman, Investment Demand & U. S. Economic Growth (Washington, D. C.: The Brookings Institution, 1965), p. 152.

குறிப்பிட்டதோர் அளவு உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு மூலதனத்தைப் பயன்படுத்துவது உசிதமானதென்பது பொறியியல் சார்ந்த பிரச்சினையாகத் தோன்றலாம். சான்றாக, ஒரு மில்லியன் டன் உருக்கை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய ஊதுலைகள், உருண்டு செல்லும் கருவிகள் எத்தனை, இரும்பைக் காய்ச்சும் வசதிகளும் மற்ற தளவாடங்களும், இன்னும் என்னென்ன வேண்டுமோ அதையெல்லாம் கணக்கிட்டுக் கூற முடியும். அவ்வாறு குறிப்பிட்டதோர் அளவு உற்பத்தி செய்வதற்கு வேண்டிய உசிதமான மூலதனம் எவ்வளவு என்பது தொழில்நுட்பப் பிரச்சினை மட்டுமன்று; உண்மையில் அது பொருளாதாரப் பிரச்சினையுமாகும். ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு ஒரு வழி மட்டுமன்றி, எத்தனையோ வழிகளும் தொழில்நுட்ப முறைகளும் உள்ளன. இவற்றில் எந்த முறையைப் பயன்படுத்துவது என்பதுதான் பிரச்சினை. எந்த முறையைப் பயன்படுத்தினால் உயர்ந்த பட்ச இலாபம் கிடைக்குமோ அம்முறைதான் பெரும்பாலும் பயன்படுத்தப் படும். சான்றாக, A, B என்ற இரு உற்பத்தி முறைகளை யூகித்துக் கொள்வோம். இவற்றில் A-க்குச் சில தொழிலாளர்கள் இருந்தால் போதும், ஆனால் சிக்கல் நிறைந்த இயந்திரத் தொகுதிகளில் மிகப்பெரும் முதலீடு தேவை என்றும், B-க்கு எளிய மலிவான தளவாடங்கள் இருந்தால் போதும், ஆனால் ஏராளமான தொழிலாளர் வேண்டும் என்றும் வைத்துக்கொள்வோம். இப்போது, B-க்குப் பதிலாக A-ஐத் தேர்ந்தெடுத்தால், பெருமளவு மூலதனத்தோடு சில தொழிலாளர்களை மட்டும் பயன்படுத்துவது என்றுதான் பொருள். எனவே, இயந்திர சாதனங்களை மலிவாகவும், முதலீட்டுத் தொகையை மலிவான வட்டிக்கும் பெற முடிந்தால் B-க்குப் பதிலாக A தான் பயன்படுத்தப்படும். மேலும், கூலி வீதம் உயர்வாக இருக்கும்போது A முறையைப் பயன்படுத்தினால்தான் கூலி கொடுப்பதில்

சிக்கனம் ஏற்படுகிறது. இவ்வாறாக, இவ்விரு உற்பத்தி முறைகளில் A-யைப் பயன்படுத்துவதா அல்லது B-யைப் பயன்படுத்துவதா என்பது முதற்கருவிப் பொருள்களின் விலை, தொழிலாளர்களின் கூலி ஆகியவற்றை மட்டுமன்றி, முதற்கருவிப் பொருள்களைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய நுட்பத் திறமை இருக்கின்றதா என்பதையும் பொறுத்ததாகும்.

உற்பத்தி முறையில் கண்டுபிடிக்கப்படும் புதுமையான உபாயங்கள் அனைத்தையும் புது மாதிரியான, சிறப்புமிக்க இயந்திர சாதனங்களின் வாயிலாகத்தான் பெரும்பாலும் பயன்படுத்துகின்றோம். விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தின் விளைவாக, தொழில் துறையில் பயன்படும் முதற்கருவிப் பொருள்கள் எவ்வளவோ மேம்பாடு அடைந்துள்ளன. இதனால் உற்பத்தித் துறையில் தொழிலாளர்களைக் காட்டிலும் மூலதனம்தான் அதிகமாகப் பயன்படக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பொதுவாக, பெரும் எண்ணிக்கையில் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாகத்தான் இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துகிறோம். எனவே, எந்த அளவுக்கு நாம் மேம்பாடுள்ள இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துகிறோம் என்பது அவற்றின் விலைகளை மட்டுமன்றி, அவற்றைப் பயன்படுத்தும்போது ஏற்படக்கூடிய பிற செலவுகளையும் சார்ந்ததாகிறது. இந்த விலைகளையும் மற்ற செலவுகளையும்விடத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய கூலி அதிகமாயிருந்தால்தான் அவற்றை அதிகமாகப் பயன்படுத்த முடியும். கடந்த பல ஆண்டுகளாகத் தொழிலாளர்களின் ஊதியம்தான் அதிகமாக உயர்ந்துகொண்டே வந்துள்ளது. எனவே, ஒரு புறம் ஊதியம் உயர்ந்துகொண்டே இருக்க, மறுபுறம் முதற்கருவிப் பொருள்களின் உற்பத்தித் திறன் அதிகரித்துக் கொண்டிருப்பதால் மூலதனப் பொருள்களைத்தான் அதிகமாகப் பயன்படுத்த நேரிட்டுள்ளது.

சுருக்கமாகக் கூறின், ஒரு நிறுவனம் தான் உற்பத்தி செய்யும் பொருளின் உருப்படி ஒன்றுக்கு எவ்வளவு மூலதனத்தைப் பயன்படுத்துவது உசிதமானது என்பது பின்வருவனவற்றைச் சார்ந்ததாகும்: (1) தொழில்நுட்ப முன்னேற்றம், அதனால் ஏற்பட்டுள்ள புதிய உற்பத்தி முறை; (2) முதற்கருவிப் பொருள்களின் விலை, அவற்றை வாங்குவதற்குத் தேவைப்படும் பணத்திற்குக் கொடுக்கவேண்டிய வட்டி; (3) முதற் கருவிப் பொருள்களுக்குப் பதிலாகத் தொழிலாளர்களைப் பயன்படுத்தும்போது, அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய ஊதியத் தொகை.

வேக வளர்ச்சி (The 'Accelerator')

உருப்படி ஒன்றுக்கு வேண்டிய உசிதமான மூலதன அளவு இவ்வளவென்று கொடுக்கப்பட்டிருக்க, ஒரு நிறுவனம் எவ்வளவு மூலதனம் கொண்டிருப்பது நல்லது என்பது அந் நிறுவனத்திற் குள்ள அங்காடி அளவைப் பொறுத்தது; அதாவது, அது உற்பத்தி செய்து விற்பனை செய்யும் அளவைப் பொறுத்தது. ஓர் உருப்படிக்கு எவ்வளவு மூலதனம் தேவைப்படுகிறதோ, அந்த அளவை நிறுவனம் விற்பனை செய்யும் அளவால் பெருக்கினால் அதற்குத் தேவைப்படும் மொத்த மூலதனம் எவ்வளவென்று தெரியும். எனவே, நிறுவனத்திற்கு வேண்டிய மூலதனத்தின் அளவு அதன் விற்பனை அளவைப் பொறுத்தது. நிறுவனம் உற்பத்தி செய்யும் அளவு மாறுமல் நீண்ட காலத்திற்கு அப்படியே இருந்தால் மூலதனத்தை அதிகமாக்க வேண்டிய அவசியமில்லை; இருந்தபோதிலும், இருக்கின்ற மூலதனம் தேய்மானமடைவதால், அதை ஈடுகட்ட வேண்டிய அளவிற்கு மட்டும் புதிய முதற் கருவிப் பொருள்களை வாங்க வேண்டி யுள்ளது. ஆனால் நிகர முதலீட்டிற்கு அவசியமில்லை. (இருக் கின்ற மூலதன இருப்போடு புதிதாகச் சேர்க்கும் மூலதனம்தான் நிகர முதலீடாகும் என்பதை மறந்துவிடாதீர்கள்.)

எனினும், உற்பத்தி அளவும் விற்பனை அளவும் உயரும் போது, தேய்மான ஈட்டளவிற்கு மட்டும் மூலதனம் இருந்தால் போதாது; அந் நிறுவனம் புதிய இயந்திர சாதனங்களை வாங்கி, தன் மூலதன இருப்பை அதிகரிக்க வேண்டியுள்ளது. உற்பத் தியும் விற்பனை அளவும் உயர உயர, நிகர முதலீடு செய்து கொண்டே இருந்தால்தான் வேண்டிய மூலதனம் இருக்கும். விற்பனை உயர்வு குறைய நேரிடும்போது, நிகர முதலீட்டையும் குறைக்க வேண்டியுள்ளது. எனவே, நிகர முதலீடு உயர்வ தற்கும் தாழ்வதற்கும் விற்பனை அளவு ஏற்ற இறக்கமடைவது தான் காரணமாகும். நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) அதிகரிக்கும் வேகத்தைப் பொறுத்துத்தான் முதலீட்டின் அளவு நிர்ணயமாகிறது. மொத்த உற்பத்தி அளவு எவ்வளவு உயர்ந்த மட்டத்தில் இருந்தபோதிலும், அது உயர்கின்ற வேகம்தான் முதலீட்டிற்கு முக்கியம்; வேகம் குறைந்துவிட்டால் முதலீடும் குறைந்துவிடும். இவ்வாறாக, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) வளர்கின்ற வேகத்தையும் தளர்கின்ற வேகத்தையும் பொறுத்துத்தான் முதலீட்டின் அளவு நிர்ணயமாகிறது. எனவே, நாட்டின் மொத்த உற்பத்தி வளர்கின்ற வீதத் திற்கும் முதலீட்டின் அளவிற்கு முள்ள தொடர்பைத்தான்

'வேக வளர்ச்சி' (acceierator) என்றழைக்கின்றோம். இதிலிருந்து புலப்படும் உண்மை யாதெனில், பொருளாதார நடவடிக்கைகளும் விற்பனை அளவும் எவ்வளவு உயர்ந்த மட்டத்தில் இருந்தாலும், அவற்றின் வளர்ச்சி வீதம்தான் தொழில் முதலீட்டை ஊக்குவிப்பதாகும்.

வேக வளர்ச்சித் தத்துவத்தினால் ஒரு நிறுவனம் எப்படி வளரக்கூடும் என்பதை 4–2 பட்டியல் எடுத்துக் காட்டுகிறது. ஆண்டுதோறும் 2 மில்லியன் டாலர் மதிப்புடைய இயந்திர சாதனங்களைக் கொண்டு 1 மில்லியன் உருப்படிகளை உற்பத்தி செய்யக்கூடிய நுட்ப முறைதான் ஒரு நிறுவனத்திற்கு அதிகமான இலாபம் தரக்கூடியது என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் 20 மில்லியன் உருப்படிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு 40 மில்லியன் டாலர் மூலதன இருப்பு அந் நிறுவனத்திற்கு வேண்டும். அதோடு, மூலதனத் தேய்மானத்தைச் சரிக்கட்டுவதற்கு மட்டும் அந் நிறுவனம் 3 மில்லியன் டாலருக்குப் புதிய இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் வாங்கவேண்டியிருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். அப்போது அந் நிறுவனத்தின் விற்பனை அளவு மாறுமல் 20 மில்லியன் டாலராகவே இருந்தால் நிகர முதலீடு செய்யத் தேவையில்லை; தேய்மான ஈட்டளவிற்கு மட்டும்தான் அதன் மொத்த முதலீடு இருக்கும். ஆனால் விற்பனை விரிவாகத் தொடங்கிவிட்டால், புதிய முதலீடும் தேவைப்படுகிறது. சான்றாக, விற்பனை 1 மில்லியன் டாலர் அதிகரித்தால், நிகர முதலீடு 2 மில்லியன் டாலர் தேவைப்படும்; விற்பனை 3 மில்லியன் டாலர் அதிகரித்தால், 6 மில்லியன் டாலர் நிகர முதலீடு அவசியப்படுகிறது.

4–2 பட்டியல்

ஒரு நிறுவனத்தில் பொருந்தப்படும் வேக வளர்ச்சித் தத்துவம்
(மில்லியன் டாலர்களில்)

ஆண்டு	விற்பனை	வேண்டிய மூலதனம்	நிகர முதலீடு	தேய்மான ஈட்டு முதலீடு	மொத்த முதலீடு
1	$ 20	$ 40	$ 0	$ 3	3
2	20	40	0	3	3
3	21	42	2	3	5
4	24	48	6	3	9
5	27	54	6	3	9
6	29	58	4	3	7
7	30	60	2	3	5
8	30	60	0	3	3
9	28½	57	–3	3	0

நிறுவனத்தின் நிகர முதலீடும் தேய்மான ஈட்டு முதலீடும் சேர்ந்ததான் அதன் மொத்த முதலீடாகிறது. விற்பனை விரிவாகிக் கொண்டே போகும்போது மொத்த முதலீடும் உயர்கிறது என்பதை 1-2 பட்டியலில் காணலாம். இந் நிறுவனத்தின் விற்பனை அதிக அளவு உயரும்போதுதான் (4, 5 ஆவது ஆண்டு களில்) மொத்த முதலீடும் அதிகமாக உயர்கின்றது. உயர்ந்த விற்பனை இறங்கும்போது முதலீடும் குறைகின்றது. விற்பனை அளவு முன்பிருந்ததைக் காட்டிலும் உயராமல் அப்படியே இருந்துவிட்டால் (பட்டியலின்படி 8-வது ஆண்டில்) நிகர முதலீடு பூஜ்யத்திற்குச் சரிந்துவிடுகிறது. இறுதியாக, முந்திய ஆண்டின் விற்பனை அளவைக் காட்டிலும் 9-வது ஆண்டின் விற்பனை குறைந்துவிடுகிறது; இதனால் தேவைப்படும் மூலதனம் குறைக்கப்பட வேண்டியுள்ளது; அவ்வாறு நேரிடும்போது நிகர முதலீடு எதிர்க்கணியமாகிவிடுவதால் தேய்மான ஈட்டிற்கான 3 மில்லியன் டாலர் முதலீட்டைக் கூடச் செய்யாமல் மொத்த முதலீட்டின் இருப்பை நிறுவனம் குறைத்துக்கொள்கிறது.[1]

முதலீட்டுப் பொருள்களின் உற்பத்தி ஏனைய பொருள்களைக் காட்டிலும் அதிகமாக ஏற்ற இறக்கமடைவதற்குப் பல காரணங்கள் உள்ளன; அக் காரணங்களில் ஒன்றை இப் பட்டியலே புலப்படுத்துகிறது. நாம் சான்றாகக் கொண்ட இந் நிறுவனம் நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்வதாக வைத்துக் கொள்வோம். அதனுடைய விற்பனை அளவு 20 மில்லியன் டாலரிலிருந்து 30 மில்லியன் டாலருக்கு உயர்ந்து, பின்னர் 28·5 மில்லியன் டாலருக்குக் குறைந்துவிடுகிறது; அதாவது விற்பனை 50 சதவீதம் உயர்ந்து, பின்னர் 5 சதவீதம் இறங்கிவிடுகிறது. ஆனால் இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் விற்பனையோ 300 சதவீதம் உயர்வடைந்து, பின்னர் பூஜ்ஜிய சதவீதத்திற்குச் சரிந்துவிடுகிறது.

இவ்வாறாக, முதலீட்டின் அளவு விற்பனையின் வளர்ச்சி வீதத் தத்துவத்தை ஓரளவு சார்ந்துள்ளது என்பது உண்மைதான்; எனினும், விற்பனை வளர்ச்சி வீதம்தான் முதலீட்டின் அளவை நிர்ணயிக்கிறது என்று சொல்ல முடியாது. விற்பனை அளவு உயராவிட்டால் உற்பத்தி சக்தியை அதிகரிப்பதற்கு வேண்டிய முதலீடு தேவையில்லை; ஆனால் அதே சமயம், தம் உற்பத்தி சக்தியை நவீன மயமாக்குவதற்கென்று தொழில் நிறுவனங்கள்

1. தேய்மானத்தைச் சரிக்கட்ட முடியாமல் போனால் நிகர முதலீடு எதிர்க் கணியமாகிறது (முதலீட்டிழப்பு) என்பதைக் கவனியுங்கள். இந் நிகழ்வில் தேய்மான ஈட்டிற்குத் தேவைப்படும் அளவைக் காட்டிலும் நிகர முதலீடு அதிக மாயிருக்க முடியாது; முதலீட்டிழப்பு எந்த வீதத்தில் இருக்கக்கூடுமென்பதை யும் இதுதான் வரையறுக்கின்றது.

முதலீடு செய்யக்கூடும். புதிய நுட்பமான உற்பத்தி முறை கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால், புது வகையான முதலீடு தோன்றலாம்; அதாவது, உற்பத்திச் செலவைக் குறைத்து, இலாபத்தை அதிகரிக்கக்கூடிய புதுமையான இயந்திர சாதனங்களும் தளவாடங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் நிறுவனங்கள் அவற்றை வாங்கிப் பயன்படுத்தக்கூடும். தொழிலாளர்களின் ஊதியம் தருவதைக் காட்டிலும் உழைப்பை மிச்சப்படுத்தக்கூடிய புது வகையான இயந்திரங்களைப் பயன்படுத்துவது இலாபகரமாகத் தோன்றினால் அவ்வித இயந்திரங்களில் முதலீடு செய்யப்படலாம்; ஊதியம் தாழ்வாக இருந்தபோதோ அவ்வித முதலீடு இலாபம் தரக்கூடியதாக இல்லாமல் இருந்திருக்கக்கூடும். சுருக்கமாகக் கூறின், தொழில் நிறுவனங்கள் தம் மூலதன இருப்பை அதிகரிப்பதற்காக மட்டும் முதலீடு செய்வதில்லை; நிறுவனங்களை நவீனமயமாக்குவதற்கும் முதலீடு செய்கின்றன.[2] எனவே, இவ்விரண்டில் எது முதலீட்டின் அளவை நிர்ணயிப்பதென்று திட்டவட்டமாகக் கூற முடியாது.

இலாபமும் முதலீடும்

தொழில் நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கு அடிப்படைக் காரணம் இலாபம் பெறுவதுதான். சான்றாக, வளர்ச்சி வேக முதலீட்டை எடுத்துக் கொள்வோம். விற்பனை அளவு அதிகரிக்கும்போது, உற்பத்தித் திறனைக் கூட்டித்தான் அதிக அளவில் உற்பத்தி செய்ய முடியும்; எனவே, மேலும் அதிகமாக உற்பத்தி செய்து, அவற்றை விற்று இலாபத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காகத்தான் இம் முதலீடு செய்யப்படுகிறது. அதேபோல், ஒரு நிறுவனம் உற்பத்திச் செலவை மிச்சப்படுத்தக்கூடிய தளவாடங்களை வாங்கிப் பயன்படுத்தும்போது உழைப்பா அல்லது மூலப் பொருளா மிச்சமாகலாம்; அவ்வாறு ஏற்படும் மிச்சம் அப் புதிய தளவாடங்களுக்குக் கொடுக்க வேண்டிய விலையைக் காட்டிலும் அதிகமாயிருக்கக்கூடும். எனவே, இங்கும் இலாபத்தை அதிகரிப்பதுதான் முதலீட்டின் நோக்கமாகிறது. இவ்வாறாக, வருங்காலத்தில் எதிர்பார்க்கும் இலாபம்தான் முதலீட்டின் தூண்டுகோலாகிறது; எனினும், பெரும்பாலும் நடப்பிலுள்ள இலாபத்திலிருந்துதான் முதலீட்டிற்கு வேண்டிய நிதி கிடைக்கிறது; எனவே, நடப்பிலுள்ள இலாபமும் முதலீட்

2. முதலீடு எந்த வகையில், சான்றாக, ஒரு புதிய ஆலையைக் கட்டும் வகையில் அமைந்தாலும், அதில் இவ்விரண்டு அம்சங்களுமே இருக்கும். விற்பனை அளவு அதிகரித்திருப்பதால் அதிகமாக உற்பத்தி செய்யவதற்கென்று இவ்வாலை கட்டப்படலாம்; அதே சமயத்தில் நிறுவனம் மிகுந்திருள பழைய ஆலைகளைக் காட்டிலும் அதிக மூலதனம் தேவைப்படுகின்ற, ஆனால் உழைப்பை மிச்சம் செய்யக்கூடிய நவீன முறையிலும் இப் புதிய ஆலை கட்டப்படக்கூடும்.

டிற்கு முக்கியமான அம்சமாகிறது. இவ்வாறுக, இலாபம் என்பது இரண்டு வகையில் முக்கியமானதாகிறது; முதலீடு செய்வதன் குறிக்கோளாக இருப்பதும் இலாபம்தான்; அதே சமயத்தில் புதிய முதலீட்டிற்கு வேண்டிய நிதியும் பொதுவாக இலாபத்திலிருந்துதான் கிடைக்கிறது.

திட்டவட்டமாகக் கூறவேண்டுமாயின், எதிர்பார்க்கும் வருங்கால இலாபம்தான் முதலீட்டைத் தூண்டுவதில் முக்கிய பங்கு கொள்கிறது. குறிப்பிட்டதொரு முதலீடு இலாபகரமாக இருக்குமா, அம்முதலீட்டைச் செய்வதால் கிடைக்கக்கூடிய பலன் என்ன என்ற வினாக்களின் அடிப்படையில் நோக்கும்போது இலாபம்தான் முதலீட்டிற்கு அடிப்படையான தூண்டுகோலாக உள்ளது என்று தெரியும். சான்றாக, ஒரு நிறுவனம் தன்னிடம் இருக்கின்ற மூலதனத்தைக் கொண்டு சிறிதளவு இலாபம் மட்டுமே பெறக்கூடும்; ஆனால் புதுமையான உற்பத்தி முறையைப் பயன்படுத்தினால் பெருமளவில் இலாபம் கிடைக்கக்கூடும். மாறாக, பொருளாதார வீக்கம் உச்சக் கட்டத்திலிருக்கும்போது ஒரு நிறுவனம் பெருமளவில் இலாபம் பெற்றுக் கொண்டிருக்கலாம்; ஆனால் இவ்வீக்கம் குறைந்து, இன்னும் சில நாட்களுக்குள் உற்பத்தி, விற்பனை அனைத்தும் சரிந்துவிடப் போகிறதென்று அந்நிறுவனத்தின் நிர்வாகிகள் முன்கூட்டியே அறிந்திருந்தால் தம் உற்பத்தி சக்தியை அதிகரிப்பதற்கென்று முதலீடு செய்யார். இவ்வாறுக, புதிய முதலீட்டிலிருந்து உறுதியாக இலாபம் கிடைக்குமா என்பதை நடப்பிலுள்ள இலாபத்தைக் கொண்டு அறிந்துகொள்ள முடியாது; எனினும், வருங்கால இலாபம் எப்படி இருக்குமென்பதை நடப்பிலுள்ள இலாபம் ஓரளவிற்குப் புலப்படுத்தக்கூடும். நடப்பிலுள்ள விற்பனையிலிருந்து கிடைக்கும் இலாபம் அதிகமாயிருந்தால், வருங்காலத்திலும் அப்படித்தானிருக்கும் என்று தத்தம் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் விதத்தில் நிறுவனங்கள் முதலீடு செய்வதும் உண்டு. (இதற்கு நேர்மாறான சான்றுகளும் உள்ளன; அவற்றை நாம் புறக்கணித்துவிடுவதாக வைத்துக் கொள்வோம்.) அவ்வாறாயின், நடப்பில் கிடைக்கும் இலாபம் அதிகமாக இருக்கும்போது, தொழில் நிர்வாகிகள் வருங்கால இலாபமும் இப்படித்தான் அதிகமாக இருக்குமென்று எதிர்பார்ப்பர். எனவே, புதிய முதலீடு செய்வது இலாபகரமாக இருக்குமா இருக்காதா என்பதை மதிப்பிடும்போது, பெரும்பாலும் வருங்காலத்திய நட்ட ஆபத்துக்களை அவ்வளவு பெரிதாக எண்ணாமல், இலாபவாய்ப்பிற்குத்தான் அதிக முக்கியத்துவம் தர முற்படுவர். நடப்பிலுள்ள மூலதனத்திலிருந்து கிடைத்துக் கொண்டிருக்கும்

இலாபத்திற்கும், புதிய முதலீட்டின் மூலம் வருங்காலத்தில் கிடைக்கக்கூடிய இலாபத்திற்குமுள்ள தொடர்பைத் திட்டவட்டமாக மதிப்பிட முடியாது; இருந்தபோதிலும், நடப்பில் கிடைக்கும் இலாபம் அதிகமாயிருந்தால் முதலீடு தூண்டப்படலாம்.

எதிர்பார்க்கின்ற இலாபம்தான் புது முதலீட்டிற்குத் தூண்டுகோலாகும்; எனினும், அம் முதலீட்டிற்குத் தேவையான நிதி பெரும்பாலும் நடப்பிலுள்ள இலாபத்திலிருந்துதான் கிடைக்கிறது. பொதுவாக, கார்ப்பரேஷன்கள் தம் இலாபத்தில் ஒரு பகுதியைத்தான் இலாப ஈவாகப் பங்குதாரர்களுக்கு அளிக்கின்றன. (தற்போது, வரிகள் போக எஞ்சிய இலாபத்தில் 50 சதவீதம் இலாப ஈவாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.) எஞ்சிய பகுதியை, மீண்டும் இயந்திர சாதனங்கள், தளவாடங்கள் முதலியவற்றை வாங்குவதற்கும், ஆராய்ச்சி நடத்துவதற்கும், கார்ப்பரேஷன் வளர்ச்சிக்கும் என்று முதலீடு செய்கின்றன. தம்மிடம் வைத்துக்கொண்ட இலாபத்தைத் தவிர, மற்றொரு வகைச் சொந்த நிதியும் நிறுவனத்திடம் உண்டு; அதாவது, நிகர இலாபம் எவ்வளவென்று அளவிடும்போது, தேய்மான நிதிக்கென்று ஒரு பகுதி இலாபத்தைக் கழித்துக்கொள்கின்றன. இந்தப் பகுதியையும் முதலீட்டிற்கென்று செலவிடக்கூடும். இவ்வாறுக, தம்மிடமே வைத்துக்கொண்ட இலாபம், தேய்மான நிதி என்று இருவகையான சொந்த நிதி நிறுவனங்களிடம் உண்டு; இந்நிதி முழுவதையும் முதலீட்டிற்கென்று பயன்படுத்தக் கூடும். முதலீடு செய்வதற்கென்று வேறு வழிகளிலும் நிறுவனங்கள் நிதியைத் திரட்டலாம். சான்றுக, பாங்கியிடமிருந்தோ அல்லது புதிய பங்குகளை (share) வெளியிட்டோ கடன் பெறலாம்; எனினும், பெரும்பாலான நிறுவனங்கள் தம் கடனை அதிகரிக்கவோ அல்லது அடிக்கடி பங்குகளை வெளியிட்டு விற்கவோ முன்வருவதில்லை. எனவே, புதிய முதலீடு செய்வதற்கு வேண்டிய மூலதனத்தைச் சொந்த நிதியிலிருந்து அடைவதுதான் நல்லதென நினைக்கின்றன. இதற்கெல்லாம் கெடுபிடியான விதிகள் ஒன்றும் கிடையாது. எனினும், எவ்வளவுதான் நிதி கிடைத்தாலும், புதிய முதலீட்டிலிருந்து இலாபம் கிடைக்காது என்று எதிர்பார்த்தால் நிறுவனங்கள் அவ்வகை முதலீட்டைச் செய்ய மாட்டா. புதிய முதலீட்டிற்குப் பெரும்பாலும் சொந்த நிதியைத்தான் நிறுவனங்கள் பயன்படுத்த விரும்புகின்றன என்பதை மேலே குறிப்பிட்டோம். இதன் பொருள் என்ன வென்றால், இலாபம் அதிகரித்துக் கொண்டே இருந்தால்தான் முதலீடும் வளர்ந்துகொண்டிருக்கும்; மாறுக, இலாபம்

குறைந்துகொண்டே போனால் முதலீடு சுருங்கிக் கொண்டிருக்கும்.

தொழில் வளம் மிகுந்த நாடுகளில் முதலீட்டின் அளவு ஏற்ற இறக்கமடைந்து வந்துள்ளன என்பதை அவற்றின் பொருளாதார வரலாற்றிலிருந்து அறிகிறோம். இதற்குப் பல காரணங்கள் உள்ளன; அவற்றில், நாம் சற்று முன்னர் பார்த்ததுபோல், இலாபத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கம் ஒரு காரணமாகும். வருமான இனங்களில் இலாபம்தான் அதிக ஏற்ற இறக்கமுடையது. பொருளாதார வீக்கத்தின்போது பெருமளவிற்கு உயர்கின்றது; மந்தத்தின்போதோ மிக விரைவாகச் சரிந்துவிடுகிறது. இதனால்தான் வாணிகச் சுழலின்போது (trade cycle) இலாபம் அதிக அளவிற்கு ஏற்ற இறக்கமடைகிறது. இலாபம் முதலீட்டு நிதியின் முக்கிய ஊற்றுக மட்டுமன்றி, தொழிலதிபர்களின் மனப்பான்மையை உருவாக்கும் மூலமாக இரப்பதும்தான் காரணமாகும். நாட்டின் மொத்த உற்பத்தியில் பங்கு கொள்ளும் இனங்களில் முதலீடுதான் அதிக ஏற்ற இறக்கமடைகிறது; இதற்குத் துணை செய்வது துரிதமாக ஏற்ற இறக்கமடையும் இலாபம்தான்.

முதலீட்டின் அளவு அதிகமாக ஏற்ற இறக்கமடைவதற்கு விற்பனை அளவில் ஏற்படும் மாறுதல்கள் (வேக வளர்ச்சி) காரணமா, அல்லது இலாபத்தில் தோன்றும் மாறுதல்கள் காரணமா என்பதில் பொருளாதார அறிஞர்களிடையே கருத்து முரண்பாடு தோன்றுவதுண்டு. விற்பனை அளவு அதிகரித்தது என்றாலே புதிய முதலீட்டிலிருந்து போதுமான அளவு இலாபம் கிடைக்கின்றது என்றுதான் பொருள்; ஆனால் புதிய முதலீடு செய்து, உற்பத்திச் சக்தியை அதிகரிப்பதற்கு வேண்டிய நிதியைக் கடனாகப் பெறுவதற்குத் தொழில் நிர்வாகிகள் பெரும்பாலும் விரும்புவதில்லை; மாறாக, நிறுவனத்தின் சொந்த நிதியைத்தான் பயன்படுத்த விரும்புகின்றனர்; ஆனால் சொந்த நிதியோ வேண்டிய அளவிற்கு இருப்பதில்லை. எனவே, விற்பனை அளவில் ஏற்படும் ஏற்ற இறக்கம்தான் (வேக வளர்ச்சி) காரணமாகும் என்று ஒரு சாரார் கருதுகின்றனர். இதற்கு நேர்மாறாக, புதிய முதலீடு செய்ய வேண்டுமாயின், நிறுவனத்தின் சொந்த நிதியைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துவோர் இலாபத்தில் ஏற்படும் மாறுதல்தான் காரணமென்று நினைக்கின்றனர். இவ்விரண்டு முரண்பாடான கருத்துகளில் எது உண்மையென்று எண்பிப்பதற்குப் போதுமான சான்றுகள் கிடையாது. பெரும்பாலும் இவ்விதச் சர்ச்சைகளில் இருப்பதைப்போல்,

இதிலும்கூட இரண்டிலும் உண்மை இருப்பதாகவே தோன்று கிறது. முதலீட்டின் அளவு ஏற்ற இறக்கமடைவதை ஆராயும் போது, விற்பனை செய்யக்கூடிய அளவில் ஏற்படும் மாறுதல்களை மட்டுமன்றி, இலாபத்தில் தோன்றும் மாறுபாடுகளையும் ஆராய் வதுதான் நல்லது.

முதலீடு செய்யும் நிறுவனங்கள் பெரும்பாலும் தம்மிடமுள்ள சொந்த நிதியைத்தான் பயன்படுத்துகின்றன; எனினும், அந்நிதி வேண்டிய அளவுக்கு இல்லாதபோது கடனும் பெற்று முதலீடு செய்வதுண்டு. அவ்வாறு, கடன் பெற்று முதலீடு செய்வதால் முதலீட்டின் அளவை நிர்ணயிக்கக்கூடிய காரணிகள் வட்டியும் கடன் நிபந்தனைகளும் இடம் பெறுகின்றன. வட்டி வீதம் உயர் வாக இருந்தால், கடன் வாங்கி முதலீடு செய்வது இவ்வளவு இலாபகரமாக இராது; எனவே, நிறுவனங்கள் தம்மிடமுள்ள சொந்த நிதியைத்தான் பயன்படுத்த வேண்டியுள்ளது. இந்த மற்றோர் உண்மையையும் குறிப்பிடுவது நல்லது. அதாவது, வட்டி வீதம் மாறுவதால் மொத்த முதலீடு எந்த அளவுக்குப் பாதிக்கப் படுகிறது என்பதிலும் பொருளாதார அறிஞர்களிடையே கருத்து முரண்பாடு உள்ளது. 1935 முதல் 1939வரையும், இரண்டாம் உலகப் போர் முடிந்த ஒரு சில ஆண்டுகளின் போதும், வட்டி வீதம் மாறுவதால் தொழில் முதலீடு அவ்வள வாகப் பாதிக்கப்படுவதில்லை என்ற கருத்து பெரும்பாலான பொருளாதார அறிஞர்களிடையே காணப்பட்டது. (இன்றும்கூட, வீடு கட்டுவது, உறுதியான நுகர்வுப் பொருள்கள் வாங்குவது போன்றவைதான் வட்டி வீதத்தால் பாதிக்கப்படுகின்றனவே யன்றி, தொழில் முதலீடுகள் அல்ல என்றுதான் அவர்கள் அனை வருமே நினைக்கின்றனர்.) எது எவ்வாறிருப்பினும், முதலீட்டின் அளவு நிர்ணயமாவதில் வட்டி வீதத்திற்கும் ஓரளவு பங்கு உண்டு என்பதுதான் இன்றைய பொருளாதார அறிஞர்களின் கருத்தாகும்.[3]

3. தொழில் முதலீட்டை நிர்ணயிக்கும் சக்திகளைப் பற்றி ஆராய அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விவர ஆய்வு முடிவின்படி வட்டி வீதத் திற்கும் அச் சக்தி உண்டு என்று தெரிகிறது. எனவே, முதலீட்டின் அளவை நிர்ணயிக்கும் சக்திகளை ஆராயும்போது வட்டி வீதத்தைப் புறக்கணித்துவிட்டு ஆராய்வது மிகக் கடினமாகும்; அவ்வாறு ஆராய்வதற்கு எத்தனையோ வித்தியாசமான, சிக்கல் நிறைந்த புள்ளி விவரங்கள் தேவை. வரலாற்றின்படி பார்த்தால், விற்பனை பெருமளவு அதிகரித்து இலாபம் பெருகியபோதெல்லாம வட்டி வீதமும் உயர்வாக இருந்ததாகவே தெரிகிறது; எனவே, உயர்ந்த இலாபமும் அதிக விற்பனையும் முதலீட்டையும் உயர்த்தும்படுகின்றன என்பது தெளிவாகிறது. எனவே, வெறும் புள்ளி விவரங்களை மட்டும் வைத்துக் கொண்டு வட்டி வீதம் உயர்வாக இருந்தாலும் முதலீடு பெருகியுள்ளது என்றும், எனவே, உயர்ந்த வட்டி வீதம் இருந்தால்கூட முதலீடு பாதிக்கப்படாது என்றும் முடிவுக்கு வரலாம்; ஆனால் அதை எண்பிப்பதற்கு வேண்டிய எல்லாப் புள்ளி விவரங் களையும் சேகரிப்பது மிகக் கடினம்; அதோடு, இன்னுங்கூட நமக்குத் தெரியா தவை எவ்வளவோ உள்ளன.

4 – 3 பட்டியல் முதலீட்டை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகள்

பொருளாதார நிகழ்ச்சி	அந்நிகழ்ச்சிகள் எப்படி இலாப எதிர்நோக்கைப் பாதிக்கின்றன	அதனால் முதலீட்டுத் தீர்மானத்தில் ஏற்படும் விளைவு என்ன
விற்பனை வளர்ச்சி	புதிய உற்பத்தி சக்தியை உருவாக்கி, இலாபத்தை அதிகரிக்கக் கூடும்.	உற்பத்தி சக்தியை விரிவாக்க வேக வளர்ச்சி முதலீடு செய்யப்படுகிறது.
தொழில்நுட்ப வளர்ச்சி, ஊதிய வீத உயர்வு	நிறுவனங்களை நவீன மயமாக்குவதிலும், உழைப்பை மிச்சம் செய்வதிலும் முதலீடு.	நவீனமயமாக்குவதிலும், உழைப்பை மிச்சம செய்வதிலும் முதலீடு செய்யப்படுகிறது.
நடைமுறையில் அதிகப்பட்ச இலாபம்	நம்பிக்கை ஊட்டக்கூடிய வழியில் வருங்கால விற்பனையையும் இலாபத்தையும் மதிப்பிடக்கூடும்.	வேகவளர்ச்சி முதலீடும் நவீன மயமாக்குதல் முதலீடும் இலாபகரமாயிருக்குமா என்ற சந்தேகம் நீங்குகிறது ; முதலீடு செய்யப்படுகிறது.
	முதலீட்டிற்குத் தேவையான சொந்த மூலதனம் ஏராளம் ; எனவே முதலீடு செய்வதில் ஏற்படும் உண்மைச் செலவும் மனப்போக்கான செலவும் குறைக்கப்படுகின்றன ; அதிக நிகர இலாபம் எதிர்பார்க்கப்படுகிறது.	வேக வளர்ச்சி முதலீட்டிலும் நவீனமயமாக்குதல் முதலீட்டிலும் உள்ள பணச் செலவும் மற்ற பணத் தடங்கல்களும் குறைகின்றன.
குறைந்த வட்டி வீதம்	முதலீட்டு வேலைகளிலிருந்து எதிர்பார்க்கும் நிகர இலாபம் (வட்டி செலுத்திய பின்னர்) அதிகரிக்கிறது.	வேக வளர்ச்சி முதலீடும் நவீனமயமாக்குதல் முதலீடும் ஊக்குவிக்கப்படுகின்றன.

நிறுவனங்கள் முதலீடு செய்வதன் அடிப்படை நோக்கம் அதிக இலாபத்தைப் பெறுவதுதான் என்று அனுமானித்துக் கொண்டால், முதலீட்டை நிர்ணயிக்கும் முக்கியமான காரணிகளைத் தொகுத்து, பின்வரும் பட்டியல் வாயிலாக விளக்க முடியும்.

வளர்ச்சி வேகத்தை அடக்கிவிடுவன

இதுவரை முதலீட்டின் ஏற்ற இறக்கத்தைப் பற்றி ஆராய்ந்தோம். வேக வளர்ச்சிக் கோட்பாட்டின்படி, விற்பனை உயர்வு வீதம் குறையும்போதுதான் முதலீட்டின் அளவு தளர்ச்சியடைந்து கீழே சரியத் தொடங்குகிறது. பொருளாதார நடவடிக்கைகளை முழுமையாகப் பார்க்குமிடத்து, அதனால் பொருளாதாரச் செழுமை சுணக்கமடைந்து, நழுவத் தொடங்கும்போது, பொருளாதார நடவடிக்கைகளும் குறைந்து, கீழே சரிய நேரிடுகின்றன. இவ்வாறாக, பொருளாதார வளர்ச்சி வீதம் தளர்ச்சி அடைவதைத் தொடர்ந்து முதலீடு சரிவடைவதால், பெருக்கியின் செயலால் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) பெருமளவில் குறைந்துவிடுகிறது. இதனால் முதலீட்டுப் பொருள்களுக்கிருந்த தேவை குறைக்கப்படுவதால் அத் தொழில்களின் வருமானமும் இலாபமும் பெருமளவில் குறைந்து, தொழிலாளர்களும் வேலை இழக்க நேரிடுகிறது. அப்போது, நுகர்வுச் சார்பின்படி நுகர்வோர் செலவீடு குறைவதால், அப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களின் உற்பத்தி அளவும் வருமானமும் இறங்கிவிடுகின்றன; வருமானம் கீழே இறங்கிவிட்டால் வருங்காலத்தில் இலாபம் குறைவாகத்தானிருக்கும் என்று தொழிலதிபர்கள் எதிர்பார்ப்பர்; ஆகையால் புதிய முதலீடு எதுவும் செய்யப்படாமல், நாட்டின் மொத்த உற்பத்தி சரிய நேரிடுகிறது. இவ்வாறாக, பொருளாதார வளர்ச்சி வீதம் குறையத் தொடங்குவதால் நாட்டின் உற்பத்தி, வருமானம், வேலை வாய்ப்பு ஆகிய அனைத்தும் பெருமளவில் குறைந்து விடுகின்றன.

வேக வளர்ச்சிக் கோட்பாடு புலப்படுத்தும் அளவுக்கு முதலீடு மாற்றமடைந்தால் நமது பொருளாதாரம் மிக மோசமான அளவுக்கு நிலையற்றதாகிவிடும்; அதோடு, பெரும் பொருளாதார மந்தமும், முறையற்ற பொருளாதார வீக்கமும் மாறி மாறி வந்து கொண்டிருக்கும். விற்பனை அதிகரித்தால் எப்படி முதலீடு உயர்ந்து, பின்னர் பெருக்கியின் வாயிலாக மீண்டும் விற்பனை பெருகுமோ, அதைப் போன்றுதான் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடையும்போது, அதன் விளைவாக மேலும்

அவை விரிவடைய நேரிடும். இவ்வாறு மேலும் மேலும் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடையும்போது, அதற்கு ஒரு வரம்பு ஏற்பட்டு, பின்னர் அவை சுருங்கத் தொடங்குகின்றன; சுருங்கத் தொடங்கிவிட்டால், அதன் விளைவாக எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளுமே சுருக்கமுற்று மந்தநிலையை அடைந்துவிடக் கூடும். ஆனால் புதுமையான முதலீடு நடைபெறுவதற்குரிய திடமான சூழ்நிலை இருக்கும்போது பொருளாதார ஏற்ற இறக்கம் அதிகமாக ஏற்படவோ அல்லது மிதமான பின்னிறக்கம் ஏற்பட்டு, அதனால் மோசமான மந்தநிலை தோன்றுவதற்கோ வாய்ப்பே இருக்காது. இவ்வாறாக, வேக வளர்ச்சியின் இயக்கம் கொடுக்கப் பட்டிருக்க, புத்தாக்க முதலீட்டில் சிறிதளவு சுணக்கம் ஏற்பட்டாலுங்கூட, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) அதிகரிக்கும் வீதம் குறைந்து, பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுவிடக் கூடும்.

ஆனால், உண்மையில் நமது பொருளாதாரம் அவ்வளவு மோசமான நிலைக்குப் பொருளாதார மந்தங்களினால் எவ்வளவோ பாதிக்கப்பட்டோம் என்பது உண்மைதான்; ஆனால் அம் மந்தங்கள் தொடர்ந்து இன்று ஏற்படுவதில்லை. அதோடு, நமது பொருளாதாரம் ஓரளவிற்குப் பின்னிறக்கமும் கண்டதுண்டு; எனினும் அதனால் பெரும் பொருளாதார மந்தம் ஏற்பட்டுவிடவில்லை. பின்னிறக்கம் கண்டபோதெல்லாம் விற்பனை ஓரளவு குறைந்து, அதனால் முதலீட்டுச் செலவும் இறங்கியிருக்கின்றது என்பதும் உண்மைதான்; ஆனால் வேக வளர்ச்சிக் கோட்பாடு புலப்படுத்தும் அளவிற்கு அவை சரிந்துவிடவில்லை. எனவே, விற்பனையும் இலாபமும் குறையும்போது, முதலீடு பெருமளவில் சரிந்துவிடாமல் பேணப்பட்டுள்ளது; இதற்குரிய காரணங்கள் வேறு சில உள்ளன என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

எதிர்பார்க்கும் விற்பனை

விற்பனை அளவு உயரும்போது, அது தற்காலிகமான உயர்வு தான், நிரந்தரமாக இருக்காது என்று தொழில் நிறுவனங்கள் கருதினால் தம் உற்பத்தி சக்தியை அதிகரிக்க முன்வர மாட்டா; அவ்வாறான நிலையில் புதிய இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் வாங்கித் தம் உற்பத்தி சக்தியை அதிகரித்துவிட்டால், சிறிது காலம் கழித்து, தம் உற்பத்தி சக்தி எஞ்சி வீணாக இருப்பதை அவை அறியக்கூடும். எனவே, தற்காலிகமாக ஏற்பட்டுள்ள தேவையைச் சரிக்கட்டுவதற்கு இருக்கின்ற சக்தியையே

தீவிரமாகப் பயன்படுத்துவதுதான் சிறந்த வழியாகும். அவ்வாறு செய்வதற்கு ஒன்றில் நிறுவனங்கள் மிகை நேரம் (over-time) வேலை செய்யலாம்; அல்லது தற்காலிகமாக மேலும் சில தொழிலாளர்களை வேலைக்கமர்த்தலாம். அப்படிச் செய்தால் தான், சிறிது காலம் கழித்து விற்பனை குறைய நேரிடும்போது, உயர்ந்த செலவைக் குறைத்துக் கொள்ளவும் முடியும்; அதாவது மிகை நேரம் வேலை செய்யும் பழக்கத்தை ரத்து செய்துவிடலாம், அல்லது தற்காலிகமாக வேலைக்கமர்ந்துள்ள தொழிலாளிகளை வேலையிலிருந்து நீக்கிவிடலாம்.

வேறு விதமாகக் கூறின், வருங்காலத்திலும் விற்பனை அளவு உயர்வாகவேதான் இருக்குமென்று தோன்றினால்தான் நிறுவனங்கள் தம் நிலையான ஆக்கச் சொத்துகளை அதிகரிக்கும் வகையில் முதலீடு செய்ய முற்படும். அவ்வாறு முற்படும்போது, வேக வளர்ச்சியின் தீவிரம் பெருமளவில் தளர்ச்சி அடைந்து விடுகிறது. பொருளாதார வீக்கமுள்ளபோது, விற்பனை பெருமளவிற்கு உயர்ந்தாலும், அவ்வுயர்வு ஓரளவிற்குத்தான் நீடித்திருக்குமென்றுதான் பெரும்பாலும் நிறுவனங்கள் கருதும்; எனவே, அவை செய்யும் புதிய முதலீடும் மிதமான அளவில் தானிருக்கும். சொல்லப்போனால், தொழிலில் ஏற்ற இறக்கம் ஏற்படுவது சகஜம்தான் என்பதை எல்லா நிறுவனங்களுமே தம் அனுபவ வாயிலாக அறிந்திருக்கும். எனவே, பொருளாதாரத் தன்னிறைவுள்ளபோது, விற்பனை எந்த அளவுக்கு அதிகரிக்கின்றதோ அந்த அளவுக்கு தம் உற்பத்தித் திறனை அவை அதிகரிப்பதில்லை. தம் உற்பத்தி சக்தியை எஞ்சி விற்பனை அதிகரித்தால்தான், தம் சக்தியை உயர்த்தும் வகையில் புதிய முதலீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அவ்வாறு முதலீடு செய்த பின்னர், விற்பனை அளவு குறைந்துவிட்டால்கூட நிறுவனங்களிடம் அதிகமான எச்ச சக்தி (excess capacity) காண முடியாது.

சான்றாக, 1968-லும் 1969-லும் எதிர்பார்த்த அளவைக் காட்டிலும் தொழில் முதலீடு பெருமளவில் அதிகரித்தது. அவ்வாறு முதலீடு திடமாக அதிகரித்ததற்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம். 1960க்குப் பின்னர் தொழிலதிபர்கள் எதிர்பார்த்த அளவைக் காட்டிலும் விற்பனை அளவு பெருமளவில் அதிகரித்து வந்தது ஒரு காரணமாய் இருந்திருக்கக்கூடும்; அதனால் 1969-ன் தொடக்கம்வரை சுமார் 8 ஆண்டுகள் தொடர்ந்து விற்பனை பெருகி வந்ததால் அமெரிக்க நாட்டின் தன்னிறைவு நிலையும் எவ்விதத் தடங்கலுமின்றி நீடித்து வந்துள்ளது.

சிறிதளவுகூடப் பின்னிறக்கம் ஏற்படாமல் இப்படியொரு வளர்ச்சி அமெரிக்க வரலாற்றில் 1960வரை ஏற்பட்டதில்லை. 1960-க்கு முன் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி காலத்திலெல்லாம், விற்பனை எவ்வளவுதான் அதிகரித்த போதிலும், சிறிது காலம் கழித்துப் பொருளாதாரப் பின்னிறக்கம் தோன்றி, விற்பனை அளவு குறைந்துவிடுமென்றுதான் தொழிலதிபர்கள் முடிவெடுத்தனர்; எனவே அவர்கள் பெருமளவில் முதலீடு செய்யவில்லை. ஆனால் 1960 முதல் 1969வரை தொழிலதிபர் அப்படி நினைத்ததில்லை; எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து வாணிபம் பெருகியுள்ளதால் எவ்வித அச்சமோ தயக்கமோ இன்றி, தம் உற்பத்தி சக்தியைப் பெருக்குவதிலும், நவீனமயமாக்குவதிலும் தீவிரமாக அக்கறை கொண்டனர். இதிலிருந்து தெரியும் உண்மை யாதெனில் இன்றைய தொழில்திபர்களின் மனப்பான்மை மாறியுள்ளது என்பதுதான்; இவ்வாறு மனப்பான்மை மாறியுள்ளதை எண்பிப்பதற்கு வழி இல்லை என்றாலும், 1960 முதல் 1969வரை முதலீடு பெருகிக் கொண்டே வந்துள்ளதற்கு இதுவே சரியான காரணமாயிருந்திருக்கலாம்.

கால தாமதமும் நிறைவு பெருமையும்

முதலீடு செய்து நிறைவேற்றுவதற்குக் காலம் தேவை. ஒரு நிறுவனம் பெரியதொரு திட்டத்தை நிறைவேற்றத் தீர்மானித்து விடுவதாக வைத்துக் கொள்வோம்; அப்படியானால் அத்திட்டத்தை நிறைவேற்ற காலதாமதம் ஆகலாம். தன் திட்டத்திற்கு வேண்டிய இயந்திர சாதனங்களுக்கும் இதர தளவாடங்களுக்கும் முதலில் ஆர்டர் கொடுக்க வேண்டும்; அவை உற்பத்தி செய்யப்பட்ட பின்னர்தான் அவற்றை நிறுவ முடியும்; இவ்வாறாக, அத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் காலம் தேவைப்படுகிறது. சான்றாக, மின் உற்பத்தி நிலையத்திற்குத் தேவைப்படும் மின் ஆற்றல் உண்டாக்கும் பொறியை உற்பத்தி செய்து அமைக்க வேண்டுமாயின் 18 முதல் 24 மாதங்கள் வரை தேவைப்படுகிறது; அதேபோல் நினைத்தவுடன் ஊதுலையை உற்பத்தி செய்துவிட முடியாது. இவ்வாறாக, தம் விற்பனை அதிகரித்துக் கொண்டிருக்கும்போது, தொழில் நிறுவனங்கள் தம் உற்பத்தி சக்தியை விரிவாக்குவதற்கோ அல்லது புதியதொரு உற்பத்தி முறையைப் புகுத்துவதற்கோ முடிவெடுக்கலாம்; ஏனினும், தாம் நிறைவேற்றுவதற்குப் பல மாதங்களோ அல்லது ஒரு சில ஆண்டுகளோகூடத் தேவைப்படலாம். மாறாக, உயர்ந்த விற்பனை அளவு குறைந்துகொண்டு வரும்போது, முதலீட்டைப் படிப்படியாகத்தான் குறைக்க வேண்டியுள்ளது; சில சமயங்

களில் ஏற்கெனவே தொடங்கப்பட்ட முதலீட்டுத் திட்ட வேலை முடிவடையாமல் நடைபெற்றுக் கொண்டும் இருக்கலாம். எனவே, மொத்த முதலீட்டுச் செலவு திடீரென்று குறைந்து விடாமல் படிப்படியாகத்தான் குறையும்; அதுவரை வருமானம் கிடைத்துக் கொண்டுதானிருக்கும். இவ்வாறாக, முதலீட்டுச் செலவு திடீரென்று குறைந்தால் ஏற்படக்கூடிய விளைவுகள் இதனால் தளர்ச்சியடைந்து விடுகின்றன.

பொதுவாக, வளமையான காலத்தில்கூட முதலீடு செய்வதற்கு நீண்ட காலம் தேவைப்படுகிறதென்பது குறிப்பிடத்தக்கது; சான்றாக, எந்த நிறுவனமுமே மாறுதல்களுக்கேற்ப தன் நிலையை உடனடியாகச் சரிப்படுத்திக் கொள்ள இயலாது; சில சமயங்களில் அவ்வாறு சரிப்படுத்திக் கொள்வதற்கு வேண்டிய வசதிகள் இல்லாமல் இருக்கலாம், உற்பத்தி சக்தியை விரிவாக்குவதற்கு நிர்வாகிகளுக்குக் கஷ்டமாயிருக்கலாம்; ஒரு வேளை தொழிலாளர்களுக்குப் புதிய முறையில் பயிற்சி அளிக்க வேண்டியிருக்கலாம்; அல்லது பயிற்சி பெற்றுள்ள தொழிலாளர்களைப் புதிதாக வேலைக்கமர்த்த வேண்டியிருக்கலாம்; அல்லது தம் நிறுவனத்தின் விற்பனைப் பிரிவையோ அங்காடிப் பிரிவையோ விரிவாக்க வேண்டியிருக்கலாம். இன்னும் இது போன்ற எத்தனையோ தடங்கல்கள் இருக்கக்கூடும். மேலும், வளமான காலத்தில்கூட மூலப் பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் தன் உற்பத்தியை அதிகரிப்பதற்கென்று புதிய முதலீடு செய்யாமலிருக்கக்கூடும்; அதனால் அம் மூலப் பொருள்களைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கும் காலதாமதம் ஏற்படுவதோடு, தம் திறனளவிற்குக்கூட உற்பத்தி செய்ய இயலாமல் போகலாம். இதன் விளைவாக, ஒரு நிறுவனம் எவ்வளவு விரைவாக முதலீடு செய்து இலாபம் பெற முடியும் என்பதற்கு ஒரு வரையறை ஏற்பட்டு விடுகிறது; எனவே, விற்பனை அளவு எவ்வளவு உயர்ந்த போதிலும், நிறுவனங்கள் தம் சக்திக்கேற்ப முதலீடு செய்ய முடிவதில்லை.

வட்டி விதமும் கிடைக்கக்கூடிய கடனும்

பொதுவாக, விற்பனை பெருமளவில் அதிகரிக்கும்போது, வியாபார இலாபம் மட்டுமன்றி, தொழில் நிறுவனங்களின் சொந்த இலாபமும் விரிவடைகின்றது. இவ்வாறு, இலாபம் விரிவடைவதால் நிறுவனங்கள் முதலீடு செய்து தம் உற்பத்தி சக்தியை விரிவாக்கக்கூடும். இருப்பினும், விற்பனை பெருமளவில் அதிகரிக்கும்போது, வேக வளர்ச்சிக் கோட்பாடு புலப்

படுத்துவதுபோல் (4 – 2 பட்டியலிலுள்ள சான்றைப் பார்க்கவும்) முதலீடும் பெருமளவிற்கு உயர வேண்டுமாயின், தொழில் நிறுவனங்கள் கடன் வாங்க வேண்டியுள்ளது; அப்படிக் கடன் வாங்கி முதலீடு செய்ய வேண்டியிருப்பதால் முதலீடு அவ்வளவாக உயராமல் கட்டுப்படுத்தப்படுகிறது.

முதலாவதாக, தொழில் நிறுவனங்கள் பெருமளவில் கடன் வாங்கி, தம் கடன் சுமையை அதிகரிக்க விரும்புவதில்லை. மேலும், பொதுவாக, பொருளாதார வளமை மிக்க காலத்தில் கடன் பெறுவது அவ்வளவு எளிதல்ல. காரணம் வட்டி வீதம் உயர்வாயிருக்கும்; அதோடு, கடன் கொடுப்போர் கடன் பெறுவோரின் வருமான நிலையை உறுதிபடுத்திய பின்னர்தான் கடன் கொடுக்க முன்வருவர். எனவே, வளமை மிக்க காலத்தில் கடன் பெறுவது கடினம்; அப்படியே பெற்றாலும் அதிக வட்டி செலுத்த வேண்டும். இந் நிலையில் தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் இலாபம் வட்டியைக் காட்டிலும் அதிகமாக இருந்தால்தான் கடன் பெற முற்படும். வளமான காலத்தில் வட்டி வீதம் உயர்வாக இருப்பதால் இறுதிநிலையிலுள்ள திட்டங்கள் மேற் கொள்ளப்பட மாட்டா; காரணம், அவை பெறக்கூடிய இலாப வீதம் வட்டி வீதத்தைக் காட்டிலும் குறைவாகத்தான் இருக்கும்.[4] எனவே, வட்டி வீதம் இறங்கும் காலம் வரை அத் திட்டங்கள் மேற்கொள்ளப்படாமல் தள்ளி வைக்கப்படலாம். பொருளாதாரப் பின்னிறக்கம் ஏற்படும்போது இதற்கு நேர்மாறான விளைவுகள் தோன்றும்; அப்போது கடன் பெறுவதும் எளிது; வட்டி வீதமும் குறைவாகத்தானிருக்கும்.[5]

நிறைவு பெறாத முதலீட்டுத் திட்டங்கள்

வளமையான காலத்தில் முதலீடு செய்வதற்குரிய வாய்ப்புகள் அதிகமிருந்தும், ஏன் அந்த அளவுக்கு முதலீடு செய்யப்படுவதில்லை என்பதற்கு நான்கு காரணங்களை உளளலி வெனறு இதுவரை கண்டோம். அவை:

4. முதலீடு எவ்வாறு வட்டி வீதத்தினால் பாதிக்கப்படுகிறதென்பதை முழுமையாக அறிந்து கொள்வதற்கு J. S. Duesenberry அவர்களின் 'Money and Credit' என்ற நூலைப் (இரண்டாம் பதிப்பு) படிக்கவும். இந் நூலும் இதை வாலசையில வெளிவந்துளளது.

5. பெரும் பொருளாதார மந்தம் ஏற்பட்டபோது கடன் பெறுவது மிகக் கடினமாகிவிட்டது; காரணம், வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் நொடித்துப் போய்விட்டன. எனவே, கடன் பெறுவது மிகக் கடினமாகி முதலீடு ஏதுமே செய்ய முடியாமல் போய்விட்டது. அதிதீபால் 1907-ல் ஏற்பட்ட பொருளாதார மந்தத்திற்கும் காரணம், கடன் கொடுப்பது சுருக்கப்பட்டதுதான். எனினும், பொதுவாகப் பொருளாதாரப் பின்னிறக்கத்தின்போதும் மந்தத்தின் போதும் கடன் எளிதாக கிடைப்பதாலும், வட்டி வீதமும் குறைவாகத்தான் இருக்கும்.

1. விற்பனை அளவு உயரும்போது, அந்த அளவுக்கு நிறுவனங்கள் தமக்கு வேண்டிய இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் உடனடியாக வாங்கிவிடுவதில்லை; உயர்ந்துள்ள விற்பனை நிரந்தரமாக இருக்குமா, இப்போது கிடைக்கும் இலாபம் வருங்காலத்திலும் கிடைக்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்த்த பின்னர்தான் முதலீடு செய்வது பற்றி முடிவெடுக்கின்றன.

2. அவ்வாறு முடிவு செய்வதற்கு மட்டுமன்றி, வேண்டிய இயந்திர சாதனங்களுக்கோ அல்லது இதர உற்பத்தித் தளவாடங்களுக்கோ கட்டளை இட்டு வரவழைப்பதற்கும், வந்த பின்னர் அவற்றைப் பயன்படுத்துவதற்கும் காலதாமதமாகிறது. எனவே, எந்த நேரத்தை எடுத்துக் கொண்டாலும் நிறைவு செய்யப்படாத முதலீடு நிறைய நீர் இல்லாத குழாயைப்போல் இருந்து கொண்டேதானிருக்கிறது. விற்பனை பெருகி, இலாபம் உயர உயர, படிப்படியாகத்தான் முதலீடு செய்யப்படுகின்றது.

3. தொழில் நிறுவனங்கள், தமக்கு வேண்டிய புதிய இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் பெற்று, இலாபம் அடைவதற்குக் காலதாமதம் ஏற்படுவதோடு, வரம்பும் உள்ளது. எனவே, புதிய முதலீட்டிற்கான வாய்ப்புகள் எவ்வளவுதான் அதிகரித்தாலும், படிப்படியாகத்தான் முதற்கருவிப் பொருள்களை வாங்க முடியும்.

4. நிறுவனங்களிடம் போதுமான அளவுக்குச் சொந்த நிதி இருப்பதில்லை; அதோடு, கடன் பெறுவதும் கடினமாகிவிடுவதால் புதிய முதலீடு செய்வதற்குக் காலதாமதமாகிறது. நிறுவனங்கள் பெரும்பாலும் வெளியிலிருந்து கடன் பெறத் தயங்குகின்றன; மேலும், செழுமை மிகுந்த காலத்தில் வட்டி வீதமும் உயர்ந்துவிடுகிறது. எனவே, இறுதிநிலையிலுள்ள சில முதலீட்டுத் திட்டங்கள் தற்காலிகமாக கைவிடப்படுகின்றன.

இவ்வாறாக, விற்பனை அளவும் இலாபமும் உயரும்போது, முதலீடு செய்வதற்குரிய வாய்ப்புகள் எவ்வளவுதான் அதிகமானாலும் அந்த அளவுக்கு முதலீடு செய்யப்படுவதில்லை. இதன் விளைவாக, பொருளாதார நடவடிக்கைகள் விரிவடையும் காலத்தில் எவ்வளவுதான் முதலீட்டு வாய்ப்புகள் உருவாக்கப்பட்டாலும், நிறைவேற்றப்படாத வாய்ப்புகள் இருந்துகொண்டே இருக்கின்றன. நிறைவேற்றப்படாத முதலீட்டு வாய்ப்புகள் இருப்பதால், விற்பனையும் இலாபமும் உச்சக் கட்டத்திற்கு உயர்ந்து,

பின்னர் இறங்கத் தொடங்கும்போது, முதலீடு அவ்வளவாகச் சரிவடைவதில்லை. அப்படியானால், முதலீட்டின் அளவு மாறுமல் அப்படியே இருக்கின்றது என்று பொருளல்ல. ஏனெனில், நாட்டின் மொத்தச் செலவீட்டில் முதலீட்டுச் செலவுதான் நுகர்வுச் செலவை அல்லது அரசாங்கச் செலவீட்டைக் காட்டிலும் அதிக ஏற்ற இறக்கமடையக்கூடியது. எனினும், வேக வளர்ச்சிக் கோட்பாடு புலப்படுத்துவது போல் அவ்வளவு அதிக மாக ஏற்ற இறக்கமடைவது கிடையாது. குறிப்பாகக் கூற வேண்டுமாயின், நாட்டில் ஏற்படும் மிதமான பொருளாதாரப் பின்னிறக்கத்தைத் தொடர்ந்து பெரும் பொருளாதார மந்தம் ஏற்படுவதில்லை. விற்பனை அளவு அதிகரித்துக்கொண்டே வந்து, பின் அப்படியே நிலைத்து, பின்னர் சிறிது காலம் வரை குறையைத் தொடங்குகிறது. அவ்வாறு குறையும்போது, முதலீடும் கீழே இறங்குகிறதெனினும் வேக வளர்ச்சிக் கோட்பாடு கூறுவது போல் பூஜ்ஜிய மட்டத்திற்குச் சரிந்துவிடுவதில்லை. சான்றாக, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) வீதத்தைக் காட்டிலும் முதலீடு அதிக வீதத்தில் ஏற்ற இறக்கம் கண்டுள்ளது; எனினும், போருக்குப் பின்னர் நான்கு முறை பொருளாதாரப் பின்னிறக்கம் ஏற்பட்டபோது, அதனால் முதலீட்டின் அளவு பெருமளவுக்குச் சரிந்துவிடாமல், கணிசமான அளவிலேயேதான் இருந்தது.

நிறைவு செய்யப்படாத முதலீட்டு வாய்ப்புகள் இருப்பதால், பெரிய பொருளாதார மந்தம் தோன்றி, பொருளாதாரச் சீரழிவு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. அப்படியானால், இவ் வாய்ப்புகள் இருந்தால் பொருளாதார மந்தம் ஏற்படவே முடியாது என்றும் கூற முடியாது; அவ் வாய்ப்புகள் இருந்தும் மந்தம் ஏற்படக்கூடும். சான்றாக, முதலீட்டின் அளவு பெருமளவில் சரிந்து, பல ஆண்டுகளாக உயராமல் கீழ் மட்டத்திலேயே இருந்துவிட்டால் நிறைவு செய்யப்படாத முதலீட்டு வாய்ப்புகள் இருந்தும் பயனில்லாமல் போய்விடலாம். மேலும், நிறைவு செய்யப்படாத முதலீட்டுக் 'குழாய் வழியாக' இருந்த முதலீடும்கூட ஒரு புறத்தின் வழி வெளியே செல்ல, மறு புறத்தின் வாயிலாகப் புதிய முதலீடு புகவில்லையென்றால் குழாய் காலியாகிவிடுமல்லவா! அப்படியாகிவிட்டால், விற்பனை குறைந்து, அதனால் முதலீடு சரிவதும் (பெருக்கியின் வாயிலாக), அதனால் விற்பனை அளவு மேலும் சரிவதுமாக மாறி மாறிச் சுழன்றுகொண்டேயிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

தொழில் இருப்புகளின் மாறுதல்கள் (இருப்பு முதலீடு)

(Changes in Business Inventories—Inventory Investment)

இன்றைய தொழில் வளமிக்க நாட்டில் பொருள்களையும் பணிகளையும் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய இயந்திர சாதனங்கள், தளவாடங்கள், தொழிலாளர் மட்டும் இருந்தால் போதாது; சுரங்கங்களிலிருந்து ஆலைகளுக்கும், ஆலைகளிலிருந்து மொத்த வியாபாரிகளுக்கும், அவர்களிடமிருந்து விற்பனை நிலையங்களுக்கும் பொருள்கள் ஓடிக்கொண்டேயிருக்க வேண்டுமாயின், அதற்குரிய வசதிகளும் இருக்கவேண்டும். உற்பத்தியாளர்களிடம் மூலப்பொருள்கள், முடிவுபெறாப் பொருள்கள், முடிவுற்ற பொருள்கள் ஆகியவை இருப்பதாகவும் இருக்கவேண்டியுள்ளது. நிறுவனங்கள் தம் இருப்பைக் கூட்டிக்கொண்டே போனால் விற்பனையைக் காட்டிலும் உற்பத்தி அளவு மிஞ்சியதாகிறது; மாறாக, இருப்பு குறைந்துகொண்டிருந்தால் விற்பனையைக் காட்டிலும் உற்பத்தி அளவு குறைந்துவிடுகிறது. இவ்வாறாக, தொழில் நிறுவனங்கள் தம் இருப்பை அதிகரிக்கின்ற விதமோ அல்லது குறைக்கின்ற விதமோ நாட்டின் மொத்த உற்பத்தியை (GNP) நேரடியாகப் பாதிக்கக் கூடியதாகும். இருப்பு பெருமளவில் நேர்க்கணியமாக இருந்து விரைவில் எதிர்க்கணியமாக மாறக்கூடும். அப்படி துரிதமாக மாறுவதற்குரிய காரணங்களைத்தான் இப் பகுதியில் ஆராயப்போகின்றோம்.

தொழில் நிறுவனங்கள் ஏன் இருப்பு வைக்கவேண்டும்?

தொழில் நிறுவனங்கள் இருப்பு வைத்திருப்பது அவசியம் மட்டுமல்ல, வசதியும்கூட, பொருள் உற்பத்தி செய்வோரிடம் போதுமான அளவிற்கு மூலப் பொருள் இருப்பாக இருக்க வேண்டும்; அப்போதுதான் தங்கு தடையின்றி உற்பத்தி செய்ய முடியும். அப்படியின்றி, வேண்டியபோது மட்டும் மூலப் பொருளை வாங்கி உற்பத்தி செய்தால், அடிக்கடி உற்பத்தி தடைப்படும். முடிவுபெறாப் பொருள்களும் இருப்பில் இருக்கவேண்டும். சான்றாக, அரசாங்கத்திற்குப் போர் விமானங்கள் அளிக்கவேண்டுமாயின், அவ் விமானங்களை உற்பத்தி செய்வதற்கு நீண்ட காலம் தேவை; அவ்வாறு உற்பத்தி செய்யும்போது, ஒவ்வொரு படி நிலையிலும் முழுமை பெறாத நிலையில் காணப்படும் விமானங்கள்தான் முடிவுபெறாப் பொருள் இருப்பாகப் புலப்படுகிறது. இறுதியாக, முடிவு பெற்ற பொருள்களையும் உற்பத்தியாளர்கள் இருப்பாக வைக்கின்றனர்; அவ்வப்போது நுகர்வோருக்கு

வேண்டிய பொருள்களைக் காலதாமதமின்றி அளிப்பதற்காக இவ் விருப்பு அவசியமாகிறது. அதேபோல், மொத்த விற்பனை யாளர்களும் சில்லரை விற்பனையாளர்களும் பல்வேறு வகையான பொருள்களை ஏராளமாக இருப்பு வைக்க வேண்டியுள்ளது; அப்படி வைத்திருந்தால்தான் நுகர்வோர் தமக்கு வேண்டிய பொருள்களை வேண்டிய சமயத்தில் பெற முடியும். இவ்வாறுக, இருப்பு வேண்டிய அளவில் இல்லையென்றால், உற்பத்தி காலதாமதமாகி, அதிகச் செலவுடையதாகிவிடும் அல்லது வாடிக்கை யாளர்களுக்கு வேண்டியபோது வேண்டிய அளவில் கிடைக் காமல் போய்விடும்.

அதற்காக, மிகுதியாக இருப்பு வைப்பதும் கூடாது; அப்படி வைத்தால் செலவு அதிகமாகிவிடும். வட்டி செலுத்த வேண்டிய பணத்தைப் பொருள் வடிவத்தில் முடக்குவதைத்தான் இருப்பு என்கின்றோம்; அதோடு, பெருமளவில் இருப்பு வைப்ப தற்குப் பாதுகாப்பான இடமும் வேண்டியுள்ளது; மேலும், இருப் பிலுள்ள சிலவகைப் பொருள்கள் விரைவில் அழிந்து வீணாகி விடக்கூடும். எனவே, தொழில் நிறுவனங்கள் எந்த அளவு இருப்பு வைக்கவேண்டு மென்பதைத் தீர்மானிக்க வேண்டி யுள்ளது. தேவைப்படும்போது தடையின்றிப் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு இருப்பு அதிகமாக இருக்க வேண்டும்; அதே சமயம், செலவு மிகக்கூடிய அளவுக்கு மிதமிஞ்சியும் இருக்கக் கூடாது.[6] இருப்பு எந்த அளவுக்கு இருப்பது நல்லது என்பதை நிர்ணயம் செய்வது கடினம். குறிப்பாக, பல்வேறு பண்டங்களைக் கொண்ட தாக இருக்கும்போது இருப்பின் அளவைத் திட்டமிடுவது சிக்கல் நிறைந்த பிரச்சினையாகி விடுகிறது. இருப்பை எப்படியெல்லாம் நிர்வகிக்க வேண்டும் என்பது நமக்குத் தேவையில்லாத பிரச்சினை. இருப்பு மூதலீடு அடிக்கடி மாறுவதற்கு, அதாவது இருப்பு அதிகரிக்கப்படுவதற்கும் குறைக்கப்படுவதற்கும் முக்கிய காரணங்கள் யாவை என்பதுதான் நாம் ஆராய வேண்டிய பிரச் சினையாகும்.

பொதுவாக, விற்பனை அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க் கும்போது தொழில் நிறுவனங்கள் தம் இருப்பைக் கூட்டுவதற்கு விழைகின்றன என்று கூறலாம். உற்பத்தி அளவை உயர்த்த வேண்டுமாயின், ஏராளமான மூலப் பொருள்கள் கைவசமிருக்க

6. இதற்கு முக்கியமான விதிவிலக்கும் உண்டு. அதாவது, விலைவாசிகள் மிக விரைவாக உயரப் போகின்றன என்று எதிர்பார்க்கும்போது இருப்பு மிதமிஞ்சி ஆகிவிடும். இவ்வித்தச் சந்தர்ப்பங்களில் தமக்கு வேண்டிய அளவுக்கு அதிகமாகவே நிறுவனங்கள் (ஊக வணிக) இருப்பை வைத்துக் கொண்டால், விலைவாசி உயரும்போது அதிக இலாபம் பெறக்கூடும்.

வேண்டும்; அப்போதுதான் தங்குதடையின்றி உற்பத்தி செய்ய முடியும். அதிக அளவு உற்பத்தி செய்யும்போது, உற்பத்திப் படி நிலைகளின் இருப்பில் முடிவு பெறாத பொருள்கள் ஏராளமாக இருக்க வேண்டும். மேலும் நுகர்வோருக்கு வேண்டிய நேரத்தில் வேண்டிய அளவு பொருள்களைத் தங்கு தடையின்றி அளிப்பதற்கு முடிவுற்ற பொருள்களையும் ஏராளமாக இருப்பில் வைத்திருக்க வேண்டியுள்ளது. மாறாக, விற்பனை அளவும் தேவை அளவும் குறையும்போது, தொழில் நிறுவனங்கள் தம் இருப்பைக் குறைத்துக்கொள்கின்றன.

இருப்பு முதலீடு அடிக்கடி மாறுவதேன்?

இருப்பின் அளவு எவ்வளவு அதிகரித்துள்ளது அல்லது குறைந்துள்ளது என்பதுதான் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) மதிப்பீட்டிற்கு முக்கியம்; எனவே, இருப்பில் ஏற்படும் மாறுதல்கள்தான் நாட்டின் மொத்த உற்பத்திக் கணக்கில் இடம் பெறுகின்றனவேயன்றி, மொத்த இருப்பளவு அல்ல. எவ்வளவு தான் அதிக அளவில் இருப்பு இருந்த போதிலும், அதன் அளவு மாறுமல் அப்படியே இருக்குமாயின், உற்பத்தியோடு அதைக் கூட்ட வேண்டியதில்லை; ஏனெனில் இருப்பில் செய்யும் முதலீடு பூஜ்ஜியமாக இருக்கும்போது, உற்பத்தி அளவும் விற்பனை அளவும் சரிசமமாகி விடுகின்றன.

விற்பனை அளவு உயரும்போதும் இறங்கும்போதும்தான் இருப்பின் அளவு ஏற்ற இறக்கமடைய முற்படும்; அவ்வாறுயின், விற்பனை அதிகரித்துக் கொண்டிருக்கும்போது இருப்பின் முதலீடு (இருப்பில் ஏற்படும் மாறுதல்) நேர்க்கணியமாக இருக்கும்; மாறாக, விற்பனை அளவு குறைந்துகொண்டு போகும்போது இருப்பின் முதலீடு எதிர்க்கணியமாகிவிடும். மேலும், விற்பனை அளவு உயர உயர, வருங்காலத்திலும் விற்பனை அதிகரிக்கக்கூடுமென்று தொழில் நிறுவனங்கள் நம்பக்கூடும்; அவ்வாறுயின், தம் இருப்பையும், கூடுமானவரை அதிகரிக்க முற்படும். அப்படிச் செய்தால்தான் மிகுதியாக விற்பனை செய்து அதிக இலாபத்தைப் பெறக்கூடும். இதைச் சிறிது கவனமாகச் சிந்தித்துப் பார்த்தால், நாம் சற்று முன்னர் கண்ட வேக வளர்ச்சித் தத்துவத்தின் அடிப்படையில்தான் இருப்பு முதலீடும் நடைபெறுவதாகத் தோன்றும். துரிதமாக ஆர்டர்கள் குவிந்து, விற்பனை அளவும் பெருகுகிறது என்றால் இருப்பிலுள்ள சரக்குகள் பெருமளவில் கூட்டப்படுகின்றன என்றுதான் பொருள். விற்பனை அளவு மாறுமல் அப்படியே இருக்கிறதென்றால், இருப்பு

கொஞ்சம்கூடக் கூட்டப்படவில்லை என்று அர்த்தம்; விற்பனை குறைந்து வருகிறதெனின், இருப்பும் குறைக்கப்படுகிறதென்பது தெளிவு. எனவே, பொருளாதார உற்பத்தி கூடவடிக்கைகள் மிக விரைவாக விரிவடையும்போது, இருப்பு முதலீடும் மிகப் பெரிய அளவில் கூடுகிறது; விற்பனை சிறிதளவே அதிகரிக்கும் போது, இருப்பு முதலீடு குறைந்துவிடுகிறது; எனினும் நேர்க் கணியமாகத்தான் இருக்கும். விற்பனை அளவு குறையும்போது இருப்பில் செய்யப்படும் முதலீடு எதிர்க் கணியமாகிவிடுகிறது.

இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் போலன்றி, இருப்பின் அளவைத் துரிதமாகக் கூட்டவும் குறைக்கவும் முடியும். இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் வாங்கும் கொள்கையில் தவறுகள் நேர்ந்துவிட்டால், அவற்றை உடனடியாகச் சரிப்படுத்துவது மிகக் கடினம்; ஆனால் இருப்புகளின் கொள்கையில் ஏற்படும் தவற்றை உடனடியாகச் சரிப்படுத்த முடியும். சான்றாக, ஒரு நிறுவனம் தன் இருப்புக்கு வேண்டிய சரக்குகளை மூன்று மாதங்களுக்கொரு முறை கொள்முதல் செய்வதாக வைத்துக்கொள்வோம்; அப்படியானால், தான் கொள்முதல் செய்யும் இருப்பும் மூன்று மாதங்களில் விற்பனை செய்யும் அளவும் சரி சமமென்று பொருள். இப்போது, விற்பனை 33 சதவீதம் அதிகரிக்கக் கூடுமென்று அந்நிறுவனம் எதிர்பார்ப்பதாக வைத்துக்கொள்வோம்; அவ்வாறாயின், நிறுவனம் தன் இருப்பிற்கு வேண்டிய சரக்குகளையும் மூன்றிலொரு பங்கு அதிகமாகக் கொள்முதல் செய்துவிடுகிறது. ஆனால் இருப்பை அதிகரித்த பின்னர், எதிர் பார்த்த அளவுக்கு விற்பனை உயராமல் பழைய நிலையிலேயே இருந்துவிட்டால், அதனால் நிறுவனம் பாதிக்கப்படுவதில்லை. இருப்புக்கு வேண்டிய சரக்கை அடுத்த முறை கொள்முதல் செய்யும்போது, ஒரு மாதத்திற்கு வேண்டிய அளவைக் குறைத்துக்கொண்டால் எல்லாம் சரியாகிவிடும். ஆனால் இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் வாங்கும்போது இவ்விதத் தவறு நேர்ந்துவிட்டால் நிறுவனத்தின் உற்பத்தி சக்தி எச்சமாகி, நீண்டகாலம் வரை வீணாகக் கிடக்க நேரிடும். இதிலிருந்து தெரியும் உண்மை என்னவெனில், விற்பனை அளவு உயரும் போதும் தாழும்போதும் அதற்கேற்ப இயந்திர சாதனங்களை அதிகரிப்பதும் குறைப்பதும் கடினம்; அவ்வாறு செய்வதற்குக் காலதாமதமும் ஏற்படுகிறது. ஆனால் இருப்பின் அளவை அதிகரிப்பதிலும் குறைப்பதிலும் அவ்வளவு துன்பம் இருக்காது; காலதாமதமும் ஆகாது. எனவே, வேக வளர்ச்சி வீதத்தை யொட்டி நிலைமுதலைக் காட்டிலும் இருப்பின் முதலீடுதான் துரிதமாக வளரவும் குறையவும் நேரிடுகிறது. வேறுவிதமாகக்

கூறின், இருக்கின்ற இருப்பின் அளவைப் பெருமளவிற்குக் கூட்டவும் முடியும், குறைக்கவும் முடியும்.

நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) இனங்களில் ஏகீனய வற்றைக் காட்டிலும் இருப்பு மட்டும் ஏன் மிகவேகமாக மாறிக்கொண்டே இருக்கின்றது என்பதற்கு இதுதான் முக்கிய காரணமாகும். சொல்லப்போனால், மிதமானதொரு பொருளாதாரப் பின்னிறக்கத்தின்போது, இருப்பு பெருமளவு குறைக்கப் பட்டுவிடுவதால்தான் நாட்டின் மொத்த உற்பத்தியும் அதிகமாகக் குறைகிறதேயொழிய, பொருள்களின் இறுதி விற்பனை குறைவதால் அல்ல. 4-2 படம் இதைத்தான் புலப்படுத்துகிறது. அதாவது, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் தோன்றிய நான்கு பொருளாதார பின்னிறக்கங்களின்போதெல்



* உச்சக்கட்டத்திற்கும் பின்னிறக்கத்திற்குமிடையே ஏற்பட்ட மாறுதல்

படம் 4-2 போருக்குப் பின்னர் ஏற்பட்ட பின்னிறக்கத்தின்போது இறுதி விற்பனையில் ஏற்பட்ட மாறுதல்களும் இருப்பு முதலீட்டில் தோன்றிய மாறுதல்களும்.

லாம் பொருள்களின் இறுதி விற்பனை எவ்வளவு மாறியதென்பதையும் இருப்பு எவ்வளவு மாறியதென்பதையும் இப் படம் ஒப்பிட்டுக் காட்டுகிறது. இருப்பின் முதலீடு எதிர்க்கணியமாக ஆனபோது நுகர்வுப் பொருள்கள், மூதலீட்டுப் பொருள்கள், அரசாங்கக் கொள்முதல் ஆகியவற்றின் விற்பனை அளவைக் காட்டிலும் மொத்த உற்பத்திதான் அதிகமாகக் குறைக்கப் பட்டது. இந் நான்கில் இரண்டு பின்னிறக்கங்களின்போது, இறுதி விற்பனை சிறிதளவு கூடக் குறையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பின் முதலீடு குறைந்ததனால்தான் மொத்த

உற்பத்தியும் குறைந்துவிட்டது. ஆனால் நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) இனங்களில் இருப்பின் முதலீடு குறைக்கப் பட்டபோதிலும், நிலைத்த முதற்கருவிப் பொருள்களின் முதலீடு அதிகமாகக் குறைக்கப்படுவதுதான் பெரும் பொருளாதார மந்தத்திற்குக் காரணமாகும்.

இருப்பு முதலீட்டில் மற்றும் ஓர் அம்சம் உண்டு. பொருளாதார ஏற்ற இறக்கம் ஏற்படும்போது இருப்பு முதலீடு நிலையின்றி அதிக ஏற்ற இறக்கம் அடைவதற்கு இந்த அம்சம்தான் காரணமாகும். அதாவது, ஒரு நிறுவனம் தன் இருப்பிலுள்ள சரக்கை அதிகரிக்க வேண்டுமாயின், அவற்றை அளிக்கக்கூடிய ஏனைய நிறுவனங்களிடம் ஆர்டர் கொடுக்கவேண்டியுள்ளது. மாறாக, வாடிக்கையாளர்களிடமிருந்து தனக்கு வரும் ஆர்டர்கள் குறைக்கப்படும்போது, இருப்புச் சரக்குகளும் குறைக்கப்படுகின்றன. சான்றாக, ஒரு பண்டத்தின் சில்லரை விற்பனை 5 சதவீதம் குறைவாக வைத்துக் கொள்வோம். இதைச் சரிக்கட்டுவதற்குச் சில்லரை வியாபாரிகள் மொத்த வியாபாரிகளுக்கு ஆர்டர் கொடுக்கும்போது 5 சதவீதமோ அல்லது சற்று அதிகமாகவோ (10 சதவீதம் என்று வைத்துக்கொள்வோமே) குறைத்துக் கொடுக்கின்றனர். அப்போது அப் பண்டத்தை உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு 5 சதவீதமோ அல்லது 10 சதவீதமோ விற்பனை குறைந்துவிடுகிறது. எனவே, அப் பண்டத்திற்கு வேண்டிய மூலப் பொருள்களின் தேவையும் 10 சதவீதம் குறைந்துவிடுகிறது. இவ்வாறாக, விற்பனை சிறிதளவு குறைந்துவிட்டால்கூட, அதன் விளைவு தொடர்ச்சியாக மேல்மட்ட உற்பத்தி நிலைகளுக்குச் சென்று பிரதிபலிக்கிறது. அப்போது, ஒவ்வொரு படிநிலையிலும் விற்பனை குறைந்துவிடுவதால் இருப்பும் குறைக்கப்பட்டுவிடுகிறது. அவ்வாறு இருப்பு குறைக்கப்படும்போது, சில்லறை விற்பனை குறைந்த அதே 5 சதவீதம் அல்லது 10 சதவீதம் குறைக்கப் படாமல் அதைக் காட்டிலும் அதிகமாகவே குறைக்கப்பட்டு விடுகிறது. சில்லரை விற்பனை அதிகரித்தால் இதற்கு நேர்மாறான விளைவுகள் ஏற்படும்.

விலைவாசிகள் மாறப்போகின்றன என்று எதிர்பார்க்கும் போது, தொழில்களின் இருப்பு முதலீடும் பாதிக்கப்படுகிறது. விலைவாசிகள் உயரும் என்று எதிர்பார்க்கப்பட்டால் நிறுவனங்கள் வருங்காலத்தில் நல்ல விலைக்கு விற்றுப் பெரும் இலாபம் அடையலாமென்று இப்போதே தம் இருப்பை அதிகரிக்க முற்படும். அவ்வாறு பல நிறுவனங்கள் செய்யும்போது, விலையும் அதிகரித்துவிடுகிறது. தற்போது இருப்பைக் கூட்ட வேண்டுமென்

பதற்காக மென்மேலும் சரக்குகளை வாங்கும்போது, அவற்றிற்குக் தேவை ஏற்படுவதால் விலைகளும் ஏறிவிடுகின்றன. விலைவாசிகள் இறங்கப் போகின்றன என்று எதிர்பார்க்கும்போது, இதற்கு நேர்மாறான விளைவுகள் ஏற்படும். அமெரிக்காவில் சாதாரண காலங்களில் இப்படியெல்லாம் ஊக வணிக முறையில் கொள்முதல் செய்யும் பழக்கம் அவ்வளவாக இல்லை. எனினும், கொரியாப் போர் தொடங்கியபோது, அதாவது 1950-ன் இறுதியிலும் 1951 தொடக்கத்திலும் விலைவாசிகள் ஏறிவிடக் கூடுமென்று எதிர்பார்க்கப்பட்டதால், இருப்பு பெருமளவில் அதிகரிக்கத் தொடங்கியது; அதனால் விலைவாசிகள் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிகமாக ஏறிவிட்டன.

குடியிருப்பு மனைக் கட்டடங்கள்

அமெரிக்காவில் தனி வீடுகளும் பல குடும்பங்கள் தனித்தனியாக வாழக்கூடிய மாடிக் கட்டடங்களும் பெருகிவருகின்றன. கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் ஆண்டுதோறும் 1·1 முதல் 1·6 மில்லியன் வரை புதிய குடியிருப்பு மனைகள் கட்டப்பட்டுள்ளன. இன்னறைய விலைவாசிகளில் அவற்றின் மதிப்பு மட்டும் 26 பில்லியன் டாலராகும். இது மாடுமன்றி, பழைய மனைகளைப் பழுது பார்த்தல், மாற்றி அமைத்தல், திருத்தம் செய்தல் போன்ற வேலைகளுக்கும் சுமார் 5 பில்லியன் டாலர் செலவிடப்பட்டுள்ளன. ஆக மொத்தம், குடியிருப்புக் கட்டட வேலைகளுக்கு மட்டும் 31 பில்லியன் டாலர் செலவிடப்பட்டுள்ளன. அதாவது நாட்டின் மொத்த முதலீட்டில் ஏறக்குறைய 25 சதவீதம் குடியிருப்பு மனைகளுக்குச் செலவு செய்யப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த உற்பத்தியில் (G.N.P) இது 3·5 சதவீதமாகும்.

மனிதனுக்கு உணவும் உடையும் மட்டுமன்றி, குடியிருப்பு மனையும் இன்றியமையாததாகும். அவ்வாறின், மக்கள் தொகைப் பெருக்கத்தைப் பொருத்துத்தான் குடியிருப்பு மனைகள் அதிகமாகக் கட்டப்படுகின்றன என்று பொருள் அல்ல. ஏனெனில், தனி வீட்டை எடுத்துக் கொண்டால் அது மிகப் பெரிய வீடாகவும் இருக்கலாம், அல்லது சிறிதாகவும் இருக்கலாம்; எல்லா வசதிகளும் கொண்ட அரண்மனை போன்ற வீடும் குடியிருப்பு மனைதான், சேரியிலுள்ள குடிசையும் வீடுதான். மேலும், புதிதாகக் குடித்தனம் செய்வோர் சொந்த வீடுகளில் தனியாகவும் வாழலாம் அல்லது வாடகை வீட்டில் மற்றவர்களோடு சேர்ந்துக் குடித்தனமும் செய்யலாம். எனவே, மக்கள்தொகை

எவ்வளவு அதிகரித்தாலும் சரி, அல்லது புதுக் குடித்தனம் செய்வோரின் எண்ணிக்கை எவ்வளவு பெருகினாலும் சரி, குடியிருப்பு மனைகளுக்கு ஏற்படும் தேவைதான் அதிகரிக்குமேயன்றி, குடியிருப்புக் கட்டடங்களின் எண்ணிக்கையோ அல்லது குடித்தனம் செய்யும் வீட்டு வசதிகளோ அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை; அவை குறைவாகவும் இருக்கக்கூடும்.

குடியிருப்பு மனைகளின் தேவை சுழல்போல் அடிக்கடி ஏற்ற இறக்கமடைதல்

கடந்த நூறு ஆண்டுகளில் ஆண்டுதோறும் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு மனைகள் பெருமளவில் ஏற்ற இறக்கமடைந்துள்ளன. சான்றாக, 1925-ல் சுமார் 1 மில்லியன் மனைகள் புதிதாகக் கட்டப்பட்டன; ஆனால் 1933-லோ 93,000 மனைகள்தான் கட்டப்பட்டுள்ளன; அதாவது 1925-ல் கட்டப்பட்டதைக் காட்டிலும் 1933-ல் கட்டிய மனைகள் 9 சதவீதம் குறைந்துவிட்டன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பொருளாதார நடவடிக்கைகள் அவ்வளவாக ஏற்ற இறக்கமின்றி ஓரளவு நிலையானவையாக இருந்து வந்துள்ளன; எனினும் குடியிருப்பு-மனை வேலைகள் மட்டும் ஆண்டுதோறும் சுமார் 25 சதவீதம் ஏற்ற இறக்கம் அடைந்துள்ளது.

புது வீடுகளுக்கேற்படும் தேவை, புதிதாகக் குடித்தனம் செய்ய விரும்புவோரின் எண்ணிக்கை, மக்களின் வருமான நிலை, வெளியிலிருந்து வந்து குடி புகுவோர்களின் எண்ணிக்கை ஆகியவற்றில் ஏற்படும் மாறுதல்களைப் பொருத்ததாகும். சான்றாக, புதுக் குடித்தனம் நடத்தும் குடும்பங்களின் எண்ணிக்கை உயர்ந்துவிட்டால் வீடுகளுக்கேற்படும் தேவை விரிவடைகிறது. அதேபோல் மக்களின் வருமானம் உயரும்போது, உறவினர் கூட்டாடு சேர்ந்து வாழும் சிலர் சொந்தமாகவே வீடு கட்டி வாழ விரும்பலாம்; சிறிய வாடகை வீடுகளில் வாழும் பலர் வசதியான பெரிய வீடுகளுக்குக் குடி போக நினைக்கக் கூடும். மேலும், ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்கள் பிற பகுதிகளுக்குச் சென்று குடிபுகும்போதும் வீடுகளுக்கு ஏற்படும் மொத்தத் தேவை விரிவடைந்துவிடுகிறது. எவ்வாறெனில், ஓரிடத்திலிருந்து பிரிதோர் இடத்திற்குக் குடிபுகும்போது, புதிய இடத்தில் வீடுகளுக்குத் தேவை ஏற்படுகிறது; ஆனால் அத தேவையை ஈடு செய்யும் விதத்தில் பழைய இடத்தில் தேவை இருப்பதில்லை; சில சமயங்களில் பழைய இடத்திலுள்ள வீடுகள் யாருமே குடியில்லாத காரணத்தால் பாழடைந்து விடக்கூடும். இவ்வாறு

இடம் விட்டு இடம் குடி பெயருவதால் வீட்டிற்கேற்படும் மொத்தத் தேவை அதிகரித்துவிடுகிறது.

குடியிருப்பு மனை கட்டுவதில் ஏற்படும் நீண்ட சுழற்சிகள்

உள்நாட்டுப் போர் முடிந்து, இரண்டாம் உலகப் போர் வரை எத்தனை குடியிருப்பு மனைகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்த்தால், அது விநோதமாக இருக்கும். எவ்வாறெனில், சரியாக 20 ஆண்டுகளுக்கொருமுறை வீடு கட்டும் வேலைகள் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன. எனவே, இதைப் பார்க்கும் பொருளாதார அறிஞர்கள் பலர் வீடு கட்டும் வேலையில் 'நீண்ட சுழற்சிகள்' (long cycles) உள்ளதெனத் தீர்மானித்துள்ளனர். 1871 முதல் 1965 வரை குடியிருப்பு மனை



படம் 4-3 1871-க்குப் பின் குடியிருப்புக் கட்டடங்கள் (5 ஆண்டுகளுக் கொருமுறை கணிக்கப்பட்ட சராசரிச் செலவீட்டின்படி; இலையான டாலரிடமதிப்பில் செலவீடு)

களில் செய்யப்பட்ட செலவு எந்த அளவுக்கு ஏற்ற இறக்கமடைந்துள்ளது என்பதை 4-3 படம் விளக்குகிறது. (ஆண்டுதோறும் ஏற்பட்ட சிறு சிறு மாறுதல்களையெல்லாம் கணக்கெடுக்காமல், 5 ஆண்டுகளுக்கொரு முறை ஏற்பட்டுள்ள சராசரியாக மாறுதல்களை மட்டும் கணக்கெடுத்து இப் படம் வரையப்பட்டுள்ளது.) 1888, 1907, 1926 ஆகிய ஆண்டுகளில், அதாவது, 20 ஆண்டுகளுக்கொருமுறை செலவீடு உச்சக்கட்டத்தை அடைந்

துள்ளதைக் கவனியுங்கள். அதோடு, அப்படி உச்சக் கட்டத்தை அடைவதற்கு எத்தனை ஆண்டுகளாகியுள்ளன, எவ்வளவு வேக மாகச் செலவீடு இறங்கியுள்ளது என்பதையும் பாருங்கள். மேலும், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் புதிய வீடு களில் செய்யப்பட்ட செலவு அவ்வளவாக ஏறி இறங்காமல் ஒரே நிதானமாகவே இருப்பதையும் மறந்துவிடாதீர்கள்.

குடியிருப்பு மனைகளில் செய்யும் செலவீடு ஏன் இவ்வளவு ஏற்ற இறக்கமடைந்துள்ளது, ஏன் நீண்டகால ஏற்ற இறக்கமா யுள்ளது என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. வீடுகள் கட்டப்படுவதும், அவற்றிற்கேற்படும் தேவையும் ஒரு தனி ரக மாகும். அதாவது, குடியிருப்பு மனைகளுக்கு எவ்வளவு அடிப் படைத் தேவை உள்ளதோ, அதைக் காட்டிலும் அதிகமாக மனைகள் கட்டப்பட்டுவிடுகின்றன; அதோடு மட்டுமன்றி தேவை குறைந்துவிட்டால்கூட மனைகள் கட்டும் வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. மேலும், நாட்டிலுள்ள குடியிருப்பு மனைகள் அனைத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஆண்டுதோறும் கட்டப்படும் புதிய மனைகளின் விகிதம் மிகச் சிறியதாகவே தான் உள்ளது. சான்றாக, ஓராண்டு காலத்தில் 1 மில்லியன் வீடுகள் புதிதாகக் கட்டப்பட்டாலும் அது மொத்தமுள்ள வீடு களில் 2 சதவீதம்தான்; அதாவது மொத்த இருப்பில் புதிதாகச் சேர்க்கப்படும் வீட்டு விகிதம் மிகக் குறைவு; 200,000 வீடுகள் புதிதாகக் கட்டப்படும்போது அது 4 சதவீதத்தின் அதிகரித்துள்ளது என்று பொருளாகிறது. வீடுகள் அனைத்தும் ஒரே விதமாக இருப்பதில்லை, அல்லது ஒரே இடத்தில் கட்டப் படுவதுமில்லை. எனவே, வீட்டிற்கு ஏற்படும் தேவை எல்லா இடங்களிலும் ஒரே விதமாகவும் இருப்பதில்லை. சான்றாக, சில சமயங்களில் வாடகை வீடு கட்டும் நிலைகிழார் அந்த இடத்தில் அவ்வளவாகத் தேவை இல்லை என்பதைச் சிலகாலம் கழித்துதான் உணர்கிறார்; எனவே, அவ்விடத்தில் வீடு கட்டும் வேலையைக் குறைப்பதற்கு நீண்ட காலமாகிவிடுகிறது. இவ்வாறாக, பெரும் எண்ணிக்கையில் குடியிருப்பு மனைகள் கட்டப்பட்ட பின்னர், தேவை எவ்வளவுதான் குறைவாயிருந்தாலும், அதற்கேற்ப கட்டட வேலைகளைக் குறைத்துவிட முடிவதில்லை.

மாறாக, குடியிருப்பு மனைகள் அதிகமாக இருக்கவேண்டிய இடங்களில் போதிய அளவு கட்டப்படாமலும் இருக்கலாம். போதிய அளவு வீடுகள் இல்லாத இடங்களில் கிராக்கி ஏற்பட்ட பின்னர்தான் கட்டட வேலைகள் தீவிரமாகத் தொடங்கப்படு கின்றன. இவ்வாறாக, நிறைவு செய்யப்படாத தேவை அதிக

முள்ள இடங்களில் வீடு கட்டும் பணி நீண்டகாலம்வரை தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

கடனும் குடியிருப்பு மனைகளும்

ஏனைய வகை முதலீடுகளைப் போலன்றி, பெரும்பாலான குடியிருப்பு மனைகள் கடன் வசதிகளையும் வட்டி வீதத்தையும் பொருத்துக் கட்டப்படுகின்றன. நாட்டில் பெரும்பாலான வீடுகள் கடன் வாங்கித்தான் கட்டப்படுகின்றன. எனவே, வட்டி வீதம் சிறிதளவு உயர்ந்தால்கூட கடன் வாங்கி வீடு கட்டுவோர் செலுத்தவேண்டிய தவணைத் தொகை அதிகரித்து விடுகிறது. கடன் நெருக்கடி ஏற்படும்போது, கடனளிப்போர் தம் கடன் தொகையைப் பெருமளவு குறைத்து விடுகின்றனர்; அதோடு, வீடு அடமானத்தின்மேல் கொடுக்கப்படும் கடன் தொகையை விரைவில் திரும்பப்பெற வேண்டுமென்பதற்காக தவணைகளைக் குறைத்துவிடுகின்றனர். அப்போது, தவணைத் தொகை உயர்ந்துவிடுவதால் கடன்வாங்கி வீடுகட்ட விரும்புவோர் தயக்கம் கொள்வர். வீடுகட்டத் தொடங்கியவர்கள்கூட அதை முடிப்பதற்குப் பணமின்றி, கடன்பெற்று முடிக்கவேண்டியுள்ளது; அப்படிப் பணம் கடனாகக் கிடைக்கவில்லையெனின், கட்டட வேலையை அரைகுறையாய் விட்டு விடுவதும் உண்டு.

பெரும்பாலும், குடியிருப்பு மனைகள் கடன்வாங்கிக் கட்டப்படுவதால், எளிய தவணைமுறையில் கடன் கிடைக்கும்போது, ஏராளமான வீடுகள் கட்டப்படுகின்றன. சான்றாக, 1920 முதல் 1925 வரை கடன் மலிவாகக் கிடைத்ததால் பல அடுக்குமாடி வீடுகளும் அலுவலகங்களும் ஏராளமாகக் கட்டப்பட்டன; வருங்காலத்தில் கடனுக்குத் தேவை ஏற்பட்டுவிட்டால் துன்பமதானே என்ற மனப்பான்மையில் பெரும் எண்ணிக்கையில் மனைகள் கட்டப்பட்டுவிட்டதால், அடுத்த 15 ஆண்டுகள்வரை குடியிருப்பு மனை கட்டும் வேலையில் பெரும் மந்தமே ஏற்பட்டுவிட்டது. மேலும், பெரும் பொருளாதார மந்தத்தின்போது, வீட்டின் பேரில் சிறிதளவு கடன் கொடுத்திருந்தவர்கள் எஞ்சிய பகுதியைக் கொடுக்காமல் நிறுத்திக்கொண்டனர்; இதனால் வீட்டின் பேரில் கடன்பெற முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. கடன் கொடுத்தவர்களிடம் ஏராளமான வீடுகள் அடமானமாக இருந்ததால் அது போதுமென்று முடிவுசெய்து, மேலும் கடன்தர மறுத்துவிட்டனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் வீடு கட்டும் நிலை

இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் வீடு கட்டும் செலவீடு இருந்த நிலை வேறு, போருக்குப் பின்னர் ஏற்பட்ட நிலை வேறு. போருக்கு முன்னர் குடியிருப்பு வீடுகளில் செய்த முதலீடு அடிக்கடி சரிவுற்றது; ஆனால் போருக்குப் பின்னரோ ஒரு முறைகூட அதிகமாகச் சரியாமல் தொடர்ந்து உயர்ந்து கொண்டே வந்துள்ளது. மிக உயர்ந்த மட்டத்தில்தான் சிறிதளவு இறக்கம் கண்டிருக்கிறது; ஆனால் சிறிது இறங்கிய முதலீடு மறுபடியும் துரிதமாக உயர்ந்துள்ளது. போருக்கு முன்னர் அப்படியல்ல; சரிவுற்ற முதலீடு மீண்டும் உயர்வதற்கு நீண்ட காலமாயிற்று.

இவ்வாறு, போருக்குப் பின்னர் குடியிருப்பு மனைகள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வந்திருப்பதற்கு ஒரு சில காரணங்கள் உள்ளன. அவற்றில், போர் முடிந்தவுடன் மக்கள் தொகை அதிகரித்துவிட்டதும், போர்க் காலம் தொடங்கி இன்று வரை பெரும் பொருளாதார மந்தம் ஏதும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கவை. அதோடு, அரசாங்கம் மேற் கொண்டுள்ள அடமான உத்தரவாதத் திட்டமும் முக்கியமான காரணமாகும். மத்திய அரசு வீட்டு நிருவாகத் திட்டமும் (The Federal Housing Administration), அனுபவம் வாய்ந்தோரின் நிருவாகத் திட்டமும் (Veterans' Administration) இப்போது செயல்படுகின்றன; இத் திட்டங்களின் வாயிலாக வீட்டு அடமானங்களுக்கு உத்தரவாதம் அல்லது காப்புறுதி அளிக்கப்படுவதால், மலிவான வட்டிக்கு எளிய தவணை முறையில் கடனளிக்கப்படுகின்றன. அதே சமயத்தில், போருக்குப் பின்னர், பெரும்பாலும் எல்லாக் குடும்பங்களின் வருமானமும் உயர்ந்து வருவதால், குடும்பத்தினர் புதிய வீடு வாங்குவதில் அல்லது கட்டுவதில் தீவிரமாக முனைந்துள்ளனர்; போதிய பணமில்லாதவர்கள் மேற்கூறிய இரண்டு நிருவாக அமைப்புகளின் உதவியுடன் குறைந்த வட்டிக்கு எளிய தவணை முறையில் கடன் பெற முடிகிறது.

போருக்குப் பின்னர், வீடு கட்டும் வேலைகள் சிறிதளவு ஏற்ற இறக்கமடைந்ததற்குக் காரணம், கடன்தரும் நிபந்தனைகளில் அவ்வப்போது ஏற்பட்ட மாறுதல்கள்தான். பொதுவாக, பொருளாதார நடவடிக்கைகள் விரிவடையும்போது, தொழில் நிறுவனங்கள் தம் இருப்பை அதிகரிப்பதற்கென்று கடன் பெறு

கின்றன. தொழில் நிறுவனங்களுக்குக் கடன் கொடுத்தால் அதிக இலாபம் கிடைக்குமாதலால், கடன் கொடுப்போர் குறைந்த வட்டிக்கு எளிய தவணை முறையில் வீட்டு அடமானத்தின் பேரில் கொடுக்கும் கடனைக் குறைத்து விடுகின்றனர்; எனவே உயர்ந்த வட்டிக்கு விரைவில் திரும்பிப் பெறக்கூடிய வகையில் தொழில் நிறுவனங்களுக்குத்தான் அதிகமாகக் கடனளிப்பர். மேலும், எவ்வளவுதான் பொது வட்டிவீதம் உயர்ந்தாலும், வீட்டின் அடமானத்தின் பேரில் கடனளிக்கும் சங்கங்கள் தம் வட்டி வீதத்தை உயர்த்தத் தயங்குகின்றன; எனவே, அச் சங்கங்களில் தம் சேமிப்பை வைத்திருப்போர் அச் சேமிப்புப் பணத்தைப் பெற்று, அதிக வட்டி தரக்கூடிய நிதி நிறுவனங்களிடம் வைப்பாக வைத்து விடுகின்றனர். அதோடு சங்கங்களின் சொத்துக்கள் பெரும்பாலும் குறைந்த வட்டிக்கு ஈடாக வைக்கப்பட்டுள்ள அடமானங்களில் இறுகிவிடுகின்றன; இதனால் புதிய வைப்புகளைப் பொதுமக்களிடமிருந்து கவர முடிவதில்லை.

மேற்கூறிய காரணங்களால் வட்டி வீதம் உயர்ந்து, கடன் நெருக்கடி ஏற்படும் காலங்களில் அடமானக் கடன் பெருமளவில் பாதிக்கப்பட்டு விடுகிறது. அடமானத்தின் மீது அளிக்கப்படும் கடனுக்கு வட்டி அதிகமாவதோடு மட்டுமன்றி, கடன் நிபந்தனைகளும் கெடுபிடியாகிவிடுகின்றன. இச் சூழ்நிலையில் வீடு வாங்குவதற்கோ கட்டுவதற்கோ திட்டம் போட்டிருந்தவர்கள் தம் திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கடன் பெறத் தயங்குவர்; திட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிட்டுவிடுகின்றனர். அதே போல் கடன் வாங்கி வீடுகள் கட்டி அவற்றை விற்போரும் கடன் வாங்குவது கடினமாகிவிடும்போது தம் கட்டடத் திட்டத்தைக் குறைத்துக் கொள்கின்றனர்.

பொருளாதார நடவடிக்கைகள் சிறிதளவு பின்னிறக்கம் அடையும்போது, இதற்கு நேர் மாறான விளைவுகள் ஏற்படுகின்றன. தொழில் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் கடன் குறைந்துவிடுமாதலால் வீட்டு அடமானக் கடன் அதிகரித்துவிடுகிறது. வட்டி வீதம் இறங்கிவிடுவதோடு, எளிய தவணை முறையில் நீண்ட காலத்திற்குக்கூடக் கடன் கிடைக்கும் நிலை ஏற்பட்டுவிடுகிறது. இதன் விளைவாக, மலிவாகக் கடன் கிடைக்கட்டும் என்று காத்திருந்தவர்கள் இப்போது தம் திட்டப்படி வீடுகள் கட்ட முனைவர். இவ்வாறாக, பொருளாதாரப் பின்னிறக்கத்தின்போதுதான் வீடு கட்டும் வேலை அதிகமாகிறது; வளமையான காலத்தில் குறைந்துவிடுகிறது. இது வருமான மாறுதல்களுக்கு நேர்மாறாக இருப்பது தெளிவு; எவ்வாறாயினும், வீடு கட்டும்

திட்டங்களுக்குக் கடன் எவ்வளவு முக்கியமானது என்பதைத் தான் இது புலப்படுத்துகிறது. வீடுகளில் செய்யப்படும் முதலீடு பொருளாதாரச் சுழற்சிக்கு சுமாரான அளவாவது குறிப்பிடத் தக்கது. அதாவது, ஏனைய முதலீடுகளெல்லாம் சரியும்போது வீடு கட்டுவதில் செய்யப்படும் முதலீடு மட்டும் அதிகமாகிவிடுவ தால் நாட்டின் மொத்த முதலீடு ஓரளவிற்குச் சரிக்கட்டப்படு கிறது; இதனால்தான், போருக்குப் பின்னர் நமது பொருளா தாரம் அதிக உலைவின்றி நிலைத்து வருகிறது.

1968, 1969 ஆம் ஆண்டுகளில் வட்டி வீதம் உயர்ந்து, பண முடையும் ஏற்பட்டது; இருந்தாலும் புதிய வீடுகள் கட்டும் வேலை சிறிதளவுகூடக் குறையாமல் வியக்கத்தக்க வகையில் அதிகமாகவேதான் இருந்தது. ஆண்டொன்றுக்கு சுமார் 1·5 மில்லியன் வீடுகள் புதிதாகக் கட்டப்பட்டன. அப்படியானால், வட்டி வீதம் எவ்வளவுதான் அதிகமாயிருந்தாலும். அதனால் குடியிருப்பு மனைகள் கட்டப்படுவது பாதிக்கப்படுவதில்லை என்று பொருளல்ல. ஏனெனில், 1964-லும் 1969-லும் நுகர்வோர் வருமானம் உயர்ந்த மட்டத்தில் இருந்ததோடு, மேலும் உயர்ந்து கொண்டிருந்தது. அதோடு, இரண்டாம் உலகப் போர் முடிந்த சமயத்தில் பிறப்பு வீதம் அதிகமாயிருந்ததன் விளைவாக இவ்விரு ஆண்டுகளில்தான் திருமணமும் அதிகமாகி, புதுக் குடித்தனம் நடத்துவோரின் எண்ணிக்கையும் உயர்ந்தது; அதனால் குடியிருப்பு மனைகளுக்குப் பெரும் தேவை ஏற்பட்டது. இங்கிலையில் வட்டி வீதம் மட்டும் குறைவாக இருந்து, கடன் தொகை மிகுதியாகக் கிடைத்திருக்குமாயின் ஆண்டுதோறும் 2 மில்லியன் வீடுகள் வரை புதிதாகக் கட்டப்பட்டிருக்கக்கூடும். வேறு விதமாகக் கூறின், 1968, 1969 ஆம் ஆண்டுகளில் நாட்டின் தொகு தேவையையும் பண வீக்கத்தையும் கட்டுப்படுத்துவதற் காக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளால்தான் வட்டி வீதம் உயர்ந்துவிட்டது; அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாமல் இருந்திருந்தால் இன்னும் பெரும் எண்ணிக்கையில் புது மனைகள் கட்டப்பட்டிருந்திருக்கலாம். எனினும், 1969-க்குப் பின்னர் வீடு கட்டும் வேலைகள் பெருமளவிற்குக் குறைக்கப்பட்டு விட்டன.

சுருக்கம்

மூன்றும் அதிகாரத்தில் நாம் பார்த்ததுபோல், நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) ஒரு புறம் நுகர்வுச் சார்பினையும், மறு புறம் முதலீட்டுச் செலவு அரசாங்கச் செலவினையும் சார்ந்த

தாகும் செலவீட்டிலும் வருமானத்திலும் ஏற்படுகின்ற சிறு மாறுதல்களினால் நுகர்விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பு மாறி, செலவிடும் வருமானமும் மேலும் அதிகமாக மாறுதல் அடைகின்றன; எனவே, முதலீட்டிலோ அரசாங்கச் செலவிலோ மாறுதல் ஏற்பட்டால், அப்பாறுதலைப்போல் பன்மடங்கு நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) மாறிவிடுகிறது. நாடது பொருளாதார வரலாற்றில் பெரும் மந்தமும் ஒரு சில சந்தர்ப்பங்களில் மிதமான பின்னிறக்கங்களும் ஏற்பட்டன என்பதை நாம் அறிவோம்; இதற்கெல்லாம் காரணம், முதலீட்டில் ஏற்பட்ட மாறுதல்கள்தான் எனவே, முதலீட்டின் அளவை நிர்ணயிக்கும் முக்கியமான சக்திகள் யாவை, முதலீடு பெருமளவிற்கு ஏற்ற இறக்கமடைவது எதனால் என்பதை அறிந்துகொள்வதற்குத்தான் இதுவரை நாம் முயற்சித்தோம்.

தொழில் நிறுவனங்கள் பெரும்பாலும் இயந்திர சாதனங்களிலும் தளவாடங்களிலும்தான் முதலீடு செய்கின்றன; இவ்வகையான முதலீட்டில் எக்கணமோ விதமான மாறுதல்கள் ஏற்பட்ட வண்ணம் இருக்கின்றன. தொழில் நிறுவனங்களின் விற்பனை எவ்வளவு வேகமாக அதிகரிக்கின்றதோ அதைப் பொருத்துத்தான் அந் நிறுவனங்கள் முதலீடு செய்து தம் உற்பத்தி சக்தியைப் பெருக்குகின்றன. எனவே நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) அளவு மாறும்போது, இத் தொழில் முதலீடும் மாறுகிறது; குறிப்பாகக் கூறவேண்டுமாயின், நாட்டின் மொத்த உற்பத்தி அதிகரிக்கும் வீதம் குறையும்போது முதலீட்டுச் செலவு தாழ்ந்துவிடுகிறது. தொழில் நிறுவனங்கள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள உற்பத்தி முறையைப் பயன்படுத்துவதும், விற்பனையை அதிகரிக்கும் வகையில் புதிய அங்காடிகளைக் கண்டுபிடிப்பதும் கூட ஒரு வகையான முதலீடுதான். இவ்வாறான புதிய முதலீட்டு வாய்ப்புகள் தோன்றும்போது, முதலீடு திடீரென்று உயர்ந்துவிடுகிறது. மேலும், தொழில் நிறுவனங்கள் தம் இலாபத்தில் ஒரு பகுதியை மட்டும்தான் முதலீட்டிற்காகப் பயன்படுத்துகின்றன; எனவே, முதலீடு ஏற்ற இறக்கமடைவதற்கு நிறுவனங்கள் பெறும் இலாபத்தில் ஏற்படும் மாறுதலும் ஒரு காரணமாகும்.

முதலீடு நிலையின்றி மாறும் தன்மையுடையது; எனினும், இம்மாறும் தன்மையை ஓரளவு தணிக்கக்கூடிய பல சக்திகள் உள்ளன. புதிய முதலீடு செய்யும் வாய்ப்புகள் எந்த அளவுக்கு இருக்கின்றனவோ, அந்த அளவுக்கு நடைமுறையில் முதலீடு செய்யப்படுவதில்லை. இதற்கு ஒரு சில முக்கிய

காரணங்கள் உள்ளன. அவை: (1) புதிய இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் உடனடியாகப் பெற முடியாது. அவற்றிற்கு ஆர்டர் கொடுத்து, உற்பத்தியாகி அவை நிறுவப்படுவதற்குப் போதுமான காலம் தேவை; (2) விற்பனை எந்த அளவுக்கு உயர்ந்தாலும், அவ்வுயர்வு தற்காலிகமானதாயின், தொழில் நிறுவனங்கள் தம் உற்பத்தி சக்தியை அதிகரிக்கக் கூடிய வகையில் முதலீடு செய்யத் தயங்கும்; எனவே, விற்பனை அதிகரிக்குமளவிற்கு முதலீடு உயர்வதில்லை; (3) ஒரு தொழில் நிறுவனம் தன்னிடமுள்ள இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் அதிகரித்து இலாபம் பெறுவதற்கு ஒரு வரம்பு உண்டு; (4) சொந்த நிதி போதுமானதாக இல்லாதபோது, மேலும் மேலும் கடன் வாங்கித்தான் தன் உற்பத்தி சக்தியை நிறுவனம் அதிகரிக்க முடியும்; ஆனால் பொருளாதார வளமைக் காலத்தில் சாதாரணமாக இருப்பதைக் காட்டிலும் வட்டி வீதம் உயர்ந்து விடுகிறது. அதனால், செழுமையான காலத்தில் நிறைவு செய்யப்படாத முதலீட்டு வாய்ப்புகள் தோன்றிவிடுவதால், விற்பனையும் இலாபமும் சரிந்து, பொருளாதாரப் பின்னிறக்கம் ஏற்படும் போது முதலீடு அவ்வளவாகச் சரியாமல் மிதமாக்கப்பட்டு விடுகிறது. எனினும், பின்னிறக்கம் பெருமளவிலோ அல்லது தொடர்ந்து வெகு காலத்திற்கோ ஏற்படும்போது, நிறைவு செய்யப்படாத முதலீட்டு வாய்ப்புகள் மறைந்து விடுகின்றன. அப்போது முதலீட்டுச் செலவு பெருமளவில் சரிந்து பொருளாதார நடவடிக்கைகள் மந்தமடைந்துவிடலாம்.

தொழில் நிறுவனங்கள் நிலையான சொத்துக்களில் மட்டுமன்றி, தம் இருப்புகளிலும் முதலீடு செய்கின்றன. பொதுவாகக் கூறின், விற்பனை உயரும்போது, இருப்புகளும் கூடுகின்றன, விற்பனை தாழும்போது இருப்புகள் சுருங்கிவிடுகின்றன. விற்பனை பெருமளவில் அதிகரிக்கும்போது தொழில் நிறுவனங்கள் தம் இருப்புகளையும் துரிதமாகக் கூட்ட முற்படுகின்றன. அவ்வாறுயின், பொருளாதார நடவடிக்கைகள் உச்ச மட்டத்திற்கு உயரும்போது இருப்புகளும் பெருமளவில் கூட்டப்படுகின்றன. மாறாக, நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) அதிகரிக்கும் வீதம் குறையும்போது, இருப்புகளில் செய்யப்படும் முதலீடு குறைந்து எதிர்க்கணியமாகிவிடுகிறது. எனவே, நாட்டின் மொத்த உற்பத்தியில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப இருப்புகளும் மாறிவிடுகின்றன. சாதாரணப் பின்னிறக்கத்தின்போது நாட்டின் மொத்த உற்பத்தி இனங்களில் இருப்பு முதலீடுதான் அதிகமாகக் குறைக்கப்படுகின்றது.

வீடுகள் கட்டுவதில் செய்யப்படும் முதலீடு வீடுகளுக்குள்ள அடிப்படைத் தேவையைக் காட்டிலும் அதிகமாக ஏற்ற இறக்க மடைகின்றது. குடியிருப்பு மனைகளுக்குரிய அங்காடி ஒரு தனி ரகமாக இருப்பதால், தேவை சிறிதளவு உயர்ந்தால்கூட மனைகள் பெரும் எண்ணிக்கையில் கட்டப்பட்டுவிடுகின்றன; பின்னர், உயர்ந்த தேவை குறைந்தாலும் கட்டப்படும் மனைகளின் எண்ணிக்கை குறையாமல் சிறிதுகாலம் வரை அப்படியே இருக்க நேரிடுகிறது. எனவே, மனைகள் கட்டப்படுவது குறைந்து விட்ட பின்னர், மக்கள்தொகை பெருகி வீடுகளுக்குத் தேவை ஏற்படும்போது, உடனடியாக வேண்டிய வீடுகள் கட்டப்படுவ தில்லை. இரண்டாம் உலகப்போருக்கு முன்னர், பல்லாண்டுகள் வரை வீடு கட்டுவதில் செய்யப்பட்ட முதலீடு நீண்ட ஏற்ற இறக்கமடைந்தது. ஏனைய முதலீடுகளைப் போலன்றி, குடியிருப்பு மனைகளில் செய்யப்படும் முதலீட்டின் அளவு பொதுவாக வட்டி விதத்தாலும் பெறக்கூடிய கடன்தொகையாலும்தான் நிர்ணயிக் கப்படுகிறது. எனினும், போர் முடிந்து இன்றுவரை, வீடுகட்டு வதில் செய்யப்படும் முதலீடு சிறிதளவும் குறைபாமல் உயர்ந்த மட்டத்திலேயேதான் இருந்துவந்துள்ளது. மக்களின் வருமானம் உயர்ந்து வருவதையும், வருமானத்தைக் குறைக்கக்கூடிய பொருளாதார மந்தம ஏதும் இதுவரை ஏற்படவில்லை என்பதை யும், மக்கள்தொகை துரிதமாக வளர்ந்து வருவதையுமதான் இது புலப்படுத்துகிறது. இம் முதலீடு உயர்ந்த அளவில் இருந்த போது கடன்தரும் ஏற்பாடுகளில் ஏற்பட்ட மாறுபாடுகளினால் சிறிதளவு ஏற்ற இறக்கம் கண்டது உண்மை; எனினும் அவ் வேற்ற இறக்கம் உடனடியாகச் சரிக்கட்டப்பட்டுவிட்டது.

5. பணமும் விலையும் பணவீக்கமும்

விலைவாசிகளைப்பற்றி நாம் இதுவரை ஒன்றுமே கூறவில்லை. நாட்டின் மொத்த உற்பத்தியை (GNP) நிர்ணயிக்கும் காரணிகளைப் பற்றியும், வேலை நிறைவை அடையும் வரை நாட்டின் மொத்த உற்பத்தி அதிகரிப்பதைப்பற்றியும் ஆராய்ந்தபோது, விலைவாசிகளெல்லாம் மாறுமல் அப்படியே இருப்பதாக அனுமானித்துக் கொண்டோம். அதோடு, முழுத்திறன் உற்பத்தியைக் காட்டிலும் தொகுதேவை விரிவடையும்போது விலைவாசிகள் உயர முற்படுமென்றும் வைத்துக்கொண்டோம்.

போர்க் காலங்களில் மட்டுமன்றி, சமாதான காலத்தில்கூட முழுத்திறன் உற்பத்தி அளவைக் காட்டிலும் மொத்தச் செலவீடு மிஞ்சி, பொருளாதார வீக்கம் ஏற்படுவதுண்டு; அப்போது விலைவாசிகளெல்லாம் உயர்ந்துவிடுகின்றன. எனவே, விலைவாசிகள் ஏன் மாறுகின்றன என்பதற்குரிய காரணங்களை மிகக் கவனமாக ஆராயவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. விலைவாசிகள் மாறுமல் அப்படியே இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று ஆசிக்கின்றோம்; ஆனால் அந் நிலையை எப்படி அடைவது? வேலை நிறைவும் பொருளாதார வளர்ச்சியும் உள்ளபோது விலைவாசிகளை நிலைப்படுத்த முடியுமா? விலைவாசிகள் மிக அதிகமாக உயர்வடைந்து, பணவீக்கம் தோன்றிவிட்டால் அதனால் பாதிக்கப்படுவது யார்? பலனடைவது யார்? ஆண்டுதோறும் விலைவாசிகள் சிறிது சிறிதாக உயர்ந்து கொண்டே போனால் பொருளாதார விளைவுகள் மோசமானதாகி விடுமா? பணவீக்கம் துரிதமாக ஏற்பட்டுக்கொண்டிருந்தால் என்ன ஆகும்? இவ் வினாக்களைப் பற்றித்தான் இவ்வதிகாரத்தில் ஆராயப்போகின்றோம்.

பொது விலை மட்டம்
(General Price Level)

அங்காடிப் பொருளாதாரத்தில் (market economy) நுகர்வோரின் தேவைகளும் விருப்பங்களும் எப்படியுள்ளன என்பதை உற்பத்தியாளர்கள் அறிந்துகொள்வதெப்படி? ஒவ்வொரு பொரு

ளின் விலையும் எப்படி உள்ளது என்பதைக் கொண்டுதான் அறிந்துகொள்கின்றனர். ஆனால் எண்ணிலடங்காத பொருள்களும் பணிகளும் இருக்கும்போது அவை ஒவ்வொன்றின் விலையையும் கணக்கிட்டு அறிந்துகொள்ள எவராலும் முடியாது. அதோடு, குறிப்பிட்டதொரு காலத்தில் சிலவற்றின் விலைகள் உயர்கின்றன; அதே சமயம் ஏனைய சிலவற்றின் விலைகளோ இறங்குகின்றன. இப்படியெல்லாம் இருக்க, விலைவாசிகள் மாறுமல் அப்படியே இருக்கவேண்டுமென்று விரும்புகின்றோம்; விலை வீக்கமோ விலை வாட்டமோ ஏற்பட்டுவிடாமலிருக்க பொருளாதாரக் கொள்கைகளின் வாயிலாக எவ்வளவோ முயற்சி செய்கின்றோம். விலை நிலைபேறுக்கம் என்று கூறும்போது, எல்லா விலைகளின் 'சராசரி'யைத்தான் குறிப்பிடுகின்றோம்; அச் சராசரியை நோக்கித்தான் ஒவ்வொரு விலையும் இயங்க வேண்டும் என்ற பொருளில் குறிப்பிடுகின்றோம். விலைகளின் 'சராசரி' என்ற கருத்து இருந்தால்தான் 'பணவீக்கம்', 'பணவாட்டம்', 'விலை நிலைபேறுக்கம்' என்ற சொற்களுக்குப் பொருள் இருக்கும்.

விலைக் குறியீட்டெண்கள்
(Price Indexes)

விலைச் சராசரிகளைத்தான் விலைக் குறியீட்டெண்கள் என்று அழைக்கின்றோம். விலைக் குறியீட்டெண்கள் மூன்று வகைப்படும். நுகர்வுப் பொருள் விலைக் குறியீட்டெண் (Consumer Price Index) என்பது, பொதுவாக நடுத்தரக் குடும்பத்தினர் வாங்கும் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் விலை மாறுதல்களை அளவிடுவதாகும். தொழிலாளர் புள்ளிவிவரக் கழகம் (Bureau of Labour Statistics) பொதுவாகத் தொழிலாளர் பயன்படுத்தும் பொருள்களில் சுமார் 300 இனங்களின் விலைமாறுதல்களைக் கணித்து வெளியிட்டு வருகிறது. நடுத்தரக் குடும்பத்தினரின் வருவாய்-செலவின் அடிப்படையில் ஒவ்வொரு பொருளின் முக்கியத்துவத்தையும் எடையிட்டு, பின்னர் இக் குறியீட்டெண் கண்டுபிடிக்கப்படுகிறது. மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண் (Whole sale price index) என்பது மொத்த விற்பனையாளர்களும் உற்பத்தியாளர்களும் விற்கின்ற விலைகளில் ஏற்படும் மாறுதல்களைக் கணிக்கின்றது. மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண் பதினெட்டாம் நூற்றாண்டின் விலை மாறுதல்களுக்கும்கூட இருக்கின்றதெனினும், ஒரு சில பொருள்களுக்கு மட்டுமே உள்ளது. தற்போது, ஏறக்குறைய 2,000 பொருள்களுக்கு இக் குறியீட்டெண் உள்ளது. அடுத்து, நாட்டின்

மொத்த உற்பத்தியின் உண்மையான மதிப்பை அளவிடுவதற்கு, 'மாறுத விலைகளில்' கணிக்கப்படும் நாட்டு உற்பத்திக் குறியீட்டெண் முன்றாவது வகையாகும்.

ஆதார ஆண்டின் விலைகளை அடிப்படையாகக் கொண்டு, விலைவாசிகள் எத்தனை சதவீதம் மாறியுள்ளன என்பதை அளவிடுவதுதான் விலைக் குறியீட்டெண் ஆகும். சான்றாக, 1957–59ஆம் ஆண்டின் விலைகளை ஆதாரமாகக் கொண்டுதான் தற்போதுள்ள மொத்த விலைக் குறியீட்டெண்ணும் நுகர்வுப் பொருள் குறியீட்டெண்ணும் கணிக்கப்பட்டுள்ளன. இக் கணிப்பின்படி, 1969ஆம் ஆண்டில் நுகர்வுப் பொருள் குறியீட்டெண் 127·7 ஆக உள்ளது; அதாவது நுகர்வுப் பொருள் விலைகள் 1957–59-ல் இருந்ததைக் காட்டிலும் 1969-ல் 27·7 சதவீதம் உயர்ந்துவிட்டதைக் காட்டுகிறது. ஒவ்வொரு பொருளின் விலையையும் எடை போட்டு, பின்னர் அதன சராசரியைக் கணித்தால் விலைக் குறியீட்டெண் கிடைக்கிறது. பொதுவாக, பல்வேறு பொருள்களின் முக்கியத்துவத்திற்கேற்ப, அவற்றிற்குச் செலவிடப்படும் தொகையின் அடிப்படையில் எடையிட்டுத்தான் பல்வேறு ஆண்டுகளுக்கான குறியீட்டெண் கணிக்கப்படுகிறது; எனவே, இதிலிருந்து எந்தெந்தப் பொருள்கள் எவ்வளவு வாங்கப்பட்டுள்ளன என்பதையும் நாம் அறிந்துகொள்ள முடியும்.

விலைக் குறியீட்டெண்களிலுள்ள ஒரு சில குறைபாடுகள்

விலைக் குறியீட்டெண் விலை மட்டத்தைத் தோராயமாகத் தான் அளவிடுகின்றதேயன்றி, கச்சிதமாக அளவிடுகிறது என்று சொல்ல முடியாது. எனவே, விலைக் குறியீட்டெண்களைப் பயன்படுத்தும்போது, அவற்றிலுள்ள குறைபாடுகளையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

ஆதார ஆண்டின் விலைவாசிகளைப் பல்லாண்டு கழித்து நிலவும் விலைவாசிகளோடு ஒப்பிடுவது அர்த்தமற்றதாகிறது. காரணம், இந்நீண்ட இடைவெளியின்போது, மக்களின் வருமானமும் பற்றுதல்களும் எவ்வளவோ மாறுதல் அடைந்து, அவர்கள் வாங்கும் பொருள்கள் கூட வேறு வகையானவைகளாய் ஆகியிருக்கலாம். சான்றாக, 1900ஆம் ஆண்டில் அமெரிக்க மக்களின் முக்கிய உணவுப் பொருள்களாக இருந்தவை ரொட்டியும் உருளைக்கிழங்கும்தான்; எனவே இவ்விரண்டிலும்தான் அதிகச் செலவீடு செய்தனர். ஆஸ்ரல் இன்றோ இறைச்சியும் பழங்களும்தான்

முக்கிய உணவுப் பண்டங்களாக வாங்கப்படுகின்றன. எனவே, 1901ஆம் ஆண்டில் நிலவிய நுகர்வுப் பொருள் விலைகளையும் 1969-ன் நுகர்வுப் பொருள் விலைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, எந்தெந்தப் பொருள்கள் எந்தெந்த ஆண்டில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவையாய் இருந்தன என்பதை நாம் ஆளவிடுவது கிடையாது. ஆனால் நுகர்வுப் பொருள்களின் முக்கியத்துவமோ மாறிவிடுகிறது. இவ்வாறாக, எந்தப் பொருள்களின் விலைகள் உச்ச மட்டத்திற்கு உயர்ந்தனவோ அவற்றிற்கு அதிக முக்கியத்துவம் தரும்போது, அவற்றின் குறியீட்டெண்களும் அதிகமாக உயர்ந்துவிடுகின்றன. பத்தாண்டு இடைவெளி இருந்தால்கூட நுகர்வோரின் போக்கு ஓரளவு மாறிவிடக்கூடும்; அப்போது, நுகர்வுப் பொருள்களுக்குக் கொடுத்துள்ள முக்கியத்துவமும் மாறிவிடுகிறது. அதனால்தான், உழைப்பாளர் புள்ளி விவரக் கழகத்தினர் 1951-ல் நுகர்வுப் பொருள்களின் செலவீட்டிற்கேற்ப கொடுத்த முக்கியத்துவத்தை 1961-ல் மாற்றவேண்டியதாயிற்று. அவர்களின் கணக்கெடுப்பின்படி பார்க்கும்போது, இப்பத்தாண்டுகளுக்குள் உணவிற்களிக்கப்படும் முக்கியத்துவம் 48 சதவீதத்திலிருந்து 42 சதவீதத்திற்குக் குறைந்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், விலைக் குறியீட்டெண்கள் பொருள்களின் தரம் எவ்வளவு மாறியுள்ளதென்பதை முழுமையாக அளவிட முடியாது. இன்று நுகர்வுப் பொருள் விலைக் குறியீட்டெண்ணில் இடம் பெறுகின்ற பொருள்கள் 1900ஆம் ஆண்டில் இருந்திருக்குமா என்பதுகூடச் சந்தேகப்தான். கார்கள், குளிர் சாதனங்கள், உலர்த்தப்பட்ட உணவுப் பண்டங்கள் ஆகியவை இதற்குச் சில சான்றுகளாகும். நிற்க, 1948ஆம் ஆண்டு மாடல் காருக்குக் கொடுப்பதைக் காட்டிலும் 1971ஆம் ஆண்டு மாடல் காருக்குதான் அதிகவிலை கொடுக்க வேண்டியுள்ளது; அவ்வாறு கொடுக்கும்போது, விலை உயர்ந்திருக்கின்ற காரணத்திற்காக எவ்வளவு அதிகம் கொடுக்கவேண்டியுள்ளது, காரின் தரம் உயர்ந்திருப்பதற்காக எவ்வளவு அதிகமாகத் தரவேண்டியுள்ளது என்பதை எவ்வாறு கணக்கிட முடியும்? குறியீட்டெண் கணக்கணிக்கும்போது, அளவிடக்கூடிய பொருள்களின் தரத்தை மட்டும்தான் புள்ளியியல் நிபுணர்கள் சரிப்படுத்துகின்றனர். எவ்வாறிருப்பினும், விலைவாசிகள் எவ்வளவு உயர்ந்துவிட்டன என்பதை மட்டும்தான் விலைக் குறியீட்டெண்கள் புலப்படுத்த முடியுமேயன்றி, பொருள்களின் தரம் எவ்வளவு உயர்ந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட முடியாது. எனவே, குறியீட்டெண்ணை மட்டும் கொண்டு விலைவாசிகள் எவ்வளவு உயர்ந்துள்ளன என்று

தான் கூற முடியும்; ஆனல் உயர்ந்த ரகப் பொருள்கள் என்பதற் காக நாம் அதிக விலே கொடுத்தால், உண்மையில் விலே உயர்ந்து விட்டதென்று கூற முடியாது. பொருள்களின் தரம் மிகக் குறுகிய காலத்தில் உயர்ந்திருக்குமாயின், அதை விலேக் குறியீட் டெண்கள் புலப்படுத்த முடியாது; நீண்ட காலத்தில் ஏற்படக் கூடிய தர உயர்வை மட்டுமே புலப்படுத்த முடியும்.

விலேவாசிகள் எப்படி மாறியுள்ளன

மொத்த விற்பனே விலேகள் கடந்த 150 ஆண்டுகளில் எப்படி ஏற்ற இறக்கமடைந்துள்ளன என்பதை படம் 5 – 1 காட்டுகிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் மட்டும்தான் விலேவா சிகள் இறங்காமல் உயர்ந்து கொண்டேயிருக்கின்றன; மற்றப்படி எல்லாப் போர்க் காலங்களிலும் விலேவாசிகள் பெருமளவு உயர்ந்து, போர் முடிந்தவுடன் சரிந்துள்ளன என்பதைக் கவனி யுங்கள்.

போர்க் கால விலேவாசி உயர்வைப் புறக்கணித்துவிட்டு, இப் படத்தைச் சற்று கவனமாகப் பார்த்தால் ஓர் உண்மை புலப் படும். அதாவது, 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த விலேவாசிகளேக் காட்டிலும் அந் நூற்றாண்டின் இறுதியில் விலேவாசிகளெல்லாம் தாழ்வாகவேதான் இருந்திருக்கின்றன. எனவே, 19ஆம் நூற்றாண்டு விலேவாசிகளெல்லாம் குறைந்த நூற்றாண்டாகும். மாருக, 20ஆம் நூற்றாண்டோ விலேவாசிகள் உயரும் நூற்றாண்டாக இருந்து வருகிறது. 1896ஆம் ஆண்டி லிருந்து முதல் உலகப் போர் தொடங்கும் வரை விலேவாசிகள் படிப்படியாக உயர்ந்து வந்துள்ளன; போர் முடிந்ததும் ஓரள விற்குச் சரிவடைந்தன எனினும், போருக்கு முன்பிருந்த மட்டத் திற்கு இறங்கவே இல்லே. அதேபோல் 1930 – 33வரை தோன்றிய பொருளாதார மந்தத்தின்போது விலேவாசிகள் இறக்க மடைந்தன; எனினும் 1890-க்குப்பின் ஏற்பட்ட மந்தத்தின் போது இறங்கிய அளவிற்கு இறங்கவில்லே. ஏனேய போர்க் காலங்களேப் போலன்றி, இரண்டாம் உலகப் போரின்போது விலேவாசிகளும் ஊதிய வீதமும் ஏருமல் நல்ல முறையில் கட்டுப் படுத்தப்பட்டுவிட்டன. ஆனல் போர் முடிந்தபின் விலேவாசிகள் இறங்குவதற்குப் பதிலாக துரிதமாக ஏறத் தொடங்கிவிட்டன.

ஏனேய போர்க் காலங்களுக்கும் இரண்டாம் உலகப் போர்க் காலத்திற்கும் முக்கியமானதொரு வேறுபாடு உண்டு. அதாவது, ஏனேய போர்கள் முடிவடைந்ததும், பொருளாதார மந்தம்



படம் 5-1 800-க்குப்பின் அமெரிக்காவில் நிலவிய மொத்த விற்பனை விலைவாசிகள்

ஏற்பட்டிருக்கின்றன; ஆனால் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரோ இதுவரை பந்தமே ஏற்படவில்லை. சான்றாக, முதல் உலகப் போர் முடிந்தபின் 1921-ல் ஒரு சில மாதங்கள் வரை தான் பெரும் பொருளாதார மந்தம் ஏற்பட்டதெனினும், அம் மந்தத்தின்போது விலைவாசிகள் சரிவடைந்துள்ளன; அதே போல் 1929–33-ல் தோன்றிய மந்தத்தின்போது விலைவாசிகள் இன்னும் அதிகமாகவே சரிவடைந்திருக்கின்றன. நிற்க, 19ஆம் நூற்றாண்டின் விலைவாசிகளுக்கும் 20ஆம் நூற்றாண்டில் உயர்ந்து வரும் விலைவாசிகளுக்கும் மற்றொரு வேறுபாடும் உண்டு. அதாவது, 19ஆம் நூற்றாண்டில் நாட்டின் மொத்த உற்பத்தியில் விவசாயத் தொழில் பெரும் பங்கு கொண்டிருந்தது; ஆனால் 20ஆம் நூற்றாண்டிலோ அதன் பங்கு பெருமளவில் குறைந்து விட்டது சான்றாக, 1870-ல் நாட்டின் மொத்த உற்பத்தியில் விவசாயத்தின் பங்கு 50 சதவீதமாக இருந்தது; ஆனால் 1950-ல் அதன் பங்கு 10 சதவீதமாகக் குறைந்து, இன்று 5 சதவீதமாக ஆகிவிட்டது. விவசாயப் பொருள்களின் விலைகள் ஆலைப் பொருள்களின் விலைகளைப் போன்று இயங்குவதில்லை. விவசாயப் பொருள்களின் தேவை சிறிதளவு குறைந்தாலோ அல்லது கூடினாலோ விலைகள் விரைவாக உயரவும் தாழவும் கூடும். எனவே, நாட்டின் மொத்த உற்பத்தியில் விவசாயம் பெருமளவு பங்கு கொள்ளும் நாட்டில் விவசாயம் சிறிதளவு பின்னிறக்கம் அடைந்தால்கூட பொது விலைக் குறியீட்டெண்கள் பெருமளவு குறைந்துவிடக்கூடும். மேலும், ஒரு நாட்டில் மிதமான பொருளாதாரப் பின்னிறக்கம் ஏற்படும்போது, ஏனைய விலைகளெல்லாம் மாறாமல் அப்படியே இருக்குமானால் விலைக் குறியீட்டெண்கள் அதிகமாகக் குறைந்துவிடுவதில்லை.

கடந்த சில ஆண்டுகளில் முக்கியமான பொருள்களின் விலைகள் எப்படி ஏற்ற இறக்கமடைந்துள்ளன என்பதை உடனடியாகப் புரிந்து கொள்வதற்கு படங்கள் 5–2, 5–3 உதவக்கூடும். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், மூன்று முறை விலைவாசிகள் பெருமளவிற்கு அதிகரித்திருக்கின்றன. முதலாவதாக 1946-ல் விலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டது முதல் 1948 வரை விலைவாசிகள் மிக விரைவாக உயர்ந்தன. பின்னர் 1949-ல் தோன்றிய பின்னிறக்கத்தின் விளைவாக சிறிதளவு இறங்கி விட்டன. இரண்டாவது முறையாக, 1950–51-ல் கொரியாப் போர் ஆரம்பமானபோது மறுபடியும் துரிதமாக உயர்ந்தன. அதன் பின்னர், நான்காண்டுகள் வரை அதிகமாக ஏற்ற இறக்கமின்றி, ஓரளவிற்கு நிலையாயிருந்தன. அதைத் தொடர்ந்து 1956, 1957-ல் மூன்றாவது முறையாகப் படிப்படியாக

MARA PUBLIC

உயர்ந்தன. 1958 முதல் 1964 வரை மொத்த விலைவாசிகள் சிறிதளவும் மாறுமல் அப்படியே இருக்க, நுகர்வுப் பொருள் விலைகள் மட்டும் படிப்படியாக ஏறிவந்தன. பின்னர் 1965-ல்



படம் 5-2 நுகர்வுப் பொருள் விலைக் குறியீட்டெண், 1947-1969

மொத்த விலைவாசிகள் உயரத் தொடங்கியபோது, நுகர்வுப் பொருள் விலைகள் மேலே ஏறத் தொடங்கிவிட்டன. 1970-ல்



படம் 5-3 மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண், 1947 - 1969.

ஆறு மாதங்களுக்குள் நுகர்வுப் பொருள்களின் விலைகள் ஆண்டுக்கு 6 சதவீதம் என்ற வீதத்தில் உயர்ந்தன.

இவ்வாறுக, விலைவாசிகள் மூன்று முறை பெருமளவு உயர்ந்தன ; இம் மூன்றில் முதலிரண்டு முறைகளிலும் மொத்தச் செலவீடு மிகப் பெருமளவில் இருந்ததால்தான் விலைவாசிகள் உயர்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது. சான்றாக, 1946 முதல் 1948 வரை, அதாவது உலகப் போர் முடிவடைந்ததும் நுகர்வோரும் முதலீடு செய்வோரும் ஏராளமாகப் பொருள்களை வாங்க முற்பட்டனர்; போர்க்காலத்தில் ஏராளமான வருமானம் கிடைத்ததால், நாட்டில் உற்பத்தியான பொருள்கள் அனைத்தும் காலியாகிவிடக்கூடிய அளவுக்குப் பொருள்களை வாங்கினர். அடுத்து, கொரியாப் போர் தொடங்கியபோது விலைவாசிகள் மறுபடியும் விரைவாக உயர்ந்தன; காரணம், உலகப் போரின் போது அமலில் இருந்த கட்டுப்பாடுகள் மறுபடியும் அமலாக்கப் படலாம் என்று மக்கள் பீதி அடைந்து, பொருள்கள் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற பயத்தினால் ஏராளமாக வாங்கத் தொடங்கினர். இவ்வாறுக, இவ்விரண்டு முறையுமே விலைவாசிகள் பெருமளவிற்கு ஏன் உயர்ந்தன என்பதை எளிதாக உணர முடியும். அதாவது, விற்பனைக்குத் தயாராயிருந்த அளவைக் காட்டிலும் தேவை அதிகமாகிவிட்டதுதான் காரணம். நமது முந்திய ஆய்வின்படி இதைக் கூறுவதாயின், வேலை நிறைவுள்ளபோது உற்பத்தி செய்யக்கூடிய அளவைக் காட்டிலும் C+I+G-ஐ ஞ்சிவிட்டதுதான் காரணமாகும்.

மூன்றாவது முறையாக 1955-ன் இறுதி முதல் 1958-ன் தொடக்கம் வரை விலைவாசிகள் ஏன் உயர்ந்தன என்பதைக் கூறுவது கடினம். பொருளாதாரச் சூழ்நிலைகள் சுமூகமாக இருந்தபோதிலும், முழுத்திறன் உற்பத்தி அளவுக்கு நடைமுறை உற்பத்தி செய்யப்படவில்லை. ஒரு சில துறைகளில் போதுமான அளவிற்கு உற்பத்தி நடைபெறுமலிருக்க, வேறு சில துறைகளில் வேண்டிய அளவுக்கு மேல் உற்பத்தி செய்யப்பட்டது. நாட்டின் உற்பத்தித் திறனுக்கேற்ப உற்பத்தி நடைபெறும்போது, அதை எஞ்சக்கூடிய அளவிற்கு செலவு செய்யப்பட்டால்தான் பொதுவாக விலைவாசிகள் உயரும் என்பது நாம் அறிந்ததுதான்; ஆனால் 1955–58-ல் அந்த நிலை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வாறாயின், விலைவாசிகள் ஏன் உயர்ந்தன என்பதைப் பின்னர் ஆராய்வோம்.

அண்மையில் விலைவாசிகள் ஏன் உயர்வடைந்தன என்பதற்குக் காரணம் வருமாறு: கொரியாப் போரின்போது, போர்ச் செலவு அதிகமாக ஏற்பட்டதைத் தொடர்ந்து தொகு தேவை பெருமளவிற்குத் தீவிரமடையத் தொடங்கிவிட்டது;

என்வே விலைவாசிகளும் விரைவாக உயரத் தொடங்கின. 1965-ல் அமெரிக்க அரசாங்கம் ஏராளமான செலவில் தம் படைகளை வியட்நாமுக்கு அனுப்பியது; ஆனல் அச் செலவை ஈடு கட்டும் வகையில் அப்போது வரிகளை உயர்த்தாமல் 1968-ல் தான் உயர்த்தியது. எனவே, 1965 முதல் 1968 வரை முழுத் திறன் உற்பத்தி அளவைக் காட்டிலும் தொகுதேவை தலை தூக்கிவிட்டதால் பொதுவாக எல்லா விலைகளுமே உயர்ந்து விட்டன. 1968-ல் அரசாங்கம் வரிகளை உயர்த்தியதோடு கடன் கட்டுப்பாடுகளையும் கொண்டுவந்ததால் 1969 இறுதியில் நாட்டின் முழுத்திறன் உற்பத்தி குறைவாக ஆகிவிட்டது; எனவே விலைகள் கட்டுக்கடங்காமல் போகவே 1970 இறுதி வரை விலை வாசிகள் இறங்கவே இல்லை.

பணவீக்கம் என்றலென்ன

பொதுவாக விலைகளனைத்தும் ஏறுவதைத்தான் பணவீக்கம் என்றழைக்கின்றோம். ஆனல் பணவீக்கம் எத்தனையோ வகைப் படும். சான்றாக, 1920-லிருந்து ஒரு சில ஆண்டுகள் வரை சிந்திக் கக்கூட முடியாத அளவிற்கு ஜெர்மனியில் பணவீக்கம் ஏற் பட்டது. விலைவாசிகள் எட்டிப் பிடிக்க முடியாத அளவிற்குப் பறந்தோடிக்கொண்டிருந்தன. ஒரு சில பென்சுகளுக்கு விற்கப் பட்டு வந்த தபால் தலைகளுக்கு மில்லியன் கணக்கான மார்க்குகள் (German marks) கொடுக்கவேண்டியிருந்தது. மணி நேரத் திற்குள் விலைவாசிகள் உயர்ந்து வந்ததால், சம்பளம் வாங்கிய வுடன் தொழிலாளர்கள் கடைக்குச் சென்று பொருள்களை வாங்கி வந்தனர். இல்லையெனில் அவர்களின் சம்பளத்தின் மதிப்பு குறைந்துவிடும். இவ்விதச் சூழ்நிலையில் தொழில் நடத்துவது இயலாத காரியமாகிவிட்டது; பிற நாடுகளோடு வாணிபம் செய்வதோ கனவில்கூட நினைக்க முடியாத காரியமாகிவிட்டது. செலாவணிக்கு மதிப்பே இல்லாததால் செல்வந்தர்களும் ஏழை களும் சேமித்து வைத்த சேமிப்புத் தொகை வீணாகிவிட்டது. தாவி ஓடும் இவ்விதப் பணவீக்கம் தோன்றிவிட்டால் பொரு ளாதார நடவடிக்கைகளே மடிந்துவிடக்கூடும்; செலாவணியும் செலாவணியாக மதிக்கப்படாது. அடுத்து, தென் அமெரிக்காவி லுள்ள சில நாடுகளில் ஆண்டுதோறும் 10 முதல் 20 சதவீதம் வரை விலைவாசிகள் பல ஆண்டுகளாக உயர்ந்துகொண்டே வந்துள்ளன. எனவே, தொழில் செய்வோர் அனைவரும் 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற பழமொழிக்கேற்ப, பணவீக்கத்தின்போது கொள்ளை இலாபம் பெறவேண்டுமென்று

தம் விருப்பப்படி தொழில் செய்வதால் பொருளாதார நடவடிக்கைகள் உருச்சிதைந்து விடுகின்றன. முதலீடும் கொள்ளை இலாபம் தரக்கூடிய விதத்தில்தான் செய்யப்படுகிறதேயன்றி; சாதாரணமாகச் செய்யப்படும் விதத்தில் அல்ல. சான்றாக, இந்நாட்டவர் நிலபுலன்கள், கட்டடங்கள் போன்ற நிலைத்த சொத்துக்களில் தான் முதலீடு செய்து இலாபம் பெற முற்படுகின்றனர்.

அமெரிக்காவில் போர்க் காலங்களைத் தவிர ஏனைய காலங்களில் விலைவாசிகள் அதிகமாக உயராமல் சீராகவேதான் இருந்துவருகின்றன. பொருளாதார நடவடிக்கைகளை உருக்குலையச் செய்யக்கூடிய அளவுக்கு இந்நாட்டில் பணவீக்கம் கிடையாது. இருந்தபோதிலும், பல ஆண்டுகளாக விலைவாசிகள் தொடர்ந்து சிறிதளவு உயர்ந்து கொண்டேயிருந்தால் டாலரின் மதிப்பு குறைந்துவிடும். சான்றாக, ஆண்டுதோறும் விலைகள் 3 சதவீதம் அதிகரித்தால்கூட 14 ஆண்டுகளில் 50 சதவீதம் உயர்ந்துவிடும். அப்போது ஊதியம் பெறுவோர், தம் சேமிப்புப் பணத்தையே நம்பி வாழ்வோர் போன்ற குறிப்பிட்ட அளவு வருமானமுடையோரின் வாழ்க்கைத்தரம் குறைந்துவிடும்.

பணவீக்கத்தினால் கட்டப்படுவது யார், பலனடைவது யார் என்பது அவரவர் செய்யும் தொழிலைப் பொருத்தது. எனினும், பொதுவாகக் கூறின், விலைவாசிகள் ஏற்றத்தினால் கடன் வாங்கியோர் பலனடைவர், கடன் கொடுத்தோர் கட்டப்படுவர்; காரணம் விலைவாசிகள் உயரும்போது, கடன் தொகையின் மதிப்பு குறைந்துவிடுகிறது. அதாவது, கடன் கொடுத்தோர் கொடுத்து வாங்கும் திறனைக் காட்டிலும் குறைந்த அளவு வாங்கும் திறனைதான் திரும்பப் பெறுவர். 19ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவின் மையப் பகுதியில் மேற்கித்திய விவசாயக் கடனாளிகளுக்கும் கீழ்த்திசை கடன் கொடுத்தோருக்குமிடையே பெரிய சர்ச்சை ஏற்பட்டு, அவர்கள் இரு அரசியல் கட்சியினராக மாறியதற்குக் காரணமே இக் கடன் பிரச்சினைதான். கடன் பெற்ற விவசாயிகள் 'மலிவான' பணம்தான் நாட்டிற்குத் தேவை என்றும், விலை இறக்கத்திற்கு ஒரு முடிவுகட்ட வேண்டுமென்று கோரினர்; ஆனால் கடன் கொடுத்தவர்களோ விலைவாசிகள் சரிய வேண்டுமென்று விரும்பினர். இறுதியில் திரு. வில்லியம் ஜென்னிங்ஸ் பிரியன் (William Jennings Bryan) என்பவர், 'தங்கச் சிலுவை' என்று போற்றப்படும் சாதுரியமான பேச்சுத் திறனால் பணவீக்கம் மலிவாக இருக்கவேண்டும் என விரும்பிய விவசாயிகளின் கோரிக்கைக்கு வெற்றி தேடித் தந்தார்.

பண வீக்கத்தினால் தொழில் துணிவோரும் ஊக வணிகரும் (Speculator) இலாபம் அடைவர்; ஆனால் பண வடிவத்தில் முதலீடு செய்வோர் நட்டம் அடைவர். பெருமளவில் இலாபம் கிடைக்கும் தொழில்களில் பணிபுரிவோர் பண வீக்கத்திலிருந்து தப்பித்துக் கொள்வர்; ஆனால் நிரந்தர வருமானம் பெறுவோர் பாதிக்கப்படுவர். ஓய்வுச் சம்பளம் பெறும் வயதாளர் வாட்டப்படுவர்; வாலிபர்களோ பலனடையக்கூடும். நிற்க, பண வீக்கம் நாட்டு வருமானத்தை எவ்வித அடிப்படையுமின்றி மறு பகிர்வு செய்துவிடுகிறது; பண வீக்கம் எவ்வளவுக்கெவ் வளவு கடுமையானதாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நாட்டு வருமானம் கண்டபடி மறு பகிர்வு செய்யப்பட்டு விடுகிறது.

பணவீக்கம் பல வகைப்படும் என்று குறிப்பிட்டோம். 1920-க்குப் பின்னர் ஒரு சில ஆண்டுகள் வரை ஜெர்மனியின் பொருளாதாரத்தையே குழப்பமடையச் செய்ததும் பண வீக்கம் தான்; தென் அமெரிக்காவிலுள்ள பல நாடுகளில் ஆண்டு தோறும் 10 முதல் 20 சதவீதம் வரை விலைவாசிகள் உயர்ந்து கொண்டிருப்பதும் பண வீக்கம்தான்; நம் நாட்டில் நாம் காணும் சிறிதளவு விலை உயர்வும் பண வீக்கம்தான். எனினும், இந்த மூன்று விதமான பண வீக்கத்திற்கும் எவ்வளவோ வேறு பாடுகள் உள்ளன; ஆனாலும் எல்லாவற்றையுமே பண வீக்கம் என்றழைப்பது முறைதானா என்று வியப்புத் தோன்றுகிறது. எனினும், விலைவாசிகள் உயர்வதுதான் பண வீக்கம் எனத் தானே வரையறை செய்கிறோம். எனவே, பண வீக்கத்தினால் ஒரு நாட்டின் பொருளாதாரம் எந்த அளவுக்குப் பாதிக்கப்படு மென்பது விலைவாசிகள் உயரும் வேகத்தைப் பொருத்தது என்பதை மட்டும் நாம் மறந்துவிடக் கூடாது.

தராதர விலைகளிலும் பொது விலை மட்டத்திலும் ஏற்படும் மாறுதல்கள்

பொது விலை மட்டம் உயர்வதற்கும் குறிப்பிட்ட பண்டங் களின் விலைகள் ஏறுவதற்கும் வேறுபாடு உண்டு. அங்காடிப் பொருளாதாரத்தில் நுகர்வோரின் விருப்பங்களையும் தேவை களையும் உற்பத்தியாளர்கள் அறிந்துகொள்வதெப்படி? பண்டங் களின் விலைகள் ஏறுவதையும் இறங்குவதையும் கொண்டுதான் அறிந்துகொள்கின்றனர். சான்றாக, நுகர்வோரின் பற்றுதல்கள் மாறி, டின்களில் விற்கப்படும் உணவுப் பண்டங்களுக்குப் பதிலாக உலர்த்தப்பட்ட உணவுப் பண்டங்களுக்குத்தான் தேவை அதிக முள்ளது என்று வைத்துக் கொள்வோம். அவ்வாறாயின், தொடக்

கத்தில் உலர்த்தப்பட்ட உணவுப் பண்டங்களின் அளிப்பைக் காட்டிலும் தேவை அதிகமாக இருக்கும்; எனவே அவற்றின் விலை உயர முற்படும். அத் தொழில் செய்வோருக்கு இலாபம் பெருகும்; அப் பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்கும் இயந்திர சாதனங்கள் அதிகமாக்கப்படும். அதோடு, உலர்த்தப் பட்ட உணவுப் பண்டங்களை அதிகமாகத் தயாரிப்பதற்கு மேலும் பல தொழிலாளர் அமர்த்தப்படுவர். உலர்த்தப்பட்ட உணவுப் பண்டங்கள் முன்பைவிட அதிக அளவில் அங்காடிக்கு வரும் போது, தேவையின் அளவிற்கும் அளிப்பின் அளவிற்குமிருந்த இடைவெளி குறைந்து, இறுதியில் ஒன்றுக்கொன்று சமமாகி விடும். டின் உணவுப் பண்டத் தொழிலில் இதற்கு நேர்மாறான விளைவுகள் ஏற்படும்; தேவையை எஞ்சியுள்ள அளிப்பு குறைக் கப்படும். இவ்வாறாக, உற்பத்தி சாதனங்கள் நுகர்வோரின் தேவைகளுக்கேற்ப தொழில் விட்டுத் தொழில் இடம் பெயர் கின்றன.

குறிப்பிட்ட விலைகள் உயரும்போது, பொருளாதாரப் பயன் ஏற்படுகிறது; ஆனால் பொது விலை மட்டம் உயரும்போதோ எவ்விதப் பொருளாதாரப் பயனும் கிடைப்பதில்லை. முதலாவ தாக, முழுத்திறன் உற்பத்தி அளவைக் காட்டிலும் மொத்தச் செலவீடு அதிகரிக்குமாயின், மேலும் உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்த இயலாது. நாம் மேற்கூறிய சான்றின்படி, ஒரு பண்டத்தின் விலை ஏறும்போது மற்றொன்றின் விலை இறங்கி, நுகர்வோரின் தராதர விருப்பங்களுக்கேற்ப சாதனங்கள் இடம் பெயர்கின்றன. ஆனால் பொது விலைமட்டம் உயரும்போதோ சாதனங்கள் இடம் பெயர்வதில்லை. அடுத்து, ஒரு பண்டத்தின் தேவை அதன் அளிப்பைக் காட்டிலும் அதிகமாயிருக்கும்போது, அதன் விலை உயர்ந்து, தேவையைக் குறைப்பதன் வாயிலாகவும் அதன் அளிப்பை அதிகரிப்பதன் வாயிலாகவும் ஒன்றையொன்று எஞ்சாமல் செய்துவிடுகிறது. ஆனால் பொது விலை மட்டம் உயரும்போதோ அப்படியல்ல. ஏனெனில் ஒவ்வொரு விலையும் ஒவ்வொரு வருமானமாக ஆகிறது. சான்றாக, நான் ஒரு காரை வாங்குவதற்கு 3000 டாலர் கொடுத்தால், அந்த 3000 டாலரும் கார் செய்யும் தொழிலதிபர்களுக்கு இலாபமாகவும், தொழிலாளிகளுக்கு ஊதியமாகவும் வருமானத்தைத் தருகிறது. காரின் விலை 3200 டாலருக்கு உயர்ந்தால் அத் தொழிலதிபர் களுக்கு இலாபமும் தொழிலாளிகளுக்கு ஊதியமுமாக 3200 டாலர் வருமானமாகப் போகிறது. எனவே, பொது விலை மட்டம் (விலைவாசிகள்) உயரும்போது, நாடெங்கிலும் பண வருமானமும் உயர்ந்துவிடுகிறது. அப்படிப் பண வருமானம்

உயராமல் விலைவாசிகள் மட்டும் உயர முடியாது; அப்படி உயர்ந்தால் அவ்வுயர்வு தானாகவே செத்துவிடும். நாட்டின் மொத்தப் பண வருமானம் மாறாமல் அப்படியே இருக்க, விலைவாசிகள் மட்டும் உயர்ந்ததென்றால் முன்பை விடக் குறைந்த அளவில்தான் பொருள்களை வாங்க முடியும்; அப்போது முன்பிருந்த அதிகத் தேவையினால் உயர்த்தப்பட்ட விலைகள் ரத்தாகிவிடும். ஆனால், ஒவ்வொரு விலையும் உயரும்போது, உயர்ந்த ஊதியம், இலாபம் என்று பண வருமானமும் உயர்ந்துவிடுகிறது; எனவே, பொது விலை மட்டம் உயர்வதால் தேவை நேரடியாகக் குறைக்கப்படுவ தில்லை.

ஊதியம் - விலை சுழலேற்றம்
(The wage - price spiral)

நாட்டின் முழுத்திறன் உற்பத்தியைக் காட்டிலும் மொத்தச் செலவீடு அதிகரிக்கும்போது, வேலையின்மை மிகக் குறைந்து விடுவதோடு, தொழிலாளர்களுக்கு அதிகத் தேவையும் உண்டாகும்; அதோடு மட்டுமன்றி, தொழில் நிறுவனங்கள் தத்தம் உற்பத்தியை அதிகரிப்பதற்கென்று புதிய தொழிலாளர்களைத் தேடவேண்டியிருப்பதால் ஊதியம் விரைவாக உயர முற்படும். இவ்வாறாக, மிதமிஞ்சிய தேவை விலைவாசிகளை மட்டுமன்றி, ஊதியத்தையும் உயர்த்திவிடும். ஒரு சில தொழில்களில் உற்பத்தியைப் பெருக்கி இலாபத்தை அதிகரிக்க வேண்டுமென்று தொழிலதிபர்கள் முயல்வதால் விலைதான் முதலில் உயரத் தொடங்குகிறது; அதைத் தொடர்ந்து ஊதியமும் மற்றவையும் ஏறுகின்றன. அதே சமயத்தில், வளமையான காலத்தில் கூட தம் விற்பனையைப் பெருமளவில் அதிகரிக்க முடியாத தொழில்களும் இருக்கக்கூடும்; எனவே, இவ்வகைத் தொழில்களில் ஊதியம்தான் முதலில் உயரமுற்படும்; அதைத் தொடர்ந்து உற்பத்திச் செலவும் விலையும் ஏறும். இவ்வாறாக, ஊதியம் விலையையும், விலை ஊதியத்தையும் மாற்றி மாற்றி உயர வைக்கின்றன. ஊதியம் உயரும்போது, பண வருமானமும் உயர்ந்து, செலவீட்டையும் அதிகரிக்கிறது என்பதை முந்திய பத்தியில் கண்டோம். அதோடு, ஊதியம் உயரும்போது, உற்பத்திச் செலவின் வழியாக மேலும் விலை உயர்வடைந்து, பின்னர் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துவிடுவதால், பணவீக்கத்திற்கேற்ப மேலும் உயர்ந்த ஊதியம் வேண்டுமென்று தொழிற்சங்கங்கள் போராடக்கூடும். கடைசியாக, நடப்பிலுள்ள விலைவாசிகள் எந்த அளவுக்கு உயர்ந்துள்ளனவோ, அதைப் பொருத்து வருங்கால விலைவாசிகளும் உயரக்கூடுமென்று எதிர்பார்க்கப்படும்போது, எரிகின்ற விளக்

கிற்கு எண்ணெய் ஊற்றுவது போல் ஆகிவிடுகிறது. நாளைய விலைவாசிகள் உயரக் கூடுமாயின், இன்றே பொருள்களை வாங்க மக்கள் முற்படுவர்; இதனால் செலவீடு தூண்டப்பட்டு, சேமிப்பு புறக்கணிக்கப்பட்டு விடுகிறது. இதனால் C+I+G கோடு மேலும் உயர்வதால் மிஞ்சிய தேவை இன்னும் அதிகரித்துவிடு கிறது. நமது நாட்டில் ஆண்டுதோறும் 1 முதல் 2 சதவீதம் வரை விலைவாசிகள் உயர்ந்து வருவதால் ஏற்படக்கூடிய இவ்வித விளைவுகள் ஒன்றுக்குப் பின் ஒன்றாக ஏற்பட்டு நம்மைப் பாதிக் காமலிருப்பது நமது நல்ல காலம் என்றுதான் சொல்ல வேண்டும்; ஆனால் ஒன்று; விலைவாசிகள் தாமாகவே ஏறினால்தான் இவ்வித மான விளைவுகள் தொடர்ந்து ஏற்படுகின்றன.

சுருங்கக் கூறின், இடை விடாது இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு இயந்திரத்திற்கு என்னென்ன தன்மைகள் உள்ளனவோ அவற்றில் சில பணவீக்கத்திற்கும் உள்ளது என்பதை மறந்து விடக் கூடாது. பொருள்களுக்கும் உழைப்பாளிகளுக்குமுள்ள மொத்தத் தேவை எஞ்சிவிடும்போது, விலைகள், ஊதியம், இலாபம் ஆகிய அனைத்துமே ஏறிவிடுகின்றன; மாறாக, ஊதிய மும் இலாபமும் மட்டும் உயர்ந்தால் நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரித்துவிடுவதால் விற்பனை குறைவதற்கு வழி இராது; எனவே, நாட்டில் உண்மையான வாங்கும் சக்தி மொத்தத்தில் குறைக்கப்படாமலிருப்பதால், தொடக்கத்தில் எவ்வளவு எஞ்சிய செலவீடு ஏற்பட்டதோ அது குறையாமல் அப்படியே நிலைத்து விடுகிறது. ஆனால் அதே சமயம், உயர்ந்த ஊதியம் உற்பத்திச் செலவை அதிகரித்து விலைவாசிகளை ஏற்றிவிடுகிறது; அதைத் தொடர்ந்து வாழ்க்கைச் செலவு உயர, அதைச் சரிக்கட்டும் வகையில் மேலும் உயர்ந்த ஊதியம் கோரப்படுகிறது. இவ்வா றாக, ஊதியம் விலையையும், விலை ஊதியத்தையும் மாற்றி மாற்றித் துரத்திப் பிடிக்க முற்படுகின்றன. இவ்வித மாறுதல்களால் எல்லோருக்குமே ஒரேவிதமான பலன் கிடைப்பதில்லை; எல்லோரும் சமமாகப் பாதிக்கப்படுவதுமில்லை. காரணம், எல்லாத் தொழில்களிலுமே தேவை எச்சமாயிருப்பதில்லை; சில நிறுவனங்களின் பொருள்களுக்குத் தேவை அதிகரிக்காமல் அப்படியே இருக்கக் கூடும்; ஆனால் அப்படியிருந்தும் கூட அவை உயர்ந்த ஊதியம் கொடுக்கவேண்டியுள்ளது; அப்போது அவற்றின் இலாபம் குறைந்துவிடுகிறது. வேறு நிறுவனங்கள் இதற்கு நேர்மாறான நிலையில் இருக்கக் கூடும்; அவற்றின் பொருள்களுக்குள்ள தேவை பெருமளவில் விரிவடைந்துவிடு வதால், உற்பத்திச் செலவைக் காட்டிலும் மிக உயர்ந்த விலையில் விற்று பெரும் இலாபம் பெறக்கூடும். இவ்வாறாக, நிறுவனங்கள்

மட்டுமன்றி, தொழிலாளர்களும்கூட வெவ்வேறு விதத்தில் பாதிக்கப்படலாம். சான்றாக, அதிகத் தேவையுள்ள தொழிலாளர்கள் அல்லது வலுமிக்கத் தொழிற் சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் பணவீக்கத்தைச் சமாளித்து விடுகின்றனர்; அவர்கள் உயர்ந்துள்ள விலைவாசிகளைக் காட்டிலும் அதிக ஊதிய உயர்வைப் பெற்றுவிடக்கூடும். ஒன்றும் சாதிக்க முடியாத ஏனைய தொழிலாளர்களோ பெரிதும் பாதிக்கப்படுவர். இவ்வித நிலைமைகளெல்லாம் ஏற்படுவதால்தான் பணவீக்கம் பெருமளவிலுள்ள நாடுகளில் விலை நிலைபேறுக்கத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது கடினமாகிவிடுகிறது. பணவீக்கம் தோன்றிய பின்னர், அதைப் பாதியிலேயே நிறுத்திவிட முயற்சித்தால், பணவீக்கத்தால் பலனடையாது பாதிக்கப்பட்டிருப்போர் மேலும் சிரமப்படவேண்டியிருக்கும். அப்படியின்றி, அவர்களும் நாள்டைவில் தம் வருமானத்தை உயர்த்திக் கொள்ளட்டும் என்று விட்டுவிட்டால், செலவீடு உயர்ந்து, அதனால் விளையக்கூடிய விளைவுகள் மாறி மாறி ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். அப்போது இதற்கு முடிவே இல்லாமல் போய்விடும்.

பணமும் பணவீக்கமும்

பணவீக்கம் தன்னைத்தானே நீடித்திருக்கச் செய்யக்கூடிய பல அம்சங்களை உடையது; எனினும், அந்நிலைக்குப் போக விடாமல் தடுத்து நிறுத்தக்கூடிய பல வழிகள் உள்ளன. அவற்றில் முதலாவது வழி பணத்தையே சார்ந்த வழியாகும். பணத்தின் அளிப்பை அதிகரிக்காமல் வைத்துவிட்டால் எவ்வளவு பெரிய பணவீக்கமும் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்க முடியாது.[1]

நமது நாட்டில் தொழில் நடவடிக்கைகள் அனைத்தும் பணத்தின் வழியாகவே நடைபெறுவதால் வருமானம் பெறுவதும் செலவு செய்வதும் ஒரே சமயத்தில் நடப்பதில்லை; எனவே, தனிப்பட்டவர்களும் தொழில் நிறுவனங்களும் எப்போதுமே பணம் வைத்திருக்க வேண்டியுள்ளது. தொழில் நிறுவனங்கள் தத்தம் பொருள்களை விற்பனை செய்வதன் வழியாக வருமானம் பெறுகின்றன; தொழிலாளிகளுக்கும் தம் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்களை அளிப்போருக்கும் பணம் செலுத்துகின்றன. வருமானம் வருவதும் செலவு செய்வதும் ஒரே சமயத்தில் நிகழ்வ

1. James Duesenberry அவர்களின் 'money and credit : Impact and control' என்னும் நூல் இரண்டாம் பதிப்பாக இவ்வரிசையிலேயே வெளிவந்துள்ளது; இந்நூலில் பணவாக்க முறைகள் விரிவாக ஆராயப்படுவதால், நமது ஆய்வைச் சுருக்கமாக வைத்துக்கொள்வோம்.

தில்லை; எனவே, நிறுவனங்கள் இருப்பாகப் பணம் வைத்திருக்க வேண்டியுள்ளது. சான்றாக, ஒரு நிறுவனம் தன் உற்பத்தியை அதிகரிக்க நேரிடும்போது, அதிகரிக்கவேண்டிய உற்பத்திப் பொருளை விற்பனை செய்வதற்கு முன்பே, கூடுதலாக வேண்டிய மூலப் பொருள்களை வாங்கவேண்டியுள்ளது; அதேபோல் கூடுதலாக அமர்த்தியுள்ள தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டியுள்ளது; இதற்கெல்லாம் பணம் இருப்பில் இருக்கவேண்டும்.

எனவே, நாட்டின் உற்பத்தி, விலைவாசிகள், ஊதியம் ஆகிய அனைத்தும் உயரும்போது, தொழில்களுக்குத் தேவைப்படும் பணமும் அதிகரிக்கிறது.[2] பொதுவாகக் கூறவேண்டுமாயின், நாட்டில் எந்த அளவுக்குப் பணப்புழக்கம் உள்ளதோ அந்த அளவுக்குப் பணம் இருந்தால்தான் பொருளாதார நடவடிக்கைகள் தங்கு தடையின்றி செயல்பட முடியும். எனவே, நாட்டின் மொத்த உற்பத்தி உயர உயர, அவ்வுற்பத்தியின் பணமதிப்பும் உயர்ந்துகொண்டே போகிறது.

நாட்டின் மொத்த உற்பத்தியும் (GNP) வேலை வாய்ப்பும் உயராமல் அப்படியே இருக்க (வேலை நிறைவை அடைந்துவிட்டதனால்) விலைவாசிகளும் ஊதியமும் உயர்ந்து விடுகிறதென்றால் தொழில்களுக்குக் கிடைக்கும் இலாபம், மூலப் பொருள்களை அளிப்போருக்கு வரும் வருமானம், தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் ஆகிய அனைத்துமே உயர்ந்துவிட்டன என்றுதான் பொருள். அவ்வாறாயின், தொழில் நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் பணமும் அதிகரித்து விடுகிறது. ஆனால், பணத்தின் மொத்த அளிப்பு மாறாமல் அப்படியே இருக்குமாயின், தொழில் நிறுவனங்கள், மத்திய மாநில அரசுகள், குடும்பத்தினர் ஆகிய அனைவருமே புழக்கத்திலுள்ள பணத்தைக் கொண்டுதான் தத்தமக்கு வேண்டியதனைத்தையும் வாங்க வேண்டியுள்ளது. அப்போது பணத்திற்குத் தேவை ஏற்பட்டு விடுகிறது. இந்நிலையில் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்குக் குறைந்த அளவு எவ்வளவு பணம் தேவைப்படுமோ அது போக, சிறிதளவுப் பணம் வீணாக முடக்கப்பட்டிருக்கக்கூடும். அவ்வாறு முடக்கப்பட்டுள்ள பணத்தைப் புழக்கத்திற்குக் கொண்டுவருவதற்கு வட்டி வீதம் உயர்த்தப்படலாம்; அதோடு, தொழில் நிறுவனங்களும் தத்தம் நடவடிக்கைகளைச் சிக்கனமாக மேற்

2. ஒரு நிறுவனம் தனக்கு வேண்டிய மூலப் பொருள்களைக் கடனாகவும் பெறக்கூடும்; ஆனால் அப்படிச் செய்யும்போது தனக்கு வேண்டிய பணத் தேவையை மற்றொரு நிறுவனத்திற்கு மாற்றுகின்றது என்றுதான் பொருள்.

கொள்ளக்கூடும். அப்படியெல்லாம் செய்தால்கூட நாட்டிலுள்ள பணத் தட்டுப்பாடு நீங்கிவிடாது.

பண வீக்கம் மேலும் அதிகரிக்குமாயின், பணத்திற்கேற்படும் தேவை அளிப்பைக் காட்டிலும் தீவிரமாக அதிகரித்து அலைமோத வேண்டியிருக்கும். அப்போது, கடன் வாங்குவோரிடையே போட்டி தோன்றி வட்டி வீதம் (பணத்தின் பயனுக்காகச் செலுத்தும் விலை) உயர முற்படும்; கடன் வாங்கும் நிபந்தனைகள் கெடுபிடியாகிவிடும். கடன் அளிப்போர் நட்டம் தரக்கூடிய கடனைப் புறக்கணித்துவிடுவர். வீடு வாங்கத் திட்டம் கொண்டுள்ளோர் எளிய தவணை முறையில் அடமானக் கடன் பெற முடியாமல் தம் திட்டத்தைத் தள்ளிப் போடுவர். அதேபோல் பள்ளிகள் கட்டுதல் போன்ற பொதுப்பணி வேலைகளைக் கடன் வாங்கித் தொடங்கத் திட்டமிட்டுள்ள மாநில, தல அரசுகள் வட்டி வீதம் உயர்ந்துவிட்டதைக் கண்டு தம் திட்டங்களையெல்லாம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கக்கூடும். மேலும், தொழில் நிறுவனங்கள், குறிப்பாக, பெருமளவில் கடன் வாங்கி முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ள நிறுவனங்கள் உயர்ந்த வட்டியின் காரணத்தால் தம் திட்டத்தைக் குறைத்துக் கொள்ளக்கூடும். இவ்வாறான செயல்களால் மொத்தச் செலவீடு குறைந்து, C+I+G கோடு கீழ்நோக்கி நகர்ந்துவிடும். அதனால் புதியதொரு சமநிலை தோன்றும். மிதமிஞ்சிய செலவுகளனைத்தும் புறக்கணிக்கப்பட்டு விடுவதால் விலைவாசிகள் உயராமல் தடுக்கப்பட்டுவிடும். எனினும், புதிய பணவீக்க சக்திகளோ, அல்லது பணவாட்ட சக்திகளோ ஏற்படும் வரை விலைவாசிகள் உயர்ந்த மட்டத்திலேயேதான் நிலைக்க முற்படும்.

பணத்தின் அளிப்பை அதிகரித்தால் மட்டுமே பண வீக்கம் பெருமளவில் ஏற்படும். பணவாக்கம் செய்யும் அதிகாரிகள் பணத்தின் அளிப்பை அதிகரிக்காமல் அப்படியே வைத்திருப்பார்களாயின், பணத் தட்டுப்பாடு ஏற்பட்டு, கடன் கட்டுப்பாடும் தோன்றி, வட்டி வீதம் உயர்ந்து, கடைசியில் பண வீக்கமே ஒடுக்கப்பட்டுவிடும். அவ்வாறுயின், பண அளிப்பிற்கும் விலைவாசிகளுக்கும் 1:1 என்று நேரடித் தொடர்பு இருப்பதாக யாரும் எண்ணக்கூடாது. பெயர் பெற்ற சில பத்திரிகைகள், அல்லது தொழிலதிபர்களோ பாங்கர்களோ பேசும்போது பெரும்பாலும் பண அளிப்பை அதிகரிப்பதும் பண வீக்கம் ஏற்படுவதும் ஒன்றுதான் என்று குறிப்பிடுகின்றனர்; அதாவது, பண அளிப்பைச் சிறிதளவு அதிகரித்துவிட்டால்கூட பண வீக்கம் ஏற்பட்டுவிட்டது என்பதுதான் அவர்களது எண்ணம். ஆனால், உண்மை அப்படி

யல்ல; பணத்திற்கும் விலைவாசிகளுக்குமுள்ள தொடர்பு சிக்கல் நிறைந்ததொன்று. ஏதோ நமக்கெல்லாம் புரியாத விதத்தில் தான் பணம் விலைவாசிகளை நேரடியாகப் பாதிக்கின்றது என்று நினைக்க வேண்டாம்; பணத்தைச் செலவிடும்போதுதான் விலைகள் உயர்கின்றன. அதேபோல், பணத்தின் அளிப்பு அதிகரிக்கப்படாமல் அப்படியே இருந்தால்கூட செலவு ஓரளவு அதிகரிக்கக்கூடும். சான்றாக, தொழில் நிறுவனங்களும் பொது மக்களும் சிக்கனத்தை மேற்கொள்வதற்கென்று முடக்கியுள்ள பணத்தைப் புழக்கத்திற்கு விடும்போது செலவு சிறிதளவு அதிகரித்துவிடும். எனினும், பணத்தின் அளிப்பு அப்படியே இருக்க, செலவு அதிகரிப்பதற்கு ஓர் வரம்பு உள்ளது. இறுதியாக, பணத்திற்கும் விலைவாசிகளுக்குமுள்ள தொடர்பை ஆராயும் போது, மற்றோர் உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது; அதாவது, வேலை நிறைவு ஏற்படுவதற்கு முன்னர் பயனற்றிருக்கும் உற்பத்திச் சாதனங்களை ஒரு நாடு பயன்படுத்தும் போது செலவீடு அதிகரிக்கின்ற காரணத்தினால் விலைவாசிகள் உயர்ந்துவிடாது.

பிற நாட்டு வாணிபமும் பண வீக்கமும்

தானே நீடித்திருக்கக்கூடிய பண வீக்கத்தின் போக்கினைக் கட்டுப்படுத்துவதற்குப் பண அளிப்புக் கட்டுப்பாடு மட்டுமன்றி, வேறு பல சக்திகளும் உள்ளன. ஏனைய நாடுகளில் பண வீக்கம் இல்லாதபோது, ஒரு நாட்டில் மட்டும் அது இருக்குமாயின், அந் நாட்டின் விலைவாசி உயர்வால் ஏற்றுமதி சரிவடைந்து, இறக்குமதி பெருமளவிற்குத் தூண்டப்படும். அவ்வாறாயின், ஏற்றுமதி செய்யும் நாட்டிலுள்ள எச்சத் தேவை குறையும்; பணவீக்கமுள்ள நாடு ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்குத் தேவை சரிவடையும்; எனவே, உள்நாட்டுப் பொருள்களை வாங்குவதற்குப் பதிலாக அந் நாட்டவர் இறக்குமதியான பொருள்களைத்தான் அதிகமாக வாங்குவர். அப்போது அந் நாட்டின் மொத்தத் தேவை பெரும்பாலும் பிற நாட்டுப் பொருள்களால் நிறைவு செய்யப்பட, ஏற்றுமதியையும் அதிகரிக்க முடியாமல் அந் நாடு திணர வேண்டியிருக்கும்; இந் நிலையில் அந் நாட்டின் வருமானம் குறைந்து, இறுதியில் செலவீடும் சரிந்துவிடும். அப்படிப்பட்ட நிலை தொடருமாயின், அந் நாடு தன் நாணய மதிப்பைக் (அயல் நாட்டு நாணய மதிப்பை) குறைத்து, ஏற்றுமதிப் பொருள்களின் விலை உயர்வைச் சரிக்கட்ட முடியும் என்பது உண்மைதான்.[3] எனினும், நாணயமாற்று வீதம் (exchange

3. சான்றாக, அமெரிக்க நாட்டு 1 டாலரும் A என்னும் வேறொரு நாட்டின் செலாவணியில் 10 அலகுகளும் பரிவர்த்தனை செய்யப்படுவதாக வைத்துக்கொள்

rate) இவ்வளவென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும்போது, ஒரு நாட்டில் மிதமிஞ்சிய செலவினால் தோன்றும் பண வீக்கத்தின் தீவிரம், அந் நாட்டின் ஏற்றுமதிப் பொருள்களின் விலை இறக்கத்தின் விளைவாக மிதமானதாக ஆக்கப்பட்டுவிடும்.

வரிகளும் அரசாங்க நிதிக் கொள்கையும்

வளர்வித வரிகளின் (Progressive tax) வாயிலாகவும் பண வீக்கத்தைக் குறைக்க முடியும். வளர்வித வரி முறைப்படி, வருமானம் உயர உயர வரி வீதமும் உயர்ந்துகொண்டே செல்கிறது. எனவே, பணவீக்கத்தின்போது பண வருமானமும் அதிகரிக்க, வரியின் மூலமாக வசூலிக்கப்படும் மொத்த வருமான வீதமும் தானாகவே அதிகரித்துவிடுகிறது; அப்போது, தனியார் செலவீடு குறைந்துவிடுகிறது. (அரசாங்கம் தனக்குக் கிடைக்கும் அதிக வருமானத்திற்கேற்பச் செலவை அதிகரிக்காமலிருப்பதாக இங்கு யூகித்துக்கொள்ள வேண்டும்.)

அரசாங்கம் பணவீக்கத்திற்கு மாறான நிதிக் கொள்கையை முன்கூட்டியே திட்டமிட்டு வகுத்துச் செயலாற்றக்கூடும். சான்றாக, முதலீட்டுச் செலவு அதிகரித்துவிடுவதால், நாட்டின் மொத்தச் செலவீடு உற்பத்தி சக்தியை எஞ்சிவிடுவதாக வைத்துக்கொள்வோம். அப்போது மொத்தச் செலவீடும் நாட்டின் உற்பத்தி சக்தியும் சமமாகக்கூடிய விதத்தில் அரசாங்கம் தன் செலவுகளைக் குறைத்து, அல்லது வரிகளை உயர்த்துவதன் வழியாக C+I+G கோட்டைக் கீழே அமுத்திவிடலாம்; அப்படிச் செய்துவிட்டால் எஞ்சிய செலவீடு தானாகவே ஒடுங்கிவிடும். போர்க் காலத்தில் அரசாங்கம் செய்யும் போர்ச் செலவின் விளைவாக C+I+G கோடு நாட்டின் உற்பத்தி சக்தியை எஞ்சி மேலே நகர்ந்துவிடுகிறது. அப்போது, அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஒன்றுமில்லாமல் செய்வதற்கு வரிகளை உயர்த்தும் நிதிக் கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிப்பது நல்லதென்று கருத்தளவில் வாதாடலாம்; ஆனால் நடைமுறையில் இது ஏற்புடைய தல்ல. காரணம், போர்க் காலத்தில் வரிகளை ஓரளவிற்குத்தான் உயர்த்த முடியும்; வரி வருமானத்தை மட்டும் கொண்டு பெரிய போரை நடத்த இயலாது. அதோடுமட்டுமன்றி, பெருமளவிற்கு வரிகளை உயர்த்துவது போர் முயற்சிக்கே முட்டுக்கட்டையாகி

வோம். A-யின் ஏற்றுமதி விலைகள் இரண்டு மடங்கு உயர்ந்துவிட்டால், அவற்றை இறக்குமதி செய்யும் அமெரிக்கர் 1 டாலருக்கு முன்பை விடப் பாதி அளவுதான் இறக்குமதி செய்ய முடியும். எனினும், 1 அமெரிக்க டாலருக்கு 20 அலகுகள் பரிவர்த்தனையாகக்கூடிய விதத்தில் அந்நாடு தன் நாணய மதிப்பைக் குறைத்துவிட்டதாக வைத்துக்கொள்வோம். இப்போது, அந் நாட்டின் ஏற்றுமதி விலைகள் (அமெரிக்க டாலரில்) முன்பிருந்த நிலையை மறுபடியும் அடைந்துவிடுகின்றன.

விடுமென்று எல்லோருமே நினைக்கின்றனர்; இது சரியோ தவறோ தெரியாது. எது எவ்வாறிருப்பினும், இரண்டாம் உலகப் போரின்போது, விலைவாசிகள், ஊதியம் ஆகியவை உயர்ந்துவிடாமல் கட்டுப்படுத்துவதற்கும், இவை இரண்டும் ஒன்றையொன்று உந்தி ஏற்றிவிடாமல் தடுப்பதற்கும் அரசாங்கம் விலைக் கட்டுப்பாடுகளையும் பங்கீட்டு முறையையும் (rationing) அமல்படுத்தியது. இவற்றின் விளைவாகத் தோன்றியதுதான் 'அழுத்தப்பட்ட பணவீக்கம் (repressed inflation) ஆகும். நாட்டின் மொத்தத் தேவை எச்சமாகவே இருந்ததெனினும், அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டினால் விலைவாசிகளும் ஊதியமும் உயராமல் போர் முடியும் வரை தடுக்கப்பட்டுவிட்டன.

அளவுக்கு மிஞ்சி ஏற்படும் செலவைத் தடுப்பதுதான் அரசாங்க நிதிக் கொள்கையின் மிக முக்கியமான குறிக்கோளாகும். ஒரு முறை விலைவாசிகள் உயர்ந்துவிட்டதென்றால், அவற்றைக் குறைப்பது நல்லதுமல்ல, துயர் நிறைந்ததுமாகும். ஏனெனில் உயர்ந்துவிட்ட விலைவாசிகளைப் பழையபடி குறைக்க வேண்டுமாயின், மொத்தச் செலவீட்டை வேலை நிறைவுச் சக்திக்கும் கீழே கொண்டுவந்து நிறுத்தவேண்டும்; அப்போதுதான் போதுமான அளவு இயந்திர சாதனங்களும் தொழிலாளர்களும் வேலையின்றி இருக்க முடியும்; விலைவாசிகளும் ஊதியமும் பழைய நிலைக்குக் குறைந்துவிடும். ஆனால் இன்றைய அரசு எதுவும் இக் கொள்கையைக் கடைப்பிடிக்காது. எனவே, விலைவாசிகள் ஒருமுறை உயர்ந்துவிட்டால் பரவாயில்லை; மறுபடியும் அவை உயராமல் தடுக்கவேண்டும். அப்போதுதான் அந்தப் புதிய விலை மட்டத்திற்கேற்ப பொருளாதார நடவடிக்கைகள் சுமூகமாகச் சரிப்படுத்தப்படும். இவ்வாறுக, பழைய மட்டத்திற்கு விலைவாசிகளைத் தாழ்த்திவிடுவதால் என்ன பலன் கிடைக்குமோ தெரியாது; ஆனால் அப் பலனை அடைவதற்கு நாம்மேற்கொள்ளவேண்டிய செலவுகள் ஏராளம் என்பதை மறந்துவிடக்கூடாது. அதாவது, பெரும்பாலானோர் வேலையிழக்கவும், ஆலைகளில் பலர் வேலையின்றி இருக்கவுமான அரசியல், பொருளாதாரச் செலவுகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அதோடு மட்டுமன்றி, இச் செலவுகளை நாம் தாங்கிக்கொள்ளும் போது பெரிய பணவீக்கமே தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவே, இன்றைய நிலையில் பணவீக்கத்திற்கு எதிரான கொள்கையின் முக்கிய குறிக்கோள், விலைவாசிகள் மறுபடியும் உயர்ந்துவிடாமல் தடுப்பதுதானேயன்றி, அவற்றைக் குறைத்துப் பழைய மட்டத்திற்குக் கொண்டு வருவதல்ல.

வேறு சில வகைப் பணவீக்கம்

செலவு உந்திய பணவீக்கம் (Cost-push infation)

நாட்டில் தொகு தேவை மிதமிஞ்சி ஏற்படும்போது தோன்றக்கூடிய பணவீக்கத்தைப்பற்றி மட்டுமே இதுவரை ஆராய்ந்தோம். ஆனல், தேவை மிதமிஞ்சாமலிருக்க, தொழிலாளரின் உற்பத்திப் பலனைக் காட்டிலும் ஊதியம் உயரும்போதும் பணவீக்கம் தோன்றக்கூடும் என்று பொருளாதார அறிஞர்கள் நம்புகின்றனர்.[4] 1950-க்கும் 1959-க்கும் இடையே செலவினல் உந்தப்பட்டுத்தான் பெரும்பாலும் விலைவாசிகள் உயர்ந்தனவேயன்றி, தொகு தேவை அதிகரித்ததனல் அல்ல என்று அவர்கள் கருதுகின்றனர்.

1955 முதல் 1958-வரை ஏற்பட்டிருந்த பணவீக்கம் இக் கருத்தை உறுதி செய்வதாகவே தோன்றுகிறது. 1955-க்குப் பின்னர், தொகு தேவை விரிவடைந்தது என்று கூறுவதற்கில்லை. இயந்திர சாதனங்களும் பிற உற்பத்தித் தளவாடங்களும் ஏராளமாக விற்கப்பட்டது உண்மைதான்; அதே சமயம், மோட்டார் வாகனங்களோ வீடுகளோ அதிகமாக விற்கப்படாமல் மிகக் குறைவாகத்தான் விற்கப்பட்டுள்ளன. மேலும், உற்பத்தித் திறன் பெருமளவிற்குப் பயன்படுத்தப்பட்டதால் வேலையின்மை ஆண்டொன்றுக்கு 4 சதவீதத்திற்கு மேல் உயரவே இல்லை. இப்படியெல்லாம் இருந்தும்கூட, நுகர்வுப் பொருள் விலைகளும் மொத்த விற்பனைப் பொருள் விலைகளும்

4. உற்பத்தி அதிகரிக்கும்போது ஏற்படுவதைவிட ஊதியம் உயரும்போதுதான் உற்பத்திச் செலவு உயர்கிறது. உழைப்பின் உற்பத்தித் திறனும் ஊதியமும் ஒரே வீதத்தில் அதிகரித்தால் செலவு உயர்வதற்கு வழியில்லை. சான்றாக, ஒரு மணி நேரத்திற்குள்ள ஊதியம் 3 சதவீதம் உயர்வதாகவும், உழைப்பாளியின் உற்பத்தித் திறனும் மணியொன்றுக்கு 3 சதவீதம் அதிகரிப்பதாகவும் வைத்துக் கொண்டால், உருப்படி ஒன்றுக்கு ஆகும் உழைப்புச் செலவு மாறுமல் அப்படியேதான் இருக்கும். சான்றாக:

முதல் ஆண்டு:	உற்பத்தி	100 உருப்படிகள்
	செலவாகும் உழைப்பு நேரம்	100 மணி நேர உழைப்பு
	ஒரு மணி நேரத்திற்குக் கூலி	200 டாலர்
	உருப்படி ஒன்றுக்கு ஆகும் கூலிச் செலவு	2 டாலர்
இரண்டாம் ஆண்டு:	உற்பத்தி	100 உருப்படிகள்
	செலவாகும் உழைப்பு நேரம் (உற்பத்தியாக்கம் 3% உயர்கிறது)	97 மணி நேர உழைப்பு
	ஒரு மணி நேரத்திற்குக் கூலி (கூலி 3% உயர்ந்து மணிக்கு 2·06 டாலர் ஆகிறது)	200 டாலர்
	உருப்படி ஒன்றுக்கு ஆகும் கூலிச் செலவு	2 டாலர்

சுமார் 3 சதவீதம் உயர்ந்துவிட்டன. ஊதியமும் சம்பளமும் உழைப்பாளிகளின் உற்பத்தித் திறனைக் காட்டிலும் அதிகமாக ஏறியதன் வழியாக விலைகளும் உயர்ந்தன; ஆனால் இலாபமோ குறைந்துவிட்டது. தொழிற்சங்கங்கள் இருந்த நிறுவனங்களில் மட்டுமன்றி, ஏனைய எல்லா நிறுவனங்களிலுமே உயர்ந்த ஊதியம் அளிக்கப்பட்டது. தொழிலாளரின் ஊதியம் மட்டுமன்றி, அலுவலகப் பணியாளர்களின் சம்பளமும் கணிசமான அளவுக்கு உயர்ந்தது. குறிப்பாக, உருக்குத் தொழிலில்தான் ஊதியமும் சம்பளமும் மிக அதிகமாக உயர்ந்தன; இதன் விளைவாக, தேவை அதிகரிக்காவிட்டாலும் உருக்குப் பொருள்களைப் பயன்படுத்தும் ஏனைய தொழில்களின் பொருள்களுக்கும் விலை ஏறின. எனவே, தொகு தேவை மிதமிஞ்சி விரிவாகும் போதுதான் பண வீக்கம் ஏற்படுகிறதென்ற தொன்மைப் பொருளாதார விளக்கம் 1955 – 1958-ல் ஏற்பட்ட பண வீக்கத்திற்குப் பொருத்தமானதாக இல்லை.

ஆழ்ந்து சிந்திப்போமாயின், மிதமிஞ்சிய தேவையினால் ஏற்படும் பண வீக்கத்திற்கும் செலவினால் உந்தப்பட்டுத் தோன்றும் பண வீக்கத்திற்கும் என்ன வேறுபாடு உள்ளது என்பதைப் புரிந்து கொள்வது கடினம். நாம் சற்று முன்னர் பார்த்ததுபோல் வேலை நிறைவுள்ள நிலையில், உற்பத்தியைக் காட்டிலும் செலவீடு (தேவை) விரிவாகும்போது, தொழிலாளருக்குத் தேவை ஏற்பட்டு, அவர்களின் ஆக்கப் பலனைக் காட்டிலும் ஊதியம் ஓரளவிற்கு உயர்ந்துவிடுகிறது. சொல்லப் போனால் மிதமிஞ்சிய தேவையினால் ஏற்படும் பண வீக்கம் தொடர்ந்து நீடிப்பதற்கே இதுதான் காரணமாகும்; உயர்ந்த ஊதியம் என்றாலே, அதிக வருமானம், அதிகச் செலவு என்றுதான் பொருள். மொத்தத் தேவை மிதமிஞ்சி விடுவதால்தான் பண வீக்கம் தோன்றுகிறது என்று வைத்துக் கொண்டாலும், உயர்ந்த ஊதியம் கொடுக்க வேண்டியுள்ளதே என்பதுதான் தொழிலதிபர்களின் முதல் பிரச்சினையாக உள்ளது. எனவே, மிஞ்சிய தேவையினால் தோன்றும் பண வீக்கத்திற்கும் ஊதியத்தினால் உந்தப்பட்டு ஏற்படும் பண வீக்கத்திற்குமுள்ள முக்கியமான வேறுபாட்டை, எந்தச் சூழ்நிலையில் ஊதியம் உயர்கிறது, எந்தச் சூழ்நிலையில் உயர்வதில்லை என்பதைக் கொண்டு அறியமுடியாது. எந்தப் பண வீக்கத்திலுமே ஊதியம் உயர்ந்துவிடுகிறது. எனவே, பொருள்களுக்கும் தொழிலாளர்களுக்கும் உள்ள தேவை அதிகரிக்காமல் அப்படியே இருக்கும்போது கூட, உற்பத்திச் செலவும் அதனால் விலைவாசிகளும் உயர்கின்றனவா என்பதுதான் முக்கியமான கேள்வி; அப்படி உயர்ந்தது

என்றால் மட்டுமே அது செலவினால் உந்தப்பட்ட பண வீக்கம் என்று கூறலாம்.

நமது நாட்டிலுள்ள தொழில்களில் முக்கியமான தனித்திலும் மிகப் பிரமாண்டமான ஒரு சில நிறுவனங்கள் மட்டுமே உள்ளன ; அதோடு, அவற்றில் சக்தி வாய்ந்த தொழிற்சங்கங்களும் உள்ளன. எனவே நிர்வாகத்தினரும் தொழிலாளர் பிரதிநிதி களும் சேர்ந்துதான் ஊதியம், விலை சம்மந்தப்பட்ட கொள்கை களை வகுக்கின்றனர் ; அப்படி வகுக்கும்போது, அங்காடி நிலவரங்களையும் நன்றாக ஆய்கின்றனர். ஆனால் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் வேலையின்மை 3 அல்லது 4 சதவீதத் திற்குமேல் இருந்தும்கூட, தொழிலாளர்கள் தம் உற்பத்தித் திறனுக்கும் அதிகமாகவே ஊதிய உயர்வு கோரிப் பெற்றுள்ளனர் என்பதற்குப் போதுமான சான்றுகள் உள்ளன. இவ்வாறாக, தொழில்கள் தம் முழுத்திறனுக்கும் குறைவாக உற்பத்தி செய்யும் போதும், ஊதியம் உயர்ந்து, உற்பத்திச் செலவை ஓரளவு உயர்த்தி விடுகின்றது ; அதனால் அந்த அளவுக்கு சில சமயங் களில் அதைக் காட்டிலும் அதிகமாகக்கூட விலைவாசிகள் உயர்ந்து விடுகின்றன. எனவே, செலவினால் உந்தப்பட்ட பண வீக்கத்திற்கும் மொத்தத் தேவைக்கும் நேரடியான தொடர் பில்லை என்று கூறமுடியாது. இவ்வாறாக, குறிப்பிட்ட அளவு வேலையின்மையும் எச்சமான உற்பத்தி சக்தியும் இருந்தால்தான் தொழிலாளரின் சராசரி உற்பத்தித் திறனைக் காட்டிலும் கூலி அதிகமாகவும், குறிப்பிட்ட அளவுக்குமேல் இலாபம் உயராமலும் தடுக்கமுடியும். ஆனால், நாட்டின் முழுத்திறன் உற்பத்தி அள வைக் காட்டிலும் நடைமுறை உற்பத்தி குறைவாகவும், பெருமள விற்கு எச்ச சக்தியும் வேலையின்மையும் இருக்கும்போதுகூட விலைவாசிகளும் ஊதியமும் தாவி ஏறிவிடத் தொடங்கி விடுகிறது; இதுதான் இன்றைய பொருளாதார அறிஞர்களின் பெருங்கவலை யாக உள்ளது.

தொழில் வாரியான பணவீக்கம் (Sectoral inflation)

தொகுதேவை உற்பத்தித்திறன் அளவுக்குக் குறைவாக இருக்கும்போதுகூட, சில தொழில்கள் திடமாக வளர்ச்சி பெறவும், வேறுசில தொழில்கள் விற்பனை குறைந்து நலிந்து கொண்டிருக்கவும் கூடும். நம் விலை முறை செம்மையாகச் செயல் படுமாயின், எஞ்சிய தேவையுள்ள தொழில்களில் விலை ஏற்றமும் தேவை நலிந்து வரும் தொழில்களில் விலை இறக்கமும் காணப் படும். அப்போது, தொழிலாளர், மூலப் பொருள்கள், மூலதனம்

ஆகிய உற்பத்தி சாதனங்கள் நலிந்து கொண்டிருக்கும் தொழில் களிலிருந்து வளம்பெருகும் தொழில்களுக்கு இடம் பெயரும். ஆனால் தொகுதேவை மாறுமல் அப்படியே இருக்குமாயின், வளம் பெருகும் தொழில்களில் ஏற்படும் விலை உயர்வும், நலிவுறும் தொழில்களில் காணப்படும் விலை இறக்கமும் ஒன்றுக்கொன்று ஈடாகி, பொது விலைமட்டம் மாறுமல் அப்படியேதான் இருக்கும். ஆனால் இன்றைய தொழில் வளமிக்க நாடுகளில் அவ்வாறு நடை பெறுவதில்லை. தேவை விரிவடைந்தால் விலை உயர்ந்துவிடுகிறது; ஆனால் தேவை சுருக்கமடைந்தால் விலை தாழ்வது கிடையாது. ஏறிய விலை அவ்வளவு எளிதாக இறங்குவதில்லை. இறங்க வேண்டிய விலை இறங்காமல் அப்படியே நிலைத்துவிட முற்படுவ தால்தான் பொது விலைமட்டம் மேலே உந்தப்படுகிறது.

1955 – 1958-ல் ஏற்பட்ட பணவீக்கத்தின் விளைவுகளுக்கு இவ்விதமான போக்கும் ஓரளவு காரணமாயிருந்தது. பணவீக்க மிருந்த அந்தக் காலத்தில் இயந்திர சாதனங்கள், தளவாடங் களுக்கு அனுப்பாணைகள் குவிந்து, விற்பனையும் கணிசமான அள வுக்கு உயர்ந்ததால் இவற்றின் விலைகள் துரிதமாக ஏறின. அதே சமயம், கார்களுக்கும், புது வீடுகளுக்குமிருந்த தேவை வெகு வாகச் சரிந்துவிட்டது. இருந்தபோதிலும், கார்களின் விலையும் வீடுகளின் விலையும் இயந்திர சாதனங்களின் விலை அளவுக்கு இல்லாவிட்டாலும், ஓரளவுக்கு உயர்ந்துவிட்டன. மேலும், விற்பனை பெருகிவந்த தொழில்களில் எந்த அளவுக்கு ஊதியம் உயர்ந்ததோ, அந்த அளவுக்கு விற்பனை குறைந்து வந்த தொழில் களிலும் உயர்ந்து விட்டது. இவ்வாறுக, தேவை அதிகரிப்ப தனால் உயரும் விலைகள், தேவை குறையும்போது இறங்கிவிடுவ தில்லை; அதேபோல், விற்பனை பெருகும் தொழில்களில் உயரும் ஊதிய வீதத்தை ஈடுசெய தொழில்களும் பின்பற்றினால் பொது விலைமட்டம் உயர்ந்துதான் ஆகவேண்டும்.

நிற்க, ஏறிய விலைகள் இறங்காமலிருப்பது பொதுவிலை மட்டம் உயர்வதற்குத் தூண்டுகோலாகிறது. நம் நாட்டில் உற்பத்தி சக்தி ஆண்டுதோறும் சராசரியாக 3 சதவீதம் உயர்ந்து கொண்டு வருகிறது. சில தொழில்களில் இதைக் காட்டிலும் அதிகமாகவே உற்பத்தித் திறன் கூடிவருகிறது. ஆனால் அத் தகைய தொழில்கள் தம் விலையைக் குறைக்காமலிருப்பதால், அவற்றின் இலாப வீதம் உயர்ந்துவிடுகிறது. இலாபம் பெருகு வதைத் தொழிலாளர்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்; உயர்ந்த ஊதியம் கோரிப் போராடுவர். உற்பத்தி சக்தி அதிகரித்துள்ளபோது, அத் தொழில்களின் விற்பனையும்

பெருகியிருக்குமாயின், தொழிலாளரின் கோரிக்கை வெற்றி யடைந்து விடுகிறது. இவ்வாறுக, ஊதியம் எந்த அளவுக்கு உயர்கிறது என்பது இலாப வீதத்தையும் பொருத்தது என்ப தைப் பல்வேறு புள்ளி விவர ஆய்வுகளிலிருந்து அறிய வருகி கிறோம். உற்பத்தி சக்தி பெருமளவில் பெருகிவரும் தொழில்கள் தம் பொருள்களின் விலையை ஏற்றுமல்கூட கணிசமான ஊதிய உயர்வு அளிக்கக் கூடும். அப்போது, உற்பத்தித் திறன் அவ்வள வாக உயராத தொழில்களில் பணிபுரிவோர் அத் தொழில்களில் மட்டும் ஊதியம் உயர்ந்துள்ளதைக் கண்டு கிளர்ச்சி செய்வர். பெரும்பாலும், வேறுவழியில்லாத காரணத்தால் அவர்களின் கோரிக்கைக்கு இசைய வேண்டியுள்ளது. இம் மாதிரியான பழக்கம் எந்த அளவுக்குப் பின்பற்றப்படுகிறதோ அந்த அளவுக்கு இத் தொழில்களிலும் விலை உயர்ந்துவிட வேண்டி யுள்ளது.

சுருங்கக் கூறின், குறிப்பிட்ட சில தொழில்களில் சராசரி உற்பத்தி சக்தியைக் காட்டிலும் அதிக சக்தி இருக்கும்போது, அவற்றின் விலைகள் இறங்கவேண்டும், அல்லது இலாபம் பெருக வேண்டும்; இலாபம் பெருகினால், உயர்ந்த ஊதியம் கொடுக்க வேண்டியுள்ளது. விலைகள் குறைக்கப்படாமல் ஊதியம் உயர்த் தப்பட்டால் சராசரி உற்பத்தித் திறன் கொண்ட தொழில் களிலும், சராசரியைக் காட்டிலும் குறைந்த திறன் கொண்ட தொழில்களிலும் ஊதியம் உயர்ந்து, விலைகளும் அதிகரிக்கக் கூடும். இவ்வாறுக, சிலவற்றின் விலைகள் இறங்காமல் இருந்து விடுவதால், ஏனையவற்றின் விலைகள் உயர்ந்துவிடுவது முரண் பாடாகத்தான் உள்ளது.

வேலை நிறைவும் விலை நிலைபேருக்கமும்
(Full Employment and Price Stability)

இரண்டாம் உலகப் போரின்போதும் கொரியாப் போரின் போதும் நிலவிய பணவீக்கம் எஞ்சிய தேவையினால்தான் ஏற்பட்டது என்பதற்குச் சந்தேகம் இல்லை; எனவே எஞ்சிய தொகுதேவையில்தான் குற்றம் காணவேண்டும். வேலை நிறைவுள்ளபோது செய்யப்படும் நாட்டின் மொத்த உற்பத்தி யைக் காட்டிலும் தொகுதேவை தீவிரமடைந்து, எஞ்சுவ தால்தான் விலைவாசிகள் உயர்ந்துவிடுகின்றனவெனின், அதற் குரிய நிதிக் கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிப்பதன் வழியாக அப் பணவீக்கத்தை மிக எளிதாகக் கட்டுப்படுத்தி விடலாம். அதாவது, அரசாங்கச் செலவுகளைக் குறைத்தும்

வரிகளை உயர்த்தியும் பணவீக்க இடைவெளியை (inflationary gap) நீக்கிவிட முடியும்; அதே சமயம், மொத்தச் செலவீடும் மொத்த அளிப்பும் ஒன்றுக்கொன்று சமமாகக்கூடிய விதத்தில் C+I+G கோட்டைத் தாழ்த்தி, வேலை நிறைவையும் பேண முடியும். இவ்வித நிதிக் கொள்கையின் வாயிலாக அடையக் கூடிய குறிக்கோளைத்தான் படம் 5-4-ல் உள்ள $(C+I+G)_0$ கோடு புலப்படுத்துகிறது. தொகு தேவைப் பட்டியல் (C+I+G) புலப்படுத்துவது போல் பணவீக்க இடைவெளி இருக்குமாயின், அரசாங்கம் வரிகளை உயர்த்துவதன் வாயிலாக தொகு தேவையைத் தணிக்க முடியும்; (உயர்ந்த வரிகள், செலவிடக் கூடிய சொந்த வருமானத்தைக் குறைத்துவிடுவதோடு, நுகர் விற்கும் நாட்டின் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பையும்



படம் 5-4 நிதிக் கொள்கை, பணவாக்கக் கொள்கையின் வாயிலாக அடையக்கூடிய வேலை நிறைவும் விலை நிலைபேறுக்கமும்

கீழே கொண்டுவந்துவிடும்.) அல்லது, அரசாங்கச் செலவுகளைக் குறைப்பதன் வாயிலாகவும் தொகுதேவைக் கோட்டைக் கீழே அழுத்திவிடக்கூடும். மாறாக, பணவாட்ட இடைவெளி (deflationary gap) ஏற்பட்டு, தொகுதேவைப் பட்டியல் $(C+I+G)_1$ கோடு காட்டுவதுபோல் வேலையின்மை தோன்றுமாயின், மேற் கூறியதற்கு நேர்மாறான நிதிக் கொள்கைதான் உகந்ததாகும். வரிகளைக் குறைப்பதன் வழியாக அல்லது செலவை அதிகரிப் பதன் வாயிலாக தொகுதேவைப் பட்டியலைப் பழைய நிலைக்குக்

$(C+I+G)_0$ கொண்டுவந்துவிடலாம். (செலவீட்டுக் கோடுகளை, குறிப்பாக முதலீட்டுச் செலவுக் கோட்டினை வேண்டிய திசைக்குக் கொண்டுவரக்கூடிய வகையில் பணவாக்கக் கொள்கையைக் கடைப்பிடிக்கலாம்; அதாவது, கடன் வழங்குவதை எளிமையாகவோ கடினமாகவோ செய்துவிடலாம்.) அரசாங்க நிதிக் கொள்கையும் பணவாக்கக் கொள்கையும் முழு நிறைவு அளிக்கக்கூடிய வகையில் செயல்படாது என்பது உண்மைதான்; சில தவறுகள் கட்டாயம் ஏற்படத்தான் செய்யும். எனினும், வேலை நிறைவையும் விலை நிலைபேறுக்கத்தையும் பிணக்கமின்றி ஒரே சமயத்தில் அடைய முடியும்; அவற்றை அடைவதற்குரிய வழி முறைகளில்தான் ஏதாவது குறைகள் ஏற்படலாம்.

ஆனால், வேலை நிறைவை அடைவது அவ்வளவு எளிதல்ல என்ற உண்மையை 1950-க்குப் பின்பும் 1960-க்குப் பின்பு ஒரு சில ஆண்டுகள் வரையும் நமது நாட்டின் அனுபவத்திலிருந்தே தெரிந்துகொண்டுள்ளோம். வேலை நிறைவை அடைய முயற்சிக்கும்போது குறிப்பிட்ட சில விலைகளும் ஊதியங்களும் உயர முற்பட்டு, அதன் வழியாக பொது விலைவாசிகளே உயரத் தொடங்கிவிடுவதால் வேலை நிறைவை அடைய முடியாமல் போகிறது. மொத்தச் செலவீட்டை வேலை நிறைவு மட்டத்திற்குக் கீழ் நிலைநிறுத்தினால்தான் விலைவாசிகளும் நிலையாக நிற்கும். எல்லாச் சமயத்திலுமே வேலை நிறைவைக் கூடுமானவரை அடைய முயற்சிக்கும்போது, பணவீக்கம் மெதுவாகத் தலை தூக்கிவிடக்கூடும். மாறாக, விலைவாசிகளை நிலைபேறுக்கினால் போதும் என்று நாம் முயற்சி செய்யும்போது, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து, நாட்டின் உற்பத்தித் திறன் எச்சமாகி வீணாகக் கிடக்க நேரிடுகிறது; அப்போது, நமது பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்துவிடலாம். இவ்வாறாக, நமது வாழ்க்கை சம்மந்தப்பட்ட பிற அறிவியல்களைப் போல் பொருளாதாரத்திலும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எளிய வழி ஏதுமில்லை.

வேலை நிறைவையும் உசிதமான விலை நிலைபேறுக்கத்தையும் ஒரே சமயத்தில் அடைவதற்கு ஓர் இரகசிய வழியுண்டு. அதாவது, முளையிலேயே கிள்ளி எரிவதுபோல் பணவீக்கம் தொடங்கும்போதே அதை நிறுத்திவிடுவதுதான்; இல்லையேல் அது பெரிதாக வளர்ந்துவிடக்கூடும். பணவீக்கத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்துவது எவ்வளவு கடினமான காரியம் என்பதை அண்மையில் (1965–1970) நாம் உணர்ந்துள்ளோம். வியட்நாம் போரைத் தொடர்ந்து, 1965-ன் இறுதியில் தொடங்கிய பணவீக்கம் 1967-ல் சில நாட்கள் வரை சுணக்கமடைந்து,

பின்னர் 1968-ல் மறுபடியும் தலைதூக்கிவிட்டது. ஆனால் 1968 ஜூன் வரை பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கென்று வரிகள் உயர்த்தப்படவில்லை; வரிகள் உயர்த்தப்பட்ட பின்னர் கூட, நிதிக்கொள்கையைத் தீவிரமாகக் கடைப்பிடித்தால் மோசமான விளைவுகள் ஏற்பட்டுவிடலாம் என்று பயந்த பணவாக்க அதிகாரிகள் ஆறு மாதங்கள் வரை மந்தமான பணவாக்கக் கொள்கையைக் கடைப்பிடித்துவிட்டதால், பணவீக்க சக்திகள் வலுவடைந்து விலைவாசிகள் தீவிரமாக ஏறத் தொடங்கிவிட்டன என்பதை முன்னரே கண்டோம். இவ்விதச் சூழ்நிலைகளில் இரண்டு வகையான பிரச்சினைகள் தோன்றக்கூடும்.

முதலாவது, தொகு தேவை சில காலம்வரை தொடர்ந்து விரிவாகிக்கொண்டே போகும்போது, வருங்காலத்திலும் விலைவாசிகள் உயரத்தானே போகின்றனவென்று தொழில் நிறுவனங்கள் எதிர்பார்ப்பதால், அதற்கேற்றபடி தீவிரமாக முதலீடு செய்யத் திட்டமிடுகின்றன; அப்போது C + I + G கோடு மேலும் சிறிது உயர்ந்துவிடுகிறது. இவ்வாறு தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் சூழ்நிலையைத் தகர்க்க வேண்டுமாயின், கெடுபிடியான நிதிக் கொள்கையையும் பணவாக்கக் கொள்கையையும் அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. அப்படிப்பட்ட கட்டுப்பாடுடைய நிதிக் கொள்கையையும் பணவாக்கக் கொள்கையையும் கையாண்டு தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் நிலையை மாற்றிவிட்டால், தொகுதேவை பெருமளவிற்குச் சுருங்கிவிடும்; ஆனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிவிடும்.

இரண்டாவது, நீண்டகாலம் நீடிக்கக்கூடிய அளவுக்குப் பணவீக்கம் நடைபோடும்போது, உயர்ந்துவிட்ட வாழ்க்கைச் செலவிற்குப் போதுமான ஊதியம் பெற முடியாமல் பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பர்; அதேபோல் பல நிறுவனங்களும் தாம் அளிக்கும் ஊதிய உயர்வைச் சரிக்கட்டும் வகையில் விலையை உயர்த்தாமல், சிறிது காலமாகட்டும் என்று காத்திருக்கக்கூடும். இந் நிலையில் அரசாங்கம் தன் நிதிக் கொள்கையையும் பணவாக்கக் கொள்கையையும் முறையான வழியில் நிறைவேற்றி எஞ்சியுள்ள தொகுதேவையை ஒழித்துவிட்டதாக வைத்துக் கொள்வோம்; அப்படியானால் வேலை நிறைவு மட்டத்தில்தான் நாட்டின் மொத்த உற்பத்திக் (GNP) கோட்டை C+I+G கோடு வெட்டும். இருந்தாலும்கூட, விலைவாசி உயர்வைச் சரிக்கட்ட முடியாமலிருந்த நிறுவனங்கள் தத்தம் விலைகளை உயர்த்த முற்பட்டுக் கொண்டிருக்கும்; அதேபோல் ஊதிய உயர்வு

அடைய முடியாதிருந்த தொழிலாளர்களும் தம் வாழ்க்கைச் செலவுக்கு வேண்டிய உயர்ந்த ஊதியத்தைப் பெற முற்பட்டிருப்பர். இவ்வாறாக, விலைகளும் ஊதியங்களும் பணவீக்கப் போக்கில் உயர்ந்து கொண்டே இருக்கும். ஒரு புறம் அவை உயர்ந்துகொண்டிருக்க, மறுபுறம் தொகுதேவை விரிவடையாமல் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும்போது, இவற்றின் விளைவாக நாட்டின் உற்பத்தி குறைந்துவிடும்; வேலையின்மை அதிகரித்துவிடும்.

சுருங்கக் கூறின், பணவீக்கம் நீண்ட காலமாக நடைபோட்டுக்கொண்டிருக்கும்போது; பணவாக்கக் கொள்கையையும் நிதிக் கொள்கையையும் கையாண்டு தொகு தேவையைக் கீழே 'தள்ளுவது' கடினம்; அதோடு மட்டுமன்றி, ஒருவேளை பணவீக்கத்தின் அறிகுறியே இல்லாமல் செய்துவிட்டால்கூட, உயர்ந்த ஊதியங்களும் விலைவாசிகளும் சிறிதுகாலம் வரை தொடர்ந்து நீடித்துக் கொண்டுதான் இருக்கும். எனவே, வேலை நிறைவையும் விலை நிலைபேருக்கத்தையும் பெற்றுப் பேணவேண்டுமாயின், பணவீக்கம் ஏற்படவே கூடாது; பணவீக்கம் ஏற்பட்ட பின்னர் அதைக் குணப்படுத்துவதற்கு வேண்டிய ஏராளமான நடவடிக்கைகளை மேற்கொள்வதைக் காட்டிலும், பணவீக்கம் தோன்றாமலிருப்பதற்கு வேண்டிய ஒரு சில நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் சிறந்தது.

1968-ன் இறுதியிலிருந்து 1970 முடிய நமது அரசாங்கம் பணவீக்கத்தை நிறுத்திவிடுவதற்கென்று மிக நுட்பமானதொரு உபாயத்தை மேற்கொண்டது. பணவீக்கத்தைத் தடுத்து நிறுத்துவதுதான் குறிக்கோள் என்றால், வேலை எளிதாக முடிந்துவிடும்; கெடுபிடியான நிதிக் கொள்கையையும் பணவாக்கக் கொள்கையையும் வேண்டிய போதெல்லாம் கையாண்டு, தொகுதேவையைப் பெருமளவில் குறைத்துவிட்டால் போதும்; பணவீக்கம் தானாகவே நின்றுவிடும். ஆனால், அவ்வாறு செய்தால் பொருளாதாரப் பின்னிறக்கம் ஏற்பட்டு வேலையின்மை பெருமளவு அதிகரித்துவிடும். எனவே, இவ் விளைவுகளுக்குப் பயந்து, தொகுதேவையைத் துரிதமாகவோ உடனடியாகவோ குறைக்க முற்பட்டால் தொழில் நடவடிக்கைகள் சரிந்துவிடக் கூடுமென்று எண்ணி, பணவீக்கப் பிரச்சினையைப் போக்குவதற்கென்று கூடுமானவரை மொத்தச் செலவீட்டைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக்கொண்டு வந்தது. இவ்வாறு, பொருளாதாரப் பின்னிறக்கம் ஏற்பட்டுவிடாமல் பணவீக்கத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தணியவைப்பதில் நமக்கு அனுபவம்

கிடையாது. போர்க்காலப் பணவீக்கங்களோ போர் முடிந்த வுடன் பணிந்து விட்டதையும் அதைத் தொடர்ந்து பொருளா தாரப் பின்னிறக்கம் ஏற்பட்டு வேலையின்மையும் 6 முதல் 7 சத வீதம் வரை உயர்ந்துவிட்டதையும் நாம் கண்டிருக்கிறோம். எனவே, நிதிக் கொள்கையையும் பணவாக்கக் கொள்கையையும் கையாண்டு, பொருளாதாரப் பின்னிறக்கம் ஏற்பட்டுவிடாமல், பணவீக்கத்தைப் படிப்படியாகத் தணிய வைக்க வேண்டுமென்ற குறிக்கோள் பாராட்டுக்குரியதுதான். வெற்றிபெற முடியுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். (இந்நூல் எழுதப்படும்போது அதைப்பற்றிக் கூற இயலாது.)

வேலை நிறைவையும் விலை நிலைபேருக்கத்தையும் இணக்கமடையச் செய்வதற்கான வழிமுறைகள்

விலைவாசிகள் உயர்ந்துவிடுவதற்கான போக்கு இருக்கும் போது, விலை நிலைபேருக்கத்தையும் வேலை நிறைவையும் ஒரே சமயத்தில் அடையக்கூடிய சாத்தியங்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

வேலையின்மை உயர்ந்த அளவிலிருக்கும்போது, காலியா யிருக்கின்ற வேலை வாய்ப்புக்களைக் காட்டிலும் வேலை தேடித் திரியும் மக்கள்தான் அதிகமாயிருப்பர். எனவே, தொகு தேவையை விரிவாக்குவதன் வழியாக, வேலை வாய்ப்புகளை அதிகரித்து, வேலையற்றோருக்கு வேலை தர முடியும். அவ்வாறு வேலை வாய்ப்புகளை—அதாவது, தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கான தேவையை-அதிகரிக்கும்போது ஊதிய வீதம் உயர்ந்துவிடாது; ஏனெனில் நடப்பிலுள்ள ஊதியத்திற்கு வேலை பார்ப்பதற்கே வேலையில்லாத் தொழிலாளர் பெரும் எண்ணிக்கையில் காத்துக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அமெ ரிக்காவிலோ அப்படியல்ல; வேலையின்மை 3·5 அல்லது 4 சத வீதத்திற்குக் குறைக்கப்பட்டுவிட்டதென்றால், தொகு தேவையை விரிவாக்கி வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும்போது, தொழி லாளர் அனைவருக்குமே கிராக்கி ஏற்பட்டுவிடுகிறது; அதனால் அவர்களின் உற்பத்திப் பலனைக் காட்டிலும் ஊதியம் உயர்ந்து விடுகிறது. இதற்குக் காரணம் வருமாறு. வேலையில்லாம லிருக்கும் 3·5 அல்லது 4 சதவீதத் தொழிலாளர்களில் பெரும்பா லானோர் எந்த வேலைக்குமே பயிற்சி பெறாதவர்கள்; அதோடு, சராசரியாகப் பார்த்தால் அனைவருமே கல்வியற்றவர்களா யிருப்பர்; வேலைக்கமர்ந்து ஊதியம் பெறத் தகுதியற்றவர்கள்; அதோடு மட்டுமன்றி, வேலை கிடைக்கக்கூடிய இடங்களில்

வாழாமல் வெகு தொலைவில் வாழ்ந்து வருகின்றனர். எனவே, தொகு தேவையை விரிவாக்கிப் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கினால்கூட அவர்களுக்கு வேலை கிடைக்காது. இவ்வாறாக, வேலையற்ற மக்களும் வேலை வாய்ப்புகளும் ஒரே சமயத்தில் அமெரிக்காவில் காணப்படுவது விசித்திரமாக இருக்கலாம். 3·5 அல்லது 4 சதவீத வேலையின்மை இருந்தும்கூட, தொழிலாளிகளுக்கு தேவை உள்ளது; வேலைகளும் காலியாக உள்ளன. எனவே, தொகு தேவையை விரிவாக்கினால் வேலையின்மை குறைவதற்குப் பதிலாக ஊதியங்களும் விலைவாசிகளும்தான் உயரும்.

இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு வழியுண்டு. அதாவது, வேலைக்குத் தகுதியின்றி, வேலை கிடைக்காமல் இருப்போருக்குப் பயிற்சி அளிக்கவேண்டும்; அப்படிப் பயிற்சி பெற்றபின், தகுதியுடையவர்களை வேலைக்கமர்த்தலாம். வேலையற்றிருக்கும் இவர்களுக்குப் பயிற்சி அளித்து, வேலைக்குத் தகுதியுடையவர்களாக்கும்போது, இரண்டு குறிக்கோள்கள் நிறைவேறிவிடுகின்றன: (1) வேலையற்று இருப்போரும் மிகத் தாழ்ந்த ஊதியம் பெறுவோரும் உயர்ந்த வருமானத்தை அடையக்கூடிய வாய்ப்பு உருவாகிவிடுகிறது; (2) வேலையின்மை மிகக் குறைந்த வீதத்தில் இருந்து, வேலை காலியாக இருப்பதனால் ஏற்படக்கூடிய பணவீக்க வாய்ப்பும் குறைக்கப்பட்டு விடுகிறது. அப்போது, விலை நிலைபேறுக்கும் வேலை நிறைவும் ஒன்றுக்கொன்று பிணக்கமின்றி நல்ல முறையில் இணைந்துவிடுகின்றன. எனவே, இவ்விரு குறிக்கோள்களையும் அடைவதற்கென்று அரசாங்கத்தின் ஆதரவில் பல பயிற்சி முகாம்கள் இப்போது நடத்தப்படுகின்றன. இப் பிரச்சினைக்கு மற்றொரு வழியும் உண்டு; எனினும், இவ்வழி அமெரிக்க நாட்டில் ஒரு பரிசோதனை அடிப்படையில்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது, வேலை வாய்ப்புகள் ஒரு பகுதியிலும் வேலையற்றிருப்போர் மற்றொரு பகுதியிலும் இருக்கும்போது, தகுதி பெற்று வேலையற்றிருக்கும் தொழிலாளர்களை வேலை கிடைக்கும் பகுதிக்குக் கொண்டுவந்து குடியமர்த்த வேண்டும்; இதற்கு அரசாங்கம் அவர்களுக்குப் பண உதவி செய்வதோடு, வேறு பல உதவிகளும் செய்து வருகிறது.

வழிகாட்டிகள் (guideposts)

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கென்று 1960-க்குப் பின் ஒரு சில ஆண்டுகள் வரை அரசாங்கம் மற்றொரு உபாயத்தையும் கையாண்டது; அதாவது, விலைவாசிகளும் ஊதியங்களும்

எந்தெந்த மட்டத்திலிருந்தால் பணவீக்கம் குறைக்கப்பட முடியும் என்பதை வழிகாட்டியாக அறிவித்தது. தொழிலதிபர்களும் தொழிலாளிகளும் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள விலை வாசிகளையும் ஊதியங்களையும் அப்படியே கடைப்பிடிக்கவேண்டு மென்று வலியுறுத்தியது. அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் பொருளாதார ஆலோசனைக் குழுவினர்தான் தம் ஆண்டறிக்கை யில் இவ்வழிகாட்டிகளையெல்லாம் வகுத்து, அவற்றை அனைவரும் பின்பற்றவேண்டுமென வேண்டிக்கொண்டனர்.

ஊதியங்களைப் பற்றிய பொதுவான வழிகாட்டியில், தொழி லாளர்களின் உற்பத்தித் திறனைக் காட்டிலும் ஊதியங்கள் உயர் வாக இருக்கக் கூடாதென்று குறிப்பிடப்பட்டது; இந்தத் தத்து வத்தை உழைப்பாளிகள் மட்டுமன்றி, ஊதியம் சம்பந்தப்பட்ட அனைவருமே பின்பற்றினால் உற்பத்திச் செலவு உயராமல் அப்படியே நிலைக்க முற்படும் என்றும் குறிப்பிடப்பட்டது. விலை வாசிகள் சம்மந்தப்பட்ட பொது வழிகாட்டியில் குறிப்பிடப்பட் டிருக்கும் வழிமுறைகள் வருமாறு: சராசரி அளவு உற்பத்தித் திறன் கொண்ட தொழில்கள் அனைத்தும் தத்தம் விலைகளை உயர்த்தாமல் அப்படியே பேணவேண்டும்; சராசரியைக் காட்டிலும் அதிக உற்பத்தித் திறன் கொண்ட தொழில்கள் தம் விலைகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும்; மாறாக சராசரி உற்பத்தித் திறனைக் காட்டிலும் குறைந்த திறன் கொண்ட தொழில்கள் உருப்படி ஒன்றுக்கு எவ்வளவு உற்பத்திச் செலவா கின்றதோ அந்த அளவுக்குத் தம் விலைகளை உயர்த்திக் கொள்ளலாம்; அதற்கு மேல் உயர்த்தக் கூடாது. இந்தப் பொது வழிகாட்டியில் ஒரு சில விலக்குகளும் அறிவிக்கப்பட்டன. அவை: மிகக் குறைந்த ஊதியம் தரும் தொழில்கள் சமத்துவ ஊதியத்தின் அடிப்படையில் தம் ஊதியத்தை உயர்த்திக் கொள்ளலாம்; அதேபோல், மேலும் பல தொழிலாளர்களை வேலைக்கமர்த்த வேண்டிய தொழில்களும் உயர்ந்த ஊதியம் தரலாம். மேலும், மூலப்பொருள் போன்ற மற்ற உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும்போதும் சரி, அல்லது தேவையான மூலதனத்தைப் பெறமுடியாதபோதும் சரி, பொது வழி காட்டியில் குறிப்பிட்டுள்ள விலையைச் சிறிதளவு உயர்த்திக் கொள்ளலாம். அரசாங்கம் அறிவித்த இவ் வழிகாட்டி உபாயங் களைக் கட்டாயமாகப் பின்பற்றவேண்டும் என்ற நியதி இல்லை; அப்படிக் கட்டாயப்படுத்தும் சட்டமும் கிடையாது. இருந்த போதிலும், ஏதாவதொரு விலையோ ஊதியமோ உயர்ந்தபோதெல்லாம் திரு. கென்னடி, ஜான்சன் போன்ற குடியரசுத் தலைவர்கள் அவ்வுயர்வைக் கண்டனம் செய்தனர்.

எனவே, இப் பொருளாதார வழிகாட்டிகளைப் பேணுவதற்கு, குடியரசுத் தலைவர் தம் நெறிமுறையான சக்தியைப் பயன்படுத்தக்கூடும் என்று தெரிகிறது.

அரசாங்கம் அறிவித்த வழிகாட்டிகளால் ஓரளவு பலன்கள் கிடைத்தன; தொடர்ந்து விலையையும் ஊதியத்தையும் உயர்த்திக் கொண்டே இருந்தால், பொருளாதார நடவடிக்கைகள் சீர்கெட்டு விடும் என்பதைத் தொழிலதிபர்கள் மட்டுமன்றி, தொழிலாளிகளும் உணர்ந்துவிட்டனர். நாட்டின் முழுத்திறன் உற்பத்திக்கு இணையாகத் தொகு தேவையும் இருக்க வேண்டுமென்பதற்காக அரசாங்கம் நிதிக் கொள்கையையும் பணவாக்கக் கொள்கையையும் கையாளக்கூடும் என்பதைச் சற்று முன்னர்தான் பார்த்தோம்; ஆனால் அக் கொள்கைகளுக்குப் பதிலாகத்தான் இவ் வழிகாட்டிகள் மேற்கொள்ளப்பட்டன என்று யாரும் நினைக்கக்கூடாது. இருந்தபோதிலும், நாட்டிலுள்ள மூலதனத்தையும் தொழிலாளிகளையும் முழுமையாகப் பயன்படுத்துவதற்கும், அதன் மூலமாகப் பணவீக்கம் மேலும் அதிகரிக்காமல் தடுப்பதற்கும் இவ் வழிகாட்டிகள் உதவக்கூடும்.

வழிகாட்டிகளை அரசாங்கம் வலியுறுத்தி வந்த சமயத்தில்கூட 1969-ன் இறுதியில் தொகு தேவை நாட்டின் முழுத்திறன் உற்பத்தி அளவை எஞ்சியதால் விலைவாசிகள் கணிசமான அளவுக்கு உயரத் தொடங்கிவிட்டன. இந் நிலையில் தம் உற்பத்தித் திறனுக்கேற்பத்தான் தொழிலாளர் ஊதியம் பெற வேண்டும், அதிக ஊதியம் கோரி கிளர்ச்சி செய்யக்கூடாது என்று வலியுறுத்த முடியாமல் போய்விட்டது. மேலும், தொழிலாளர்களுக்குத் தேவை ஏற்பட்டுவிட்டதால் தொழில் நிறுவனங்களும் ஊதியத்தை உயர்த்த வேண்டியதாயிற்று; அப்படி ஊதியத்தை உயர்த்தியதால் உற்பத்திச் செலவு அதிகரித்த போதிலும், பொருள்களுக்கு நல்ல விற்பனை இருந்த காரணத்தால் விலைகளையும் எளிதாக உயர்த்த முடிந்தது. அவ்வாறு விலைவாசிகளும் ஊதியமும் உயர்ந்தபோது, அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நினைத்த அரசாங்கம் அவ்வப்போது தன் வழிகாட்டித் தத்துவங்களை அனைவரும் பின்பற்ற வேண்டுமென்று வேண்டுகோள் விட்டுக்கொண்டே இருந்தது; ஆனால், அவ் வேண்டுகோளுக்கு மக்கள் செவி சாய்க்கவில்லை. இவ்வாறாக, பணவீக்கம் தலைதூக்கிவிட்டதால், தன் வழிகாட்டிகளைப் பின்பற்ற வேண்டுமென்று அரசாங்கம் எவ்வளவுதான் வலியுறுத்தினாலும், தொழிலதிபர்களும் தொழிலாளிகளும் அவற்றை ஏற்றுக்கொள்ள

வில்லை. எனவேதான் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நெறிமுறை உபாயங்களையும் வழிகாட்டித் தத்துவங்களையும் நிக்சன் நிர்வாகம் தொடக்கத்திலேயே கைவிட்டுவிட்டது.

அரசாங்கம் காட்டும் வழிகாட்டிகளை நல்ல முறையில் பின்பற்றினால் நல்ல பலன்கள் ஏற்படக்கூடும். குறிப்பாக, வேலை நிறைவுள்ளபோது, விலை நிலைபேருக்கத்தைப் பேணுவதற்கு அவற்றைப் பயன்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும் என்பது திண்ணம். ஆனால் பணவீக்கம் ஏற்பட்ட பின்னர், அவற்றின் வழியாக விலைவாசிகளை நிலைபேணச் செய்வது மிகவும் கடினம். எனினும், பணவீக்கத்தின்போது இருக்கக்கூடிய மிதமிஞ்சிய தேவையை தன் உசிதமான நிதிக் கொள்கையாலும் பணவாக்கக் கொள்கையாலும் அரசாங்கம் நீக்கிவிட்டது என்றால், அதன் பின் இவ் வழிகாட்டிகளைப் பின்பற்றுவது நல்ல பயன்தரும். அதாவது இவ் வழிகாட்டிகளின் மூலம் விலைகளையும் ஊதியங்களையும் கீழே கொண்டுவந்து நிலை நிறுத்துவது எளிதாகிவிடும். இல்லையென்றால் விலைவாசிகளையோ, ஊதியங்களையோ மட்டப்படுத்துவது கடினமாகிவிடும்.

பல ஐரோப்பிய நாடுகள்கூட இதுபோன்ற வழிகாட்டிகளைத்தான் 'வருமானக் கொள்கைகள்' என்ற பெயரில் மேற்கொண்டுள்ளன. நாட்டின் வருமான சக்தியைக் காட்டிலும் நடைமுறையிலுள்ள வருமானம் (ஊதியம், இலாபம் போன்றவை) மிஞ்சுவதனால்தான் பணவீக்கம் தோன்றுகிறது என்ற கோட்பாட்டின் அடிப்படையில்தான் இக் கொள்கைகள் செயல்படுகின்றன. உற்பத்தியைக் காட்டிலும் வருமானம் பெருமளவிற்கு உயர்ந்துவிட்டால் பணவீக்கம் தானாகவே தோன்றிவிடுகிறது. அப்போது, உயர்ந்துள்ள வருமானத்தை நடைமுறை உற்பத்தி மட்டத்திற்குக் கொண்டுவருவதுதான் முக்கிய பிரச்சினையாகும்.

இவ் 'வருமானக் கொள்கைகளால்' ஐரோப்பிய நாடுகள் எந்த அளவுக்குப் பயனடைந்துள்ளன என்பதைப் பொதுவாகக் கூறமுடியாது. சில நாடுகளில் தொழிலாளரின் உற்பத்தித் திறனுக்கேற்ப ஊதியம் அளிப்பதைத் தொழிற்சங்கங்கள் ஏற்றுக் கொள்ளாமல் மறுத்துள்ளன. வேறு சில நாடுகளிலோ மையத் தொழிற்சங்கத் தலைவர்கள் பொறுப்புணர்ந்து, நாட்டிற்கு பொதுவான ஊதியம் எவ்வளவென்பதைப் பேசி, உசிதமான முடிவெடுத்த போதிலும், ஆங்காங்கே நிலவும் சூழ்நிலை வேறுபாடினால் ஊதியம் வேறுவிதமாக அமைந்துள்ளது. இதை

யெல்லாம் பார்க்கும்போது, தொகு தேவை விரிவடைவதால் ஏற்படும் பணவீக்கத்தை 'வருமானக் கொள்கைகளால்' அல்லது அரசாங்க வழிகாட்டிகளால் தணித்துவிட முடியாதென்றுதான் தோன்றுகிறது; எனினும், நாட்டின் முழுத்திறன் உற்பத்தியும் தொகு தேவையும் ஒன்றுக்கொன்று சமமாகக்கூடிய விதத்தில் சரிசமமான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு இவற்றைப் பயன்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கக்கூடும்.

நமது நாட்டில், விலைவாசிகள் ஏறுவதைத் தணிக்கக்கூடிய வழிகள் வேறேதும் உண்டா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சான்றாக, விவசாயப் பொருள்களின் விலைகள் சரிந்துவிட்டால் நாட்டின் பொருளாதாரமே சீர் கெட்டுவிடுமென்று பயந்து, அவ் விலைகளை உயர்ந்த மட்டத்திலேயே பேணிக் காக்க அவ்விலைகளுக்கு உத்திரவாதம் அளிக்கின்றோம். அப்படி உத்திரவாதம் அளிப்பதற்குப் பதிலாக வேறு ஏதேனும் வழி இருக்கின்றதா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமலிலிருந்த கட்டுப்பாட்டுக் கொள்கைகளையும் நாம் புறக்கணித்துவிட முடியாது. ரயில்வேக்களின் உயர்ந்த கட்டணங்களையும் லாரிக் கட்டணங்களையும் பேணிக் காப்பது நல்லதல்லவா? அதே போல நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு சரக்குக் கப்பல்களுக்கும் உதவித்தொகை அளிக்கலாமா? கார்டெலைப்போல் கப்பல் சொந்தக்காரர்களும் தமக்கென்று மாநாட்டைக் கூட்டி தம் கட்டணங்களை உயர்த்திக் கொள்ளும்படி செய்யலாமா? இதுபோன்ற கொள்கைகளை மீண்டும் பரிசீலனை செய்வது நல்லது; இதனால் எவ்வளவு நட்டம் வந்தாலும் இக் கொள்கைகளை நாம் புறக்கணித்துவிடக் கூடாது. மேலும், தொழிற் சங்கச் சட்டங்களை மாற்றி அமைத்தாலென்ன; புதிய தொழிலாளிகள் வேலையில் சேர்வதற்குரிய நிபந்தனைகளைத் தளர்த்தினாலென்ன; நமது டிரஸ்டு முறைக்கு எதிரான சட்டங்களையோ அவை செயல்படும் முறைகளையோ மாற்றியமைத்தால் என்ன? இவ்வாறெல்லாம் செய்தால் விலைவாசிகள் தணிந்துவிடக்கூடிய வாய்ப்பு ஏற்படலாம். பொருளாதாரக் குறிக்கோள்களில் மிக முக்கியமானவை வேலை நிறைவும் விலை நிலைபேறுக்கமும்தான்; இவற்றில் ஒன்றைமட்டும் அடைந்து, மற்றொன்றை அடைய முடியாவிட்டால் அதனால் பயனேதும் இல்லை.

சுருக்கம்

பணவீக்கத்தையும் பணவாட்டத்தையும் பற்றிய ஆய்வில் பொது விலைவாசிகள்தான் முக்கியமே தவிர, தனிப்பட்ட விலை

களல்ல. பொது விலைமட்டத்தைக் குறிப்பிடுவதற்கு நுகர்வு விலைக் குறியீட்டெண், மொத்த விலைக் குறியீட்டெண், நாட்டின் உண்மையான மொத்த உற்பத்தி ஆகிய மூன்றும்தான் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன.

இருபதாம் நூற்றாண்டில் விலைவாசிகளெல்லாம் ஒரே சீராக உயராமல், விட்டு விட்டு உயர்ந்துள்ளன. போர்க் காலங்களில் உற்பத்தி அளவைக் காட்டிலும் மொத்தச் செலவீடு அதிகமாகி விடுவதால் விலைவாசிகள் அதிகமாக உயர்ந்துவிடுகின்றன. போர் முடிந்த பின்னர் இறங்கி விடுகின்றன; எனினும், பழைய மட்டத்திற்கு இறங்குவதில்லை. இரண்டாம் உலகப் போர் முடிந்ததும் விலைவாசிகள் இறங்கிவிடுவதற்குப் பதிலாக, நான்கு முறை, அதாவது, போர் முடிந்து பொருளாதார நிலையைப் பழையபடி சீரமைத்தபோது, கொரியாப் போரின் போது, வியட்நாம் போரைத் தொடர்ந்து 1955 முதல் 1958 வரை, அதைத் தொடர்ந்து பின்னரும் ஒரு முறை விலைவாசிகள் தாவி ஏறியுள்ளன.

மிதமிஞ்சிய தொகு தேவையினால் தோன்றும் பணவீக்கம் தானாகவே தொடர்ந்து கிடிக்கக்கூடிய ஊதியம்-விலை சுழலேற்றத்தைக் கொண்டதாகும். அதாவது, உயர்ந்த விலையினால் ஊதியம் உயர, உயர்ந்த ஊதியத்தால் விலை மேலும் உயர நேரிடுகிறது. உயர்ந்த விலைகள் என்றாலே உயர்ந்த வருமானம், உயர்ந்த ஊதியம், உயர்ந்த செலவீடு என்றுதான் பொருள்.

பணத்தின் அளிப்பை மாற்றாமல் அப்படியே வைத்துக் கொண்டு, கடன் கொடுப்பதைக் கட்டுப்படுத்தியும் வட்டிவீதத்தை உயர்த்தியும் பணத்திற்குத் தேவையை ஏற்படுத்துவதன் வழியாக விலைவாசி ஏற்றத்தைத் தடுத்து நிறுத்திவிடலாம். மேலும் மேலும் பணம் புழக்கத்திற்கு வரும்போதுதான் பணவீக்கம் பெரியதாகிவிடுகிறது. இருந்தபோதிலும், பணத்திற்கும் விலைகளுக்கும் 1:1 என்ற வீதத்தில் நேரடியான தொடர்பு ஏதும் கிடையாது.

நாட்டின் உற்பத்தித் திறனைக் காட்டிலும் தேவை ஏஞ்சி விடுவதால்தான் (தேவையினால் உந்தப்பட்ட) பெரும் பணவீக்கம் தோன்றுகிறது; எனினும், நாட்டின் மொத்தச் செலவீடு (தேவை) முழுத்திறன் உற்பத்தி அளவுக்குக் கீழே இருக்கும்போதுகூட பணவீக்கம் ஏற்படக்கூடும் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. உழைப்பாளியின் உற்பத்தித் திறனைக்காட்டிலும் ஊதியம்

உயரும்போது (செலவினால் உந்தப்பட்ட) விலைவாசிகளும் ஏறி விடுகின்றன. மேலும், மொத்தத் தேவை மிதமிஞ்சியதாயில்லாமல் இருக்க, மிகப்பெரிய தொழில்களின் பொருள்களுக்குத் தேவை அதிகமாயிருக்கும்போது அவற்றின் விலைகள் ஏறுவதும், தேவை குறையும்போது அந்த அளவுக்கு விலைகள் இறங்காமலிருக்கும்போதும் பொது விலை மட்டம் உயர முற்படுகிறது.

விலைவாசிகளும் ஊதியங்களும் மேல் நோக்கி நகர முற்படுவதால் வேலை நிறைவையும் விலை நிலைபேருக்கத்தையும் ஒரே சமயத்தில் அடைய முடியாமல் போகிறது. எனினும், (தேவை மிதமிஞ்சி இல்லையென்று வைத்துக்கொள்வோமாயின்) வேலை நிறைவு இருக்கும்போது பணவீக்கம் அவ்வளவாக ஏற்படாது.

தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம், பின்னர் 1960-க்குப் பின் சில ஆண்டுகள் வரை பணவீக்கத்திற்கு மாறாக விலை, கூலி ஆகியவற்றைக் கொண்டுவருவதற்கென்று புனையப்பட்ட வழிகாட்டிக் கொள்கைகள் ஆகியவற்றின் வழியாக அரசாங்கம் பணவீக்கத்தைத் தணிக்க முயன்றது. ஏனைய நாடுகளும் கூட இதுபோன்று வருமானக் கொள்கைகளைக் கடைப்பிடித்தன.

6. அமெரிக்காவில் பொருளாதார வளர்ச்சி

ஒரு நாட்டின் முழுத்திறன் உற்பத்திக்கும் நடைமுறை உற்பத்திக்குமுள்ள தொடர்பை நிர்ணயிக்கும் காரணிகளைப் பற்றி மட்டும்தான் இதுவரை ஆராய்ந்தோம். ஒரு நாடு தன் பொருளாதார சக்திக்கேற்ப உற்பத்தி செய்யக்கூடிய அளவு எவ்வளவென்று இருக்க, உண்மையில் அது எவ்வளவு உற்பத்தி செய்யும் என்பது தேவையின் அளவைப் பொருத்ததாகும். எனவேதான் பொருள்களுக்கும் பணிகளுக்கும் ஏற்படும் தேவை அளவை நிர்ணயிக்கும் சக்திகள் யாவை என்பதை விளக்க முற்பட்டோம். எனினும், ஒரு நாட்டில் கணிசமான காலத்திற்குப் பொருளாதார வளர்ச்சி ஏற்படவேண்டுமாயின், முழுத்திறன் உற்பத்தி (பொருளாதார சக்தி என்று வைத்துக்கொள்வோம்) அதிகரிக்கவேண்டும்.

தன் முழுச்சக்திக்கும் குறைவாக உற்பத்தி செய்யும் நாடு கூட தேவையை விரிவாக்குவதற்கான கொள்கைகளை மட்டும் கடைப்பிடித்து வளர்ச்சி அடையக்கூடும்; வேலையின்றி இருப்போருக்கு வேலை கொடுத்தும், எச்சமாக இருக்கும் நிறுவனங்களின் சக்தியைப் பயன்படுத்தியும் உற்பத்தியை அதிகரிக்க முடியும். ஆனால், அப்படிச் செய்யும்போது அந் நாடு, இருக்கின்ற தன் சக்திக்குள் மட்டுமே வளர முடியுமாதலால், என்றாவது அதன் நடைமுறை உற்பத்தி முழுத்திறன் உற்பத்திக்குச் சமமாக உயர்ந்துவிடும். அதன் பின்னரும் தேவை விரிவடைந்தால் பணவீக்கம்தான் வளருமேயன்றி, உண்மையான பொருளாதார உற்பத்தி வளர்ச்சியடையாது; பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமாயின், உற்பத்தி சக்தி வளரவேண்டும். வேறுவிதமாகக் கூறின், பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைவதும் சுருங்குவதும் பற்றிய பிரச்சினைக்கு அடிப்படையாக இருப்பது தேவைப் பிரச்சினைதான். இதற்கு மாறாக, நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சியோ (பொருள்களையும் பணிகளையும் உற்பத்தி செய்யக்கூடிய சக்தியின் வளர்ச்சி) அளிப்புப் பிரச்சினையாகும். எனவே, ஒரு நாட்டின் பொருளாதார சக்தியின் வளர்ச்சியை நிர்ணயிக்கக்கூடிய காரணிகளைப்பற்றி இவ்வதிகாரத்தில் ஆராய்வோம்.

இங்கு ஓர் எச்சரிக்கை கொடுப்பது பொருத்தமானதாகும். அதாவது, பொருளாதார வளர்ச்சி பற்றிய நமது ஆய்வு அமெரிக்கா போன்ற தொழில் வளமிக்க நாடுகளுக்கு மட்டுமே பொருந்துவதாகும். வளர்ச்சி குன்றிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகளைப்பற்றியோ, தொடக்கத்தில் அமெரிக்காவில் இருந்த பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகளைப் பற்றியோ[1] நாம் ஆராயப்போவதில்லை.

இவ்வதிகாரத்தில் நாம் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியைப்பற்றி மட்டுமன்றி, முதலீடு, சேமிப்பு, தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியவற்றைப்பற்றியும்தான் அதிகமாக ஆராயப் போகின்றோம்; எனவே, இவ்வாய்வின் பெரும்பகுதி ஏனைய நாட்டுப் பொருளாதார வளர்ச்சியைப்பற்றி அறிந்துகொள்வதற்கும் உதவியாயிருக்கும். எனினும் வளர்ச்சி குன்றிய நாடுகளில் இருக்கும் அடிப்படைப் பிரச்சினை வேறு. பரம்பரை பரம் பரையாக வந்துள்ள பழக்க வழக்கங்கள், மனப்பான்மை, சமுதாய நிறுவனங்கள் ஆகியவற்றை மாற்றுவதுதான் இந்நாடுகளின் முக்கிய பிரச்சினையாகும். அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சியைப்பற்றிக் கூறும்போது அங்குள்ள கட்டுக்கோப்பினை அப்படியே அனுமானித்துக்கொள்கின்றோம்; ஆனால் அவ்விதக் கட்டுக்கோப்பு வளர்ச்சி குன்றிய நாடுகளில் கிடையாது. எனவே, அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆய்வில் நாம் எடுக்கும் முடிவுகள் வளர்ச்சி குன்றிய நாடுகளுக்குப் பொருந்தாது என்பதை வாசகர்கள் அறிந்துகொள்ளவேண்டும்.

உண்மையில், வளர்ச்சி குன்றிய நாடுகளின் வளர்ச்சிப் பிரச்சினைகள் பற்றி இரண்டு தவறான கருத்துகள் உள்ளன. அவற்றில் ஒன்று நாம் மேலே குறிப்பிட்டதுதான். அதாவது, தொழில் வளமும் செல்வப் பெருக்குமுள்ள நாடுகளின் அனுபவத்திலிருந்து நாம் கற்றுக்கொண்ட, அந் நாடுகளுக்கு மட்டுமே பொருந்தக்கூடிய மிக நுட்பமான பொருளாதாரத் தத்துவங்களை அப்படியே கடைப்பிடித்தால் போதும்; இந் நாடுகளின் வளர்ச்சிப் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்பது. மற்றொன்று, இதற்கு நேர்மாறானது மட்டுமல்ல; இதைப்போல் தவறானதும் கூட. அதாவது, வளர்ச்சி குன்றிய நாடுகளின் வளர்ச்சிப் பிரச்சினை வெறும் அரசியல் பிரச்சினை அல்லது சமூகப் பிரச்சினைதானேயன்றி, அது பொருளாதாரப் பிரச்சினை அல்ல; எனவே, பொதுவான பொருளாதாரத் தத்துவங்களை

1. இதே வரிசையில் வெளிவந்துள்ள Richard T. Gill அவர்களின் "Economic Development : Past and Present" என்ற நூல் இப் பிரச்சினைகளைப்பற்றித்தான் முக்கியமாக ஆராய்கிறது.

மட்டும் கொண்டு அதைத் தீர்த்துவிட முடியாது என்பது. இவ் விரு வாதங்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடானவை மட்டு மன்றி, இரண்டுமே கேடு விளைவிக்கக்கூடியவையும் ஆகும்.

நாட்டின் முழுத்திறன் உற்பத்தியை அளவிடல்

நாட்டின் முழுத்திறன் உற்பத்தி எந்த வீதத்தில் வளர்கிறது என்பதுதான் பொருளாதார வளர்ச்சி எனப்படும். எனவே, முழுத்திறன் உற்பத்தி என்றுலென்ன என்பதை முதலில் தெளி வாகப் புரிந்துகொள்ளவேண்டும். குறிப்பிட்டதொரு காலத்தில் உசிதமான அளவுக்கு வேலை நிறைவு இருக்கும்போது, நிறுவனங் களின் உற்பத்தி சக்தியை முழுமையாகப் பயன்படுத்தினால் ஒரு நாடு எவ்வளவு உற்பத்தி செய்ய முடியுமோ, அதுதான் அந் நாட்டின் முழுத்திறன் உற்பத்தியாகும் என்று இதுவரை வரை யறை செய்தோம். உசிதமான வேலை நிறைவு என்றால் வேலை செய்யத் தகுதியும் விருப்பமும் கொண்ட அனைவருமே வேலையில் இருக்கவேண்டும் என்று பொருளல்ல. ஏனெனில் வளமிக்க நாட்டில்கூட பெரும்பாலான தொழில்கள் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும்போது, ஒரு சில தொழில்கள் நலிவுற்று தொழி லாளிகளை வேலையிலிருந்து வெளியேற்றிக்கொண்டிருக்கக் கூடும். மேலும், தொழிலாளர் செய்யும் வேலைகளைத் தானே செய்யக் கூடிய இயந்திர சாதனங்களையும் ஏனைய மேம்பாடான முறை களையும் உற்பத்தியில் பயன்படுத்தும்போதும் சில தொழிலா ளர்கள் வேலையிழக்க நேரிடுகிறது. இவ்வாறுக, நலிவுறும் தொழில்களிலிருந்து வெளியேற்றப்பட்ட தொழிலாளரும், மேம் பாட்டு இயந்திர முறைகளால் வேலையிழந்த தொழிலாளரும், வளர்ந்துகொண்டு வரும் தொழில்களில் வேலைக்கமர்வதற்கு ஒரு சில நாட்கள் ஆகக்கூடும். ஒரு நாடு, உண்மையிலேயே வள முள்ள நாடாக இருக்குமாயின், அங்கு கணிசமான அளவில் வேலை காலியாக இருக்க வேண்டும்; அப்போதுதான் வேலை யிழந்த தொழிலாளர்கள் காலதாமதமின்றி மீண்டும் வேறு வேலையில் சேர முடியும்.

பிறழ்ச்சி காரண வேலையின்மையும் (frictional unemployment) தவிர்க்க முடியாததாகும். தற்போது அமெரிக்காவில் மட்டும் குறைந்த அளவு 3 அல்லது 4 சதவீதம் பேர் இவ்விதம் வேலையின்றி இருப்பதாகப் பொருளாதார அறிஞர்கள் கருது கின்றனர். இப்படி வேலையிழந்தோருக்கு மறுபயிற்சி அளிப் பதன் வழியாகவும், இருக்கின்ற இடத்திலிருந்து வேலை கிடைக்கும் இடங்களுக்குச் செல்வதற்குப் பண உதவியும் ஏனைய உதவிகளும் செய்வதன் மூலமாயும், மேலும், அவர்களின் தகுதி

யையும் திறமையையும் உயர்த்தக்கூடிய பல்வேறு திட்டங்களின் வாயிலாகவும் இக் குறைந்த அளவு வேலையின்மை வீதத்தை மேலும் குறைக்க முடியும். பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் கடந்த 15 வருடங்களாக வேலையின்மை 2 சதவீதமோ அதற்கும் குறைவாகவோதான் இருந்து வருகிறது; அந்நாடுகளிலெல்லாம் விலைவாசிகள் ஏறுமல் இந்த அளவுக்கு வேலையின்மையைக் குறைத்திருப்பது பாராட்டுக்குரியது. எனினும், வேலை நிறைவு என்ருல் தொழிலாளர்களில் 96 சதவீதம் பேர் வேலை செய்யும் நிலையைக் குறிப்பிடுவதாகவே வைத்துக் கொள்வோம். அப்படியானல் எஞ்சியுள்ள 4 சதவீதம் பேரும் நிரந்தரமாகவே வேலையின்றி இருப்பதாக எண்ணிவிடக் கூடாது; ஏனெனில் வேலையின்றி இருப்போரில் பெரும்பாலானேர் தற்காலிகமாகத்தான் வேலையின்றி உள்ளனர். குறிப்பிட்டதொரு காலத்தில், ஒரு சில நாட்களுக்கு முன்னர் வேலையிழந்தோர் சிலர் வேலையின்றி இருக்க, அதே சமயம் வேலையின்றி இருந்த பலர் மீண்டும் வேலையில் சேரும் வண்ணம் இருப்பர். அப்படியின்றி இந்த 4 சதவீதம் பேரில் நீண்ட நாட்களாகவே வேலையின்றி இருப்போர் காணப்படின், அவர்கள் கல்வியறிவோ வேலைக்குத் தகுதியோ இல்லாதவர்களாய்த்தான் இருப்பர். அவ்வாறுள்ள தொழிலாளருக்கு வேலை தர வேண்டுமாயின், பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தினல் போதாது; அவர்களுக்குக் கல்வியும் பயிற்சியும் அளித்து வேலைக்குத் தகுதியுடையவர்களாகச் செய்வதுதான் சிறந்தது.

தொழிலாளர்களில் 96 சதவீதம் பேர் வேலையிலிருந்தால் வேலை நிறைவு ஏற்படுமென்று வைத்துக் கொண்டால், வேலை நிறைவின்போது மொத்தம் எத்தனை பேர் வேலையிலிருப்பர் என்பதை எளிதாகக் கணித்துவிடலாம்; அதாவது, தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 96 சதவீதம் பேர் எத்தனை என்று கண்டுபிடித்தால் போதும். நாட்டிலுள்ள மொத்தத் தொழிலாளர்கள் எத்தனை பேர் என்பது, நாட்டின் மக்கள் தொகையில் எத்தனை பேர் வேலை செய்யும் மனமும், தகுதியும் கொண்டவர்கள் என்பதைப் பொருத்தது. மக்கள்தொகை கணக்கீட்டுக் கழகத்தினர் மாதந்தோறும் தொழிலாளரின் எண்ணிக்கையையும், அவர்களில் வேலையிலுள்ளோர் எத்தனை பேர், வேலையில் இல்லாதோர் எத்தனை பேர் என்ற விவரங்களையெல்லாம் சேகரிக்கின்றனர். ஒருவர் வேலையில் இருக்கின்ருரா, அல்லது வேலை தேடிக் கொண்டிருக்கின்ருரா என்பதை அறிந்து கொள்வதற்கு இக் கழகத்தினர் பல உசிதமான கேள்விகளைச் சிறந்த முறையில் தயாரித்து அனுப்புகின்றனர்.

வேலையில் உள்ளோரின் எண்ணிக்கை வளமையான காலத்தில் அதிகரிப்பதும் பின்னிறக்கத்தின்போது குறைவதும் இயல்பு. பொருளாதார மந்தத்தின்போது, சிலர், குறிப்பாக இளைஞர்களும் வீட்டுப் பெண்மணிகளும் ஒரு சில மாதங்கள் வேலைக்கு அலைந்து திரிந்துவிட்டு, பின்னர் வேலை தேடுவதையே விட்டுவிடக் கூடும்; அப்போது, வேலை தேடுவதாக அவர்கள் தகவல் கொடுப்பதில்லை. எனவே, வேலை நிறைவின்போது எத்தனை பேர் வேலையில் உள்ளனர் என்பதைக் கணக்கிடும் போது, வேலை வாய்ப்பு அதிகரித்துள்ள காரணத்தால் புதிதாக வேலையில் சேருவோரையும் கணக்கில் சேர்க்க வேண்டும்.

இவ்வாறாக, வேலையில் உள்ளோரின் மொத்த எண்ணிக்கையைச் சராசரியாக வாரத்திற்கு எத்தனை மணி நேரம் வேலை செய்கின்றனர் என்பதால் பெருக்கினால் மொத்தம் எத்தனை ஆள் – மணி நேரம் (man - hour) வேலை நடக்கிறது என்பதைக் கணித்துவிடலாம். மொத்த ஆள் – மணி நேரத்தை சராசரி ஒரு ஆள் – மணி நேர உற்பத்தி எவ்வளவு என்பதால் பெருக்கினால் நாட்டின் முழுத் திறன் உற்பத்தி எவ்வளவு என்பது தெரியும்.

தலா ஓராள் – மணி நேர உற்பத்தியைத்தான் 'உற்பத்தித் திறன்' (Productivity) என்றழைக்கின்றோம். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், உற்பத்தித் திறன் ஆண்டுதோறும் சராசரி 3 சதவீதம் அதிகரித்துள்ளது. ஆனால் ஆண்டுதோறும் ஒரே சீராக உற்பத்தித் திறன் அதிகரிப்பதில்லை. தொழிலாளர்களின் கல்வியும் பயிற்சியும் படிப்படியாக முன்னேறிக் கொண்டு வருவதோடு, தொழில் நுட்பமும் மூலதனமும் வளர்ந்து கொண்டு வருவதால உற்பத்தித் திறன் ஒரே சீராக வளர முற்படும்போது, வாணிபச் சுழற்சியினால் மொத்த உற்பத்தி உயரவும் சரியவும் முற்படுவதால், அதற்கேற்பத் தொழிலாளர்களையும் வேலைக் கமர்த்த வேண்டியுள்ளது; இதனால் காலதாமதம் ஏற்படுவதோடு, உற்பத்தித் திறனையும் ஒரே சீராகப் பேண முடியாமல் போய்விடுகிறது. தொழில் நிறுவனங்கள் தம் உற்பத்தி அளவைக் குறைப்பதுபோல் தொழிலாளர்களை அவ்வளவு எளிதாகக் குறைக்க முடிவதில்லை. இவ்வாறாக, ஒரு சில காலத்திற்கு உற்பத்தி உயர்வதும் இறங்குவதுமாக இருப்பதால் சராசரி உற்பத்தித் திறனும் ஆண்டுக்கு 3 அல்லது 4 சதவீதம் ஏற்ற இறக்கமடைந்து விடுகிறது; எனினும், சாதாரண நிலைமை ஏற்படும்போது இந்த ஏற்ற இறக்கமனைத்தும் சரிக்கட்டப்பட்டு விடுகின்றன.

நாட்டின் முழுத் திறன் உற்பத்தி நிர்ணயமாவதைப் பின்வரும் சமன்பாட்டைக் கொண்டு சுருக்கமாகக் கூறிவிடலாம்:

$$\text{நாட்டின் முழுத் திறன் உற்பத்தி} = \begin{pmatrix}\text{சாதாரணத்}\\ \text{தொழிலாளரில்}\\ 96\%\ \text{பேர்}\end{pmatrix} \times \begin{pmatrix}\text{ஆண்டொன்றுக்கு}\\ \text{வேலை செய்யும்}\\ \text{மொத்த நேரம்}\end{pmatrix} \times \begin{pmatrix}\text{சாதாரண}\\ \text{உற்பத்தித்}\\ \text{திறன்}\end{pmatrix}$$

சான்றாக, 1960ஆம் ஆண்டின் முழுத் திறன் உற்பத்தி அளவீட்டை 6–1 பட்டியல் எடுத்துக் காட்டுகிறது. 1960-ல் வேலை நிறைவு இருந்திருக்குமானால், மொத்தம் 70·8 மில்லியன் தொழிலாளர் வேலை செய்திருக்கக்கூடும். ஆனால் உண்மையில் 69·2 மில்லியன் பேர்தான் வேலை செய்துள்ளனர். வாரத்திற்கு சுமார் 40 மணி நேரம் வேலை செய்திருக்கின்றனர். மிக்க, 1960-ல் வேலை நிறைவு இருந்திருந்தால் தலா ஓர் ஆள்–மணி நேர உற்பத்தியும் அதிகமாக இருந்திருக்கக் கூடும். வேலை நிறைவின்போது வேலை செய்திருக்கக்கூடிய மொத்தத் தொழிலாளரின் எண்ணிக்கையை ஆண்டொன்றுக்குச் சராசரியாக வேலை செய்த மொத்த நேரத்தால் பெருக்கினால் மொத்தம் எவ்வளவு ஆள்–மணி நேர வேலை நடந்திருக்கக்கூடும் என்பது தெரியும். அவ்வாறாயின், நாட்டின் முழுத்திறன் உற்பத்தி எவ்வளவு இருந்திருக்கும் என்பதைக் கணக்கிடுவதற்கு, ஓர் ஆள்–மணி நேர உற்பத்தியை மொத்த ஆள்–மணி நேரத்தால் பெருக்கினால் போதும். 1960 மதிப்பீட்டின்படி பார்த்தால், அவ்வாண்டில் வேலை நிறைவு கிடையாது என்பது தெளிவு. நடைமுறையில் இருந்த உற்பத்தி முழுத் திறன் உற்பத்தியைக் காட்டிலும் 40 மில்லியன் டாலர் அதாவது 7 சதவீதத்திற்கு மேல் குறைவாகவேதான் இருந்துள்ளது.

இந்த அளவீடு தோராயமானதாக இருந்திருக்கக்கூடும்; எனவே நாட்டின் மொத்த உற்பத்தி பட்டியலில் உள்ளதைக் காட்டிலும் 10 சதவீதம் அதிகமாகவோ குறைவாகவோ இருந்திருக்கலாம் என்று வைத்துக்கொண்டால் நல்லது. எனவே, நாட்டின் முழுத்திறன் உற்பத்தியைக் காட்டிலும் நடைமுறை உற்பத்தி 36 முதல் 44 மில்லியன் டாலர்கள் குறைந்திருந்ததாக வைத்துக்கொள்வோம். அவ்வாறாயின், தொகு தேவை ஓரளவு அதிகமாய் இருந்திருந்தால் நடைமுறை உற்பத்தி 36 முதல் 44 மில்லியன் டாலர்கள் அதிகமாக இருந்திருக்கும். முழுத் திறன் உற்பத்தி அளவைக் காட்டிலும் அதிகமாக உற்பத்தி செய்திருக்க வேண்டுமாயின், நாட்டின் உற்பத்தி சக்தி பெருகியிருக்க வேண்டும்.

6-1 பட்டியல் பின்னிறக்கமிருந்த 1960ஆம் ஆண்டில் நாட்டின் முழுத்திறன் உற்பத்தி அளவிடு

	இனம்	நடைமுறை அளவு	பொதுவான வேலை நிறைவு அளவு	அளவீட்டின் மூல அலகு	கருத்துரை
உழைப்புச் செலவு					
1.	தொழிலாளர் எண்ணிக்கை	73·1	73·7	மில்லியன் பேர்	வேலை செய்திருக்கக்கூடிய 6,00,000 பேர் வேலை கிடைக்காத காரணத்தால் வேலைக்குப் போக முடியவில்லை.
2.	வேலை நிலை	69·2	70·8	மில்லியன் பேர்	வேலை நிறைவுக்கு 96% தொழிலாளர்கள் வேலையில் இருக்கவேண்டும் என்று வைத்துக் கொள்வோம். 1960-ல் 94·7% பேர்தான் வேலை செய்திருக்கின்றனர். எனவே 5·3% பேர் வேலையில்லாமல் இருந்திருக்கின்றனர்.
3.	வார வேலை நேரம்	39·2	40·4	தலா ஒரு வாரத்திற்கு மணி நேரம்	1960-ல் வேலை செய்தோரின் எண்ணிக்கை அளவுக்கு மிஞ்சி இருந்ததால் சாதாரணமாகச் செய்த நேரத்தைக் காட்டிலும் வேலை நடந்த நேரம் குறைக்கப்பட்டிருந்தது.

4.	மொத்த ஆள் – மணி நேரம் (வரிசை 2 × வரிசை 3 × 52 வாரம்)	143·2	145·7	பில்லியன் ஆள் – மணி நேரம்	—— ——
	உற்பத்தித் திறன்				
5.	தலா ஓராள் – மணி நேர உற்பத்தி	3·52	3·66	மணிக்கு டாலர்கள்	வேலை நிறைவு இருந்திருந்தால் உற்பத்தி உயர்வாக இருந்திருக்கும்; இப்போது தற்காலிகமாக 0·14 டாலர் குறைந்து விட்டது.
	நடைமுறை, முழுத் திறன் உற்பத்தி				
6.	வரிசை 4 × வரிசை 5 முழுத் திறன் உற்பத்திக்கும் நடைமுறை உற்பத்திக்கும் வேறுபாடு 40.	504	544	பில்லியன் டாலர்கள்	

வளர்ச்சியின் மூலசக்திகள்

உற்பத்தி, வேலை நிலை, உற்பத்தித் திறன்

நாட்டின் முழுத்திறன் உற்பத்தி அளவு இரண்டு காரணிகளைச் சார்ந்தது என்று பார்த்தோம்: ஒன்று, உழைத்த மொத்த ஆள்-மணி நேரம்; அடுத்து, அவ்வுழைப்பின் உற்பத்தித் திறன் அளவு. முதலில் காலப் போக்கில் உழைப்பாளிகளின் எண்ணிக்கை எதையெல்லாம் சார்ந்தது என்பதையும் பின்னர், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் சக்திகளைப்பற்றியும், அவற்றால் உழைப்புத்திறன் எவ்வாறு அதிகரிக்கின்றது என்பதைபபற்றியும் ஆராய்வோம்.

உழைப்புச் செலவு

ஒரு நாட்டில் மக்கள்தொகை வேகமாக வளர்ச்சியடைந்தால், உழைப்பாளிகளின் எண்ணிக்கையும் நாளடைவில் பெருக முற்படும். எனினும், மக்கள்தொகை வளர்ச்சிக்கும் பொருளாக்க வேலையில் ஈடுபடும் தொழிலாளரின் எண்ணிக்கைக்குமுள்ள வீதம் அவ்வளவு எளிதாக ஏற்படுவதில்லை.

உற்பத்தியில் எவ்வளவு உழைப்பு செலவிடப்படுகிறது என்பது மூன்று காரணிகளைச் சார்ந்தது. (1) உழைக்கக்கூடிய வயது வந்தோரின் எண்ணிக்கை; (2) வயது வந்தோரில் உழைக்க முன்வருவோர் எத்தனை சதவீதம்; (3) ஆண்டொன்றுக்கு எத்தனை மணி நேரம் வேலை செய்கின்றனர். இம்மூன்று காரணிகளுமே காலப் போக்கில் மாறக்கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது.

6 - 1 படத்தில் உழைப்பாளிகளின் எண்ணிக்கை எப்படி வளர்ந்து வந்துள்ளது என்பதைக் காணலாம். இரண்டாம் உலகப் போரின்போது தொழிலாளரின் எண்ணிக்கை வீதம் பெருமளவிற்கு உயர்ந்திருந்ததையும், பின்னர் சிறிதளவு குறைந்துவிட்டதையும், அதையடுத்து ஒரே நிதானமாக உயர்ந்துள்ளதையும் கவனியுங்கள். 1975 வரை இதே நிதானத்துடன் தான் வளரும் என்று அரசாங்கத் தொழிலாளர் துறையினர் எதிர்பார்க்கின்றனர். 1946 முதல் 1963 வரை ஆண்டுதோறும் சுமார் 8,00,000 தொழிலாளர்தான் அதிகரித்துள்ளனர்; எனவே அவர்களின் எண்ணிக்கை அதிகமாக உயராமல் நிதானமாகவே தான் அதிகரித்து வந்துள்ளது. 1951 முதல் 1975 வரை இவ் வளர்ச்சி வீதம் சற்று உயர்ந்து, ஆண்டொன்றுக்கு 1,400,000

தொழிலாளர்கள் புதிதாக வேலைக்கு வரக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில், 1940 முதல் ஒரு சில ஆண்டுகள்வரை பிறப்பு வீதம் அதிகமாயிருந்ததால் 1960-க்கும் 1969-க்குமிடையே தொழிலாளரின் எண்ணிக்கையும் அதிகரித்துவிட்டது. மக்கள் தொகை வளர்ச்சி வீதத்தை எண்ணும்போது, 1920 முதல் 1929 வரை குறைவாயிருந்த வீதம் 1940 முதல் 1959 வரை விரைவாக அதிகரித்துள்ளதன் விளைவாக, 1960-க்குப் பின்னர் தொழிலாளரின் எண்ணிக்கையும் வளர்ந்துவிட்டது. இத் தொழிலாளர்களில் 22 வயது முதல் 55 வயது வரை உள்ள அனுபவம் பெற்ற



படம் 6-1 1930-க்குப் பின், வேலை செய்யும் வயது வந்த மக்கள், அவர்களில் வேலை செய்வோர் வீதம், தொழிலாளரின் எண்ணிக்கை வளர்ச்சி

வர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 0·5 சதவீதமென்று மிகக் குறைந்த வீதத்தில்தான் வளர்ந்து வந்துள்ளது; அதே சமயம் வாலிபர்களின் வளர்ச்சியோ ஆண்டுக்கு 3·5 சதவீதமென்று துரிதமாக அதிகரித்துள்ளது. 1965 முதல் 1969 வரை அனுபவமில்லாதவர்கள் புதிதாக வேலையில் சேர முயன்றதால் அவர்களுக்கு வேலை கொடுப்பது பெரும் பிரச்சினையாகிவிட்டது; ஆனால் அதே சமயம், அனுபவம் வாய்ந்த தொழிலாளரின் எண்ணிக்கையோ குறைந்துவிட்டது.

வேலை செய்யும் வயது வந்தோரில் வேலை செய்தவர்களின் வீதம் ஒரே சீராக இருந்திருப்பது உண்மை; ஆனால் இதில் நிகழ்ந்த நிகழ்ச்சியை நாம் மறந்துவிடக் கூடாது. அதாவது, தொழிலாளரின் வளர்ச்சி வீதம் சீராக இருந்தபோதிலும், அனுபவமற்ற தொழிலாளிகள் பெரும் எண்ணிக்கையில் அதிகரிக்க, அனுபவம் வாய்ந்தோரின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. 1960-லும் 1968-லும் வேலை செய்த மக்களை ஆண், பெண் இன

6–2 பட்டியல் வேலை செய்யும் தொழிலாளரின் விதங்கள், வயதுவாரியாகவும் இனவாரியாகவும், 1960-ஆம் 1968-ஆமிருந்த, 1975, 1985-ல் எதிர்பார்க்கப்படுகின்றபடி.

வயதும் இனமும்	உண்மையான		எதிர்பார்க்கின்ற	
	1960	1968	1975	1985
16 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுமுடைய மக்கள் தொகை	59·2%	59·8%	60·1%	60·8%
ஆண்கள்				
16 வயதும் அதற்கு மேலும்	82·4	79·7	79·1	79·6
16 முதல் 19 வயது வரை	58·6	57·5	56·8	56 4
20 முதல் 24 வயது வரை	88·9	85·1	83·4	82·5
25 முதல் 34 வயது வரை	96·4	95·5	96 0	96·0
35 முதல் 44 வயது வரை	96·4	96·0	96·1	96·1
45 முதல் 54 வயது வரை	94·3	93·6	94·0	94·0
55 முதல் 64 வயது வரை	85·2	82·8	81·1	79·9
65 வயதும் அதற்கு மேலும்	32·2	26·3	23·1	21·1
பெண்கள்				
16 வயதும் அதற்கு மேலும்	37·1	41·1	42·5	43·2
16 முதல் 19 வயது வரை	39·1	41·7	41·2	41·0
20 முதல் 24 வயது வரை	46·1	54 4	56·9	57·7
25 முதல் 34 வயது வரை	35·8	42·4	44·4	46·5
35 முதல் 44 வயது வரை	43·1	48·7	51·0	53·3
45 முதல் 54 வயது வரை	49·3	51·9	53·9	55·2
55 முதல் 64 வயது வரை	36·7	41·9	44 3	45·0
65 வயதும் அதற்கு மேலும்	10·5	9·1	8 8	8·6

மூலம் : அமெரிக்க அரசாங்கத் தொழிலாளர் துறை

வாரியாகவும், வயது வாரியாகவும் பாகுபடுத்தியுள்ளதை 6-2 பட்டியலில் காணலாம்; அதோடு, 1975-லும் 1985-லும் இருக்கக் கூடிய நிலையையும் இப் பட்டியல் காட்டுகிறது.

இளைஞர்கள் முன்பைவிட இப்போது அதிக ஆண்டுகள் பள்ளியிலும் கல்லூரியிலும் படிப்பதால், வேலை செய்யும் இளைஞரின் வீதம் குறைந்துவிட்டது. அதேபோல் 65 வயதிற்கு மேல் வேலை செய்வோரின் வீதமும் குறைந்துள்ளது; காரணம், இன்றைய சமுதாயம் வசதிமிக்கதாயிருப்பதால், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்படி, ஓய்வு பெறும் வயது 65-லிருந்து 62 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது; அதேபோல் தனியார் துறையிலும் வேலை செய்ய முடியாத அளவுக்கு வயது முதிரும் வரை காத்திராமல் அதற்கு முன்பே ஓய்வு பெறுவதற்கென்று பல்வேறு திட்டங்கள் நாடெங்கிலும் அமலில் உள்ளன. மாறாக, வேலைக்குச் செல்லும் பெண்களின் வீதம் பெருமளவுக்கு அதிகரித்து வருகிறது. சான்றாக, 1940-ல் 25 வயது முதல் 65 வயது வரை இருந்த பெண்களில் 28 சதவீதம் பேர்தான் வேலைக்குச் சென்றனர்; ஆனால் 1964ஆம் ஆண்டிலோ அவர்களின் வீதம் 43 சதவீதத்திற்கு அதிகரித்துவிட்டது.

ஆண்டொன்றுக்கு எத்தனை மணி நேரம் வேலை செய்கின்றனர் என்பதையும் கணக்குப் பார்க்கவேண்டும். முன்பெல்லாம் தொழிலாளர்கள் அல்லும் பகலுமாக வாரத்திற்கு ஆறு நாட்கள் வேலை செய்தனர். சென்ற நூற்றாண்டில்தான் வேலை நேரம் பெருமளவில் குறைக்கப்பட்டது. சான்றாக, 1910ஆம் ஆண்டில் வாரத்திற்கு 55 மணி நேரமென்று, ஆண்டொன்றுக்கு 2,700 மணி நேரம் வேலை செய்தனர். ஆனால் 1960-ல், வாரத்தில் (விடுமுறை நாட்களையும் சேர்த்து) 40 மணி நேரம் என்று, ஆண்டுக்கு 2,000 மணி நேரம்தான் வேலை செய்தனர். 1960-ல் வேலை நேரம் குறைக்கப்பட்டிருப்பதோடு, விடுமுறை நாட்களும் அதிகரிக்கப் பட்டிருந்தன. இவ்வாறாக, வேலை செய்வோர் அதிகரிக்கப்பட்டிருப்பதைக் காட்டிலும் வேலை செய்யும் மொத்த ஆள்-மணி நேரம் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக 1910 முதல் 1960 வரை வேலை செய்வோரின் எண்ணிக்கை இரு மடங்கு அதிகரித்துள்ளது. ஆனால் வேலை செய்யும் மொத்த மணி நேரமோ 50 சதவீதம்தான் உயர்ந்துள்ளது. நாட்டின் உற்பத்தித் திறன் அதிகரித்துள்ளதனால் ஏற்பட்டுள்ள பலனில் இதுவும் ஒன்றாகும்; அதாவது, நமது உற்பத்தி அளவைக் காட்டிலும் ஓய்வு நேரம் அதிகரித்துள்ளது.

தொழிலாளரின் உற்பத்தித் திறன் வளர்ச்சி

காலப் போக்கில் தொழிலாளரின் தலா உற்பத்தி அதிகரித்தால்தான் நமது வாழ்க்கைத் தரம் உயரமுடியும். உழைப்பு செலவாகும் அதே வீதத்தில் உற்பத்தியும் அதிகரிக்குமானால் (அதாவது, தொழிலாளரின் உற்பத்தித் திறன் அதிகரிக்காமல் அப்படியே இருக்குமானால்) தொழிலாளர்களின் உண்மை வருமானமும் உயராமல் அப்படியேதான் இருக்க நேரிடும். நாம் சற்று முன்னர் குறிப்பிட்ட ஆண்டுகளில் அமெரிக்க நாட்டில் தலா ஆள்–மணி நேர உற்பத்தி படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது; சில சமயங்களில் மட்டும் வளர்ச்சி தடைபட்டுள்ளது. தலா ஆள்–மணி உற்பத்தி 1889-ல் இருந்ததை விட 1969-ல் 6 மடங்கு பெருகியுள்ளது. உற்பத்தித்திறன் மேலும் அதிகமாக வளரக்கூடுமென்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன; எனினும், அதுபற்றி திட்டவட்டமாகக் கூறமுடியாது. சான்றாக, 6–3 பட்டியலிலுள்ள புள்ளி விவரங்களைப் பார்த்தால், உற்பத்தித் திறன் எந்த அளவுக்கு வளர்ச்சி பெற்று வருகிறது என்பது புலனாகும். முதல் உலகப் போருக்கு முன்னர், தொழிலாளரின் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 1·7 சதவீதம்தான் வளர்ச்சியடைந்தது; ஆனால் இவ் வளர்ச்சி வீதம் 1919 முதல் 1947 வரை 2·2 சதவீதமாக அதிகரித்து, பின்னர் 1947 முதல் 1969 வரை 3·2 சதவீதமென்று அதிகரித்துள்ளது. இந்த 20 ஆண்டு கால வளர்ச்சி வீதத்தைக்கொண்டு, வருங்காலத்தில் தொழிலாளரின் உற்பத்தித்திறன் எந்த அளவுக்கு வளரக்கூடுமென்று திட்டவட்டமாகக் கூற முடியாது. எனினும், உற்பத்தித்திறன் வளரலாமென்று தோராயமாகக் கூறலாம்.

6 – 3 பட்டியல் தலா ஆள்–மணி உற்பத்தி வளர்ச்சி
(ஆண்டொன்றுக்கு அதிகரித்துள்ள சதவீதம்)

	1889 – 1969 வரை முழுக் காலத்திற்கும்	1889 முதல் 1919 வரை	1919 முதல் 1947 வரை	1947 முதல் 1969 வரை
தலா ஆள்–மணி உற்பத்தி (தொழிலாளர் உற்பத்தித் திறன்)	2·2	1·7	2·2	3·2

உற்பத்தித் திறன் வளர்ச்சிக்கான காரணங்கள்

பொருளாதார வளர்ச்சி எப்படி ஏற்படுகிறதென்பதை எளிதாக விளக்கிவிட முடியாது. தொழிலாளரின் உற்பத்தித் திறனை வியக்கத்தக்க வகையில் அதிகரித்து, தொழில் வளமிக்க நாடுகளை வரலாற்றுச் சிறப்புடையனவாகவும் ஆக்கிய காரணிகள் பலவகைப்படும்; இவை அனைத்தும் ஒன்றோடொன்றுப் பின்னிப் பிணைந்துள்ளன. விஞ்ஞான அறிவிலும் தொழில் நுட்ப அறிவிலும் தோன்றியுள்ள முன்னேற்றம், பெருமளவில் விரிவடைந்துள்ள கல்வி, ஒவ்வொரு தொழிலாளியும் பயன் படுத்தும் முதற் கருவிப் பொருள்களின் வளர்ச்சி, சிறப்புத் தேர்ச்சியைத் தீவிரமாக்கும் வகையில் விரிவடைந்துள்ள அங்காடிகள் ஆகிய அனைத்துமே உற்பத்தித் திறனை உயர்த்தக் கூடிய முக்கிய காரணிகளாகும். இவையனைத்தும் எந்த அளவுக்கு ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளனவென்றால், இவை ஒவ்வொன்றும் எந்த அளவுக்கு உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவியுள்ளன என்பதைத் தனித்தனியாகப் பிரித்து ஆராய்வது மிகக் கடினம். எனினும், பொருளாதார வளர்ச்சி ஏற்படும் முறையின் முக்கியமான அம்சங்களையெல்லாம் நுணுக்க மாகத் தெரிந்துகொள்ள வேண்டுமாயின், உற்பத்தித் திறனை அதிகரிக்கக் கூடிய இக் காரணிகளையும் ஏனைய காரணிகளையும் பற்றி முறையாக அறிந்துகொள்வது அவசியம்.

உற்பத்தித் திறன் எப்படி உயர்கின்றது என்பதை உற்பத்திச் சார்பின் வழியாக விளக்குவதுதான் சிறந்தது. குறிப்பிட்டதொரு காலத்தில் நாட்டிலுள்ள தொழிலாளரின் எண்ணிக்கை, திறமை, அறிவு மட்டுமன்றி, தொழில் நுட்பமும் அதனைப் பிரதிபலிக்கின்ற மூலதனப் பொருள்களும், இருக்கின்ற நிறுவனங்களின் அமைப்புகளும் (சான்றாக, சிறு தொழில் நிறுவனங்களும் கடைகளும் இருக்க, அதே சமயம் பிரமாண்டமான நிறுவனங்களும் சிறப்பு அங்காடிகளும் இருப்பதைப்போல்) வரையறுக்கப்பட்ட அளவிலும் முறையிலும்தான் இருக்க முடியும். அவ்வாறிருக்க, தொழில்நுட்ப வளர்ச்சியோ, கல்வியின் தரமோ, தொழிலமைப்பு முறையோ மாறாமல் அப்படியே இருக்க, தொழிலாளர் பயன்படுத்தும் மூலதனப் பொருள்களை மட்டும் அதிகரித்து தலா உற்பத்தியை உயர்த்த முடியும். சான்றாக, தொழில்களில் பழைய உற்பத்தி முறைகளைப் பயன்படுத்தும் நிறுவனங்களை நவீனமயமாக்கக்கூடும்; அதே போல் புதிய இரயில் பாதைகளையோ நெடுஞ்சாலைகளையோ அமைக்க முடியும். இவ்வாறாக, நாட்டிலுள்ள தொழிலாளிகளுக்கு

எந்தெந்த அளவில் தலா மூலதனம் இருந்தால் அவர்களின் தலா உற்பத்தி மணி ஒன்றுக்கு எந்தெந்த அளவில் இருக்கக்கூடும் என்ற தொடர்பைத்தான் உற்பத்திச் சார்பு என்றழைக்கின்றோம். நாடு முழுமைக்கும் இருக்கக்கூடிய இந்த உற்பத்திச் சார்பினைத்தான் படம் 6-2 புலப்படுத்துகிறது. ஒவ்வொரு தொழிலாளியும் பயன்படுத்துகின்ற முதற் கருவிப் பொருள்களின் அளவு அதிகரிக்க அதிகரிக்க, தலா ஓர் ஆள்-மணி நேர உற்பத்தியும் A என்ற புள்ளியிலிருந்து X, Y, Z என்ற புள்ளிகளுக்கு படிப்படியாக உயர்கிறது என்பதை உற்பத்திச் சார்புக் கோடு 1 புலப்படுத்துகிறது.

எனினும், தொழில் நுட்பமோ தொழிலாளர்களின் உற்பத்தித் திறனோ மாறுமல் அப்படியே இருக்க, ஒரே விதமான முதற் கருவிப் பொருளை மட்டும் தொடர்ந்து அதிகரித்துக்



படம் 6-2 உற்பத்திச் சார்பினை உயர்த்துதல்

கொண்டே போனால், குறைந்துசெல் விளைவுதான் (diminishing return) ஏற்படும். அதாவது, மேலும் மேலும் மூலதனத்தை மட்டும் அதிகரிக்கும்போது, அதிகரிக்கின்ற உற்பத்தி அளவு குறைந்து கொண்டே செல்லும். வேறு விதமாகக்கூறின், மூலதனத்தின் தரமோ தொழிலாளரின் தரமோ மாறுமல்

அப்படியே இருக்கும்போது, மூலதனத்தை மட்டும் அதிகரித்துக்கொண்டே செல்லும்போது, உற்பத்தி அளவும் அதிகரிக்கின்றது; எனினும், அவ்வதிகரிப்பு குறைந்துகொண்டே இருக்கும். அதாவது, உற்பத்தி சார்பு குறிப்பிட்ட அளவுக்கு மேல் உயர முடியாது என்ற வரம்பு உண்டு.

ஆனால், உண்மையில் தொழில்நுட்ப அறிவு வளர்ச்சி பெற்று வருவதற்கு வரலாறே சான்று. விஞ்ஞான அறிவும் தொழில் நுட்ப அறிவும் வளர்ந்துகொண்டேயிருப்பதால், உற்பத்திச் சாதனங்களை நாம் சிறந்த முறையில் பயன்படுத்தவும், பொருள்களின் தரத்தை உயர்த்தவும் முடிகிறது. அதேபோல், தொழிலாளர்களின் கல்வித் தரம் உயரும்போது, அவர்களின் திறமையும் உயர்கிறது. மேலும், தொழில் நிறுவன அமைப்புகளையும் அங்காடி அமைப்பையும் மேம்படுத்தும்போது நாட்டின் உற்பத்தித் திறனே உயர்ந்து விடுகிறதென்பதற்கு வரலாறே சான்று. இவ்விதமான முன்னேற்றங்களையெல்லாம் புலப்படுத்தும் வகையில் படம் 6-2-லுள்ள உற்பத்தி சார்புக் கோடு 1-லிருந்து 4 வரை உயர்கிறது. தொழிலாளர் பயன்படுத்தும் மூலதனத்தின் அளவு அதிகரிக்காமல் அப்படியே இருக்க, முதற் கருவிப் பொருள்களும் தொழிலாளரின் திறமையும் மேம்பாடு அடையும்போதுகூட உற்பத்தி சார்பு உயரக்கூடும்; அப்படி உயர உயர, தலா உற்பத்தியும் உயர்ந்து விடுகிறதென்பதை படம் 6-2-லுள்ள A, L, M, N புள்ளிகள் காட்டுகின்றன.

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சியில் ஒரு சிறப்பு உண்டு. அதாவது, உற்பத்தி சார்பு மேலே நகர்ந்து விடுவதோடு, ஒவ்வொரு தொழிலாளியும் பயன்படுத்தும் மூலதனம் கணிசமான அளவிற்கு அதிகரித்து வருவதன் விளைவாக, உற்பத்தி சார்பு A, B, C, D ஆகிய புள்ளிகளின் வழியாகத் தீவிரமாக உயர்ந்துவிடுகிறது. இவ்வாறாக, ஒவ்வொரு தொழிலாளியும் பயன்படுத்துகின்ற மூலதனம் உயர்வதால் மட்டுமன்றி, வேறு சில காரணங்களாலும் உற்பத்தி சார்பு உயரக்கூடும். எனவே, அவற்றைப் பற்றி இப்போது ஆராய முற்படுவோம்.

மூதலீட்டின் பங்கு

தொழில் வளர்ச்சியின் சிறப்புகள் பல; அவற்றில் ஒன்று, தலா ஒவ்வொரு தொழிலாளியும் பயன்படுத்துகின்ற முதற் கருவிப் பொருள்கள் அதிகரித்திருப்பது. இடைக்காலக்

கைவினைஞர் ஏதோ சில தரமற்ற கருவிகளை நம்பித்தான் தொழில் செய்தார். இன்றும்கூட பல நாடுகளில் வாழும் விவசாயிகள் காளை மாட்டையோ குதிரையையோ நம்பித்தான் விவசாயம் செய்கின்றனர். ஆனால், அமெரிக்காவில் அப்படி யல்ல. அமெரிக்க ஆலைகளில் பணிபுரியும் ஒவ்வொரு தொழி லாளியும், இயந்திர சாதனங்கள் என்றும் தளவாடங்கள் என்றும் எவ்வளவோ மூலதனத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்கின் றனர்; அவர்கள் நேரடியாகப் பயன்படுத்தும் முதற் கருவிப் பொருள்கள் மட்டுமன்றி, சுற்றுமுகமாகப் பயன்படுத்தும் மின்சார வசதிகள், போக்குவரத்து சாதனங்கள் என்று இன்னும் எத்தனையோ வகையான மூலதனப் பொருள்களும் உள்ளன. ஆலைகளில் பணிபுரிவோர் மட்டுமன்றி, அமெரிக்க விவசாயி களும் பெருமளவில் விவசாயப் பண்டங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள் பயன்படுத்தும் மூலதனப் பொருள்களும் ஏராளம். சான்றாக, மத்திய மேற்குப் பகுதியில் விற்பனைக்கென்று தானியச் சாகுபடி செய்யும் பெரிய பண்ணைகள் நிறைய உள்ளன; அவை ஒவ்வொன்றும் சராசரி 1,00,000 டாலர் மதிப்புள்ள முதற் கருவிப் பொருள்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்கின்றன.

உற்பத்திக்கு வேண்டிய சக்தியைப் பெறுவதற்கும், பொருள்களை ஏற்றிச் செல்வதற்கும், மூலப் பொருள்களைக் கையாள்வதற்கும் நாம் இயற்கை சக்திகளோடு போராடி வெற்றி பெற வேண்டியுள்ளது; அப்படி வெற்றி பெற்றால்தான் பொரு ளாதார உற்பத்தித் திறனை நாம் உயர்த்த முடியும். அவ்வாறு வெற்றி பெறுவதற்கு, விஞ்ஞான அறிவும், தொழில் நுட்ப அறிவும் வளர்ந்தால் மட்டும் போதாது; விரிவுபடுத்தப்பட்ட இயந்திர சாதனங்களும் தளவாடங்களும் வேண்டும். அதாவது, மூலதனம்[2] தேவை. மூலதனப் பொருள்கள் நமக்கு இலவசமாகக் கிடைப்ப தில்லை. அவற்றை நாம் உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறு உற்பத்தி செய்ய வேண்டுமானால், அதற்கு வேண்டிய இயந்திர சாதனங்கள், மூலப் பொருள்கள், உழைப்பு ஆகியவற் றைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. அப்படிப் பயன்படுத்தும் போது, நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு அவை பயன்படாமல் போய்விடுகின்றன. மேலும், தொழிலாளர்களுக்கு

2. மூலதனம் என்ற சொல் சிறுவனங்கள், இயந்திர சாதனங்கள், தளவா டங்கள், இன்னும் பிற உற்பத்திக்கு வேண்டிய பொருள்கள் ஆகியவற்றைக் குறிப்பிடும். எனவே, மூலதனம் என்ற சொல்லை இந்த அர்த்தத்தில்தான் நாம் பயன்படுத்தப் போகின்றோம் என்பது நினைவிலிருக்கட்டும். முதலீடு என்ற சொல், இருக்கின்ற மூலதனத் தேய்மானத்தைச் சரிக்கட்டவோ மூலதன இருப்பை அதிகரிக்கவோ ஆண்டுதோறும் உற்பத்தியாகி வருகின்ற மூலதனப் பொருள்களைக் குறிப்பிடும்.

வேண்டிய இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் பெரு மளவில் உற்பத்தி செய்வதற்கு சேமிப்பு தேவை. அதாவது, நாட்டின் மொத்த உற்பத்தியில் ஒரு பகுதி நுகரப்படாமலிருந் தால்தான், சாதனங்களை மிச்சப்படுத்தி, அவற்றைக் கொண்டு மூலதனப் பொருள்களை உற்பத்தி செய்ய முடியும்.

உற்பத்தித் திறன் வளர்ந்துகொண்டு வரும் நாட்டில் மூலதனப் பொருள்கள், அதாவது சேமிப்பு மூன்று வகையில் தேவைப்படுகின்றன. முதலாவது, இருக்கின்ற இயந்திர சாத னங்களையும் தளவாடங்களையும் ஆண்டுதோறும் பயன்படுத்தும் போது, அவை தேய்மானம் அடைந்துவிடுவதால், அத் தேய் மானத்தை ஈடுகட்டுவதற்கு மூலதனம் தேவை. இரண்டாவது, ஆண்டுதோறும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தேவைப்படுகின்ற மூலதனம் குறையாமல் அப்படியே இருக்க வேண்டுமாயின், தொழிலாளரின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, அதற்கேற்ப இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. சான்றாக, தொழிலாளரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் 2 சதவீதம் அதிகரித்தால், மூலதனப் பொருள்களையும் அதே 2 சதவீதம் அதிகரித்தால்தான் ஒவ்வொரு தொழிலாளிக்கும் வேண்டிய மூலதன இருப்பு குறை யாமல் அப்படியே இருக்கும். அமெரிக்காவில் தொழிலாளரின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிக வீதத்தில் மூலதனம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது; எனவே தலா ஒவ்வொரு தொழிலாளிக்கும் வேண்டிய மூலதனம் சீராக அதிகரித்து வந்துள்ளது. சான்றாக, உள்நாட்டுப் போருக்குப் பின்னர், மூலதனம் ஆண்டொன்றுக்கு 1 சதவீதத்திலிருந்து 2 சதவீதம் வரை வளர்ச்சி பெற்றுள்ளது. எனவே, உற்பத்தித் திறன் வளர்ச்சி பெறுவதற்குத் தொழிலாளர் சராசரியாகப் பயன் படுத்தும் மூலதனம் அதிகரிப்பதும் ஒரு காரணமாகும். இவ்வாறாக, ஒவ்வொரு தொழிலாளிக்கும் வேண்டிய மூலதன இருப்பை அதிகரிப்பதற்குத் தேவைப்படும் முதலீடு மூன்றாவது வகைப்படும்.

இம் மூன்று வகையான மூலதனமும் நாட்டின் மொத்த முதலீட்டோடும் சேமிப்போடும் எப்படித் தொடர்பு கொண் டுள்ளன என்பதைத் தெளிவாக அறிந்துகொள்வதற்குப் பின்வரும் சான்றினைப் பயன்படுத்தல் நல்லது. ஒரு நாட்டின் சில கீழ்க்காணும் அம்சங்களைக் கொண்டதாக வைத்துக்கொள் வோம்:

1. நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) = 500 பில்லியன் டாலர்
2. மூலதன இருப்பு = 750 பில்லியன் டாலர்
3. தொழிலாளரின் எண்ணிக்கை = 50 மில்லியன் தொழிலாளர்
4. ஒவ்வொரு தொழிலாளிக்குமுள்ள மூலதன இருப்பு (2÷3) = 15 ஆயிரம் டாலர்
5. தொழிலாளர் எண்ணிக்கை வளரும் வீதம் = ஆண்டொன்றுக்கு 2 சத வீதம் (மேலும் 1 மில்லியன் பேர்)
6. மூலதன இருப்பில் ஆண்டுதோறும் அடையும் தேய்மானம் = 4 சதவீதம்

இங்கிலையில் அந்நாட்டிற்கு எவ்வளவு மூலதனம் தேவைப்படுமென்பது வருமாறு :

1. தேய்மான ஈட்டிற்கு (750 பில்லியன் டாலரில் 4%) = 30 பில்லியன் டாலர்
2. புதிதாக வேலைக்கு வருவோருக்கு வேண்டிய இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் கொடுப்பதற்கு வேண்டிய மூலதனம் (1 மில்லியன் பேர் × 15,000 டாலர்) = 15 பில்லியன் டாலர்
3. உற்பத்தித் திறன் உயர வேண்டுமாயின், ஒவ்வொரு தொழிலாளிக்கும் இருக்கின்ற மூலதன இருப்பு உயர வேண்டும்; அவ்வாறு அதிகரிப்பதற்கும் மூலதனம் தேவை. ஒவ்வொரு தொழிலாளிக்கும் 1·5 சதவீத மூலதனம் அதிகரிப்பதாக வைத்துக்

கொண்டால், மேலும் 225 டாலர் மூலதனம் கூடு கிறது. (அல்லது 15,000 டாலர்களில் 1½% × 51 மில்லியன் பேர்)	=	11 பில்லியன் டாலர்
எனவே, மொத்த முதலீடு	=	66 பில்லியன் டாலர்
நாட்டின் மொத்த உற்பத்தியில் மொத்த முதலீட்டின் பங்கு		11%

இவ்வாறுயின், அந் நாடு தன் மூலதனத் தேய்மானத்தை ஈடுகட்டுவதற்கும், தலா ஒவ்வொரு தொழிலாளிக்கும் இருக் கின்ற மூலதன இருப்பை அதிகரிப்பதற்கும் மொத்த உற்பத் தியில் 11 சதவீதத்தை முதலீட்டிற்கென்று ஒதுக்க வேண்டும். அதாவது, முதற் கருவிப் பொருள்களை உற்பத்தி செய்வதற் காக நாட்டின் மொத்த உற்பத்தியில் 11 சதவீதத்தை நுகர்விற்குச் செலவிடாமல் சேமிக்க வேண்டும். ஏற்கெனவே வேலையில் இருக் கின்ற தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு மூலதனம் உள்ளதோ அந்த அளவு மூலதனம் புதிதாய் வேலைக்கு வருவோ ருக்கும் கொடுக்க வேண்டியுள்ளது. இவ்வாறு, மொத்த முதலீட்டில் இதற்கென்று செலவிடப்படும் பகுதிதான் 'மூலதன விரிவாக்கம்' (capital-widening) என்று அழைக்கப்படுகிறது (நமது சான்றின்படி இது 15 மில்லியன் டாலர்களாகிறது)[3]. மூலதன – தொழிலாளி வீதத்தை அதிகரிப்பதற்காகச் செய்யப் படும் முதலீடு 'மூலதனச் செறிவு' (Capital-deepening) எனப் படும் (நமது சான்றின்படி இது 11 மில்லியன் டாலர்களாகிறது).

அமெரிக்காவில் முதலீடும் பொருளாதார வளர்ச்சியும்

அமெரிக்காவில் நடைபெற்றுள்ள மூலதன ஆக்கத்தைப் பற்றிப் பேராசிரியர் குஸ்நெட்ஸ் (professor kuznets) அவர்கள் விரிவாக ஆராய்ந்து நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். மூலதனம், தொழிலாளரின் எண்ணிக்கை, உற்பத்தித் திறன் ஆகிய மூன்றுக்குமிடையே அவர் கண்ட தொடர்புகளைச் சுருக்கமாக 6 – 4 பட்டியலில் காணலாம்.

உள்நாட்டுப் போருக்குப் பின்னர், தொழிலாளரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதைக் காட்டிலும் மொத்த மூலதன இருப்பு (தேய்மான ஈட்டு நிதி உட்பட) விரைவாக அதிகரித்

3. வறிய நாடுகளில் மக்கள்தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் பிரச்சினை களில் ஒன்றை இச்சான்று புலப்படுத்துகிறது. அதாவது, மக்களின் வாழ்க்

துள்ளது. அதேபோல், தலா ஒவ்வொரு தொழிலாளிக்கு மிருந்த மூலதனமும் உள்நாட்டுப் போருக்குப் பின்னர் பத்தாண்டுகள்வரை இருந்ததைக் காட்டிலும் இரண்டாம் உலகப்போர் முடிந்த பத்தாண்டுகளில் நான்கு மடங்கு அதிகரித் திருக்கிறது. நிகர மூலதன இருப்பும்கூட (தேய்மான நிதி நீங்கலாக) அதிகரித்துள்ளது; எனினும், மொத்த மூலதனத் தைப்போல் அவ்வளவு துரிதமாக அதிகரிக்கவில்லையென்றாலும், 80 ஆண்டுகளுக்கு முன் இருந்த அளவைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. ஆனால் 1930-லிருந்து நிலவிய பொருளாதார மந்தத்தின்போதுதான் மூலதன வளர்ச்சி மிகக் குறைந்த மட்டத்திற்குச் சரிந்து, தலா ஒவ்வொரு தொழிலாளிக் கும் இருந்த அளவு குறைந்துவிடலாயிற்று. மந்த காலத்தில் இருந்ததைக் காட்டிலும் இரண்டாம் உலகப்போருக்குப்பின் 10 ஆண்டுகளில் மூலதனம் விரைவாக வளர்ச்சிபெற்றதெனினும், 1929-க்கு முன்னர் 10 ஆண்டுகள் இருந்ததைக் காட்டிலும் குறை வாகத்தான் இருந்தது.

மூலதன வளர்ச்சி எப்படியெல்லாம் அமைந்திருந்தது என்பதை 6-4 பட்டியலின் மேற்பகுதியிலுள்ள முதலீட்டுப் புள்ளி விவரங்களைப் பார்த்தால் புரிந்துவிடும். 1929-க்கு முன்னர் இருந்த மொத்த முதலீடு – தேய்மான ஈடும் மூலதன இருப்பில் கூட்டப்பட்டதும் சேர்ந்து – நாட்டின் மொத்த உற்பத்தியில் 22 முதல் 25 சதவீதம் வரை இருந்துள்ளது; நிகர முதலீடுகூட நாட்டின் மொத்த நிகர உற்பத்தியில் 11 முதல் 15 சதவீதம் வரை இருந்திருக்கின்றது. எனவே, மூலதன இருப்பைக் கணிசமான அளவு அதிகரிப்பதற்கும், தலா ஒவ்வொரு தொழிலாளிக்கும் இருந்த மூலதன அளவை உயர்த்தவும் போதுமானதாக இருந்தது. ஆனால் 1930-லிருந்து நிலவிய மந்தத்தின் போதும், இரண்டாம் உலகப் போரின்போதும் மொத்த முதலீடு பெருமள வில் சரிந்துவிட்டதால், நாட்டின் மொத்த உற்பத்தியில் அதன்

கைத் தரத்தை அப்படியே பேண வேண்டுமாயின், சராசரியாக ஒவ்வொரு தொழிலாளியும் உற்பத்தி செய்கின்ற அளவு குறைந்துவிடாமல் பேண வேண்டியுள்ளது. அப்படியானால் ஒவ்வொரு தொழிலாளிக்கும் எவ்வளவு மூலதனம் உள்ளதோ, அது குறைந்துவிடாமல் இருக்க வேண்டும். ஆனால் தொழிலாளரின் எண்ணிக்கை உயரும்போது, அந்த அளவுக்குப் புதிய இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் உற்பத்தி செய்ய முதலீடு செய்ய வேண்டும். ஆனால் வறிய நாட்டில் சேமிப்பு வீதம் மிகக் குறைவாகத் தான் இருக்கும்; வறுமையில் வாடும்போது சேமிப்பது அவ்வளவு எளிதல்ல. அதிலும் மக்கள்தொகை பெருகும்போது, இருக்கின்ற சிறிதளவு சேமிப்பையும் உழைப்பாளிகளுக்கு வேண்டிய சராசரி மூலதனம் குறைந்து விடாமல் பேணுவதற்குத்தான் பயன்படுத்த வேண்டியுள்ளது; அப்படிப் பயன் படுத்திவிட்டால், மூலதன இருப்பை அதிகரித்து, உற்பத்தித் திறனை உயர்த்தி, வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்கு வேண்டிய சேமிப்பு மிகக் குறைவாகத் தானே இருக்க முடியும்!

6 – 4 பட்டியல்

மூலதன இருப்பும் தொழிலாளர் எண்ணிக்கையும் உற்பத்தித் திறனும், 1869 – 1955

காலம்	தொழிலாளர் ஒவ்வொரு வருக்கும் சராசரி மூலதன இருப்பு (1929 ஆம் ஆண்டு டாலரில்) மொத்த	நிகர	உற்பத்தியில் முதலீட்டின் விதம் மொத்த	நிகர
1869 முதல் 1878 வரை	$ 3,800	$ 2,300	22·9%	15·1%
1889 முதல் 1898 வரை	6,000	3,200	25·1	15·2
1909 முதல் 1918 வரை	9,100	4,900	22·1	11·9
1929 முதல் 1939 வரை	13,000	6,100	13·4	1·9
1946 முதல் 1955 வரை	15,300	6,000	17·3	4·8

மூலதன வளர்ச்சி, தலா ஒரு தொழிலாளிக்கு இருந்த மூலதனம், உற்பத்தித்திறன் (பத்தாண்டுகளுக்கான வளர்ச்சி விதம்)

	மொத்த மூலதன இருப்பு	தலா ஒரு தொழிலாளிக்கு இருந்த மொத்த மூலதன இருப்பு	தொழிலாளியின் உற்பத்தித் திறன் (தலா ஆள்-மணி நேர உற்பத்தி)
1869 முதல் 1889 வரை	60·8%	21·7%	புள்ளி விவரம் கிடைக்கவில்லை
1889 முதல் 1909 வரை	59·4	23·0	22·7%
1909 முதல் 1929 வரை	42·1	24·9	17·7
1929 முதல் 1946 வரை	20·6	8·4	24·9
1946 முதல் 1955 வரை	36·5	19·2	42·8

மூலம்: உற்பத்தித்திறன் பற்றிய புள்ளி விவரங்களைத் தவிர, ஏனைய வகைத்தும் Simon Kuznets அவர்களின், 'Capital in the American Economy' என்ற நூலிலிருந்து (princeton, N.J.: National Bureau of Economic Research, 1961). உற்பத்தித்திறன் பற்றிய புள்ளி விவரங்களுக்கு மூலம் வருமாறு: John Kendrick, 'Productivity Trends in the United States' (Princeton N.J.: National Bureau of Economic Research, 1961); Bureau of Labour Statistics, Trends in output per man-hour in the Private Economy (Washington, D. C.: U. S. Department of Labour, BLS Bulletin 1249, 1959).

பங்கு மிகக் குறைந்த சதவீதமாகி, தேய்மானத்தைச் சரிக்கட்டு வதற்குக்கூட போதுமானதாய் இல்லாமல் ஆகிவிட்டது. இதன் விளைவாக, நிகர முதலீடு சூன்யத்தையடுத்துச் சரிந்துவிட்ட தோடு, தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்ததன் காரணத்தால் தலா ஒவ்வொருவருக்குமிருந்த நிகர மூலதன இருப்பும் குறைந்து விட்டது. எனினும், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், நாட்டின் மொத்த உற்பத்தியில் முதலீட் டின் பங்கு மீண்டும் உயர்ந்ததென்றாலும்கூட முன்பிருந்த அளவுக்கு உயரவில்லை. அதனால்தான், போருக்குப் பின்னர் இருந்த மூலதன வளர்ச்சிவீதம் 1929-க்கு முன்பிருந்ததைக் காட்டிலும் கணிசமான அளவு குறைவாகவே இருக்க நேரிட்டது.

உற்பத்தித் திறன் பற்றிய புள்ளி விவரங்கள்தான் 6 – 4 பட்டியலின் மிகச் சிறந்த அம்சமாகும். தலா ஒவ்வொரு தொழிலாளிக்குமுள்ள மூலதனம் அதிகரிக்கும்போது, உற்பத்தித் திறனும் உயர்ந்துவிடுகிறது என்பதை முன்னரே சுட்டிக்காட்டி னோம். இருந்தாலும் இவ்விரண்டும் சேர்ந்தாற்போல் உயர வேண்டுமென்ற நியதி கிடையாது. சான்றாக, 6 – 4 பட்டியலின்படி 1929-க்கு முன்னர் இருந்த வளர்ச்சி வீதத்தைக் காட்டிலும் 1946 முதல் 1955 வரை தலா ஒவ்வொரு தொழிலாளிக்கும் இருந்த மூலதன வளர்ச்சி வீதம் குறைவுதான்; எனினும், உற்பத்தித் திறன் வளர்ச்சி வீதமோ ஏனைய காலங்களில் இருந்த தைக் காட்டிலும் எவ்வளவோ அதிகமாக இருந்திருக்கின்றது. இதிலிருந்து புலப்படும் உண்மை யாதெனில், உற்பத்தித் திறன் உயர்ந்து, பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்கு முதலீடு செய்யப்படும் அளவு மட்டுமன்றி, வேறு பல காரணங்களும் உள்ளன.[4]

விஞ்ஞான வளர்ச்சியும் தொழில்நுட்ப முன்னேற்றமும்

உற்பத்தித் திறன் வளர வேண்டுமாயின், தலா ஒவ்வொரு தொழிலாளிக்கும் இருக்கின்ற மூலதனம் அதிகரிக்க வேண்டும் என்பதைத்தான் முக்கியமானதாக இதுவரை ஆராய்தோம்.

4. அண்மையில் பேராசிரியர் ராபர்ட் ஏ. கோர்டன் அவர்கள் (Professor Robert A. Gordon) இக் கருத்திற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்கள்; அவர் களின் மறுப்பின் சாரம் வருமாறு: இப் புள்ளிவிவரங்களும், இது போன்ற ஏனைய புள்ளிவிவரங்களும் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இருந்த மூலதன இருப்பைக் குறைத்து மதிப்பிட்டுள்ளன; ஆனால் ஒன்றை நாம் மறந்து விடக் கூடாது. அதாவது, போரின்போது போர்க் கருவிகளைத் தயார் செய் வதற்கென்று ஏராளமான செலவில் அரசாங்கம் இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் வாங்கி, போர் முடிந்த பின்னர், அவற்றையெல்லாம் மிக மலிவான விலைக்கு தனியார் தொழில் நிறுவனங்களுக்கு விற்றுவிட்டது. அவற்றையெல்லாம் அந்நிறுவனங்கள் தம் உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தான் பயன்படுத்தினர் என்பதை இப் புள்ளிவிவரங்கள் புறக்கணித்துவிடு

ஆனால் இன்று, தொழிலாளர்களுக்கு ஏராளமான மூலதனம் இருப்பதோடு, அதன் தரமும் எவ்வளவோ உயர்ந்துள்ளது. தொழிலாளர்கள் பயன்படுத்தும் இயந்திர சாதனங்களும் தளவாடங்களும் அப்படியே அதிகரிக்கப்படுவதால் மட்டும் மூலதன வளர்ச்சி ஏற்பட்டு விடுவதில்லை; மாறாக, வேறு விதமான, சொல்லப் போனால் முன்பிருந்ததைக் காட்டிலும் சிறப்புமிக்கத் தொழில்நுட்பத் திறன் கொண்ட மூலதனம் சேர்க்கப்படுவதையும் மூலதன வளர்ச்சி புலப்படுத்துகிறது. வேறு விதமாகக்கூறின், இருக்கின்ற உற்பத்திச் சார்புக் கோட்டிலேயே மேல்நோக்கி நகர்வதை மட்டும் உற்பத்தித் திறன் வளர்ச்சி குறிப்பிடுவதில்லை; மாறாக, அதற்கும் மேலேயுள்ள புதிய உற்பத்திச் சார்புக் கோட்டிற்கு இடம் பெயர்வதையும் குறிப்பிடுகிறது.

தொழில்நுட்ப முன்னேற்றம் எத்தனையோ விதங்களில் ஏற்படக்கூடும். சான்றாக, குறிப்பிட்ட பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு, அதிகத் திறமையும் சிறப்பும் வாய்ந்த இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தக்கூடிய புதிய உற்பத்தி வழிமுறைகளைக் கண்டுபிடிப்பதனால் ஏற்படலாம்; அதேபோல், உற்பத்தி முறையை மேலும் திறன்மிக்க வகையில் மாற்றி அமைப்பதன் வழியாகவும், அங்காடியை விரிவாக்கி, அதனால் தொழிலாளர் மேலும் சிறப்புத் தேர்ச்சி அடையும்படி செய்வதன் மூலமாகவும் ஏற்படக்கூடும். அதோடு மட்டுமன்றி, மற்றொரு முக்கியமான விதத்திலும் தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்படலாம். அதாவது, முற்றிலும் புதுமையான நுகர்வுப் பொருள்களைக் கண்டுபிடிப்பதன் வாயிலாகவும், அதேபோல் இதுவரை பயன்படுத்தாத புதிய மூலப் பொருள்களைக் கண்டுபிடிப்பதன் வழியாகவும் தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்படுகின்றது.

மூலதன வளர்ச்சியும் தொழில்நுட்ப முன்னேற்றமும் ஒன்றோடொன்று பின்னப்பட்டவையாகும். சான்றாக, 1910ஆம் ஆண்டோடு தொழில்நுட்ப முன்னேற்றமும் விஞ்ஞான வளர்ச்சியும் நின்றுவிட்டதாக கருதிக் கொள்வோம். அப்படியிருந்தால்கூட உற்பத்தித் திறன் ஓரளவிற்கு அதிகரித்திருக்க முடியும். அப்போதிருந்த முதற்கருவிப் பொருள்கள் அப்படியே அதிகமாகியிருக்கக்கூடும். சான்றாக, அன்றிருந்த நிலக்கரி இரயில் போக்குவரத்து பெருகியிருக்கலாம்; கால்வாய்கள்

கின்றன. ஆனால் பேராசிரியர் கோர்டன் அவர்கள் குறிப்பிடும் இத் தவற்றைச் சரிசெய்து அளவிட்டாலும்கூட, இரண்டாம் உலகப் போருக்குப் பின் இருந்த மூலதன வளர்ச்சி வீதம் மந்த காலத்திற்கு முன்பிருந்ததைக் காட்டிலும் குறைவாகத்தான் இருந்தது என்றுதான் கூற வேண்டும்.

அதிகமாகியிருக்கலாம்; நீராவி சக்திக்குப் பதிலாக மின்சக்தி பெருமளவில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்; இன்னும் இது போன்ற எத்தனையோ வகையான முதற் கருவிப் பொருள்கள் அப்படியே பெருகியிருக்கக்கூடும். மேலும், 1910ஆம் ஆண்டிலிருந்த தொழிற்சாலைகளிலும் நிறுவனங்களிலும் ஒரு சில புதிய முறையிலும் வேறு பல பழைய முறையிலும் இயங்கிக் கொண்டிருந்திருக்கலாம்; எனவே, பழைய முறையில் இயங்கினவை புதியனமயமாக்கப்பட்டு உற்பத்தித் திறனை அதிகரித்திருக்கக் கூடும். இப்படியெல்லாம் நடைபெற்றிருந்தாலும் அப்போதிருந்த தொழில்நுட்ப முன்னேற்றம் முழுமையாகப் பயன்பட்டு முடிவு பெற்றிருக்குமாதலால் உற்பத்தித் திறன் வளர்ச்சி ஒரு வரம்பிற்குப் பின்னர் குறைய ஆரம்பித்திருக்கும். இந் நிலையில் படம் 6–2-லுள்ள உற்பத்திச் சார்பு படிப்படியாக A, X, Y, Z என்ற புள்ளிகளின் வழியாகத்தான் நகர்ந்திருக்க முடியும். மாறாக, தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்பட்டிருந்தால், உற்பத்திச் சார்பு மேலும் உயர்ந்து புதியதொரு கோட்டையே உருவாக்கியிருக்கும்.

இப்போது, 1910ஆம் ஆண்டிற்குப் பின்னரும் தொழில்நுட்ப முன்னேற்றமும் விஞ்ஞான வளர்ச்சியும் ஏற்பட்டு வந்திருப்பதாகவும், ஆனால் தலா ஒவ்வொரு தொழிலாளியும் பயன்படுத்தும் மூலதன அளவு அதிகரிக்க முடியாத விதத்தில் சேமிப்பு நடைபெறுமல் இருப்பதாகவும் கருதிக் கொள்வோம். அவ்வாறாயின், என்ன விளைவுகள் ஏற்பட்டிருக்கக்கூடுமென்று கூறுவது கடினம். இருந்தபோதிலும், மூலதனத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, உற்பத்தி அளவு அதிகரித்திருக்கக்கூடிய வழிமுறைகள் சில கண்டுபிடிக்கப்பட்டிருக்கலாம். அவ்வாறாயின், உற்பத்தித் திறனும் ஓரளவு உயர்ந்திருக்கக்கூடும். எனினும், மூலதன வளர்ச்சியின்றி, உற்பத்தித் திறன் ஓரளவுக்குத்தான் உயர்ந்திருக்க முடியுமே தவிர, இன்றுள்ள அளவுக்கு நிச்சயமாக உயர்ந்திருக்க முடியாது. 1910ஆம் ஆண்டிற்குப் பின்னர் முக்கியமான பல்வேறு தொழில்கள் விரைவாக வளர்ச்சி பெற்று வந்துள்ளன; அவை பெருமளவில் முதலீட்டுச் செலவு செய்ததுதான் இவ் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும். மின்சாரப் பயன், பெட்ரோல், இரசாயனப் பொருள்கள், நெடுஞ்சாலைகள், இன்னும் இதுபோன்ற எத்தனையோ விதமான முதலீட்டுச் செலவுகளே போதுமான சான்றுகள்.

இவ்வாறாக, மூலதன வளர்ச்சியும் தொழில்நுட்ப முன்னேற்றமும் எவ்வாறு பொருளாதார வளர்ச்சிக்கு மூல காரணங்

களாக இருக்கின்றன என்பதைத் தனித் தனியாகப் பாகுபடுத்தி ஆராய முடிந்த போதிலும், அவை இரண்டும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இவ்விரண்டில் ஒன்று இல்லையென்றால் ஓரளவிற்குத் தான் பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும். தொழில் நுட்ப முன்னேற்றம் அனைத்தும் புதுமையான முதற் கருவிப் பொருள்களில்தான் பிரதிபலிக்கின்றன. அதேபோல், பொருளாதார வளர்ச்சிக்கான புதிய முதலீடுகள் யாவும், இருக்கின்ற மூலதனப் பொருள்களை அப்படியே அதிகரிப்பதில் மட்டும் செய்யப்படுவதில்லை; மாறாக, புதிய தொழில்நுட்பங்களைக் கொண்ட மூலதனச் செலவாகத்தான் பெரும்பாலும் உள்ளன. எனவே, அப் புதிய தொழில்நுட்பம் இல்லையென்றால் இவ்வகை முதலீடும் கிடைபெற்றிருக்காது.

தலா ஒவ்வொரு தொழிலாளிக்குமிருந்த மூலதன வளர்ச்சி வீதம் முந்திய காலங்களில் இருந்ததைக் காட்டிலும் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் குறைந்து விட்டதெனினும், உற்பத்தித் திறன் குறையாமல் வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை முந்திய பிரிவில் கண்டோம். இது பார்ப்பதற்கு முரண்பாடாகத் தோன்றலாம்; எனினும், முன்பிருந்ததைக் காட்டிலும் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஏற்பட்டுவரும் துரிதமான தொழில்நுட்ப வளர்ச்சி இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். மேலும் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் தன்மையே இப்போது மாறியுள்ளதாக ஒரு சில பொருளாதார அறிஞர்கள் நம்புகின்றனர். அவர்களின் கருத்துப்படி, முன்பெல்லாம பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதற்கு ஏராளமான மூலதனம் தேவைப்பட்டது; ஆனால் இன்றோ அப்படியல்ல. சான்றாக, முன்னர் போடப்பட்ட இரயில் பாதைகளுக்கு எவ்வளவோ மூலதனம் தேவைப்பட்டது; ஆனால் இன்றுள்ள கோச்சுகளுக்கு அவ்வளவு மூலதனம் அவசியமல்ல. எனவே, இன்றைய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மூலதனச் சிக்கனமுடையவையாகும். உதாரணமாக, உருக்காலைக்கு வேண்டிய ஆக்ஸிஜனைப் புகுத்தும் இன்றைய முறைக்கு மூலதனம் அவ்வளவாகத் தேவையில்லை. இவ்விதத் தொழில்நுட்ப முறைகள் மூலதனத்தை மட்டுமன்றி, உழைப்பையும் சிக்கனமாக்கக் கூடியவை. இவ்வாறாக, மூலதன-தொழிலாளி விகித வளர்ச்சி முன்பைவிடக் குறைவாக இருந்த போதிலும், உற்பத்தித் திறன் வளர்ச்சி குறைந்துவிடாமல் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்ததற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். எனினும், இன்றைய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மூலதனத்தைச் சிக்கனம் செய்யக் கூடியவைதானா

இல்லையா என்பதைத் திட்டவட்டமாகக் கூறுவதற்கு வேண்டிய பொருளாதாரச் சான்றுகளோ புள்ளிவிவரங்களோ கிடையாது. எனவே, இப் பிரச்சினையை ஆராய்ச்சிக்குரிய பிரச்சினையாக விட்டுவிடுவதுதான் நல்லது.

நாம் அடைந்துவரும் பொருளாதார முன்னேற்றத்தைப் பார்க்கும்போது, தொழில்நுட்ப முன்னேற்றம் மேலும் துரிதமாக நடைபெறக்கூடும் என்றுதான் தோன்றுகிறது. 1940ஆம் ஆண்டில் தொழில் நிறுவனங்கள் மட்டுமின்றி, அரசாங்கம், பல்கலைக்கழகம் ஆகியவை அனைத்தும் ஆராய்ச்சிக்கென்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கென்றும் 1 பில்லியன் டாலர் வரை செலவு செய்ததாக நமக்குக் கிடைத்துள்ள புள்ளிவிவரங்களிலிருந்து தெரிகிறது. இவ்வகைச் செலவு படிப்படியாக அதிகரித்து 1969-ல் 25 பில்லியன் டாலருக்கு உயர்ந்துவிட்டது. ஆனால், தொழில் துறையிலோ வாணிபத் துறையிலோ முன்னேற்றம் அடைவதற்கான புதிய நுட்ப முறைகளை ஆராய்வதற்கு மட்டும் இவ்வளவு தொகையும் செலவிடப்படவில்லை. முன் காலத்தில்தான் உற்பத்தியைப் பெருக்குவதற்கென்று மட்டும் தனிப்பட்ட ஆராய்ச்சி நிலையங்கள் ஆராய்ச்சி செய்துவந்தன. ஆனால் இன்று அப்படியல்ல. வெறும் சம்பிரதாயத்திற்காகவும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதோடு மட்டுமன்றி, வானவெளி ஆராய்ச்சிக்கும் இராணுவ ஆராய்ச்சிக்கும் ஏராளமாகச் செலவிடப்படுவதால்தான் ஆராய்ச்சிச் செலவு இன்று பன்மடங்கு அதிகரித்துள்ளது. எனவே, ஆராய்ச்சிக்கான செலவு அதிகரித்துள்ளதைக் கொண்டு பொருளாதார வளர்ச்சி துரிதமாகிவிடும் என்று சொல்வதற்கில்லை. எது எப்படியிருப்பினும், ஆராய்ச்சிச் செலவு அதிகரித்துள்ளதனால் தொழில்நுட்ப முன்னேற்றம் ஓரளவிற்காகிலும் அதிகரிக்கக்கூடும் என்பதை எண்ணத் தோன்றுகிறது.

கல்வியும் தொழிலாளர் திறனும்

பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்கு, பொருள் உற்பத்தியிலும் பகிர்விலும் பயன்படுத்தப்படும் மூலதனம் வளர்வதோடு, புதுப்புது வகையான முதற் கருவிப் பொருள்களும் அதிகரிக்க வேண்டுமென்பதைப் பார்த்தோம். மேலும், உற்பத்திச் சார்பு தொடர்ந்து மேல்நோக்கிச் செல்ல வேண்டுமாயின், தொழில்நுட்ப முன்னேற்றம் மட்டும் போதாது; தொழிலாளர்களின் கல்வியும் திறனும் வளர வேண்டும். அமெரிக்காவில் 50 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த தொழிலாளர்களால் இன்றைய பொரு

ளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. அவர்களுக்கிருந்த பயிற்சியும் திறனும் இன்றைக்குப் போதுமானதல்ல. வளர்ச்சி குன்றிய நாடுகளில் நிறுவனங்களை அமைத்துள்ள அமெரிக்கத் தொழில்களின் அனுபவமே இவ்வுண்மையைப் பிரதிபலிக்கின்றது; அந் நிறுவனங்கள் அமெரிக்காவில் உள்ளதைப் போல் நவீன முறையில்தான் அமைக்கப்பட்டுள்ளன; எனினும், அவற்றின் உற்பத்தித் திறன் குறைவாகத்தான் உள்ளது.

பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதற்கு, குறிப்பிட்ட தொழில்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ள ஒரு சிலர் மட்டும் இருந்தால் போதாது; தொழிலாளர் அனைவரின் தரமும் உயர வேண்டும். அமெரிக்க நாட்டுப் பொருளாதாரப் பணிகளைச் செய்வதற்கு உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தவர்களும் கல்லூரிப் பட்டதாரிகளும் இன்று ஏராளமாகத் தேவை. இந்த அளவுக்கு 1900ஆம் ஆண்டிலோ, 1930ஆம் ஆண்டிலோ கூடத் தேவைப்பட்டதில்லை. இன்று வேலையில் சேரும் இளைஞர்களில் மூன்றில் இரண்டு பேர் குறைந்தபட்சம் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தவர்களாவர். 50 ஆண்டுகளுக்கு முன்னரோ பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு வேலையில் சேர்ந்தோர் ஐந்தில் ஒருவர்தான். அதேபோல், தொடக்கப் பள்ளிப் படிப்பைக்கூட முடிக்காமல் இன்று வேலையில் சேருவோர் 5 சதவீதம்தான்; ஆனால் 50 ஆண்டுகளுக்கு முன்னரோ 40 சதவீதம் பேர் அவ்வாறு சேர்ந்தனர். இவ்வாறாக, பள்ளிப் படிப்பை முடித்த பின்னர் வேலையில் சேரும் இளைஞர்களின் எண்ணிக்கை இன்று அதிகரித்துள்ளதோடு, பள்ளியில் பயிலும் நாட்களும் அதிகரித்துள்ளன. நூறாண்டுகளுக்கு முன்னர் சிறுவர்கள் கடைகளிலும், ஆலைகளிலும் வேலை செய்வதுதான் முக்கியமானதாகக் கருதப்பட்டது; பள்ளிக்குச் சென்று படிப்பது அவ்வளவு முக்கியமானதாக இல்லை.

பள்ளியில் பயிலும் ஆண்டுகள் மட்டுமன்றி, ஆண்டொன்றுக்குப் பயிலும் நாட்களும் இன்று அதிகரித்துள்ளன. இந்த அடிப்படையில் பார்க்கும்போது, 1900-ல் வேலை செய்த சாதாரணத் தொழிலாளி 50 ஆண்டுகளுக்கு முன் இருந்த தொழிலாளியைக் காட்டிலும் 2½ மடங்கு நாட்கள் அதிகமாகப் பள்ளியில் பயின்றிருக்கின்றார் எனத் தெரிகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கான இவ்வகைப் புள்ளிவிவரங்கள் நம்மிடம் கிடையாது; எனினும், 1860-ல் வேலை செய்த தொழிலாளரைக் காட்டிலும் 1910-ல் இருந்த தொழிலாளர்கள் அதிகம் படித்தவர்கள் என்பது தெளிவு. இப்படிப் பார்க்கும்போது, 1860-ல்

இருந்த தொழிலாளர்களைக் காட்டிலும் 1960-ல் இருந்தவர்கள் சுமார் 4 அல்லது 5 மடங்கு அதிகம் கற்றவர்களாக இருந்திருக்கலாம்.

கல்விக்கும் வருமானத்திற்கும் நேரடியான தொடர்பு உண்டு. சான்றாக, 1961ஆம் ஆண்டில் எட்டாம் வகுப்பு முடித்தவர்களைக் காட்டிலும் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தவர்கள் சராசரி 47 சதவீதம் உயர்ந்த வருமானம் பெற்றனர் (படம் 6-3). அதேபோல் பள்ளிப் படிப்பை முடித்தவர்களைக் காட்டிலும் கல்லூரிப் பட்டதாரிகள் சுமார் 30 சதவீதம் அதிகமாய்ச் சம்பாதித்தனர்; சாதாரணப் பட்டதாரிகளைவிட மேல்பட்ட பட்டதாரிகளின் வருமானம் உயர்வாயிருந்தது. இவ்வாறாக, வருமான ஏற்றத் தாழ்வு தொழிலாளர்களின் உற்பத்தித் திறனையே புலப்படுத்துவதாயுள்ளது. எனவே உயர்ந்த கல்விக்கேற்ப வருமானமும் அதிகமாயிருப்பதால், தொழிலாளரின் உற்பத்தித் திறன் கல்வியினாலும் உயர்கிறது என்று கூறலாம்.



படம் 6-3 வருமானமும் கல்வியும், 1969

வருமானத்திற்கும் கல்விக்குமுள்ள தொடர்பைப் படம் 6-3 புலப்படுத்துகிறது; எனினும், இவ் வருமான ஏற்றத்தாழ்வுகள் புலப்படுத்துவதுபோல் உற்பத்தித் திறன் வேறுபாடுகள் அனைத்துமே கல்வியினால்தான் ஏற்படுகின்றன என்று கூற முடியாது. ஒருவர் எத்தனை ஆண்டுகளில் பள்ளிப் படிப்பை முடிக்க முடியும் என்பது அவரது இயல்பான திறமையைப் பொருத்தது. பொது அறிவோ கல்லூரி மாணவர்களிடம் இருக்கும் அளவிற்குப் பள்ளி மாணவர்களிடம் இருப்பதில்லை; அதேபோல் தொடக்கப்

பள்ளிப் படிப்பை முடித்தவர்களைக் காட்டிலும் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தவர்களிடம் பொது அறிவு அதிகமாகத் தான் இருக்கும். மேலும், கல்லூரிப் பட்டதாரிகள் நல்ல வருமான முடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடும்; அவர் களுக்குக் கிடைத்த கல்வி வாய்ப்பு குறைந்த வருமானமுடைய குடும்பத்தில் பிறந்தோருக்கு இல்லாமல் இருந்திருக்கலாம். இவ்வளவு நிபந்தனைகள் இருந்தபோதிலும்கூட, கல்வி உயர உயர, உற்பத்தித் திறனும் வருமானமும் உயரும் என்பதில் சிறிதளவும் சந்தேகம் இல்லை. சான்றாக, கொலம்பியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கேரி பெக்கர் (Professor Gary Becker) அவர்களின் கணிப்பின்படி, தொழில் முதலீட்டிற்குச் சராசரி எவ்வளவு பலன் வீதம் (இலாபவீதம்) கிடைக்கின்றதோ அந்த அளவிற்குக் கல்லூரிப் படிப்பிலிருந்தும் பணப் பலன் (அதாவது உயர்ந்த வருமானம்) கிடைக்கிறது என்று அறிய வருகிறோம்.[5] இக் கணிப்பின்படி, கல்லூரிப் படிப்பிற்காகும் மொத்தச் செலவில் கல்லூரிக் கட்டணம், புத்தகங்கள், சாப்பாடு, தனி அறை வசதி போன்றனவற்றிற்காகும் நேரடியான செலவு மட்டுமன்றி, ஒருவர் கல்லூரியில் சேராமல் வேலையில் அமர்ந் திருந்தால் எவ்வளவு சம்பாதித்திருக்கக் கூடுமோ அந்த வருமான இழப்பும் சேரும்.

இவ்வாறாக, மேலும் மேலும் படிப்பதனால் கிடைக்கக்கூடிய கூடுதல் வருமானத்திற்கு இவ்விதச் சான்று இருப்பதைப் பார்த் தால்—கடந்த நூற்றாண்டுகளில் தொழிலாளர்கள் பெற்றுள்ள கல்வியும் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாகும் என்று தெளிவாகத் தெரிகிறது. இப்படி அழுத்தம்திருத்தமாகக் கூறுவதனால், பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்குக் கல்வி தான் காரணமென்றோ, அல்லது கல்விதான் முக்கிய காரணமென்றோ எண்ணிவிட வேண்டாம். நாகரிகமானதொரு நாட்டில்—உற்பத்தி செய்யும் முறைகள் எவ்வளவுதான் பழமை யானவையாய் இருந்தாலும்—கல்விக்குத் தனிச் சிறப்பு உண்டு. சான்றாக, பழங்காலத்திய கிரேக்க மக்களைச் சிந்தித்துப் பாருங்கள். கல்வியினால் பொருளாதார வளர்ச்சி தூண்டப் படுவது, போனசு தருவதைப் போன்றது என்று கூறலாம். கல்வி அறிவு இருப்பது நல்லதென்று நம்புகின்றோம்; அதனால் நமக்கு கிடைக்கும் பலன் அதிகரிக்கின்றது.

5. Gary S. Becker, Human Capital, Columbia University Press, New York, 1964.

பொருளாதார வளர்ச்சிக்கான பல்வேறு காரணிகளின் பங்கினை அளவிடல்

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் முக்கிய காரணிகள் ஒவ்வொன்றும் எந்த அளவுக்கு அவ்வளர்ச்சிக்கு உதவியுள்ளன என்பதை மதிப்பீடு செய்யும் முயற்சி மிக அண்மையில் தான் மேற்கொள்ளப்பட்டது. M. I. T.-ஐச் சேர்ந்த பேராசிரியர் ராபர்ட் சோலாவ் (Prof. Robert Solow), ஜார்ஜ் வாஷிங்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு. ஜான் கென்டிரிக் (John Kendrick), புரூகிங்ஸ் நிலையத்தில் பணிபுரியும் திரு. எட்வர்ட் டெனிசன் (Edward Denison of the Brookings Institution) ஆகிய மூவரும்தான் இம் முயற்சியில் ஈடுபட்டு முன்னோடிகள் என்ற பெருமை பெற்றுள்ளனர்.

உற்பத்திக் காரணி ஒவ்வொன்றும் எந்த அளவுக்கு உற்பத்தியில் முக்கியத்துவம் வாய்ந்ததென்பதை, அதனதனுக்குக் கிடைக்கும் வருமானம்தான் மதிப்பிடுகின்றது என்ற முக்கியமான எடுகோளை ஆதாரமாகக் கொண்டுதான், பொருளாதார வளர்ச்சிக்கு ஒவ்வொரு காரணியும் எந்த அளவுக்கு உதவியுள்ளது என்பதை மதிப்பிடும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. சான்றாக, உற்பத்தியில் மூலதனம் கொண்டுள்ள பங்கினை அதற்குக் கிடைக்கும் இலாப வீதம் அளவிடுகிறது; அதேபோல், கல்வித் தகுதிக்கேற்ப ஏற்படும் வருமான வேறுபாட்டைக் கொண்டு, உற்பத்தித் திறன் வளர்ச்சியில் கல்வியின் பங்கினை அளவிடக்கூடும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் திரு. எட்வர்ட் டெனிசன் அவர்களின் ஆய்வுதான் முழுமையான ஆய்வாக மதிக்கப்படுகிறது. அவரது ஆய்வின் முடிவுகளை சுருக்கமாக 6 – 5 பட்டியலில் காணலாம். 1929 முதல் 1957 வரை தலா ஓர் ஆள் – மணி நேர உற்பத்தி 2·3 சதவீதம் உயர்ந்துள்ளது; இதில் ஒவ்வொரு காரணியின் பங்கும் மதிப்பிடப்பட்டுள்ளது. தொழிலாளரின் உற்பத்தித் திறன் வளர்ச்சிக்கு வேலை நேரம் குறைக்கப்பட்டதும் ஒரு முக்கிய காரணமாகும் என்று டெனிசன் அவர்கள் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். அவரது ஆய்வில் அறிவு வளர்ச்சி என்பது (பட்டியலில் உள்ள கடைசி இனம்) நமது விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தைத்தான் குறிப்பிடுகிறது என்பதை மறந்துவிடாதீர்கள்.

6–5 பட்டியல்

தலா ஓர் ஆள்-மணி நேர உற்பத்தி வளர்ச்சியின் மூலக்காரணிகள் 1929—1957.

	வளர்ச்சியில் பங்கு அளவு	மொத்தத்தில் சதவிதம்
தலா ஓர் ஆள் – மணி நேர சராசரி உற்பத்தி வளர்ச்சி (ஆண்டொன்றுக்கு)	2·3%	100%
தலா ஒவ்வொரு தொழிலாளியின் மூலதன வளர்ச்சி	·3%	13%
கல்வி முன்னேற்றம்	·7%	30%
வேலை நேரக் குறைப்பு	·3%	13%
அறிவு வளர்ச்சி, அங்காடி விரிவு, இன்னும் பிற காரணிகள்	1·0%	44%

டெனிசன் அவர்களின் ஆய்வில் கல்விக்குக் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவம்தான் நமது கருத்தைக் கவர்கின்றது. மக்களின் வருமானம், அவர்கள் பயின்ற கல்வி ஆண்டுகளைப் பொருத்து எப்படி மாறுகின்றது என்பதை ஆயும்போது, டெனிசன் அவர்கள் கல்விக்கு 60 சதவீத முக்கியத்துவத்தையும், அவர்களின் இயல்புத் திறன், குடும்பச் சூழ்நிலை போன்றவற்றிற்கு 40 சதவீத முக்கியத்துவத்தையும் அனுமானித்துள்ளார். அப்படியின்றிக் கல்விக்கு அனுமானித்துள்ள முக்கியத்துவம் 60 சதவீதத்திற்கும் குறைவாக இருந்திருந்தால் கல்வியின் பங்கும் குறைவாகியிருக்கும்; அதிகமாயிருந்திருந்தால் கல்வியின் பங்கும் அதிகமாயிருந்திருக்கும்.

மேலும், தலா ஒவ்வொரு தொழிலாளியும் பயன்படுத்தும் மூலதன வளர்ச்சியின் பங்கினை டெனிசன் அவர்கள் மிகத் தாழ்வாக மதிப்பிட்டுள்ளது வியப்பிற்குரியது. அவ்வாறு தாழ்வாக மதிப்பிட்டதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. 6–4 பட்டியல் காட்டுவதுபோல் 1929 முதல் 1955வரை தலா ஒவ்வொரு தொழிலாளிக்கும் அதிகரித்துள்ள மூலதன வீதம் 1929க்கு முன்னர் இருந்ததைக் காட்டிலும் குறைவுதான் என்பது ஒரு காரணமாகும்; இரண்டாவது, மூலதனமும் தொழில் நுட்பமும் சேர்ந்து தரும் பலனை டெனிசன் அவர்கள் முக்கியமானதாகக் கருதவில்லை. இவ்விரண்டையும் தனித் தனியாகத்தான் கருதுகிறார்; எனவே, தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் எவ்வளவு மூலதனம் அதிகரித்துள்ளது என்பதை அவர் புறக்

கணித்து விடுகிறார். ஆனால், உண்மையில் புதிதாக உற்பத்தி யாகும் மூலதனத்தில் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கும் கணிச மான அளவு பங்கு உள்ளது.

எந்தெந்தக் காரணத்தினால் எந்தெந்த அளவில் பொரு ளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை மதிப்பிடுவதற் கென்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வு ஏதுமே திட்டவட்டமான முடிவிற்கு வர இயலாது. காரணம் அவ்வாய்வு கள் அனைத்தும் பல்வேறு அனுமானங்களைக் கொண்டன; அவ்வனுமானங்கள் அனைத்தும் சரிதானா என்று சோதித்துப் பார்ப்பதும் மிகக் கடினம். மேலும், ஒரு சில புள்ளி விவரங்கள், இருப்பதை அப்படியே புலப்படுத்தாமல், ஆய்வாளருக்கு வேண்டியதைப் புலப்படுத்துவதாகவே உள்ளன. இருந்த போதிலும், இவ்வாய்வுகள் அனைத்துமே புதிதாக மிக அண்மை யில்தான் மேற்கொள்ளப்பட்டவை. இதைக் கொண்டு மேலும் நல்ல முறையில் ஆராய்ச்சி செய்யவும், அவசியமான எடுகோள் களையெல்லாம் விடுத்து, திட்டவட்டமான புள்ளி விவரங்களைக் கொடுக்கக்கூடிய புதிய ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு இவை வழி வகுத்துள்ளன. இவ்வாய்வு தரும் தகவல்களின் அடிப் படையில் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு வேண்டிய கொள்கைகளை வகுக்கவும், அக் கொள்கைகளால் ஏற்படக்கூடிய விளைவுகள் எப்படி இருக்கக்கூடுமென்பதை அறிந்து கொள்ளவும் வேண்டிய புதுப்புதுத் தகவல்களை இவ் ஆய்வுகள் கொடுத்துள்ளன என்பதை மறந்துவிடக் கூடாது.

வளர்ச்சி வீதத்தை அதிகரிப்பதற்கான கொள்கைகள்

1947ஆம் ஆண்டிலிருந்து 1969 வரை நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) ஆண்டொன்றுக்கு 4 சதவீதமாக (மாறுத டாலர் மதிப்பில்) அதிகரித்து வந்துள்ளது. வேலை பிறைவு இருப்பதாயும், அரசாங்கக் கொள்கைகள் மாறுமல் அப்படியே இருப்பதாயும் வைத்துக்கொண்டால் 1970 முதல் 1975 வரை ஆண்டொன்றுக்கு 4·25 சதவீதமாக வளரக் கூடும். மேலும், உழைப்பாளிகளின் எண்ணிக்கை 1965-ல் அதிகரித்ததைப் போலவே அதிகரிப்பதாகவும், வேலை நேரம் தொடர்ந்து அதே வீதத்தில் குறைக்கப்படுவதாகவும் வைத்துக் கொண்டால், மொத்த வேலை நேரம் ஆண்டொன்றுக்கு 1·5 சதவீதத்திற்குமேல் உயரக்கூடும். அதேபோல், இரண்டாம் உலகப் போருக்குப்

பின்னர் தொழிலாளரின் உற்பத்தித் திறன் அதிகரித்ததைப் போல் தொடர்ந்து அதிகரித்து வருமாயின், உற்பத்தித் திறன் 2·8 சதவீதம் உயரக்கூடும். இவ்வாறுக, நமது அனுமானத்தின் படி எல்லாம் நடைபெறுமாயின், நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) ஆண்டுதோறும் 4·25 சதவீதம் உயரக்கூடும்.

இப்போது இவ் வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கவேண்டு மென்று முடிவு செய்துவிட்டதாக வைத்துக்கொள்வோம். அவ்வாறுயின், மொத்த வேலை நேரம் குறிப்பிட்ட வீதத்தில் அதிகரிக்கும்போது, தொழிலாளரின் உற்பத்தித்திறன் ஆண்டு தோறும் 2·8 சதவீதத்தைக் காட்டிலும் அதிகமாக உயர்ந்தால் தான் வளர்ச்சி வீதத்தை ஓரளவிற்காகிலும் உயர்த்தமுடியும். அவ்வாறு உயர்த்துவதற்கு என்னென்ன கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான் பிரச்சினை.

முதலீட்டை அதிகரித்தல்

முதன் முதலில் தொழிலாளிகள் பயன்படுத்தும் தலா மூலதன வளர்ச்சி வீதத்தை அதிகரிக்க வேண்டும். அவ்வாறு அதிகரிக்க வேண்டுமாயின், நாட்டின் மொத்த உற்பத்தியில் தொழில் நிறுவனங்களும் அரசாங்கமும் சேர்ந்து முதலீடு செய்யும் அளவை உயர்த்தவேண்டும். பொருளாதார வளர்ச்சி வீதம் சிறிதளவு அதிகரிக்க வேண்டுமென்றால்கூட பெருமளவில் முதலீட்டை உயர்த்தவேண்டும் என்பதை நாம் ஏற்கெனவே பார்த்துள்ளோம். சான்றாக, டெனிசன் அவர்களின் மதிப்பீட்டின் படி, நிகர முதலீட்டை 7 பில்லியன் டாலர் அதிகரித்தால் (அப்போது நாட்டின் மொத்த வருமானத்தில் நிகர முதலீடு 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு உயர்கிறது) வளர்ச்சி வீதம் 0·1 சதவீதம்தான் கூடுகிறது. முதலீடு அதிகரிக்கின்றது என்றாலே உற்பத்தியில் புதுமையான தொழில்நுட்பம் புகுத்தப் படுகிறது என்றுதான் பொருள்; ஆனால் டெனிசன் அவர்கள் இதைப் புறக்கணித்து விடுவதால், வளர்ச்சி வீதம் உண்மையில் 0·1 சதவீதத்தைக் காட்டிலும் அதிகமாக இருக்கக்கூடும். இரண்டு மடங்கு அதிகரித்தால்கூட 0·2 சதவீதத்திற்குத்தான் வளர்ச்சி உயரும். ஆனால் இவ் வளர்ச்சியை வேறுவிதமாகவும் எண்ணிப் பார்க்கலாம். வளர்ச்சி வீதம் 0·2 சதவீதம்தான் என்றாலும்கூட, உண்மையில் அது 5 சதவீத வளர்ச்சியை ஏற்படுத்துகிறது (0·2/4·0). மேலும் 0·2 சதவீதமாகவே இருந்தாலும்கூட கூட்டு வீதத்தில் பார்த்தால் நாளடைவில் அவ்வீதம் அதிகமாகி விடுகிறது என்பதை மறந்துவிடக்கூடாது. சான்றாக, வளர்ச்சி

வீதம் இன்று 4 சதவீதமாக இருப்பதற்குப் பதிலாக 4·2 சதவீத மாக இருக்குமானால், 25 ஆண்டுகளுக்குப் பின்னர், நாட்டின் மொத்த உற்பத்தி 100 பில்லியன் டாலர் அதிகரித்துவிடும். இவ்வாறாக, முதலீட்டைச் சிறிதளவு அதிகரிப்பதன் வழியாக வளர்ச்சி வீதத்தைக் கணிசமான அளவுக்கு உயர்த்த முடியாது; எனினும், இன்றைக்குக் குறைவாகத் தெரியும் வளர்ச்சி வீதம் தான் வருங்கால நாட்டின் மொத்த உற்பத்தியைப் பெருக்கக் கூடிய சக்தி வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் மொத்த உற்பத்தியில் முதலீட்டின் பங்கினை உயர்த்த வேண்டுமானால் அரசாங்கம் என்ன செய்ய முடியும்? அரசாங்க நிதிக் கொள்கையும் பணவாக்கக் கொள்கையும்தான் இதற்குரிய விடை. முதலாவதாக, தொழில் முதலீட்டை ஊக்கு விக்கவும் அதிகரிக்கவும் வேண்டுமாயின், அதற்கேற்ற முறையில் தூண்டுகோல்களைத் தரவேண்டும்; அதோடு, முதலீட்டிற்கு வேண்டிய நிதி கிடைக்குமாறு பணத்தின் அளிப்பை அதிகரிக்க வேண்டும். அடுத்து, கார்ப்பரேஷன்களின் இலாப வரி உயர் வாக இருக்கும்போது, சில வகையான முதலீடுகள் இலாபகர மானதாக இல்லாமல் இருக்கக்கூடும்; எனவே, அவ்வகை முதலீடுகளும் இலாபம் தரக்கூடிய விதத்தில் இலாப வரியைக் குறைக்கலாம். சான்றாக, ஒரு நிறுவனம் செய்யக்கூடிய பலவகை யான முதலீட்டு வாய்ப்புகளிலிருந்து எதிர்பார்க்கும் இலாப வீதம் பின்வருமாறு இருப்பதாக வைத்துக்கொள்வோம்.

முதலீடு செய்யக்கூடிய திட்டங்களின் பட்டியல்		எதிர்பார்க்கும் இலாப வீதம்
முதலீட்டுத் திட்டங்களுக்கு வேண்டிய புதிய இயந்திர சாதனங்கள் அல்லது தளவாடங்களின் செலவு (ஆயிரம் டாலர்களில்)	வரிக்கு முன்னர்	வரி செலுத்திய பின்னர் (கார்ப்பரேஷன் இலாப வரி 50% இருந்தால்)
(1) 200	34%	17%
(2) 100	28	14
(3) 150	22	11
(4) 300	18	9
(5) 60	16	8
(6) 100	12	6

இலாப வரி செலுத்திய பின்னர், இலாப வீதம் 10 சதவீத மாகிலும் இருந்தால்தான் அந் நிறுவனம் முதலீடு செய்யும் என்று வைத்துக் கொள்வோம். கார்ப்பரேஷன் இலாப வரி 50 சதவீத

மாக இருக்கும்போது முதல் மூன்று திட்டங்கள் மட்டும்தான் நிறைவேற்றப்படும். இலாப வரி 50 சதவீதத்திலிருந்து 33 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டால் 4ஆவது திட்டமும் 5ஆவது திட்டமும் 10 சதவீதத்திற்கு மேல் நிகர இலாபம் தரக் கூடியவையாய் ஆகின்றன; எனவே, நமது அனுமானத்தின்படி, இவ்விரு திட்டங்களுமே புதிதாக மேற்கொள்ளப்படும் (வரி செலுத்திய பின்னர் கிடைக்கக்கூடிய இலாபம் முறையே 12 சதவீதமாகவும் 10·7 சதவீதமாகவும் ஆகின்றன). மேலும், இலாப வரியைக் குறைத்துவிடும்போது, கார்ப்பரேஷன்களிடம் இருக்கக்கூடிய சொந்த நிதி அதிகரித்துவிடுவதால் புதிய முதலீட்டுத் திட்டத்தை மேற்கொள்வது எளிதாகிவிடுகிறது.

எனினும், நாட்டில் வேலை நிறைவு இருந்து கொண்டிருப்பதாக அனுமானித்துள்ளோம் என்பதை மறந்துவிடக் கூடாது. இவ் வனுமானத்தின்படி, மற்றவை மாறுமல் அப்படியே இருக்க, முதலீட்டுப் பொருள்களுக்கு மட்டும் தேவை விரிவடைந்தால், நாட்டின் உற்பத்தித் திறனைக் காட்டிலும் மொத்தத் தேவை அதிகமாகிப், பணவீக்கம் தோன்றிவிடும். வேறு விதமாகக் கூறின், நாட்டிலுள்ள எல்லாச் சாதனங்களுமே முழுமையாகப் பயன்படுத்தப்படும்போது, முதலீட்டிற்கான சாதனங்களை எந்த அளவு அதிகரிக்கின்றோமோ, அந்த அளவிற்கு நுகர்விற்காக அல்லது அரசாங்கச் செலவிற்காகப் பயன்படும் சாதனங்கள் குறைக்கப்பட்டால்தான் சமநிலை பாதிக்கப்படாமல் இருக்க முடியும். எனவே, முதலீட்டை ஊக்குவிப்பதற்காகக் கார்ப்பரேஷன் வரியைக் குறைத்தால் மட்டும் போதாது; அதே சமயம், (நுகர்வுச் செலவைக் குறைக்க) நுகர்வோர் செலுத்தும் வரிகளை உயர்த்த வேண்டும், அல்லது அரசாங்கத்தின் செலவைக் குறைக்க வேண்டும். (ஆனால், சாலைகள் அமைத்தல், பள்ளிகள் கட்டுதல் போன்ற வேலைகளுக்காக அரசாங்கம் செய்யும் செலவைக் குறைக்க நாம் விரும்ப மாட்டோம்; ஏனெனில், இவ்வகையான செலவுகள் அனைத்தும் அரசாங்கம் செய்யும் முதலீட்டுச் செலவுகளாகும். எனவே, வளர்ச்சி வீதத்தை அதிகரிக்க முனையும்போது, முதலீடு அல்லாத, ஏனைய அரசாங்கச் செலவைத்தான் குறைக்க வேண்டியுள்ளது. சரிசம வளர்ச்சியை (balanced growth) அடைய வேண்டுமாயின், தனியார் முதலீட்டை மட்டுமன்றி, பொதுத் துறையினர் முதலீட்டையும் விரிவாக்க வேண்டும்.)

பொருளாதார வளர்ச்சியை இலவசமாகப் பெற முடியாது. வளர்ச்சி பெறுவதற்கு முதலீட்டுப் பொருள்களைப் பெருமளவில்

உற்பத்தி செய்ய வேண்டும்; அவ்வாறு உற்பத்தி செய்வதற்குப் பெருமளவில் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது; அப்போது நுகர்விற்கும் அரசாங்கச் செலவிற்குப் பயன்படும் சாதனங்கள் குறைந்துவிடுவதால் நமக்கு அதிருப்தி ஏற்படக் கூடாது (நாட்டில் வேலை நிறைவு இருப்பதை அனுமானித்துக் கொண்டுதான் பேசுகின்றோம்) வளர்ச்சி பெறுவதற்குரிய அரசாங்க நிதிக் கொள்கையும் இதைத்தான் நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காகத் தொழில் வரிகளைக் குறைக்கும்போது, நுகர்வோர் மீதுள்ள வரிகளை உயர்த்த வேண்டும், அல்லது அரசாங்கத்தின் நிர்வாகச் செலவுகளைக் குறைக்க வேண்டும்.

முதலீட்டின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவற்கான அரசாங்கக் கொள்கைகளை மற்றொரு வகையிலும் இணைத்துக் கையாள முடியும். அதாவது, குறைந்த வட்டி, மலிவான பணவாக்கக் கொள்கை ஆகியவற்றையும் கெடுபிடியான வரவு செலவுத் திட்டக் கொள்கையையும் சேர்த்துக் கையாளலாம். வட்டி வீதம் தாழ்வையும் கடன் தாராளமாயும் இருக்கும்போது, முதலீடு அதிகமாகலாம் (இங்கும் வேலை நிறைவையே அனுமானித்துள்ளோம்). அப்போது, முதலீடு அதிகரிப்பதால் ஏற்படக் கூடிய பணவீக்கச் சூழ்நிலையை ஒழித்துக்கட்டும் வழியில் உபரியான வரவு-செலவுத் திட்டத்தை (அல்லது மிகக் குறைந்த பற்றாக்குறைத் திட்டத்தை) அடையும் வகையில் வரவு செலவுத் திட்டத்தைக் கெடுபிடியானதாக்க வேண்டியுள்ளது. இவ்வாறாக, ஒருபுறம் மலிவான பணவாக்கக் கொள்கையால் முதலீடு அதிகரிக்கின்றது; அதேசமயம் கெடுபிடியான வரவு-செலவுத் திட்டக் கொள்கையால் மறுபுறம் அரசாங்கச் செலவோ நுகர்வோர் செலவோ கட்டுப்படுத்தப்பட்டு விடுகிறது.

கல்வியை மேம்படுத்தல்

அரசாங்கத்தின் கல்விக் கொள்கை வாயிலாகவும் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிக்க முடியும். கல்வி பயிலும் ஆண்டுகளை அதிகரித்ததன் வழியாக இன்றைய பொருளாதார வளர்ச்சி உயர்ந்துள்ளதை நாம் சற்று முன்னர்தான் பார்த்தோம். இருக்கின்ற வளர்ச்சி வீதத்தைப் பேணவேண்டுமென்றால்கூட, தொழிலாளரின் கல்வித் தகுதியை உயர்த்தவேண்டியுள்ளது. அவ்வாறிருக்க, கல்வியினால் அதிகரிக்கக்கூடிய வளர்ச்சி வீதத்தை உயர்த்த வேண்டுமாயின், கல்வித் தகுதியைத் தீவிரமாக அதிகரிக்க வேண்டியுள்ளது. கல்வி பயிலும் ஆண்டுகளை மட்டும் வருடா வருடம் அதிகரிக்க இயலாது; ஏனெனில்

அதற்கு ஓர் வரம்பு உள்ளது. அதேபோல் குறைந்த அளவு அனைவரும் இவ்வளவாகிலும் படிக்க வேண்டும் என்ற கட்டாயக் கல்விக்கும் எல்லை உண்டு. நாட்டு மக்களில் எத்தனையோ பேர் தங்கள் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்திக் கொள்கின்றனர்; அவ்வாறு செய்வதால் தங்களின் கல்வித் திறனை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்தாமல் போய்விடுகின்றனர். மேலும், அரைகுறையான படிப்பால் சமுதாய நட்டமும் பொருளாதார நட்டமும் ஏற்படுகிறது. எனவே, காலம் செல்லச் செல்ல, கல்வியினால் ஏற்படக்கூடிய வளர்ச்சி வீதத்தை அதிகரிப்பதற்குக் கல்வியின் 'அளவை' அதிகரிப்பதற்குப் பதிலாக, அதன் தரத்தை உயர்த்துவதுதான் சிறந்தது.

கல்வியினால் ஏற்படக்கூடிய பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க வேண்டுமாயின், அதற்கு ஏராளமாகச் செலவிட வேண்டும். கல்வி பயிலும் வசதிகளை மேன்மேலும் பெருக்க வேண்டும்; அதோடு, பெரும் எண்ணிக்கையில் தரம் உயர்ந்த ஆசிரியர்களும் தேவைப்படுவர். நிகழ்காலத்தில் இவ்வசதிகளையோ ஆசிரியர்களையோ நாம் பெற்றுவிட முடியாது. மேலும், கல்வியினால் பெறக்கூடிய வளர்ச்சிப் பலனை நாம் உடனடியாகவும் பெற்றுவிட முடியாது; அதற்கு எவ்வளவோ காலம் காத்திருக்க வேண்டியுள்ளது. சான்றாக, நமது நாட்டில் ஒவ்வொரு தொழிலாளியும் சராசரி 40 ஆண்டுகள் வேலை செய்கின்றார்; இந்நிலையில், படிப்பு முடிந்து வேலைக்குச் செல்ல வேண்டியவர்கள் மேலும் ஓராண்டு காலம் கல்வி பயிலும்படியான திட்டத்தை இவ்வாண்டுமுதல் அமலாக்கிவிட்டதாக வைத்துக் கொள்வோம். இத் திட்டம் தொடர்ந்து நடைபெறும்போது, பத்தாண்டுகளுக்குப் பின்னர் பார்த்தால், தொழிலாளர்களில் நான்கில் ஒருவர்தான் இப் புதிய கல்வித் திட்டத்தினால் பயனடைந்திருப்பர்; அப்போது, அந்நிலையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நட்டம் (பள்ளியில் கூடுதலாக ஓராண்டு காலம் படிக்க நேர்ந்ததால் தொழிலாளரின் எண்ணிக்கை குறைந்திருக்குமாதலால் ஏற்பட்டிருக்கும் நட்டம்) பொருளாதாரப் பலன்களைக் காட்டிலும் அதிகமாகத்தானிருக்கும். 1990ஆம் ஆண்டில் பார்த்தால், தொழிலாளர்களில் பாதிப் பேர் மட்டுமே இப் புதிய கல்வித் திட்டத்தினால் பயனடைந்திருப்பர்; அந்நிலையில் உற்பத்தித் திறன் அதிகரிப்பால் கிடைக்கக்கூடிய பலன் தொழிலாளர்களின் எண்ணிக்கைக் குறைவால் ஏற்பட்ட நட்டத்தைவிட அதிகமாகியிருக்கும். 2025ஆம் ஆண்டில்தான் தொழிலாளர் அனைவருமே இப் புதுக் கல்வித் திட்டத்தினால் பயன் பெற்றவர்களாயிருப்பர். டெனிசன் அவர்களின் கெடுபிடியான மதிப்பீட்

டின்படி பார்த்தால், 2025ஆம் ஆண்டில்தான் இப் புதிய கல்வித் திட்டத்தின் விளைவாக பொருளாதார வளர்ச்சி வீதம் 0·1 சதவீதம் அதிகரிக்கும்.

மேற்கூறிய விளக்கத்திலிருந்து, கல்விக்கு அதிகமாகச் செலவு செய்வது நல்லதல்ல என்று எவரும் நினைக்க வேண்டாம். பல்வேறு காரியங்களைப் பொருத்தவரை, நாம் நீண்ட காலக் கண்ணோட்டத்தில்தான் முடிவு செய்ய வேண்டியுள்ளது. சொல்லப்போனால் நமது இன்றைய வாழ்க்கைத் தரத்திற்கு நமது பெற்றோர்களும் முன்னோர்களும் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கென்று செலவிட்ட சாதனங்களும் ஓரளவிற்குக் காரணமாகும். எனவே, வருங்கால வளர்ச்சிக்கென்று கட்டப்படும் ஒரு புதிய ஆலையோ நீர்த் தேக்கமோ எப்படி முதலீடாக உள்ளதோ அதுபோலத்தான் கல்விச் செலவும் ஒரு முதலீடாகும். தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் ஏற்படும் புதிய சாதனங்களின் பலனைச் சமுதாயத்திலுள்ள மக்கள் அனைவரும் பயன்கொள்ள வேண்டுமாயின், தொழிலாளர் அனைவருமே புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றல் உள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் சற்று முன்னர் குறிப்பிட்டதுபோல், வளர்ச்சி வீதம் 0·1 சதவீதமாக அதிகரித்தால் கூட அது பயனுள்ள வளர்ச்சிதான். இருப்பினும், பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதற்கு இன்றைய சாதனங்களை நுகர்விற்காகச் செலவிடாமல், மூலதனப் பொருள்களைப் படைப்பதற்காகச் செலவிட வேண்டியுள்ளது என்பதை மறந்துவிடக் கூடாது. பொருளாதார வளர்ச்சியைத் துரிதமாகப் பெறுவது எளிதல்ல; அப்படி அடையும்போது அதனால் ஏற்படும் செலவுகளையும் பெறக்கூடிய பலன்களையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்; அப்போதுதான் வளர்ச்சியைப் பெறுவதற்கு எவ்விதமான கொள்கைகளைக் கடைப்பிடிப்பது சிறந்தது என்பதை அறிந்துகொள்ள முடியும்.

வளர்ச்சியைப் பாதிக்கும் பிற காரணிகள்

துரிதமான பொருளாதார வளர்ச்சிக்கு அரசாங்கமும் தனியார் துறையினரும் கடைப்பிடிக்கும் முறையான முதலீட்டுக் கொள்கையும் கல்விக் கொள்கையும்தான் காரணமென்று எவரும் நினைக்க வேண்டாம்; வேறு சில கொள்கைகளும் வளர்ச்சிக்கு உதவக்கூடும்.

முதலில் மிக முக்கியமானதொன்றை மீண்டும் நினைவு படுத்திக் கொள்வது நல்லது. அதாவது, உற்பத்திச் சக்திகளை

மட்டும் பெருமளவில் விரிவாக்கிவிட்டு, பொருள்களுக்கும் பணிகளுக்குமுள்ள தேவையை அதிகரிக்காமல் விட்டுவிட்டால் வேலையின்மைதான் பெருகும்; அதோடு, எச்சமான உற்பத்தி சக்தியும் தோன்றிவிடும். அதனால் பொருளாதாரத் தேக்க நிலை ஏற்பட்டு, பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய ஊக்கமே தளர்ச்சியடைந்துவிடும். உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்ய முடியாத காரணத்தால் நிறுவனங்கள் வேலையின்றி இருக்கும்போது, தொழிலதிபர்கள் தம் உற்பத்தித் திறனை அதிகரிக்க மாட்டார்கள். வேலையின்மை பெருகிவிட்டால், இயந்திர சாதனங்களைத் தொழிலாளர் வெறுக்க முற்படுவர்; அதோடு மட்டுமன்றி, வேலை உத்திரவாதம் கேட்டுப் போராடுவர்; வேலை நிபந்தனைகளை எதிர்ப்பர்; உண்ணாவிரதம் தொடங்குவர். இது போன்ற நிலையில் தொழிலாளரின் உற்பத்தித் திறனும் குறைந்து விடும். எனவே, கொள்கைகளின் வாயிலாக உற்பத்தி சக்திகளைத் துரிதமாக உயர்த்த முற்படும்போது, தேவையையும் அந்த அளவுக்கு விரிவாக்குவதற்கான கொள்கைகளையும் அமலாக்க வேண்டும்; இன்றேல் வெறும் வளர்ச்சிக் கொள்கைகளினால் வளர்ச்சியே நின்றுவிடக்கூடும்.

அரசாங்கக் கொள்கைகளின் வாயிலாக உற்பத்திச் சாதனங்களை இடம் பெயரச் செய்ய முடியும். இது சம்பந்தமான கொள்கைகள் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதாகவும் இருக்கலாம் அல்லது வளர்ச்சியைத் தடை செய்வதாகவும் இருக்கலாம். மாறுதல்தான் வளர்ச்சியின் உயிர் நாடி. எனவே; தொழிலாளர்களும் மூலதனமும் இருக்கின்ற இடத்தையோ தொழிலையோ விட்டுப் பெயர முடியாமல் செய்துவிட்டால், காலப் போக்கில் வளர்ச்சி தடைப்பட்டுவிடும். சான்றாக, ஆண்டு தோறும் அளவுக்கு மிஞ்சி விளைச்சலைத் தரக்கூடிய வகையிலும், ஏனைய தொழில்களில் பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடிய சாதனங்களை விவசாயத்திலேயே பயன்படுமாறு இறுக்கிக் கொள்ளும் முறையிலும் விவசாயப் பண்ணைக் கொள்கைகள் இருந்தால் பொருளாதார வளர்ச்சி குன்றிவிடும்; அதோடு மட்டுமன்றி, விவசாயிகளைப் பாதுகாப்பதற்கென்று உருவாக்கப்பட்டுள்ள இக் கொள்கைகள், சில காலம் கழித்து விவசாயிகளுக்கே கேடு விளைவிக்கக்கூடும். சுங்க வரிக் கொள்கைகளும் (tariff policy) அப்படித்தான். திறனற்ற தொழில்களுக்குப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பாதுகாப்புக் கொடுப்பதும், அதன் வழியாக ஆக்கத் திறனற்ற தொழில்களில் தொழிலாளர்களையும் மூலதனத்தையும் நிரந்தரமாக இருக்கும்படிச் செய்வதும் வளர்ச்சியைத் தடை செய்துவிடுகின்றன. இன்னும் இதுபோன்ற பல அரசாங்கக்

கொள்கைகளும் வளர்ச்சிக்குக் கேடு விளைவிக்கின்றன. இரயில், சாலை, கப்பல் ஆகிய போக்கு வரத்துக்களிடையே ஏற்படும் கடும் போட்டியைத் தவிர்ப்பதற்கென்று, குறைந்த அளவு கட்டணங்களை ஒழுங்குபடுத்தும் அரசாங்கக் கொள்கைகளும், தரங்கெட்ட போக்குவரத்துச் சாதனங்களுக்கு வேண்டிய சரக்குகளுக்கு உத்திரவாதம் அளிக்கும் கொள்கைகளும் இதற்குச் சில சான்றுகளாகும்.

இவ்வாறு கூறும்போது, எதிர்பாராத வகையில் பொருளாதார மாறுதல்கள் ஏற்பட்டு, நிறுவனங்களோ தொழிலாளிகளோ பாதிக்கப்படும்போதுகூட, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடாதென்று பொருளல்ல. எல்லாவற்றையும் விடப் பொருளாதார வளர்ச்சிதான் முக்கியமானதென்று எந்தப் பொருளாதாரத் தத்துவமும் கூறுவதில்லை. ஆனால், திறன்மிக்க புதுமையான தொழில்களும் தொழில் நுணுக்கங்களும் ஏற்படுவது நாட்டிற்கே நல்லதுதான்: எனினும், இதனால் பழையன பாதிக்கப்பட்டு விடுகின்றன. வேலையிழந்த தொழிலாளர்கள் அவதிப்பட வேண்டியுள்ளது; அதோடு, வழக்கிறந்த (obsolete) மூலதனத்தில் தம் சேமிப்பையெல்லாம் முடக்கி வைத்துவிட்ட மக்களும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, புதியன தோன்றும்போது பலனடையும் சமுதாயம்தான் பழையன பாதிக்கப்படுவதிலும் ஓரளவு பொறுப்பேற்க வேண்டும். வேலையிழந்தோர் ஈட்டுப்படித் திட்டம், தொழிலாளர் மறுபயிற்சித் திட்டங்கள், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அரசாங்க உதவித் திட்டம் ஆகியவற்றின் வழியாக பொருளாதார வளர்ச்சியினால் தோன்றும் கேடுகளை மட்டுப்படுத்தக் கூடும். பொதுவாகக் கூறின், மாறுதல்களைத் தடுக்கும் 'பாதுகாப்புக்' கொள்கைகளைக் காட்டிலும், மாறுதல்களுக்கேற்ப தொழிலாளர்களையும் தொழிலதிபர்களையும் இணக்கம் செய்யக்கூடிய கொள்கைகள்தான் பொருளாதார வளர்ச்சிக்கும் சமுதாய நியதிக்கும் சிறந்தனவாகும்.

எண்ணற்ற மக்களும் தொழில் நிறுவனங்களும் தனித்தனியாகத் தீர்மானம் செய்யும் சேமிப்பு, முதலீடு பற்றிய முடிவுகள், புதியன கண்டுபிடிக்கும் ஆற்றல், நட்டத்தையும் தாங்கிக் கொள்ளக் கூடிய உறுதி ஆகியவைதான் பெரும்பாலும் பொருளாதார வளர்ச்சி வீதத்தை நிர்ணயம் செய்வனவாகும். எனினும், தனிப்பட்டவர்கள் மேற்கொள்ளும் இவ்வகையான நடவடிக்கைகளின் பலன்களை அரசாங்கத்தின் கொள்கைகளாலும் உருவாக்க முடியும். ஆனால், ஒன்றுமே இல்லாத நிலையில் வளர்ச்சிக்கு

வேண்டிய பழக்க வழக்கங்களையும் மனப்பான்மைகளையும் அரசாங்கக் கொள்கைகளால் உருவாக்கிவிட முடியாது. பொருளாதார வளர்ச்சி வாய்ப்பினை ஏற்படுத்தக்கூடிய சூத்திரம் ஏன் பொருளாதாரத்தில் கிடையாது. பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகள் ஏன் பொருளாதாரப் பிரச்சினைகளாக மட்டும் இருப்பதில்லை என்பதற்கு இதுதான் காரணமாகும்.

வளர்ச்சியும் தொழில் சுழற்சியும்
(Growth and Business Cycles)

நாட்டின் முழுத்திறன் அளவுக்கு உற்பத்தி நடைபெறும் போது, அவ்வுற்பத்தியால் உருவாக்கப்படும் வருமானம் அனைத்தும் ஒன்றில் நுகர்வுப் பொருள்களிலோ அல்லது முதலீட்டுப் பொருள்களிலோ செலவிடப்பட்டுவிடுமாயின், (நமது விளக்கம் எளிமையானதாக இருக்கட்டும் என்பதற்காக அரசாங்கச் செலவீட்டை இங்கு குறிப்பிடவில்லை) முழுத்திறன் உற்பத்தி அளவுக்குச் சமமாக நடைமுறை உற்பத்தி செயல்பட முற்படும் என்பதை 3, 4 ஆம் அதிகாரங்களில் வலியுறுத்தினோம். வேறுவிதமாகக் கூறின், நாட்டின் மொத்த வருமானத்தில் (GNI) நுகர்வதற்காகச் செலவிடப்படாத வருமானம் அனைத்தும் முதலீட்டிற்காகச் செலவிடப்பட வேண்டும்; அப்போதுதான் முழுத்திறனுக்கு உற்பத்தியானதனைத்தும் விற்கப்படும் அளவிற்கு மொத்தச் செலவீடு இருக்கும். எனவே, நாட்டு வருமானத்தில் எவ்வளவு சேமிக்கப்படுகிறதோ, அவ்வளவும் முதலீட்டுப் பொருள்களில் செலவிடப்பட்டால்தான் வேலையின்மையையும் பொருளாதாரப் பின்னிறக்கத்தையும் தவிர்க்கமுடியும். ஆனால் இவ்வதிகாரத்திலோ முதலீடு செய்வதால் உற்பத்தித்திறன் அதிகரிக்கின்றது என்று பார்த்துள்ளோம். இவ்வாண்டில் செய்யும் முதலீடு உற்பத்தித் திறனையும் தொழில்களின் ஆக்க சக்தியையும் அதிகரிப்பதன் வாயிலாக, அடுத்த ஆண்டின் முழுத்திறன் உற்பத்தி அளவை உயர்த்தி விடுகிறது. எனவே, அடுத்த ஆண்டில் வேலையின்மையும் எச்ச சக்தியும் தோன்றிவிடாமல் இருக்கவேண்டுமாயின், மொத்தச் செலவீடு இவ்வாண்டைக் காட்டிலும் அதிகமாக இருக்கவேண்டும். அப்படியானால், அதற்கடுத்த ஆண்டில் முதலீட்டுச் செலவும் உற்பத்தித் திறனும் மேலும் உயர்வாயிருக்க வேண்டும். இவ்வாறாக, மொத்தச் செலவீடும் உற்பத்தியும் ஆண்டுக்காண்டு உயர்ந்துகொண்டே இருக்கவேண்டியுள்ளது.

இப்படி நடைபெறும் முறையைத்தான் 6–4 படம் காட்டுகிறது. சான்றாக, முதல் ஆண்டில் நாட்டின் முழுத்திறன் உற்பத்தி (GNP = GNI) குறிப்பிட்டதோர் அளவில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது, மொத்த உற்பத்தியால் உருவாக்கப்பட்ட வருமானத்தில் ஒரு பகுதி நுகர்வுப் பொருள்களில் செலவிடப்படாமல் சேமிக்கப்படுகிறது. நாட்டின் உற்பத்தி அனைத்தும் விற்கப்படக்கூடிய அளவுக்குத் தொகு தேவை அதிகமாயிருக்க வேண்டுமாயின், புதிய இயந்திர சாதனங்கள், தளவாடங்கள், வீடுகள் போன்றனவற்றில் செலவிடப்படும் முதலீட்டுச் செலவு சேமிப்பின் அளவுக்குச் சரிசமமாக இருக்கவேண்டும். ஆனால், இப்புதிய முதலீட்டுச் செலவால் நாட்டின் உற்பத்தித் திறன் உயர்ந்துவிடுகிறது; முதலாண்டில்



படம் 6-4 பொருளாதார வளர்ச்சியும் தொகு தேவைப் பிரச்சினையும்

இருந்ததைக் காட்டிலும் இரண்டாம் ஆண்டின் உற்பத்தித் திறன் அதிகமாகி விடுவதால், அதிகரித்துள்ள நாட்டு வருமானத்தில் சேமிப்பின் அளவும் அதிகரித்துவிடும்; எனவே, அதிகரித்துள்ள உற்பத்தித் திறன் அளவுக்குத் தொகு தேவை அதிகரிக்க வேண்டுமாயின், முதலீடு மேலும் உயரவேண்டும். இதன் விளைவாக, மூன்றாவது ஆண்டில் முழுத்திறன் உற்பத்தி மேலும் உயர்கிறது; அதைத் தொடர்ந்து மற்றவையும் உயர்ந்துவிடுகின்றன. இப்படியாக ஆண்டுதோறும் நடைபெறுகிறது. ஏதாவதோர் ஆண்டில் முதலீட்டுச் செலவோ நுகர்வுச் செலவோ அதிகரிக்காமல் இருந்துவிட்டால், நடைமுறை உற்பத்தி, முழுத் திறன் உற்பத்தி அளவைக் காட்டிலும் குறைந்துவிடும்; அப்போது, உற்பத்தித் திறன்

எச்சமாகி, முதலீடு செய்யும் ஆர்வம் தணிந்து, முதலீட்டின் அளவு சரிந்துவிடும். அவ்வாறு சரிந்துவிட்டால், நாட்டின் மொத்த உற்பத்தி (GNP) குறைந்துவிடும்; எவ்வளவு குறைந்துவிடும் என்பது பெருக்கியைப் பொருத்தது. இதிலிருந்து நாம் ஒரு முடிவுக்கு வரலாம். அதாவது, நாட்டின் மொத்த வருமானத்தில் சேமிப்பின் அளவு காலப் போக்கில் அதிகரிக்க வேண்டும் அல்லது குறைய வேண்டும்; அதிகரிக்காமலோ குறையாமலோ இருக்க முடியாது. எனவே, பொருளாதார நிலைபேறுக்கம் வேண்டுமாயின், அதிக அளவில் முதலீடு செய்யப்பட்டால் மட்டும் போதாது; சேமிப்பு அனைத்தும் முதலீட்டுச் செலவாக ஆகும் வகையில் முதலீடு அதிகரித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஆனால் முதலீடு ஏற்ற இறக்கமடையும் இயல்புடையது; எனவே, பொருளாதார நிலைபேறுக்கத்தை அடைவது அவ்வளவு எளிதல்ல. இவ்வாறாக, முதல் அதிகாரத்தில் பார்த்த முழு வட்டச் சுழலோட்டத்திற்கு நாம் இப்போதுதான் வருகின்றோம்—நமது நாட்டில் பொருளாதார வளர்ச்சியை உண்டு பண்ணும் அதே சக்திகள்தான் பொருளாதாரச் சீர்குலைவுக்கும் காரணமாகின்றன.

சேமிப்பு—முதலீடு நடைபெறும் விதம்தான் பொருளாதார வளர்ச்சியின் உயிர்நாடி; அதே சமயம், சேமிப்பு – முதலீடு நடைபெறும் முறைதான் பொருளாதாரச் சீர்குலைவுப் பிரச்சினையை சிக்கல் உடையதாக ஆக்கிவிடுகிறது; எனினும், வளர்ச்சி ஏற்படும்போது, கூடவே பொருளாதாரப் பின்னிறக்கமும் பெருமளவில் ஏற்பட்டுவிடும். அவ்வாறு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்று எவரும் எண்ணவேண்டாம். தற்போது நம் நாட்டில் பல்வேறு நிலைபேறுக்க சக்திகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை நான்காம் அதிகாரத்தில் சுட்டிக் காட்டினோம். மேலும், பொருளாதார சக்திகளைக் கட்டுப்படுத்தாமல் அப்படியே விட்டுவிட்டால்தான் மந்தம் ஏற்படலாம்; ஆனால், அரசாங்கம் சிறந்த நிதிக் கொள்கையையும் பணவாக்கக் கொள்கையையும் மேற்கொண்டு அச் சக்திகளைக் கட்டுப்படுத்தி, மந்தம் தோன்றிவிடாமல் தடுக்க முடியும் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. பொருளாதார வளர்ச்சி வேண்டுமா அல்லது பொருளாதார நிலைபேறுக்கம் வேண்டுமா என்ற பிரச்சினை இனிமேல் நமக்குக் கிடையாது. இரண்டையுமே நாம் அடைய முடியும். அப்படி அடைய முடியவில்லை என்றால் நம் தவறுதான்; ஏனெனில் நம்மால் கட்டுப்படுத்த முடியாத பொருளாதார சக்திகளே கிடையாது.

சுருக்கம்

ஒரு நாடு தன் முழுத் திறனுக்குக் குறைவாக உற்பத்தி செய்யும்போது, உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தொகு தேவையை விரிவுபடுத்த வேண்டும். எனினும், நீண்ட காலத் திற்குப் பொருளாதார வளர்ச்சி நடைபெற வேண்டுமாயின், அதன் (முழுத்) திறன் உயர வேண்டும். முழுத் திறன் உற்பத்தி எந்த வீதத்தில் அதிகரிக்குமென்பது தொழிலாளர்கள் செல விடும் உழைப்பையும் அவர்களின் உற்பத்தித் திறனையும் சார்ந்த தாகும்.

தொழிலாளர் செலவிடும் உழைப்பின் அளவு மூன்று முக்கிய காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது. அவை முறையே: (1) வேலை செய்யக்கூடிய வயது வந்த மக்களின் எண்ணிக்கை; (2) அவர்களில் உழைக்கின்றவர்களின் விகிதம்; (3) சராசரி வேலை நேரம். வேலை செய்யும் தொழிலாளர்களில் குறிப்பிட்ட வயதையுடையோர் அல்லது ஆண் பெண் இனத்தவர் எத்தனை சதவீதம் என்பது அடிக்கடி மாறுகின்றது; எனினும், மக்கள் தொகையில் எத்தனை சதவீதம் பேர் வேலை செய்கின்றனர் என்பது கடந்த 50 ஆண்டுகளாக மாறுமல் அப்படியேதான் இருந்து வருகிறது. தொழிலாளர்கள் எந்த வயதில் வேலையில் சேருகின்றனர் என்பதைப் பொறுத்து அவர்களின் எண்ணிக்கை மாறி வந்துள்ளது; வருங்காலத்திலும் மாறக்கூடும். கடந்த இரண்டாம் உலகப் போர் முடிந்தவுடன் பிறப்பு வீதம் அதிகமா யிருந்ததால் 1965ஆம் ஆண்டிற்குப் பின்னர், தொழிலாளரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் 1·4 மில்லியனைக் கூடுதலாகி வந்துள்ளது. வேலை செய்யும் நேரமோ படிப்படியாகக் குறைந்து வருகிறது; சான்றாக, 50 ஆண்டுகளுக்கு முன் வாரத்திற்கு 55 மணி நேரமென்று தொழிலாளர் வேலை செய்து வந்தனர்; ஆனால் இன்றோ வாரத்திற்கு 40 மணி நேரம்தான் வேலை செய் கின்றனர். விடுமுறை நாட்கள் அதிகரித்துக் கொண்டே வருவ தால் வேலை நேரம் மேலும் குறையக்கூடும்.

நீண்ட காலத்தில், தொழிலாளரின் உற்பத்தித் திறன் எவ்வளவு அதிகரிக்கின்றது என்பதைப் பொருத்துத்தான் மக்களின் வாழ்க்கைத் தரம் அமைகிறது. எனவே, உண்மையான தலா வருமானம் உயர வேண்டுமாயின் உற்பத்தித் திறன் அதிகரிக்க வேண்டும். அமெரிக்காவில் 1890ஆம் ஆண்டிலிருந்து தொழிலாளரின் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு சராசரி 2·2 சதவீதம் உயர்ந்து வந்துள்ளது. மேலும் அதிக வீதத்தில்

உயரக்கூடுமென்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன; எனினும் இதைப் பற்றித் திட்டவட்டமாக ஒன்றும் கூற இயலாது.

உற்பத்தித் திறன் எப்படி நிர்ணயமாகிறது என்பதை உற்பத்திச் சார்பின் வழியாக விளக்குவதுதான் நல்லது. தொழில்நுட்ப நிலையும், தொழிலாளரின் திறமையும் மாறும விருக்க, தலா ஒவ்வொரு தொழிலாளியும் பயன்படுத்தும் மூலதனத்திற்கும் நாட்டின் உற்பத்திக்குமுள்ள தொடர்புதான் உற்பத்திச் சார்பு எனப்படுகிறது. ஒவ்வொரு தொழிலாளிக்கும் இருக்கின்ற மூலதனம் அதிகரிக்க அதிகரிக்க, உற்பத்தித் திறனும் உயர்கிறது. தொழிலாளரின் திறமையும், தொழில்நுட்பமும் மாறுமல் அப்படியே இருக்கும்போது; அவர்கள் பயன்படுத்தும் சராசரி மூலதனம் மட்டும் அதிகரித்துக் கொண்டே போனால் உற்பத்தித் திறனும் அதிகரிக்கின்றது; எனினும் அதிகரிக்கும் வீதம் குறைந்து கொண்டே செல்கிறது. வரலாற்று வாயிலாகப் பார்க்கும்போது, உற்பத்தித் திறன் இரண்டு வகையான மூல சக்திகளால் உயர்ந்து வந்துள்ளதைக் காணலாம்: (1) தலா ஒவ்வொரு தொழிலாளியின் மூலதனம் அதிகரிக்கும்போது உற்பத்திச் சார்புக் கோட்டில் மென்மேலும் மேலே நகர்வது; (2) உற்பத்திச் சார்புக் கோடே மேலே நகர்ந்துவிடுவது. இவ்வாறு நகர்வதற்குப் பல காரணங்கள் இருந்தபோதிலும், விஞ்ஞான வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம், தொழிலாளரின் கல்வித் தகுதி முன்னேற்றம் ஆகிய காரணங்கள்தான் மிக முக்கியமானவை ஆகும்.

கடந்த 100 ஆண்டுகளில் அமெரிக்க நாட்டில் தொழிலாளரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதைக் காட்டிலும் மூலதன இருப்பு விரைவாகக் கூடியுள்ளது. தேய்மானமடையும் இயந்திரச் சாதனங்களையும் தளவாடங்களையும் ஈடு செய்யும் அளவுக்கு மட்டுமன்றி, தொழிலாளரின் எண்ணிக்கை அதிகரித்து வந்தபோதிலும், தலா ஒவ்வொரு தொழிலாளியும் பயன்படுத்துகின்ற மூலதனம் கூடுதலாகக்கூடிய வகையிலும் போதுமான அளவிற்கு முதலீடு செய்யப்பட்டு வருகிறது. தலா ஒவ்வொரு தொழிலாளிக்குமுள்ள மூலதனம் முதல் உலகப் போருக்கு முன்புதான் அதிக வீதத்தில் அதிகரித்தது; அதன் பின்னர் அதன் வீதம் குறைந்துவிட்டது. எனினும், அதனால் தொழிலாளரின் உற்பத்தித் திறன் குறைந்து விடவில்லை; மாறாக, அது அதிகரித்துக் கொண்டுதான் வந்துள்ளது.

தலா ஒவ்வொரு தொழிலாளிக்குமுள்ள மூலதனம் அதிகரித்துள்ளதால் மட்டுமே உற்பத்தித் திறன் உயர்ந்துள்ளது என்று

(அதாவது, இருக்கின்ற உற்பத்தி சார்பிலேயே மேல் நோக்கி நகர்வது) எண்ணிவிடக் கூடாது. விஞ்ஞான வளர்ச்சி, தொழில் நுட்ப முன்னேற்றம், தொழிலாளரின் தரமும் கல்வித் தகுதியும் மேம்படல் ஆகியவற்றினாலும் உற்பத்தித் திறன் உயர்ந்துள்ளது (அதாவது, உற்பத்திச் சார்பு மேல் நோக்கி நகர்ந்துள்ளது). விஞ்ஞான வளர்ச்சியினாலும் தொழில்நுட்ப முன்னேற்றத் தினாலும் தொழிலாளர்களுக்கு வேண்டிய மூலதனம் அப்படியே அதிகரித்துள்ளது என்று மட்டும் நினைக்கக்கூடாது; மாறாக, மேலும் அதிக உற்பத்தித் திறன் கொண்ட புது வகையான மூலதனமும் அதிகரித்துள்ளது. இதனால் உற்பத்தி செய்யும் முறைகள் சிக்கலானவைகளாக ஆகியுள்ளன; எனினும், கடந்த 100 ஆண்டுகளாகத் தொழிலாளரின் கல்வித் தரம் உயர்ந்துள்ள தால் புதிய உற்பத்தி முறைக்கேற்பத் தங்களைப் பக்குவப்படுத்தி யும் வந்துள்ளனர். உற்பத்தித் திறன் உயர்விற்கு கல்வியும் முக்கியமான காரணமாகும் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.

முறையான கொள்கைகளைக் கடைப்பிடிப்பதன் வழியாகவும் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிக்க முடியும். தலா ஒவ்வொரு தொழிலாளிக்கும் வேண்டிய மூலதனத்தைத் துரித மாக அதிகரித்தால் உற்பத்தித் திறனும் வேகமாக வளரக் கூடும். உசிதமான வரிக்கொள்கை, பண்வாக்கக் கொள்கை ஆகியவற்றைத் திறமையாகக் கடைப்பிடித்து இக் குறிக்கோளை அடையக்கூடும். எனினும், வேலை நிறைவு இருப்பதாக அனு மானித்துக் கொண்டால், முதலீட்டை ஓரளவு அதிகரிக்கும் போது, நுகர்வின் அளவு (அல்லது நுகர்வுச் செலவு போன்ற அரசாங்கச் செலவு) குறைந்து விடுகிறது. எனவே, முதலீட்டை ஊக்குவிப்பதற்காக வரிகளைக் குறைக்கும்போது, நுகர்வுப் பொருள்களின் மீதுள்ள வரிகளை உயர்த்த வேண்டும், அல்லது முதலீட்டுச் செலவல்லாத அரசாங்கச் செலவுகளைக் குறைக்க வேண்டும். அதேபோல், கல்வி, ஆராய்ச்சி போன்றனவற்றின் செலவுகளை அதிகரிக்கும்போது, நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியில் பயன்பட்டிருக்கக் கூடிய சாதனங்கள் முதலீட்டுப் பொருள்களின் உற்பத்திக்காகப் பயன்பட்டு விடுகின்றன. வேறு விதமாகக் கூறின், எவ்விதச் செலவுமின்றி பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கமுடியாது; வளர்ச்சி பெறுவதற்கு எவ்வளவோ செலவாகின்றது.

மேற்கண்ட விளக்கத்தைக் கொண்டு பொருளாதார வளர்ச்சி வீதத்தை உயர்த்த வேண்டுமென்று முடிவு செய்வது

நல்லதல்ல என்று எவரும் எண்ணக் கூடாது. ஏனெனில், வளர்ச்சி வீதம் மிகச் சிறிதளவு உயர்ந்தால்கூட, அவ்வீதம் கூடிக்கொண்டே போய் பல ஆண்டுகளுக்குப் பின்னர் நாட்டின் மொத்த உற்பத்தியைக் கணிசமான அளவு அதிகரிக்கக்கூடும். நமது பெற்றோர்களும் முன்னோர்களும் வரையறுக்கப்பட்ட அளவில் தம்மிடமிருந்த சாதனங்களை வளர்ச்சியைத் தூண்டக் கூடிய வகையில் செலவிடாமல் இருந்திருந்தால் நமது வாழ்க்கைத் தரம் இந்த அளவுக்கு உயர்ந்திருக்க முடியாது. எனவே, நாம் கூற விரும்புவதெல்லாம் இதுதான்; அதாவது, வளர்ச்சி வீதத்தை அதிகரிப்பது எளிதான காரியமல்ல. எனவே, வளர்ச்சி வீதத்தை அதிகரிப்பதற்கென்று அரசாங்கக் கொள்கைகளை வகுக்கும்போது, அவற்றால் ஏற்படக்கூடிய பலன்களையும் செலவுகளையும் எடைபோட்டுப் பார்ப்பது அவசியம்.

பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினை வேறு, பொருளாதார நிலைபேறுக்கப் பிரச்சினை வேறு என்று நினைக்கக்கூடாது. வேலையின்மையை ஒழித்துக்கட்ட வேண்டுமாயின், நடைமுறையிலுள்ள உற்பத்தி முழுத்திறன் உற்பத்திக்குச் சமமாகும்படி செய்ய வேண்டும். அவ்வாறு செய்யவேண்டுமாயின், வேலை நிறைவின் போது உருவாக்கப்படும் நாட்டு வருமானத்தில் எவ்வளவு சேமிக்கப்படுகின்றதோ அவ்வளவையும் முதலீடு செய்ய வேண்டும். ஆனால், அவ்வாறு முதலீடு செய்யும்போது, நாட்டின் உற்பத்தித் திறன் கூடிவிடுகிறது. எனவே, இவ்வாண்டில் வேலை நிறைவை நாம் அடையும்போது, அடுத்த ஆண்டின் முழுத் திறன் உற்பத்தி அளவு அதிகரித்துவிடுகிறது; அவ்வாறு உற்பத்தித் திறன் அதிகரித்துவிடும்போது, அந்த அளவிற்குச் சமமாக தொகு தேவையை விரிவுபடுத்த, மேலும் அதிகமாக முதலீடு செய்யவேண்டியுள்ளது. இவ்வாறுக, வேலை நிறைவுள்ள நாடு வளர்ச்சியுள்ள நாடாகவும் இருக்கமுடியும் என்பதை நாம் உணர வேண்டும்.

ஒரு நாட்டில் வருமானம் அனைத்தும் அப்படியே நுகர்விற்காகச் செலவிடப்படுமாயின், அந்நாட்டில் சேமிப்பு இராது; முதலீடும் இராது; அப்படியானால் பொருளாதார நிலைபேறுக்கப் பிரச்சினையும் பெரிய பிரச்சினையாக இராது. ஆனால், பொருளாதார வளர்ச்சி சிறிதளவும் ஏற்படாது. வளர்ச்சி ஏற்பட வேண்டுமாயின், நாட்டின் வருமானத்தில் ஒரு பகுதி சேமிக்கப்பட்டு, மூலதன இருப்பை அதிகரிக்கும் வகையில் முதலீடு செய்யப்பட வேண்டும். சேமிக்கும் பழக்க வழக்கம்

உருவாக்கப்பட்டு விட்டால் பொருளாதார உலைவும் ஓரளவிற்கு ஏற்படக் கூடும்.

பொருளாதார வளர்ச்சிக்கு உயிர்நாடிபோல் இருக்கும் சேமிப்பு – முதலீடு நடவடிக்கைகள்தான் பொருளாதார நிலையின்மைப் பிரச்சினைகளையும் உண்டாக்குகின்றன. எனினும், பொருளாதாரப் பின்னிறக்கத்தை உண்டாக்கக் கூடிய சக்திகளைச் சிறந்த நிதிக் கொள்கையால் அரசாங்கம் தகர்த்துவிட முடியும் என்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். எனவே, பொருளாதார வளர்ச்சி வேண்டுமா, அல்லது பொருளாதார நிலைபேறுக்கம் வேண்டுமா என்று தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் நமக்குக் கிடையாது. இரண்டையுமே நாம் பெற முடியும்.

மேலும் படிப்பதற்கு உரிய நூல்கள்

Richard and Nancy Ruggles ஆகியோரின் 'National Income Accounts and Income Analysis' (New York: McGraw – Hill Book Company, 1956) என்னும் நூலில் நாட்டு வருமான அளவீடு பற்றிய எல்லா விவரங்களையும் தெளிவாகக் காணலாம். அமெரிக்க அரசாங்க வணிகத் துறையினர் மூன்று மாதங்களுக்கொருமுறை 'Survey of Current Business' என்ற ஏட்டினை வெளியிடுகின்றனர்; இவற்றில் நாட்டு வருமானம் பற்றிய விவரங்கள் அவ்வப்போது தரப்படுகின்றன. மேலும், அமெரிக்க அரசாங்க வணிகத் துறையினர் வெளியிட்டுள்ள 'Income and Output' (Washington, D. C.: Government Printing Office, 1958) என்ற நூலும் முக்கியமானது; இதில் 1929ஆம் ஆண்டிற்குப் பின்னர் நாட்டின் மொத்த வருமானம், உற்பத்தி ஆகியவற்றின் புள்ளி விவரங்களோடு, அவற்றில் சேர்க்கப்படும் இனங்களின் புள்ளி விவரங்களும் தெளிவாகப் பட்டியல் வடிவில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் ஆண்டின் புள்ளி விவரங்களையும் காண விரும்புவோர் அந்தந்த ஆண்டின் ஜூலை மாதத்தில் வெளிவந்துள்ள 'Survey of Current Business' என்ற ஏடுகளைப் பார்க்கவும். அரசாங்க அச்சக அலுவலகம் ஆண்டுதோறும் ஜனவரியில் வெளியிடுகின்ற 'Economic Report of the President' என்ற ஆண்டறிக்கையை வெளியிடுகின்றது; இவ்வறிக்கையின் பிற்சேர்க்கையில் நாட்டு வருமானக் கணக்கின் முக்கியமான புள்ளி விவரங்களைக் காணலாம்.

J. M. Keynes அவர்களின் 'The General Theory of Employment, Interest and Money' என்னும் நூல்தான் நாட்டு வருமானக் கோட்பாட்டிற்குத் தலைசிறந்த நூலாகும்; எனினும், புதிய பொருளாதார மாணவர்கள் இந்நூலைப் படித்துப் புரிந்து கொள்வது மிகக் கடினம். எனவே, Alvin Hansen அவர்களின் 'Guide to Keynes' (New York: McGraw-Hill Book Company, 1962) என்னும் நூலை அவர்கள் படிப்பது நல்லது. இந் நூலில் கீன்ஸின் பொதுக் கோட்பாடு எளிமையாக விளக்கப் பட்டுள்ளது. நாட்டு வருமானக் கோட்பாட்டைப் பற்றி நடுத் தரமான நூல்களும் ஏராளமாக வெளிவந்துள்ளன. அவற்றில் முக்கியமானவை வருமாறு: Martin Bailey, 'National Income and the Price Level' (New York: McGraw-Hill Book Company, 1962); Barry Siegel, 'Aggregate Economics and Public Policy' (Homewood, Ill.: Richard D. Irwin, Inc., 1961). R.C.O. Mathews அவர்களின் 'The Business Cycle' (Chicago: University of Chicago Press, 1959) என்னும் நூல் மிக முக்கியமானதாகும்; இந் நூலில், பொருளாதார கடவடிக் கைகள் ஏற்ற இறக்கமடைவது நாட்டு வருமானக் கோட்பாட்டி லில் சிறந்த முறையில் விளக்கப்படுகிறது. Gardner Ackley அவர்களின் 'Macro Economic Theory' (New York: The Macmillan Company, 1961) என்னும் நூல் நாட்டு வரு மானத்தை நவீன முறையில் விளக்கமாகவும் தெளிவாகவும் ஆராய்கிறது.

பலவிதமான பணவீக்கங்களைப் பற்றியும் அவற்றின் இயல்பு களைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கு C. L. Schultze அவர் களின் 'Recent Inflation in the United States' என்னும் நூலை வாசிக்கவும் (Study paper No. 1. U.S. Congress, Joint Economic Committee, 'Study of Employment, Growth and Price Level,' 1959; முதல் அதிகாரம் சுருக்கமாக விளக்குகிறது). William Bowen அவர்களின் 'The Wage-Price Issue' (Princeton, N. J.: Princeton University Press, 1960) என்ற நூல் விலைவாசி களும் செலவீடும் ஒரே சமயத்தில் உயர்ந்துவிடும்போது, அரசாங்கம் கையாளக்கூடிய கொள்கை எவ்வளவு சிக்கல் நிறைந்ததாகி விடுகின்றது என்பதை ஆய்கிறது.

நவீனப் பொருளாதார நிறுவனம் (Foundations of Modern Economic Series) வெளியிட்டுள்ள 'Economic Development: Past and Present' என்ற நூலின் இரண்டாம் பதிப்பும் (Cliffs, N. J.: Prentice-Hall, Inc., 1967) முக்கியமான நூலாகும்;

இந் நூலின் ஆசிரியரான Richard Gill என்பவர் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாட்டின் ஆய்விற்கு நல்ல தொடக்க விளக்கம் தந்துள்ளார். அதோடு, இந் நூலில் 1 முதல் 4 அதிகாரங்கள் முடிய, தொழில் வளமிக்க நாடுகளின் வளர்ச்சிபற்றி ஆராயப் படுகிறது. Peter Gutmann அவர்களின் 'Economic Growth, An American Problem' (Englewood Gliffs, N. J.: Prentice-Hall, Inc.,1964) என்னும் நூலில் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியைப் பற்றிப் பல்வேறு அறிஞர்களின் கட்டுரைகளின் சாரத்தைக் காணலாம்; பொருளாதார வளர்ச்சி பற்றிய பிரச்சினை ஒவ்வொன்றையும் பற்றிய பலவிதமான கருத்துகளை இந் நூல் ஆய்கின்றது. Edmund Phelps அவர்கள் பதிப்பித்துள்ள 'The Goal of Economic Growth. (New York: W.W. Norton & Company, Inc., 1962) என்ற நூலும் இதைப் போன்றதுதான். அடுத்து, Edward Denison அவர்களின் 'The Sources of Economic Growth in the United States' (Committee for Economic Development, Supplementary paper No. 13, 1962) என்னும் நூலும் முக்கியமானது; பொருளாதார வளர்ச்சிக்கான மூல காரணங்கள் ஒவ்வொன்றும் எந்த அளவுக்கு முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதை இந் நூல் ஆராய்கின்றது.

அமெரிக்க நாட்டுப் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையான அம்சங்களையெல்லாம் சுருக்கமாகக் காணவேண்டுமாயின், Raymond Gold Smith அவர்களும் Solomon Fabricant அவர்களும் சேர்ந்து Joint Economic Committee யின் முன்னர் வாதித்துள்ள வாதங்களைப் பார்க்கவும் (Study of Employment, Growth and Price Levels, Hearing, Part II, 1959). நாட்டு வருமானத்தை அளவிட்ட முன்னோடிகளில் ஒருவரான Simon Kuznets அவர்களின் 'Six Lectures on Economic Growth' (New York: The Free Press, 1960) என்னும் நூலும் முக்கியமானதொன்று; தொழில் வளமிக்க நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் முக்கிய அம்சங்களை இந் நூல் ஆய்கிறது.

The Joint Economic Committee யின் அலுவலகத்தார் வெளியிட்டுள்ள 'Study of Employment, Growth and Price Levels' என்ற அறிக்கையும் முக்கியமானது; தொகுதி தொகுதியாக ஆயும் பொருளாதாரக் கோட்பாட்டின் பல்வேறு அம்சங்களை, அரசாங்கக் கொள்கைப் பிரச்சினைகளோடு பொருத்தி ஆராய்வதெப்படி என்பதற்கு இது சிறந்ததோர் எடுத்துக்

காட்டாக விளங்குகிறது. இது போன்ற இன்னும் பல எடுத்துக் காட்டுகள் வேண்டுமாயின், 'Economic Report of the President' என்னும் தலைப்பில் ஆண்டுதோறும் வெளிவரும் அறிக்கைகளை, குறிப்பாக 1962 ஜனவரியில் வெளிவந்த அறிக்கையைப் பார்க்க வும். Bert Hickman அவர்களின் 'Growth and Stability of the Postwar Economy' (Washington, D.C.: The Brookings Institution, 1960) நூலும் படிக்கவேண்டியதொன்று. நாட்டு வருமானக் கோட்பாட்டின் பிரயோகங்களை இந் நூல், குறிப்பாக இதன் மூன்றும் பகுதி சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. பிரிட்டன் நாட்டின் வருமான வளர்ச்சியைப் பற்றிய இவ்வகை ஆய்விற்கு J. C. R. Dow அவர்களின், 'The Management of the British Economy', 1945-60 (Cambridge, England: Cambridge University Press, 1964) என்ற நூலும் சிறந்ததோர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

கலைச்சொற்கள்

A

Accelerator	—	வேக வளர்ச்சி
Aggregate demand	—	தொகு தேவை
Aggregate supply	—	மொத்த அளிப்பு
Analysis	—	பகுத்தாய்வு
Appendix	—	பிற்சேர்க்கை
Artisan	—	கைவினைஞன்
Assumption	—	எடுகோள்
Average cost	—	சராசரிச் செலவு
Average propensity to consume	—	சராசரி நுகர்வு நாட்டம்
Average propensity to save	—	சராசரிச் சேமிப்பு நாட்டம்

B

Balanced growth	—	சரிசம வளர்ச்சி
Base year	—	ஆதார ஆண்டு
Birth rate	—	பிறப்பு வீதம்
Bonus	—	வெகுமதி
Budget	—	வரவு செலவுத் திட்டம்
Budget, deficit	—	பற்றுக்குறை வரவு செலவுத் திட்டம்
Business cycle	—	தொழிற் சகடம்
Business firm	—	தொழில் நிறுவனம்
Business saving	—	தொழில் சேமிப்பு

C

Capital	—	மூலதனம்
Capital deepening	—	மூலதனச் செறிவு
Capital, fixed	—	நிலைமுதல் பொருள்கள்

Capital goods	—	முதற்கருவிப் பொருள்கள்
Capital widening	—	மூலதன விரிவு
Cartels	—	கார்ட்டெல்கள்
Choice	—	தேர்வு
Compensation	—	நட்ட ஈடு
Consumption	—	நுகர்வு
Consumption function	—	நுகர்வுச் சார்பு
Consumption goods	—	நுகர்வுப் பொருள்கள்
Consumer's taste	—	நுகர்வோர் பற்றுதல்
Corporation	—	கார்ப்பரேஷன்
Cost of production	—	உற்பத்திச் செலவு
Cost of living	—	வாழ்க்கைச் செலவு
Credit system	—	கடன் முறை

D

Deflation	—	பணவாட்டம்
Deflationary gap	—	பணவாட்ட இடைவெளி
Demand	—	தேவை
Demand, aggregate	—	தொகு தேவை
Demand curve	—	தேவைக் கோடு
Depression	—	மந்தம்
Depreciation	—	தேய்மானம்
Devaluation	—	நாணய மதிப்பு குறைப்பு
Dimension	—	பரிமாணம்
Diminishing returns	—	குறைந்துசெல் விளைவு
Dividend	—	இலாப ஈவு
Durables	—	நீடித்துப் பயன் தரும் பொருள்கள்

E

Economics	—	சிக்கனங்கள்
Economic depression	—	பொருளாதார மந்தம்
Economic growth	—	பொருளாதார வளர்ச்சி
Economic instability	—	பொருளாதாரச் சீர்குலைவு
Economic principles	—	பொருளாதாரத் தத்துவங்கள்
Economic stability	—	பொருளாதார நிலைபேருக்கம்
Elastic demand	—	நெகிழ்ச்சியுள்ள தேவை
Elastic supply	—	நெகிழ்ச்சியுள்ள அளிப்பு
Employment	—	வேலை

Employment, full — வேலை நிறைவு
Equilibrium — சம நிலை
Equilibrium price — சம நிலை விலை
Equipment — தளவாடங்கள்
Excess capacity — எச்ச சக்தி
Exchange rate — நாணய மாற்று வீதம்
Excise tax — ஆயத் தீர்வை
Export — ஏற்றுமதி

F

Firm — நிறுவனம்
Fiscal Economics — நிதியியல் பொருளாதாரம்
Fiscal Policy — நிதிக் கொள்கை
Fixed capital — நிலைமுதல் பொருள்கள்
Fixed investment — நிலைத்த முதலீடு
Foreign trade — பிற நாட்டு வாணிபம்
Full employment — வேலை நிறைவு

G

Goods — பொருள்கள்
Gross National Income — நாட்டின் மொத்த வருமானம்
Gross National Product — நாட்டின் மொத்த உற்பத்தி

H

Horizontal axis — படுகிடை அச்சு
Hours of work — வேலை நேரம்
Hypothesis — கருதுகோள்

I

Income — வருமானம்
Income line — வருமானக் கோடு
Income, National — நாட்டு வருமானம்
Income, real — உண்மை வருமானம்
Index — குறியீட்டெண்
Index, consumer price — நுகர்வுப் பொருள் விலைக் குறியீட்டெண்

Index, wholesale price	—	மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண்
Index, price	—	விலைக் குறியீட்டெண்
Inequality of income	—	வருமான ஏற்றத் தாழ்வு
Inelastic demand	—	நெகிழ்ச்சியற்ற தேவை
Inelastic supply	—	நெகிழ்ச்சியற்ற அளிப்பு
Inflation	—	பணவீக்கம்
Inflation, cost-push	—	செலவு உந்திய பணவீக்கம்
Inflationary gap	—	பணவீக்க இடைவெளி
Inflation, repressed	—	அமுக்கப்பட்ட பணவீக்கம்
Inflation, sectoral	—	தொழில்வாரிப் பணவீக்கம்
Innovation	—	புதுமை
Interest	—	வட்டி
Interest rate	—	வட்டி வீதம்
International economy	—	பன்னாட்டுப் பொருளாதாரம்
Inventories	—	இருப்புகள்
Inventories investment	—	இருப்பு முதலீடு
Investment	—	முதலீடு
Investment goods	—	முதலீட்டுப் பொருள்கள்

L

Labour	—	உழைப்பு
Labour economics	—	தொழிலாளர் பொருளாதாரம்
Labour saving machines	—	உழைப்புக்குறை இயந்திரங்கள்
Leisure	—	ஓய்வு

M

Machinery	—	இயந்திர சாதனங்கள்
Macro economics	—	பருவினப் பொருளாதாரம்
Managerial Economics	—	நிர்வாகப் பொருளாதாரம்
Marginal cost	—	இறுதிநிலைச் செலவு
Marginal opportunity cost	—	இறுதிநிலைப் பிறவாய்ப்புப் பெறுமானம்
Marginal propensity to consume	—	இறுதிநிலை நுகர்வு நாட்டம்
Marginal propensity to save	—	இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம்
Market	—	அங்காடி

Market economy — அங்காடிப் பொருளாதாரம்
Mass unemployment — பொது வேலையின்மை
Micro economics — நுண்ணினப் பொருளாதாரம்
Monetary policy — பணவாக்கக் கொள்கை
Money cost — சர்வாதீனம்
Monopoly — பணச் செலவு

N

National income — நாட்டு வருமானம்
National output — நாட்டின் உற்பத்தி
Negative — எதிர்க்கணியம்
Net income — நிகர வருமானம்
Net investment — நிகர முதலீடு
Net Profit — நிகர இலாபம்
Non-durables — நீடித்துப் பயன் தராப் பொருள்கள்
Normative economics — தரஞ்சூழ் பொருளாதாரம்

O

Obsolete — வழக்கிறந்த
Opportunity cost — பிற வாய்ப்புப் பெறுமானம்
Output — உற்பத்தி

P

Payment — செலுத்தல்
Pension — ஓய்வுகால ஊதியம்
Per-capita income — தலா வருமானம்
Perfect market — நிறைவு அங்காடி.
Positive — நேர்க்கணியம்
Positive economics — நேர்நிலைப் பொருளாதாரம்
Potential output — முழுத்திறன் உற்பத்தி
Price control — விலைக் கட்டுப்பாடு
Price indexes — விலைக் குறியீட்டெண்கள்
Price level — விலை மட்டம்
Price line — விலைக் கோடு
Price theory — விலைக் கோட்பாடு
Private enterprise economy — தனியார் முயற்சிப் பொருளாதாரம்

Productive capacity — உற்பத்தி சக்தி
Production possibility curve — உற்பத்திச் சாத்தியக் கோடு
Productive resources — உற்பத்திச் சாதனங்கள்
Profit — இலாபம்
Progressive tax — வளர்வீத வரி
Propensity to consume — நுகர்வு நாட்டம்
Propensity to save — சேமிப்பு நாட்டம்
Public works — பொதுப் பணிகள்

R

Rationing — பங்கீடு
Raw materials — மூலப் பொருள்கள்
Recession — பின்னிறக்கம்
Real income — உண்மை வருமானம்
Real economic cost — உண்மையான பொருளாதாரச் செலவு
Redistribution — மறு பகிர்வு
Replacement — ஈடு செய்தல்
Retail trade — சில்லரை வியாபாரம்
Resources — சாதனங்கள்

S

Sales tax — விற்பனை வரி
Saving — சேமிப்பு
Shares — பங்குகள்
Social security — சமூகப் பாதுகாப்பு
Specialization — சிறப்புத் தேர்ச்சி
Speculator — ஊக வணிகர்
Spiral — சுழலேற்றம்
Stability — நிலைபேறுக்கம்
Standard of living — வாழ்க்கைத்தரம்
Stabilizers — நிலைபேறுக்கிகள்
Subsidy — மானியம்
Substitutes — பதிலீட்டுப் பொருள்கள்
Supply — அளிப்பு
Supply curve — அளிப்புக் கோடு

T

Tariff policy — சுங்கவரிக் கொள்கை
Technology — தொழில்நுட்பம்

Technological progress — தொழில்நுட்ப முன்னேற்றம்
Tools of economic analysis — பொருளாதார ஆய்வுக் கருவிகள்
Trade union — தொழிலாளர் சங்கம்

U

Unemployment — வேலையின்மை
Unemployment, frictional — பிறழ்ச்சிக் காரண வேலையின்மை
Unemployment, full — பொது வேலையின்மை
Unemployment insurance — வேலைக் காப்பீட்டுத் திட்டம்

V

Value — மதிப்பு
Valuation — மதிப்பீடு
Vertical axis — செங்குத்தான அச்சு

W

Wealth tax — சொத்து வரி
Welfare — நலம்
Wholesale trade — மொத்த வியாபாரம்

பொருட்குறிப்பகராதி

அ

அமெரிக்க அரசாங்கத்திடமிருந்து கைமாறும் தொகை, 73, 79

அமெரிக்க அரசாங்கத்திடமிருந்து கைமாறும் தொகை அதிகரிப்பு, 143

அமெரிக்க அரசாங்கத்தின் கொள்முதல், 72—74

அமெரிக்க அரசாங்கச் செலவும் வரியும், 118—120

அமெரிக்க நாட்டு மொத்த வருமானத்தில் அரசாங்கத்திற்கு ஓடும் பங்கு, 78—79

அரசாங்கக் கொள்முதல், 120—121

அரசாங்கச் செலவு, வரி நிர்ணயம், 118—122

அரசாங்கத்தின் நிதிக்கொள்கை நிர்ணயம், 134—142

அனுபவம் வாய்ந்தோரின் நிருவாகத் திட்டம், 188

அளிப்பு – தேவை, 35—42

இ

இயந்திர சாதனங்களிலும் தளவாடங்களிலும் தொழில் முதலீடு, 153—169

இயற்பியல்களும் பொருளாதாரமும், 45—48

இருப்பு முதலீடு, 177—183

இருப்பு முதலீட்டிற்கான காரணங்கள், 177—179

இருப்பு முதலீட்டின் சீர்குலைவு, 179—183

இருப்பு முதலீட்டில் மாறுதல்கள், 179—183

இருமுறை கூட்டல், 59—61

இலாபம், 163—169

இலாபமும் முதலீடும், 163—169

இறக்குமதி (பிற நாட்டு வாணிபத்தைப் பார்க்கவும்)

இறுதிநிலைச் செலவு, 30—32

இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம், 96

இறுதிநிலை நுகர்வு நாட்டம், 96

உ

உருப்பெற்ற தொழில் முதலீடு, 68—69

உலகப் போருக்குப் பின்னர் வீடு கட்டுவதற்கான கடன், 188—190

உழைப்புச் செலவு, 240—243

உழைப்பாளர் புள்ளிவிவரக் கழகம், 197

உற்பத்திச் சாத்திய வளைகோடு, 27—34

உற்பத்திச் சாத்திய வளைகோட்டில் இறுதிநிலைச் செலவு, 30—34

உற்பத்திச் சாத்திய வளைகோட்டில் தேர்வு, 29—30

உற்பத்திச் சாத்திய வளைகோட்டில் பொருளாதார வளர்ச்சி, 34—35
உற்பத்திச் சாத்திய வளைகோட்டில் பிறவாய்ப்புப் பெறுமானம், 29—30
உற்பத்திச் சாத்திய வளைகோட்டில் வேலையின்மை, 34
உற்பத்திச் சார்பு, 245
உற்பத்தித் திறன் வளர்ச்சி, 244
உற்பத்தித் திறனில் வளர்ச்சி, 244—251

ஊ

ஊதியம்—வீலை சுழலேற்றம், 207, 209
ஊதியம்—வீலை மட்டங்கள், 207—209 (விலைக் குறியீட்டெண் களையும் பார்க்கவும்)

எ

எட்வர்ட் டெனிசன், 262—265, 269
எதிர்பார்க்கும் இலாபம், 163—164
எதிர்பார்க்கும் விற்பனை, 170—172

ஏ

ஏற்றுமதி, 74—76

ஒ

ஒட்டங்கள், 54

க

கடனும் குடியிருப்பு மனைகளும், 187
கடனும் குடியிருப்பு மனை முதலீடும், 187—190
கல்வியும் தொழிலாளர் திறனும், 258—261
கல்வி மேம்பாடு, 269—270
காலதாமதமும் நிறைவு பெருமையும், 172—173
கிடைக்கக்கூடிய கடன், 173—174
குடியிருப்புக் கட்டடங்களில் முதலீடு, 69
குடியிருப்பு மனை கட்டும் தொழிலில் நீண்ட சுழற்சிகள், 185, 186
குடியிருப்பு மனைகளின் தேவையின் ஏற்ற இறக்கங்கள், 184, 187
குடியிருப்பு மனைகளில் முதலீடு, 183—190
குடும்ப வருமானம், 144
குடும்பத்தின் சொந்த வருமானம், 79, 84
குடும்ப வருமான-நுகர்வுத் தொடர்பு, 95—101, 142—143
கேரி எஸ். பெக்கர், 261
கைமாறும் தொகை, 73, 79
கைமாறும் தொகை அதிகரிப்பு, 143

ச

சமநிலை, 35—42
சமநிலைக்கு ஓர் எண் கணித விளக்கம், 111—114
சமநிலையும் வேலை நிறைவும், 115
சமூக மதிப்புகளில் முரண்பாடு, 44—45
சராசரி சேமிப்பு நாட்டம், 96
சராசரி நுகர்வு நாட்டம், 96
சிற்றினப் பொருளாதாரம், 19—23
சிறு வீழ்ச்சி, 8, 9

சீர்குலைவு, 7—11
சுழல் ஓட்டம், 14—19
செலவு உந்திய பணவீக்கம், 215—217
செலவிடக்கூடிய சொந்த வருமானம், 84, 86
செலவீடு, 81—86
சைமன் குஸ்னெட்ஸ், 53 அடிக்குறிப்பு, 261
சொந்த வருமானம், 84

த

தன்னியக்கமுடைய நிலைப்பேறுக்கிகளை நிர்ணயிப்பன, 142—145
தன்னியக்கமுடைய நிலைப்பேறுக்கத் தன்மையுடைய வரிகள், 143
தரஞ்சூழ் பொருளாதாரம், 11—14
தராதர விலை, 205—207
தலா உருப்படி ஒன்றுக்கு வேண்டிய நிலைமுதல், 156—159
தலா நிலைமுதலின் உற்பத்தி, 157—159
தொகுதேவை, 92—104
தொகுதேவையை நிர்ணயிப்பன, 93—104
தொழில் அமைப்பு, 22
தொழில் இருப்பில் முதலீடு, 66—72, 177—183
தொழில் இருப்புகளின் மாறுதல்கள், 69—70
தொழில் இலாபம், 163—169
தொழில் இலாப எதிர்பார்ப்பு, 155—156
தொழில் சகடம், 273—274
தொழிலாளரின் திறன், 258—261
தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்களையும் தளவாடங்களையும் கொள்முதல் செய்தல், 153—169
தொழில்நுட்ப முன்னேற்றம், 254—258
தொழில் (நிறுவனங்களின்) மொத்தச் சேமிப்பு, 79, 80
தொழில் வாரியான பணவீக்கம், 217—219
தொழில் வேக வளர்ச்சி, 169—176
தொழிலமைப்பு மாறுதல் சார்ந்த வேலையின்மை, 8
தொழிலாளர் பொருளாதாரம், 22
தேர்வு, 23—27
தேவை-அளிப்பு, 35—42
தேவை உந்திய பணவீக்கம், 216

ந

நடப்பு இலாபம், 164
நடைமுறை உற்பத்தி, 232—233
நடைமுறை உற்பத்திக்கு இலக்கணம், 10
நாட்டின் முழுத்திறன் உற்பத்திக்கும் நடைமுறை உற்பத்திக்கும் உள்ள வேறுபாடு, 86—87
நாட்டின் நிகர உற்பத்தி, 83
நாட்டின் முழுத்திறன் உற்பத்தியை அளவிடல், 234—239
நாட்டின் மொத்த உற்பத்தி, 52—75, 87—91
நாட்டின் மொத்த உற்பத்தியும் இருமுறை கூட்டுவதைத் தவிர்த்தலும், 59—62
நாட்டின் மொத்த உற்பத்தியில் அரசாங்கக் கொள்முதல், 72—74

நாட்டின் மொத்த உற்பத்தியில் ஏற்றுமதி, 74—75
நாட்டின் மொத்த உற்பத்திச் சமநிலை, 106—114
நாட்டின் மொத்த உற்பத்தியை நிர்ணயிப்பன, 92—150
நாட்டின் மொத்த உற்பத்தி நிர்ணயத்திற்கு எளிமையான தோர் சான்று, 104—114
நாட்டின் மொத்த உற்பத்தியில் நுகர்வு, 65—66
நாட்டின் மொத்த உற்பத்தியின் மதிப்பீடு,56—64
நாட்டின் மொத்த உற்பத்தியில் முதலீடு, 66—72, 160—161
நாட்டின் மொத்த உற்பத்தியின் முக்கிய பயன்கள், 65—77
நாட்டின் மொத்த உற்பத்தியில் பெருக்கியின் நிர்ணயம், 122—134
நாட்டின் மொத்த உற்பத்தியின் மாறுதல்களைச் சரிக்கட்டல், 57—59
நாட்டின் மொத்த உற்பத்தியை நிர்ணயிக்கும் வகையில் அமெரிக்க அரசாங்கத்தின் நிதிக் கொள்கை, 134—142
நாட்டின் மொத்த வருமானம், 54—56, 75—91
நாட்டின் மொத்த வருமானமும், வரியும், 78
நாட்டின் மொத்த வருமான ஓட்டம், 78—81
நாட்டின் மொத்த வருமானமும் செலவீடும், 81—83
நாட்டின் மொத்த வருமானமும் மொத்தத் தொழில் சேமிப்பும், 143
நாட்டு உற்பத்தி (நாட்டின் மொத்த உற்பத்தியைப் பார்க்கவும்)
நாட்டு மொத்த உற்பத்தியும் மாறுத விலைகளும், 190
நாட்டு மொத்த உற்பத்தியும் விலைவாசி மாறுதலைச் சரிக்கட்டலும், 57—62
நாட்டின் மொத்த வருமானமும் தொகுதேவையும், 96
நாட்டு வருமான ஆய்வு, 20
நாட்டு வருமான - நுகர்வுத் தொடர்புகள், 101—102
நாட்டு வருமானம் (நாட்டின் மொத்த வருமானத்தையும் பார்க்கவும்)
நாட்டு வருமானம், 83
நாட்டு வருமானமும் நுகர்வும், 101—104
நிகர ஏற்றுமதி, 74—75
நிகர முதலீடு, 67—68
நிகர மூலதன இருப்பு, 253
நிதிக் கொள்கை, 134—142
நிதிக் கொள்கையும் பணவீக்கமும், 213—214
நிதிக் கொள்கையும் பணவாக்கக் கொள்கையும், 138—142
நிதிக் கொள்கையைப் பிரயோகிப்பதில் சிக்கல்கள், 136—138
நிலையான டாலர், 58, 88
நிறைவு பெறுமை, 172
நிறைவு பெறுத முதலீட்டுத் திட்டங்கள், 174—176
நுகர்வுச் சார்பு, 95—104
நுகர்வும் தொகுதேவையும், 95—102
நுகர்வுப் பொருள்கள், 37
நுகர்வுப் பொருள் விலைக் குறியீட்டெண், 195

நுகர்வும் நாட்டின் மொத்த உற்பத்தியும், 65—66
நுகர்வோர் வருமானம், 79
நுகர்வோருக்கு மொத்த வருமான ஒட்டம், 78—83
நேர்நிகர்ப் பொருளாதாரம், 11, —14

LI

பணமும் பணவீக்கமும், 209—212
பணவாக்கக் கொள்கை, 138—142
பணவாக்கக் கொள்கையும் நிதிக் கொள்கையும், 138—142
பணவியல், 23
பணவீக்கம், 9—10, 203—205, 209
பணவீக்கமும் அமெரிக்க அரசாங்க நிதிக் கொள்கையும், 213—214
பணவீக்கமும் நிதிக் கொள்கையும், 213—214
பணவீக்கமும் வரிகளும், 213—215
பருவினப் பொருளாதாரம், 19, —23
பன்னாட்டுப் பொருளாதாரம், 23
பிறநாட்டு வாணிபம், 74—75
பிறநாட்டு வாணிபமும் பணவீக்கமும், 212—213
பிறவாய்ப்புப் பெறுமானம், 25—27, 29—32
புதுமைகளும் முதலீடும், 153—155
பொது நிதியியல், 22
பொதுவிலை மட்டம், 194—195
பொதுவிலை மட்டமும் தராதர விலைகளும், 205—207
பொது வேலையின்மை, 7—11, 49
பொருளாதார ஆய்வுக் கருவிகள், 23—35
பொருளாதாரமும் இயற்பியல்களும், 45—48
பொருளாதார மந்தம், 7—9
பொருளாதாரச் சீர்குலைவு, 7—11
பொருளாதார வரலாறு, 23
பொருளாதார வளர்ச்சி, 4—7, 34—35, 49, 232—280
பொருளாதார வளர்ச்சிக்கால பல்வேறு காரணிகளின் பங்கினை அளவிடல், 262—264
பொருளாதார வளர்ச்சியும் கல்வியும், 258—261, 268—270
பொருளாதார வளர்ச்சியில் முதலீட்டின் பங்கு, 247—254
போருக்குப் பின்னர் வீடுகட்டும் வேலை, 188—190

IO

மக்கள்தொகை கணக்கீட்டுக் கழகம், 235
மத்திய அரசு வீட்டு நிருவாகத் திட்டம், 188
முடிவுபெற்ற உற்பத்தி, 88
முடிவுபெறு பொருள்களின் இருப்பு, 177
முடிவுபெற்ற உற்பத்தியின் இருப்பு, 179—180
முதலீட்டில் தலா உருப்படி ஒன்றிற்கான நிகழுதல், 156—159
முதலீட்டின் அதிகரிப்பு, 265—269
முதலீட்டின் அதிகரிப்பும் நாட்டின் வளர்ச்சியும், 265—270
முதலீட்டுப் பொருள்கள், 35
முதலீடு, 151—193
முதலீடும் இலாபமும், 163—169
முதலீடும் எதிர்பார்க்கும் இலாபமும், 155—166
முதலீடும் நாட்டின் மொத்த உற்பத்தியும், 66—72

முதலீடும் புதுமைகளும், 153–155
முழுத்திறன் உற்பத்தி, 232
முழுத்திறன் உற்பத்திக்கு இலக்கணம், 10
முழுத்திறன் மொத்த உற்பத்தி 86—87
மூலதன அளவின் அதிகரிப்பு, 247—249
மூலதன இருப்பு, 66—68, 253
மூலதன-உற்பத்தி விகிதம், 157, —158
மூலப் பொருள் இருப்பு, 177
மொத்த உற்பத்தி, 19—23
மொத்தத் தொழில் சேமிப்பும் நாட்டின் மொத்த உற்பத்தியும், 114—118
மொத்தத் தொழில் சேமிப்பும் நாட்டின் மொத்த வருமானமும், 143
மொத்த முதலீடு, 67—69
மொத்த மூலதன இருப்பு, 251
மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண், 195

ர

ராபர்ட் ஏ. கோர்டன், 264 அடிக் குறிப்பு
ராபர்ட் சோலாவ், 262
ரூஸ்வெல்ட், ப்ராங்ளின், 8

வ

வங்கியியல், 23
வட்டிவீதம், 173—174
வட்டி வீதமும் கிடைக்கக்கூடிய கடனும், 173—174
வணிகத்துறை, 53
வரிகள், 118—120
வரிகளும் பணவீக்கமும், 213–214
வரி மாறுதல்கள் 130, 134
வளர்ந்து செல் இறுதிநிலைச் செலவு, 32, 34
வளர்ச்சி வீதத்தை அதிகரிப்பதற்கான கொள்கைகள், 264—272
வளர்ச்சி வேகத்தை அடக்கி விடுவன, 169—176
வளர்ச்சியும் தொழில் சகடமும், 273—274
வளர்ச்சியும் முதலீடும், 247—254
வில்லியம் ஜென்னிங்ஸ் பிரியன், 204
விஞ்ஞான வளர்ச்சி, 254—257
விஞ்ஞான வளர்ச்சியும் தொழில் நுட்ப முன்னேற்றமும், 254—258
விற்பனைக்கென்று உற்பத்தி, 62—64
விற்பனையும் முதலீடும், 157
விலைக் குறியீட்டெண்கள், 195—196
விலைக் குறியீட்டெண்களின் சில குறைபாடுகள், 196—198
விலை நிலைபேறுக்கம், 219—224
விலை மாறுதல்கள், 198—203
விலைவாசி, ஊதிய உயர்வைக் கட்டுப்படுத்த (அமெரிக்க அரசாங்கம் மேற்கொண்ட) வழிகாட்டிகள், 225—229
வேக வளர்ச்சி, 160—162
வேலை நிறைவும் விலை நிலைபேறுக்கமும், 219—224
வேலை நிறைவுள்ள சமநிலை, 117
வேலை நிறைவையும் விலை நிலைபேறுக்கத்தையும் இணைக்க மடையச் செய்ய வழிமுறைகள் 224—229
வேலையின்மை, 34

ஜ

ஜான் கென்டிரிக், 262
ஜான் மேனர்ட் கீன்ஸ், 8 அடிக் குறிப்பு